ஜாதகம் 82

i. கடகலக் கினமதாகக் கரும்பாம்பு[1] அதிலே தங்கச்
சுடரவன்[2] புந்தி[3] வெள்ளி[4] சிகி[5] யுமே ஏழில் தங்க
முடவனு[6] மெட்டி லாக மங்கலன்[7] நவத்தி லேற
அடல்குரு லாப மாக அம்புலி[8] யீரா ருக.

அங்கா ரகன்		குரு	சந்திரன்
சனி	இராசி சக்கரம்		லக்கினம் ராகு
சூரியன் புதன் சுக்கிரன் கேது			

புனர்பூசம் 1-ஆம் பாதம் குருதசை இரு 15-5-0.

1. ஜன்மலக்கினம் கடகமாகி அதில் இராகு இருந்து சூரியனும் புதனும் சுக்கிரனும் கேதுவும் ஏழாவது வீட்டிலும், சனி எட்டாவது வீட்டிலும், அங்காரகன் ஒன்பதாவது வீட்டிலும், குரு பதினொன்றுவது வீட்டிலும், சந்திரன் பன்னிரண்டாவது வீட்டிலும் இருந்தால் ;

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சந்திரனும், மிதுனத்தில் புதனும், கடகத்தில் சுக்கிரனும், சிம்மத்தில் சூரியனும், கன்னியில் அங்காரகனும் கேதுவும், தனுசில் சனியும், கும்பத்தில் குருவும், மீனத்தில் ராகுவும் ஆகும்.

2. பலன்தனைச் சொல்லு மென்று சுந்தரி கேட்கும் போது
வல்லவர் வசிஷ்டர் சொல்வார் வாணது ஜனன மாகும்
இல்லமும் வடதென் வீதி இந்திர நோக்கம் வாசல்
கல்மலை கீழ்ப் பா லாகும் கெடியுண்டு அரசர் வாசம்.

2. பலாபலன்களைக் சொல்லுவீரென்று பார்வதியம்மையார் கேட்கும் போது, மிகவும் அறிஞராகிய வசிஷ்டமகாமுனிவர் சொல்லுகிறார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத்

[1] இராகு [2] சூரியன் [3] புதன் [4] சுக்கிரன்
[5] கேது [6] சனி [7] அங்காரகன் [8] சந்திரன்

தெருவில் கிழக்குத்திக்கைப் பார்த்த வாயிற்படியுடைய வீடாகும். பிறந்த ஊரில் கல்மலை கிழக்குத்திக்கில் இருக்கும். இந்த ஊரில் ஒரு கோட்டையு முண்டு. அங்கே அரசர்களும் வாசஞ் செய்வார்கள்.

3. பலவித செட்டுச் ஓங்கும் பெருத்ததோர் நகர மாகும்
சொல்லுமிவ் வடையா ளத்துள் சுதனுமே சேஷ்ட னாகும்
தலைவனும் சகஸ்ர கோத்திரம் ஜனிப்பனு மென்று சொல்வோம்
நிலைமையாய்க் குடும்பச் சேதி நிகழ்த்துவோம் கேளும் தாயே.

3. பிறந்த ஊரில் அநேக விதமான வியாபாரங்கள் ஓங்கி வளரும். இந்த ஊர் ஒரு பெரிய பட்டணமாகும். இவ்விதமான அடையாளங்களுள்ள ஊரில் ஜாதகர் ஜேஷ்ட குமாரனுகப் பிறப்பார். இவர் சகஸ்ர கோத்திரத்தில் வந்து பிறப்பார் என்று சொல்லுகிறோம். குடும்பத்தின் நிலையான விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

4. தந்தையின் துணை யாண் ஒன்று சத்திமா ரிருவ ராகும்
நொந்திடு மற்ற வெல்லாம் நுகர்ந்தஆண் யிளையோ னாகும்
அந்தவன் வேருய்ச் செல்வன் அணுகிடும் தாரம் ரண்டு
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விவர மாக.

4. ஜாதகருடைய தகப்பனுரின் சகோதரர்களில் ஓர் ஆண் சகோதரரும். இரண்டு பெண் சகோதரங்களும் நீடித்த ஆயுளுடையவர்களாக இருப்பார்கள். மற்ற சகோதரர்களெல்லாம் இறந்து விடுவார்கள். ஆண் சகோதரர் ஜாதகருக்கு இளைய சகோதரராவார். இவர் வேறு குடும்பமாக விருந்து வாழ்வார். இவருக்கு இரண்டு மனைவிகள் வந்து சம்பவிப்பார்கள். இவருடைய விஷயங்களைப் பற்றி விவரமாகப் பின் பாகத்தில் சொல்லுகிறோம்.

5. இவன்பிதா குணத்தைச் சொல்வே னீகைவான் சிவந்த மெய்யன்
பவமன மில்லா னாகும் பரவுப கார னவன்
நவனிகள் சேர்க்கா னாகும் நற்றந்தை யில்லம் காணன்
தவசிக ளுறவு கொள்ளான் சஞ்சல மனத்த னாகும்.

5. ஜாதகருடைய தகப்பனுரின் குணங்களைப் பற்றிச்சொல்லுகிறேன். இவர் கொடையாளியா யிருப்பார். சிவப்பு நிறமான தேகத்தை யுடையவராவர். பாபமான மனத்தை யுடையவரல்ல. பிறருக்கு உதவியைச் செய்வார். பூமிகளைச் சேகரிக்கமாட்டார். தன்னுடைய தகப்பனுருடைய வீடு இவருக்குக் கிடைக்காது. முனிவர்கள், பரதேசிகள் ஆகிய இவர்களுடைய சினேகிதத்தை அடையமாட்டார். சஞ்சலமுள்ள மனத்தை யுடையவராவர்.

6. இல்லமும் அலைதலாகும் யாவர்க்கும் நல்லோ னவன்
அல்லல்கள் மத்தி யில்தான் அவன்துணை பகையு மாகும்
நல்லதோர் பொருளும் காணன் நன்னடை மிருது வார்த்தை
சொல்லதைக் காப்பா னாகும் சோதியும் சாயல் கொஞ்சம்.

6. ஜாதகருடைய தகப்பனாின் குடும்பம் தொந்தரவை யுடையதாக விருக்கும். இவர் எல்லோருக்கும் நல்லவராக விருப்பார். கஷ்டங்கள் மத்திய வயதில் இவருக்குண்டு. இவருடைய சகோதரர் இவருக்கு விரோதி யாகவிருப்பார். இவருக்கு நல்ல சொத்துக்கள் கிடையா. நல்ல நடவடிக்கையும் ஒழுக்கமும் உடையவர். மெதுவானதும் இன்பமானதுமான வார்த்தைகளைச் சொல்லுவார். தான் சொல்லிய சொல்லைத் தவறாமல் காப்பாற்றுவார். கண்பார்வை கொஞ்சஞ் சாய்ந்திருக்கும் அஃதாவது கண் கொஞ்சம் சாயலாக விருக்கும்.

7. மரமாட்டும் தொழிலு மேற்பன் மானிலம் சல்லியம் கொள்வன்
விரைவினில் நடக்க வல்லான் விகடங்கள் கூறு னாகும்
கரமதில் விஷ்ணு ரேகை கல்வியு மல்ப மாகும்
பெருமையாய்க் குடும்பம் பின்னால் பெறுவனு மூக சாலி.

7. ஜாதகருடைய தகப்பனார் மரத்தைக் (கடாய்கின்ற) செதுக்குகின்ற வேலையை யுடையவர். பூமியில் கடன் படுவார். பூமியை வாங்குவார். வேகமாய் நடக்கக்கூடியவர். வேடிக்கையாகப் பேசமாட்டார். இவருடைய உள்ளங்கையில் விஷ்ணு ரேகை என்ற ஒரு விதமான ரேகை யுண்டு. இவருக்குப் படிப்பு கொஞ்சமாக விருக்கும். இவருடைய குடும்பம் பிற்காலத்தில் மேன்மையாக விருக்கும். நுட்பமான புத்தியை உடையவர். நுட்பமாய் யோசிப்பவர், ஆராய்பவரும் ஆவார்.

8. சொன்ன இக்குணத் தானுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் சிவந்த மேனி அரிமக னொப்ப தாகும்
முன்கோப முடனே தாழ்வு மொழியது சுருக்க மாகும்
பொன்பணி சேர்ப்பா னாகும் புகழ்ந்தோரை ஆதரிப்பன்.

8. இங்கு சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவர் சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவர். இவர் மகாவிஷ்ணுவின் குமாரராகிய மன்மதனுக்குச் சமானமான ரூபத்தையும் அழகையு முடையவராவர். இவருக்கு முன் கோபம் வரும். ஆனால் அஃது உடனே தணிந்தும் அடங்கியும் போகும். இவர் சுருக்கமாகவும் கொஞ்சமாகவும் பேசுவார், தனம் ஆபரணங்கள் இவைகளைச் சேகரித்து வைப்பார். தன்னைப் பற்றிப் புகழ்ச்சியாகவும் மேன்மையாகவும் பேசுகிறவர்களை இவர் காப்பாற்றுவார்.

9. காரியச் சமர்த்த னாகும் கல்விமான் கணக்கி னாகி
நாரியர் மோக னவன் நல்ல இல்லங்கள் செய்வன்
மாறிடான் பெரியோர் வார்த்தை மரமாட்டும் தொழிலு மேற்பன்
ஆறுமா முகத்தோன் பத்தி அவனுமே கொள்வா னாகும்.

9. ஜாதகர் காரியங்களைச் செய்து முடிப்பதில் சமர்த்திய முடையவராவர். படித்தவர். கணிதத்தில் நுட்பமாய் ஆராய்ச்சி செய்யும் புத்தியை யுடையவர். வல்லவர். பெண்களின்மேல் காம ஆசையை யுடையவர். நல்ல அழகான வீடுகளைக்கட்டுவார். பெரிய மனிதர்களுடைய வார்த்தைகளுக்குத் தவறாக நடந்து கொள்ளமாட்டார். மரத்தைக் (கடாய்கின்ற) செதுக்குகின்ற வேலையைச் செய்வார். ஆறு பெருமை பொருந்திய முகங்களையுடைய முருகக்கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உள்ளவராவார்.

10. பொன்பணி சேர்ப்பா னாகும் புயபல முடைய னாகும்
தன்பந்து மேலாய் வாழ்வன் சாரான்கள் சேர்ப்பா னாகும்
அன்னியர் மதிக்க வாழ்வன் ஆண்மையாய்க் குடும்ப மேற்பன்
கன்னியர் மோக னவன் காதலி கேட்டி டாயே.

10. ஜாதகர் தனம் ஆபரணம் ஆகிய இவைகளைச் சேகரித்து வைப்பவராவார். தோள்வலிமை யுடையவராவார். தனக்கு உதவியாயுள்ள வேலையாட்களைச் சேர்த்துக் கொள்ளுவார். பிறர் இவரை மதிக்கும்படியாகவும் கௌரவஞ் செய்யும் படியாகவும் வாழ்வார். வலிவுள்ளதும் மேன்மையானதுமான குடும்பத்தை அடைவார். பெண்களின்மேல் காமஆசையை யுடையவராவார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

11. இன்னவன் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பா லொன்று
கன்னிகை யிருவர் தீர்க்கம் கனக்காவே மற்ற வெல்லாம்
பின்பாகம் விவரமாகப் பேசுவோம் துணைவன் சேதி
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

11. ஜாதகருடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவருக்கு ஆண் சகோதரர் ஒருவரும், பெண் சகோதரங்கள் இருவரும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். மற்ற சகோதரர்களெல்லாரும் அதிகமான ஆயுளில்லாமல் இறந்து போய் விடுவார்கள். இந்தச் சகோதரருடைய விஷயங்களைப் பற்றி விவரமாக அடுத்த பாகத்தில் சொல்லுகிறோம். மேன்மையான யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

12. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அன்புள மனத்த ளாகும்
அன்னியர் குற்றம் சொல்லாள் அடாவடி கூறு ளாகும்
அன்னமு மன்பாய் யீவள் ஆளன்தன் மனத்துக் கேத்தோள்
அன்னவள் சமயோ கத்தாள் அன்னம்போல் சாய லொக்கும்.

12. ஜாதகருடைய தாயின் குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் நல்ல மனதையுடையவள். பிறர்மேல் கருணையுடையவளாவாள். பிறர்மேல் கெடுதியானதைச் சொல்ல மாட்டாள். அனியாயமாகவும் முரட்டுத்தனமாகவும் பேசமாட்டாள். பிறருக்குச் சாப்பாட்டைப் பிரியத்துடனும் ஆசையுடனும் போடுவாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளக்கூடியவள். இவள் சமமான அளவு உள்ள யோகத்தை உடையவளாவள், அன்னப்பட்சியைப் போல அழகான ரூபமுடையவளாவாள்.

13. மாந்தளிர் மேனி யரகும் வருவோரை ஆத ரிப்பள்
கூர்ந்துமே வார்த்தை சொல்வள் கூறுமுன் கோபம் கொஞ்சம்
சாந்தவாள் பித்த தேகி சலித்தோர்க்கு உதவி செய்வாள்
காந்தம்போல் புத்தி யுண்டு காதலி தீர்க்க ஜீவி.

13. ஜாதகருடைய தாயார் மாமரத்தின் துளிரினுடைய நிறத்தைப் போல் ஒருவிதமான சிவப்பு நிறமான தேகத்தை யுடையவளாவள். இவள் தன்னிடத்திற்கு வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். அதிகமாகப் பேசுவாள். பேசுவதற்கு முன்னே கோபம் கொஞ்சம் உள்ளவள். அஃதா வது முன்கோபியாயிருப்பாள். இவள் பித்தமுள்ள தேகத்தையுடையவள். இளைத்தவர்களுக்கும் துக்கமுள்ளவர்களுக்கும் உபகாரஞ் செய்வாள். பிறரைத் தன்வசம் இழுக்கும் படியானதும் வசப்படுத்திக் கொள்ளும்படி யானதுமான புத்தியும் குணமுமுள்ளவள். இவள் நீண்ட வயதுடையவளா வாள்.

14. இல்லமும் மேல்பா லாகு மிவள்துணை ஆண்பால் மூன்று
வல்லிமார் அவ்வாறு தீர்க்கம் மாதுரு பூர்வம் சொல்வேன்
எல்லேயி லுயர்வ தான எழில்கொங்கு நாட்டி லேதான்
புல்கினுள் கர்ண சேயாய்ப் புகழான குடும்பி யாகி.

14. ஜாதகரின் தாயாருடைய வீடு மேற்குத் திக்கிலிருக்கும், இவளுடைய ஆண்சகோதரர்கள் மூன்று பேரும் பெண் சகோதரர்கள் மூன்று பேரும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார்கள். தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். பூமியில் உயரமானதும் மேன்மை யானதுமான அழகிய கொங்கு தேசத்தில் கருணீகர் குலத்தில் பிறந்து மேன்மையுடைய ஒரு குடும்பஸ்தையாகி ;

15. முன்வினை யில்லா தாகி மொதுங்கினள் கால னூடு
பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்
பின்ஜன்மம் விரிஞ்சி மேல்பால் பிறப்பளாம் கங்கைசே யாய்
அன்னவள் வறுமை யின்றி அன்புடன் வாழ்வா ளாகும்.

15. முன் ஜன்மத்திய பாவம் ஒன்றும் இல்லாமல் எம பட்ட ணத்திற்குப் போய் பிரம தேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகிறேம். இவள் மறுஜன்மத்தில் விரிஞ்சிபுரத்திற்கு மேற்கில் வேளாளர் குலத்திற் போய்ப் பிறப்பாள். இவள் தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமல் வாழ்வ ளாகும்,

16. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் சோழ நாட்டில்
வந்தனன் கங்கை சேயாய் வளமுள குடும்பி யாகி
அந்தவன் வாழுந் நாளில் அனுகின வினையை கேண்மோ
முந்தினோர் தமக்குப் பொன்னை முதவியே முரியும் திட்டி.

16. ஜாதகருடைய தகப்பனாரின் முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். இவர் சோழதேசத்தில் வேளாளர் குலத்திற்பிறந்து செழிப் பானதும் மேன்மையானதுமான குடும்பஸ்தராகி வாழுகின்ற காலத்தில் இவ ருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைச் சொல்லுகிறேம், கேட்பீராக. இவர் முதல் குலத்தோராகிய பிராமணர் சிலருக்குப் பணத்தைக் கடனாகக் கொடு த்து உதவிசெய்து ஓர் அடைமானப் பத்திரத்தை எழுதி வாங்கிக் கொண்டார்.

17. பின்சில நாட்கள் சென்று பொருளதைக் கேட்கும் போது
இன்னமும் சிலநாள் சென்று பாரென்று அவரும் சொல்ல
மன்னர்பால் முரியும் காட்டி மாநிலம் தன்கைக் கொண்டான்
அன்னவர் மனவெ றுப்பால் அறைந்திட்ட சாபம் கேண்மோ.

17. ஜாதகருடைய தகப்பனார் கொஞ்சகாலம் பொறுத்துத் தான் கடனாகக் கொடுத்தப் பணத்தைத் திரும்பிக்கொடு என்று கேட்டபோது இன்னம் சில நாட்கள் சென்ற பிறகு பாருங்கள் என்று கடன் வாங்கினவர் களுக்குப் பதில் சொல்ல, இவர் இராஜாங்கத்தாரிடம் போய் அடைமானப் பத்திரததையும் நடவடிக்கைச் செலவையும் கட்டி அதிகமான அடைமான நிலங்களைத தன் கைவசமாக்கிக் கொண்டார். கடன்காரர்கள் மனம் நொந்து வருத்தப்பட்டுக் கொடுத்தச் சாபத்தைச் சொல்லுகிறேம் கேட்பீராக.

18. மற்ருெரு ஜன்மம் தன்னில் வனவாசம் சிலது நாட்கள்
பெற்றதோர் தந்தை யில்லம் போய்விடும் துணைவி ரோதம
சுற்றத்தார் மதிப்பில் லாமல் தொல்புவி தன்னில் வாழ்வாய்
இத்தகை சொல்லும் போது எய்திடும் அந்தச் சாபம.

18. "நீ உன்னுடைய மறு ஜன்மத்தில் கொஞ்சகாலம் வனவாச மாக வேறோர் ஊரில் இருந்து வாழக்கடவாய். உன்னுடைய தகப்பனார் வீடு உனக்குக் கிடைக்காமல் போய்விடக் கடவது. உன்னுடைய சகோதரன் உனக்கு விரோதியாகக் கடவது. உன்னுடைய பந்துக்கள் உன்னை மதிக்கா வண்ணம் இருந்து நீ இந்தப் பழைமையான உலகத்தில் வாழக்கடவாய்" என்று இவ்விதமாகக் கடன்பட்டவர்கள் சொல்லிச் சாபங் கொடுதார்கள. இந்தச் சாபம் ஜாதகனுடைய தகப்பனாரை வந்து அடையும்.

19. அந்திய காலம் தன்னில் அவன்செல்வம் குறைவு நேர்ந்து
தென்திசை காலன் னூடு சென்றுமே பிரமன் லக்கம்
வந்தவ னென்று சொல்வோம் மறையவர் சாபம் போலே
தந்தையி னில்லம் காணுன் தான்வன வாசம் சின்னாள் ;

19. தகப்பனார் முன் ஜன்மத்தில் கடைசி காலத்தில் தன்னு டைய செல்வம் குறைந்துபோய்ப் பிறகு தெற்குத் திக்கிலுள்ள எமபட்டண த்திற்குப் போய் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகிறேம். பிராமணர்கள் கொடுத்த சாபப் பிரகாரம் இவர் தன்னுடைய தகப்பனருடைய வீட்டை அடையமாட்டார். சிலகாலம் வனவாசம் செய்து ;

20. சஞ்சல மனமாய் வாழ்வன் சாற்றுவோ மிவன் பின்ஜன்மம
மிஞ்சிய வேங்கடத்தில் விளங்குவான் வைவ ருகை
தஞ்சமாய் வணிபம் செய்து தரணியில் வாழ்வா ருகும்
அஞ்சினோர் தம்மை காக்கும் அம்பிகை யாளே கேளாய்.

20. தன்னுடைய மனத்தில் துக்கமும் கஷ்டமுடையவராகி வாழ வார். இவருடைய பின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம், சிறப்புற் றோங்கிய திருவேங்கடம் என்று சொல்லப்பட்ட திருப்பதி ஸ்தலத்தில் வைஷ்ணவராகப் பிறப்பார். எளிமையாகவும் தாழ்மையாகவும் வியாபாரம் செய்தும பூமியில்வாழ்வாராகும். பயப்பட்டவர்களைக் காப்பாற்றும்படியான பார்வதியம்மையே ! கேட்பீராக.

21. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருப தாண்டில
கன்னிகை மேல்பால் நேரும் காதலி வர்க்கம் தன்னில
அன்னவள் வருவா ளாகும் அறைகிறோ மவள்குணத்தை
நன்னடை மிருது வார்த்தை நவின்றிடாள் கட்டு வார்த்தை.

21. ஜாதகருடைய விவாகம் நடக்குங் காலத்தைப் பற்றிச் சொல லுகிறோம். இவருக்கு இருபதாவது வயதில்* மனைவி மேற்குத் திக்கிலி ருந்து வந்துநேரிடுவாள். தாயாருடைய வர்க்கத்திலிருந்து இவள் வருவாள். இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச்சொல்லுகிறோம். இவள் நல்ல நட வடிக்கையும் நல்லொழுக்கமும் உடையவள். மெதுவாகவும் இனிப்பாகவும் வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையும் சொல்லமாட்டாள்.

* குறிப்பு.—விவாக விஷயம்:—ஜாதகருக்கு வயது ஷை 19—0—0 முதல ஷை 20—0—0 முடியும் வரையிலும் சனி தசையில் புதபுக்தி நடக்கின் றது. சனி களத்திரஸ்தானமாகிய ஏழாவது வீடாகிய மகரத்திற்கு அதிபதி யாகி சந்திரனுக்கு ஒன்பதாவது வீட்டில் இருக்கின்றன். புதன் சந்திர னுக்குப் போகஸ்தானமாகிய நான்காவது வீடாகிய கன்னியா ராசிக்கு அதி பதியாகி லக்கினத்திற்கு ஏழாவது பாவத்தில் குடும்பாதிபதியாகிய சூரியனு டனும் லக்கினத்திற்குப் போகஸ்தானமாகிய நான்காவது வீடாகிய துலாத் திற்கு அதிபதியும் களத்திரகாரகனுமாகிய சுக்கிரனுடனும் கூடிப் போகக காரணகிய இராகுவால் பார்க்கப்பட்டிருக்கின்றுர். ஆகையால் சனி தசையில புதபுக்தியில் ஜாதகருக்கு விவாகம் நடக்க அமைப்பு இருக்கின்றது.

22. இருசிவப் புடையா ளாகு மிடருன புத்தி யில்லாள்
அரிவையும் தீர்க்க ஜீவி அத்திரி தடுத்துச் சொல்வார்
திருகாகு முதல்ம னைதான் சேருவா ளிரண்டாம் பாரி
அறிவிப்பீ ரந்தச் சங்கை மால் [1] புகர் [2] கேது பானு [3].

22. ஜாதகருடைய மனைவி இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிற முள்ள தேகத்தையுடையவள். கெடுதியான புத்தியும் குணமும் இல்லா தவள். இவள் நீண்ட ஆயுளை உடையவள். இவ்விதமாகச் சொல்ல, அத்திரி மகரிஷியானவர் மறுத்துச் சொல்லுகின்றுர். முதல் மனைவிக்குக

[1] புதன். [2] சுக்கிரன். [3] சூரியன்

கெடுதி நேரிடும் * அதன்பேரில் இரண்டாவது மனைவி ஜாதகருக்கு வந்து சம்பவிப்பாள் என்று சொல்ல, இதற்குக் காரணங்களைச் சொல்வீரென்று கேட்க, புதனும் சுக்கிரனும் கேதுவும் சூரியனும்.

*குறிப்பு.—மனைவி விஷயம்:—22-23-ஆவது பாடல்களிலிருந்து முதல் மனைவி இறந்து விடுவாள் என்று தெரிகிறது. முதல் மனைவி விஷயமாகக் கவனிக்கவேண்டிய அமசங்கள் 7-2 ஆவது பாவங்களும், இந்தப் பாவாதிபதி களும், சுக்கிரனும் ஆகும். சூரியனும் புதனும் சுக்கிரனும் கூடி ஏழாவது பாவத்தில் இருந்தால் ஜாதகர் கெட்டப் பத்தினியை உடையவர் என்று கர்க ஹோரையிலும் பலபத்திரரது ஹோராரத்தினத்திலும் சொல்லி இருப்ப தால் ஜாதகருக்குப் பத்தினிசுகமில்லை என்று ஊகிக்கவேண்டியதாயிருக்கின் றது. ஏழாவது பாவத்தில் பன்னிரண்டாவது பாவத்திற்குடையவர் (இங்கு புதன்) இருந்தால் பார்யாசுகம் கிடையாதென்று ராமதயாளு என்பவருடைய சங்கேதநிதி என்ற கிரந்தத்தில் ஆறுவது சங்கேதத்தில் 97 ஆவது சுலோகத் தில் லோமசரிஷி வசனம் என்றும் மனைவிக்குக் கஷ்டம் நேரிடும் என்று பிருகுசம்ஹிதையிலும் சொல்லியிருக்கின்றது. இங்குப் புதனும் சுக்கிரனும் அஸ்தமடைந்து இருப்பதால் இவர்கள் சுபபலன், கொடுப்பதற்கு அருகராகவில்லை. இரண்டாவது பாவத்தைச் சனி அஷ்டமாதிபதியாகிப் பார்க்கின்றது தோஷமாகும். இரண்டாவது பாவாதிபதி (இங்குச் சூரியன) பாபியாகி ஏழாவது பாவத்தில் இருந்தால் மனைவியால் ஜாதகருக்குச் சுகங் கிடையாது என்று பிருகுசம்ஹிதையிலிருந்து தெரிய வருகிறது. மேலும் சந்திர லக்கின ரீதியாய்ச் சந்திரனுக்குக் களத்திர ஸ்தானதிபதியாகிய ஏழாவது பாவத்திற்குடைய குரு சந்திரனுக்குப் பன்னிரண்டிலும் தன் பாவத்திற்கு ஆறுவது வீட்டிலும் இருப்பது தோஷமானது. சந்திரனுக்குக் எட்டில் களத்திரகாரணகிய சுக்கிரனும், போகஸ்தானதிபதியாகிய புதனும் இருப்பது தோஷமானது. சந்திரனுக்கு இரண்டில் ராகு இருப்பது தோஷ மானது. இரண்டாவது மனைவி ஸ்தானமாகிய ஒன்பதிற்குடைய குரு லக்கி னத்திற்கு ஏழாவது பாவத்தைப் பார்ப்பதால் இரண்டாவது மனைவி வருகிற அமைப்பும் இருக்கிறது. இங்குச் சொல்லிய காரணங்களாலும் 22, 23-ஆவது பாடல்களில் சொல்லியுள்ள காரணங்களாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவி யோகம் இருக்கிறது.

23. சத்தம மதனில் தங்கச் சத்தமத் தோனு மெட்டில்
குத்த மாயிருப்ப தாலே கூறினேம் தாரம் ரண்டு
சத்திமா ரிருவர் என்றீர் தீர்க்கமோ விரய மோசொல்
செத்திடும் முதல்மனை விதான் செப்புவீர் காலம் தன்னை.

23. ஏழாவது பாவத்தில் இருப்பதாலும் ஏழுக்குடையவர் எட்டாவது பாவத்தில் கெட்டுப்போயிருப்பதாலும் இரண்டு தாரம் என்று சொல்லு கிறோம். மனைவிகள் இரண்டு பேர்கள் என்று சொன்னீர். இவர்கள் இரு வரும் நீண்ட ஆயுளை உடையவர்களோ இறந்துபோய் விடுவார்களோ என்ற விவரத்தைச் சொல்வீர் என்று கேட்க, முதல் மனைவி இறந்து விடுவாள் என்று பதில் சொல்ல, அப்படி இறந்து போகும் காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்க.

24. இருபது ஒன்ப தாண்டி வீன்றதோர் சுதரி ஞலே
மரலியன் பதிக்குச் சேர்வள் மறுஆண்டில் வேறு மாது
உறைவளாம் குடகு தன்னில் உத்தமி தீர்க்க ஜீவி
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

24. ஜாதகருக்கு இருபத்தொன்பதாவது வயதில்* மனைவி பிரசவத்திஞல் இறந்து எமபட்டணம் போய்ச்சேருவாள். அடுத்த வருஷத்தில் இரண்டாவது மனைவி மேற்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள். இந்த மனைவி நீண்ட ஆயுளை உடையவள். அருமையான வேதங்களின் முடிவில் விளங்குகின்ற பார்வதி அம்மையே ! கேட்பீராக.

*குறிப்பு.—முதல் மனைவி மரிக்குங் காலம்.—ஜாதகருக்கு வயது 28-0-0 முதல் ஷை 29-0-0 முடியும் வரையிலும் சனி தசையில் அங்காரக புத்தி நடக்கின்றது. ஒரு ஜாதகத்தில் லக்கின பாவம் தவிர மற்ற பாவங்களை ஆராய்ச்சி செய்யும்போது அந்த பாவத்தையோ அல்லது ஒரு காரகாதிபதியையோ லக்கினமாகப் பாவித்து அந்த பாவத்தால் அறியவேண்டிய விஷயங்களையும் அந்தகாரகாதிபதியால் அறியவேண்டிய விஷயங்களையும் ஆராய்ச்சி செய்து தெரிந்துகொள்ளவேண்டும் என்று சில ஜோதிடக் கிரந்தங்களில் சொல்லி இருக்கின்றது. இவ்விதமாகவே சுக்கிரநாடி முதலிய சில நாடிகளில் ஆராய்ச்சி செய்து பலன்களைச் சொல்லியிருப்பதாகத் தெரியவருகிறது. மேலும் இந்த நாடிகளிலிருந்தே ஒரு பாவஅதிபதியும் அந்த பாவகாரனும் தன்னுடைய தசாபுத்தி காலங்களில் அந்த பாவத்திஞல் அல்லது அந்த காரகாதிபதியிஞல் அறிந்து கொள்ளக்கூடிய மானிடப் பிறவிக்கு மாரகத்தைச் செய்து விடுகிருர்கள் என்று தெரியவருகிறது. அஃதாவது ஒன்பதிற்குடையவரும் சூரியனும் தன் தசாபுத்தி காலங்களில் பிதுர்மாரகத்தையும், நான்கிற்குடையவரும் சந்திரனும் தன் தசாபுத்தி காலங்களில் மாதுரு மாரகத்தையும், ஏழிற்குடையவரும் சுக்கிரனும் தன் தசாபுக்தி காலங்களில் களத்திர மாரகத்தையும் உண்டுபண்ணிவிடுகிருர்கள் என்று தெரியவருகிறது. ஆகையால் சில லக்கினங்களுக்கு மாரகாதிபதியாய்ச் சில கிரகங்கள் நேரிட்டாலும் அவர்கள் மாரகஞ் செய்யமாட்டார்கள் என்று பராசரஹோரையிலும், இதைத் தழுவி எழுதியுள்ள ஜாதகச்சந்திரிகை தாண்டவமாலை சந்திரகாவியம் முதலிய கிரந்தங்களிலும் சொல்லி இருப்பது பெரும்பாலும் ஜாதகருக்கு மாத்திரமே தவிர மற்ற பாவங்களை லக்கினமாகப் பாவித்து ஆராய்ச்சி செய்யும் பாவ லக்கினங்களுக்குப் பொருந்தாது என்று சுக்கிரநாடி முதலிய சில நாடிகளிலிருந்தும், இந்தச் சப்தரிஷிநாடியிலிருந்தும் ஊகிக்கவேண்டியதாக இருக்கின்றது. இந்த ஜாதகத்தில் களத்திர பாவமாகிய ஏழிற்குடைய சனி தன்தசையிலேயே களத்திரத்திற்கு மாரகஞ் செய்து விடுவார் என்று கண்டிருக்கின்றதையும் கவனிக்கவும். ஆனல், பராசரஹோரையில் (இங்கு களத்திர லக்கினமாகிய) மகரத்திற்குச் சனி மாரகஞ் செய்யமாட்டார் என்று கண்டிருக்கின்றது. மகரலக்கினத்திற்கு அங்காரகன் மாரகாதிபதி என்று பராசரஹோரை ஜாதகச்சந்திரிகை இவைகளில் சொல்லியிருப்பதாலும், அங்காரகன் மாரகஸ்தானமாகிய மூன்றில் இருப்பதாலும், களத்திரத்திற்குத் தன்புக்தியில் மாரகஞ்செய்ய அமைப்பு இருக்கிறது.

25. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மெழுவர் தோன்றும்
சுத்தமா யாண்பால் மூன்றும் தோகையு மொருத்தி தீர்க்கம்
செத்திடும் மற்ற வெல்லாம் ஜயமுனி தடுத்துச் சொல்வார்
எத்தகை பாரிக் கேதான் னியம்பினீர் புத்திர சங்கை.

25. ஜாதகருக்குச் சந்ததியைப் பற்றிச் சொல்லுகிறேம். மொத்தத்தில் ஏழு குழந்தைகள் பிறக்கும். இவர்களில் மூன்று ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் நீண்ட ஆயுளையுடையவர்களாக இருப்பார்கள். மற்றக் குழந்தைகள் எல்லாம் இறந்துபோய்விடும். இவ்விதமாகச் சொல்ல ஜய முனிவர் மறுத்துக் கேட்கின்ருர். எந்த மனைவிக்கு நீர் இந்தப் புத்திரப் பாக்கியத்தைச் சொன்னீர்.

26. முதல் மனை தனக்குப் பெண்பால் மேவிடு மொன்றே தீர்க்கம்
அதிபதி இளையா ளுக்கு மைந்தர்கள விருத்தி யென்றேம்
இதுநிற்க இவனின் பூர்வ மியம்புவோ மினிமே லாக
அதிதிவாழ் காளாத்தி தன்னில் அணுகினன் வடுக னுகை.

26. முதல் மனைவிக்கு ஒரே பெண் குழந்தை நீண்ட ஆயுளுடையதாக விருக்கும்.* இரண்டாவது மனைவிக்கு மூன்று ஆண் குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள்.* இஃது இப்படி இருக்க, இனிமேல் ஜாதகருடைய பூர்வ ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். ரிஷிகள் வாசஞ் செய்கின்ற காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் இவர் முன் ஜன்மத்தில் தெலுங்கராகப் பிறந்தார்.

*குறிப்பு.—சந்ததி விவரம்.—முதல் மனைவி லக்கினம் ஏழாவது பாவமாகிய மகரம். இதற்குப் புத்திர ஸ்தானமாகிய ரிஷபத்திற்குடையராகிய சுக்கிரன் சூரியனுடன் அஸ்தமனம் அடைந்திருப்பது புத்திர தோஷமாகும். புதனுடன் சேர்ந்திருப்பது புத்திரதோஷமாகும். கேதுவுடன் சேர்ந்திருப்பது புத்திர தோஷமாகும். ரிஷபத்தை ராகு பார்ப்பது புத்திர தோஷமாகும். ரிஷபத்தில் குரு மகரத்திற்குப் பன்னிரண்டிற்குடையவராகி இருப்பது புத்திர தோஷமாகும். மகரத்திற்கு ஒன்பதிற்குடைய புதன் சூரியனுடன் அஸ்தமனமாகிக் கேதுவுடன் இருப்பதும், இந்த ஒன்பதாவது பாவத்தை அங்காரகனும் ராகுவும் பார்ப்பதும் புத்திர தோஷமாகும். ஆகையால், முதல் மனைவிக்குப் புத்திர தோஷம் அதிகமாகவிருக்கின்றது. இரண்டாவது மனைவி லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மீனம் ஆகும். இதற்குத் புத்திரபாவமாகிய கடகத்தில் இராகு இருக்கின்ருர். புத்திர ஸ்தானதிபதியாகிய சந்திரன் மீனத்திற்கு நான்கில் இருக்கின்ருர். கடகத்தைப் புதன் பார்ப்பது புத்திர தோஷமாகும். புத்திரகாரனுகிய குரு மீனத்திற்கு மூன்றில் இருப்பது கொஞ்சம் புத்திர தோஷமாகும். மீனத்திற்கு ஒன்பதாம் வீடாகிய விருச்சிகத்தைக் குரு பார்ப்பதும் அவ்வீட்டிற்கதிபதியாகிய அங்காரகன் லக்கினத்திலேயே இருப்பது அனுகூலமாகும். ஆகையால் இரண்டாவது மனைவிக்கும் புத்திர தோஷம் இருக்கிறது. ஆனல் இந்த இரண்டாவது மனைவிக்கு இருக்கிற இந்தப் புத்திரதோஷம் முதல் மனைவிக்கு இருக்கிற புத்திரதோஷத்தைவிட குறை

வாக இருக்கிறது. ஆகையால் முதல் மனைவியைவிட இரண்டாவது மனைவிக்கு அதிக சந்ததி இந்த ஜாதகத்திற்குச் சொல்லி இருக்கிறது. மேலும் முதல் மனைவி சீக்கிரம் இறந்து விடுவதால் சந்ததி குறைவு ஏற்படுகிறது.

27. அரசர்பால் தொழிலும் பெற்று அவனுமே வாழுந் நாளில்
வரனின்றி விதவை மாதை வரனுமே போகம் துய்த்துக்
கருவுமே தங்கும் போது கலைத்தனன் பண்டி தத்தால்
மரலியின் பதிக்குச் சேர்ந்தாள் மாதுவு மென்று சொல்வோம்.

27. ஜாதகர் முன் ஜன்மத்தில் இராஜாங்கத்தில் ஒரு வேலையிலிருந்து கொண்டு வாழ்கின்ற காலத்தில் புருஷனில்லாத ஒரு விதவை ஸ்திரீயினிடம் சம்போகஞ் செய்து அவள் கர்ப்பவதியானபோது அவளுக்கு வைத்தியஞ் செய்து அந்தக் கர்ப்பத்தைக் கலைத்துவிட, அதனால் அவள் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச்சேர்ந்து விட்டாள் என்று சொல்லுகிறோம்.

28. வேறுதோ ஷங்க ளின்றி வித்தகன் வாழ்ந்து மேதான்
தீரமாய்க் காலன் னூடு சென்றுமே பிரமன் லக்கம்
பாரினில் செக்கான் வம்சம் பிறப்பனு மிந்தப் பாலன்
காரிழை கருவின் சாபம் கலந்திடு மிச்ஜன் மத்தில்.

28. ஜாதகர் வேறே எவ்விதமான பாவங்களும் இல்லாமல் முன் ஜன்மத்தில் வாழ்ந்து இறந்து எமபட்டணத்திற்குப்போய் பிரம்மதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்தப் பூமியில் செக்காடுகின்ற செட்டியார் குலத்தில் வந்து பிறந்தார். இவருக்கு இந்த ஜன்மத்தில் முன் ஜன்மத்தில் கர்ப்பத்தைக் கலைத்த தோஷ சாபம் வந்து சம்பவிக்கும்.

29. முதல்மனை தோஷ மெய்தும் மொழிகுவீர் சாந்தி ஒன்று
ஏது சாந்தி செய்தாலும் தானிலகாது என்று சொல்வோம்
அதிபன்தன் யோகச் செய்தி வரைகிறோ மினிமே லாக
உதித்தநாள் முதலாமாக உரைக்கிறோ மிரண்டாண் டிற்கும்.

29. ஆகையால் ஜாதகருக்கு முதல் மனைவி தோஷத்தால் இறந்து போய் விடுவாள். இந்தத் தோஷத்தை நிவிர்த்தி செய்ய ஒரு சாந்தி சொல்வீர் என்று கேட்க, எந்தவிதமான சாந்தி செய்தாலும் அந்தத் தோஷம் நிவிர்த்தியாகாது என்று சொல்லுகிறோம். இனிமேல் ஜாதகருடைய யோக விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறோம். பிறந்தது முதல் இரண்டு வருஷம் வரையிலுமுள்ள பலா பலன்களைச் சொல்லுகிறோம்.

30. வனவாசம் தரித்தி ரங்கள் மாரனும் பிணிய னேகம்
பிணமதால் பகையு மெய்தும் இடுக்கமாம் குடும்பம் எய்தும்
தனமதால் தரித்தி ரங்கள் சல்லியப் பாதை நேரல்
நினைப்பது முடியா தாகும் நிகழ்த்துவோ மதின்மே லாக.

30. வனவாசங்கள் நேரிடும். தரித்திரம் உண்டு. அனேகவிதமான ரோகம் ஜாதகருக்கு ஏற்படும். சாவால் விரோதங்கள் ஏற்படும். குடும்பத்தில் கஷ்டங்கள் உண்டாகும். பணம் விஷயமாகத் தரித்திரமும் கடன் தொந்தரவுகளும் ஏற்படும். நினைத்த காரியங்கள் முடிவு பெறாது. இதற்கு மேல் பலன்களைச் சொல்லுகிறோம்.

குறிப்பு.—இங்குச் சொல்லியுள்ள பலன்களில் ஜாதகருக்குப் பொருந்தக் கூடிய பலன்களும் அவருடைய தகப்பனாருக்குப் பொருந்தக்கூடிய பலன்களும் அடங்கி இருக்கின்றன.

31. பிறைபோலே செல்வ மோங்கும் பொருள்சில ராலே நேரும்
குறையது நிவிர்த்தி யாகும் குலமதிப் புடனே வாழ்வன்
திருமகள் வாச மெய்தும் செய்தொழில் மென்மேல் விருத்தி
அறுமுக னருளு மோங்கும் அணுகிடும் சகடு தானும்.

31. வளர்பிறைச் சந்திரனைப்போல செல்வம் வளர்ந்து அதிகரிக்கும். சில மனிதர்களாலே பொருள் வந்து சேரும். கஷ்டங்கள் விலகிவிடும். இந்த ஜாதகர் பந்துக்கள் மதிக்கும்படியான நிலைமிலிருந்து வாழ்வார். இலட்சுமீ இவரிடம் வாசஞ் செய்வாள். தான் செய்கின்ற ஜீவனத்துக்கான தொழில் நாளுக்கு நாள் விருத்தியை அடையும். ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளின் கிருபையும் அநுக்கிரகமும் அதிகப்படும். வண்டியும் வந்து நேரிடும்.

32. செல்லமு மந்தஆண் டின்மே லெய்திடும் துன்பம் நீங்கும்
நல்லவெண் கலங்கள் செம்பொன் நல்கிடும் பணியும் கூவல்
அல்லல்கள் தன்மேல் காணன் அஞ்சிடான் எதிரிக் கேதான்
எல்லைகள் சேர்ப்பா னுகு மெய்துமே ஏழாயி ரம்பொன்.

32. சொல்லிய வருஷத்திற்குப் பிறகு வீடு வந்து சம்பவிக்கும். கஷ்டங்களும் உபத்திரவங்களும் விலகிவிடும். நல்ல வெண்கலப் பாத்திரங்களும் பொன்னாகிய தனமும் ஆபரணங்களும் பெரிய கிணறுகளும் ஆகிய இவைகளை ஜாதகர் அடைவார். இதற்குப் பிறகு ஜாதகர் கஷ்டங்களை அடைய மாட்டார். தன்னுடைய சத்துருவுக்குப் பயப்படமாட்டார். இவர் நிலங்களைச் சேகரிப்பார். ஏழாயிரம் பொன்பெறக்கூடிய சொத்து இவருக்குக் கிடைக்கும்.

33. எப்படி யோகம் சொன்னீ ரியம்புவீ ரந்தச் சங்கை
ஒப்புடன் தர்ம கர்மன் ஒன்பதும் லாபம் தங்க
அப்பணி[1] கடக மாக அலரியும்[2] புகரு[3] மேழில்
தப்பித மின்றி நிற்கத் தனபதி யோக மென்னோம்.

33. எவ்விதமாக யோகத்தைச் சொன்னீர்? அதற்குக் காரணத்தை சொல்வீர் என்று கேட்க, தர்மாதிபதியும் கர்மாதிபதியும் (ஆகிய குருவும் அங்காரகனும்) பதினோராவது பாவத்திலும் ஒன்பதாவது பாவத்திலும் முறையே இருப்பதாலும், இராகு கடகத்தில் இருப்பதாலும், சூரியனும்

[1] ராகு. [2] சூரியன். [3] சுக்கிரன்.

சுக்கிரனும் ஏழாவது பாவத்தில் குற்றமில்லாமல் இருப்பதாலும் தனபதி (குபேரன்)† என்ற யோகம் உண்டு என்று சொல்லுகிறோம்.

†குறிப்பு.—குபேர யோகம் :—லாபாதிபதியாவது நான்காமாதியாவது 1, 4, 9-இல் இருந்தாலும் மற்றைய பாபக் கிரகங்கள் 2, 9-இல் இருந்தாலும் குபேரயோகம் ஏற்படுகிறது என்று பிருகு சம்ஹிதையில் சொல்லி இருக்கின்றது.

34. வடதிசை அரசன் போலே வாழ்வனு மிந்தப் பாலன்
சடைமுனி புகலு கின்றா் தாய்தந்தை கர்மம் சொல்வாய்
முடவன்¹தன் தசையந் தத்தில் வித்தகன் முப்பான் ரண்டில்
திடமதாய்த் தந்தை கண்டம் செப்பினு மொழிகுன் றுது.

34. வடக்குத் திக்கிற்கு அரசனுகிய குபேரனைப்போல இந்த ஜாதகர் வாழ்வாராகும். ஜாதகருடைய தாயார் தகப்பனுர் இவர்களுடைய கர்ம காலங்களைச் சொல்லுவீர் என்று ஜடைமுனி கேட்கின்றுர். சனி தசையின் முடிவில் ஜாதகரது முப்பத்திரண்டாவது வயதில் தகப்பனுர் இறந்து போவார். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

குறிப்பு.—பிதுர்மாரகம்:—ஜாதகருக்கு வயது வருஷம் 31முதல் வருஷம் 32 முடியும் வரையிலும் சனி தசையில் ராகு குரு இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. பிதுர் லக்கினம் ஒன்பதாவது வீடாகிய மீனமாகும். மீனத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகளாகின்றுர்கள். சனி மீனத்திற்குப் பன்னிரண்டிற்குடையவராகிப் பன்னிரண்டிலேயே மாரகஸ்தானத்தில் இருக்கின்றுர். குரு ஒன்பதாம் பாவாதிபதியாகி, அஃதாவது பிதுர்பாவாதிபதியாகி அதற்கு மூன்ருவது மாரகஸ்தானத்தில் இருக்கின்றதால் ராகுவை விட பிதாவை மாரகஞ் செய்ய அதிக அதிகாரமுடையவராய் இருக்கின்றுர். ஆகையால் சனி தசையில் குருபுக்தியில் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கிறது.

35. அதற்குபின் நாலா மாண்டில் அன்னைக்குக் கண்ட மெய்தும்
அதிபனுக் கறுப தாண்டில் மாசிமா தத்தி லேதான்
சதியான காலன் னூடு சாருவா னென்று சொல்வோம்
துதிசெய்யும் பராசர் சொல்வார் தீர்க்கமாம் வயது என்றீர்.

35. அதற்குப் பின்னல் நான்காவது வருஷத்தில், அஃதாவது முப்பத்தாருவது வயதில் ஜாதகருடைய தாயாருக்கு மரணம் நேரிடும். ஜாதகருக்கு அறுபதாவது வயதில் மாசி மாதத்தில் மரணம் நேரிட்டு இவர் எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவார் என்று சொல்லுகிறோம். இதைப் பராசரமகாரிஷி தடுத்து கேட்கின்றுர். ஜாதகருக்கு வயது தீர்க்கம் என்றீரே.

குறிப்பு.—மாதுர் மாரகம்:—ஜாதகருக்கு வயது வருஷம் 35 முதல் வருஷம் 36 முடியும் வரையிலும் புததசையில் புதபுக்தி நடக்கின்றது. மாதுர் லக்கினம் நான்காவது பாவமாகிய துலாமாகும். துலாத்திற்கு பராசர

¹ சனி.

ஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சூரியனும் குருவும் மாரகாதிபதிகளாகின்றுர்கள். புதன் துலாத்திற்குப் பன்னிரண்டாவது பாவமாகிய மாரகஸ்தானத்திற்கு அதிபதியாகி, மாரகாதிபதியாகிய சூரியனுடன் சம்மந்தப்பட்டும், லக்கின அஷ்டமாதிபதியாகிய சுக்கிரனுடன் கூடியும் இருக்கின்றுர். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாவது பாவம் 20-ஆவது பாடல் பிரகாரமும் புதன் மாரகாதிபதியாகின்றுர்.

(2) ஜாதகர் மாரக விஷயம்.—ஜாதகருக்கு வயது வருஷம் 59 முதல் வருஷம் 60 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் சுக்கிரபுக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் புதன் சுக்கிரன் சனி இவர்கள் மாரகாதிபதிகள் ஆவார்கள். இவர்களில் சுக்கிரன் பதினென்றிற்கு உடையவராய் இருப்பதால் இவர் பெரிய மாரகராவார். மேலும் இவர் ஏழில் மாரகஸ்தானத்தில் சந்திர லக்கினுதிபதியாகிய புதனுடன்கூடி இருக்கின்றுர். ஆகையால் சுக்கிரன் தன்தசையில் சுயபுக்தியில் மாரகஞ் செய்ய அதிகாரமுடையவராகவிருக்கின்றுர்.

36. குருதசை சுயபுக்தியாம் கூடிடு ஆதிகாலம்
உறையாதோ மார கங்கள் உயர்சனி ஆட்சி யாக
வருவினை கண்ட மொன்று விலகிடும் தீர்க்க மெய்தும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

36. குருதசையில் குருபுக்தி ஜாதகர் பிறந்த காலத்திலேயே நடப்பதால் அக்காலத்தில் ஜாதகருக்கு மாரகம் நேரிடாதோ என்று பராசர முனிவர் கேட்க, மேன்மையான சனி ஆட்சியாய் இருப்பதால் ஒரு கண்டம் வினையால் வந்து அது நிவிர்த்தியாகி ஜாதகர் நீண்ட ஆயுளை உடையவராக விருப்பார். அருமையான வேதங்களின் முடிவில் விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

37. மறுஜன்மம் காஞ்சி தன்னில் வருவானும் சௌராஷ்ட்ர வமிசம்
திருமகன் ஜனன காலம் செம்பொன்னின் தசையி ருப்பு
மருவிடும் மூவைந் தாண்டும் மாதமோ ரைந்து மாகும்
குறையிலாப் பூர்வம் சொன்னேம் கொம்பனையாளே கேளாய்.

37. ஜாதகர் அடுத்த ஜன்மத்தில் காஞ்சிபுரத்தில் சௌராஷ்டிர வம்சம் என்ற பட்டுநூல்காரர் குலத்தில் பிறப்பார். ஜாதகர் இந்த ஜன்மத்தில் பிறந்த காலத்தில் குரு பகவானுடைய தசையில் இருப்பு பதினைந்து வருஷமும் ஐந்து மாதமும் ஆகும். குறைவு இல்லாமல் பூர்வ பாகத்தைச் சொன்னேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 83

1. கடகலக் கினம தாகக் கரும்பாம்பு[1] ரண்டி லாகச்
சுடரவன்[2] சேய்[3] நவத்தில் செம்பாம்பு[4] புதனு மெட்டில்
உடுபதி[5] புகரும்[6] பத்தில் உத்தம குருவும் நாலில்
முடவனு[7] மீரா ருக மொழிகுவீர் பலனே என்று ;

அங்காரகன் சூரியன்	சுக்கிரன் சந்திரன்		சனி
புதன் கேது	இராசி சக்கரம்		லக்கினம்
			ராகு
		குரு	

பரணி 1-ஆம் பாதம். சுக்கிர தசை வருஷம் 18-4-0.

1. ஜன்ம லக்கினம் கடகமாகவும், இராகு இரண்டிலும், சூரியன் அங்காரகன் ஒன்பதிலும், கேது புதன் எட்டிலும், சந்திரன் சுக்கிரன் பத்திலும், குரு நான்கிலும், சனி பன்னிரண்டிலும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று ;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலே பொருத்தமுடையதாகும்:—மேஷத்தில் சனியும் ராகுவும், ரிஷபத்தில் புதனும், மிதுனத்தில் சுக்கிரனும், சிம்மத்தில் சந்திரனும், துலாத்தில் கேதுவும், விருச்சிகத்தில் சூரியனும், மகரத்தில் அங்காரகனும் குருவும் ஆகும்.

2. அந்தரி கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
இந்தசேய் ஆணும் ஜன்மம் இல்லமும் வடபால் நோக்கம
அந்தஇல் கூறையாகும் அவனியில் மூத்தோன் மேற்கில்
நத்திலா மனத்தோள் உத்தரம் நரிவாக னத்தோள் தங்கும்.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது அத்திரிமா முனிவர் சொல்லுகின்ருர். பிறந்த இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த

[1] இராகு. [2] சூரியன். [3] அங்காரகன். [4] கேது. [5] சந்திரன். [6] சுக்கிரன். [7] சனி.

வீடு வடக்குத் திக்கைப் பார்த்திருக்கும், கூறை வீடாகவிருக்கும், விநாயக் கடவுளின் கோவில் மேற்கிலிருக்கும், பார்வதியம்மன் கோயிலும் காளியம்மன் கோயிலும் வடக்குத் திக்கில் இருக்கும்.

3. சிரமற்றேன தீபாஞ் சாலி தங்கிடும் குடசி லேதான்
உரைந்தஇவ் வடையா ளத்துள் உத்தமன் நான்காம் ஜன்மம்
வருவனும் முத்திரிய சேயாய் வரைகிரேும் யோக சேதி
கரிமத வானே பெற்ற காதலி கேட்டி டாயே.

3. சிவபெருமானுடைய கோவிலும் திரௌபதியம்மன் கோயிலும் மேற்குத் திக்கில் இருக்கும். சொன்ன இந்த அடையாளங்களுக்குள்ளே ஜாதகர் நான்காவது கர்ப்பத்தில் பிறப்பார். முத்திரிய ஜாதியில் வந்த ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவருடைய யோக விஷயங்களைப்பற்றி சொல்லுகிரேும். கருப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

4. தந்தையின் துணைய னேகம் தங்காவே யாவும் தாமே
விந்தையாய்க் கன்னி ஒன்று விளங்கிடும் தீர்க்க மாக
எந்தக்கா ரணத்தி ஞலே இவன்துணை தோஷம் சொன்னீர்
ஒன்பதில் ரவிசேய் தங்க உரைத்தனம் மங்கை சங்கை.

4. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரர்கள் அனேகம் பேராகும். அவர்கள் எல்லோரும் உயிருடன் இருக்கமாட்டார்கள். ஆச்சரியமாக ஒரு பெண் சகோதரி மாத்திரம் நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள். எந்தக் காரணத்தினுல் இவருக்குச் சகோதர தோஷத்தைச் சொன்னீர். ஒன்பதில் சூரியனும் அங்காரகனும் இருப்பதால் இவ்விதமான தோஷத்தையும் பெண்ணின் விஷயத்தையும் சொன்னேம். (எ-று).

5. குணமதைப் புகலக் கேண்மோ கொடுமையை யெவர்க்கு [மெண்ணுன்
தணிவுள குணத்தா ஞகும் சகலர்க்கும் நல்லோ ஞவன்
கனமிலாக் குடும்ப மெய்தும் கல்வியு மில்லா ஞகும்
சினமதை வெளிக்காட் டாதான் சிவந்தமெய் உயர மில்லான்.

5. தகப்பனுரின் குணதிசையங்களைப்பற்றிச் சொல்லுகிரேும் கேட்பீராக. இவர் எவருக்கும் தீங்கு நினைக்கமாட்டார். சாந்தமான கிருபையான குணத்தையுடையவர். எல்லோருக்கும் நல்லவராக விருப்பார். இவருடைய குடும்பம் சிறப்பில்லாமலிருக்கும். இவருக்கு வித்தை கிடையாது. கோபத்தை வெளியே பிறருக்குத் தெரியும்படியாகக் காட்டிக் கொள்ளாதவராவார். சிவப்பான நிறமுடைய தேகத்தை உடையவர். உயரமாக வில்லாதவர் ஆவரர்.

6. சொல்லது அடக்க முண்டு தோகைசொல் கடவா ஞகும்
நல்லவ ஞகி வாழ்வன் நாற்காலி விருத்தி யற்பம்
அல்லலு முடையா ஞகும் அதிகாரத் தொழிலு மேற்பன்
சில்லரைப் புத்தி யில்லான் தெய்வம் பாஞ் சாலி யென்ரேும்.

6. அமைதியாகவும் சாந்தமாகவும் சுறுக்கமாகவும் பேசுவார். தன்னுடைய பாரியையுடைய சொல்லைமீறி நடக்கமாட்டார். நல்லவராக விருந்து வாழ்வார். கால்நடைகளின் விருத்தி குறைவாகும். கஷ்டங்களும் அலைச்சலும் உடையவராகும். அதிகாரஞ் செய்யக்கூடிய வேலையை உடையவர். தாழ்ந்ததும் கேவலமானதும் அற்பமானதுமான புத்தியில்லாதவர். இவருக்குக் குலதெய்வம் திரௌபதியம்மன் என்று சொல்லுகிறோம்.

7. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறோம் திருவலத்தில்
அன்னவன் வன்னிய சேயாய் அணுகியே குலமு தித்து
முன்னோர்க்குத் தொண்டு பூண்டு மேதினில் வாழுந் நாளில்
தன்குலத் தொருவன் பேரில் சதியான வார்த்தை சொல்லி.

7. தகப்பனுருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். திருவலம் என்ற ஊரில் இவர் வன்னியர் குலத்தில் ஆணாகப் பிறந்து பிராமணர்களுக்கும் பழையோர்களுக்கும் பணி விடைகளைச் செய்து பூமியில் வாழ்கின்ற காலத்தில் தன் ஜாதியைச் சேர்ந்த ஒருவன் மேல் வஞ்சனையானதும் குற்றமானதுமான வார்த்தைகளைச் சொல்லி.

8. அரசர்பா லவமானங்கள அவனுமே செய்யும் போது
குறைவுள மனத்தா ஞகிக் கூறுவான் சாபம் தானும்
வரும் ஜன்மம் துணையு மின்றி வளமிலாக் குடும்பி யாகி
உறைகுவா யென்று சொல்ல உறைந்தது அந்தச் சாபம்.

8. அரசர் முன்னிலையில் அவனை அவமானப்படுத்தவே, அவன் மனம் நொந்து துக்கமடைந்து சாபத்தைக் கொடுத்தான். "நீ உன் னுடைய மறு ஜன்மத்தில் சகோதரர்கள் இல்லாமலும், மேன்மை யான குடும்பஸ்தனுகவில்லாமலும் இருந்து வாழக்கடவாய்" என்று சொல்ல அந்தச் சாபம் தகப்பனுரை அடைந்தது.

9. மாரனு மந்தி யத்தில் வறுமைக ளுடைய னுகிப்
பாரினில் மரண மாகிப் பிரமனுல் வரையப் பட்டுத்
தீரமா யிக்கு லத்தில் ஜனித்தவ னென்று சொல்வோம்
நேரிடு முன்னுழ்ச் சாபம் நிலைக்காரே துணைவர் தாமும்.

9. தகப்பனுர் தன்னுடைய முன் ஜென்மத்தில் கடைசி காலத் தில் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடைந்து பூமியில் இறந்து பிரம தேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டுத் இந்த ஜன்மத்தில் (முத்திரிய ஜாதியாகிய) இந்தக் குலத்தில் பிறந்திருக்கின்றுர் என்று சொல்லுகின் றேம். முன் ஜன்மத்திய சாபம் இவரை வந்து அடையும். இவருக்குச் சகோதரர்கள் உயிருடன் நிலைத்திருக்க மாட்டார்கள்.

10. தனியனுய் வாழ்வா னம்மா தரித்திர குடும்ப மெய்தும்
இனமதிப் பில்லா வாழ்வ னியம்பின குணத்தா னுக்குச்
சினமிலாப் பாலன் தானும் ஜனிப்பனு மென்று சொல்வோம்
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

10. தகப்பனுர் ஒண்டியாகவும் தனியாகவும் இருந்து வாழ் வார் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே! இவருடைய குடும்பம் தரித்திரத்தை அடைந்திருக்கும். இவர் தன்னுடைய இனத்தார்களுடைய மதிப்பும் கௌரவமும் இல்லாமல் வாழ்வார். இங்குச் சொல்லப்பட்ட இவ் வித குணங்களையுடைய தகப்பனுருக்குக் கோபமில்லாத இந்த ஜாதகர் பிறப் பார் என்று சொல்லுகிறோம். தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

11. பாலகன் நிறம்கு ணத்தைப் பகருவோம் சிவந்த மேனி
ஞாலங்கள் சேர்ப்பா னுகும் நாகம்போல் கோப மேற்பன்
சீலம்போல் வெளிம யக்கன் தேவதா பத்தி பூண்பன்
காலத்தை அறிந்து வாழ்வன் கண்முகம் வசியமுண்டு.

11. ஜாதகருடைய நிறம் குணுதிசயங்கள் ஆகிய இவைகளைப் பற்றிச் சொல்லுகிறோம். இவர் சிவந்த நிறமுடைய தேகமுடையவர். நிலங்களைச் சேகரிப்பார். நல்லப் பாம்பு கோபத்துடன் சீறுவதுபோல இவரும் கோபத்துடன் சீறுவார். வெளியாருக்கு நல்ல குணமும் நல்லொழுக்கமும் உடையவர்போலக் காணப்பட்டு அவர்களை மயக்குவார். தெய்வபக்தியை யுடையவர். காலத்தின் நோக்கங்களைத் தெரிந்துகொண்டு அவை களுக்குத் தகுந்தபடி நடந்துகொண்டு காலங்கழிப்பார். அழகிய கண்களா லும் முகத்தாலும் பிறரைத் தன்வசப்படுத்திக் கொள்ளுகின்ற தன்மையை யுடையவராவார்.

12. கல்வியு மற்ப மாகும் கனமிலாக் குடும்பம் பூர்வம்
சொல்லது மிரண்டு மாகும் சோம்பனும் கொஞ்ச முண்டு
எல்லைகள் அற்ப மாகும் மேவல்கள் செய்து உய்வன்
வல்லியின் வர்க்கத் தாரால் மாரனுக் குதவி யுண்டு.

12. ஜாதகருக்கு வித்தை கொஞ்சமாகவிருக்கும். முதலில் சிறப்பும் மேன்மையும் இல்லாத குடும்பமாக இவருடைய குடும்பம் இருக்கும். இரண்டு விதமாக இவருடைய வார்த்தை பொய்யும் உண்மையும் கலந்த தாகவிருக்கும். இவர் கொஞ்சம் சோம்பலையுடையவராவர். இவருக்கு நிலங் கள் கொஞ்சமாகவிருக்கும். பிறர் கட்டளையிடும் வேலையை செய்து ஜீவனஞ் செய்வார். இவருக்குத் தன்னுடைய மனைவியின் பந்துக்களால் சகாயங்கள் ஏற்படும்.

13. பிறந்தநாள் முதலாமாகப் பேசவோ மூவெட் டாண்டும்
குறைபிறை போலே யோகம் குழவிக்கு அனேக கண்டம்
வரவுக்குச் செலவே யுண்டு மனமது அலைச்ச லாகும்
பொருளது காண ளுகும் போசன மல்ப மெய்தும்

13. ஜாதகர் பிறந்த காலம் முதற்கொண்டு அவருக்கு இரு பத்து நான்கு வயது வரைக்கும் தேய் பிறைச் சந்திரன் குறைந்து கொண்டு போவதைப் போலவே யோகமும் குறைந்து கொண்டே போய்விடும்.

ஜாதகருக்கு அனேக கண்டங்கள் நேரிடும். வரவிற்குத் தகுந்தாற் போல செலவும் சமமாகவிருக்கும். மனதில் கஷ்டங்களும் துன்பங்களும் உண்டு. தன வரும்படி கிடையாது. சாப்பாட்டுச் சுகங்களும் குறைந்துவிடும்.

14. சொல்லிய ஆண்டின் மேலாய்ச் சுகமுறும் வறுமை நீங்கும்
நல்லவர் நேசம் செய்தல் நாற்காலி பலித முண்டு
இல்லறம் கொஞ்சம் செய்த லிவனுமே யோகம் காணுன்
அல்லலாம் குடும்ப மென்றேும் அவன்சுதர் தோன்றிப் பின்பு

14. இங்கு மேலே சொல்லப்பட்ட (இருபத்து நான்கு) வயதிற்கு மேலே சுகங்கள் உண்டாகும். கஷ்டங்களும் தரித்திரமும் நிவிர்த்தியாகும். நல்லவர்களுடன் ஜாதகர் சினேகஞ் செய்து கொள்ளுவார். கால்நடைகள் விருத்தியை அடையும். இல்லற தர்மங்களைக் கொஞ்சமாக நடத்திக் கொண்டு வருவார். இவருக்கு யோகம் கிடையாது. இவருடைய குடும்பம் கஷ்டத்தை அடைந்து கொண்டிருக்கும் என்று சொல்லுகிறேம். இவருக்கு குழந்தைகள் பிறந்த பிறகு;

15. சுகமிலாக் குடும்ப மென்றேும் சூரியன் தசையி லேதான்
தகமையாய் மேல்பால் வேறூர் தரணிகள் சேர்த லுண்டு
வகையாகப் பலிதம் காணுன் சந்திரன் தசையி சேஷம்
மிகுதான்யம் பலிதம் லாபம் வளர்பிறை போலே யோகம்.

15. இவருடைய குடும்பம் சுகமில்லாமல் இருந்து கொண்டிருக்கும் என்று சொல்லுகிறேம். சூரியனுடைய தசையில் மேற்குத் திக்கிலுள்ள ஓர் ஊரில் பூமிகள் சேரும். ஆனல் நல்ல பலன்கள் கிடைக்கா. சந்திரனுடைய தசையில் விசேஷ பலன்கள் உண்டாகும். அதிக தானியப் பலிதம் கிடைக்கும். லாபமு மூண்டாகும். வளர்பிறைச் சந்திரன் வளர்ந்து கொண்டே போவதைப் போலவே ஜாதகருடைய யோகமும் வளர்ந்து கொண்டே அதிகமாகிக் கொண்டு வரும்.

16. இன்னமும் விவரம் கேட்கில் இயம்புவோம் பின் பாகத்தில்
தன்துணை ஆண்பால் மூன்று சத்திமா ரிருவர் தீர்க்கம்
பின்னமாம் ஒன்று என்றேும் பேசின கன்னி தன்னில்
நன்மையாய் ஒருத்தி தானும் நசிப்பரா மென்று சொன்னேம்

16. இன்னமும் விவரங்களைக் கேட்டால் அவைகளை அடுத்தப் பாகத்தில் சொல்லுகிறேம். ஜாதகருக்கு ஆண் சகோதரர்கள் மூன்று பேரும் பெண் சகோதரங்கள் இரண்டு பேரும் நீண்ட ஆயுளை உடையவர்களாகவிருப்பார்கள். ஒரு சகோதரர் இறந்து போய்விடுவார் என்று சொல்லுகிறேம். மேலே சொல்லிய சகோதரிகளில் ஒரு நல்ல சகோதரி இறந்து விடுவாள் என்று சொல்லுகிறேம்.

17. பாலகன் மணத்தின காலம் பகருவோ மிருபான் ரண்டில்
நீலியும் அன்னை வர்க்கம் நேர்ந்திடும் மேல்பால் திக்கில்
பாலிகை குணத்தைச் சொல்வேன் பதரான வார்த்தை யில்லாள்
சீலமும் கொஞ்ச முண்டு சிந்தையும் நல்ல தாகும்

17. ஜாதகருடைய விவாகம் நடக்கும் காலத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். இவருக்கு இருபத்திரண்டாவது *வயதில் மனைவி தாயாருடைய பாத்தியதையிலிருந்தும் மேற்கு திக்கிலிருந்தும் வந்து நேரிடுவாள். இவளுடைய குணதிசியங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் அவசரப்பட்டுத் துன்பம் விளைவிக்கக் கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். நல்ல நடவடிக்கையும் நல்லொழுக்கமும் கொஞ்சம்உடையவள். நல்ல மனமுடையவளாவாள்.

* குறிப்பு.—விவாக விஷயம் :—மனைவி விஷயத்தில் சம்மந்தப்பட்ட அம்சங்கள் ஏழாவது இரண்டாவது நான்காவது பாவங்களும், இவைகளின் அதிபதிகளும் சுக்கிரனும் ஆகும். சூரியன் இரண்டாவது பாவாதிபதியாகி ஒன்பதாவது பாவத்தில் இருந்து கொண்டு ஏழாவது பாவாதிபதியாகிய சனியால் பார்க்கப்படுகிருர். ஆகையால் சூரியதசையில் விவாகம் நடக்க அமைப்பு இருக்கின்றது. குரு ஒன்பதிற்குடையவராகி போகஸ்தானமாகிய நான்கில் இருந்து கொண்டு களத்திரகாரகனுகிய சுக்கிரனையும் களத்திரஸ்தானுதிபதியாகிய சனியையும் லக்னுதிபதியாகிய சந்திரனையும் பார்க்கின்றுர். போககாரனுகிய ராகுவும் குருவைப் பார்க்கின்றுர். ஜாதகருக்கு வயது ஷ 21-0-0 முதல் ஷ 22-0-0 முடியும் வரையிலும் சூரிய தசையில் குரு புக்தியும் சனி புக்தியும் நடக்கின்றன. இங்குச் சொல்லிய காரணங்களால் சூரிய தசையிற் குரு புக்தியில் ஜாதகருக்கு விவாகம் நடக்க அமைப்பு இருக்கின்றது.

18. மாரன்தன் மனம்போல் வாழ்வள் வஞ்சக மனமில் லதாள்
தீரமாம் குணத்தா ளாகும் தேகமாந் தளிரை யொக்கும்
காரிமை யோக சாலி காதலி தீர்க்க ஜீவி
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

18. மனைவி தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தாற் போல ஒற்றுமையாயிருந்து வாழ்வாள். கபடு கள்ளம் வஞ்சனை இவைகள் இல்லாத மனத்தையுடையவளாவாள். தைரியமான குணமுள்ளவளாகும். இவளுடைய தேகத்தினுடைய நிறமானது மாமரத்தின் துளிரின் ஒரு விதமான சிவப்பு நிறத்தைப் போலவிருக்கும். இவள் யோகமுடையவள். இவள் நீண்ட ஆயுளை உடையவள். ஆறு பெருமை பொருந்திய முகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

19. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பால் மூன்று
சத்திமார் அவ்வாறு தீர்க்கம் தீரமாம் முதலி லென்றேும்
வித்தகன் முன்ஜன்மத்தை விளம்புவோம் புதுவை தன்னில்
சுத்தமாய்க் குலால வமிசம் தோன்றியே சுகமாய் வாழ்ந்து ;

19. ஜாதகருக்குப் புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். இவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாகவிருப்பார்கள். முதலில் பிறக்கும் குழந்தைகள் வலுவாகவிருக்கும் என்று சொல்லுகிறேம். ஜாதகருடைய பூர்வ

ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் புதுவை என்ற ஊரில் (புதுச்சேரியில்) பரிசுத்தமான குயவர் குலத்தில் பிறந்து சுகத்துடன் வாழ்ந்து கொண்டு ;

20. அதிபனும் நன்னடை யாகி வருவோரை ஆத ரித்து
விதியது முடிந்து இன்னேன் வேதியன் வரையப் பட்டு
இதுகுலம் தனிலு திப்பான் இருபது நாலாண் டின்மேல்
நிதிதானியம் பெருகு மென்ரேம் நோாது அதன்மேல் துன்பம்.

20. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் நல்ல நடவடிக்கையும் நல்லொழுக்கமும் உடையவராகித் தன்னிடத்திற்கு வருகின்றவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்து, பிறகு ஆயுள் முடிந்து இறந்து பிரம தேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்தக் குலத்தில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார் என்று சொல்லுகிறோம். இவருக்கு இருபத்து நான்கு வயதிற்கு மேலே தனம் தானியம் அதிகரிக்கும் என்று சொல்லுகிறோம். இந்த வயதிற்கு மேல் இவருக்குக் கஷ்டங்கள் உண்டாகா.

21. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாஞ்சிவப் புடையா ளாகும்
சூதிலாள் கபட வார்த்தை சொல்லது சுருக்க மாகும்
வேதனை மனமில் லாதாள் அண்டினேர்க் குதவி செய்வள்
காதலி யோக மில்லாள் கட்டுரைப் பகரா ளாகும்.

21. ஜாதகருடைய தாயாரின் குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவள் மாமரத்தின் துளிரின் நிறமாகிய ஒரு விதமான சிவப்பு நிறமுடைய தேகத்தையுடையவளாவாள். கபடு கள்ளம் வஞ்சனை இவைகளில்லாதவள். வஞ்சனையான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். இவள் சுருக்கமாகவும் கொஞ்சமாகவும் பேசுவாள். கஷ்டமுள்ள மனத்தை உடையவளல்லள். தன்னிடம் வந்து சேர்ந்தவர்களுக்கு உபகாரஞ் செய்வாள், இவள் யோகத்தை உடையவளல்லள். பொய் வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையுஞ் சொல்லமாட்டாள்.

22. தோகைபோல் சாய லொக்கும் துணைஆண்ஐவராகும்
பாகமாய்க் கன்னி ரண்டு பகருவோம் பாவைக் கேதான்
தாகமென் ரேர்க்கு ஈவள் தறிபடக் கூறு ளாகும்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

22. இவள் மயிலைப் போன்ற ரூபத்தை உடையவள். இவளுக்கு ஆண் சகோதரர்கள் ஐந்து பேர் ஆகும் என்றும் பெண் சகோதரங்கள் இரண்டு பேர் ஆகும் என்றும் சொல்லுகிறோம். தாகமாய் இருக்கிறதென்று சொல்லுகிறவர்களுக்குத் தாகவிடாயைத் தீர்ப்பாள். வெட்டும்படியானதும் கடினமானதுமான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

23. முன்னவ ளிருந்த ஜன்மம் மொழிகிறோம் மயிலை மேற்கில்
சின்னவூர் தன்னி லேதான் ஜனித்தனள் கவரைச் சேயாய்
கன்னியும் வறுமை யின்றிக் கௌரவ குடும்பி யாகி
அன்னவள் அறமில் லாமல் அந்தகன் நகரம் சென்று ;

23. ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவள் மயிலாபூருக்கு மேற்குத் திக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் கவரை ஜாதியில் பிறந்து கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாத ஒரு கௌரவமான குடும்பஸ்தையாக வாழ்ந்து தருமம் ஒன்றும் செய்யாமல் இருந்து இறந்து எமபட்டணத்திற்குப் போய் ;

24. சிரநான்கோன் வரையப் பட்டு ஜனித்தவ ளென்று சொல்வோம்
வறுமையும் சுகமு மேற்பள் வரைகிறோமிவள் பின்ஜன்மம்
பெருமையாய் அவ்வூர் தன்னில் பிறப்பளாம் வேளாள வமிசம்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே

24. நான்கு தலைகளையுடையவரான பிரம தேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தாள் என்று சொல்லுகிறோம். இவள் கஷ்டத்தையும் தரித்திரத்தையும் சுகத்தையும் மாறி மாறி அடைவாள். இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவள் இந்த ஊரிலேயே மேன்மையான ஒரு வேளாளர் குலத்தில் பெருமையாய் வந்து பிறப்பாள். கருப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

25. முப்பது மூன்று ஆண்டில் விளம்புவோம் தந்தை கண்டம்
செப்புவோமி வன்பின் ஜன்மம் சேழம்பனை பட்டி தன்னில்
ஒப்புடன் பெண்ணை ஓரம் உதிப்பனும் வைசியச் சேயாய்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுது.

25. ஜாதகருக்கு முப்பத்து மூன்ருவது வயதில் † தகப்பனர் மரணம் அடைவார் என்று சொல்லுகிறோம். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் சேழம்பனைப்பட்டி என்ற கிராமத்தில் நீர்நிலை குளம் இவைகளின் ஓரத்தில் வைசிய ஜாதியில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். தன்னுடைய சடையில் கங்கையை அணிந்துள்ள பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவருமல் நடக்கும்.

† குறிப்பு.—தகப்பனர் மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷ 32–0–0 முதல் ஷ 33–0–0 முடியும் வரையிலும் சந்திர தசையில் கேது சுக்கிரன் இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. பிதுர் லக்கினமாகிய மீனத்திற்குச் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்ருர்கள். சந்திரன் மாரக ஸ்தானமாகிய இரண்டில் மாரகாதிபதியாகிய சுக்கிரனுடன் கூடியிருப்பதுடன் லக்கினதிபதியாகிய குருவையும் பார்க்கின்ருர். சுக்கிரன் பிதுர் லக்கினத்திற்கு 3,8க்குடையவராகவும் இருக்கின்ருர். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் துய்ய கேரளம்

எட்டாவது பாவம், 20-ஆவது பாடல் பிரகாரமும் சந்திரன் தன் தசையில் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்புள்ளவராக விருக்கின்றார். சுக்கிரன் மாரகாதிபதியாயிருப்பதுடன் எட்டிற்குடையவராகி லக்கினாதிபதியாகிய குருவையும் பார்க்கின்றார். மேற் கண்ட துய்ய கேரளம் 20-ஆவது பாடல் பிரகாரமுங்கூடச் சுக்கிரன் தன் புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்புள்ளவராக விருக்கின்றார்.

26. இதற்குமேல் ஆறு ஆண்டில் அன்னைக்குக் கண்ட மெய்தும்
இதுநிற்க உதித்தோனுக்கு இயம்வோம் மரண காலம்
ததிகயிறு தசையிலேதான் சார்ந்திடு மிரண்டு கண்டம்
எதுவிதப் பிணிகள் வந்தும் இரவி முன்ப னிபோல் நீங்கும்.

26. ஜாதகருக்கு முப்பத்து மூன்று வயதிற்கு மேல் ஆறுவது வருஷத்தில், அஃதாவது முப்பத்தொன்பதாவது வயதில் தாயாருக்கு மரணம் ஏற்படும். இஃது இப்படியிருக்க, ஜாதகருக்கு மரண காலத்தைச் சொல்லுவோம். இராகு தசையில் ஜாதகருக்கு இரண்டு கண்டங்கள் வந்து சம்பவிக்கும். எந்த நோய் வந்தபோதும் சூரியனைக் கண்ட பனி கலைந்து மறைந்து நிவிர்த்தியாகி விடுவது போல நிவிர்த்தியாகி விடும்.

குறிப்பு.—தாயார் மரணகாலம் :—ஜாதகருக்கு வயது ஷு 38-0-0 முதல் ஷு 39-0-0 முடியும் வரையிலும் அங்காரக தசையில் புதன் கேது இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. மாதுர் லக்கினம் துலாம். பராசரஹோரை சில பதிப்பு பிரகாரம் அங்காரகன் மாரகாதிபதி யாகின்றார். சூரியனும் குருவும் இந்த பதிப்புக்கள் பிரகாரமும் ஜாதகசந்திரிகை பிரகாரமும் மாரகாதிபதிகளாகின்றார்கள். அங்காரகன் மாரக ஸ்தானங்களாகிய இரண்டு எழுக்குடையவராகி மாரகாதிபதியாகிய சூரியனுடன் கூடி இருப்பதாலும் மாதுரு லக்கினத்தைப் பார்ப்பதாலும் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் அங்காரகன் தன் தசையில் மாரகஞ் செய்ய அமைப்புள்ளவராக இருக்கின்றார். மேலும் மாதுர் லக்கினாதிபதியும் அஷ்டமாதிபதியுமாகிய சுக்கிரனைக் கேது பார்க்கின்றார். ஆகையால் துய்ய கேரளம் எட்டாவது பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் கேது மாதாவைத் தன்புக்தியில் மாரகஞ் செய்ய அதிகார முடையவராக இருக்கின்றார். இந்தக் கேது சந்திர லக்கினத்திற்கு மாதுரு ஸ்தானமாகிய கடகத்திற்கு மாரக ஸ்தானமாகிய எட்டில் கடகத்திற்கு மாரகாதிபதியாகிய சனி வீட்டில் இருந்து கொண்டு சந்திரன் ரீதியாய் மாதுர் லக்கினாதிபதியாகிய சந்திரனையே பார்ப்பதால் துய்யகேரளம்பிரகாரம் புதனைவிட அதிக மாரகாதிபதியாகின்றார். ஜாதக சந்திரிகை 12-23-ஆவது சுலோகம் பார்க்கவும்.

27. குருதசை காலம் தன்னில் குழவிக்கு அறுபான் மூன்றில்
மருவிய களத்திரங்கள் மந்தனு மரிப்பா ளுகும்
வரும்ஜன்மம் தவளை கீழ்ப்பால் வளமுள பேரூர் தன்னில்
உறைகுவான் வைசிய சேயாய்ச் உயர்வான குடும்பி யாவன்

27. ஜாதகருக்குக் குரு தசைக் காலத்தில் அறுபத்து மூன்றுவது வயதில் மனைவியர்களும் ஜாதகரும் இறந்து விடுவார். இவர் பின்

ஜன்மத்தில் தவளை என்ற ஊருக்குக் கிழக்கிலுள்ள ஒரு பெரிய ஊரில் வைசியர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து மேன்மையான குடும்பஸ்தராகி வாழ்வார்.

† **குறிப்பு.—ஜாதகர் மரண விஷயம்** :—ஜாதகருக்கு வயது ஷு 62-0-0 முதல் ஷு 63-0-0 முடியும் வரையிலும் குரு தசையில் குரு புக்தி சனி புக்தி இவைகள் நடக்கின்றன. பராசரஹோரை, ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் கடகலக்கினத்திற்கு புதன், சுக்கிரன், சனி இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றார். குரு ஆறுக்குடையவராகி மாரகாதிபதிகளாகிய புதன், சுக்கிரன், சனி இவர்களைப் பார்க்கின்றார். ஆறும்பாவங்கூட மாரக ஸ்தானம் என்று சில கிரந்தங்களிலும் ஜாதக சந்திரிகை 26-ஆவது சுலோகத்திலும் கண்டிருக்கின்றது. மேலும் குரு லக்கினாதிபதியாகிய சந்திரனையும் அஷ்டமாதிபதியாகிய சனியையும் பார்த்திருக்கின்றார். குரு தசை ஆறுவது தசையாகவும் வருகின்றது. ஆகையால் ஜாதகசந்திரிகை 26-ஆவது சுலோகம் பிரகாரமும், துய்ய கேரளம் எட்டாம் பாவம் 20-வது பாடல் பிரகாரமும் குருதசை வரிசைக்கிரமத்தில் ஆறுவது தசையாய் வருவதால் ஜாதகாலங்காரம் 975-ஆவது பாடல் பிரகாரமும், குமாரசுவாமீயம் மகாதசைப் படலம் 4-ஆவது பாடல் பிரகாரமும் குரு மாரகாதிபதியாகின்றார். ஆகையால் குருவிற்குத் தன் தசையில் மாரகஞ் செய்ய அதிகாரம் இருக்கின்றது. சனி மாரகாதிபதி என்று மேலே சொல்லி இருக்கிறோம். இவர் மாரக ஸ்தானமாகிய பன்னிரண்டா மிடத்திலும் இருக்கின்றார். ஆகையால் சனிக்குத் தன்புக்தியில் ஜாதகருக்கு மாரகத்தைச் செய்ய அதிகாரம் இருக்கின்றது. ஆகையால் குரு தசையில் சனி புக்தியில் ஜாதகருக்கு மரணம் நேரிட அமைப்பு இருக்கிறது.

28. பாலன்பின் மனைவி கண்டம் பகருவோம் தாயே யாங்கள்
சேயனு முதிக்கும் காலை வெள்ளியின் தசை யிருப்புச்
சாலவே பதினெட் டாண்டும் சார்ந்திடும் திங்கள் நாலும்
ஏலவே பூர்வம் சொன்னோம் பார்வதி கேட்டி டாயே

28. ஜாதகருடைய மனைவி இவருக்குப் பின்னுல் இறந்து விடுவாள் என்று நாங்கள் சொல்லுகிறோம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! ஜாதகர் பிறக்கின்றபோது சுக்கிர மகாதசையில் இருப்பு பதினெட்டு வருஷமும் நான்கு மாதமும் ஆகும். முன்னே பூர்வபாகத்தை நாங்கள் சொன்னோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 84.

1. கடகமு முதய மாகக் கதிர்[1] புதன ஜன்மம் தங்க
முடவனு[2] கேது மூன்றில் முழுமதி[3] நாலி லாக
வட[4] மொன்பான் சேயும்[5] பத்தில் வேந்தனும்[6] புகர்[7] வியத்தில்[8]
அடைவுடன் பலன்கள் எவ்வாறு அறிவிப்பீர் முனியே நீர்தாம்

ராகு	அங்காரகன்		குரு சுக்கிரன்
	இராசி		லக்கினம் புதன் சூரியன்
	சக்கரம்		
		சந்திரன்	கேது சனி

சுவாதி 3ஆம் பாதம், இராகு தசை ஷ 5–10–0

1. ஜன்ம லக்கினம் கடகமாகிச் சூரியனும் புதனும் ஜன்ம லக்கினத்திலும், சனியும் கேதுவும் மூன்றிலும், வளர் பிறைச் சந்திரன் நான்கிலும், இராகு ஒன்பதிலும், அங்காரகன் பத்திலும், குருவும் சுக்கிரனும் பன்னிரண்டிலும் இருந்தால் பலாபலன்கள் எவ்விதமாக விருக்கும் என்பதை, முனிவரே ! நீர் சொல்லுவீராக.

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப்பின்வரும் அம்சைச் சக்கிர கிரகநிலை பொருத்த முடையதாகும் :—மேஷத்தில் அங்காரகனும் கேதுவும் ரிஷபத்தில் சுக்கிரனும், கன்னியில் புதனும் சனியும், துலாத்தில் இராகுவும், தனுசில் குருவும், மகரத்தில் சூரியனும், கும்பத்தில் சந்திரனும் ஆகும்.

2. இந்தசேய் பெண்பா லாகும் மில்லமும் மேல்பால் நோக்கம்
தென்வட வீதி யாகும் துருவச க்கரமும் கீழ்ப்பால்
நொந்ததோர் கெடியும் தென்பால் நீரணி கடவுள் மேல்பால்
அந்தரி உத்தர மாகும் அணிகிய பேரூராகும்.

2. ஜனனமான இந்தக் குழந்தை பெண் குழந்தை ஆகும். இவள் பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேற்குத் திக்கைப்பார்த் திருக்கும். மஹாவிஷ்ணுவின் கோயில் கிழக்குத்திக்கில் இருக்கும்.

[1] சூரியன் [2] சனி [3] சந்திரன்
[4] இராகு [5] அங்காரகன் [6] குரு
[7] சுக்கிரன் [8] பன்னிரண்டில்

பாழடைந்த கோட்டை தெற்குத்திக்கிலும், கங்கையைத் தன் ஜடையில் அணிந்திருக்கும் சிவபெருமானுடைய கோவில் மேற்குத்திக்கிலும், துர்க்கையம்மன் கோயில் வடக்குத்திக்கிலும் இருக்கும். பிறந்த ஊர் ஒரு பெரிய பட்டணமாகும்.

3. உதிப்பளாம் கங்கை சேயாய் உரைக்கிறே மிவளின் யோகம்
சதியிலாத் தந்தை யோகம் தாய்யோகம் துணைவர் யோகம்
அதிபதி வரனின் யோகம் வரைகிறே மிந்நூல் தன்னில்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

3. ஜாதகி வேளாளர் குலத்தில் வந்து பிறப்பாள். இவளுடைய யோகத்தையும், தகப்பனுருடைய யோகத்தையும், தாயாருடைய யோகத்தையும், சகோதரர்களுடைய யோகங்களையும், இவளுடைய புருஷனுடைய யோகத்தையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம், பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

வேறு

4. தந்தைகுணம் கூறுகிறேம் மாஞ்சிவப்பன்
சரசமாய் வார்த்தையுண்டு தைரியத்தன்
தந்தமது தரளமொக்கு மூகை சாலி தரணிவிருத்தி
தானியத்தில் செட்டுத்தானும் செய்வனுவன்
தந்தைமொழிக் கிடருரையான் உள்ளன்போடும்
சகடுடையன் ஆள்சேர்க்கை சான்றோர்நேயன்
தன்தனங்கள் சேர்த்திடுவான் செலவுசெய்வன்
சாப்பாட்டுச் சுகியெனச் சாற்ற லாகும்.

4. ஜாதகியினுடைய தகப்பனுரின் குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவர் மாமரத்தின் துளிரின் நிறம் போன்ற ஒரு விதமான சிகப்பு நிறமுடைய தேகத்தை யுடையவர். இனிமையானதும், சுகமானதுமான வார்த்தைகளையே உபயோகப்படுத்துவார். தைரிய முடையவர். இவருடைய பற்கள் முத்தைப்போல வெண்மையாகவும் அழகாகவும் இருக்கும். நுட்பமான அறிவையுடையவர். நிலங்களைப் பயிரிட்டு விருத்தி செய்வார். தானியங்களில் வியாபாரஞ் செய்வார். தன்னுடைய தகப்பனுருடைய வார்த்தைக்கு இடைஞ்சலாகப் பேசமாட்டார். மனதிற்குள்ளே அன்பும் ஆசையும் உடையவர். வண்டியை உடையவர். வேலையாட்களைச் சேர்த்து வைப்பார். நல்லவர்களுக்குச் சிநேகிதராக விருப்பார். சுகமானதும் இன்பமானதுமான போஜனத்தைச் சாப்பிட்டுச் சுகத்தை அடையக்கூடியவர் என்று சொல்லக் கூடும்.

வேறு

5. ஈட்டிநாள் குடத்தின் ராசி இறங்குவான் உயர மில்லான்
வாட்டமா மன்னர் சேர்க்கை மறுமொழி அதிகம் கூறுன்
நாட்டினில் நல்லோ னுவன் நல்கிடும் பித்த வாயு
தாட்டியாய் வார்த்தை யுண்டு தனவான்தம் நேசங் கொள்வன்.

5. ஜாதகியினுடைய தகப்பனுர் ஈட்டியைப் போலுள்ள கேட்டை நட்சத்திரத்தில் கும்பலக்னத்தில் பிறந்தவராவார். உயர மில்லாதவர். அழகுள்ளவர். அரசர்களுடைய சினேகத்தை யுடையவர். அதிகமாகப் பேசி பதில் சொல்ல மாட்டார். பூமியில் நல்லவரென்று பெயரெடுப்பார். இவருக்குப் பித்தவாயு இருக்கும். அகங்காரம்தொனிக்கும் வார்த்தைகளைச் சொல்லுவார். பணக்காரருடைய சினேகத்தை அடைவார்.

6. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன் காகுத்தன் நாமம் கொண் [டோன்
உடன்துணை ஆண்பால் ரண்டு உத்தமி மார்கள் மூன்று
திடமுறும் மற்ருேர் சேதம் செப்பின ஆண்பால் குன்றும்
அடைவுட னிவனின் பூர்வம் அறிவிப்போம் தாயே கேளும்.

6. ஜாதகியினுடைய தகப்பனுர் கடன் வாங்குவார். அதைத் திருப்பிக் கொடுத்து விடுவார். இவர் இராமன் என்ற பெயரை உடையவராவார். இவருடன் கூடப் பிறந்தவர்கள் ஆண்கள் இரண்டு பேர்களும் பெண்கள் மூன்று பேர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். மற்றச் சகோதரர்கள் இறந்து விடுவார்கள். சொல்லப்பட்ட ஆண் சகோதரர்கள் குன்றிவிடுவார்கள். தகப்பனுருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேம், எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

7. மதுரைமா நகரி லேதான் மயன்குல மதனி லுதித்து
விதவித பணிகள் செய்து மேதினில் நல்லோ னுகி
நதிசேது பதிக்குச் சென்று நலிந்தோர்க்கு அன்ன மீந்து
விதியது முடிந்த பின்பு வேதியன் வரையப் பட்டு ;

7. தகப்பனுர் முன்ஜன்மத்தில் மதுரை என்ற பெரியபட்டணத்தில் கச்சன் குலத்திற் பிறந்து பல விதமான வேலைகளைச் செய்து பூமியில் நல்லவனென்று பெயரெடுத்துச் சேது ஸ்தலத்திலுள்ள தீர்த்தத்திற்குப் போய் ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டுப் பிறகு ஆயுள்முடிந்து இறந்து பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு.

8 வந்தவ னென்று சொல்வோம் வரமதி லிச்சை யுள்ளான்
பத்தினிக் கிஷ்ட னுவன் பலசகா யங்கள் செய்வன்
பின்துணை பகையு மாகும் பேச்சதைக் காப்பா னுகும்
முந்தின தலங்கள் செல்வன் விசித்திரஇல்லம் செய்வன்.

8. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகிறேம். தகப்பனுர் அவர் தன்னுடைய மனைவிக்கு இஷ்டமானவர். பலவித உபகாரங்களைச் செய்வார். தன்னுடைய இளைய சகோதரர் தனக்கு விரோதியாயிருப்பார். இவர் தன்னுடைய வார்த்தைகளைக் காப்பாற்றுவார். சிறந்த க்ஷேத்திரங்களுக்குப் போவார். விசித்திரமானதும் அழகியதுமான வீட்டைக் கட்டுவார்.

9. இந்நெறி யுடையா னுக்கு இப்பாவை யுதிப்பா ளாகும்
அன்னவள் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் உணச்சல்தேகி
பன்னியே பேசு வாளாம் பதர்குண மில்லா ளாகும்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பாள் பித்த தேகி.

9. இப்படிப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகி பிறப்பாள். இவளுடைய குண குணங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் அழகுள்ளவள். ஒல்லியான தேகத்தையுடையவள். திறமையாகவும் சாமர்த்தியமாகவும் பேசுவாள். தாழ்ந்ததும் இழிவானதுமான குணமில்லாதவளாவாள். இவள் தான் சொன்ன வார்த்தைகளே உயர்ந்தவை என்றும் மேன்மையானவை என்றும் சொல்லி ஜயிக்கக் கூடியவள். பித்த தேகத்தை யுடையவள்.

10. ஊகவாள் நுணுக்கம் தேர்வள் உற்ருேர்கள் மதிக்க வாழ்வள்
ஆகம முணர்ந்தோருக்கு அன்னமு மீய வல்லாள்
நாகரிகங் களுண்டு நல்லோர்க்கு நல்லோளாவள்
போகபாக் கியங்கள் பின்னுல் பெறுவளா மென்று சொல்வோம்.

10. ஜாதகி நுட்பமான அறிவை யுடையவள். இவள் சூட்சுமமானதையும் அறியக் கூடியவள். பந்துக்கள் இவளை மதிக்கும்படி வாழ்வாள். நல்லவர் ஆகமசாஸ்திரம் முதலியவைகளைத் தெரிந்த பெரியோர்களுக்குச் சாப்பாடு போடுவதில் விருப்பமுள்ளவள். நாகரிகங்களை உடையவள். நல்லவர்களுக்கு நல்லவளாக விருப்பாள். இவள் தன்னுடைய பிற்காலத்தில் செல்வத்தையும் சுகங்களையும் அடைவாள் என்று சொல்லுகிறேம்.

11. அரவுபோல் கோப மேற்பள் அற்பபுத் திகளு மில்லாள்
வறுமைக ளுடையா ளாகும் வஞ்சனை எண்ணு நெஞ்சம்
நெறியுளாள் விரதமேற்பள் நிருபனுக் கிவளால் யோகம்
மர்மமும் கொஞ்ச முண்டு வந்தவர் தம்மைக் காப்பள்.

11. ஜாதகி நல்லபாம்பைப்போலக் கோபித்துக்கொள்ளுவாள். தாழ்ந்த புத்திகளையுடையவளல்ல, கஷ்டங்களையும் தரித்திரத்தையும் உடையவளாவாள். பிறருக்குக் கள்ளம் கபடம் வஞ்சனை இவைகளை நினைக்காத மனதையுடையவள். சன்மார்க்கத்தை யுடையவள். இவளுடைய புருஷனுக்கு இவளால் யோகம்வந்து சம்பவிக்கும். கொஞ்சம் ரகசியத்தையும் உடையவள். தன்னிடத்திற்கு வந்தவர்களைக் காப்பாற்றுவாள்.

12. தன்துணை முன்பெண் ஒன்று தங்கும்பின் ஆண்பால் ரண்டு
கன்னியு மொருத்தி யாகும் கழறின நான்கும் தீர்க்கம்
பின்னமாம் மூன்று என்ருேம் பேசுவோம் பின்பால் சேதி
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

12. ஜாதகியுடன் கூடப்பிறந்தவர்களில் மூத்தசகோதரி ஒருத்தியும் இளையசகோதரர்கள் இருவரும் இளையசகோதரி ஒருத்தியும் ஆகும். சொல்லப்பட்ட இந்த நான்கு சகோதரங்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார்கள்.

மூன்று சகோதரங்கள் இறந்துபோய்விடும் என்று சொல்லுகிறோம். இவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னால் சொல்லுகிறோம். மேன்மையான யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

13. அத்திரி மறித்துச் சொல்வார் அறைந்திரே துணைவர் முன்னோள்
வித்தகி குணமெவ்வாறு விளம்புவீர் முனியே நீர்தாம்
சுத்தவாள் அடக்க வார்த்தை சொல்லுமுன் கோபம் கொஞ்சம்
நந்திஞேர்க் குதவிசெய்வள் நயப்புறு வார்த்தை யுண்டு.

13. அத்திரி மகரிஷி தடுத்து கேட்கின்றார். ஜாதகிக்கு முன்னே ஒரு சகோதரி உண்டு என்று சொன்னீரே ! அவளுடைய குணங்கள் எவ்விதமானவை என்று, முனிவரே ! நீர் சொல்லுவீராக. அவள் சுத்தமானவள். வார்த்தைகளை அடக்கமாகவும் பொறுமையாகவும் சொல்லுவாள். பேசுவதற்கு முன்னமே கொஞ்சங் கோபம் உடையவள். தனக்குக் கெடுதியைச் செய்தவர்களுக்குங்கூட உபகாரஞ் செய்வாள். இனிமையாகவும் நயப்பாகவும் வார்த்தைகளை உபயோகப்படுத்துவாள்.

14. வரனுமே தென்பால் நேரும் மாதரு வர்க்கம் தன்னில்
பொறுமையும் பெருமை யேற்பள் புண்ணிய மனத்தா ளாகும்
மறுமமில் லாதா ளாகும் வயதுமே தீர்க்க மெய்தும்
பெரும்சுதர் ஆண்பால் ரண்டு பேதையு மூவர் நீர்க்கம்.

14. இவளுக்குப் புருஷன் தெற்குத் திக்கிலிருந்து வருவார். அவளுடைய தாயார் வர்க்கத்திலிருந்து அவர் வருவார். அவள் பொறுமையையுடையவள். பெருமையையும் உடையவள். புண்ணியங்களைச் செய்கின்ற நல்ல மனத்தை யுடையவள். ரகசியமான மனமில்லாதவள். வஞ்சகமில்லாதவள். அவளுக்கு ஆயுள் அதிகமாகவிருக்கும். அவளுக்கு உண்டாகுங் குழந்தைகளில் ஆண் குழந்தைகள் இரண்டுபேரும் பெண் குழந்தைகள் மூன்றுபேரும் நீண்ட ஆயுளை யுடையவர்களாகவிருப்பார்கள்.

15. சுகமுள குடும்பி யாவள் சோர்வோர்க்குத் தாக மீவள்
பகையென்று மனத்தில் வையாள் பாரினில் வறுமை காணுள்
உகமையாய்ப் பேசு வாளாம் உண்மையா மனத்தாளாகும்
மிருதவம் புரியு மெங்கள் வித்தகி கேட்டிடாயே.

15. அவள் சௌக்கியமுள்ள குடும்பஸ்தளாக விருப்பாள். களைத்துப்போனவர்களுக்குத் தாகவிடாய் தீரத் தண்ணீரைக் கொடுப்பாள். குரோதமானதைத் தன்னுடைய மனத்தில் வைத்துக்கொள்ள மாட்டாள். பூமியில் அவளுக்குக் கஷ்டங்களும் தரித்திரமும் கிடையா. இரண்டு அர்த்தங்கள் ஏற்படும்படியாகச் சிலேடையாகப் பேசுவாள். உண்மையான மனத்தையுடையவள். விசேஷமானதும் அதிகமானதுமான தவங்களைச் செய்கின்ற ஞானமும் செல்வமும் உடைய எங்களுடைய பார்வதியம்மையே ! கேட்பீராக.

16. இவள் துணைச் சேதி யாவும் பேசுவோம் பின்பா கத்தில்
இன்னவள் மணத்தின் கால மியம்புவோம் மூவைந் தாண்டுள்
அன்னவன் வடமேல் நேரும் மாதுரு இளையா லேயே
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் மாஞ்சி வப்பன்.

16. ஜாதகியினுடைய சகோதரர்களின் விஷயங்களைப்பற்றிப் பின்பாகத்தில் பூர்த்தியாகச் சொல்லுகின்றோம். ஜாதகியினுடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவளுக்குப் பதினைந்து வயதிற்குள் புருஷன் தாயாருடைய பந்துவிலிருந்து வடமேற்குத் திக்கிலிருந்து வருவார். இவருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவர் அழகுள்ளவராகவிருப்பார். மாமரத்தின்துளிரின் நிறத்தைப்போன்ற ஒருவித மான சிவப்பு நிறமுள்ள தேகமுடையவராவர்.

* குறிப்பு.—விவாககால விஷயம்:—ஜாதகிக்கு வயது ஷை 14-0-0 முதல் ஷை 15-0-0 முடியும் வரையிலும் குரு தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. குரு ஒன்பதிற்குடையவராகிக் களத்திர காரகனுகிய (பர்த்திருகாரகனுகிய) சுக்கிரனுடன் கூடியிருக்கின்றார். போகஸ்தானமாகிய நான்காம் பாவத்திற்குச் சுக்கிரன் அதிபதியாகவிருக்கின்றார். போகஸ்தானமாகிய துலாத்தைக் குருவும் பார்க்கின்றார். ஆகையால் குருதசையில் சுக்கிர புக்தியில் ஜாதகிக்கு விவாகம் நடக்கும் அமைப்பு இருக்கின்றது.

17. ஒருவர்பா லணுகி யேதான் உத்தியோகம் செய்வா னுகும்
இருவிதக் கல்வி ஏற்பன் எதிரிக்குப் பிணக்கம் சொல்லான்
பொருள்கடன் கொள்ளா னுகும் போஜன வறுமை காணுன்
பெருமையாய்ப் புகழும் பின்னுல் பெறுவனுனென்று
சொல்வோம்.

17. ஜாதகியினுடைய புருஷன் ஒருவரை அண்டி ஜீவனஞ் செய்வர். இரண்டுவித வித்தையையுடையவர். எதிரியிடஞ் சண்டைபோடும் படியாக நெருங்க மாட்டார். பணத்தைக் கடனுக வாங்கமாட்டார். சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டங்கள் இல்லாதவர். பெருமையையும் கீர்த்தியையும் அடையக்கூடியவரென்று சொல்லுகிறோம்.

18. மாதுவும் போன பின்பு வளர்பிறை போலே யோகம்
ஓதுவோம் தாயே யாங்கள் உண்டான பிழைக ளுக்குச்
சாதிப்பான் சிலவே சங்கை சந்தேக மனத்த னுகும்
கியாதியும் ஏற்பா னுகும் கனத்தவர் நேசம் கொள்வன்.

18. ஜாதகியின் புருஷனுக்கு ! இவள் இவனிடம் வந்துசேர்ந்த பிறகு வளர்பிறைச் சந்திரன் விருத்தியாவது போல யோகம் விருத்தியாகும் என்று பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லுகிறோம். தான் செய்ததால், நேரிட்ட குற்றங்களுக்குச் சில காரணங்களைச் சொல்லுவார். சந்தேகமான மனத்தையுடையவராவார். பெருமையையும் புகழையும் அடைவார். பெரிய மனுஷாளுடைய சினேகத்தை அடைவார்.

19. சுதர்களு மாண்பா லொன்று தோகையர் நால்வ ராகும்
அதிபதி பூர்வம் சொல்வேன் மாயூரம் நாட்டி லேதான்
சதிசெயும் வைசியர் சேயாய்ச் ஜனித்துமே செட்டு செய்து
அதிதிகட் கன்ன மீந்து அறமதி லிச்சை யுண்டாய்.

19. ஜாதகிக்கு ஓர் ஆண் குழந்தையும் நான்கு பெண் குழந்தைகளும் உண்டு. இவளுடைய பூர்வ ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன், மாயவரம் என்ற பட்டணத்தில் ஒரு வைசிய குலத்தில் ஜாதகி பெண்ணுகப் பிறந்து வியாபாரஞ் செய்து பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டுத் தருமத்தில் ஆசையுடையவளாய்;

20. வரன்முன்னே மரண மாகி மால்மகன வரைய ப்பட்டு
அரிவையு முதிப்பா ளாகும் அறைகிறே மிவளின் யோகம்
குறைவுறு தன்னமென்றேம் குவலயம் சல்லியம் காணுள்
இரைபணி சேர்ப்பா ளாகும் இடுக்கமே காணு ளாகும்.

20. தன்னுடைய புருஷனுகு முன்னே இறந்து மகாவிஷ்ணுவின் மகனுகிய பிரமாவினல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பெண்ணுக வந்து பிறந்தாள். இவளுடைய யோகத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். இவளுக்கு எப்போதும் சாப்பாடு குறைவுபடாது. பூமியில் கடன் வாங்கமாட்டாள். ஆபரணங்களைச் சேர்த்து வைப்பாள். கஷ்டங்களை அனுபவிக்கமாட்டாள்.

21. ஈரொன்ப தாண்டு மட்டும் இவள்தந்தை சல்லிய பாதை
கூறுவோம் தாயே யாங்கள் குறைமனம் உடையா ஞகும்
மாறிடு மதன்மே லாக மனமது துயரம் நீங்கும்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

21. ஜாதகிக்குப் பதினெட்டு வயது வரையிலும் இவளுடைய தகப்பனுருக்குக் கடனுல் உபத்திரவம் உண்டு என்று எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகிறேம். தகப்பனர் மனக் கஷ்டம் உடையவராகவிருப்பார். அதற்குமேல் நிலைமை மாறி மனக் கஷ்டம் நிவிர்த்தியாகும். ஆறு மஹிமை பொருந்திய முகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

22. விலகிடும் சல்லியம் மென்றீர் விளம்புவீ ரந்தச் சங்கை
நலமுள தானியச் செட்டால் ரசவர்க்கத் தாலே நீங்கும்
தலைவியாம் அன்னை சேதி சாற்றுவோம் சிவந்த மேனி
பலருக்கு நல்லோ ளாவள் பல்வலி உடை யளாமே.

22. கடன் நிவிர்த்தியாகிவிடும் என்று சொன்னீரே! அஃது எவ்விதமாக நேரிடும் என்பதைச் சொல்லுவீராக. நன்மையைத் தரக்கூடிய தான்ய வியாபாரத்திஞலும் ரசவர்க்க வஸ்துக்களிஞலும் கடன் நிவிர்த்தியாகும். ஜாதகியின் தாயாருடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறேம். இவள் சிகப்பு நிறமான தேகத்தையுடையவள். அநேகருக்கு நல்லவளாக விருப்பாள். இவளுக்குப் பல்நோய் இருக்கும்.

23. அன்னம்போல் வடிவு மொக்கும் ஆளன்தன் மனம்போல் வாழ்வள்
அன்னியர் குற்றம் சொல்லாள் அடைந்தோரை ஆத ரிப்பள்
அன்னமு மன்பா யீவள் அடிசலுக் கினிய ளாகும்
அன்னவள் ஈனே ஆண் இரண்டு அறைகிறேம் தீர்க்க மாக.

23. ஜாதகியின் தாயார் அன்னத்தைப்போன்ற அழகான ரூபமுடையவளாவள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுவாள். பிறருடைய பேரில் குற்றமானதைச் சொல்லமாட்டாள். தன்னிடம் வந்து சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவாள். சாப்பாட்டை ஆசையுடன் கொடுப்பாள். சமையல் நன்றாகவும் இனிப்பாகவும் இருக்கும்படியாய்ச் செய்வாள். இவளுடைய ஆண் சகோதரர்கள் இரண்டுபேர் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகிறேம்.

24. தென்கீழ்ப் பால் தாயினில்லம் செப்புவோம் பாவைக்கே தான்
அன்னைபோல் ஆத ரிப்பள் அடாவடி கூரு ளாகும்
முன்ஜன்மம் அருணை தன்னி லுதித்தனள் முதல்கு லத்தில்
உன்னத குடும் பியாகி உதித்துமே வாழ்ந்து மேதான்;

24. ஜாதகியின் தாயாருடைய தாய்வீடு தென்கிழக்குத் திக்கில் இருக்கும் என்று சொல்லுகிறேம். தாயைப்போல இவள் காப்பாற்றுவாள், அநியாயமாகவும் முரட்டுத்தனமாகவும் பேசமாட்டாள். இவள் தன்னுடைய முன்ஜன்மத்தில் அருணை என்று சொல்லப்பட்ட அருணசல க்ஷேத்திரமாகிய திருவண்ணமலை ஸ்தலத்தில் முதல் குலமாகிய பிராமணர் குலத்தில் பிறந்தாள். மேன்மையான குடும்பஸ்தையாகி வாழ்ந்துகொண்டு;

25. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வரையப் பட்டு
சீலமில லாத கங்கை குலமதி லுதித்தா ளென்றேம்
வேல்விழி முன் ஜன்மத்தில் வேதத்தின் குலமு தித்து
ஞாலமேல் குலம்தாழ் வாக நாயகி வந்த தென்ன.

25. பிறகு இறந்து எமபட்டணத்திற்குப்போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டுச் சுத்தமில்லாத ஒரு வேளாளர் குலத்தில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தாள் என்று சொல்லுகிறேம். இவள் பூமியில் இந்த ஜென்மத்தில் பிராமணர் குலத்தைவிட தாழ்ந்த குலமாகிய வேளாளர் குலத்திற் பிறந்ததற்குக் காரணம் என்ன?

26. மங்கையும் முன்ஜன் மத்தில் விரதங்கள் கெடுதி செய்தாள்
சங்கையா லுகித்தாளென்றேம் சாற்றுவோம் பின் ஜன்மத்தைத்
துங்கமாம் திருமால் தன்னில் தோன்றுவாள் பிரம்ம சேயாய்
அதிதிகள் தம்மைவ ளாக்கும் அம்பிகை யாளே கேளாய்.

26. ஜாதகியினுடைய தாயார் முன்ஜன்மத்தில் விரதங்களில் கெடுதியைச் செய்து பாபத்துடன் பிறந்தாள் என்று சொல்லுகிறேம்.

இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். இவள மகா விஷ்ணுவின் ஸ்தலத்தில் பிராமணர் குலத்தில் பெண்ணுகப் பிறப்பாள், பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதி யம்மையே ! கேட்பீராக.

27. நாற்பது ஒன்று ஆண்டில் நற்றனூர் மாதம் தனனில்
கூப்பிடு வானும் காலன் குறித் தோ ரன்னே தன்னே
ஏற்கவே முப்பா னெட்டில்யியம்புவோம் தந்தை கெண்டம்
ஆற்கவே யிவன்பின் ஜன்மம் அறிவிப்போம் தாயே யாங்கள்.

27. ஜாதகிக்கு நாற்பத்தோராவது வயதில் மார்கழி மாதத்தில் இவளுடைய தாயாரை எமன் கூப்பிடவே தாயார் இறந்து போவாள். ஜாதகிக்கு முப்பத்தெட்டாவது வயதில் இவளுடைய தகப்பனுர் இறநது போவார். தகப்பனுருடைய மறு ஜன்மத்தைப் பற்றி எங்களுடைய தாயா ராகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லுகிறேம்.

குறிப்பு.—தாய்மாரக விஷயம் :—ஜாதகிக்கு வயது ஞூ 40–0–0 முதல் ஞூ 41–0–0 வரையிலும் சனி தசையில் குரு புக்தியும், புத தசையில் புத புக்தியும் நடக்கின்றன. மாதுர்லக்கினம் துலாம். துலாலக்கினத் திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சூரியனும் குருவும் மாரகாதிபதிகள் ஆவார்கள். சனி புதன் இவர்களில் புதன் தான் மாரகாதிபதியுடன், அஃதாவது சூரியனுடன் சேர்ந்திருக்கின்ருர். மேலும் புதன் சந்திரனுக்குக் கர்ம ஸ்தானத்தில் இருக்கின்ருர். ஆகையால் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகம் பிரகாரம் சனியைவிட புதன் தாயாருக்கு மாரகஞ் செய்ய அதிக அமைப்புள்ளவராகத் தோற்றுகிருர். ஆனல் நாற்பத் தோராவது வயதில் மார்கழி மாதத்தில் சனி தசையில் குரு புக்திதான் நடப்பதாகத் தெரிகிறது. சனி பன்னிரண்டாவது மாரகஸ்தானமாகிய கன்னியில் புதனுடைய வீட்டில் இருக்கின்ருர். மராகாதிபதியாகிய குருவை யும் பார்க்கின்ருர். குரு மாதுர் ஸ்தானமாகிய துலாத்தையும் பார்த்திருக் கின்ருர். சனி புதனுடைய வீட்டிலும் இருக்கிருர். ஜாதகசந்திரிகை 27-ஆவது சுலோகப் பிரகாரம் சனி தனக்கு முந்திச் செல்லுகின்ற குருவினு டைய மாரகத்தையும் தனக்குப் பிந்தி வருகின்ற புதனுடைய மாரகத்தை யும் கிரகித்துக்கொண்டு குரு புதன் இவர்கள் இருவரையும் மீறி இவர்களே நிராகரித்துவிட்டுத் தானே மாரகஞ்செய்ய அதிகாரத்தை அடைகின்ருர். ஆகையால் சனி தசையில் குருபுக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு ஏற் படுகிறது. (சௌரமான வருஷமல்லாமல் சாவன வருஷத்தை அங்கீகரித்தால் தனுர் மாதத்திற்குப் புததசையில் புதபுக்திவரக்கூடும். ஆனல் இது சந்தேகமான தாகும்.)

குறிப்பு.—தகப்பன் மரணம் :—ஜாதகருக்கு வயது ஞூ 37–0–0 முதல் ஞூ 38–0–0 முடியும் வரையிலும் சனி தசையில் ராகு புக்தி நடக்கின்றது. பிதுர் லக்கினமாகிய மீனத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகைகளின் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள். சனி ஏழில் மாரகஸ்தானத்தில் இருந்துகொண்டு மீன லக்கினத்தையும் பிதுர்

ஸ்தானதிபதியாகிய குருவையும் பார்க்கின்ருர். பிதுருக்கு எட்டாவது பாவாதிபதியாகிய சுக்கிரனேயும் பார்க்கின்ருர். ஆகையால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம்கூட சனி மாரகாதிபதியாகின்ருர். ராகு பிதுர்பாவத்தில் இருப்பதால் தன் புத்தியில் மாரகஞ் செய்ய அதிகார முடையவராகின்ருர்.

28. வாரியி ஞேரம் தன்னில் மாபலி நகரி லேதான்
சேருவான் பிரம்ம சேயாய் ஜயமுனி தடுத்துச் சொல்வார்
மாரனுக் கிச்சென் மத்தில் மருவின புண்ணிய மென்ன
கூறுவீர் விவரம் தன்னைக் குமரனு மிச்சென் மத்தில் ;

28. ஜாதகியின் தகப்பனுர் மஹாபலிபுரம் என்ற பட்டணத்தில் சமுத்திரக்கரை ஓரத்தில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாய் மறு ஜன்மத்தில் பிறப்பார். ஜயமுனிவர் தடுத்துக் கேட்கின்ருர். இவருக்கு இந்த ஜன்மத்தில் ஏற்பட்ட புண்ணியம் என்ன என்பதைப்பற்றி விபர மாகச் சொல்லுவீர் என்று கேட்க, இவர் இந்த ஜன்மத்தில் ;

29. அறமதி லிச்சை யாயும் ஆபத்தைச் சிலர்க்குக் காத்தும்
பெருமையாய்த் தலங்கள் சென்றும் பூமியில் வாழ்வ தாலே
மறைக்குல முதிப்பா ருகும் வரைந்தன மொழி குன்ருது
கரிமத வானே பெற்ற காதலி கேட்டி டாயே.

29. தருமத்தில் ஆசையுடையவராகி இருந்ததாலும், ஆபத்துக் காலத் தில் சிலபேர்களைக் காப்பாற்றியதாலும், மேன்மையாய் க்ஷேத்திரங் களுக்குப் போய் பூமியில் வாழ்ந்ததாலும் பிராமணர் குலத்தில் பிறப்பார். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

30. அன்பது நாலு ஆண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
இன்னவ ளுடலம் ஏகும் யியம்புவோ மிவள்பின் ஜன்மம்
கன்னியா குமரி தன்னில் கலப்பளாம் சைவ சேயாய்
உன்னத வானே பெற்ற உத்தமி கேட்டி டாயே.

30. ஜாதகி தனக்கு ஐம்பத்துநான்காவது வயதில் ஐப்பசி மாதத் தில் இருந்து இவளுடைய தேகம் மறைந்து போய்விடும். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். கன்னியாகுமரி பட்டணத்தில் சைவர் குலத்தில் பெண்ணுய்ப் பிறப்பாள். மேன்மை தங்கிய யானே முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு.—ஜாதகிக்கு வயது ஞூ 53–0–0 முதல் ஞூ 54–0–0 முடியும் வரையிலும் புதன் தசையில் குரு புக்தி நடக்கின்றது. பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் கடக லக்கினத்திற்குப் புதன் சுக்கிரன் சனி இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்ருர்கள். புதன் லக்கினத் தில் இருக்கின்ருர். குரு ஆறுக்குடையவராய் மாரகாதிபதியாகிய சுக்கிர

னுடன் கூடி அஷ்டமத்தைப் பார்க்கின்ருர். ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரமும் புத தசையில் குரு புக்தியில் மாரகம் நேரிட அமைப்பு உண்டு.

31. மங்கையின் மாரன் கண்டம் வரைகுவீர் அவன் முன் ஜன்மம்
துங்கமாம் பத்திரி தன்னில் ஜனித்தனன் மஸ்தான் வமிசம்
பொங்கின குடும் பியாகிப் பிறர்பொரு ளிச்சை யின்றி
அங்கவன் வினையில் லாமல் அனுகினுன் காலனுடு.

31. ஜாதகியினுடைய புருஷனின் கண்டத்தைப் பற்றிச்சொல்லு வீர் என்று கேட்க, சொல்லுகின்ருர். மேன்மை தங்கிய பத்திரி என்ற ஊரில் முஸ்லிம் குலத்தில் பிறந்து சிறப்பான குடும்பஸ்தராகி அன்னியருடைய பொருளின்மேல் ஆசையில்லாதவராகிப் பாவம் ஒன்றும் இல்லாதவராகி இறந்து எமபட்டணத்திற்குப் போனுர்.

32. சிரநான்கோன் வரையப் பட்டு செனித்தவ னென்று சொல்வோம்
வரும்ஜன்மம் மலைநா டன்னில் வருகுவான் சைவச் சேயாய்
அரிவையும் ஜனிக்கும் காலே அரவுதன் தசையைந் தாண்டும்
உறைந்திடு திங்கள் பத்தும் உரைத்தனம் பூர்வ பாகம்.

32. நான்கு சிரசுகளையுடைய பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுவோம். மறு ஜன்மத்தில் இவர் மலை நாட்டில் சைவனுகப் பிறப்பார். ஜாதகி பிறக்குங்காலத்தில் ராகு தெசையில் இருப்பு ஐந்து வருஷமும் பத்து மாதமும் ஆகும். இவ்விதமாக முன்பாகத்தைச் சொன்னேம்.

ஜாதகம் 85

1. கடகலக் கினம தாகக் கரும்பாம்பு [1] நாலி லாக
முடவனும் [2] குருவு மேழில் வெள்ளியும் [3] நவத்தி லாகச்
சுடரவன் [4] கேது பத்தில் சேய் [5] புதன் மதியும் [6] லாபம்
உடன்பலன் எவ்வா றென்று உத்தமி கேட்கும் போது ;

சுக்கிரன்	சூரியன் கேது	சந்திரன் அங்காரகன் புதன்	
	இராசி	சக்கரம்	லக்கினம்
குரு சனி			
		ராகு	

ரோகிணி 1-ஆம் பாதம். சந்திரதசை 8-9-0.

1. ஜன்ம லக்கினம் கடகமாகி, இராகு நான்கிலும், சனியும் குருவும் ஏழிலும், சுக்கிரன் ஒன்பதிலும், சூரியனும் கேதுவும் பத்தி லும், அங்காரகனும் புதனும் சந்திரனும் லாபமாகிய பதினுென்றிலும் இருந்தால் பலாபலன்கள் எவ்விதமாக விருக்கும் என்று பார்வதியம்மை யார் கேட்கும்போது ;

குறிப்பு.—இந்த ராசிக் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும் :—மேஷத்தில் சந்திரனும், கடகத்தில் கேதுவும், சிம்மத்தில் குருவும், கன்னியில் சுக்கிரனும், விருச்சி கத்தில் சூரியனும், மகரத்தில் அங்காரகன் புதன் ராகு சனி இவர்களும் ஆகும்.

2. பிருகுமே புகலு கின்ருர் பிறந்திடு மாண்பால் ஜன்மம்
பெறும்தந்தை யில்லம் சொல்வேன் புரந்தரன் குடக்கு வீதி
தெருவாசல் வடபா லாகும் சிவன்கோஷ்டம் தென்மே லாகும்
நரிவாக னத்தாள் மீனம் நல்கிடு மேல்பால் மாயோன்.

2. பிருகுமகரிஷியானவர் சொல்லுகின்ருர், பிறந்த குழந்தை ஆண் குழந்தையாக ஜனிக்கும். பெற்ற தகப்பனுருடைய வீட்டைப்பற்றிச் சொல்லுகிறேன். வீதி இந்திரனுடைய திக்காகிய கிழக்குத்திக்கிலிருந்து

[1] இராகு. [2] சனி. [3] சுக்கிரன். [4] அங்காரகன். [5] சூரியன். [6] சந்திரன்.

குடக்குத் திக்காகிய மேற்குத் திக்கிற்குப் போகும், கிழக்கு மேற்கு வீதியாகும். அது வீட்டின் தெருவாயிற்படி வடக்குத் திக்கிலிருக்கும். சிவபெருமானுடைய கோவில் தென்மேற்கில் இருக்கும். காளிதேவியின் கோயில் வடக்குத் திக்கிலும் மகாவிஷ்ணுவின் கோயில் மேற்குத் திக்கிலும் இருக்கும்.

3. புதிதாக இல்ல முத்திரம் செப்வோம் சமலூ ராகும்
நதிகுலம் சேஷ்ட னுக நவிலுவோம் பாலன் தானும்
அதிபன்தன் குடும்ப சேதி வரைகிறோ மிந்நூல் தன்னில்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

3. புதியதாகக் கட்டப்பட்ட வீடு வடக்குத் திக்கிலிருக்கும். பிறந்த ஊர் நடுத்தரமான ஊராகும் என்று சொல்லுவோம். வேளாளர் குலத்தில் ஜேஷ்ட குழந்தையாக ஜாதகர் வந்து பிறப்பார். இவருடைய குடும்ப விஷயங்களை இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—ஜேஷ்டனுகப் பிறக்கும் விஷயம் :—மூத்தோர் ஸ்தானம் ரிஷபம். இதற்குடைய சுக்கிரன் சனியினுடைய காலாகிய உத்தரட்டாதியில் இருந்துகொண்டு சனியால் பார்க்கப்படுகின்றார். இது தோஷமாகும். மூத்தோர்காரகராகிய குரு நீசமடைந்து சனியுடன் இருப்பது தோஷம். குரு ஆறுக்குடையவராய்ப் பதினொன்றைப் பார்ப்பது தோஷமாகும். புதன் விரயாதிபதியாகிப் பதினொன்றில் இருப்பது தோஷம். அங்காரகன் பதினொன்றில் இருப்பது தோஷம். ஆகையால் ஜாதகருக்கு மூத்தோர் கிடையாது.

4. தந்தையின் வர்க்கம் தன்னைச் சாற்றஆண் பலமு ருது
வந்திடும் கன்னி ஒன்று வரைகிறோம்தீர்க்க மாக
அந்தவள் சுகமே வாழ்வள் ஆளனும் வடமே லாகும்
சந்ததி தோன்றும் தீதாம் சடைமுனி தோஷத் தாலே.

4. தகப்பனுருடைய பந்துக்களைப்பற்றி சொல்லுகிறோம். இவருக்கு ஆண் சகோதர பலம் கிடையாது. இவருக்கு ஒரு சகோதரி நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள். இவள் சுகஜீவியாக வாழ்வாள். இவளுடைய புருஷன் வடமேற்குத் திக்கிலிருந்து வருவார். குழைந்தைகள் பிறக்கும். ஜடைமுனி என்ற ஒரு முனியேஸ்வரனுடைய தோஷத்தாலே அவை இறந்து போய்விடும்.

5. சடைமுனி தோஷம் தீரச் சாற்றுவீர் கிரியையொன்று
அடைவுடன் கிரக சாந்தி அவளுக்குச் செய்து மேலும்
உரைரேக்கில் அம்மன் பீஜம் உரைத்துமே அணிவா ளாகில்
விடமுனி சாபம் நீங்கி விளங்கிடும் சுதர்கள் விருத்தி.

5. இந்த ஜடைமுனிவருடைய தோஷம் நிவிர்த்தியாகச் சாந்தி ஒன்றை சொல்வீராக. நவக்கிரக சாந்தி ஒன்றைச் செய்து, அதற்கு மேல் ஒரு ரேக்கில் பார்வதி அம்மனுடைய பீஜத்தை எழுதி அதை இவள் அணிந்துகொள்ளுவாளாகில் விஷமுள்ள முனீசுவரருடைய சாபம், அதனுலேற்பட்ட தோஷம் விலகிச் சந்ததிகள் விருத்தியாகும்.

6. கன்னிமா ரிருவ ராகும் காளையு மொன்றே தீர்க்கம்
சொன்னது போலே செய்யில் தீர்க்கமா மூன்று என்றோம்
இன்னவன் தந்தைச் சேதி யம்புவோம் மால்நி றத்தன்
தன்மனம் கபடு மில்லான் தரணியால் ஜீவிப்பா னும்.

6. இவளுக்கு இரண்டு பெண் குழந்தைகளும், ஓர் ஆண் குழந்தையும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். நாம் சொல்லிய சாந்தியைச் செய்தால் இந்த மூன்று குழந்தைகளும் நீடித்திருக்கும் என்று சொல்லுகிறோம். ஜாதகருடைய தகப்பனுரின் விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒரு விதமான நிறத்தையுடையவர். தன்னுடைய மனத்தில் கள்ளம் வஞ்சனை கபடம் இவைகள் இல்லாதவராவார். நிலங்களால் ஜீவனஞ் செய்வாராகும்.

7. கொஞ்சமாம் பூமி யென்றோம் இன்சொலும் கொஞ்ச முண்டு
அஞ்சின வார்த்தை கூறுவன் அடாமொழி கூறு னும்
வஞ்சக ரிஷ்ட னுவன் வளவும் செய்வா னும்
கஞ்சமாம் ரேகை யுண்டு காசுகள் அதிக மில்லான்.

7. தகப்பனுருக்கு நிலங்கள் கொஞ்சமாக விருக்கும் என்று சொல்லுகிறோம். இனிமையான வார்த்தைகளைக் கொஞ்சமாக இவர் உபயோகப்படுத்துவார். பயப்பட்டு கடினமில்லாத வார்த்தைகளைச் சொல்லுவார். அநியாயமானதும் முரட்டுதனமானதுமான வார்தைகளைச் சொல்ல மாட்டார். வஞ்சனை செய்பவர்கள் கபடமாயுள்ளவர்கள் ஆகிய இவர்களிடத்தில் பிரியமாயிருப்பார். ஒரு அழகிய வீட்டைக் கட்டுவார். இவருடைய கையில் கமலரேகை என்ற தாமரைரேகை இருக்கிறது. தனம் அதிகமாக வில்லாதவர்.

8. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறோம் தக்கோ லத்தில்
நன்னயச் சேடர் வமிசம் நல்கியே வாழுந் நாளில்
அன்னிய மாது பேரில் அற்புத வார்த்தை சொல்லக்
கன்னிகை திகில டைந்து கழறின சொல்லைக் கேண்மோ.

8. ஜாதகரின் தகப்பனுருடைய முன் ஜென்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். ஒரு நல்ல நெசவுக்காரருடைய குலத்தில் பிறந்து வாழுகின்ற காலத்தில் ஓர் அயலாருடைய ஸ்திரீயின்மேல் ஆச்சரியமான வார்த்தைகளைச் சொல்ல, அவள் பயத்தை அடைந்து சொல்லிய வார்த்தைகளைக் கேட்பீராக.

9. பெண்பழி சொன்ன பாவி பிறக்கும் பின் ஜன்மம் தன்னில்
அண்ணன்தம் பிகளு மின்றி ஆண்மையாய்க் குடும்ப மின்றிக்
குன்னிய வார்த்தை தெத்து குவலயம் தன்னில் வாழ்வாய்த்
திண்ணமாய் அந்தச் சாபம் சேர்ந்தது என்று சொல்வோம்.

9. ஒரு பெண்ணின் மேல் பழியைச் சொல்லிய பாவியாகிய நீ உன்னுடைய மறு ஜன்மத்தில் உனக்கு அண்ணனும் தம்பியும் இல்லாமலும், வலுவானதும் மேன்மையானதுமான குடும்பமும் இல்லாமலும், குறைவான வார்த்தைகளைச் சொல்லுகின்ற தெத்வாயனாகவும் இருந்து வாழக்கடவாய் என்று அந்த ஸ்திரீ சொல்ல அவளுடைய அந்தச் சாப மானது உண்மையாய் இவனை வந்து அடைந்தது என்று சொல்லுகிறோம்.

10 மாரனு மந்தி யத்தில் மஹாதேவர் பூசை செய்து
வேறொரு வினையில் லாமல் மேவினன் காலன் றூடு
சூரியன் வரையப் பட்டு அணுகின னிவனே என்றேம்
நேரிடும் மாது சாபம் நுவல்வதில் தெத்தல் கொஞ்சம்.

10. தகப்பனர் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் சிவபெருமானைப் பூஜை செய்து, வேறு யாதொரு பாபமும் இல்லாமல் இறந்து எமபட்டணத்திற்குப் போனர், பிறகு பிரம தேவனால் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இவர் வந்து பிறந்து இருக்கின்றார் என்று சொல்லுகிறோம். முன் ஜென்மத்திய ஸ்திரீயின் சாபம் இவரை வந்து அடையும். பேசுவதில் இவருக்குக் கொஞ்சம் தெத்துதல் ஏற்படும்.

குறிப்பு.—தெத்துதல் விஷயம் :—ஐந்திற்குடையவரும் இரண்டிற்குடையவரும் மறைந்திருந்தால் தெத்துதல் ஏற்படும் என்று ஜோதிட சாஸ்திரங்களில் சொல்லி இருக்கிறது. இங்குப் பிதுர் லக்கினம் ஒன்பதாமிடமாகிய மீனம் ஆகும். இதற்கு ஐந்திற்குடையவராகிய சந்திரனும், இரண்டிற்குடையவராகிய அங்காரகனும் சேர்ந்து கொஞ்சம் மறைவிடமாகிய மூன்றில் இருப்பதைக் கவனிக்கவும்.

11. ஜாதகன் குணத்தை யாங்கள் சாற்றுவோ மிருநி றத்தான்
மேதினில் வாத தேகி விளைபுலம் சேர்ப்பா னுகும்
தீதிதுகள் எண்ணு னுகும் சொன்மொழி குன்று னென்றேம்
மாதவர் பத்தி மானும் அரமதி லிச்சை யுண்டு.

11. ஜாதகருடைய குண குணங்களைப் பற்றி நாங்கள் சொல்லுகின்றோம். இவர் இரண்டு நிறங்களும் கலந்த நிறமாகிய மா நிறமுள்ள தேகத்தை யுடையவர். இவர் பூமியில் வாத தேகத்தை யுடையவர். பயிரிடுதற்குரிய நிலங்களைச் சேகரிப்பார். தீங்கு முதலியவைகளை நினைக்கமாட்டார். தான் சொல்லுகின்ற வார்த்தைகளைத் தவறி நடக்கமாட்டார் என்று சொல்லுகின்றோம். முனிவர்கள் பேரில் பக்தியும் அன்பும் உடையவராவார். தருமஞ் செய்வதில் இவர் ஆசையை உடையவர்.

12. கல்விமான் கணக்கில் வல்லன் கருதிடான் கட்டு வார்த்தை
நல்லவன் நல்லவர்க்கு நாற்காலி விருத்தி யுண்டு
சொல்வது மேன்மையாகும் சொர்ணமும் சேர்ப்பா னுகும்
அல்லலில் லாமல் வாழ்வன் அம்பிகை யாளே கேளாய்.

12. ஜாதகர் படித்தவர், கணக்குப் போடுவதில் கெட்டிக்காரர். பொய்யானவையும் புனைந்தவைகளுமான வார்த்தைகளை உபயோகிக்க எண்ண மாட்டார். நல்லவர்களுக்கு நல்லவராக நடந்து கொள்ளுவார். கால்நடைகள் விருத்தியுண்டு. இவருடைய சொற்கள் மேன்மையுடையனவாக விருக்கும் மதிக்கத்தக்கனவாகவுமிருக்கும். பொன்னைச் சேகரித்து வைப்பார். கஷ்டங்களும் அலைச்சலும் இல்லாமல் வாழ்வார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

13. தன்துணை ஆண்பால் ரண்டு தங்கிடும் கன்னி மார்கள்
பின்னமாம் தன்பின் னுகப்பேசுவோ மாண்பால் ஒன்று
கன்னியு மவ்வாறு தீர்க்கம் கழறின நான்கும் தீர்க்கம்
அன்னவர் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே யாங்கள்.

13. ஜாதகருடன் கூடப் பிறந்தவர்களில் இரண்டு மூத்த சகோதரர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். மூத்த சகோதரிகள் பிறந்து இறந்து விடுவார்கள். இவர்களுக்குப் பின்னல் ஓர் ஆண் சகோதரமும் ஒரு பெண் சகோதரமும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். ஆகையால் மொத்தம் நான்கு சகோதரங்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள்.

குறிப்பு.—ஜாதகர் ஜேஷ்டர் என்று மூன்றுவது பாடலில் சொல்லி இருப்பதால் இங்குச் சொல்லப்பட்ட எல்லாச் சகோதரர்களும் இவருக்கு இளையவர்கள் என்று எண்ணவேண்டும்.

14. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பதினெட் டாண்டில்
வேல்விழி தென்பால் நேரும் விளம்புவோ மவள்கு ணத்தைச்
சீலியா மிருசி வப்பள் சிந்தையும் நல்ல தாகும்
மால்மனை யொப்ப தாகும் வருவோரை ஆத ரிப்பள்.

14. ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவருக்குப் பதினெட்டாவது வயதில் †வேலைப்போல் அழகிய கண்களையுடைய மனைவி தெற்குத் திக்கிலிருந்து வந்து நேரிடுவாள். இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். நல்ல நடவடிக்கையும் நல்லொழுக்கத்தையும் உடையவளாவாள். இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறமுள்ள தேகத்தையுடையவள். நல்ல மனத்தை உடையவளாவாள். மகாவிஷ்ணுவின் மனைவியாகிய இலட்சுமிக்குச் சமானமானவளாக விருப்பாள். தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள்.

குறிப்பு.—விவாக கால விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷ 17–0–0 முதல் ஷ 18–0–0 முடியும் வரையிலும் ராகு தசையில் ராகுபுத்தி நடக்கின்றது. முதல் தாரம் சம்பந்தமான அம்சங்கள் ஏழாவது இரண்டாவது நான்காவது பாவங்களும் இந்த பாவாதிபதிகளும், சுக்கிரனும் ஆகும். ராகு போக ஸ்தானமாகிய நான்காவது பாவத்தில் இருந்துகொண்டு ஏழுக்குடைய சனியாலும், இரண்டிற்குடைய சூரியனாலும் பார்க்கப்பட்டிருக்கின்றார். மேலும் ராகுவே போககாரகன் ஆகிறார். ஆகையால் ராகு தசையில் ராகு புக்தியில் ஜாதகருக்கு விவாகம் நடக்க அமைப்பு இருக்கின்றது.

15. மங்கைபாட் டாளி யாகும் வர்ணித்தோர்க் குதவி செய்வள்
அங்கவள் வந்த பின்பு ஆளனுக் கதிக யோகம்
எங்கள்போ லதிதிக் கன்ன மீவளாம் பொறுமை சாலி
தங்கமும் பணிகள் சேர்ப்பள் சாதமு மன்பா யீவள்.

15. ஜாதகருடைய மனைவி கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடியவளாவாள். இவள் புருஷனுடன் வந்து சேர்ந்த பிறகு புருஷனுக்கு அதிக யோகம் ஏற்படும். எங்களைப்போன்றவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாடு போடுவாள். பொறுமையையுடையவளாவள். பொன்னும் ஆபரணங்களும் ஆகிய இவைகளைச் சேகரித்து வைப்பாள். அன்னத்தை ஆசையுடனும் அன்புடனும் கொடுப்பாள்.

16. மாதுவும் தீர்க்க ஜீவி மைந்தர்கள் பலத்தைக் கேண்மின்
ஆதவன் போலாண் ரண்டு அம்பிகை மார்க எவ்வாறு
ஓதின நான்கும் தீர்க்கம் உரைத்த இம் மொழிகுன் றுது
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

16. ஜாதகருடைய மனைவி நீண்ட ஆயுளை உடையவள். புத்திர பலத்தைப் பற்றிக் கேட்பீராக. சூரியனைப்போல இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் நான்கு குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும். இளமையான மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

17. ஜாதகன் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் மதுரை கீழ்ப்பால்
மேதினில் சிறுவூர் தன்னில் விளங்கினன் வைசியச் சேயாய்
மாதவர் பக்தி பூண்டு வளமுள தலங்கள் சென்று
தீதென்றோர்க் குதவி செய்து தீவினை யில்லா தாகி ;

17. ஜாதகருடைய பூர்வஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். பூமியில் மதுரைமா நகரத்திற்குக் கிழக்குத் திக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் வைசியர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து, முனிவர்களின்மேல் பக்தியும் அன்பும் உடையவராகி நல்ல செழிப்பான திவ்விய க்ஷேத்திரங்களுக்குப் போய், கெட்டுப்போயும் நொந்துபோயும் இருக்கின்றோம் என்று சொல்லியவர்களுக்கு உபகாரஞ் செய்து, பாவம் ஒன்றும் இல்லாதவராகி ;

18. காலன்தன் நாடு சென்று சஞ்சனல் வரையப் பட்டு
சீலமாம் கங்கை சேயாய் செனிப்பன மிந்தப் பாலன்
ஞாலங்கள் சேர்ப்பா னுகும் ஞாதியின் பூமி சேர்க்கை
பால்பாக்கியம் விருத்தி யுண்டு பாரினில் சல்லியம் காணன்.

18. இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு நல்லொழுக்க முடைய வேளாளர் குலத்தில் இந்த ஜன்மத்தில்

வந்து ஜாதகர் பிறந்தார். இவர் நிலங்களைச் சேகரித்துவைப்பார். தாயாதிகளினுடைய நிலங்கள்கூட இவருக்கு வந்துசேரும். பால் பாக்கியம் விருத்தியாகும். பூமியில் இவர் கடன் வாங்கமாட்டார்.

19. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்தகா ரணங்கள் சொல்வாய்
ஆலோனும் பரிதி வெள்ளி அவர்மூவர் உச்ச மாக
நீலனு மாட்சி யாக நின்றதால் வேசி யோகம்
சாலவே பர்வத யோகங்கள் சாற்றினேம் பால னுக்கு.

19. ஜாதகருக்கு யோகத்தைச் சொன்னதற்குக் காரணத்தைச் சொல்லுவீர்.. சந்திரனும் சூரியனும் சுக்கிரனும் ஆக இவர்கள் மூன்று பேரும் உச்சமாக விருப்பதாலும், சனியும் ஆட்சியாக விருப்பதாலும் வேசி யோகம் என்ற ஒரு யோகமும், நல்லதாகிய ஒரு பர்வத யோகமும் † ஆக இவ்விரண்டு யோகங்களையும் ஜாதகருக்குச் சொல்லுகின்றோம்.

†குறிப்பு.—பர்வத யோகம் :—இந்தயோக விஷயமாக ஜாதகாலங்காரம் 297-303-304-344-ஆவது பாடல்களையும், ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் 128-ஆவது சுலோகத்தையும், ஜாதக சிந்தாமணி 2150-2151-2152-ஆவது பாடல்களையும், பலதீபிகை ஆறுவது அத்தியாயம் 31-32-ஆவது சுலோகங்களையும், ஜாதக சாரதீபிகை 62 (அறுபத்திரண்டாவது) அத்தியாயம் 23-ஆவது சுலோகத்தையும் பார்க்கவும். (1) நான்கு கேந்திரங்களிலும் இடைவிடாமல் கிரகங்கள் இருப்பது பர்வதயோகமாகும். ஜாதகாலங்காரம் 297-ஆவது பாடல் ஆகும். இங்கு மூன்று கேந்திரங்களில்தான் கிரகங்கள் இருக்கின்றன. (2) லக்கினதிபதி இருக்கின்ற வீட்டிற்குடையவராகிய சுக்கிரன், உச்சத்தில் அல்லது கேந்திரத்தில் இருப்பது பர்வத யோகமாகும். ஜாதகாலங்காரம் 303-ஆவது, 344-ஆவது பாடல்கள். (3) லக்கினதிபதியும் பன்னிரண்டிற் குடையவரும் ஒருவருக் கொருவர் கேந்திரத்திலிருந்து மித்திர கிரகங்களால் பார்க்கப்பட்டால் பர்வதயோகமுண்டு. ஜாதகபாரிஜாதம் ஆறுவது அத்தியாயம் 128-ஆவது சுலோகம். இங்குச் சந்திரனும் புதனும் கூடி இருக்கின்றார்கள். அங்காரகன் சந்திரனுக்கும் புதனுக்கும் சமகிரகமாகும். சந்திரனும் புதனும் கூடியிருப்பதால், ஒருவருக்கொருவர் கேந்திரத்திலிருக்கின்றார். சாதகசிந்தாமணி 2150-ஆவது பாடல். (4) தனதிபதியும் லாபாதிபதியும் உச்சத்திலிருப்பதும் பருவதயோகமாகும். இங்குச் சூரியனும் சுக்கிரனும் உச்சம். சாதக சிந்தாமணி 2151-ஆவது பாடலைப் பார்க்கவும்.

20. இருவகை யோகத் தாலே யிவனுமே வறுமை காணுன்
தரையதை நாட்கு நாளாய்ச் சேர்ப்பானு மிந்தப் பாலன்
திருமாளி செய்வா னுகும் தேவதா தலங்கள் செல்வன்
அறுமுகன் பக்தி பூண்பன் அரன்தொண்டு புரிவா னுகும்.

20. இந்த இரண்டுவித யோகங்களினுலே ஜாதகர் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டார். இவர் நிலங்களை நாளடைவில் சேகரித்தக்கொண்டே வருவார். ஓர் அழகிய மாளிகைபோன்ற வீட்டைக் கட்டுவார்.

தெய்வ ஸ்தலங்களுக்குப் போவார். ஆறு முகங்களையுடைய முருகக் கடவுளின்பேரில் பக்தியும் அன்பும் உடையவர். சிவபெருமானுக்குத் திருத் தொண்டு பூஜை இவைகளைச் செய்வார்.

21. பந்துவு மதிக்க வாழ்வன் பத்தாண்டு முதலாம் யோகம்
அந்தவன் மரண மட்டும் அம்புலி போலே செல்வம்
தன்தனம் கொடுக்கல் வாங்கல் சதுஷ்பாதம் விருத்தி யென்றேம்
இந்திரன் போலே வாழ்வ னிடுக்கமென் றேரைக் காப்பன்.

21. ஜாதகர் பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான நிலைமையிலிருந்து வாழ்வார். இவருக்குப் பத்துவயது முதற்கொண்டு யோகமுண்டாகும். இந்த யோகம் இது முதற்கொண்டு இவருடைய மரணகாலம் வரையிலும் வளர்பிறைச் சந்திரனைப்போல வளர்ந்துகொண்டேபோகும். இவர் தன்னுடைய பணத்தைப் பிறருக்குக்கொடுத்து மறுபடியும் திருப்பி வாங்கிக் கொள்ளுவார். கால்நடைகள் இவருக்கு விருத்தியாகும் என்று சொல்லுகிறேம். இவர் இந்திரனுக்குச் சமமாக விருந்து வாழ்வார். கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றேம் என்று சொல்லுகிறவர்களை இவர் காப்பாற்றுவார்.

22. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாநிறம் சமதே கத்தாள்
சூதிலாள் கோபம் கொஞ்சம் சொல்லது அதிக முண்டு
சாதிப்பாள் சிலது சேதி சகலர்க்கும் நல்லோ ளாவள்
பாதக மனமில் லாதாள் பண்போர்க்கு அன்ன மீவள்.

22. ஜாதகருடைய தாயாருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் மாநிறமுள்ளதும் சம அளவுள்ளதுமான தேகத்தையுடையவள். சூது கள்ளம் கபடம் இவைகள் இல்லாதவள். கொஞ்சம் கோபமுடையவள். அதிகமாகப் பேசுவாள். சில விஷயங்களைச் சொல்லி அவைகளை நிலை நாட்டுவாள். எல்லோருக்கும் நல்லவளாக விருப்பாள். கெடுதியான மனத்தையுடையவளல்லள். தகுந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவாள்.

23. இல்லமும் தென்பா லாகும் இவள்துணை ஆண்பால் ரண்டு
வல்லிமார் நால்வ ராகும் வரைகிறேம் பின்பால் சேதி
தல்லியின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் வேலங் காட்டில்
நல்லதோர் பேரூர் தன்னில் நாயகி செங்குந்த சேயாய் ;

23. ஜாதகரின் தாயார் வீடு தெற்குத்திக்கிலிருக்கும். இவளுடன்கூடப் பிறந்தவர்கள் ஆண்கள் இரண்டு பேரும் பெண்கள் நான்கு பேரும் ஆக அறுவர் ஆகும் என்று சொல்லுகிறேம். இவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்னால் சொல்லுகிறேம். இவளுடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். வேலங்காட்டில் ஒரு நல்ல பெரிய செங்குந்தர் என்ற கைக்கோளர் ஜாதியில் பெண்ணாகப் பிறந்து ;

24. பிறந்துமே காஞ்சி தன்னில் புருடன்பா லணுகி யேதான்
சிறந்திடும் சுதர்க ளுண்டாய்த் தீவினை யில்லா தாகி
மறலியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டு
உறைந்தனள் இக்கு லத்தில் உத்தமி கேட்டி டாயே.

24. பிறந்து காஞ்சீபுரத்தில் புருஷனுடைய வீட்டிற்குச் சென்று அவனுடன் வாழ்ந்து நல்ல குழந்தைகளைப் பெற்றுப் பாவம் ஒன்றும் இல்லாமல் இறந்து எம பட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனால் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இந்தக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். பார்வதியம்மையே ! கேட்பீராக.

25. மறுஜன்மம் தில்லை தன்னில் வருவளாம் பிரம்ம சேயாய்த்
திருமக ளிச்சென் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன
வரன்மனம் போலே வாழ்ந்தும் வருவோரை ஆத ரித்தும்
குறையென்றேர்க் குதவி செய்தும் கோதையும் வாழ்ந்த தாலே ;

25. ஜாதகரின் தாயார் அடுத்த ஜன்மத்தில் தில்லை என்று சொல்லப்பட்ட சிதம்பர க்ஷேத்திரத்தில் பிராமணர் குலத்தில் வந்து பெண்ணாகப் பிறப்பாள். இவள் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணியங்கள் என்ன என்று கேட்கவே சொல்லுகின்றேம். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடியே நடந்துகொண்டு வாழ்ந்ததாலும், தன்னிடத்திற்கு வந்தவர்களைக் காப்பாற்றிக்கொண்டும், நாங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றேம் என்று சொல்லிக் கொண்டவர்களுக்கும்; உபகாரஞ் செய்து கொண்டும் இவள் வாழ்ந்து வந்ததாலே ;

26. பிறப்பளா மென்று சொல்வோம் பேசுவீர் கரும காலம்
திருகிலா முப்பா னைந்தில் சேல்மாதம் தந்தை கண்டம்
வரும்ஜன்மம் காஞ்சி தன்னில் வருவனும் க்ஷத்திரி சேயாய்
நிதியது பெருக்க மாகி நேமியில் செட்டுச் செய்வன்.

26. இவள் பிராமணர் ஜாதியில் பிறப்பாள் என்று சொல்லுகிறேம். தாய்தந்தை இவர்களுடைய மரண காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகருக்கு முப்பத்தைந்தாவது வயதில் பங்குனி மாதத்தில் † தகப்பனர் இறந்து விடுவார். இவர் மறு ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் க்ஷத்திரிய குலத்தில் ஆணாகப் பிறந்து அதிகச் செல்வமுடையவராகிப் பூமியில் வர்த்தகஞ் செய்வார்.

† குறிப்பு.—தகப்பனர் மரண காலம் :—ஜாதகருக்கு வயது ௵ 34–0–0 முதல் ௵ 35–0–0 முடியும் வரையிலும் குருதசையில் குரு புக்தி நடக்கின்றது. பிதுர்லக்கினம் மீனம். மீன லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதக சந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி சுக்கிரன் புதன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றார்கள். பிதுர்ஸ்தானாதிபத்தியம் பெற்ற குருவுக்கே தசை வந்து குரு நீசமாய் இருப்பதால் பிதாவை மாரகஞ் செய்ய இவருக்கு அமைப்பு இருக்கின்றது. இவர் வீடாகிய மீனத்தில் மாரகா திபதியும் அஷ்டமாதிபதியுமாகிய சுக்கிரனும் இருக்கின்றார். மேலும் மாரகாதிபதியாகிய சனியுடன் குரு கூடியிருப்பதுமன்றி மாரகாதிபதியாகிய புதனையும் குரு பார்க்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் பிதாவை மாரகஞ் செய்ய குருவுக்கு அமைப்பு உண்டாகின்றது.

27. அன்னைக்கு முப்பத் தெட்டில் ஐப்பசி மாதம் தன்னில்
துன்மையாய்க் காலன் னூடு செல்லுவா னென்று சொல்வோம்
மன்னனு மறுப தாண்டில் மார்கழி மாதம் தன்னில்
இன்னவ னுடலம் ஏகும் ஈச்வரி கேட்டி டாயே.

27. ஜாதகரின் தாயாருக்கு இவரது முப்பத்தெட்டாவது வயதில் ஐப்பசி மாதத்தில் *மரணம் நேரிட்டு இவள் எம பட்டணத்திற்குப்போய்ச் சேருவாள் என்று சொல்லுகிறேம். ஜாதகருக்குத் தனது அறுபதாவது வயதில் மார்கழி மாதத்தில் † மரணம் நேரிட்டு இவருடைய தேகம் அழிந்து போய் விடும். பார்வதியம்மையே! கேட்பீராக.

*குறிப்பு.—(1) தாயார் மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷூ 37–0–0 முதல் ஷூ 38–0–0 முடியும் வரையில் குருதசையில் சனி புக்தி நடக்கின்றது. தாயாருடைய லக்கினம் துலாம். பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் குருசந்திரன் அங்காரகன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகளாகின்றார்கள். குரு நீசமாகித் துலாத்திற்கு ஆறுக்குடையவராகி அஷ்டமாகிய ரிஷபத்தைப் பார்க்கின்றார். ஆகையால் தாயாரை மாரகஞ் செய்ய இவருக்கு அமைப்பு ஏற்படுகின்றது. சனி மாரகாதிபதியாகிய குருவுடன் சம்மந்தப்பட்டு மாதுர்ஸ்தானத்தைப் பார்க்கின்றார். மேலும் மாதுர்ஸ்தானத்திற்கு அஷ்டமாதிபதியாகிய சுக்கிரனையும் பார்க்கின்றார். ஆகையால் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம்பாவம் 20-ஆவது பாடலேஅனுசரித்தும் மாதாவுக்கு மாரகஞ் செய்யச் சனிக்கு அமைப்பு இருக்கிறது. ஆகையால், குரு தசையில் சனி புக்தியில் மாதாவுக்கு மரணம் நேரிட அமைப்பு இருக்கின்றது.

(2) †ஜாதகர் மாரக விஷயம் :—ஜாதகருக்கு அறுபதாவது வயதில் மார்கழி மாதம் முடியும் வரையில் வயது ஷூ 59 மீ 8 நாள் 7 ஆகிறது. இவருக்குச் சனி தசையில் சுக்கிரபுத்தி வயது ஷூ 56–6–21 முதல் வயது ஷூ 59–8–21 வரையிலும் இருக்கிறது. கடகலக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி சுக்கிரன் புதன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றார்கள். சனி ஏழாவது பாவத்திற்கும் எட்டாவது பாவத்திற்கும் உடையவராகி ஆறுக்குடையவராகிய குருவுடன் கூடி மாரகஸ்தானமாகிய ஏழாவது வீட்டில் இருக்கின்றார். ஆகையால் துய்யகேரளம், எட்டாவது பாவம், 14-ஆவது 20-ஆவது பாடல்களின் பிரகாரமும் பராசரஹோரை ஜாதகசந்திரிகை ஆகிய இவைகளின் பிரகாரமும் மாரகஞ் செய்ய அமைப்பு உள்ளவராகவிருக்கின்றார். கடக லக்கினத்திற்குச் சுக்கிரன் பதினொன்றிற்கு உடையவராய் இருப்பதாலே இந்திரஜித்திற்கு மாரகஞ் செய்ததைப்போல மாரகஞ்செய்ய அதிக அதிகாரமுடையவராகவிருக்கின்றார். ஆகையால் சுக்கிரனுக்குத்தன் புக்தியில் மாரகஞ் செய்ய சூரியனைவிட அதிக அமைப்பு உண்டு.

28. பாலன்பின் ஜன்மம் சொல்வேன் பரங்குன்ற நகரிலே தான்
சீலமா மிக்குலத்தில் ஜனித்துமே அரசு செய்து
ஞாலங்க ளதிக முண்டாய் நாயகன் வாழ்வா னாகும்
ஆலத்தை யுண்டோன் தேவி அறைந்தஇம் மொழிகுன் றாது.

28. ஜாதகருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். இவர் திருப்பரங்குன்றம் என்ற நகரத்தில் நல்லொழுக்கமுள்ள இந்த ஜன்மத்திற் பிறந்த குலத்திலேயே ஆணாகப் பிறந்து அரசாட்சி செய்து நிலங்களும் பூமிகளும் அதிகமாக உடையவராகி வாழ்பவராவார். ஆலகால விஷத்தை உண்டவராகிய பரமசிவனுடைய பாரியையாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

29. உதித்திடுங் காலம் தன்னில் ரோகிணி முதல்பா தத்தில்
மதிதசை ஆண்டு எட்டும் மாதமும் நவமே யாகும்
பதியது வேறு செய்தல் பாருகள் சேர்த்த லுண்டு
இதுமுதல் பாகம் சொன்னோம் ஈச்வரி கேட்டி டாயே.

29. ஜாதகர் பிறக்கும்போது ரோகிணி நட்சத்திரம் முதல் பாதத்தில் இதற்குரிய சந்திரமகா தசையில் இருப்பு எட்டு வருஷங்களும் ஒன்பது மாதங்களும் ஆகும். இந்தத் தசைக்காலத்தில் வேறு வீடு உண்டாகும். நிலங்கள் சேரும். இது வரையிலும் முதலாவது பாகத்தைச் சொன்னோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 86

1. சந்திரன் குருவும் தேளில் [1] சனிராகு கடகம் புக்கப்
புந்தியும் [2] புகிர்ரவி [3] சுங்கன் [4] புல்லினில் [5] சேயும் [6] கன்னிப்
பின்சிகி [7] மான [8] தாகும் பேசுவோம் நண்டு [9] ஜன்மம்
இந்தவாறு கிரகம் நின்ற லியம்புவீர் பலனைத் தானே.

		சூரியன் புதன் சுக்கிரன்	
	இராசி சக்கரம்		லக்கனம் சனி ராகு
கேது			
	சந்திரன் குரு		செவ்வாய்

அநுஷம் 1-ஆம் பாதம். சனிதசை இரு 14-10-0.

1. சந்திரனும் குருவும் விருச்சிகத்திலும், சனியும் ராகுவும் கடகத்திலும், புதனும் சூரியனும் சுக்கிரனும் ரிஷபத்திலும், அங்காரகன் கன்னியிலும், கேது மகரத்திலும், ஜன்ம லக்கினம் கடகமாகவும் இருந்து இவ் விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சூரியனும், கேதுவும், கடகத்தில் அங்காரகனும், சிம்மத்தில் சந்திரனும் புதனும், துலாத்தில் குருவும் சனியும் ராகுவும், மகரத்தில் சுக்கிரனும் ஆகும்.

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்ருர்
மேதினிலா ண்பால் ஜன்மம் விளம்புவோ மில்லம் தானும்
ஓதுவேன் வடதென்வீதி உயர்மேற்கு வாடை யாகும்
போதக வானே கோஷ்டம் பொறுந்திடும் தெற்கி லேதான்.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது கௌசிக மகரிஷியானவர் சொல்லுகின்ருர். பூமியில் இந்த ஜாதகர் ஆண் குழந்தையாகப் பிறப்பார்.

[1] விருச்சிகம். [2] புதன். [3] சூரியன்.
[4] சுக்கிரன். [5] ரிஷபம். [6] அங்காரகன்.
[7] கேது. [8] மகரம். [9] கடகம்.

பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லுகிரேம். வடக்குத் தெற்கு வீதியில் சிறந்த மேற்கு வாடையாகும் என்று சொல்லுகிறேன். இளமையான மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளின் கோயில் தெற்குத் திக்கிலே இருக்கும்.

3. அருகினில் மேற்கில் சந்தி அறுபட்ட கன்னி வாசம்
நரிவாகன த்தான் மீனம் நாட்டின சிறுவூர் தன்னில்
வருவனுமிந்தப் பாலன் வர்க்கமோ ரெட்டியாகும்
உரைக்கிரேம் யோகச் சேதி உத்தமி கேட்டி டாயே.

3. அருகில் மேற்குத்திக்கில் பகவதியம்மன் கோயில் இருக்கும். காளியம்மன் கோவில் வடகிழக்குத் திக்கில் இருக்கும். இந்த அடையாளங்கள் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் இந்தக் குழந்தையாகிய ஜாதகர் வந்து பிறப்பார். இவர் ரெட்டியாருடைய குலத்தில் பிறப்பார். இவருடைய யோக விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிரேம் உத்தமியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

4. வித்தையு முடையா ஞகும் வீண்வார்த்தை வம்பில் செல்லான்
புத்தியில் பெரியோர் நேயன் புகலுவே னற்ப கோபி
சுற்றத்தார் சேர்கை யுள்ளான் சுகமிகு குடும்பி யாவன்
உற்றநற் றுணைவரோடு உயர்ச்சி யாய் வாழ்வா ஞமே.

4. ஜாதகருடைய தகப்பஞர் இரண்டு வித வித்தைகளை உடையவராவர். அனுவசியமான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். வலுசண்டைக்குப் போகமாட்டார். புத்திசாலிகளாயுள்ள பெரிய மனுஷர்களுடைய சிநேகத்தை யுடையவர். கொஞ்சங் கோபத்தையுடையவர் என்று சொல்லுகிறேன். பந்துக்களுடன் கூடியிருப்பார். அதிக சுகமுள்ள குடும்பஸதராக இருப்பார். நல்ல சகோதரர்களுடன் கூடி மேன்மையாயிருந்து வாழ்பவராவார்.

5. சொல்லிடும் வசனம் மேலாய்ச் சுத்தவான் சொகுசா யுண்பான்
வெல்லுவா னெதிரி தன்னை வீண்வழக் கோரம் சொல்லான்
அல்லல்கள் ஆதியில்தான் அடைவானும் அல்ப உண்டி
எல்லைக ளதிக மில்லா னிடுக்கமாய் வாழ்வா ஞமே.

5. தகப்பஞர் சொல்லுகின்ற வார்த்தைகள் மேன்மையான வைகளாகவிருக்கும். சுத்தமாகவுமிருக்கும். இவரும் சுத்தமாகவிருப்பார். நேர்த்தியானதும் சுகமாகனதுமான சாப்பாட்டைச் சாப்பிடுவார். இவர் தன்னுடைய சத்துருக்களை ஜயித்துவிடுவார். வீண் சண்டையில் ஒரு பட்சமாகப் பேசமாட்டார். வயதின் முதல் பாகத்தில் கொஞ்சங் கஷ்டங்களை அனுபவிப்பார். நிலங்கள் அதிகமாகவில்லாதவர். கஷ்டத்துடனே வாழ்பவராவார்.

6. கைமுதல் பின்னு ளுள்ளான் கனத்திடும் பணியோர் விருத்தி
பொய்யது வழுத்தா நெஞ்சம் பரவிய கீர்த்தி ஏற்பன்
தையலால் யோக முண்டு தன்துணை மூத்தோ னுலும்
செய்காலி தன தானியங்கள் சேர்க்கையா மிவனுக் கேதான்.

6. அதற்குப் பிறகு தகப்பனார் தன்னுடைய கையில் சொத்தடைய வராவார். நிலங்களும் ஏர்களும் விருத்தியாகி அதிகப்படும். இவர் பொய் சொல்லாத மனத்தையுடையவர். சொல்லிக்கொள்ளக்கூடிய பெரிய புகழை அடைவார். ஸ்திரீகளால் பெரும் யோகத்தை அடைவார். இவருடைய சகோதரர்களில் இவருக்கு மூத்தவராக விருப்பவரால் செய்கால் நிலங்களும் தனமும் தானியங்களும் இவருக்கு வந்து சேரும்.

7. மனதினில் கபடு வையான் மடையரை வசியம் கொள்வன்
இனத்தோர்கள் மதிக்க வாழ்வ விடரென்றோர் தம்மைக் [காப்பன்
கனத்திருப் பணியும் செய்வன் கடவுளர் பத்தி பூண்பன்
வினையிலா கிராமச் செட்டு வித்தகன் சிலநாள் செய்வன்.

7. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய மனத்தில் கள்ளம் வஞ்சனை கபடம் இவைகள் இல்லாதவராக இருப்பார். புத்தியில்லாதவர்களைத் தன் பக்கமாக வசப்படுத்திக்கொள்ளுவார். பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான நிலைமையிலிருந்து வாழ்ந்து வருவார். கஷ்டங்களை அனுபவிக்கின்றோம் என்று சொல்லுகிறவர்களைக் காப்பாற்றுவார். மேன்மையான பெரிய கோயில் வேலைகளைச் செய்வார். கடவுள்களின்பேரில் பக்தியும் அன்பும் உடையவர். இவர் பாபமில்லாத கிராம வியாபரத்தைக் கொஞ்ச காலஞ் செய்வார்.

8. தந்தையின் முன்சோதர சேயில்லாமல் தமையனால் பூமி [கொள்வன்
வந்தவர்க் கன்ன மீவன் மங்கையர் மோகம் கொள்வன்
சுந்தரன் கட்டில் மெத்தை சுகம்பெற அனுப விப்பன்
வந்திடும் துணைஆண் நான்கும் மங்கையும் மூவர் தீர்க்கம்.

8. தகப்பனாரின் தமையனாருக்குப் பிள்ளை இல்லாத காரணத்தினால் ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய மூத்த சகோதரனுடைய நிலங்களை அடைவார். இவர் தன்னிடம் வந்து சேர்ந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். ஸ்திரீகளின்மேல் காம ஆசையை யுடையவராவார். கட்டில் மெத்தை இவைகளின்மேல் சயனித்துத் தூங்குகின்ற சயன சுகத்தை அனுபவிப்பார். இவருக்கு நான்கு ஆண் சகோதரங்களும் மூன்று பெண் சகோதரங்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள்.

9. துணைவரில் ஒருவன் தன்பால் சேர்ந்துமே ஜீவிப்பா னாகும்
பிணையிலா மூவர் வேருய்ப் புக்குவார் வெளியூர் தன்னில்
சினமிலா ஒன்ருய் வாழ்வர் சேதியை யிரண்டில் சொல்வேன்
அணையஇக் குணத்தா னுக்கு அருளுவா னிந்தப் பாலன்.

9. தகப்பனாரின் சகோதரர்களில் ஒருவர் இவருடன்கூட இருந்து ஜீவிப்பார். இவருடன்கூட இல்லாத மூன்று பேர்களும் வெளியூருக்குப்போய் அவ்விடத்தில் வேறு குடும்பமாகவிருந்து வருவார்கள். இவர்கள் கோபமில்லாமல் ஒன்ருகவிருந்து வாழ்வார்கள். இவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்னால் இரண்டாவதுபாகத்தில் சொல்லுகிறேன். இங்குச் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனாருக்கு இந்தக் குழந்தை பிறப்பார்.

10. மால்நிறம் சமதே கத்தன் மனமது கபடு கொஞ்சம்
சீலவான் கல்வி யுள்ளான் ஜனசகா யங்கள் செய்வன்
பால்பாக்கிய முடையா னாகும் பகைவரை வெல்வா னாகும்
மால்பத்தி கொஞ்ச முள்ளான் மானிலம் விருத்தி செய்வன்.

10. ஜாதகர் மகாவிஷ்ணுவினுடைய நீலமேக வர்ணம் போன்ற ஒரு வித நிறத்தையுடையவர். சம அளவுள்ள தேகத்தையுடையவர். இவருடைய மனமானது கொஞ்சம் கள்ளம் வஞ்சனை கபடம் இவைகளையுடையதாகும். இவர் நல்லொழுக்க முடையவர். வாசித்தவர். ஜனங்களுக்கு உபகாரத்தைச் செய்வார். பசு எருமை முதலியவைகளின் பால் பாக்கிய முடையவராகும். இவர் தன்னுடைய சத்துருக்களை ஜயித்துவிடுவார். மகாவிஷ்ணுவின் மேல் கொஞ்சம் பக்தியுடையவராவர். பெரிய நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார்.

11. நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்டனுவன்
புல்லர்க்கு விரோத மாவன் புத்திமான் கணக்கி லூகி
சொல்லதைக் காப்பானுகும் துருசான கோப முள்ளான்
மல்லுரை தனக்கு அஞ்சான் மன்னர்கள் பேட்டி கொள்வன்.

11. ஜாதகர் நல்லவர்களுக்கு நல்லவராக நடந்து கொள்ளுவார். முரடர்களுக்குத் திண்ணியராக இருப்பார். கீழ்மக்களுக்கு விரோதியாக இருப்பார். புத்தியுள்ளவர். கணக்கில் கெட்டிக்காரர். நுட்பமான அறிவுடையவர். தான் சொல்லுகின்ற வார்த்தைகளைக் காப்பாற்றுபவராவார். சீக்கிரத்தில் கோபத்தை அடையக்கூடியவர். சண்டை போடும் படியான பேச்சுவார்த்தைகளைச் சொல்ல பயப்படமாட்டார். அரசர்களுடைய வரவையுங் காணுதலையும் உடையவர் ஆவார்.

12. பணையொடு யேர்பெ ருக்கம் பாக்கியம் பசுநாற் காலி
இணைசுகம் சயன மெத்தை யிகமுறு பணிதி கூடும்
பணைதுயில் புதைய லுண்டாம் பெரிதான குடும்பி யாவன்
துணைவரை ஆத ரிப்பன் தொல்புவி செட்டுச் செய்வன்.

12. ஜாதகருக்குப் பயிரிடும் நிலங்களும் ஏர்களும் அதிகப்படும். நாற்கால் ஜந்துக்களின் பாக்கியத்தையுடையவர். மெத்தையின்பேரில் சயனித்துத் தூங்கும் சயன சுகத்தையுடையவர். வலுவான ஆபரணங்கள் வந்து சேரும். ஒரு மரக் கட்டிலின் மேல் நித்திரை செய்வார். இவருக்குப் புதையல் கிடைக்கும். பெரிய குடும்பஸ்தராக இருப்பார். தன்னுடைய சகோதரர்களைக் காப்பாற்றுவார். இந்தப் பழமையான பூமியில் வியாபாரஞ் செய்வார்.

13. தன்துணை ஆண்பா லொன்று தையலர் மூன்று மாகும்
சொன்னது நான்கும் தீர்க்கம் சோர்வுறும் மூன்று என்றேம்
அன்னவர் மூத்தோ ராக அறைகிறே மாண்பால் சேதி
நன்னய வார்த்தை சொல்வன் நாயக னிருநி றத்தன்.

13. ஜாதகருக்குக் கூடப்பிறந்த ஆண் ஒன்றும் பெண்கள் மூன்று பேர்களும் ஆக இந்த நான்கு பேர்களும் நீண்ட ஆயுளேஉடையவர் களாகவிருப்பார்கள். மூன்று சகோதரங்கள் இறந்துவிடுவார்கள். சொல்லப்பட்ட நான்கு பேர்களும் மூத்தவர்களாவார்கள். இவர்களில் ஆண் சகோதரரின் விஷயங்களேப் பற்றிச் சொல்லுகிறேன். இந்தத் தமயன் நல்லவைகளுமான நயமானவைகளுமான வார்த்தைகளேச் சோல்லுவார். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மா நிறமுள்ள தேகத்தையுடையவராவார்.

14. அடக்கமும் பெருமை பூண்பன் அன்புள மனத்தா னுகும்
துடுக்கெனக் கூரு னுகும் சொல்லதைக் காப்பா னுகும்
இடக்குகள் ஒருவர்க் கெண்ணுனிளமன முடைய னுகும்
நடக்கையும் நல்ல தாகும் நாதனுர் பத்தி பூண்பன்.

14. ஜாதகருடைய தமயனுர் அடக்கமும் கீர்த்தியும் உடையவர். பிரியமான மனத்தையுடையவர். கடினமாகவும் விரைவாகவும் குறும்பாகவும் பேசமாட்டார். தான் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுபவராவார். பிறருக்குக் கெடுதிகளேச் செய்ய நினேக்கமாட்டார். இளகிய மனத்தையுடையவர். நல்ல நடவடிக்கையும் ஒழுக்கமும் உடையவர். கடவுளின் மேல் பக்தியும் அன்பும் உடையவர்.

15. மனேவியு மொன்றே யாகும் மாதுரு வர்க்கம் கீழ்ப்பால்
கனமுள சுதராண் ஒன்று கன்னிகை யிரண்டு மாகும்
துணேவன்செய் தவத்தி னுலே சந்ததி தோன்று மென்ருேம்
வினேயிலா வயது தீர்க்கம் வித்தக னுடனே வாழ்வன்.

15. ஜாதகருடைய தமயனுருக்கு மனேவி ஒன்றேயாகும். இவள் கிழக்குத் திக்கிலிருந்து தாயாருடைய வம்சத்திலிருந்து வந்து நேரிடுவாள். இவ்ருக்கு மேன்மையான ஓர் ஆண் குழந்தையும், இரண்டு பெண் குழந்தைகளும் உண்டாகும். இவருடைய சகோதரர் செய்கின்ற புண்ணியத்தினுலே இவருக்குக் குழந்தைகள் பிறக்கும் என்று சொல்லுகிருேம். இவருக்குப் பாவமில்லாமல் நீண்ட ஆயுள் உண்டு. இவர் ஜாதகருடன் கூட ஒன்ருயிருந்து வாழ்வார்.

16. தானியச் செட்டுச் செய்வன் தரணியில் விருத்தி யுள்ளான்
ஆனவர் நேசம் கொள்வன் ஆசாரன் கிருஷி செய்வன்
கனதன முடையவ னுவன் கடவுளின் பக்தி பூண்பன்
சினமதை வெளிக்காட் டாதான் சிறப்புள குடும்பி யாவன்.

16. ஜாதகருடைய தமயனுர் தானியங்களில் வியாபாரஞ் செய்வார். நிலங்களேப் பயிரிட்டு விருத்தியாக்குவார். அரசாளுகின்றவர்களுடைய சினேகிதத்தை அடைவார். நல்ல ஒழுக்கங்களுடையவர். விவசாய வேலேயைச் செய்வார். அதிக தனமுடையவர். கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவர். கோபத்தைப் பிறர் அறியும்படியாக வெளியே காட்டிக் கொள்ளமாட்டார். மேன்மையான குடும்பஸ்தராவார்.

17. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாஞ்சிவப் புடைய ளாகும்
நீதிவாள் நடக்கை நன்மை நிமலியும் யோக சாலி
மாதவர்க் கன்ன மீவள் வரன்மனம் விரோதம் செய்யாள்
சூதிலாள் வறுமை காணுள் துணேயாண்பா லொன்றே யாகும்.

17. ஜாதகரின் தாயாருடைய குணுதிசயங்களேப் பற்றிச் சொல்லுகிறேன். மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிகப்பு நிறத்தையுடையவளாவாள். நெறிதவருத நல்ல நெறியையும் உடையவள். நல்லொழுக்கத்தை உடையவள். இவள் யோகத்தை யுடையவள். முனிவர்களுக்குச் சாப்பாடு போடுவாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்கு விரோதமாக நடந்து கொள்ளமாட்டாள். கபடம் வஞ்சனே கள்ளம் இவைகள் இல்லாதவளாவாள். கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அனுபவிக்கமாட்டாள். இவளுடன் கூடப்பிறந்தவர் ஒரே ஒரு ஆண் சகோதரராகும்.

18. கன்னிகை மூன்று என்ருேம் கனத்ததோர் குடும்பி யாவாள்
மன்னுமாசார முள்ளாள் மத்தியில் தந்தம் நீங்கும்
அன்னமு மன்பா யீவள் அணுகிடும் பித்த வாயு
தன்தன மிச்சை யுள்ளாள் சான்ருேர்கள் பக்தி பூண்பள்.

18. பெண் சகோதரங்கள் மூன்று பேர் என்று சொல்லுகிருேம். இவள் பெரிய குடும்பஸ்தையாவாள். நல்ல ஆச்சாரங்களேயும் நெறியையும் உடையவள். இவளுக்கு நடு வயதில் பற்கள் விழுந்துவிடும். இவள் பிறருக்குச் சாப்பாட்டை ஆசையுடன் போடுவாள். இவளுக்குப் பித்த வாயுநோய் உண்டு. தன்னுடைய பணத்தில் மிக்க ஆசையுடையவள். நல்லவர்கள் அறிஞர்கள் இவர்களுடைய சினேகத்தை யுடையவள். இவர்களிடத்தில் தானும் அன்பாகவிருப்பாள்.

19. அன்னேமுன் ஜன்மம் சொல்வேன் ஆகாச தலத்துக் கீழ்ப்பால்
சின்னவூர் வைசியச் சேயாய் ஜனித்துமே வறுமை யின்றிப்
பொன்பணி அதிக முண்டாய்ப் புத்திரன் வரனு முண்டாய்த்
தன்பந்து மெச்ச வாழ்ந்து சான்ருேர்கள் பத்தி கொண்டு ;

19. ஜாதகரின் தாயாருடைய பூர்வ ஜென்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். ஆகாச ஸ்தலமாகிய சிதம்பரத்திற்குக் கிழக்குத் திக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் வைசியர் குலத்தில் பெண்ணுகப் பிறந்து கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமலும், தனமும் பொனுபரணங்களும் அதிகமாக வுடையவளாகியும், புத்திரர்களும் புருஷனும் உடையவளாகியும், தன்னுடைய பந்துக்கள் இவளே மதிக்கும்படியான தன்மையிலிருந்தும் வாழ்ந்து, நல்லவர்கள் அறிஞர்கள் இவர்களுடைய சினேகிதத்தை யுடையவளாயும், இவர்களிடத்தில் தானும் அன்புள்ளவளாயும் இருந்து கொண்டு ;

20. மங்கையும் வாழுந் நாளில் மரவுரி தரித்த ஞானி
துங்கமா மனத்தன் மாலே தோகைபால் அன்னம் கேட்க
மங்கையு மன்ன மீந்து வளவினில் சாகை தந்தாள்
அங்கவர் சயனம் கொள்ள அயலவன் இவர்பால் சென்று ;

20. இவள் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற காலத்தில் மரவுரி ஆடையாக அணிந்து கொண்டிருந்த ஒரு முனிவர் நல்ல பரிசுத்தமானதும் மேன்மையானதுமான மனத்தையுடையவராகி ஒருநாள் மாலையில் இவளிடஞ் சென்று சாப்பாட்டைக் கொடு என்று கேட்க, இவள் அவருக்குச் சாப்பாடு கொடுத்து வீட்டிறைப் பின் கீழே (வீட்டு இறவாணத்தின் கீழே) தங்கி இருக்க இடம் கொடுத்தாள். அதன் மேல் அவர் அவ்விடத்தில் படுத்துக் கொண்டு இருக்கும்போது அண்டை வீட்டுக்காரன் ஒருவன் இவரிடஞ் சென்று ;

21. தர்க்கங்கள் பேசும் போது சான்ருேர்க்குக் கோப முண்டாய்
துக்கமாம் வார்த்தை சொல்லத் தோகையும் அதிதி பேரில்
மிக்கவே கோபங் கொண்டாள் வித்தகர் வேறிடஞ் சென்று
நக்கன்தன் னடியார் பேரில் நாயகி கோபங் கொண்டாய் ;

21. நியாய வாதங்களைப் பேசிக் கொண்டிருக்கும்போது அந்த அறிஞராகிய ஞானிக்குக் கோபமுண்டாகி வருத்தமான வார்த்தைகளைச் சொல்லவே இவள் அந்த ஞானியின் மேல் அதிகக் கோபத்தை அடைந்தாள். அதன் மேல் அந்த அறிஞர் வேறே ஒருவிடத்திற்குப் போய்ச் சிவனுடைய அடியார் மேல், அம்மா! நீ கோபித்துக் கொண்டாய் ;

22. மறுஜன்மம் மகவாய்த் தோன்றி மத்தியில் தந்தம் தாழ்ந்து
உறைகுவா யென்று சொல்லி ஓதினர் அதிதி தானும்
விரைவினில் அந்தத் தோஷம் மேவிற்று இவளுக் கேதான்
திருமகள் வேறு காணுள் திங்கான காலன் பக்கல் ;

22. உன்னுடைய மறு ஜென்மத்தில் நீ பெண்ணுகப் பிறந்து உன்னுடைய மத்திய வயதில் பற்கள் விழுந்து வாழக்கடவாய் என்றும் அந்த ஞானி சொல்லிச் சாபித்தார். அந்தச் சாபமானது இவளை உடனே வந்து அணுகிற்று. இவளுக்கு வேறே எந்த விதமான தோஷங்களும் கிடையா. இவள் பிறகு இறந்து கெடுதியான எம பட்டணத்திற்கு எமனிடம் ;

23. சென்றுமே பிரமன் லக்கம் தேவியா யுதித்தா ளென்ருேம்
முன்ஜன்மம் அதிதி சொன்ன மொழியது யிச்சென் மத்தில்
தந்தங்கள் மத்தி யத்தில் தாழ்த்திடு மிவளுக் கேதான்
பிந்தியும் வேறு குற்றம் புகலொணு தென்று செப்பே.

23. போய்ப் பிறகு பிரம தேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டுப் பெண்ணுக இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருள். இவளுடைய முன் ஜன்மத்தில் அந்த ஞானியாகிய பரதேசி கொடுத்த சாபத்தின் பயனுக இந்த ஜன்மத்தில் இவளுடைய நடுவயதில் பற்கள் விழுந்துவிடும். மறுபடியும் பின்னுல் வேறே கெடுதிகள் நேரிடா என்று சொல்லுகிருேம்.

24. மறு ஜன்மம் வாயு தன்னில் மாதுவும் சத்திரிய சேயாய்
உறைவளாம் சுகமுண்டாகி உயர்வான குடும்பி யாவள்
திருமகன் தந்தை பூர்வம் செப்புவோ மயிலம் தெற்கில்
வரும்கங்கை குலமே தோன்றி மானில மதிசு முண்டாய் ;

24. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மறு ஜன்மத்தில் வாயு ஸ்தலமாகிய காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் சத்திரிய குலத்தில் இவள் பெண்ணுகப் பிறந்து சுகமாக வாழ்வாள். மேன்மையான குடும்பஸ்தையாவாள். ஜாதகருடைய தகப்பனரின் முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிருேம். இவர் மைலம் என்ற ஸ்தலத்திற்குத் தெற்கில் ஒரு வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து பெரிய நிலங்களை அதிகமாக வடைந்து.

25. கிராமாதி காரம் செய்து கெண்ணிய குடும்பி யாகி
அறுமுகன் பத்தி கொண்டு அறமதி லிச்சை வைத்து
மறையவன் தமக்குக் குற்றம் மைந்தனும் செய்தா னென்ருேம்
உறைகுவார் மறையோன் தாமும் உத்தம னென்றி ருந்தேன்.

25. கிராமத்தில் அதிகாரமுள்ள உத்தியோகஸ்தனின் தொழிலை அடைந்து கௌரவமான குடும்பஸ்தராக விருந்து ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளின் மேல் பக்தியும் அன்பும் உடையவராகி தருமத்தின்மேல் ஆசையையுடையவராயிருந்தும், ஒரு பிராமணருக்குக் கெடுதியை இவர் செய்துவிட்டார் என்று சொல்லுகிருேம். இந்தப்பிராமணர் சொல்லுகின்ருர். "நீ சற்குணமுள்ள ஒரு நல்ல பெரியவர் என்று எண்ணி இருந்தேன்.

26. வினையது எனக்குச் செய்தாய் விலகிடு மரசு தானும்
கனமுள பின்ஜன்மத்தில் கிராமாதி காரம் செய்து
பினையாகு மத்தி யத்தில் பிறந்தநாள் வறுமை யுண்டாம்
தனையனும் வாழ்வா யென்று சாற்றினர் மறையோர் தாமும்.

26. நீ எனக்கு ஒரு கெடுதியைச் செய்து விட்டாய். நீ அரசு செய்கின்ற இராஜாங்க வேலை உன்னை விட்டு நீங்கிவிடக் கடவது, மேலும் உன்னுடைய மறு ஜன்மத்தில் நீ அதிகாரம் உள்ள ஒரு கிராம உத்தியோகஸ்தருடைய வேலையைச் செய்து அது நடுவயதில் உன்னை விட்டு விலகிவிடக் கடவது, பிறந்த காலம் முதற்கொண்டு நீ கஷ்டத்துடனும் தரித்திரத்துடனும் வாழக் கடவாய்" என்று அந்தப் பிராமணர் சொல்லிச் சாபத்தைக் கொடுத்தார்.

27. மறையவன் மொழிபோல் தானும் மத்தியில் அரசு நீங்கி
உறைந்தனன் காலன் பக்கல் மலரயன் வரையப் பட்டுத்
தரையினில் ரெட்டி வமிசம் ஜனித்தவ னிவனே யென்ருேம்
வறுமைகள் ஆதி யில்தான் வந்திடு மிவனுக் கேதான்.

27. அந்தப் பிராமணருடைய சாபத்தைப் போலவே நடுவயதில் அரசு செய்யும்படியான கிராம உத்தியோகஸ்தருடைய வேலை விலகிப் பின் எமனிடம் போய்ப் பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன்

எழுதப்பட்டுப் பூமியில் இந்த ஜன்மத்தில் ரெட்டியாருடைய குலத்தில் இவா வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகின்ருேம். இவருக்கு இளம் பிராயத்தில் கஷ்டங்களும் தரித்திரமும் வந்து சம்பவிக்கும்.

28. அதிகாரம் சில நாள் செய்வன் அந்தணர் தம்மால் நீங்கும்
பதிபூமி காலி யென்றும் படைப்பனு முன்னே னுலே
அதிபன்தன் மரண மட்டும் வறுமை களடையா னுகும்
சதியான யிருபது னுலில் சுருமாதம் கண்ட மெய்தும்.

28. ஜாதகரின் தகப்பனுர் சில காலம் கிராமாதிகார வேலையைச் செய்வார். இந்த வேலை பிராமணருடைய சாபத்தாலே பிராமணராலேயே இவரை விட்டு விலகிவிடும். இவர் தன்னுடைய மூத்த சகோதரனுல் வீடு நிலங்கள் கால் நடைகள் ஆகிய இவைகளை எப்போதும் அடைவார். இவருடைய மரண கால பரியந்தம் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடைய 'மாட்டார். கெடுதியை விளைவிக்கக்கூடிய ஜாதகருடைய இருபத்து நான்காவது * வயதில் தை மாதத்தில் இவர் இறந்துவிடுவார்.

* குறிப்பு.—பிதுர் மாரக விஷயம்—ஜாதகருக்கு வயது ஷூ 23-0-0 முதல் ஷூ 24-0-0 முடியும் வரையிலும் புததசையில் சந்திரன் புக்தி அங்காரக புக்தி இவைகள் நடக்கின்றன. ஆனுல் தை மாதத்தில் அங்காரக புக்தி மாத்திரம் நடக்கின்றது. பிதுர் லக்கினம் மீனம். மீனத்திற்குப் பராசர ஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் புதன் சனி சூரியன் சுக்கிரன் இவர்கள் மாரகராகின்ருர்கள். புதன் மீனத்திற்கு ஏழுக்குடையவராதலால் மாரகாதி பத்திய ம் பெற்று மாரகஸ்தானமாகிய மூன்றில் மாரகாதி பதிகளாகிய சூரியன் சுக்கிரன் இவர்களுடன் கூடி மேலும் அஷ்டமாதிபதியாகிய சுக்கிரனுடனும் கூடி லக்கினுதிபதியாகிய குருவையும் பார்க்கின்ருர். ஆகையால் பராசரஹோரை ஜாதகசந்திரிகை 66–23 ஆவது சுலோகங்களின் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம்பாவம் 20ஆவது பாடல்பிரகாரமும் பிதுரை மாரகஞ் செய்யப் புதனுக்கு அதிகாரம் ஏற்படுகிறது. அங்காரகன் மாரகஸ்தானமாகிய இரண்டிற்குடையவராய் மாரகஸ்தானமாகிய ஏழாவதுபாவத்திலிருந்து கொண்டு லக்கினத்தைப் பார்க்கின்ருர். ஆகையால் அங்காரகனுக்குத் தன்னுடைய புக்தியில் பிதாவை மாரகஞ்செய்ய அமைப்பு இருக்கின்றது. (பராசரஹோரையிலும் ஜாதகசந்திரிகையிலும் அங்காரகன் கொல்லமாட்டார் என்று சொல்லி இருக்கும் விஷயத்தைப்பற்றி நாம் முன்னமே 82 ஆவது ஜாதகத்தில் 24 ஆவது பாடலின் கீழ் சொல்லியுள்ளதை இங்கும் வாசிக்கவும்.)

29. மறுஜன்மம் அரங்கம் தன்னில் மறைக்குல முதித்து இன்னேன்
திருமாலின் பூஜை செய்து தேவனுய்ச் செல்வா னுகும்
பராசரும் கேட்க னுற்றுர் பாலக னிச்சென் மத்தில்
உறைந்தபுண்ணியங்க ளென்ன உரைப்பீர்கள் முனியே நீர்தாம்.

29. ஜாதகருடைய தகப்பனுர் பின் ஜன்மத்தில் அரங்கம் என்ற ஸ்ரீரங்கத்தில் பிராமணர் குலத்தில் ஆணுகப் பிறந்து மகாவிஷ்ணுவைப் பூஜை செய்து தேவனுய்ப் போய்விடுவார், இப்படிச் சொல்லவே பராசர முனிவர் கேட்கின்ருர். இவர் இந்த ஜன்மத்தில் செய்தபுண்ணியங்கள் என்ன? அவைகளை, முனிவரே! நீரே சொல்லுவீர்.

30. திருப்பணி செய்வ தாலும் தேவதா பக்தி கொண்டும்
வருவோர்க்கு அன்ன மீந்தும் மனமது தளர்ச்சியாயும்
குறையோரை ஆதரித்து குவலய நல்லோனுயும்
வருவதால் மறு பிறப்பு மறைக் குல முதிப்பா னுகும்.

30. ஜாதகருடைய தப்பனுர் கோயில் பூஜைகளையும் வேலைகளையும் செய்ததாலும், தெய்வத்தின் மேல் அன்பும் ஆசையும் உடையவராகித் தன்னிடம் வருகின்றவர்களுக்குச் சாப்பாடு போட்டும் இளகிய மனமுடையவராகிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவரைக் காப்பாற்றியும், பூமியில் நல்லவராக விருந்து வந்ததாலும் மறு ஜன்மத்தில் இவர் பிராமணர் குலத்திற் போய்ப் பிறப்பவராவார்.

31. ஜாதகன் மணத்தின் காலம் சாற்று வோம் பதினே ழாண்டில்
காதலி வடகீழ் தன்னில் கலப்பளா மென்று சொல்வோம்
ஓதுவே னவள்குணத்தை உணச்சலாம் சிவந்த மேனி
தீதுகள் ஒருவர்க் கெண்ணுள் தேவதா பத்தி பூண்பள்.

31. ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்ருேம். இவருக்குப் பதினேழாவது * வயதில் மனைவி வடகிழக்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள் என்று சொல்லுகின்ருேம். இவளுடைய குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்ருேன். உடைந்த மெல்லிய தேகத்தையுடையவள். சிவப்பு நிறமுடைய தேகத்தையுடையவள், கெடுதிகள் முதலியவைகளை யாருக்கும்நினைக்கமாட்டாள். தெய்வத்தின்மேல் அன்பும் ஆசையும் உடையவள்.

* குறிப்பு.—விவாக கால விஷயம்—ஜாதகருக்கு வயது ஷூ 16–0–0 முதல் ஷூ 17–0–0 முடியும் வரையிலும் புத தசையில் புத புக்தி நடக்கின்றது. விவாக சம்பந்தமான அம்சங்கள் ஏழாவது பாவம், இரண்டாவது பாவமு மாகும். இந்தப் பாவாதி பதிகள் சுக்கிரன் ஆகிய இவைகளும் ஆகும். இங்குப் புதன் இரண்டிற்குடைய சூரியனுடனும் களத்திர காரகராகிய சுக்கிரனுடனும் போகஸ்தானமாகிய நான்காவது வீட்டிற்குடைய சுக்கிரனுடனும் கூடி போககாரக னுகிய ராகுவால் பார்க்கப் பட்டிருப்பதால் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்க புதனுக்கு அமைப்பு நேரிடுகின்றது.

32. வருவோரை ஆத ரிப்பள் மனமது கபடு கொஞ்சம்
திருகான புத்தி யில்லாள் தேவியும் யோக சாலி
பெரும்புத்தி அடக்க முள்ளாள் பால்பாக்கிய மதிக முண்டு
உறைந்திடும் நாபி சூடு உரைக்கிருேம் புத்திர பாவம்,

32. ஜாதகருடைய மனைவி தன்னிடத்திற்கு வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். தன்னுடைய மனத்தில் கொஞ்சம் கள்ளம் வஞ்சனை இவைகளை உடையவள். கெட்ட புத்தியில்லாதவள். இவள் யோகத்தை யுடையவள். பெரிய புத்தியை யுடையவள், பொறுமை யுள்ளவள் அமைதி யுள்ளவள். இவளுக்குப் பால் பாக்கியம் அதிகமாகவிருக்கும். வயிற்றில் பித்தச்சூட்டு நோயை உடையவள். இவளுடைய சந்ததி விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறோம்.

33. புத்திர ராண்பால் ரண்டு பெண்ணது அவ்வா ருகும்
சுத்தமாம் நான்கும் தீர்க்கம் சோர்வுறு மூன்று என்றேம்
சித்தசன பூர்வம் சொல்வேன் தில்லையில் வைசியச் சேயாய்ப்
பத்தினி மதலை யுண்டாய், பலவித வணிபம் செய்து.

33. ஜாதகருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் நான்கு குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக வீருப்பார்கள். மூன்று குழந்தைகள் இறந்து போய்விடும் என்று சொல்லுகிறோம். இவருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லு கிறோம். சிதம்பரக்ஷேத்திரத்தில் வைசியர் குலத்தில் ஆணுகப் பிறந்து மனைவி மக்களை உடையவராகிப் பலவிதமான வியாபாரங்களைச் செய்து கொண்டும் ;

34. மால்அரன் பாதம் போற்றி மறையவர் நேசம் கொண்டு
காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனல் வரையப்பட்டு
ஞாலம்மே லுதித்தா னென்றேம் நாயகன் யோகம் சொல்வேன்
பால்பாக்கியம் பூமி சேர்ப்பான் பணிதிகளதிகம் சேர்ப்ப.

34. மகாவிஷ்ணுவையும் சிவபெருமானையும் பூஜை செய்து கொண்டும் பிராமணர் சிநேகத்தை அடைந்து கொண்டும் வாழ்ந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த பூமியில் வந்து பிறந்தார் என்று சொல்லுகிறோம். இவருடைய யோகத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் பால் பாக்கியம் உடையவர். நிலங்களைச் சேகரித்து வைப்பார். ஆபரணங்களை அதிகமாகச் சேர்த்து வைப்பார்.

35. தந்தைக்குத் தாழ்வுறுதான் சல்லியம் கொள்ளா னுகும்
விந்தையாய் வார்த்தை சொல்வன் விப்பிரர் பத்தி கொள்வன்
முந்திய கீர்த்தி யேறப் னெய்துவான் சித்திரயில்லம்
வந்தவன் நாலைந் தாண்டி லமைப்பனும் மேலுங்கேளே.

35. ஜாதகர் தன்னுடைய தகப்பனுருடைய அந்தஸ்திற்குக் குறைவு படாத அந்தஸ்தையுடையவராவார். கடன் வாங்கமாட்டார். ஆச்சரியமாக வார்த்தைகளைச் சொல்லுவார். பிராமணர்களுடைய அன்பை அடைவார். மேன்மையான புகழை அடைவார். அழகான சித்திரங்களுள்ள வீட்டை அடைவார். இவர் தனக்கு இருபதாவது வயதில்* இந்த வீட்டைக் கட்டுவார், இன்னும் நாங்கள் அதிகமாகச் சொல்வதைக் கேட்பீராக.

* குறிப்பு.—வீடுகட்டும் விஷயம்—ஜாதகருக்கு வயது ஞு 19-0-0 முதல ஞு 20-0-0 முடியும் வரையிலும் புத தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. வீடு சம்பந்தமான அம்சங்கள் நான்காவது பாவமும், இந்தப் பாவாதிபதி சுக்கிரனும் ஆகும். இங்குப் புதன் நான்காவது பாவத திற்கு அதிபதியும் வீடுகாரகனுமாகிய சுக்கிரனுடன் கூடித் தனுதிபதியாகிய சூரியனுடனுங் கூடி லாபஸ்தானத்தில் இருக்கின்றார். ஆகையால் புத தசையில் வீட்டைக் கட்ட அமைப்பு இருக்கின்றது. மேலும் சுக்கிரனே நான்கிற்குடையவராகவும் வீட்டுக்காரனுகவும் இருப்பதால் தன் புக்தியில் வீட்டைக் கட்டிவைக்கச் சுக்கிரனுக்கு அமைப்பு இருக்கின்றது.

36. அன்னிய ரார்ச்ஜிதங்கள் அனுகிடும் விசேஷ பூமி
பொன்னது கொடுக்கல் வாங்கல் பிரபல குடும்பி யாவன்
உன்னத மூன்று ஊரில் உறைநிலம் பூமி தானும்
முன்துணை தன்னுடொத்து மேவுவனிந்தப் பாலன்.

36. ஜாதகருக்குப் பிறருடைய சொத்துக்களும் அநேக நிலங்களும் வந்து சேரும். இவர் பணத்தைக் கொடுப்பதும் திரும்பி வாங்குவதுமான லேவாதேவி உடையவர். மேன்மையானதும் பிரக்யாதி பெற்றதுமான குடும்பஸ்தராக விருப்பார். சிறந்த மூன்று கிராமங்களில் இவருக்கு நிலங்கள் உண்டாகும். இவர் தன்னுடைய மூத்த சகோதரனுடன் ஒத்து வாழ்வார்.

37. இருபது மூன்று ஆண்டில் ஆவணி மாதம் தன்னில்
வரும்அன்னை கண்டமெய்தும் அறுபது ஐந்து ஆண்டில்
மறுமமாய்த் தேளின் மாதம் வாதசூலை யினுல் மாள்வன்
அருமறை முடிவிலாடும் அம்பிகை புகன்றிட் டோமே.

37. ஜாதகருடைய தாயாருக்கு இவருடைய இருபத்து மூன்ருவது வயதில் * ஆவணி மாதத்தில் மரணம் நேரிடும். ஜாதகர் தனக்கு அறுபத்தைந்தாவது வயதில் கார்த்திகை மாதத்தில் † வாதசூலை நோயினுல் மரணம் அடைவார். அறுமையான வேதங்களின் முடிவில் விளங்குகின்ற பார்வதியம்மையே ! நாங்கள் இவ்விதமாகச் சொல்லிவிட்டோம்.

* குறிப்பு.—(1) தாயார் மரண விஷயம்—ஜாதகருக்கு வயது ஞு 22-0-0 முதல் ஞு 23-0-0 முடியும் வரையிலும் புத தசையில் சந்திர புக்தி நடக்கின்றது. மாதுரு லக்கினம் துலாம். துலாத்திற்குச் சூரியனும் குருவும் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் மாரகாதிபதிகளாகின்ருர்கள். புதன் துலாத்திற்குப் பன்னிரண்டிற்குடையவராய் லக்கினுஷ்டமாதிபதியாகிய சுக்கிரனுடன் கூடியும் மாரகாதிபதியாகிய சூரியனுடன் கூடியும் மாரகஸ்தானமாகிய எட்டில் இருந்து கொண்டு மாதுருகாரகனுகிய சந்திரனையும் பார்க்கின்ருர். ஆகையால் ஜாதகசந்திரிகை 23 ஆவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20 ஆவது பாடல் பிரகாரமும் புதன் தன்னுடைய தசையில் தாயாருக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்ருர். சந்திரன் துலாத்திற்கு இரண்டாவது வீடு மாரகஸ்தானத்தில் மாரகாதிபதியாகிய குருவுடன் கூடி நீசத்தி

லிருந்து கொண்டு தானே மாதுருகாரகனுகவும் இருப்பதால் ஜாதகசந்திரிகை 23 ஆவது சுலோகம் பிரகாரமும் 82 ஆவது ஜாதகம் 24 ஆவது பாடலின்மேல் வியாக்கியானத்தில் ஒரு காரகாதிபதி தன்னுடைய காரக நபருக்குத் தன்னுடைய தசாபுக்தி காலங்களில் மாரகஞ் செய்து விடுவாரென்று நாடிகளில் சொல்லி இருக்கின்றது என்று கண்ட முறைப்படியும் சந்திரன் தன்னுடைய புக்தியில் தாயாருக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகின்றார்.

† (2) ஜாதகர் மரண விஷயம்.—கடக லக்கின ஜாதகத்திற்குச் சுக்கிரன் சனி புதன் இவர்கள் மாரகரர்கள் என்று பராசரஹோரையிலும் ஜாதகசந்திரிகையிலும் சொல்லி இருக்கின்றது. பராசரஹோரை ஜாதக சந்திரிகை இவைகளின் சில பதிப்புக்களிலிருந்து சூரியன்கூட மாரகாதிபதி யாகின்றார் என்று தெரிய வருகின்றது. இந்த ஜாதகருக்கு வயது 65 இல் கார்த்திகை மாதம் வரையிலும் வயது 64-7-0 ஆகிறது. அப்போது சூரிய தசையில் சுக்கிரபுக்தி நடக்கின்றது. சூரியன் மாரகஸ்தானமாகிய இரண்டிற் குடையவராகிப் பதினோராவது மாரகஸ்தானத்தில் மாரகாதிபதிகளாகிய சுக்கிரன் புதன் இவர்களுடன் கூடி லக்கினுதிபதியாகிய சந்திரனையும் பார்க்கின்றார். ஆகையால் சூரியன் ஜாதகசந்திரிகை 23 ஆவது சுலோகப் பிரகாரம் ஜாதகருக்கு மாரகத்தைச் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். சுக்கிரன் ஏற்கனவே கடக லக்கினத்திற்குப் பெரிய மாரகாதிபதி யாகின்றார். இவர் லக்கினுதிபதியையும் பார்க்கின்றார். ஆகையால் சுக்கிரனுக்குத் தன் புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உண்டு.

38. பின்ஜன்மம் காஞ்சி தன்னில் பிறப்பனும் கங்கை சேயாய்
உன்னதச் செட்டுச் செய்து உயர்வான குடும்பி யாகி
அன்னவன் வாழ்வா னுகும் அறைந்தது தப்பா தாகும்
கன்னென மொழியை யொக்கும் காதலி கேட்டிடா யே.

38. ஜாதகர் தன்னுடைய மறு ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் வேளாளர் குலத்தில் ஆணுகப் பிறப்பார். மேன்மையான வியாபாரஞ் செய்து சிறந்த குடும்பஸ்தராக விருந்து வாழ்வார். நாங்கள் சொல்லிய பலன்கள் தவறிடாமல் நடக்கும். சர்க்கரையைப் போல இனிமையான வார்த்தைகளையுடைய பார்வதியம்மையே ! கேட்பீராக.

39. ஜாதகன் ஜனிக்கும் காலே தசை சனியிலி ருப்பு
ஓதுவேன் பதினு லாண்டும் உயர்திங்க ளீரைந்த தாகும்
தீதிதுகள் தந்தை வர்க்கம் சேத்திரம் பிரித லாகும்
மேதினில் முன்துணைக்குமே விடும் சாபந் தாமே.

39. ஜாதகர் பிறக்கும்போது சனி மகாதசையில் இருப்பு பதினன்கு வருஷமும் பத்து மாதமும் ஆகும் என்று சொல்லுகிறும். இந்தக் காலத்தில் தகப்பனுருடைய பந்துக்களுக்குக் கெடுதிகள் நேரிடும். இடத்தை விட்டுப் பிரிந்து போகவும் நேரிடும். மூத்த சகோதரனுக்குச் சாபத்தால் கெடுதிகள் ஏற்படும்.

40. காலிகளதிகம் விருத்தி கனத்திடும் பூமி தானும்
ஞாலம்மேல் தலங்கள் செல்லல் நற்றிரு பணியும் செய்தல்
மேலாகும் கிராமச் செட்டுப் பூமிபால் விரோதம் நேரும்
ஏலவே பின்பா கத்திலியம்புவோம் தாயே யாங்கள்.

40. கால் நடைகள் அதிகமாக விருத்தியாகும். நிலங்களும் அதிகப்படும். அதிகப் பலனையும் கொடுக்கும். பூமியில் நல்ல ஸ்தலங்களுக்குப் போதல் நல்ல கோயில் வேலைகளைச் செய்தல் ஆகிய இவைகள் உண்டு. மேன்மையாக கிராம வியாபாரம் நடந்து வரும். நிலம் விஷயமாக விரோதம் உண்டாகும். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே ! மற்ற விஷயங்களை அடுத்தப் பாகத்தில் நாங்கள் சொல்லுகிறோம்.

41. அன்பது ஆறு ஆண்டில் அவன்முன்னேன் கண்ட மெய்தும்
பின்புதன் குடும்பம் வேறும் பேசுவோ அறுபா னுண்டில்
பொன்பூமி தன்னுல் நேரும் பின்பாகம் விவரம் சொல்வோம்
இந்திர நிறைஞ்சு மாதே யியம்பின மொழிகுன்றுது.

41. ஜாதகருக்கு ஐம்பத்தாருவது வயதில்* இவருடைய மூத்த சகோதரா இறந்து விடுவார். அதன் பிறகு தன்னுடைய குடும்பம் அறுபதாவது வயதில் பிரிந்து போய் விடும். இவ்விதமாகத் தனம் பூமி இவைகள் மூலமாக மனஸ்தாபம் நேரிடும். மற்ற விஷயங்களைப் பின் பாகத்தில் சொல்லுகிறோம். தேவேந்திரன் வணங்கிப் பூஜை செய்கின்ற பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

* குறிப்பு.—தமயன் மாரகம்.—ஜாதகருக்கு வயது 55 முதல் 56 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் புதபுக்தி நடக்கின்றது. மூத்த சகோதர ஸ்தானம் பதினோராவது வீடாகிய ரிஷபமாகும். ரிஷபத்திற்குச் சுக்கிரன சந்திரன் குரு புதன் அங்காரகன் இவர்கள் மாரகராகின்றார்கள். சுக்கிரன் மூத்தச் சகோதர பாவாதிபதியாகின்றார். மேலும் இவரே பராசர ஹோரை ஜாதக சந்திரிகைகளின் பிரகாரமும் மாரகராகின்றார். ஆகையால் சுக்கிரன் தன் தசையில் தமயனுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகின்றார். புதனும் மாரகாதிபதி யாகின்றார். லக்கினுதிபதியாகிய சுக்கிரனுடன் கூடி அஷ்டமாதிபதியாகிய குருவையும் பார்க்கின்றார். ஆகையால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20 ஆவது பாடல் பிரகாரமும் மாரகாதிபதி யாகின்றார். ஆகையால் புதனுக்குத் தன்னுடைய புக்தியில் தமயனுரை மாரகஞ்செய்ய அமைப்பு இருக்கின்றது.

ஜாதகம் 87

கேது		அங்காரகன்	
	இராசி		லக்கினம் சூரியன் புதன்
குரு	சக்கரம்		
		சனி	சந்திரன் சுக்கிரன் ராகு

உத்தரம் 4-ஆம் பாதம்
சூரியதசை இருப்பு 0—2—6

1. மதி[1]புகர்[2] ராகு கன்னி மால்[3] ரவி[4] கடக மாக
நிதிகுரு மான[5] தாக நீலனு[6] கோல்[7]தாகச்
சதியிலாச் சேயும்[8] நந்தி[9] செம்பாம்பு[10] மீனமாக
இதுவிதக் கோளும் நின்று லக்கினம் வளைய[11] லாக.

1. சந்திரனும் சுக்கிரனும் இராகுவும் கன்னியிலும், புதனும் சூரியனும் கடகத்திலும், செல்வத்தைத் தருகின்ற குரு மகரத்திலும், சனி துலாத்திலும், கெடுதியாக வில்லாத அங்காரகன் ரிஷபத்திலும், கேது மீனத்திலும் இருந்து இவ்விதமாகக் கிரகங்கள் இருந்து ஜன்ம லக்கினம் கடகமாக விருந்தால் ;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின் வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடையதாகும்:—மேஷத்தில் ராகுவும், கடகத்தில் அங்காரகனும், துலாத்தில் கேதுவும், தனுசில் புதனும், மகரத்தில் குருவும் சனியும், மீனத்தில் சூரியனும் சந்திரனும், சுக்கிரனும் ஆகும்.

2. சொல்லுவீர் பலனை யென்று சுந்தரி கேட்கும் போது
வல்லவர் பராசர் சொல்வா ராணது ஜனன மாகும்
சொல்லுவேன் ஜனிக்கு மில்லம் சுதன்தந்தை தாய்வீடல்ல
நல்லதோர் நகர மாகும் நமனுத்திர வாடையாமே.

[1] சந்திரன் [2] சுக்கிரன் [3] புதன் [4] சூரியன்
[5] மகரம் [6] சனி [7] துலாம் [8] அங்காரகன்
[9] ரிஷபம் [10] கேது [11] கடகம்

2. பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும்போது அறிஞரும் கெட்டிக்காரருமான பராசர முனிவர் சொல்லுகிறார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றேன். பிறந்த வீடு ஜாதகருடைய தாய் தந்தை இவர்களுடைய வீடு அல்ல. பிறந்த ஊர் ஒரு நல்ல பட்டணமாக விருக்கும், பிறந்த வீடுள்ள வீதி வடக்குத் தெற்குத் தெருவாகும்.

வேறு

3. உத்தரம் நதியும் கிரியுமே உண்டு
ஓங்கிடும் மேற்கில் நந்தி
சத்தியும் கீழ்ப்பால் பலவிதகோஷ்டம்
தவசிகள் அக்கினி வாசம்
இத்தகை உரைத்தோம் செனித்திடு மென்றேும்
இவன் தந்தையின் யோகத்தை
வித்தகன் களத்திர புத்திர யோகம்
விளம்புவோ முன்பின் சென்மங்கள்

3. ஒரு நதியும் மலையும் வடக்குத் திக்கில் இருக்கும் நந்தி தேவருடைய கோவில் மேற்குத்திக்கிலும், பார்வதியம்மன் கோயில் கிழக்குத் திக்கிலும், இன்னும் பலவிதமான கோயில்களும் தவஞ் செய்கிறவர்களும், பண்டாரர்களும் தென் கிழக்குத் திக்கிலும் உண்டு. பிறந்த விடம் இப்படிப்பட்ட அடையாளங்களை உடையதாகும் என்று சொல்லுகிறேம். ஜாதகரின் தகப்பனருடைய யோகத்தையும் ஜாதகருடைய மனைவி சந்ததி இவர்களுடைய யோகங்களையும், முன்பின் ஜன்மங்களையும் சொல்லுகிறேம்.

வேறு

4. தந்தை குணம் கூறுகிறேமூகை சாலி
செகராசர் பேட்டியுளன் கல்வி மானும்
வந்தவர்க் கன்னமீவன் மாமி ரண்டு
மர்மத்தை வெளிக்காட் டாதான் துணைகா ணுரும்
நொந்தவரை ஆதரிப்பன் தலங்கள் செல்வன்
நேமியின்மேல் வாச முள்ளான் செலவும் செய்வன்
சந்ததம ரசரால் ஜீவிப்பானும் தன்பந்து புகழ்ந்திடவே
சரச வார்த்தை.

4. ஜாதகரின் தகப்பனருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேம். இவர் நுட்பமான அறிவையுடையவர். பெரிய அரசர்களுடைய தரிசனத்தையுடையவர், வாசித்தறிந்தவராவார், தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். இவருக்கு இரண்டு மாமியார்கள் உண்டு. தன்னுடைய மனத்திலுள்ள ரகசியத்தைப் பிறருக்குத் தெரியும்படியாக வெளியே காண்பித்துக் கொள்ளமாட்டார். இவருக்குச் சகோதரர்கள் கிடையா. வறுமையால் கெட்டுப் போய்க் கஷ்டத்தை அனுபவிப்பவர்களைக் காப்பாற்றுவார். தெய்வ ஸ்தலங்களுக்குப் போவார். பூமியில் வசிக்கும்படி வீட்டைக்கட்டுவார். செலவுகளைச் செய்வார். எப்போதும் இராஜாங்கத்தாரால் ஜீவனஞ் செய்வார். தன்னுடைய பந்துக்கள் இவரைப் போற்றும்படியாக இனிமையான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார்.

5. வார்த்தை தப்பான் தையரித்தன் சுகபுசிப்பன்
மருவிடுமே பித்தவாயு தெய்வ பத்தி
நீத்தோர்க ளுறவு கொள்ளான் தந்தைஆஸ்தி
நீக்கிடுவன் பலருக்கும் சகாயம்செய்வன்
நாற்றிசையும் புகழேற்ப னிக்குணத்தானுக்கு
நாயகிமா ரிருவரிலே இளையாளுக்குப்
பூர்த்தியா யுதிப்பானும் துணைகாணுைகும்
புகலுவோ மிவன்குணத்தைப் பொருந்துநேயன்

5. ஜாதகருடைய தகப்பனுர் தான் சொல்லிய வார்த்தையைத் தவறிடாமல் காப்பாற்றுவான். தைரியமுள்ளவர், சுகமான போஜனத்தைச் சாப்பிடக் கூடியவர். இவருக்குப் பித்தவாயு உண்டு. இவர் தெய்வங்களின் மேல் பக்தியும் அன்பும் உடையவர். உலகப்பற்றை ஒழித்து விட்டவர்களான பரதேசிகளுடைய சினேகத்தை அடைய் விரும்பமாட்டார். தகப்பனுருடைய சொத்தை விட்டு விடுவார். அனேகருக்கு உபகாரஞ் செய்வார். நான்கு திக்குகளிலு பெருமையையும் கீர்த்தியையும் அடைவார். இந்த குணங்களேயுடைய தகப்பனுருக்கு உள்ள இரண்டு மனைவிமார்களில் இளைய மனைவிக்கு இந்த ஜாதகர் தன் தகப்பனுருக்குப் பூர்ண திருப்த்தியை விளைவிக்கும் படியாய்ப் பிறப்பவராவார். இவருக்குச் சகோதரர்கள் கிடையா. இவருடைய குணுகுணங்களைப்பற்றிச் சொல்லுவோம். இவர் பொருத்தமானச் சினேகிதராக விருப்பார்.

6. கல்வியது இரண்டுகற்பன் இருநி றத்தன்
கத்தரிரே கையுமுடையான் நன்மனத்தான்
சொல்லிரண்டு முடையவனும் சுகமாய்வார்த்தை
சூஷ்மபுத்தி தந்தையில்லம் தொலேப்பானுகும்
அல்லல்கள் மத்தியத்தில் அடைவானுகும்
அணுகிடுமே காரகங்கள் அலைச்சலெய்தும்
மல்லுக்குச் செல்லானும் மாமனில்லம்
வாழ்குவான் மத்தியத்தில் மாதேகேளாய்.

6. ஜாதகர் இரண்டுவித வித்தையைப் படிப்பார், இரண்டு நிறங்களும் கலந்துள்ள நிறமாகிய மாநிறமுள்ள தேகத்தையுடையவர். தன்னுடைய உள்ளங்கையில் கத்தரிரேகை என்று சொல்லப்பட்ட ஒருவித மான ரேகையையுடையவர். மேன்மையான மனத்தையுடையவர். இரண்டு விதமானவார்த்தைகளை உடையவர், அஃதாவது உண்மையையும் பொய்யையும் கலந்து பேசுவார். இன்பமான வார்த்தையை உபயோகப்படுத்துவார். நுட்பமான அறிவுள்ளவர். தன்னுடைய தகப்பனுருடைய வீட்டைப் போக்கடித்துக் கொள்ளுவார். இவருக்கு மத்தியவயதில் கஷ்டங்கள் உண்டு. இவருக்குக்காரக நோய்கள் † வந்து சம்பவிக்கும். தொந்தரவுகளும் வந்து நேரிடும். சண்டைபோடப் போகமாட்டார். இவர் தன்னுடைய மாமனுடைய வீட்டில் மத்தியவயதுகாலத்தில் வாழ்வார், பார்வதியம்மையே ! கேட்பீராக.

† குறிப்பு.—காரகநோய் விஷயம்—லக்கினுதிபதியும் ராகு கேதுக்களும் ஆறுவது வீட்டிற்குடையவரும் ஒன்ருககூடி ஒரு வீட்டிலிருந்தால் ஜாதகர் தேகசுகமில்லாமல் வியாதியஸ்தராக விருப்பார் என்று துய்ய கேரளம் இலக்கின பாவம் 16-ஆவது பாடலில் சொல்லி இருக்கின்றது. இந்த ஜாதகத்தில் லக்கினுதிபதியாகிய சந்திரனும் ராகுவும் கூடி மூன்ருவது பாவத்தில் இருப்பதுடன் ஆறுவது பாவாதிபதியாகிய குருவால் பார்க்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

வேறு

7. உரோமங்க ளதிக மில்லான் றுவனுப தேசம் கொள்ளான்
காமனை விருபங் கொள்ளான் காமதில் கத்தரி ரேகை
தாமதகுணத் தானுகும் தந்தையில் லடையா னுகும்
பூமியும் விரயம் செய்வன் புண்ணிய வதியே கேளாய்.

7. ஜாதகர் தன்னுடைய தேகத்தில் மயிர் அதிகமாகவில்லாதவர், உபதேசம் பெற்றுக் கொள்ளமாட்டார். ஸ்திரீகளின் மேல் காம ஆசையை உடையவரல்லர். நிலங்களை விற்று ஒழித்து விடுவார் †. பார்வதியம்மையே ! கேட்பீராக

† குறிப்பு.—நிலத்தை ஒழிக்கும் விஷயம்—பூமிஸ்தானம் நான்காவது வீடாகிய துலாம். இதற்குடைய சுக்கிரன் லக்கினத்திற்கு மூன்றில் நீசமாகி ராகுவுடன் கூடி துலாத்திற்குப் பன்னிரண்டில் மறைந்து இருக்கின்றுர், துலாத்தில் ஜென்ம லக்கினத்திற்கு அஷ்டமாதிபதியாகிய சனி இருக்கிருர். பூமிகாரகராகிய அங்காரகன் துலாத்திற்கு எட்டில் மறைந்து இருக்கிருர். ஆகையால் நிலங்கள் இவரைவிட்டுப் போய்விடுவதற்கு அமைப்பு இருக்கின்றது.

8. துணைவர்கள் காணு னுகும் சுந்தரி கேட்க லுற்றுள்
அணையவே முதல்தா யொன்று அறைந்நீரே அவட்குப் புத்திரர்
சினமிலாச் சொல்லு மென்ன தேவியும் சுதர்கள் காணுள்
கனமுடன் வயது தீர்க்கம் காளேயோ டொத்து வாழ்வள்.

8. ஜாதகருக்குச் சகோதரர்கள் கிடையா. இவ்விதமாகச் சொல்லவே பார்வதியம்மையார் கேட்கின்றுர். ஜாதகருக்குப் பெரிய தாயார் ஒருத்தி உண்டு என்று சொன்னீரே. அவளுடைய சந்ததியைப் பற்றிக் கோபிக்காமல் சொல்லுவீர் என்று கேட்க ! அவளுக்குக் குழந்தைகள் கிடையா. † அவள் நீண்ட ஆயுளை உடையவள். அவள் ஜாதகருடன் கூட ஒற்றுமையாக விருந்து வாழ்வாள்.

† குறிப்பு.—மாற்றுந்தாய் ஸ்தானம் ஆறுவது வீடாகும். இங்கு ஆறுவது வீடாகிய தனுசு மாற்றுந்தாயாரின் லக்கினமாகும். இதற்குப் புத்திரஸ்தானம் மேஷமாகும். இந்த மேஷத்திற்குடைய அங்காரகன் தனுர் லக்கினத்திற்கு ஆறில் மறைந்துபோய்க் கேதுவால் பார்க்கப்பட்டிருப்பது புத்திர தோஷமாகும். புத்திரஸ்தானமாகிய மேஷத்தைச் சனி பார்ப்பது புத்திர தோஷமாகும். புத்திரகாரகனுகிய குரு நீசமாக விருப்பதும் இந்தக் குருவைக்

கேது பார்ப்பதும் புத்திரதோஷமாகும். மேலும் தனுசிற்கு ஒன்பதிற்குடைய சூரியன் தனுசிற்கு எட்டில் இருப்பதும் புதனுடன்கூடி இருப்பதும் புத்திரதோஷமாகும். ஆகையால் மாற்ருந்தாயாருக்குப் புத்திர தோஷம் மிகவும் அதிகமாக விருக்கின்றது. குரு நீசமாக விருந்து அங்காரகனைப் பார்ப்பது புத்திரபாவத்திற்கு அனுகூலமானதல்ல என்பதைக் கவனிக்கவும்.

9. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மீரோன் [பாண்டுள்
கன்னிகை கிழக்குத் திக்கில் கழறுவோ மவள்குணத்தைப்
பின்னமில் லாத தேகி பொய்யது வழுத்தா நெஞ்சம்
தன்சொல்லுமடக்க முள்ளாள் தன்வரன் மனம்போல் வாழ்வள்.

9. ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவருக்குப் பதினெட்டுவயதிற்குள் † மனைவி கிழக்குத்திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் அவயவபங்கம் ஒன்றும் இல்லாத தேகத்தை யுடையவள். பொய்யைச் சொல்லாத மனத்தையுடையவள். அடக்கமாகவும் பொறுமையுடனும் பேசக் கூடியவள். தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தபடி ஒற்றுமையாய் இருந்து வாழ்வாள்.

† குறிப்பு.—விவாக காலவிஷயம்—ஜாதகருக்கு வயது ௵ 17-0-0 முதல் ௵ 18-0-0 முடியும் வரையிலும் அங்காரக தசையில் சந்திரபுக்தி ராகு தசையில் ராகு புக்தி இவை நடக்கின்றன. லக்கினத்திற்குக் கேந்திரத்தில் புதனும் குருவும் இருப்பதாலும், இரண்டிற்குடையவரான சூரியனை ஏழுக்குடையவரான சனி பார்ப்பதாலும் ஜாதகசிந்தாமணி ஏழாவதும் பாவம் 973-ஆவது 974-ஆவது பாடல்களின் பிரகாரம் ஜாதகருக்கு வாலிபத்தில் விவாகம் நடக்கும் அமைப்பு இருக்கின்றது. விவாகசம்மந்தமான அம்சங்கள் ஏழாம்வீடும் இரண்டாம்வீடும், இந்தவீடுகளுக்கு அதிபரும் சுக்கிரனும் ஆகும். அங்காரகன் ஐந்து பத்து ஆகிய இவ் வீடுகளுக்கு அதிபதியாகி இரண்டாவது வீட்டைப் பார்க்கின்ருர். பத்தாவது பாவாதிபதியினுடைய தசையில் கூட விவாகம் நடக்கும் என்று ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் 29-ஆவது சுலோகத்தில் சொல்லி இருக்கின்றது. ஆகையால் அங்காரகன் தன்தசையில் ஜாதருக்கு விவாகஞ் செய்யது வைக்க அமைப்பு உடையவராக விருக்கின்ருர். சுக்கிரன் களத்திரகாரகராகிப்போகஸ்தானமாகிய நான்காவது வீடாகிய துலாத்திற்கு அதிபதியாகிப் போக காரகனுகிய ராகுவுடன் கூடி இருக்கின்ருர். ஏழுக்குடைய சனியும் சுக்கிரனுடைய வீட்டில் இருக்கின்ருர். அஃதாவது சுக்கிரனுக்குக் களத்திரஸ்தானுதிபதியாகி சனியுடன் இவ்விதமான ஒருவித சம்மந்தம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தக்காரணங்களாலும் சனிக்கும் சுக்கிரனுக்கும் உண்டான சம்மந்தத்தாலும் மேற்கண்ட 29-ஆவது சுலோகப் பிராகாரமும் சுக்கிரனுக்குத் தன்னுடைய புக்தியில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்க அமைப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட

சுக்கிரனுடன் கூடிய சந்திரன் லக்கினுதிபதியாகிப் போககாரகனை ராகுவுடன்கூடி இருப்பதாலும் இரண்டிற்குடைய சூரியனுடைய காலாகிய உத்தரத்தில் இருப்பதாலும் ராகுவைவிடச் சந்திரனுக்குத் தன் புக்தியில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்க அதிக அமைப்பு இருக்கிறது.

10. சுதராண்பால் காணு ருகும் தோகையு மொன்று தீர்க்கம்
அதமாகும் மனைவி தானும் அத்திரி மறித்துச் சொல்வார்
அதிபதி மரண மெய்தும் வகைதனைச் சொல்லு மென்ன
நிதிகுரு யேழில் நீசம் நீலனும்[1] சரத்தில்[2] நிற்க ;

10. ஜாதகருடைய முதல் மனைவிக்கு ஆண் குழந்தை பிறக்காது, பிறந்தாலும் இருக்காது. ஒரே ஒரு பெண் குழந்தைதான் நீண்ட ஆயுளை உடையதாகும். மனைவியும் இறந்துவிடுவாள். அத்திரிமகரிஷி தடுத்துக் கேட்கின்ருர். முதல் மனைவி இறந்து போவதற்குக் காரணத்தைச் சொல்வீர் என்று கேட்க, செல்வத்திற்குக் காரகராகிய குருபகவான் ஏழாவது வீட்டில் நீசமாக விருப்பதாலும், சனி சரராசியில் இருப்பதாலும் ;

11. முதல்மனை மரண மெய்தும் மேவிடு மிரண்டாம் மாது
சதியிலா முப்பான் ரண்டில் தென்திசை நேரு மென்றோம்
அதிபதி பகைமுன் னுலே வந்திடும் பின்பால் நேசம்
சதியிலா மனத்தா ளாகும் சமயோகம் நன் னடக்கை.

11. முதல் மனைவி இறந்து விடுவாள்†. இரண்டாவது மனைவி வந்து நேரிடுவாள். இவள் ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது வயதில் தெற்குத் திக்கிலிருந்து வந்து நேரிடுவாள். இந்த இரண்டாவது மனைவி முதலில் விரோதியாகவிருந்து பின்னுல் சிநேகமாக விருப்பாள். இவள் கெடுதியில்லாத மன முடையவளாவாள். சமமான யோகத்தையுடையவள். நல்ல நடவடிக்கையும் உடையவள்.

† குறிப்பு.—முதல் மனைவி மரண விஷயம் :—முதல் மனைவி ஸ்தானம் ஏழாவது வீடாகிய மகரம் ஆகும். இரண்டாவது மனைவி ஸ்தானம் மீனம் ஆகும். ஏழாவது வீட்டிற்குடைய சனி துலாத்தில் உச்சமாகிப் போகஸ்தானமாகிய நான்கில் இருக்கின்ருர். இவர் சரராசியில் இருக்கின்ருர். ஆகையால் ஜாதகாலங்காரம் 648-ஆவது பாடல் பிரகாரம் ஜாதகருக்கு இரண்டு மனைவி நேரும் அமைப்பு உண்டு. ஒன்பதிற்குடைய குரு நீசமாகி ஆறுக்குடையவராகி ஏழாவது வீட்டில் இருப்பதாலும், இரண்டாவது மனைவி ஸ்தானத்திற்கு அதிபதியாகி ஏழாவது வீட்டிலிருப்பதாலும், லக்கினுதிபதியாகியச் சந்திரனைக் குரு பார்ப்பதாலும், முதல் மனைவி சம்மந்தமான இரண்டிற்குடைய சூரியன் விரயாதிபதியாகிய புதனுடன் கூடியிருப்பதாலும் முதல் தாரத்திற்குக் கெடுதியை விளைவித்து இரண்டாந்தாரத்தைக் கொடுக்கும் அமைப்புடையவராக விருக்கின்ருர். ஏழாவது வீட்டைக் கேதுவும் சூரியனும் பார்ப்பது முதல் தாரத்திற்குத் தோஷமாகும். புதன் ஏழைப் பார்ப்பதாலும் சுக்கிரன் நீசமானதாலும் ஜாதகருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட ஸ்திரீ ஸ்னேகம் உண்டு. இக்காரணங்களால் ஜாதகருக்கு இரண்டு மனைவி

[1] சனி. [2] சரராசியாகிய துலாம்.

உண்டு. முதல் மனைவி இறந்து விடுவாள். ஜாதகருக்கு வயது ஷ்ஷ 31-0-0 முதல் ஷ்ஷ 32-0-0 முடியும் வரையிலும் ராகு தசையில் சுக்கிர புக்தியும் சூரிய புக்தியும் நடக்கின்றன. முதல்தார லக்னமாகிய மகரத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சந்திரன் அங்காரகன் குரு இவர்கள் மாரகாதிபதிகள் ஆவார்கள். ராகு சுக்கிரனுடன் கூடி இருப்பதால் களத்திரத்திற்குக் கெடுதியைச் செய்யக் கூடியவராகின்றார், மேலும் மாரகாதிபதியாகிய சந்திரனுடன் கூடி இருப்பதால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகம் பிரகாரம் மனைவிக்கு மாரகஞ் செய்ய அமைப்புடையவராய் இருக்கின்றார். மகரத்திற்கு எட்டிற்குடைய சூரியனைப் பார்ப்பதால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல்படி (எட்டிற்குடைய வருடன் பார்வையான சம்மந்தத்தால்) மாரகஞ் செய்ய அமைப்புடைய வராகின்றார். இவ்விதகாரணங்களால் ராகு தன் தசையில் முதல் மனைவியை மாரகஞ்செய்ய அதிக அமைப்புடையவராகின்றார். சுக்கிரன் நீசனுனதாலும் களத்திரகாரகனுனதாலும் ஒன்பதைப் பார்ப்பதாலும் முதல் களத்திரத்தை மாரகஞ்செய்து விட்டு மறுகளத்திரத்தைக் கொடுக்கச் சூரியனை விட அதிக அதிகாரமுடையவராகிறார்.

12. அன்மைபோல் சாய லுள்ளாள் அறமதி விச்சை யுண்டு
முன்கோபம் பின்பு சாந்தம் முதல்வியும் கேட்க லுற்றான்
என்னகா ரணத்தி னுலே யிருமனை பகையு மெய்தும்
பன்னிய புகரும்[1] நீசம் பணி[2] மதி[3] கூடி நிற்க.

12. இரண்டாவது மனைவி அன்னத்தைப்போல ரூபமும் அழகும் உள்ளவள். தருமம் செய்வதில் ஆசையுள்ளவள். முன்கோபம் உள்ளவள். உடனே அந்தக் கோபம் சாந்தமடையுந் தன்மை யுடையவள். தலைமைவகித்தப் பார்வதியம்மையார் அதன்மேல் எந்தக்காரணத்தினுல் இரண்டாவது மனைவி விரோதமாக விருப்பாள் என்று கேட்க, சுக்கிரன் நீசனுக விருப்பதாலும் இவருடன் இராகுவும், சந்திரனும் கூடி இருப்பதாலும்.

13. பணி[2] தசை காலம் தன்னில் பத்தினி மரண மெய்தித்
துணிவாக இரண்டாம் மாது சேர்ந்திடும் வெறுப்பு முண்டாம்
தணிவுண்டு மாம னுலே சந்ததி கூறக் கேளாய்க்
கனமுள ஆண்பா லொன்று கன்னிகை அவ்வாறென்றேம்.

13. இராகு தசை காலத்தில் முதல் மனைவி மரணமாகி இரண்டாவது மனைவி வந்து அவள் புருஷனிடம் இஷ்டம் இல்லாமல் வெறுப்புடைய வளாகிப் பின்னுல் மாமனுல் கோபத்தைத் தொலைத்துச் சினேகம் செய்விக்கபட்டவளாவாள். இவளது புத்திரபாவத்தைச் சொல்லுகிறேன் கேட்பீராக. மேன்மையான ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றும் உண்டு என்று சொல்லுகிறேம்.

---

[1] சுக்கிரன். [2] இராகு. [3] சந்திரன்.

14. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிவளா மம்மன் தாமும்
கனமுடன் தந்தை ஆஸ்தி காணுது யென்று சொன்னீர்
பிணையாக மாம னில்லம் பேணுவா னென்று சொன்னீர்
வினையதைச் சொல்லு மென்ன வித்தகன் பூர்வம் தன்னில் ;

14. முனிவரானவர் இவ்விதமாகச் சொல்ல, பார்வதியம்மையார் கேட்கின்றார். ஜாதகருக்குத் தன்னுடைய தகப்பனுருடைய சொத்து கிடைக்காது என்று சொன்னீரே ! இவர் தன்னுடைய மாமனுடைய வீட்டிற்குப்போய் விடுவார் என்றும் சொன்னீரே ! இவைகளுக்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, இவர் தன்னுடைய முன்ஜன்மத்தில் ;

15. பலவிதத் துன்பம் செய்தான் பரவிற்று அந்தத் தோஷம்
தலைவன்செய் வினைக ளெவ்வாறு சாற்றுவீர் விவர மாகத்
தலமது தேயு தன்னில் ஜனித்தனன் வைசியச் சேயாய்
உலகினில் செட்டுச் செய்து உத்தமி மதலை உண்டாய்.

15. அனேகவிதமான கெடுதிகளைச் செய்து துன்பத்தை உண்டு பண்ணினர். அவைகளினுல் தோஷம் உண்டாயிற்று என்று முனிவர் சொல்ல, ஜாதகர் செய்த கெட்ட காரியங்களை விவரமாகச் சொல்லுவீர் என்று பார்வதி கேட்க, முனிவர் சொல்லுகிறார். தேயுஸ்தலமாகியத் திருவண்ணுமலை க்ஷேத்திரத்தில் ஜாதகர் வைசியர் குலத்தில் ஆணுகப் பிறந்து பூமியில் வியாபாரஞ் செய்து மனைவியும் மக்களும் உடையவராகி ;

16. சுகமுள குடும்பி யாகிச் சுந்தரன் வாழுந் நாளில்
பகையதை சொல்லக் கேளாய்ப் பஞ்சைகள் ஏழை யோனும்
தகைமையாய் அன்னம் கேட்கச் சாந்தமாம் வார்த்தை யின்றி
முகவெறு கொண்டு இன்னேன் முடிக்கினன் அதிதி தன்னை.

16. சௌக்கியமுள்ள ஒரு குடும்பஸ்தராகி இவர் வாழுகின்ற காலத்தில் நேர்ந்த விரோதமான சம்பவத்தைச் சொல்லுகின்றேன் கேட்பீராக. கருப்பை அடைந்த மக்களும் ஓர் ஏழையும் இவரைத் தகுந்த மரியாதையுடன் சாப்பாடுகொடு என்று கேட்க, இவர் சாந்தமான வார்த்தைகளைச் சொல்லாமல் முகக்கடுப்புடனும் கோபத்துடனும் அந்த ஏழை மக்களையும் பரதேசிகளையும் மிரட்டினுர் ;

17. பரமனும் மனம்க லங்கிப் பகருவான் சாபம் தானும்
குரம்பாட வந்தோ னென்னைக் கூற்றன் போல் சீறியேச
வருமஜன்மம் துணைகா ணுமல் மாண்டிடும் தந்தை ஆஸ்தி
குறைபடும் செல்வம் யாவும் குவலய மீதில் செல்வாய்.

17. பரதேசியானவர் தன்னுடைய மனம் நொந்து சாபத்தை கொடுக்கின்றார். வேகமாக வந்தவனுன என்மேல் ஓர் எமனைப்போலச் சீறித் திட்டிய பாபியாகிய உனக்கு, பின்ஜன்மத்தில் சகோதரர்கள்

இல்லாமலும் தகப்பனுடைய சொத்து இல்லாமலும் எல்லா சம்பத்துக்களுமே குறைவுபட்டும், பூமியில் இருந்து ;

18. அன்னமும் வறுமை யாகி அயலார்பால் அடைந்து வாழ்வாய்
மன்னிய தொழில் லாமல் மனமது வருத்த மாயும்
தன்னிலே வாழ்வா யென்று சாற்றியே சென்றா ரென்றோம்
இன்னமும் வேறு ஒன்று இயம்புவோம் தாயே கேளும்.

18. சாப்பாட்டிற்கும் கஷ்டமும் தரித்திரமும் ஏற்பட்டு, நீ பிறரிடம் போய் வாழக்கடவாய். ஜீவனம் ஒன்றும் இல்லாமலும் மனத்தில் கஷ்டமுடையவனாயும் இருந்து நீ வாழக்கடவாய் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் என்று சொல்லுகிறோம். இதுவுமல்லாமல் இன்னொரு வினை இருக்கின்றது. அதைச் சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

19. மறையவன் வெகுநா ளாக வைசிய னுடனே நேசம்
பொருளது கொடுக்கல் வாங்கல் புகுத்தினன் கணக்கில் மோசம்
மறையவன் திகில டைந்து வரைகிறான் சாபம் தானும்
பரம்பரை யில்லம் நீங்கிப் பாரினில் நிந்தை யாயும் ;

19. ஒரு பிராமணர் வெகுகாலமாக வைசியரான ஜாதகருடன் முன் ஜன்மத்தில் சினேகிதராகவிருந்து பணத்தைக் கொடுத்தும் மறுபடியும் திருப்பி வாங்கிக்கொண்டும் இருந்ததில் ஜாதகர் கணக்கில் மோசஞ் செய்ய, பிராமணர் மனத்தில் திகிலும் பயமும் ஏற்பட்டுச் சாபத்தைக் கொடுத்தார். பரம்பரையாக வந்தப் புராதனமான வீட்டை நீ விட்டுவிட்டுப் பூமியில் பலவித நிந்தைகளையுமடைந்து ;

20. எத்தொழில் கத்திரி யாயும் மிடுக்கமா மனம தாயும்
பத்தினி யிரண்டு மாயும் பாரினில் வாழ்வா யென்று
சத்தமா மறையோன் சொல்லிச் சேர்த்தனன் பொன்னைத் [தானும்
குத்தமாம் சாபம் தானும் குலவிற்று இவனுக் கேதான்.

20. எந்த வேலையை நீ செய்தாலும் அது கத்தரித்துப்போய் அதனால் நீ கஷ்டமுள்ள மனத்தை யுடையவனாயும், இரண்டு மனைவிகளை அடைந்தும் பூமியில் நீ வாழக்கடவாய் என்று அந்தப் பிராமணர் சொல்லிவிட்டுப் பணத்தைச் செலுத்திவிட்டுப் போய்விட்டார். அந்தக் கெட்ட சாபமானது ஜாதகரை வந்து அணுகிற்று.

21. இன்னமும் சிலபேர் சாப மெய்திற்று அந்தி யத்தில்
துன்னிய பொருளும் போகிச் சென்றனன் காலன் பக்கல்
முன்னவன் வரையப் பட்டு உதித்தனன் வடுகர் வமிசம்
மன்னிய அதிதி சாபம் மறையவர் சாபத் தாலே

21. இன்னும் சிலருடைய சாபமும் ஜாதகரை அணுகிற்று. இவர் முன்ஜன்மத்தில் கடைசிக்காலத்தில் தன்னுடைய சொத்துக்களை இழந்தும் செலவு செய்துவிட்டும் இறந்து எமனிடத்திற்குப்போய்ப் பிரம தேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டுத் தெலுங்கர் குலத்தில் இந்த ஜாதகர் வந்து பிறந்திருக்கின்றார். முன்ஜன்மத்திய பரதேசியின் சாபத்தாலும், பிராமணருடைய சாபத்தாலும் ;

22. இல்லமும் விட்டு ஏகு மெய்திடும் மனைவி ரண்டு
அல்லல்க ளதிக மெய்தும் அணுகிடு மேக ரோகம்
எல்லைகள் திரிவா ருகு மெத்தொழில் பலிதம் காணன்
வல்லியும் கேட்க லுற்றாள் மாரனும் மெந்தக் காலம்

22. ஜாதகர் வீட்டை விட்டுப் போய்விடுவார். இவருக்கு இரண்டு மனைவிகள் ஏற்படுவார்கள். இவருக்குக் கஷ்டங்கள் அதிகமாக உண்டாகும். இவருக்கு மேகரோகம் வந்து சம்பவிக்கும். இவர் ஊர் ஊராய்த் திரிவார். எந்த வேலையை இவர் செய்தாலும் அதில் லாபங் கிடைக்காது என்று சொல்லவே, பார்வதியம்மையார் கேட்கின்றார். ஜாதகர் எந்தக் காலத்தில் ;

23. வறுமைக ளடைவான் சொல்வாய் அறுமூன்று ஆண்டு மேலாய்க்
குறைவுண்டு ஆறு ருண்டும் குறித்தசொல் போலே வாழ்வன்
நெறியது தப்பா தாகும் நிகழ்த்துவோ மினிமே லாகப்
பிறையது போலே செல்வம் பொருந்திடும் பூமி சேர்ப்பன்.

23. கஷ்டங்களும் தரித்திரமும் அனுபவிப்பார் என்பதைச் சொல்லுவீராக. ஜாதகர் தனக்குப் பதினெட்டாவது வயது முதல் கஷ்டத்தை அனுபவிப்பார். இது முதற்கொண்டு முப்பத்தாறுவது வயது வரையினும் நாங்கள் இப்போது சொல்லியது போலவே கஷ்டங்களை அடைந்து வாழ்வார். நாங்கள் சொல்லியது தவறிடாமல் நடக்கும். அதற்குமேல் நடக்கும் பலா பலன்களை நாங்கள் சொல்லுகிறோம். அதற்குமேல் வளர்பிறைச் சந்திரன் வளருவது போல இவருக்கு யோகம் விருத்தியாகும். செல்வம் இவருக்கு வந்து கிடைக்கும். இவர் நிலங்களைச் சேகரிப்பார்.

24. பலவித வணிபம் செய்வன் பகையோர்க ளுறவே யாகும்
நவமுள குடும்ப மெய்தும் நன்மாமன் தன்னால் யோகம்
அலைமனம் நிவிர்த்தி யாகும் அறைந்தனம் வடகீழ் தன்னில்
நிலைமையாய் ஒருவர் மூல நிருபனும் கணக்கை நாட்டி ;

24. ஜாதகர் அநேகவிதமான வியாபாரங்களைச் செய்வார். எதிரிகள் இவருக்குச் சினேகிதர்களாகி விடுவார்கள். நல்ல புதிய குடும்பம் ஏற்படும். தன்னுடைய நல்ல மாமனால் இவருக்கு யோகம் உண்டாகும். இவருடைய கஷ்டப்பட்டு அலைந்த மனமானது நிம்மதியை அடையும். இவர் வடகிழக்குத் திக்கில் ஒருவர் மூலமாக நிலையாக கணக்குகள் எழுதிவைக்கின்ற குமஸ்தாவாக வேலையில் அமர்ந்து ;

25. சீவிப்பா னென்று சொல்வோம் செப்புவோ மன்னே சேதி
தாவிய பேரைக் காப்பள் தன்மனம் வெகுளி யாகும்
கோபத்தை வெளிக்காட் டாதாள் குவலய நல்லோ ளாவள்
பாவத்தில் மனம்வைய் யாதாள் பரவிடும் பித்த வாயு.

25. ஜாதகர் ஜீவிப்பவராவார் என்று சொல்லுகிறோம். இவருடைய தாயாரின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். தன்னிடம் வந்து அடைந்த பேர்களைக் காப்பாற்றுவாள். இவளுடைய மனமானது கோப முடையதாகவிருக்கும். ஆனால் இவள் தன்னுடைய கோபத்தைப் பிறர் தெரிந்து கொள்ளும்படியாக வெளியே காட்டிக்கொள்ளாமல் ரகசியமாக வைத்துக் கொண்டிருப்பாள். பூமியில் நல்லவளாக விருப்பாள். பாபமான காரியங்களைச் செய்வதில் ஆசையில்லாதவள். இவளுக்குப் பித்தவாயு தேகமெல்லாம் வியாபித்திருக்கும்.

26. தன்துணை ஆண்பால் மூன்று தையலர் இரண்டு மாகும்
மன்னிய வடகீ ழில்லம் வரைந்தனம் ஒருவன் தீர்க்கம்
அன்னவன் சேதி பின்பால் அறிவிப்போம் விவர மாக
முன்ஜன்மம் சொல்லு கின்றோம் முக்கூடல் தன்னி லேதான் ;

26. ஜாதகரின் தாயாருடைய சகோதரர்களில் மூன்று ஆண் சகோதரர்களும் இரண்டு பெண் சகோதரங்களும் ஆகும். இவளுடைய வீடு வடகிழக்குத் திக்கில் இருக்கும் என்று சொல்லுகிறோம். சகோதரர் களில் ஒரு சகோதரன் நீண்ட ஆயுளையுடையவன். அவனுடைய விஷயங் களைப்பற்றி விவரமாகப் பின்னால் சொல்லுகிறோம். தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் முக்கூடல் என்ற திரு முக்கூடல் கிராமத்தில் ;

27. வன்னிய குலமு தித்து மதலைக ளதிக முண்டாய்
இன்னவள் வாழுந் நாளி லியம்புவோ மூழி தானும்
கன்னிகை கணவ னோடு கனத்தவள் ளூரு சென்று
துன்னுமால் தெரிசித் தேதான் சென்றனள் கடைவீ திக்கே.

27. வன்னியர் ஜாதியில் பெண்ணைகப் பிறந்து அனேகக் குழந்தை களைப் பெற்று வாழுகின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்த வினையைச் சொல்லுகிறோம். இவள் தன்னுடைய புருஷனுடனே மேன்மையான சிறந்த வள்ளூருக்குப் போய் அவ்விடத்தில் மகா விஷ்ணுவைத் தரிசனஞ் செய்துவிட்டுப் பிறகு கடைத்தெருவிற்குப் போனாள்.

28. குங்குமம் மஞ்சள் சீப்புக் கோதையும் வாங்கிக் கொண்டு
நங்கையும் பொருளீ யாமல் நடந்தனள் மானைப் போலத்
துங்கமாம் வைசியன் பார்த்துத் தோகையைக் காணு னிச்
சிங்கம்போல் கோப முற்றுச் செப்புவான் வைசியன் தானும்.

28. தாயார் குங்குமம் மஞ்சள் சீப்பு இவைகளை ஒரு கடையில் வாங்கிக்கொண்டு கிரயத்தைக் கொடுக்காமல் திருட்டுத்தனமாக மானைப் போல வேகமாக நடந்து மாயமாக மறைந்துவிட்டாள். பெருமை, பரிசுத்தம் இவைகளமைந்த செட்டியாராகிய வியாபாரி பார்த்துத் தேடியும் இவள் காணமல் போய்விடவே அவர் ஒரு சிங்கத்தைப் போலக் கோபம் அடைந்து சொல்லுகின்றார்.

29. மஞ்சள்கள் கரையா முன்னம் மன்னனும் மரண மாகித்
தஞ்சமாய்ப் பின்ஜன் மத்தில் தன்வரன் மத்தி யத்தில்
துஞ்சிடும் இல்லம் நீங்கும் தாயில்லம் வாழ்வா ளாகும்
நஞ்சாகச் சொல்லி யேதான் நடுத்தெருத் தூளைத் தூற்றி ;

29. இவள் தான் திருட்டுத்தனமாய் வாங்கிக் கொண்டுபோன மஞ்சள் பூராகவும் கரைந்து செலவாகிப் போய் விடுவதற்கு முந்தியே இவளு டைய புருஷன் இறந்து, இவளும் இறந்து, இவள் தன்னுடைய மறு ஜன் மத்தில் மத்திய வயதில் புருஷனை இழந்து, பிறகு புருஷனுடைய வீட்டை விட்டுத் தன்னுடைய தாயாருடைய வீட்டிற்குப் போய் வாழக் கடவது என்று அந்த வைசியன் விஷவாக்காகச் சொல்லி நடுத்தெருவிலுள்ள மண் தூளை எடுத்துத் தூற்றினர்.

30. வருத்தமாய்ச் சென்று னென்றோம் மருவிற்று அந்தத் தோஷ
திருமக னந்த ஆண்டில் செல்வனு மரண மாகி
வறுமைகள் மிகவே கொண்டு மாலியின் பதிக்குச் சென்று
பிரமனல் வரையப் பட்டுப் பிறந்தன ளிந்த மாது.

30. அந்த வைசியர் மனக் கஷ்டத்துடன் போய் விட்டார் என்று சொல்லுகிறோம். அந்தச் சாபம் இவளை வந்து அணுகிற்று. இவளுடைய புருஷனும் அதே வருஷத்தில் இறந்து அதனல் இவள் அதிகமான கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அனுபவித்து இறந்து எமபட்டணத் திற்குப்போய்ப் பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இவள் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தவளாவாள்.

31. மாதுவு மத்தி யத்தில் வரனுமே மரண மாகி
நீதியால் தாயில் லத்தில் நேருவ ளென்று சொன்னோம்
கோதிலா நாற்ப தாண்டில் கும்பமா தத்தி லேதான்
காதலி மரண மாவள் கழறுவோ மிவள்பின் ஜன்மம்

31. ஜாதகருடைய தாயாரின் புருஷன் இவளுக்கு மத்திய வயதில் இறந்துவிட இவள் தன்னுடைய தாயாரின் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்து விடுவாள் என்று சொல்லி இருக்கிறோம். ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் † குற்றமில்லாத மாசி மாதத்தில் இவள் இறந்து விடுவாள். இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம்.

† **குறிப்பு.—மாதுர் மரண விஷயம்** :—ஜாதகருக்கு வயது ௵ 39–0–0 முதல் ௵ 40–0–0 முடியும் வரையிலும் குரு தசையில் சனி புக்தி புதன் புக்தி இவைகள் நடக்கின்றன. மாசி மாதத்தில் சனி புக்தி தான் நடக்

கின்றது. மாதுரு லக்கினமாகிய நான்காவது பாவமாகிய துலாத்திற்குக் குருவும் சூரியனும் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் மாரகாதிபதிகளாகின்றார்கள். குரு துலாத்திற்கு ஆறுவது வீட்டிற்கும் மூன்றாவது வீட்டிற்கும் உடைய மாரகாதிபதியாகிய நீசமாகித் துலாத்திற்கு எட்டாவது வீட்டையும் எட்டிற்கும் லக்கினத்திற்கும் உடையவராகிய சுக்கிரனைப் பார்க்கின்றார். ஆகையால் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை துய்யகேரளம் எட்டாவது பாவம் 20-ஆவது பாடல் பிரகாரமும் குரு மாரகாதிபதியாகித் தன் தசையில் மாதாவுக்கு மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராகவிருக்கின்றார். ஜன்மலக்கினமாகிய கடகத்திற்கு அஷ்டமாதிபதியாகிய சனி மாதுரு லக்கினத்திலேயே வலுவாக இருக்கின்றார். மாதாவுக்கு மாரகாதிபதியாகிய சூரியனையும் பன்னிரண்டிற்குடைய புதனையும் பார்க்கின்றார். ஆகையால் சனி ஜாதகசந்திரிகை 27-ஆவது சுலோகம் பிரகாரம் புதனைத் தள்ளி விட்டுத் தானே சுதியில் தன்புக்தியில் தாயாருக்கு மாரகஞ் செய்யும் அமைப்பு உள்ளவராக விருக்கின்றார். ஆகையால் தாயாருக்குக் குரு தசையில் சனி புக்தியில் மாரகம் நேரிடும் அமைப்பு இருக்கின்றது.

32. விரிஞ்சிநா டதனி லேதான் விளம்புவா னிக்கு லத்தில்
பெருமையும் புகழு முண்டாம் பதினேரு ஆண்டு தன்னில்
திருமகன் தந்தை கண்டம் செப்புவோ மன்பா நாலில்
தருமேட மாதம் தன்னில் ஜாதக னுடலம் வாடும்.

32. தாயார் விரிஞ்சி புரத்தில் இந்த ஜன்மத்திய குலமாகிய வடுகர் குலத்திலேயே பிறந்து மேன்மையும் கீர்த்தியும் உடையவளாகி வாழ்வாள். இவருக்குப் பதினோராவது வயதில் † இவருடைய தகப்பனர் இறந்து விடுவார். ஜாதகர் தனக்கு ஐம்பத்துநான்காவது வயதில் ‡ சித்திரை மாதத்தில் இறந்து இவருடைய தேகம் வாடி மறைந்து போய் விடும்.

குறிப்பு.—(1) தகப்பனுடைய மரண விஷயம் :—பிதுர் லக்கினம் ஒன்பதாமிடமாகிய மீனம் ஆகும். இதற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சுக்கிரன் சனி புதன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றார்கள். ஜாதகருக்கு வயது ௵ 10-0-0 முதல் ௵ 11-0-0 முடியும் வரையிலும் சந்திர தசையில் சூரிய புக்தியும், அங்காரக தசையில் அங்காரகபுக்தி இராகு புக்தி ஆகிய இவைகளும் நடக்கின்றன. மீனத்திற்கு மாரக ஸ்தான மாகிய ஏழில் கன்னியில் சந்திரன் மாரகாதிபதியாகிய சுக்கிரனுடன் கூடி பிதுர் லக்கினத்தையே பார்க்கின்றார். சுக்கிரன் பிதுர் லக்கினத்திற்கு எட்டிற்குடையவராகவும் ஆகின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகம், துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் ஆகிய இவைகளின் பிரகாரம் சந்திரன் பிதாவை மாரகஞ் செய்ய அங்காரகனைவிட அதிக அமைப்புடையவராக இருக்கின்றார். சூரியன் மாரகாதிபதியாகி குருவைப் பார்க்கின்றார். ஆகையால் மேற்கண்ட கிரந்தங்களின் பிரகாரம் சூரியன் தன் புக்தியில் பிதாவை மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

‡ (2) ஜாதகர் மரண விஷயம்.—ஜாதகருக்கு வயது ௵ 53-0-0 முதல் ௵ 54-0-0 முடியும் வரையிலும் சனி தசையில் சனி புக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குச் சனி பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் மாரகராகின்றார். சனி கடகலக்கினத்திற்கு மாரக ஸ்தானங்களாகிய ஏழு எட்டிற்கு அதிபதியாகி லக்கினத்தையும் பார்க்கின்றார். ஆகையால் சனி தன் தசையில் தன் புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உள்ளவராக விருக்கின்றார்.

33. பின் ஜன்மம் அருணை நாட்டில் பிறப்பனும் வன்னிய சேயாய்
அன்னையும் கேட்க லுற்றாள் அருளுவீர் செயல்கள் தம்மை
தன்சொலும் கப முண்டாய்த் தனமது இச்சை யாயும்
முன்கோபம் கடவுள் பத்தி முதல்வனும் கொள்ளாத தாலே ;

33. ஜாதகர் தன்னுடைய மறு ஜன்மத்தில் அருணை என்று சொல்லப்பட்ட அருணாசலமாகிய திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் வன்னிய குலத்தில் ஆணாகப் பிறப்பார். இப்படிப் பிறப்பதற்கு ஜாதகர் செய்த காரியங்களைச் சொல்லுவீர் என்று தாயாராகிய பார்வதியம்மையார் கேட்க, முனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகர் தான்சொல்லும் வார்த்தைகளில் கபடமும் வஞ்சனையும் வைத்துச் சொன்னதாலும், பணத்தின் மேல் ஆசையை வைத்துக்கொண்டு முன்கோபத்தை உடையவராகிக் கடவுளின் மேல் பக்தியும் அன்பும் இல்லாதவராய் இருந்ததாலும் ;

34. பிறப்பனும் வன்னிய சேயாய்ப் பிறந்திடுங் காலம் தன்னில்
புரவியி லேருப்புத் திங்கள் இரண்டுமே நாட்கள் ஆறும்
உரைக்கிறோம் பலனை யாங்கள் உத்தமி தனக்கு ரோகம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை புகன்றிட் டோமே.

34. ஜாதகர் மறு பிறப்பில் வன்னிய குலத்தில் ஆணாகப் பிறப்பார். இவர் பிறந்த காலத்தில் ஏழு குதிரைகளின் மேல் தேரில் சவாரி செய்கின்ற சூரியனுடைய தசையில் இருப்பு இரண்டு மாதங்களும் ஆறு நாட்களும் ஆகும். இந்தக் காலத்தின் பலாபலன்களைச் சொல்லுகிறோம். ஜாதகருக்கும் அவருடைய தாயாருக்கும் நோய் உண்டாகும். அருமையான வேதங்களின் முடிவில் விளங்குகின்ற பார்வதியம்மையே ! நாங்கள் பலனை இவ்விதமாகச் சொல்லிவிட்டோம்.

ஜாதகம் 88

∴ கலே[1]கடகம் ரவி[2]புதனும் சீயமாகச்[3]
காரி[4] குரு சேல்[5] கன்னி புகரும்[6] சேயும்[7]
மலே[8] ராகு ஞானத் தோன்[9] வீணே[10] புக்க
நண்டு[11] ராசி ஜன்மமதாய் மருவி நிற்க
பலனெவ்வாறு சொல்லு மென்னப் பராசர்சொல்வார்
பகருவோ மாண்ஜனன மில்லம் சொல்வேன்
நிலைமையாய்க் கீழ்மேற்கு வீதியாகும்
நிகர்வாசல் தக்ஷிணமாம் சந்திமேற்கில்.

குரு சனி			கேது
	இராசி சக்கரம்		லக்கினம் சந்திரன்
			சூரியன் புதன்
ராகு			அங்காரகன் சுக்கிரன்

பூசம் 4-ஆம் பாதம், சனிதசை ஞு 2–9–0

1. சந்திரன் கடகத்திலும், சூரியனும் புதனும் சிம்மத்திலும், சனியும் குருவும் மீனத்திலும், சுக்கிரனும் அங்காரகனும் கன்னியிலும், ராகு தனுசிலும், கேது மிதுனத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் கடகமாக விருந்தால் பலாபலன்கள் எவ்விதமாக விருக்கும் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்க, பராசரமகரிஷி குழந்தை பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லு கின்ருர். தெரு கிழக்கு மேற்குத் தெருவாக விருக்கும். தெரு வாயிற் கால் தெற்கில் இருக்கும். தெருக்கள் கூடுகின்ற விடம் மேற்குத் திக்கில் இருக்கும்.

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும். மிதுனத்தில் ராகுவும், கடகத்தில் புதனும், கன்னியில் சூரியனும், விருச்சிகத்தில் சந்திரனும், தனுசில் கேதுவும், கும்பத்தில் அங்காரகனும் குருவும் சுக்கிரனும், மீனத்தில் சனியும் ஆகும். புதன் அஸ்தத்திலும், குருவும் சனியும் வக்கிர கதியிலும் இருக்கின்ருர்கள்.

1 சந்திரன். 2 சூரியன். 3 சிம்மம். 4 சனி. 5 மீனம். 6 சுக்கிரன். 7 அங்காரகன். 8 தனுசு. 9 கேது. 10 மிதுனம். 11 கடகம்

2. மாரியுடன் காளிகுடி வடகீழாகும்
அருகருமே வாயுதிக்கில் தென்மேல் மாயோன்
வீருது உத்தரத்தில் கணேசனுண்டு
விளங்காத அக்குடியில் வடை யாளத்துள்
கூரையில்லம் சிறுஊரில் இந்தப் பாலன்
குலவுவான் இருமூன்று ஜனன மாகும்
மாரன்துணே களத்திரபுத்திரர் அன்னே தந்தை
வந்தவனின் ஜன்மம் வரைகிறோம் யாமதனே.

2. மாரியம்மன் கோயிலும் காளியம்மன் கோயிலும் வடகிழக்குத் திக்கில் இருக்கும். சமணர்களுடைய தேவதையின் கோயில் வடமேற்குத் திக்கிலும் மகாவிஷ்ணுவின் கோயில் தென் மேற்கிலும் இருக்கும். பெருமையில்லாத ஒரு விநாயகக் கடவுளின் கோயில் வடக்குத் திக்கில் இருக்கும். இவ்விதமான அடையாளங்கள் உள்ள விடத்தில் ஒரு சிறிய கிராமத்தில் ஒரு கூரை வீட்டில் இந்த ஜாதகர் ஆருவது கர்ப்பத்தில் வந்து பிறப்பார். இவருடைய சகோதரங்கள் மனைவி மக்கள் தாயார் தகப்பனுர் இவர்களுடைய முன்பின் ஜன்மங்கள் ஆகிய இவைகளைப் பற்றி நாங்கள் சொல்லுகிறோம்.

3. ஆகுமே தந்தைதுணே ஆண்பாலொன்று
அம்பிகைகள் நான்காக அறையலாகும்
போகுமே மற்றவெல்லாம் தந்தை சேதி
புகலுவோம் மால்நிறத்தான் உயரமில்லான்
பாகமாய்ப் பேசிடுவான் சமமாம் கல்வி
பார்விருத்தி தெய்வ பத்தி பதரு நெஞ்சம்
நாகரிகங்களுள்ளான் தந்தை நேயன்
நாட்டினிலே கிருஷிசெய்வன் உணச்சல் தேகி.

3. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரர்களில் ஆண் ஒன்றும் பெண்கள் நான்கு பேர் என்றும் சொல்லக்கூடும். மற்றைச் சகோதரர்கள் எல்லாம் இறந்து போய் விடும். தகப்பனுருடைய விஷயத்தைப் பற்றி சொல்லுகின்ரேம். இவர் மஹாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேகவர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தையுடைய தேகத்தையுடையவர். உயரமாக விருக்கமாட்டார். பக்குவமாகப் பேசுந்திறமை யுடையவர். நடுத்தரமான வித்தையை யுடையவர். பூமியைப் பயிரிட்டு விருத்தி செய்வார். தெய்வபக்தியும் அன்பும் உடையவர். அவசரப்படாத மனத்தை யுடையவர். நாகரிகங்களை யுடையவராவார். தன்னுடைய தகப்பனுருக்கு இஷ்டமானவர். ஊரில் விவசாயத் தொழிலைச் செய்வார். ஒல்லியான மெலிந்த தேகத்தை யுடையவர்.

4. உண்மையதை வெளிக்காட் டாதான் செலவுசெய்வன்
உறுதியில் லாதநெஞ்சம் உவமைசொல்வன்
தண்மைகுணம் முன்துணேபின் காணுகும்
சாற்றுமிந்தக் குணத்தானுக்கு இந்தப்பாலன்
கண்ணியமாய்த் தானுதிப்பன் முன்பெண்ஒன்று
இணேத்திடுமே பின்துணேஆண் இரண்டே தோன்றும்
வண்ணமுடன் பெண்சேதி வரைகிறோம்யாம்
மாஞ்சிவப்பள் உயரமில்லாள் மருமமில்லாள்.

4. ஜாதகரின் தகப்பனார் உண்மையானதைப் பிறர் அறியும் படியாக வெளிக்குக் காட்டாமல் ரகசியமாக வைத்து கொண்டிருப்பார். செலவு செய்வார். திடமான மனமில்லாதவர். உபமானம் உபமேயம் இவைகளுடன் பேசுவார். சாந்தமானதும் பெருந்தன்மையானதும் குளிர்ந்ததுமான குணமுடையவர். முன் சகோதரங்களை உடையவர். பின் சகோதரர்கள் இல்லாதவராவார். இப்படிப்பட்ட குணங்களையுடைய தகப்பனு ருக்கு இந்த ஜாதகர் மேன்மையாகப் பிறப்பார். இவருக்கு முன்னே ஒரு பெண் நீண்ட ஆயுளுடன் ஓங்கி வளருவாள். இவருக்குப் பின் சகோதரர்க ளாக இரண்டு ஆண் சகோதரர்கள் பிறப்பார்கள். இவருடைய மூத்த சகோதரியினுடைய விஷயங்களை நாங்கள் அழகாகவும் சிறப்பாகவும் சொல்லுகிறோம். இவள் மாமரத்தின் துளிரைப் போன்ற ஒரு விதமான சிகப்பு நிறத்தையுடையவள். உயரமானவளல்லள். தன்னுடைய மனத்தில் ரகசியத்தை வைத்துக் கொண்டிருக்காதவள் ஆவாள்.

5. மாதுலன்தன் மகனைமணம் புரிவாளாகும்
மானிலத்தில் வறுமையிலாள் மாமிரண்டு
நீதியாய்ச் சுதரெட்டு நேருமென்றோம்
நிலைத்தசுதர் ஆணிரண்டு பெண்பால்மூன்று
ஓதுவேன் வடக்கில்வரன் சுகமாய்வாழ்வள்
உரைத்திட்டோ மவன்குணத்தை ஆண்பால்சேதி
மேதினில் கடகஜன்மம் தேங்காய் நாளாம்
விளங்கிடுவான் சுத்தமாம் ஜனன மென்றோம்.

5. ஜாதகருடைய மூத்த சகோதரி தன்னுடைப் அம்மான் பிள்ளையை விவாகஞ் செய்து கொள்ளுபவளாவாள். இந்தப் பெரிய பூமி யில் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டாள். இவளுக்கு இரண்டு மாமியார்கள் உண்டு. இவளுக்கு நியாயமாய் எட்டுக் குழந்தை கள் பிறப்பார்கள் என்று சொல்லுகிறோம். இரண்டு ஆண் குழந்தை களும் மூன்று பெண் குழந்தைகளும் நிலைத்து நீண்ட ஆயுளுடன் இருப் பார்கள். இவளுககு வடக்கு திக்கிலிருந்து புருஷன் வந்து நேரிடுவான். இவள் சுகத்துடன் வாழ்வாள். இதுவரையிலும் இவளுடைய குணதிசயங் களைப் பற்றிச் சொல்லிவிட்டோம். இனிமேல் ஜாதகருடைய ஆண் சகோதரர் களின் விஷயங்களைச் சொல்லுகிறோம். ஓர் ஆண் சகோதரன் கடக ஜன்ம லக்கினத்தில் தேங்காய் என்ற மிருக சீர்ஷ நட்சத்திரத்தில் பிறந்திடுவார். பின்னமில்லாத ஜனனத்தை யுடையவர் என்று சொல்லுகிறோம்.

6. ஜனனமது மால்நிறத்தன் கல்விகொஞ்சம்
செல்லுவான் துணைவிபக்கல் தீரநெஞ்சன்
வினைசெய்யான் கிருஷிசெய்வன் நீட்சியுள்ளான்
வீண்வம்பில் செல்லானும் குறைவுறுதான்
தனையன்தம்பி சொல்கடவான் மனைவி ஒன்று
சாற்றுவோம் சுதரெட்டு ஜனிக்குமம்மா
வினையாகு மூன்றுஎன்றோம் ஆண் பால்மூன்று
வித்தகிமா ரிருவர்ஐந்தும் விருத்திதானே.

6. ஜாதகரின் இளைய சகோதரன் மகா விஷ்ணுவினுடைய நிற மாகிய நீல மேக வர்ணம் என்று சொல்லப்பட்ட ஒரு விதமான நிறத்தை யுடைய தேகத்தையுடையவர். இவருக்குப் படிப்பு கொஞ்சமாகவிருக்கும். இவர் தன்னுடைய சகோதரியிடம் போய் விடுவார். இவர் தைரியமான மனத்தையுடையவர். பரப காரியங்களையும் கெட்ட செயல்களையும் செய்ய மாட்டார். நிலத்தில் பயிரிடுந் தொழிலைச் செய்வார். நீண்ட தேகத்தை யுடையவர். வீணான சண்டைக்குப் போகமாட்டார். சௌக்கியக் குறைவும் செல்வக் குறைவும் இல்லாதவராவார். பிள்ளை தம்பி இவர்களுடைய வார்த் தைகளுக்கு மீறி நடக்காதவர். இவருக்கு ஒரே மனைவி தான் உண்டு. பார் வதியம்மையே! இவருக்கு எட்டுக் குழந்தைகள் பிறக்கும் என்று சொல்லு கிறோம். இவைகளில் மூன்று குழந்தைகள் இறந்துவிடும் என்று சொல்லு கிறோம். ஆண் குழந்தைகள் மூன்றும் பெண் குழந்தைகள் இரண்டும் ஆக மொத்தம் ஐந்து குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள்.

7. தனவானும் தந்தையில்லம் சாரானுகும்
சாற்றுகிறோ மவன்சேதி விவரம் ரண்டில்
ஆளவன்தன் நவஜனனம் அரியாம்ராசி
அதுவின்றி ஓணநாள் அருளுவோமே
ஈனமிலான் கல்வியுண்டு கிருஷிசெய்வன்
இடர்என்றோர் தமைக்காப்ப னீகை யாளன்
தேன்மொழிபோ லுரைத்திடுவான் தந்திரவாதி
திகம்பரன்மேல் பக்தியுள்ளான் தீரநெஞ்சன்.

7. ஜாதகரின் இளைய சகோதரன் தனமுள்ளவனுவான். தன் னுடைய தகப்பனாருடைய வீட்டை அடையமாட்டான். இவருடைய மற்ற விஷயங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம். இன்னொரு இளைய சகோதரனுடைய ஜன்ம லக்கினம் சிம்ம ராசியாகும். இதுவுமன்றி இவ ருடைய ஜன்ம நக்ஷத்திரம் திருவோணம் என்று சொல்லுகிறோம். இவர் குற்றமில்லாதவர். வித்தையுடையவர். விவசாயத் தொழிலைச் செய்வார். தங்களுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்லுகின்றவர்களைக் காப்பாற்றுவார். கொடுக்கும் தன்மையுடையவர். தேனைப் போல இனி மையான வார்த்தைகளைச் சொல்லுவார். தந்திரமுள்ளவர். சிவபெருமான் மேல் பக்தியும் அன்பும் உடையவர். தைரியமான மனதை உடையவர்.

8. நெஞ்சிரகன் மனைவிஒன்று சுதராண்ஒன்று
நிமலிரண்டு தீர்க்கமுறும் அவ்வாறுசேதம்
வஞ்சிகள் மோகமுளான் தந்தைமேலாய்
வாழ்குவான் ஒன்ருக வயதும்தீர்க்கம்
தஞ்சமதாய் ஜாதகன்தன் குணத்தைச் சொல்வேன்
சாந்தவான் மால்நிறத்தன் சமமாம்கல்வி
வந்தவரை ஆதரிப்பன் மர்ம்மனுவன்
மானிலத்தில் கிருஷிசெய்வன் மறுத்துக் கூறுன்.

8. இவர் இரக்கமுள்ள மனத்தை யுடையவர். இவருக்கு ஒரே ஒரு மனைவி உண்டு. ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாய் இருப்பார்கள். மூன்று குழந்தைகள் இறந்து விடுவார்கள். பெண்களின் மேல் காம ஆசையை யுடையவர். தன்னுடைய தகப்பனருக்கு மேலான அந்தஸ்தை யுடையவராகவும் ஒன்ருகவும் இருந்து வாழ்வார். இவர் நீண்ட ஆயுளை உடையவர். இனிமேல் ஜாதகருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். இவர் சாந்த குணமுள்ளவர். மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணத்தைப் போன்ற ஒரு விதமான நிறத்தையுடைய தேகத்தை யுடையவர். நடுத்தரமான வித்தையை யுடையவர். தன்னிடம் வந்தவர்களைக் காப்பாற்றுவார். ரகசியமான மனத்தை யுடையவராவர். இந்தப் பெரிய பூமியில் அல்லது பெரிய நிலங்களில் விவசாயத் தொழிலைச் செய்வார். தடுத்துச் சொல்லமாட்டார்.

9. உண்டி சுகம்வறுமையிலான் பணையோர்விருத்தி
உலகினிலே சல்யமிலான் உண்மைகூறுவன்
குண்டுணிகள் கூறுனும் கடவுள்பக்தி
கொள்ளவும் விற்கவும்வல்லன் குணவானகும்
பண்டுநாள் பூமிதனை விருத்திசெய்வன்
பதித்திடுவான் சித்திரயில்லம் பாரிதானும்
கண்டிதமாய் மூவேழில் உள்ளூர்மேற்கில்
கனத்ததந்தை துணைவி புத்திரி கருதிளுமே.

9. ஜாதகர் சௌக்கியமான சாப்பாட்டை உடையவர். கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டார். பயிரிடும் நிலங்களும் ஏர்களும் இவருக்கு விருத்தியாகும். பூமியில் கடன் இல்லாதவர். மெய்யையே பேசுவார். பிறர்மேல் கோள்களைச் சொல்ல மாட்டார். கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உள்ளவர். வாங்குவதிலும், விற்பதிலும் சாமர்த்திய முள்ளவர். நல்ல குணங்களை உடையவராவார். புராதனமான நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். அழகான சித்திரங்களுடைய வீட்டைக் கட்டுவார். இவருக்கு இருபத்தோராவது வயதில் * உள்ளூரிலேயே மேற்குத் திக்கிலிருந்து தன்னுடைய தகப்பனரின் சகோதரியினுடைய பெண் மனைவியாக வந்து சம்பவிப்பாள் என்று சொல்லுகிருேம்.

* குறிப்பு.—விவாக விஷயம் :—ஜாதகருக்கு வயது ஞூ 20-0-0 முதல் ஞூ 21-0-0 முடியும் வரையினும் கேது தசையில் கேது புக்தியும் சுக்கிர புக்தியும் நடக்கின்றன. களத்திரம் சம்மந்தமான அம்சங்கள் ஏழாவது வீடு, இரண்டாவது வீடு, இவ்வீடுகளுக்குடையவர்கள், சுக்கிரன் ஆகிய இவைகளாகும். கேது இரண்டையும் இரண்டிற்குடைய சூரியனையும் பார்க்கின்ருர். இவர் புதனுடைய வீட்டில் இருக்கின்ருர். புதன் இரண்டில் இரண்டிற்குடைய சூரியனுடன் கூடி இருக்கின்ருர். ஆகையால் கேது ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் புதனுடைய பலனைக் கொடுக்கவேண்டும். ஆகையால் கேது தன் தசையில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்க அமைப்பு உள்ளவராக விருக்கின்ருர். சுக்கிரன் போகஸ்தானமாகிய நான்காவது வீடாகிய துலாத்திற்கு அதிபதியாகவும் களத்திரக்காரகனுமாகியும் களத்திர ஸ்தானதிபதியாகிய சனியையும் பார்த்திருக்கின்ருர். ஆகையால் இவருக்குத் தன் புக்தியில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்க அமைப்பு இருக்கின்றது. மேலும் களத்திர ஸ்தானதிபதியாகிய சனி பிதுர்ஸ்தானதிபதியாகிய குருவுடன் சம்மந்தமாகிப் பிதுர் ஸ்தானத்திற்குச் சகோதர ஸ்தானமாகிய மூன்ருவது வீடாகிய ரிஷபத்தைப் பார்ப்பதுடன் அந்த ரிஷபத்தின் அதிபதியாகிய சுக்கிரனையே பார்ப்பதால் தகப்பனரின் சகோதரியின் பெண் மனைவியாக நேரிடுவதற்கு அமைப்பு இருக்கின்றது.

10. கருதுவோ மவள்கு ணத்தை இருநிறத்தாள்
கனத்தபுத்தி உயரமிலாள் கருதாள் பொய்யும்
திருகுசொல்லாள் பாட்டாளி தீரநெஞ்சம்
செல்விதுணை ஆண்காணுள் முன்பெண் ஒன்று
பெரும்தந்தை யிலாளாகும் யோகசாலி
பூமிபொருள் அவள்வழியால் பொருந்துமென்றேம்
உரைக்கிருேம் புத்திரர்கள் ஆண்பால் ரண்டு
உத்தமியு மவ்வாறுய் உரைப்பேன் கேளாய்.

10. ஜாதகரின் மனைவியினுடைய குண குணங்களைப் பற்றிச் சொல்லுகின்ருேம். இரண்டு நிறங்கள் கலந்த நிறமாகிய மாநிறமான தேகத்தை யுடையவள். உயரமானவளல்லள். பொய்யை நினைக்கமாட்டாள். கபடம் கள்ளம் வஞ்சனை இவைகளையுடைய வார்த்தைகளைச் சொல்ல மாட்டாள். கஷ்டப்பட்டு உழைக்கக் கூடியவள். தைரியமுள்ள மனதை யுடையவள். இவளுக்கு ஆண் சகோதரர்கள் கிடையா. இவளுக்கு மூத்த சகோதரி ஒருத்தி உண்டு. இவளுக்கு விவாக காலத்தில் இவளுடைய தகப்பனர் உயிருடன் இருக்கமாட்டார்*. இவள் யோகத்தை யுடையவள். நிலங்களும் தனமும் இவளுடைய மூலமாக ஜாதகருக்கு வந்துசேரும் என்று சொல்லுகிருேம். இவளுடைய சந்ததியைப் பற்றிச் சொல்லுகிருேம். ஆண் குழந்தைகள் இருவரும் பெண் குழந்தைகள் இருவரும் உண்டு என்று சொல்லுகிறேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

* குறிப்பு.—பிதுர் விஷயம் :—களத்திர ஸ்தானம் ஏழாமிடமாகிய மகரமாகும். இதற்குப் பிதுர் ஸ்தானம் மகரத்திற்குஒன்பதாமிடமாகிய கன்னி. இதற்குடைய புதன் பிதுர்ஸ்தானதிபதியாகிப் பிதுர்காரகனகிய சூரியனுடன் கூடி எட்டில் மறைந்திருப்பது பிதாவுக்குத் தோஷமாகும். பிதுர்ஸ்தானத்தில் அங்காரகனிருப்பதும், அதைச் சனி பார்ப்பதும் தோஷத்தைப் பிதாவுக்கு உண்டுபண்ணக் கூடியதாகும்.

11. உரைக்கக்கேள் அன்னைகுணம் மாஞ்சிவப்பள்
உணச்சலுள்ளாள் பெருமையுண்டு உறவோர்க் கன்பன்
குறையில்லாள் சுகஜீவி வறுமைகாணுள்
கோதையும் அயலார்குற்றம் கூருளாகும்

வரும்துணைவர் ஆணென்று தீர்க்க மெய்தும்
மத்தியத்தில் மரணமுறும் மனைவிதோஷம்
திருமகளின் முன்ஜன்மம் செப்பக்கேளாய்
செழிப்புடைய சிறுபாக்காம் கீழ்ப்பால் சிற்றூர்.

11. ஜாதகருடைய தாயாரின் குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன் கேட்பீராக. இவள் மாமரத்தின் துளிரின் நிறமாகிய ஒருவித சிகப்பு நிறத்தையுடைய தேகத்தையுடையவள். ஒல்லியான மெலிந்த தேகத்தையுடையவள். மேன்மையையுடையவள். பந்துக்களுக்குப் பிரியமானவளாய் இருப்பாள். யாதொரு குறைவுகளும் கஷ்டமும் இல்லாதவள். சௌக்கியமாக ஜீவித்திருப்பவள். கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அடையமாட்டாள். இவள் பிறர்மேல் குற்றங் குறைவுகளைச் சொல்லமாட்டாள். இவளுக்கு ஓர் ஆண் சகோதரன் நீண்ட ஆயுளை உடையவன். இந்த ஆண் சகோதரத்தினுடைய மனைவி தோஷத்தினாலே மத்திய வயதில் இறந்துவிடுவாள். ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக. செழிப்புற்றோங்கிய சிறுப்பாக்கம் என்ற ஊருக்குக் கிழக்குத் திக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில்

12. ஊரினிலே கங்கைகுல முதித்துமேலும்
உயர் வான பூமியுண்டாய்ச் சுதர்களுண்டாய்
நாரியாக சுக குடும்பி வாழுநாளில்
நாட்டுவோம் வந்தவினை அவ்வூர் தன்னில்
காரிழையின் குலத்துதித்தோள் மாதுபேரில்
காணமல் பதர் வார்த்தைக் கருதினளாம்
போர்புரிந்து இருவருமே யேழைமாது
புகலுகின்றாள் மனவெறுப்பால் பின்ஜன்மத்தில்

12. ஜாதகரின் தாயார் இந்தச் சிறிய கிராமத்தில் வேளாளர் குலத்தில் பிறந்து நல்ல விலையுள்ள நிலங்களை உடையவளாகவும், குழந்தைகளை உடையவளாகவும், சுகமான குடும்பஸ்தையாகவும் இருந்து வாழுகின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவளுடைய குலத்தில் பிறந்த ஒருவனுடைய ஸ்திரீயின் மேல் தான் பார்க்காத ஓர் இழிவான வார்த்தையை சொல்லி விட்டாளாம். அதன்மேல் இரண்டு ஸ்திரீகளும் சண்டை போடவே, அந்த ஏழை ஸ்திரீ தன்னுடைய மனக்கஷ்டத்தால் சொல்லுகின்றாள் மறு ஜென்மத்தில் ;

வேறு

13. துணைவிகள் காணு தாயும் சுதற்களும் முதலில் பீடை
பிணையான வார்த்தை உன்மேல் பிறர்சொல்ல வாழ்வா யென்று
துணிவுடன் சொல்லிச் சென்றாள் தொடந்தது அந்தத் தோஷம்
கணிகையு மந்தி யத்தில் கனத்ததோர் தலங்கள் சென்று ;

13. உனக்குச் சகோதரிகள் இல்லாமலும், உன்னுடைய குழந்தைகளுக்கு முதலில் பீடைகள் உண்டாகியும், உன்மேல் பிறர் பொய்யானவும் இழிவானவுமான கட்டுவார்த்தைகளைச் சொல்லும்படியான நிலையில் இருந்தும் நீ வாழக்கடவாய் என்று அந்த ஸ்திரீ துணிந்து தைரியத்துடன் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். அவள் சொன்ன சாபமான தோஷம் தாயாரை வந்து அடைந்தது. இவள் கடைசிக் காலத்தில் மேன்மையான பெரிய ஸ்தலங்களுக்குப் போய்.

14. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனால் வரையப் பட்டுச்
சீலமாம் குலத்தி லேதான் ஜனித்தன ளிந்த மாது
வேல்விழி மாது சாபம் மேவிற்று இச்சென் மத்தில்
சாலவே துணைப்பெண்காணுள் சந்ததி முதலில் பீடை.

14. பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு நல்லொழுக்க முள்ள குலத்திலே வந்து இவள் பிறந்திருக்கின்றாள். இவளுக்கு இந்த ஜன்மத்தில் சென்ற ஜன்மத்தில் ஏழை ஸ்திரீ கொடுத்தச் சாபம் வந்து அடைந்தது. ஆகையால் இவளுக்குச் சகோதரி கிடையாது. குழந்தைகளுக்கு முதலில் கஷ்டங்கள் உண்டாகும்.

15. துணைவனு மந்தி யத்தில் சோர்ந்திடு மென்று சொல்வோம்
கனமுட னிவள்பின் ஜன்மம் கழறுவோம் காஞ்சி தன்னில்
வினையிலா இக்கு லத்தில் மேவுவாள் வறுமை யின்றிச்
சினமிலா வாழ்வாளாகும் தேவியே மேலுங் கேளே.

15. இவளுடைய சகோதரனும் தன்னுடைய கடைசி காலத்தில் இறந்து விடுவார் என்று சொல்லுகிறோம். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். காஞ்சீபுரத்தில் பாபமில்லாத இந்த ஜன்மத்தில் இவள் பிறந்த குலத்தில் (அஃதாவது அருகர் என்ற சமணர் குலத்தில்) பிறப்பாள். கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமலும் கோபமில்லாமலும் வாழ்வாள். பார்வதியம்மையே ! இன்னும் நாங்கள்சொல்லுவதைக் கேட்பீராக.

16. தந்தையின் பூர்வம் சொல்வோம் தேயுவின் கீழ்ப்பா லாக
முந்திய பேரூர் தன்னி லுதித்தனன் கங்கை சேயாய்ச்
சந்ததம் பூமி யாலும் தனமது பெருக்க முண்டாய்
வந்திடு மனைவி மைந்தர் வறுமைக ளில்லா வாழ்ந்து ;

16. ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம், தேயுஸ்தலமாகிய திருவண்ணாமலைக்குக் கிழக்குத் திக்கில் உள்ள மேன்மையான ஒரு பெரிய கிராமத்தில் வேளாளர் குலத்தில் ஆணாகப் பிறந்து எப்போதும் நிலங்களினால் செல்வம் அதிகரித்துக் கொண்டு மனைவி மக்களை உடையவராகிக் கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமல் வபழ்ந்துகொண்டும்.

17. குருவுப தேசங் கொண்டு கோதையும் தானு மாகப்
பெருநதி தலங்கள் சென்று புக்கின காலன் பக்கல்
பிரமனல் வரையப் பட்டுப் பிறந்தன னிக்கு லத்தில்
வறுமைகள் காணு னுகும் வரைகிறேம் மிவன்பின் ஜன்மம

17. தன்னுடைய ஆசாரியாரிடத்தில் உபதேசங்களைப் பெற்றுக் கொண்டு தானும் தன்னுடைய மனைவியுமாகப் பெரிய நதி தீரங்களுக்கும் ஸ்தலங்களுக்கும் போய பிறகு இறந்து எமபட்டணத்திற்குச் சென்று பிரம தேவனல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்தக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றார். இவருக்குக் கஷ்டங்களும் தரித்திரமும் கிடையா. இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிரும்.

18. குடகினில் நதியின் பக்கல் குலவுவா னிக்கு லத்தில்
திடமதாய்க் குடும்பி யாகிச் செல்வனு வாழ்வ னுகும்
அடைவுட னிவனின் பூர்வ மறைகிறேம் தாயே கேளும்
வடதிசை காஞ்சி தன்னில் வைசிய குலமே தோன்றி ;

18. ஜாதகரின் தகப்பனர் குடகு தேசத்தில் ஒரு நதிக்கு அருகில் இந்த ஜன்மத்தில் பிறந்துள்ள குலத்திலேயே பிறந்து ஒரு வலிவான மேன்மையான குடும்பஸ்தராக விருந்து இவர் வாழ்வார். இனிமேல் ஜாதகருடைய முன் ஜென்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். எங்கள் தாயாரரகிய பார்வதியம்மையே! கேட்பீராக. வடக்குத் திக்கிலுள்ள காஞ்சீபுரத்தில் வைசிய குலத்தில் பிறந்து ;

19. பலவிதச் செட்டுச் செய்து பாலர்கள் மனைவி யுண்டாய்த்
தலமது தீர்த்தம் தோய்ந்து சங்கரன் தொண்டு செய்து
நிலையிலா ஏழை யோர்க்கு நிமலனு மன்ன மீந்து
உலவினுன் காலன் பக்கல் ஊழ்வினை யில்லா தாகி ;

19. பலவிதமான வியாபாரங்களை ஜாதகர் செய்து மனைவி மக்களை உடையவராகித் திவ்ய ஸ்தலங்களுக்குப் போய்த் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து சிவபெருமானுக்குப் பணிகளும் வேலைகளும் செய்து யாதொரு அந்தஸ்துமில்லாத ஏழை ஜனங்களுக்கு இவர் போஜனம் அளித்துப் பிறகு இறந்து எமனிடத்திற்குப் போய் முன் ஜன்மத்திய பாவங்கள் இல்லாதவராகி ;

20. வேதனல் வரையப் பட்டு விளங்கினன் அருகர் வமிசம்
ஓதுவே னிவனின் யோகம் ஒருபத்து ஆண்டு மேலாய்ச்
சீதள பிறைபோல் யோகம் செழிப்புறும் வறுமை காணன்
மேதினில் மரண மட்டும் விளங்கிடு மென்று சொன்னேம்.

20. பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு அருகர் என்ற சமணர் குலத்தில் பிறந்தார். இவருடைய யோகங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவருக்குப் பத்து வயதிற்கு மேலே வளர்பிறைச் சந்திரனைப் போல

யோகம் அதிகமாகிக் கொண்டே வரும். இவருக்குக் கஷ்டங்களும் தரித்திரமும் கிடையா. பூமியில் இவருக்குத் தன்னுடைய மரணகாலம் பரியந்தம் யோகம் விருத்தியாகும் என்று சொல்லுகிறேம்.

21. தந்தைபின் துணைவர் வேறு சாற்றுவோம் நாலா மாண்டில்
விந்தையாய் யிருபான் மூன்றில் மேவிடு மில்லம் தானும்
வந்தவர்க் கன்ன மீவன் மாநிலம் விருத்தி செய்வன்
கந்தனை யீன்ற மாதே கழறின மொழிகுன் றுது.

21. ஜாதகருக்கு நான்காவது வயதில் இவருடைய தகப்பனரின் பின் சகோதரர் வேறு குடும்பமாகப் போய் விடுவார் என்று சொல்லுகிறேம். ஜாதகருக்குத் தனக்கு இருபத்துமூன்றுவது வயதில் ஆச்சரியமாக ஒரு வீடு வந்து கிடைக்கும். இவர் தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். பெரிய நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

22. முப்பது ஒன்று ஆண்டில் மீனமா தத்தி லேதான்
செப்புவோம் தந்தை கண்டம் சுக்கிரன் தசைகா லத்தில்
ஒப்புடன் ரவியின் புக்தி உறைந்திடும் அந்தக் காலம்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுது

22. ஜாதகருக்கு முப்பத்தோராவது வயதில் பங்குனி மாதத்தில் இவருடைய தகப்பனர் இறந்து விடுவார் என்று சொல்லுகிறேம். இவர் இறந்து போகுங் காலத்தில் சுக்கிரதசையில் சூரிய புக்தி நடந்து கொண்டிருக்கும். நாகப் பாம்பைத் தன்னுடைய சடையில் தரித்துக் கொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவருமல் நடக்கும்.

குறிப்பு.—பிதுர் மாரக விஷயம் :—பிதுர் லக்கினம் ஒன்பதாம் பாவமாகிய மீனமாகும். மீனத்திற்குச் சனி புதன் சுக்கிரன் சூரியன இவர்கள் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் மாரகாதிபதிகளாகின்றார்கள். மீனத்திற்குச் சுக்கிரன் எட்டிற்குடையவராகி மாரகஸ்தானமாகிய ஏழாவது வீட்டில் நீசமாகிப் பிதுர்லக்கினதிபதியாகிய குருவைப் பார்க்கின்றார். ஆகையால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரமுங் கூட சுக்கிரன் மாரகாதிபதி யாகின்றார். சூரியன் ஏற்கனவே மாரகாதிபதியாகிய புதனுடன் கூடி மீனத்திற்கு ஆருவது பாவத்தில் இருக்கின்றார். ஆகையால் சுக்கிர தசையில் சூரிய புக்தியில் ஜாதகருடைய பிதுருக்கு மராகம் நேரிட அமைப்பு இருக்கின்றது.

23. அன்னைக்கு முப்பா னுலில் ஐப்பசி மாதம் தன்னில்
மன்புகர்[1] தசையி லேதான் நிலமகன்[2] புசிப்பில் கண்டம்
இன்னவன் தனக்குக் கண்ட மியம்புவோ மன்பா னுறில்
தன்னிலே சாடி மாதம் சாற்றுவோம் கண்டம் தானே.

[1] சுக்கிரன். [2] அங்காரகன்.

23. ஜாதகருடைய தாயாருக்கு முப்பத்துநான்காவது வயதில் ஐப்பசி மாதத்தில் * சுக்கிர தசையில் அங்காரகனுடைய புக்தியில் மாரகம் நேரிடும். ஜாதகருக்கு ஐம்பத்தாருவது வயதில் † மாசிமாதத்தில் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்ருேம்.

*** குறிப்பு.—தாய் மாரக விஷயம்** :—மாதுர் லக்கினம் துலாம். பராசர ஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சூரியனும் குருவும் மாரகாதிபதிகள் ஆவார்கள். சுக்கிரன் துலாத்திற்கு ஒன்று எட்டிற்குடையவராகி மாரகஸ்தானமாகிய பன்னிரண்டில் நீசமாகி மாரகாதிபதியாகிய குருவையும் பார்த்திருக்கின்ருர். மேலும் இவர் மாதுர்ஸ்தானுதிபதியாகவேவந்து இவருடைய தசை நடக்கின்றது. ஆகையால் துய்யகேரளம் எட்டாம்பாவம் 14-ஆவது பாடல் பிரகாரமும், 82-ஆவது ஜாதகம் 24-ஆவது பாடலின்கீழ் கொடுத்துள்ள வியாக்கியானப் பிரகாரமும் சுக்கிரன் தன்னுடைய தசையில் மாதாவை மாரகஞ்செய்ய அமைப்பு உள்ளவராகவிருக்கின்ருர். மேலும் பராசரஹோரையின் சிலபதிப்புக்களில் அங்காரகன்கூட மாரகாதிபதி என்று சொல்லி இருக்கின்றது. அங்காரகன் துலாத்திற்கு ஏழிற்குடைய மாரகாதிபதியாகிப் பன்னிரண்டில் மாரகஸ்தானத்தில் லக்கின அஷ்டமாதிபதியாகிய சுக்கிரனுடன்கூடி இருக்கின்ருர். ஆகையால் துய்ய கேரளம் எட்டாம்பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் அங்காரகன் தன்னுடைய புத்தியில் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்ருர்.

† ஜாதகருடைய மரண விஷயம்.—இவருக்கு 56-வது வயதில் மாசி மாதத்தில் சந்திரதசையில் ராகுபுக்தி நடக்கின்றது. இங்கு லக்கினுதிபதியின் தசையில் மாரகம் என்று சொல்லி இருப்பது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய ஒரு விசேஷ அம்சம் ஆகும். பராசரஹோரை, ஜாதகசந்திரிகை இவைளின் பிரகாரம் கடகலக்கினத்திற்குப் புதன் சுக்கிரன் சனி இவர்கள்தான் மாரகாதிபதிகள் ஆகின்ருர்கள். சந்திரன் சனியின்காலாகிய பூசநட்சத்திரத்தில் இருக்கின்ற சம்மந்தம் ஒன்றுதவிர மாரகர்களுடன் வேறே எந்த சம்மந்தமும் இல்லை. ஆனல் துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடலில் லக்கினதிபதிகூட மாரகஞ் செய்துவிடுவார் என்று சொல்லி இருக்கின்றது. மேலும் அந்தஅந்த பாவாதிபதிகூட தன்தசையில் தன் பாவத்திற்குரிய நபருக்கு மாரகத்தை உண்டுபண்ணிவிடுவர் என்று நாம் முன்னமே 82-ஆவது ஜாதகத்தில் 24-ஆவது பாடலின்கீழ் வியாக்கியானத்தில் சொல்லி இருப்பதையும் கவனிக்கவும். ஆகையால் சந்திரன் ஜாதகரைத்தன் தசையில் மாரகம் செய்ய அமைப்பு உள்ளவராகின்ருர். ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் ராகு குருவின் வீட்டில் இருப்பதால் குருவின் பலனைக் கொடுக்க வேண்டும். குரு மாரகாதிபதியாகிய சனியுடன் கூடி இருப்பதால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகம். 12-ஆவது சுலோகப் பிரகாரம் ராகு மாரகாதிபதி யாகின்ருர். மேலும் ராகு ஆருவது பாவத்தில் இருக்கின்ருர். ஆகையால் ராகு தன் புக்தியில் மாரகஞ்செய்ய அமைப்பு உள்ளவராகின்ருர்.

24. மறுஜன்மம் தில்லை கீழ்ப்பால் வள்முள பேரூர் தன்னில்
மறையவர் குலமு தித்து மாநில மதிக முண்டாய்
உறைவனு மென்று சொன்னேம் உயரில்லம் நாற்ப தாண்டில்
பிரிதலாம் மொழிதப் பாது புண்ணிய வதியே கேளாய்.

24. ஜாதகர் பின் ஜன்மத்தில் சிதம்பரத்திற்குக் கிழக்குத் திக்கில் உள்ள செழிப்பான ஒரு பெரிய கிராமத்தில் பிராமணருடைய குலத்தில் பிறந்து பெரிய நிலங்களை அதிகமாக உடையவராகி வாழ்வார் என்று சொல்லுகிருேம். மேன்மையான தன்னுடைய வீடு நாற்பதாவது வயதில் * பாகம்செய்யப்படும். நாங்கள் சொல்லியது தவறிடாமல் நடக்கும். பார்வதியம்மையே ! கேட்பீராக.

*** குறிப்பு.—வீட்டைப்பாகிக்கும் விஷயம்** :—ஜாதகருக்கு வயது ௵ 39-0-0 முதல் ௵ 40-0-0 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் குரு சனிபுக்தி நடக்கின்றது. வீட்டிற்குரிய நான்காவது பாவத்திற்கு வீட்டிற்குக் காரகராகிய சுக்கிரன் அதிபதியாகி நான்கிற்குப் பன்னிரண்டில் நீசமாகி அங்காரகனுடன்கூடி ஆறுக்குடைய குருவாலும், ஏழு எட்டிற்குடைய சனியாலும் பார்க்கபட்டிருப்பதால் சுக்கிரதசையில் சனிபுக்தியில் வீட்டைப் பாகித்துக் கொள்ள அமைப்பு இருக்கின்றது.

25. காவலன் ஜனிக்கும் காலே காரியின்[1] தசையி லேதான்
தாவிய ஆண்டு ரண்டும் திங்களு மொன்ப தாகும்
மேவிய ஜாத கர்க்கு விஷரோகம் போலே காணும்
ஆவலாய் விவரம் ரண்டில் அறைகிருேம் கேட்டி டாயே.

25. ஜாதகர் பிறக்கும்போது சனிதசையில் இருப்பு இரண்டு வருஷங்களும் ஒன்பது மாதங்களும் ஆகும். இந்தக்காலத்தில் இவருக்கு விஷரோகம்போல ஒருவித நோய் உண்டாகும். இதனுடைய விவரத்தை நாங்கள் இரண்டாவது பாகத்தில் ஆசையுடன் சொல்லுகிருேம். பார்வதியம்மையே நீர் கேட்பீராக.

26. ஜயமுனி சொல்லுகின்ருர் சனிகுரு ஒன்பான் நிற்க்க
தயையு டனந்தச் சங்கை சாற்றுவீர் முனியே நீர்தாம்
பயமிலாச் சொல்லு கின்றேன் பாலகன் சிறிய தந்தை
வியமாகும் பதினெட் டாண்டில் வாயுவின் பாதை யாலே.

26. ஜயமுனிவர் கேட்கின்ருர். சனியும் குருவும் ஒன்பதில் இருப்பதால் உண்டாகும் பலன்களை, முனிவரே ! நீர் சொல்லுவீர் என்று கேட்க, பயப்படாமல் நான் சொல்லுகின்றேன். ஜாதகருடைய சிறிய தகப்பனர் ஜாதகருக்குப் பதினெட்டாவது வயதில் * வாயு நோயால் இறந்து போவார்.

*** குறிப்பு.—சிறிய தகப்பனர் விஷயம்** :—ஜாதகருக்கு வயது ௵ 17-0-0 முதல் ௵ 18-0-0 முடியும் வரையிலும் புதன் தசையில் குருபுக்தியும் சனிபுக்தியும் நடக்கின்றன. ஜாதகரின் தகப்பனர் ஸ்தானம் மீனம் ஆகும். இதற்கு இளைய சகோதர ஸ்தானம் மீனத்திற்கு மூன்ருவது பாவமாகிய ரிஷபம் ஆகும். ஆகையால் ஜாதகரின் சிறிய தகப்பனரின் லக்கினம் ரிஷபம் ஆகும். இதற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சந்திரன் குரு சுக்கிரன் புதன் அங்காரகன் இவர்கள் மாரகாதி

---
[1] சனி.

பதிகளாகின்றார்கள். புதன் ரிஷபத்திற்கு இரண்டிற்குடைய மாரகாதிபதியாக விருக்கின்றார்கள். சனி ரிஷபத்தைப் பார்ப்பதுடன் ரிஷபத்திற்கு எட்டிற்குடைய குருவுடன் கூடியும் இருக்கின்றார். ரிஷப லக்கினாதிபதியாகிய சுக்கிரனையும் பார்க்கின்றார். ஆகையால் துய்யகேரளம் எட்டாம்பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் சனி தன்புக்தியில் சிறிய தகப்பனாரை மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

27. சுதர்களு மவருக் குண்டோ செப்புவீர் முனியே நீர்தாம்
சதியிலா மூன்றும் தோன்றும் ஷண்முகன் போலா ணென்று
மதிமுகப் பெண்பால் ரண்டு வரைகிறே மவனுக் கேதான்
அதிபன்தன் ஆண்பால் சேதி மான்[1]மகம் தோன்று வானும்.

27. சிறிய தகப்பனாருக்குக் குழந்தைகள் உண்டோ இல்லையோ என்பதை, முனிவரே ! நீரே சொல்லுவீராக. இவருக்கு மூன்று குழந்தைகள் உண்டாகும். ஓர் ஆண்குழந்தை முருகக்கடவுளைப்போலவும், சந்திரனைப் போல அழகான முகங்களை உடைய இரண்டு பெண் குழந்தைகளும் இவருக்கு இருப்பார்கள். இவருடைய ஆண் குழந்தையின் விஷயத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இந்த ஆண்குழந்தை மகரலக்கினத்தில் மகநட்சத்திரத்தில் பிறக்கும்.

28. அதுகளில் சங்கை யுண்டு அப்பலன் இரண்டில் சொல்வேன்
இதுவன்றித் துணைவன் ஒன்று ஏகுவான் துணைவி பக்கல்
அதிபனும் தந்தை ஆஸ்தி யடையாதான் பின்பால் சொல்வேன்
நதிசடை அணிந்தோன் நங்கை நாயகி கேட்டி டாயே.

28. இந்தக் குழந்தைகளைப்பற்றிச் சில சந்தேகமான அச்சமான விஷயங்கள் இருக்கின்றன. அந்தப் பலன்களைப்பற்றி இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறேன். இவைகளுமன்றி, ஜாதகருடைய சகோதரன் ஒருவன் தன்னுடைய சகோதரியிடம் போய்ச் சேர்ந்துவிடுவான். இவர் தன்னுடைய தகப்பனாருடைய சொத்துக்களை அடையமாட்டார். இந்த விஷயத்தைப்பற்றிப் பின்னால் சொல்லுகிறேன். கங்கையைத் தன்னுடைய சடையில் தரித்துக் கொண்டுள்ள சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

[1] மகரம்.

ஜாதகம் 89

1. மதி[1]புதன் வீணை[2]யாகு மறை[3]சனி கேது நந்தி[4]
உதயனும்[5] வளையலாக[6] உயர்புகர்[7] சேயும்[8] சீயம்[9]
ததிகமிறு[10] தேள[11] தாக ஜன்மமும் அலவன்[12] புக்க
இதுவிதக் கோளும் நின்று லியம்புவீர் பலனைத் தானே.

		குரு சனி கேது	சந்திரன் புதன்
	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன்
			சுக்கிரன் அங்காரகன்
	ராகு		

புனர்பூசம் 2-ஆம் பாதம். குருதசை இரு 6-6-0.

1. சந்திரனும் புதனும் மிதுனத்திலும், குருவும் சனியும். கேதுவும் ரிஷபத்திலும், சூரியன் கடகத்திலும், மேன்மையான சுக்கிரனும் அங்காரகனும் சிம்மத்திலும், இராகு விருச்சிகத்திலும், ஜன்மலக்கினம் கடகத்திலும் இருந்து இவ்விதமாகக் கிரகநிலைகள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று ;

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச்சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :— ரிஷபத்தில் சந்திரனும் சுக்கிரனும் கடகத்தில் சூரியனும், சிம்மத்தில் அங்காரகனும், கன்னியில் குருவும் ராகுவும், மகரத்தில் புதனும் சனியும், கும்பத்தில் கேதுவும் ஆகும்.

2. சுந்தரி கேட்கும் போது சுரர்குரு புகலு கின்றார்
வந்தசேய் ஆணும் ஜன்மம் வடதெற்கு வீதி யாகும்
இந்திரன் வாடை யாகு மீசனு மாயோன் தந்தி
தென்மேலே தங்கு மென்றோம் தீபாஞ்சாலி வடகீ மூமே.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது தேவகுருவானவர் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாக ஜெனனமாகும் பிறந்தவீடு வடக்குத் தெற்கு வீதியில் கிழக்குவாடையில் இருக்கும். சிவ

[1] சந்திரன். [2] மிதுனம். [3] குரு. [4] ரிஷபம்.
[5] சூரியன். [6] கடகம். [7] சுக்கிரன். [8] அங்காரகன்.
[9] சிம்மம். [10] இராகு. [11] விருச்சிகம். [12] கடகம்.

பெருமானுடைய கோயிலும் மகாவிஷ்ணுவினுடைய கோயிலும் விநாயகக் கடவுளின் கோயிலும் தென் மேற்குத்திக்கில் இருக்கும் என்று சொல்லுகிறேம். நெருப்பில் பிறந்த திரௌபதியம்மன் கோயில் வடகிழக்குத் திக்கில் இருக்கும்.

3. குடகினில் மாரி காளி கெடியது உத்தர மாகும்
இடிபடு மனேக மஸ்தான் ஏந்திடும் பேரூ ராகும்
அடைவுடன் செட்டு ஓங்கும் அனேகஜாதிகளும் வாசம்
இடமது கெட்டி யாகும் இவ்வித அடையா ளத்துள்.

3. மேற்குத்திக்கில் மாரியம்மன் கோயிலும் காளியம்மன் கோயிலும் இருக்கும். ஒரு கோட்டை வடக்குத்திக்கில் இருக்கும். அநேக மசூதிகளும் இருக்கும். அஃது ஒரு பெரிய ஊராகும். வியாபாரங்கள் அந்த ஊரில் சிறப்பாக நடந்துவரும். அநேக ஜாதியார் வாசஞ்செய்வார்கள். வலுவானதும் மேன்மையானதுமான ஊராகும் அது. இவ்விதமான அடையாளங்கள் உள்ள ஊரில் ;

4. சுந்திர னஞ்சாம் ஜன்மம் தோன்றுவா னிந்தப் பாலன்
தந்தைபின்து ணைவன் யோகம் சகோதிர களத்தர புத்திரர்
வந்தவன் யோகச் சேதி வளமையாய் முன்பின் ஜன்மம்
முந்திய நவக்கோ ளாலே உரைக்கிறேம் தாயே கேளும்.

4. ஜாதகர் ஐந்தாவது கெர்ப்பத்தில் பிறப்பார். இவருடைய தகப்பனரின் இளைய சகோதரனுடைய யோகம், சகோதரர், மனைவி, புத்திரர் ஜாதகர் ஆகிய இவர்களுடைய யோகங்களைப் பற்றியும், முன்ஜென்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றியும் முன்சொன்ன ஒன்பது கிரகங்களின் நிலையைக்கொண்டு சொல்லுகிறேம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

5. தந்தையின் துணைவ ரெட்டில் ஆண்இரண்டு கன்னி யொன்று
சந்ததம் விருத்தி யென்றேம் தங்காவே மற்ற வெல்லாம்
முந்தின துணையாண் ஒன்று மேவிடும் பின்னுண் ஒன்று
எந்தையே ஆளும் ஜன்ம மியம்புவோம் தந்தை தானே.

5. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரர்கள் எட்டுபேரில் இரண்டு ஆண் சகோதரர்களும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளையுடையவர்கள் என்று சொல்லுகிறேம். மற்றைச் சகோதரர்களெல்லாம் நிலைக்காமல் இறந்து போய்விடுவார்கள். தகப்பனுருக்கு ஒரு மூத்த சகோதரனும் ஒரு இளைய சகோதரனும் உண்டு. எங்களை ஆளுகின்ற பார்வதியம்மையே ! ஜனனமானவருடைய தகப்பனரின் விஷயத்தைச் சொல்லுகிறேம்.

6. செயலதைக் கூறக் கேளாய்த் தீரனும் மால்நி றத்தான்
நயமுள வார்த்தை கூறுவன் நல்லோர்க்கு நல்ல வன்
பயமிலான் எதிரிக் கஞ்சான் பாருகள் விருத்தி செய்வன்
ஜயம்செய்வ னெடுத்த வேலை சுகபுசிப் புடைய னுமே.

6. தகப்பனரின் செயல்களைச் சொல்லுகிறேம். கேட்பீராக. இவர் தைரியமுள்ளவர். மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்று சொல்லப்பட்ட ஒருவிதமான நிறமுடைய தேகத்தையுடையவர். இனிய வார்த்தைகளைச் சொல்லுவார். நல்லவர்களுக்கு நல்லவராக விருப்பார். பயப்படாதவர். சத்துருவுக்குப் பயப்படமாட்டார். நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். தான் ஆரம்பித்த வேலையைப் பூர்த்திசெய்து ஜயத்தை அடைவார். சுகமான நல்ல போஜனத்தைச் சாப்பிடுவார்.

7. ஈகையும் கொஞ்ச முள்ளா னிருமாமி யென்று சொல்வோம்
நாகரிகங்க ளுள்ளான் நாரணன் பத்தி கொள்வன்
பாகமாய்ப் பேச வல்லன் பணையேர்கள் விருத்தி செய்வன்
போகபாக் கியமு முள்ளான பூமியில் சல்லியம் கொள்ளான்.

7. தகப்பனர் கொடுக்குந் தன்மையைக் கொஞ்சமாக உடையவர். இவருக்கு இரண்டு மாமியார்கள் உண்டு என்று சொல்லுகிறேம். இவர் நாகரிகங்கள் உடையவர். மகாவிஷ்ணுவின்மேல் பக்தியும் அன்பும் உடையவர். பக்குவமாகவும் தந்திரமாகவும் பேசுந்திறமையையுடையவர். நிலம், ஏர் இவைகளை விருத்தியாக்குவார். போகமும் சுகமும் செல்வமும் உடையவராவார். பூமியில் இவர் கடன் வாங்கமாட்டார்.

8. அறமதி லிச்சை யில்லான் ஆகாத்தியம் சிலர்க்குச் செய்வன்
மறையவர் மன்னர் நேசன் வாக்குச்சொல் லிரண்டு முண்டு
பொறைசொல்வ னுகசாலி பொருளின்மே லிச்சை யுள்ளான்
நெறியுளான் வசியம் கொள்வன் நிமலியர் மோக வானும்.

8. தகப்பனர் தருமஞ்செய்வதில் ஆசையில்லாதவர். இவர் சிலருக்குப் பொல்லாங்கு கெடுதி இவைகளைச் செய்வார். பிராமணர்கள், அரசர்கள் ஆகிய இவர்களிடத்தில் சினேகமாய் இருப்பார். இரண்டுவிதமான பேச்சுகளைச் சொல்லுவார், அஃதாவது உண்மையையும் பொய்யையும் கலந்து சொல்லுவார். பொறுமையுடன் பேசுவார், நுட்பமான அறிவும் புத்தியுடையவர். பணத்தின்மேல் ஆசையையுடையவர். நன்மார்க்கத்தையுடையவர். பிறரைத் தன்வசமாகச் செய்துகொள்ளுவார். ஸ்திரீகளின்மேல் காம ஆசையையுடையவராவார்.

9. தோத்திரப் பிரிய னுகும் சொல்லினில் கபடு முண்டு
பாத்திர மறிவா னுகும் பலசகாயங்கள் செய்வன்
குத்திரம் செய்வா னுகும் சொன்னஇக் குணத்தா னுக்குச்
சாற்றினம் தாரம் ரண்டில் துதியமா மாதுக்கேதான்.

9. தகப்பனர் தன்னைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதில் ஆசையுடையவராவர். தான் சொல்லுகிற வார்த்தைகளில் கள்ளம் வஞ்சனை கபடம் இவைகளை வைத்துப்பேசுவார். இது தகுதியானது, இது தகுதி யில்லாதது என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடியவர். பலவிதமான உபகாரங்களைச் செய்வார். நூல்களைச் செய்யக்கூடியவர். உபாயம் அறிந்தவர். இயந்திரங்களைச் செய்யக்கூடியவர். இங்குச் சொல்லப்பட்ட குணங்களையுடையவருக்கு ஏற்பட்ட இரண்டு மனைவிகளில் இரண்டாவது பாரியைக்கு ;

10. உதிப்பது மிவனே யென்றோம் உரைக்கிறோம் துணைவர் தம்மைச்
சதியிலா நவமே தோன்றும் சங்கையாம் நான்கு என்றோம்
மதிநுதல் பெண்பால் ரண்டு வாணது மூன்று தீர்க்கம்
இதுவிதம் முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றாள்.

10. இந்த ஜாதகர் பிறப்பார் என்று சொல்லுகின்றோம். இவருடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகிறோம். மொத்தம் ஒன்பது சகோதரங்கள் பிறப்பார்கள். இவர்களில் நான்குபேர்கள் சந்தேகமான ஆயுளை உடையவர்கள், அஃதாவது இவர்கள் நான்குபேரும் இறந்துவிடுவார்கள். சந்திரனைப் போன்ற அழகான நெற்றிகளையுடைய இரண்டு பெண்களும், மூன்று ஆண்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவ்விதமாக முனிவர் சொல்லவே, பார்வதியம்மையார் கேட்கின்றார்.

11. முதல்மாதா ஒன்று என்றீர் மொழிகுவீர் அவட்குப் புத்திரர்
அதிகமாய்த் தோன்றிச் சேத மடைந்திடும் ஒருவன் தீர்க்கம்
அதிபனும் சிலநாள் ஒன்றாய் வாழ்ந்துபின் வேறாய்ச் செல்வன்
சதியினு லீரே ழாண்டில் சாறுவான் வேற தாக.

11. ஜாதகருக்கு முதல் தாயார் ஒருத்தி உண்டு என்று சொன்னீர், அதத்தாயாருக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பற்றிச் சொல்லுவீராக. இவளுக்குக் குழந்தைகள் அநேகம் பிறந்து இறந்துவிடும். ஆனால் ஒரு புத்திரன் நீண்ட ஆயுளை உடையவனாக விருப்பான். இவன் சில காலம் ஒன்றாக வாசஞ் செய்து கொண்டிருந்து பின்னால் வேறு குடும்பஸ்தனாகப் பிரிந்து போய்விடுவான். இவ்விதமாகப் பெண் ஜாதியால் ஜாதகருக்குப் பதினான்காவது வயதில் அவன் வேறு குடும்பமாகப் பிரிந்து போய்விடுவான்.

12. வஞ்சனை யில்லா னாகும் மறுமொழி கூறா னாகும்
அஞ்சிடான் எதிரிக் கேதான் யாவர்க்கு நல்லோ னவன்
பஞ்சுபோல் மனத்தானாகும் பாருகள் விருத்திசெய்வன்
வஞ்சியும் தென்கீ ழாகும் மாதுரு வர்க்க மென்றோம்.

12. ஜாதகர் கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாதவராவர். மறுத்துக்கூறும் வார்த்தைகளைச் சொல்லமாட்டார். சத்துருக்களுக்குப் பயப்படமாட்டார். எல்லோருக்கும் நல்லவனாகவே யிருப்பார். இளகிய மனமுடையவர். நிலங்களை பயிரிட்டு விருத்தியாக்குவார். இவருக்குத் தென் கிழக்குத்திக்கிலிருந்தும் தாய் வழி பந்துவிலிருந்தும் மனைவி வந்து நேருவாள் என்று சொல்லுகிறோம்.

13. சமயோகம் வறுமை காணான் தன் பணி அதிக மில்லான்
நிமங்களும் வீணா யேற்பன் நிகர்தந்தை பகையுமாவன்
பவமது அதிக முண்டு பாலரான் காணா னாகும்
தவசிபோல் பெண்பா லொன்று சாற்றுவோம் நேத்ர மீனம்.

13. ஜாதகர் சமமான நடுத்தரமான யோகத்தையுடையவர். கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடைய மாட்டார். தன்னுடைய ஆடை ஆபரணங்களும் வேலையும் அதிகமாக வில்லாதவர். இவரைப் பற்றிப் பிறர் வீணாகக் கோள் சொல்லுவார்கள். இவருக்குச்சமமான தகப்பனும் இவருக்கு எதிரியாகவும் விரோதமாகவும் இருப்பார். அதிகமான பாவத்தையுடையவர். இவருக்கு ஆண் குழந்தை கிடையாது. பண்டாரச்சியைப் போல ஒரு பெண் குழந்தை இருக்கும். இதற்குக் கண் ஊனமாக விருக்கும் என்று சொல்லுகிறோம்.

14. பின்சுதர் உதிக்கும் தீதாம் பேசுவோம் விவரம் ரண்டில்
இன்னவன் முன்னான் ஒன்று இயம்புவோம் தீர்க்க மாக
அன்னவன் குணத்தைச் சொல்வேன் யானையின் நிறத்தா னாகும்,
பின்னமில் லாத தேகம் பித்தச் சூடுடைய னாமே.

14. இவருக்குப் பிள்ளைகள் பிறந்தாலும் இறந்து போய்விடும். இதனுடைய விவரங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம். இவருக்கு முன்னே ஓர் ஆண் சகோதரர் நீண்ட ஆயுளை உடையவனாக விருப்பார். இவருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவர் யானையின் நிறத்தைப் போலக் கறுத்த நிறமுடைய தேகத்தையுடையவர். ஊனமில்லாத தேகத்தையுடையவர், பித்தசூட்டை உடையவராவார்.

குறிப்பு.—புத்திரபாவம்:—புத்திரபாவம் ஐந்தாவது பாவமாகிய விருச்சிகமாகும். அதில் இராகு இருக்கின்றார். அந்த வீட்டைச் சனி ஏழிற்குடையவராகவும் அஷ்டமாதிபதியாகவும் இருந்து பார்க்கின்றார். சனி ஐந்திற்குடையவராகிய அங்காரகனுக்கு ஆண்கிரக சம்பந்தம் ஒன்றுங்கிடையாது. ஒன்பதிற்குடையவரும் புத்திரகாரகனுமான குருவும் சனி கேது இவர்களுடன் கூடிப் பெண்ராசியில் இருக்கின்றார். ஆகையால் ஆண் சந்ததிக்கு அதிக தோஷம் இருக்கின்றது.

15. பலர்நேயன் செட்டுச் செய்வன் பயிர்த்தொழில் செய்வா னாகும்
பலமாதர் மோக முண்டு பஞ்சைமே லிரக்க மாவன்
கலகத்தில் மனம்வை யாதான் காரியச் சமர்த்த னாகும்
கலவர புத்தி யாவன் கண்முகம் வசிய முள்ளான்.

15. ஜாதகருடைய தமயனார் அநேகரிடத்தில் சிநேகமாக விருப்பார். வியாபாரஞ் செய்வார். விவசாயத் தொழிலையுஞ் செய்வாராவர். இவர் அனேக ஸ்திரீகளின்மேல் காம ஆசையை யுடையவர். ஏழைகளிடத்தில் இரக்கமுடையவர். கலகஞ் செய்வதிலும் சண்டை மூட்டுவதிலும் விருப்பமில்லாதவர். காரியங்களைச் செய்து முடிப்பதில் திறமை யுடையவர். இவர் கலவரமானதும் நிலையில்லாததுமான புத்தியை யுடையவர். இவருடைய கண்களும் முகமும் பிறரை வசியப் படுத்திக் கொள்ளுந் தன்மையுடையனவாகும்.

16. வித்தையும் சமம தாகும் விவேகியா மிளம னத்தன்
சுத்தவான் அடக்க முள்ளான் சுகதுக்கம் கலந்து வாழ்வன்
பத்தினி நேய னாகும் பாரினில் வறுமை காணான்
புத்தியில் பெரியோ னவன் புராதனம் விருத்தி செய்வன்.

16. ஜாதகருடைய தமயனுருக்குப் படிப்பு நடுத்தரமாக விருக்கும். இவர் புத்தியுள்ளவர். இளகிய மனத்தையுடையவர். பரிசுத்தமானவர். அடக்கமும் பொறுமையும் உடையவர். சௌக்கியமும் கஷ்டமும் இரண்டும் கலந்து அனுபவித்து வாழக்கூடியவர். மனைவியிடத்தில் பிரிய முள்ளவர். பூமியில் தரித்திரத்தை அடையாதவர். அறிவில் பெரியவனுகவும் மேலோனுகவும் இருப்பார். பழைய தனத்தையும் சொத்தையும் விருத்தி யாக்குவார்.

17. பாரியும் வடமே லாகும் பகருவோ மன்னே வர்க்கம்\
நாரிக்குச் சுதராண் ரண்டு நாயதி அவ்வாறு தீர்க்கம்
சீரியோர்க் குதவி செய்வன் துணைவரோ டொத்து வாழ்வன்
தீரமாய்ச் சல்லியம் கொள்ளான் ஜனவுப காரி யாகும்.

17. ஜாதகருடைய தமயனுருக்கு மனைவி வடமேற்குத்திக்கிலிருந் தும் தாயாருடைய பந்துக்களிலிருந்தும் வந்து நேரிடுவாள் என்று சொல்லு கிறோம். இவனுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தை களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவர் அறிஞர் களுக்கும் நல்லவர்களுக்கும் உபகாரஞ் செய்வார். தன்னுடைய சகோதரர் களுடன் ஒற்றுமையாக விருந்து வாழ்வார். தைரியமாகக் கடன் வாங்க மாட்டார். ஜனங்களுக்கு உபகாரஞ் செய்பவராக விருப்பார்.

18. பின்துணைப் பெண்பால் சேதி பேசுவோ மிருநி றத்தாள்
முன்கோபம் பின்பு சாந்தம் மூர்க்கத்தை மனதில் வையாள்
தன்வரன் வடமேல் தன்னில் தாய்பிற மகனைச் சேர்வள்
அன்னவள் வறுமை காணுள் அதிகபூ ஷணமு மேற்பள்

18. ஜாதகருடைய இளைய சகோதரியின் குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவள் இரண்டு நிறங்கள் கலந்த நிறமாகிய மாநிறமான தேகத்தையுடையவள். முன்னே கோபத்தையடைந்து பின்னல் சாந்த மாகக் கூடியவள். பிடிவாதத்தையும் கோபத்தையும் தன் மனத்தில் வைத்திருக்கமாட்டாள். இவளுடைய தாயாருடன் பிறந்த அம்மான் இவளுக்குப் புருஷனுக வடமேற்குத்திக்கிலிருந்து வந்து நேருவான். இவள் கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அடையமாட்டாள். ஆபரணங்களை அதிகமாக உடையவள்.

19. வருவோரை ஆத ரிப்பள் மைந்தர்க ளிருநான் காகும்
பெருமையாய் ஆண்பால் மூன்று பெண்ணது அவ்வாறு தீர்க்கம்
திருகான குணமில் லாதாள் சிறப்புடன் வாழ்வா ளாகும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

19. ஜாதகருடைய இளைய சகோதரி தன்னிடத்திற்கு வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவளுக்கு எட்டு குழந்தைகள் பிறக்கும். மேன்மையான சிறந்த ஆண் குழந்தைகள் மூன்றும் பெண் குழந்தைகள் மூன்றும் நீண்ட ஆயுளை உடையவர்களாகவிருப்பார்கள். இவள் கபடமான குணத்தை யுடையவளல்லள். இவள் மேன்மையாகவிருந்து வாழ்வாளாவள். அருமை யான வேதங்களின் முடிவில் விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக

20. பின்துணை ஆண்பால் சேதி பேசுவோ மிருநி றத்தான்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பன் வணிபம் செய்வன்
அன்னியர் மெச்ச வாழ்வன் அவனியை விருத்தி செய்வன்
பன்னியே பேச வல்லான் பரவுப காரி யாமே.

20. ஜாதகருடைய இளைய சகோதரருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவர் இரண்டு நிறங்கள் கலந்த நிறமாகிய மாநிறமான தேகத்தையுடையவர். தான் சொல்லுகின்ற வார்த்தைகளை உண்மை யானவை என்று வாதித்து ஜயிப்பவராவர். வியாபாரம் செய்வார். பிறர் இவரைப் பெருமையாகப் பாராட்டும் படியாகவிருந்து வாழ்வார். நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார். திறமையாகவும் மிகவும் தேர்ச்சியடைந்தவரைப் போலவும் பேசுஞ் சக்தியை உடையவர். பிறருக்குச் சகாயங்களைச் செய்பவராவார்.

21. தேவதா பத்தி கொள்வன் திருப்பணி செய்வா னுகும்
பாதக மனம்வை யாதான் பலபல செட்டுச் செய்வன்
ஆவலாய் அடுத்தோர் தம்மை ஆதரிப் பானும் சொன்னேம்
நாவுச்சொல் தவரு னுகும் நாட்டுவோ மனைவி யொன்றும்.

21. ஜாதகரின் இளைய சகோதரர் தெய்வபக்தியை யுடையவர். கோயில்களில் வேலைகளைச் செய்பவராவார். பாவமான கெட்ட மனம் இல்லாதவர். அநேகவிதமான வியாபாரங்களைச் செய்வார். தன்னிடம் ஆசையுடன் வந்து சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவார் என்று சொல்லுகிறோம். தன்னுடைய வாயிலிருந்து வருகின்ற வார்த்தைகளைத் தவருமல் காப்பாற்று வார். இவருக்கு ஒரே மனைவிதான் உண்டு என்று சொல்லுகிறோம்.

22. வடமேல்பால் அனுகு மென்றேம் மைந்தர்க ளாண்பால் ஒன்று
மடமயில் கன்னி ரண்டு மருவிடும் தீர்க்க மாகத்
திடமான குடும்பி யாவன் தந்தைக்குத் தாழ்வு ருதான்
விடவாக்கு அரச ரிஷ்டன் வெற்றியாம் தொடுவ மூக்கு.

22. ஜாதகருடைய இளைய சகோதரருடைய மனைவி வடமேற்குத் திக்கிலிருந்து வந்து நேரிடுவாள். இவருக்கு ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தைகள் இரண்டும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். மேன்மையான குடும்பஸ்தராகவிருப்பார். தன்னுடைய தகப்பனுருடைய அந்தஸ்திற்குத் தாழ்ந்த அந்தஸ்தை அடையமாட்டார். பலிக்கும்படியான கெட்ட வாக்கை உடையவர். அரசர்களுடைய சிநேகித ராவார். தான் செய்யும் தொடர்ந்து கொண்டே போகின்ற வியாஜ்யத்தில் ஜயத்தை அடைவார்.

23. கடையவன் சேதி சொல்வேன் காவலர் நேசம் கொள்வன்
படபட நடையு மாவன் பாருகள் விருத்தி செய்வன்
உடன்பிறந் தோர்மே லிஷ்டன் உறுதியாம் மனத்தா னுகும்
நடமிகு காலி விருத்தி நற்சக டுகளு முண்டு.

23. ஜாதகருடைய கடைசியான இலய சகோதரருடைய விஷயங்களைச் சொல்லுகிறேன். இவர் அரசர்களுடைய சினேகத்தை அடைவார் படபடவென்று வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் நடப்பார். நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார். தன்னுடன் கூடப்பிறந்தவர்களின்மேல் ஆசை அன்பு இவைகளை உடையவர். வலுவான மனத்தையுடையவராவார். அதிகமான கால்நடைகளை உடையவர். நல்ல வாகன வண்டிகளையும் உடையவர்.

24. பலகலை படிக்க வல்லன் பலமுள செட்டு ஓங்கும்
விலைமாதர் மோகம் கொள்வன் வீண்வழக் கோரம் சொல்லான்
நலமுளோர் நேசங் கொள்வன் நாதனுர் பத்தி கொள்வன்
உலவிடு நாபிச் சூடு உறுதியா மனத்தா னென்றேம்.

24. ஜாதகரின் கடைசியான இளைய சகோதரர் அநேக விதமான வித்தைகளைப் படித்தறியுஞ் சக்தியை உடையவர். வலுவான பெரிய வியாபாரத்தைச் செய்வார். இந்த வியாபாரம் நாளுக்குநாள் விருத்தியாகும். தாசிகளின்மேல் காம ஆசையை உடையவர். அனுவசியமான வம்பு வழக்குகளில் ஒரு பக்கமாகவிருந்து பொய்ச்சாட்சி சொல்லமாட்டார். நல்லவர்களுடைய சினேகத்தை அடைவார். சிவபெருமானிடத்தில் பக்தியும் அன்பும் உடையவர். வயிற்றில் கர்பச்சூட்டை உடையவர். தைரியமான மனத்தை உடையவர் என்று சொல்லுகிறேம்.

25. துணைவர்க்கு மேலாய் வாழ்வன் சொல்லது மேன்மை யாகும்
மனைவி யுமொன்றே யாகும் மைந்தர்கள் தவத்தி னுலே
கனமுட னுதிக்கு மென்றேம் காளையு மொருவ னுகும்
சினமிலாப் பெண்பால் நான்கு செப்புவோம் தீர்க்க மாக.

25. ஜாதகரின் கடைசியான இளைய சகோதரர் தன்னுடைய சகோதரர்களைவிட மேன்மையான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவருடைய வார்த்தைகள் மேன்மையை உடையனவாக விருக்கும். இவருக்கு ஒரே மனைவிதான் உண்டு. இவருக்குக் குழந்தைகள் இவர் செய்யுந் தவத்தின் பயனுகப் பிறப்பார்கள். இவருக்கு ஓர் ஆண் குழந்தையும் நான்கு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்கள் என்று சொல்லுகிறேம்.

26. புத்திரி தன்னுல் யோகம் பொருந்திடு மிவனுக் கேதான்
எத்திசைக் கீர்த்தி கொள்வன் ஏழிலுள தீர்த்தம் தோய்வன்
நித்தியம் சீல னுவன் நுணுக்கமாம் புத்தியாவன்
பத்தினி யோக மென்றேம் பாரியு முள்ளூ ராமே.

26. ஜாதகரின் கடைசியான இளைய சகோதரருக்குத் தன்னுடைய புத்திரியினுல் யோகமுண்டாகும். எல்லாத் திக்குகளிலும் இவருக்குப் புகழும் பெருமையும் உண்டாகும். அழகிய திவ்வியத் தீர்த்தங்களுக்கும் ஸ்தலங்களுக்கும் போய்த் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார். எப்போதும் நல்ல ஒழுக்கமுடையவராவார். நுட்பமான அறிவை உடையவர். மனைவியால் யோகமுடையவர் என்று சொல்லுகிறேம். இருவருக்கு மனைவி உள்ளூரிலிருந்தே வந்து நேருவாள்.

27. கடைதுணைப் பெண்பால் சேதி கழறுவோ மூகசாலி
மடமயில் மால்நி றத்தாள் வளமுள குடும்பி யாவள்
அடைவுடன் கல்வி மானும் அகசிய வார்த்தை சொல்வள்
குடதிசை வரனு மெய்தும் குழவிகள் ஆண்பால் மூன்று ;

27. ஜாதகரின் கடைசியான சகோதரியின் விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறேம். இவள் நுட்பமான புத்தி உடையவள். இவள் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேகவர்ணம் என்ற ஒரு நிறத்தைப் போன்ற நிறத்தையுடைய தேகத்தையுடையவள். சிறந்த குடும்பஸ்தையாக விருப்பாள். வித்தையையுடையவள். வேடிக்கையை உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லுவாள். இவளுக்குப் புருஷன் மேற்குத் திக்கிலிருந்து வந்து நேரிடுவான். இவளுக்குக் குழந்தைகள் மூன்று ஆண்களும் ;

28. பெண்ணது ஒன்றே யாகும் பிரியமாய் வார்த்தை சொல்வள
வணணமாய்ப் பணிகள் பூண்பள் வரன்மனம் போல வாழ்வள்
தண்மையாம் குணத்தா ளாகும் சாதமு மன்பா யீவள்
விண்ணவா பத்தி பூண்பள் மேதினியில்நன் னடக்கை யுள்ளாள்.

28. ஒரு பெண்ணும் இருக்கும். இவள் ஆசையாக வார்த்தைகளைச் சொல்லுவாள். அழகான ஆபரணங்களையும் ஆடைகளையும் அணிந்து கொள்ளுவாள். தன்னுடைய புருஷனின் மனத்திற்குத் தகுந்தபடி ஒற்றுமையாயிருந்து வாழ்வாள். சாந்தமான நல்ல குணத்தையுடையவளாவாள். பிறருக்குச் சாப்பாட்டை ஆசையுடன் கொடுப்பாள். தேவர்களின்மேல் பக்தியும் அன்பும் உள்ளவள். பூமியில் நல்ல நடவடிக்கை உடையவளாவாள்.

29. வரன்முன்னே மரண மாவள் மைந்தரால் பெருமை பூண்பள்
திருமகள் யோக சாலி செல்வியால் வரனின் யோகம்
பிறையது போலே காணும் பூமியில் நல்லோ ளாவள்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

29. ஜாதகரின் கடைசித் தங்கை தன்னுடைய புருஷனுக்கு முன்னே இறந்து விடுவாள். இவள் தன்னுடைய பிள்ளைகளால் மேன்மையான அந்தஸ்தை அடைவாள். இவள் யோகத்தை உடையவள். இவளால் இவளுடைய புருஷனுக்கும் யோகம் வளர்பிறைச் சந்திரன் வளருவது போல வளர்ந்து வரும். இவள் பூமியில் நல்லவளாக விருப்பாள். கருப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

30. ஜாதகர் நிறம்கு ணத்தைச் சாற்றுவோ மூக சாலி
பாதக மில்லா னுகும் பயிர்த்தொழில் உடைய னுகும்
மேதினி விருத்தி செய்வன் மேன்மையாய்க் குடும்பி யாவன்
சூதிலான் பெருமை யுண்டு சொல்லிலே கபடு முண்டு.

30. ஜாதகருடைய நிறத்தையும் குணதிசயங்களையும் பற்றிச் சொல்லு கிறோம். இவர் நுட்பமான புத்தி உடையவர். கபடம் கள்ளம் வஞ்சனை இவைகள் இல்லாதவராவார். விவசாயத் தொழிலை உடையவராவார். நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார். மேன்மையான குடும்பஸ்தராக விருப்பார். உபாயம் இல்லாதவர். மேன்மையான அந்தஸ்தையுடையவர். தான்சொல்லும் வார்த்தைகளில் வஞ்சனை இருக்கும்.

31. பெருமையும் புகழு மூண்டு பிதாவுக்குச் சமமாம் யோகம்
கிருஷியால் மேன்மை யாவன் கௌரவ குடும்பி யாவன்
பறைபள்ளு முடைய னுடன் பாட்டாளி பணையேர் விருத்தி
குறையிலான் பாக்கிய வானும் கல்வியும் சமமா மென்றேம்.

31. ஜாதகர் மேன்மையையும் கீர்த்தியையும் உடையவர். இவருக்குத் தன்னுடைய தகப்பனருக்குச் சமமான யோகம் உண்டு. விவசாயத்தால் சிறப்பை யடைவார். கௌரவமான அந்தஸ்தையுடைய குடும்பஸ்தராக விருப்பார். மேளவாத்தியமும் ஆள்படைகளும் உடையவராவர். கஷ்டப்பட்டு உழைக்கக்கூடியவர். நிலங்களும் ஏர்களும் விருத்தியாகும். தனக்குச் சௌக்கியக் குறைவும் கஷ்டங்களும் இல்லாதவர். செல்வமுடையவ ராவார். நடுத்தரமான படிப்பை உடையவர் என்று சொல்லுகிறோம்.

32. பாரியும் குடகு திக்குப் பத்தொன்ப தாண்டு தன்னில்
சீரியே பராசர் சொல்வார் சுபமது இருபா னென்றில
நாரியும் வாய்க்கு மென்றேம் நல்காது முன்சொல் காலம்
கூறுவோ மவள்கு ணத்தைப் புன்சிரிப் புடைய ளாகும்.

32. ஜாதகருக்குப் பத்தொன்பதாவது வயதில் மனைவி மேற்குத் திக்கிலிருந்து வந்து நேரிடுவாள். இவ்விதமாகச் சொல்ல, பராசரமுனி வர் கோபத்துடன் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இருபத் தோராவது வயதில் விவாகம் நடக்கும். மனைவியும் வந்து சேருவாள் என்று சொல்லுகிறோம். முன்னே சொல்லப்பட்ட காலமாகிய பத்தொன்ப தாவதாண்டில் விவாகம் நடக்காது. மனைவியினுடைய குணதிசயங்களைச் சொல்லுகிறோம். இவள் புன்சிரிப்புத் தவழும் முகத்தை உடையவளாவாள்.

குறிப்பு.—ஜாதகருடைய விவாக விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷ்ஹ் 20–0–0 முதல் ஷ்ஹ் 21–0–0 முடியும் வரையினும் சனி தசையில் அங்காரக புக்தியும் இராகு புக்தியும் நடக்கின்றன. சனி களத்திர ஸ்தான மாகிய ஏழாம் பாவமாகிய மகரத்திற்கு உடையவராகிப் பதினொன்றில் பாக்கியாதிபதியாகிய குருவுடன்கூடி போகக்காரகனுகிய இராகுவால் பார்க்கப் பட்டு லக்கினத்தைப் பார்க்கின்றார். ஆகையால் சனி தன்னுடைய தசையில் ஜாதகருக்கு விவாகஞ்செய்து வைக்க அதிகாரமுடையவராக விருக்கின்றார். அங்காரகன் பத்திற்குடையவராகி மனைவி விஷயமாகச் சம்மந்தமுள்ள குடும்பஸ்தானமாகிய இரண்டாவது வீட்டில் களத்திரகாரகனும் போக ஸ்தானமாகிய நான்கிற்குடையவருமான சுக்கிரனுடன் கூடி போககாரக னுகிய ராகுவையும் பார்க்கின்றார். ஜாதகபாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 29-ஆவது சுலோகப் பிரகாரம் அங்காரகன் பத்தாவது பாவாதிபதியாய் இருப்பதால் இவருக்குத் தன் புக்தி காலத்தில் ராகுவைவிடவும் சந்திரனை விடவும் விவாகம் செய்துவைக்க அதிகமான பலமும் அமைப்பும் இருக் கின்றது. பத்தொன்பதாவது வயதில் சந்திர புக்தி நடக்கின்றது.

33. மான்விழி மூர்க்கம் கொஞ்சம் வரன் மனம் போலே வாழ்வள்
தேன்மொழி யூக சாலி ஜனபந்து மெச்ச வாழ்வள்
தானமும் தருமம் கொஞ்சம் சந்தேக மனத்தா ளாகும்
ஊனமில் லாதா ளென்றேம் உரைக்கிறேம் புத்திர பாவம்.

33. ஜாதகருடைய மனைவி மானின் கண்களைப் போன்ற அழகான கண் களை உடையவள். இவளுக்குக் கொஞ்சம் முரட்டுத்தனமானதும், அறிவில் லாததுமான குணம் உண்டு. தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல் விருந்து வாழ்வாள். கொஞ்சம் தானதருமத்தையும் செய் வாள். சந்தேகமான மனத்தை உடையவளாவாள். அங்கஹீனம் ஒன்றும் இல்லாதவள் என்று சொல்லுகிறோம். சந்ததியைப்பற்றிச் சொல்லுகிறோம்.

34. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணேம்
சித்தமா யுதித்தா லும்தான் தீங்காகு மென்று சொல்வோம்
இத்தகர் முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றுள்
வித்தகன் தனக்குப் புத்திரர் விளங்காத கார ணம்சொல்.

34. ஜாதகருக்குப் புத்திரர்கள் பிறப்பார்கள் என்று சொல்ல யாதொரு வலுவும் கிடையாது. ஒரு சமயம் குழந்தைகள் பிறந்தாலும் அவர்கள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகிறோம். இவ்விதமாக முனி வா சொல்ல, ஜாதகருக்குக் குழந்தைகள் பிறந்து உயிருடன் இல்லாமல் இருப்பதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கின்றார்.

35. அஞ்சினில் ராகு நிற்க அந்தணன்[1] காரி[2] பார்க்கத்
துஞ்சிடும் மதலை யென்றேம் ஜயமுனி கூறு கின்றார்
மிஞ்சிய பத்தோன் லாபோன் விருவரும் குமேம்பம் தங்கத்
தஞ்சமாய் குடும்ப விருத்தி சாற்றினே யிவனுக் கேதான்.

35. ஐந்தாவது பாவத்தில் இராகு இருப்பதாலும், இந்த ஐந்தா வது வீட்டைக் குருவும் சனியும் பார்ப்பதாலும் குழந்தைகள் இறந்துவிடும் என்று சொல்லுகிறோம். ஜயமுனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். பத்திற் குடையவராகிய அங்காரகனும், பதினொன்றிற்குடையவராகிய சுக்கிரனும் குடும்பஸ்தானமாகிய இரண்டாவது வீட்டில் இருப்பதால் ஜாதகருக்குக் குடும்பம் விருத்தியாகக்கூடிய குழந்தைகள் உண்டு என்று சொல்லுகிறோம்.

[1] குரு [2] சனி.

36. மரித்தவர் கூறு கின்றுர் மாரன்முன் செய்பாவத்தால்
உரைத்திட்டோம் புத்திர தோஷம் உரைப்பீர்கள் பலத்தை நீங்கள்
திருமகள் பூர்வம் கேளாய்த் திருவள்ளூர் தன்னி லேதான்
பெருமையாய் வடுகர் வமிசம் பிறந்தவ னிவனே யம்மா.

36. இதன்மேல் முன் சொல்லிவந்த முனிவர் சொல்லுகின்றுர். ஜாதகர் முன் ஜன்மத்தில் செய்த பாவத்தின் பலனுக இவருக்குப் புத்திர தோஷம் உண்டு என்று சொல்லினேம் என்று சொல்ல, அந்தப் பாவத்தைப் பற்றிய விவரங்களை நீங்கள் சொல்லுவீர்கள் என்று பார்வதியம்மையார் கேட்க, ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன், பார்வதியம்மையே! கேட்பீராக என்று முனிவர் சொல்லுகின்றுர். திருவள்ளூரில் மேன்மையான தெலுங்கர் குலத்தில் ஜாதகர் பிறந்தார் என்று சொல்லுகிறேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

37. செட்டுகள் பலவாய்ச் செய்து சேயிழை மதலை யுண்டாய்க்
கட்டமில் லாமல் வாழுங் காலத்தில் ஊழைச் சொல்வேன்
துட்டமாம் மனைநா கம்தான் தோன்றிற்று வெளியில் ஓர்நாள்
மட்டமாம் புத்தி யாலே வாட்டினுன் கழியி னுலே.

37. ஜாதகர் முன் ஜன்மத்தில் அநேகவிதமான வியாபாரங்களைச் செய்து மனைவி மக்களை உடையவராகிக் கஷ்டங்கள் ஒன்றும் இல்லாமல் வாழ்ந்துக்கொண்டிருக்கின்ற காலத்தில் இவருக்கு உண்டான வினையைச் சொல்லுகிறேன். ஒரு தினத்தில் ஒரு மனையில் வாசஞ் செய்து கொண்டு வந்த கொடுமையான ஒரு நாகப்பாம்பு மனையைவிட்டு வெளியே வந்தது. அதை ஜாதகர் மந்த புத்தியினுல் தடியால் அடித்தார்.

38. காலன்தன் பதிக்குச் செல்லக் கலந்தது அந்தத் தோஷம்
ஞாலம்மே லின்னு மொன்று நவிலுவோம் கேளும் தாயே
வேல்விழி விதவை தன்னை யிரவினில் அரசின் கீழே
சாலவே நாகம் நிற்கும் சத்தியை போகம் செய்தான்.

38. அடிபட்ட அந்தச் சர்ப்பம் இறந்து எமபட்டணத்திற்குப்போய் விட்டது. அதனுல் அந்தத் தோஷம் ஜாதகருக்கு வந்து சம்பவித்தது. பூமியில் இன்னெரு சாபம் இவருக்கு நேர்ந்தது. அதைச் சொல்லுகிறேம். பார்வதியம்மையே! கேட்பீராக. அரசமரத்தின்கீழே நாகப்பிரதிஷ்டை செய்யப்பட்டு இருந்தவிடத்தில் ஒரு நாள் இரவில் ஜாதகர் ஒரு விதவை ஸ்திரீயுடன் சம்போகஞ் செய்தார்.

39. அதுவொரு தோஷ மாச்சு அகதியோர் சாப மொன்று
அதிபனுக் கடைந்ததென்றேம் அந்திய காலம் தன்னில்
சுதர்களும் விரோத முற்றுத் திருமாலின் தொண்டு பூண்டு
விதியது முடியும் காலை பேதியால் மரண மாகி;

39. அதுவும் ஒரு தோஷமாக நேர்ந்தது. இதுவுமன்றி ஒரு திக்கற்ற வனுகிய தரித்திரனுடைய சாபமும் ஜாதகரை வந்து அடைந்தது என்று சொல்லுகிறேம். தன்னுடைய கடைசி காலத்தில் தன்னுடைய பிள்ளைகளும் தனக்கு விரோதிகளாகிப் பிறகு மகாவிஷ்ணுவிற்கு வேலைகளைச் செய்து அவரிடத்தில் பக்தியுடையவராகித் தனக்கு ஆயுள் முடியுங் காலத்தில் பேதியால் இறந்து;

40. வேதனுல் வரையப் பட்டு விளங்கினு னிந்தப் பாலன்
நீதியாய் நாக சாபம் நேர்ந்தது இவனுக் கேதான்
ஓதுவேன் சாந்தி தானும் உயரமாம் அரசின் கீழே
ஆதிசே டனேயே செய்து அந்தணர் முப்பானேர்க்கு;

40. பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் ஜாதகர் வந்து பிறந்திருக்கின்றுர். நியாயமாக நாகப்பாம்பின் சாபதோஷம் ஜாதகருக்கு வந்து சம்பவித்தது. அதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுகின்றேன். ஒரு சிரேஷ்டமானதும் உயரமானதுமான அரசமரத்தின் கீழே ஆதிசேஷனைப் பிரதிஷ்டை செய்து முப்பது பிராமணர்களுக்கு;

41. அன்னமு மன்பா யீந்து ஆதிமால் வள்ளூ ருக்கு
இன்னவன் மனைவி யோடு யேகியே அபிஷே கித்துக்
கண்ணனின் பாதத்திற்கே கமலத்தால் அர்ச்சித் தேத்தித்
தன்நகர டைந்த யின்னேர் திங்களில் ஏகா தசி;

41. ஆசையுடனும் அன்புடனும் போஜனம் கொடுத்து மகாவிஷ்ணு உள்ள முன் சொல்லிய திருவள்ளூருக்குத் தன்னுடைய மனைவியுடன்போய் அவருக்கு அபிஷேகஞ் செய்வித்துத் திருமாலினுடைய பாதங்களுக்குத் தாமரைப் புஷபத்தால் அர்ச்சித்துத் தொழுது பிறகு தன்னுடைய பட்டணத்திற்குத் திரும்பிப்போய் ஒவ்வொரு மாதத்திலும் ஏகாதசியில்;

42. விரதமூ வாண்டு சொன்ன வினைநீங்கிச் சுதர்க ளெய்தும்
மருமமாய்ச் செய்யா னுகில் மதலைகள் தோஷ மெய்தும்
முறைபோலே செய்வா னுகி லுதித்திடு மாண்பால் ஒன்று
திருமக ளொப்ப தாகச் செல்வதி யிரண்டும் தீர்க்கம்.

42. மூன்று வருஷகாலம் விரதம் அனுஷ்டித்து வந்தால் முன் ஜன்மத்திய சாபதோஷம் விலகி குழந்தைகள் பிறந்து வளரும். இந்தச் சாந்தியைச் செய்யாமல் இரகசியமாய் இருந்துவிட்டால் குழந்தைகள் தோஷத்தை அடைந்து இறந்துவிடும். நாம் சொல்லிய வழிப் பிரகாரம் சாந்தியைச் செய்தால் ஓர் ஆண் குழந்தையும் இலட்சுமியைப் போன்ற இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையனளாக விருப்பார்கள்.

43. அன்னையின் குணத்தைச் சொல்வே னழகுளா ளுணைச்சல்தேகி
முன்கோபம் சாந்த முண்டு உண்மையாம் மனத்தா ளாகும்
தன்தேகம் பித்தச் சூடு தானவள யோகசாலி
அன்னியர் மதிக்க வாழ்வள் அவளில்லம் வடமே லாகும்.

43. ஜாதகரின் தாயாருடைய குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் அழகானவள். மெல்லிய தேகத்தை யுடையவள். முன்கோபத்தை உடையவள். இந்த முன்கோபம் உடனே சாந்தமாகி விடும். உண்மையான நல்ல மனத்தை உடையவள். இவள் பித்தசூட்டுத் தேகத்தை உடையவள். யோகமுடையவள். பிறர் இவளை மதிக்கும்படியான நிலையிலிருந்து வாழ்வாள். இவளுடைய தாயின் வீடு வடமேற்குத் திக்கில் இருக்கும்.

44. ஆண்துணை யிரண்டு தீர்க்கம் அவ்வாறே பெண்பா லாகும்
பூணுவோ மன்னை பூர்வம் பிருதிவி தலத்தி லேதான்
காணவே வன்னிய வமிசம் காதலி யுதித்து மேலும்
வாணிபம் காய் கிழங்கு வறுமைக லில்லா வாழ்ந்து ;

44. ஜாதகரின் தாயாருடைய சகோதரர்களில் இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். பிருதிவி ஸ்தலம் என்று சொல்லப்பட்ட காஞ்சீபுரத்தில் வன்னியர் குலத்தில் இவள் பிறந்து காய் கிழங்கு இவைகளில் வியாபாரஞ் செய்து தரித்திரமும் கஷ்டமுமில்லாமல் வாழ்ந்து ;

45. அறமதி லிச்சை யுண்டாய் அதிதிகட் கன்ன மீந்து
மறலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப் பட்டுத்
திருக்காஞ்சி மேல்பா லாக ஜனித்தனள் சில மின்றி
வருங்கங்கைக் குலமாமென்றோம் மறு ஜன்மம் புகலு வோமே.

45. தருமஞ் செய்வதில் ஆசையுடையவளாகிப் பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டு இறந்து எமபட்டணத்திற்குப்போய் மகாவிஷ்ணுவின் மகனுகிய பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு அழகிய காஞ்சீபுரத்தின் மேற்குப் பாகத்தில் நல்லொழுக்கமில்லாத ஒரு வேளாளர்குலத்தில் பிறந்தாள் என்று சொல்லுகிறோம். இவளுடைய பின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

46. உத்தரம் தணிகை தன்னில் உதிப்பளாம் ரெட்டி வமிசம்
சித்திரப் பணி களுண்டாய்ச் சிறப்பான குடும்பி யாவள்
குத்தமில் லாமல் வாழ்வள் கூறின மொழி குன்றுது
வித்தகன் தந்தை பூர்வம் விளம்புவோம் கேட்டி டாயே.

46. வடக்குத் திக்கில் திருத்தணியில் ரெட்டியாருடைய குலத்தில் ஜாதகருடைய தாயார் பிறப்பாள். அழகான ஆபரணங்களும் ஆடைகளும் உடையவளாகி மேன்மையான குடும்பஸ்தையாகி எவ்விதப் பாபமும் குறைவும் இல்லாமல் வாழ்வாள். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவருமல் நடக்கும். ஜாதகரின் தகப்பனுருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். பார்வதியம்மையே ! கேட்பீராக.

47. தில்லையின் மேல்பா லாக சிறுவூரில் முத்திரிய வமிசம்
எல்லைக ளதிக முண்டா யிவன் பந்து புகழ வாழ்ந்து
எல்லையை அளந்தோன் பத்தி யிவனுமே வாழுந் நாளில்
அல்லலைச் சொல்லு கின்றேன் அம்பிகை யாளே கேளாய்.

47. ஜாதகரின் தகப்பனுர் தில்லை என்று சொல்லப்பட்ட சிதம்பரத்தின் மேற்குத் திக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் முத்திரியர் குலத்தில் ஆணுகப் பிறந்து அனேக நிலங்களை உடையவராகிப் பந்துக்கள் தன்னைப் புகழ்ந்து பேசும்படியான நிலையிலிருந்து வாழ்ந்து மகாவிஷ்ணுவின் மேல் பக்தியும் அன்பும் உடையவராகி வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தக் கெடுதியைச் சொல்லுகின்றேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

48. மனைவியின் வார்த்தை கேட்டு வரும்துணை விரோதம் பேசிப்
பிணையாக ஓட்டி விட்டான் புக்கிற்று அதுவோர் தோஷம்
தமையனை மோசம் செய்தான் தாய் தந்தை விரோதம் செய்தான்
கனமுள அந்தத் தோஷம் கழறுவோம் தாயே கேளும்.

48. தகப்பனுர் தன்னுடைய மனைவியின் பேச்சைக் கேட்டுத் தன்னுடன் கூடப்பிறந்த சகோதரனிடத்தில் விரோதத்துடன் பேசி அவனைத் தன் இஷ்டம்போல் வீட்டைவிட்டு வெளியே போகும்படியாக ஓட்டிவிட்டார். அதனுல் ஒரு தோஷம் வந்து நேர்ந்தது. தன்னுடைய மூத்த சகோதரனை ஏமாற்றி விட்டார். தாய் தகப்பனுர்களுக்கு விரோதமாக நடந்துகொண்டார். வலுவான அந்தத் தோஷம் உண்டாயிற்று. எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லுகிறோம். கேட்பீராக.

49. மரலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப்பட்டு
பெருமையில்லாத கங்கை சேயாய்ப் பிறந்தன னிவனே யம்மா
உரைந்தது முன்னுழ்ச் சாபம் உரைக்கிறோம் மனைவி ரண்டு
திருமகள் யோக மெய்தும் செப்புவோம் பின்ஜன் மத்தை.

49. ஜாதகரின் தகப்பனுர் இறந்து எமபட்டணத்திற்குப்போய் மகாவிஷ்ணுவினுடைய மகனுகிய பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு மேன்மையில்லாத ஒரு வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்தார் இந்தத் தகப்பனுர். பார்வதியம்மையே! இவருக்கு முன் ஜன்மத்திய சாபம் வந்து நேர்ந்தது. இவருக்கு இரண்டு தாரம் உண்டாகும். மனைவியின் யோகம் இவருக்கு உண்டாகும். இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம்.

50. ஆரங்கமா நகரம் தன்னில் அந்தணர் குலமு திப்பான்
பராசரும் கேட்க வுற்றுர் பாலக னிச்சென் மத்தில்
அறமதி லிச்சை யின்றி அவன்பொரு ளாசை வைத்து
இடரான குணத்த னுக்கு முன்குலம் உதிக்கும் வண்மை,

50. ஜாதகருடைய தகப்பனர் ஸ்ரீரங்கத்தில் பிராமணர் குலத்தில் மறு ஜன்மத்தில் பிறப்பார். அதன் மேல் பராசரமகரிஷி கேட்கின்ருர். இவர் இந்த ஜன்மத்தில் தருமத்தில் ஆசையில்லாமல் இருந்தும் பணத்தின் மேல் ஆசையுடையவராயிருந்தும் கெட்ட குணங்களை உடையவராகவிருந்தும் இவருக்கு முதல் குலமாகிய பிராமணர் குலத்தில் பிறக்கும் பாக்கியம் ;

51. எப்படிச் சொல்லு மென்ன இடருக ஊனந்தம் செய்தும்
அப்பணி துயில்வோ ̃னுக்கும் அர்ச்சிப் பதாலே நேரும்
முப்பது ஆண்டு தன்னில் மேடமா தத்திலேதான்
செப்புவோம் தந்தைகண்டம் செல்வதி மேலுங் கேளே.

51. எந்தக் காரணத்தினுல் ஏற்பட்டது என்பதைச் சொல்லுவீர் என்று கேட்க, இவர் அனேக கெட்டக் காரியங்களைச் செய்திருந்தும் இவர் ஆதிசேஷனின் மேல் படுத்துத் தூங்குகின்ற மகாவிஷ்ணுவிற்கு அர்ச்சனை செய்ததாலே இவருக்குப் பிராமணர் குலத்தில் ஜனனம் ஏற்படும். இவருக்கு முப்பதாவது வயதில் * சித்திரை மாதத்தில் இவருடைய தகப்பனர் இறந்து போய்விடுவார் என்று சொல்லுகிருேம். பார்வதியம்மையே நாங்கள் இன்னும் சொல்லுவதைக் கேட்பீராக.

* குறிப்பு.—பிதுர் மாரகம்:—ஜாதகருக்கு வயது ஷூ 29–0–0 முதல் ஷூ 30–0–0 முடியும் வரையிலும் புதன் தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. பிதுர் லக்கின பாவமாகிய ஒன்பதாம் வீடாகிய மீனத்திற்குப் புதன் சுக்கிரன் சனி சூரியன் இவர்கள் பராசரஹோரை, ஜாதக சந்திரிகை இவைகளின் பிரகாரம் மாரகாதிபதிகள் ஆகின்ருர்கள். மேலும் புதன் மாரகஸ்தானமாகிய ஏழிற்குடையவராகி சுகஸ்தானத்தில் சந்திரனுடன் கூடி இருக்கின்ருர். சுக்கிரன் மாரக ஸ்தானங்களாகிய மூன்று எட்டிற்குடையவராகி ரோக ஸ்தானத்தில் இருக்கின்ருர். ஆகையால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரம் சுக்கிரன் தன் புத்தியில் பிதாவை மாரகஞ்செய்ய அதிகார முடையவராகி விருக்கின்ருர். ஆகையால் புததசையில் சுக்கிர புக்தியில் பிதுர்மாரகம் நேரிட அமைப்பு இருக்கின்றது.

52. அன்னைக்கு முப்பானுவில் ஆவணி மாதம் தன்னில்
துன்னிய காலன் பக்கல் செல்லுவ ளென்று சொன்னேம்
இன்னவன் தனக்கு மேதானியம்புவோ மறுப்பான் மூன்றில்
மன்னிய மகர மாதம் வளர்பிறை ஷட்டி தன்னில் ;

52. ஜாதகருடைய தாயார் (ஜாதகருக்கு) முப்பத்து நானகாவது வயதில்* ஆவணி மாதத்தில் இறந்து எமனிடத்திற்குப் போய்ச் சேருவாள் என்று சொல்லுகிருேம். ஜாதகருக்கு அறுபத்துமூன்ருவது வயதில் † தை மாதத்தில் வளர் பிறையில் சஷ்டி திதியில் ;

* குறிப்பு.—தாய் மாரக விஷயம்:—மாதுரு லக்கினம் நான்காவது பாவமாகிய துலாமாகும். துலா லக்கினத்திற்குப் பாராசரஹோரை ஜாதக சந்திரிகை இவைகளின் பிரகாரம் சூரியனும் குருவும் மாரகாதிபதிகள் ஆகின்ருர்கள். குரு மிருகசீர்ஷத்திலும் புதன் திருவாதிரையிலும் சூரியன் புனர்பூசத்திலும் இருப்பதால் புதன் இரண்டு மாரகர்களாகிய சூரியனுக்கும் குருவுக்கும் இடையில் இவர்களுக்கு நெறுங்கி மாதுர்காரகனுகிய சந்திரனுடன் கூடி இருக்கின்ருர். புதன் துலாத்திற்குப் பன்னிரண்டிற்குடையவரானபடியால் மாரகருமாகின்ருர். ஆகையால் புதன் தன் தசையில் மாதாளவை மாரகஞ் செய்ய அதிகாரமுடையவராகின்ருர். ஜாதகருக்கு வயது ஷூ 33–0–0 முதல் ஷூ 34–0–0 முடியும் வகையிலும் புத தசையில் சந்திர புக்தி நடக்கின்றது. சந்திரன் புனர்பூசம் இரண்டிலும் சூரியன் புனர்பூசம் நான்கிலும் குரு மிருக சீர்ஷம் இரண்டிலும் இருப்பதால் சந்திரன் இரண்டு மாரகாதிபதிகளாகிய குருவிற்கும் சூரியனுக்கும் இடையில் இருப்பதுடன் சூரியனுக்கு மிகவும் நெறுங்கியஇடத்தில் இருக்கின்ருர். மேலும் இவர் தசாநாதராகிய புதனுடன் கூடி மாதுருகாரகனுகவிருக்கின்ருர். ஆகையால் 82-ஆவது ஜாதகத்தின் 24-ஆவது பாடலின் கீழ்ச் சொல்லியுள்ள வியாக்கியானம் பிரகாரம் சந்திரன் மாதுருகாரகனுன படியாலும், தன்னுடைய புக்தியில் மாதாவை மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகின்ருர்.

† ஜாதகர் மாரக விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷூ 62–0–0 முதல் 63–0–0 முடியும் வரையிலும் சுக்கிர தசையில் குரு புக்தி சனி புக்தி இவைகள் நடக்கின்றன. ஆனுல் தை மாதத்தில் சனி புக்தி தான் நடக்கின்றது. கடக லக்கினத்திற்குச் சுக்கிரன் சனி புதன் இவர்கள் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் மாரகாதிபதிகளாவார்கள். இந்திரஜித்தின் ஜாதகத்திற்குப் போல கடக லக்கினத்திற்குச் சுக்கிரன் பெரிய மாரகர். இவர் மாரகஸ்தானமாகிய இரண்டில் இருக்கின்ருர். சனி மாரகஸ்தானமாகிய எட்டிற்குடையவராகி மாரகஸ்தானமாகிய பதினென்றில் இருந்து கொண்டு லக்கினத்தைப் பார்க்கின்ருர். ஆகையால் ஜாதகருக்குச் சுக்கிர தசையில் சனி புக்தியில் மாரகம் நேரிட அமைப்பு இருக்கின்றது.

53. மாரகம் நேரு மென்ருேம் மறு ஜன்மம் அவ்வூர் தன்னில்
தீரனும் வைசியச் சேயாய்ச் ஜனித்துமே பெருமை பூண்டு
பாரிய செட்டுச் செய்வன் பகர்ந்தது தப்பாதாகும்.
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை புகன்றிட் டோமே.

53. மாரகம் உண்டாகும் என்று சொல்லுகிருேம். ஜாதகர் தன்னுடைய பின் ஜன்மத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த ஊரிலேயே வைசியகுலத்தில் ஆணுகப் பிறந்து மேன்மையை அடைந்து ஒரு பெரிய வியாபாரத்தைச் செய்வார். நாங்கள் சொல்லிய பலன்கள் தவறிப் போகாமல் நடக்கும். ஆறு மிக்கபெருமை பொருந்திய முகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! நாங்கள் பலன்களைச் சொல்லி விட்டோம்.

யோகம்.

54. இன்னவன் பொதுயோ கத்தை யியம்புவோம் வறுமை காணுன்
தந்தையி ஞஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
பந்தமாய்க் குடும்ப மொன்ருய்ப் பாவித்து நாற்ப தாண்டில்
தன்துணை பாகம் நான்காய்ச் சார்ந்திடு மென்று சொல்வோம்.

54. ஜாதகருடைய பொதுவான யோகத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் தரித்திரத்தையும் கஷ்டத்தையும் அடையமாட்டார். தன்னுடைய பிதுரார்ஜித சொத்துக்களை இவர் விருத்தியாக்குவார். இவருடைய குடும்பமானது பிரகாசமுடைய தாகவும் மேன்மையுடையதாகவும் ஒன்ருகவுமிருக்கும், பிறகு குடும்பம் தன்னுடைய சகோதரர்களுக்குள்ளே நான்கு பாகமாக நாற்பதாவது வயதில் பங்கிடப்படும் என்று சொல்லுகிறோம்.

55. துணைவரில் கடையோ னுக்குச் செப்புவோம் விசேஷ மாக
அணையவே அவர்கள் கண்டம் அறைகிறோ மிரண்டி லேதான்
பிணையிலா இரண்டு இல்லம் பெறுவனும் வேறோ ராஸ்தி
கனமுடன் வந்து சேரும் காதலி மேலுங் கேளே.

55. ஜாதகருடைய சகோதரர்களில் கடைசி சகோதரனுக்குப் பலனை விசேஷமாகச் சொல்லப்போகிறோம். இவர்களுடைய மாரகங்களைப் பற்றி இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம். ஒன்ருகவிராத இரண்டு வீடுகள் வந்து சேரும். இனுெரு சொத்தும் அதிகமாக வந்து நேரிடும். பார்வதியம்மையே ! இனனும் நாங்கள் சொல்வதைக் கேட்பீராக.

56. பிறந்திடுங் காலம் தன்னில் பொன்தசை தனிலி ருப்புச்
சிறந்திடு ஆண்டு ஆறும் திங்களு மாற தாகும்
உரைந்திடும் துணைவர் விருத்தி உயர்பூமி சேருமென்றோம்
நிறைந்திடும் தானி யங்கள் நிகழ்த்துவோம் விவரம் ரண்டில்.

56. ஜாதகர் பிறந்த காலத்தில் குரு மகா தசையில் இருப்பு மேன்மையான ஆறு வருஷங்களும் ஆறு மாதங்களும் ஆகும். இந்தக் காலத்தில் சகோதரர்கள் விருத்தியாவார்கள். விலையுயர்ந்த நிலங்கள் வந்து சேரும் என்று சொல்லுகிறோம். தானியங்கள் நிறைய வந்து சேரும். மற்றும் விவரங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம்.

ஜாதகம் 90

1. சந்திரன் மான[1] தாகச் சனிமேடம் புகரும்[2] வண்டி[3]
புந்தியு[4] மிரவி[5] சீயம்[6] பொன்[7]குஜன்[8] கேது நந்தி[9]
முந்திய கயிறு[10] தேளில்[11] முதயமும் வளைய லாக[12]
இந்தவாறு கிரகம் நின்றால் வியம்புவீர் பலனைத் தானே.

	சனி	அங்காரகன் குரு கேது	
	இராசி சக்கரம்		லக்கினம் சுக்கிரன்
சந்திரன்			சூரியன் புதன்
	ராகு		

உத்திராடம் 4-ஆம் பாதம், சூரிய தசை இரு 1-1-0.

1. சந்திரன் மகரத்திலும், சனி மேஷத்திலும், சுக்கிரன் கடகத்திலும், புதனும் சூரியனும் சிம்மத்திலும், குருவும் அங்காரகனும், கேதுவும் ரிஷபத்திலும், இராகு விருச்சிகத்திலும் ஜன்மலக்கினம் கடகமாகவும் இருந்து இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீராக என்று;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும்:—கடகத்தில் கேதுவும், கன்னியில் அங்காரகனும், துலாத்தில் சூரியனும், புதனும், சுக்கிரனும், சனியும், மகரத்தில் குருவும் ராகுவும், மீனத்தி சந்திரனும் ஆகும்.

2. அம்பிகை கேட் கும்போது அத்திரி சொல்லு கின்ருர்
அம்பிகை ஜனன மாகும் அவள்தந்தை யில்லம் சொல்வேன்
செம்மையாய்க் கீழ்மேல் வீதி தென்வாடை தெற்கில் காளி
துன்மையா யெதிர்வீ டில்லே தென்மேற்கில் அருகர் கோட்டம்.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது அத்திரிமகரிஷி சொல்லுகின்ருர். பெண் குழந்தை பிறக்கும். இவளுடைய தகப்பனுரின் வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றேன். அது செழுமையானதும் அழகானதுமான கிழக்கு மேற்குத் தெருவில் தென்னண்டை வாடை யில்இருக்கும். மேற்குத் திக்கில்

[1]. மகரம். [2]. சுக்கிரன். [3]. கடகம். [4]. புதன்
[5]. சூரியன். [6]. சிம்மம். [7]. குரு. [8]. அங்காரகன்.
[9]. ரிஷபம். [10]. இராகு. [11]. விருச்சிகம். [12]. கடகம்.

காளியம்மன் கோயில் இருக்கும். பிறந்த வீட்டிற்கு எதிரில் வீடில்லாமல் கெடுதியாகவிருக்கும். தென் மேற்குத் திக்கில் சமணர்களுடைய கோயில் இருக்கும்.

3. உத்தரம் கிரியு முண்டு உமையவ ளீசன் மீனங்
குத்தம மருகில் குண்டம் குணக்கினில் மஸ்தான் கோஷ்டம்
இத்தகை யடையா ளத்துள் இணங்கிய சிற்றூர் தன்னில்
சுத்தமாய்க் கங்கை சேயாய்ச் செப்புவோ மிந்த மாது.

3. வடக்குத் திக்கில் மலை இருக்கும். பார்வதியினுடைய ஈசனாகிய சிவபெருமானுடைய கோயில் வடக்குத் திக்கில் இருக்கும். அருகாமையில் குளம் இருக்கும். கிழக்குத் திக்கில் முஸ்லிம் மசூதி இருக்கும். இப்படிப் பட்ட அடையாளங்கள் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் சுத்தமான ஒரு வேளாள குலத்தில் ஒரு குழந்தையாக இந்த ஜாதகி பிறப்பாள் என்று சொல்லுகின்றோம்.

4. மாதுரு தந்தை யோகம் வரும்துணை புத்திர யோகம்
நீதியாய் வரனின் யோகம் நிகழ்த்துவோ முன்பின் ஜன்மம்
மாதிவள் யோக மெல்லாம் வரைகிறோம் இந்நூல் தன்னில்
ஆதியைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

4. ஜாதகியினுடைய தாயார் தகப்பனார் இவர்களுடைய யோகங்கள், கூடப் பிறந்தவர்கள். சந்ததிகள். இவர்களுடைய யோகங்கள், நியாயமாய்ப் புருஷனுடைய யோகம் ஆகிய இவைகளைச் சொல்லுகின்றோம். முன் ஜன்மம் பின் ஜன்மம் ஜாதகியினுடைய யோகம் ஆகிய இவைகளை எல்லாம் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம். ஆதிக் கடவுளாகிய சிவ பெருமானைப் பூசை செய்கின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

5. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சாந்தவான் மாஞ்சி வப்பன்
சிந்தையில் கவடு மில்லான் தீரமில்லாத நெஞ்சன்
நொந்திடும் பேரைக் காப்பன் நேமியில் கிருஷி செய்வன்
தன்தனமதிக மில்லான் தானிள மனத்தா னாகும்.

5. ஜாதகியின் தகப்பனாருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் சாந்தமான குணத்தை யுடையவர். மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒரு விதமான சிகப்பு நிறமுடைய தேகத்தையுடையவர். மனத்தில் வஞ்சனை கள்ளம் கபடம் இவைகள் இல்லாதவர். தைரியமில்லாத மனத்தை யுடையவர். நொந்து போனவர்களையும் கஷ்டங்களை அனுபவிப்பவர்களையும் காப்பாற்றுவார், பூமியில் விவசாயத் தொழிலைச் செய்வார். தன்னுடைய சுயார்ஜிதமான தனத்தை அதிகமாக உடையவரல்லா. இவர் இளகிய மனதையுடையவர். தயாளகுண முடையவராவார்.

6. பொறுமையும் கல்வி கொஞ்சம் பொய்யாது வழுத்தா நெஞ்சம்
உறைந்திடும் கார கங்கள் உதாசீனம் சொல்லா னாகும்
வறுமைக ளடையா னாகும் மாடுகள் விருத்தி யுள்ளான்
அறமதிலிச்சை யுள்ளான் அவன்முக வடுவு காணும்,

6. ஜாதகியின் தகப்பனார் பொறுமை யுள்ளவர். கொஞ்சமான வித்தை உடையவர். பொய்யைச் சொல்லாத மனத்தை உடையவர். இவருக்குக் காரக ரோகங்கள் உண்டு. இவர் தூஷணமானதும், வெறுக்கத்தக்கதுமான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டார். கால்நடைகள் விருத்தியையுடையவராவார். தருமம் செய்வதில் ஆசையுடையவர். இவருடைய முகத்தில் வடிவுகளும் அடையாளங்களும் இருக்கும்.

7. குருவுப தேசம் கொள்வன் குறையான மனத்தா னாகும்
திருகுகள் செய்யா னாகும் துணைவர்கள் ஆண்பா லொன்று
வரும்கன்னி ஒன்றே யாகும் வரைந்தன மிரண்டு தீர்க்கம்
உரைக்கிறோம் துணைவன் சேதி உத்தமி கேட்டிடாயே

7. ஜாதகியின் தகப்பனார் குருவிடத்தில் உபதேசத்தைப் பெற்றுக் கொள்வார். சங்கடமான, துன்பமுள்ள மனத்தையுடையவர், கபடமானவும் வஞ்சனையானவுமான காரியங்களைச் செய்யமாட்டார், இவருடைய சகோதரர்கள் ஆண் ஒன்றும் பெண் ஒன்றும் ஆகும், சொல்லப்பட்ட இவர்கள் இருவரும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார், சகோதரனுடைய விஷயங்களைச் சொல்லுகிறோம். பார்வதியம்மையே ! கேட்பீராக.

8. முன்கோபம் பின்பு சாந்தம் மூலச்சூடுடைய னாகும்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பான் தந்திர வாதி
அன்னவன் கிருஷி செய்வன் அவனில்ல அதிகா ரத்தின்
சொன்னசொல் லிரண்டு முள்ளான் துணைவனோ டொத்து வாழ்வன்.

8. ஜாதகியின் தகப்பனாருடைய சகோதரர் முன் கோபத்தை உடையவர். பின்னால் சாந்தத்தை அடையக் கூடியவர். இவர் மூலச் சூட்டை உடையவர். தான் சொல்லுகிற வார்த்தையே மேன்மையான தென்றும் உண்மையானதென்றும் சொல்லி வாதித்து ஜயிக்கக் கூடியவர், உபாயங்களையுடையவர். இவர் விவசாயத் தொழிலைச் செய்வார். இவர் தன்னுடைய வீட்டில் அதிகாரத்தைச் செலுத்தக் கூடியவர். இரண்டு விதமான சொற்களையும் சொல்லுவார், அஃதாவது உண்மையையும் பொய்யையும் சொல்லுவார். தன்னுடைய சகோதரனுடன் ஒத்திருந்து ஒன்றாய் வாழ்வார்.

9. மாநிறம் சமதே கத்தன் மனைவியு மொன்றே யாகும்
ஈனமாம் குணங்க ளில்லானி யம்புவோம் புத்திர பாவம்
ஊனமா முதலில் மூன்று உரைக்கிறோம் எழுவர் தோன்றும்
ஆனதில் லாண்பா லொன்று அம்பிகை யிருவர் தீர்க்கம்.

9. ஜாதகியின் தகப்பனாரின் சகோதரர் மாநிறமான தேகத்தையுடையவர். நடுத்தரமான தேகத்தையுடயவர். இவருக்கு ஒரே மனைவி தான் உண்டாகும். தாழ்ந்த குணங்கள் இல்லாதவர். இவருடைய புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். முதலில் மூன்று குழந்தைகள் நஷ்ட

மாகிவிடும். ஏழு குழந்தைகள் பிறப்பார்கள் என்று சொல்லுகிரேும். இவர்களில் ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் *குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள்.

10. மூவரும் தீர்க்க மெய்து முறங்கிடும் நான்கு என்றேும்
ஓவிய மனைவி தன்னுல் உயர்ந்திடும் செல்வ மென்றேும்
சேவலன் கொடியோன் பத்தி செய்தவனு மிவனே யம்மா
தாவிய பேரைக் காப்பன் சங்கரி மேலுங் கேளே.

10. இந்த மூன்று பேர்களும் நீடித்திருப்பார்கள். மற்ற நான்கு பேர்களும் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகிரேும். இவருக்குத் தன்னுடைய மனைவியால் செல்வம் விருத்தியாகும் என்று சொல்லுகிரேும். ஜாதகர் சேவல் கொடியை உடையவரான முருகப் பெருமானுடைய பக்தியை உடையவராவார். பார்வதியம்மையே! இவர் தன்னிடம் வந்து அடைந்தபேர்களைக் காப்பாற்றுவார். பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

11. இன்னமு மவர்கள் பூர்வ மியம்புயோம் விவரம் ரண்டில்
கன்னிகை துணைவி சேதி கழறுவோம் பின்பா கத்தில்
சொன்னஇக் குணத்தா னுக்குச் சுந்தரி யிரண்டாம் ஜன்மம்
அன்னவ ளுதிப்பா ளாகும் அறைகிறே மவள்கு ணத்தை.

11. அவர்களுடைய பூர்வ விஷயங்களைப்பற்றி இன்னமும் இரண்டாவது பாகத்தில் விவரமாகச் சொல்லுகிரேும். தகப்பனுரின் சகோதரியினுடைய விஷயங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றேம். இது வரையிலும் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகி இரண்டாவது கர்ப்பத்தில் பிறப்பவளாவாள். இவளுடைய குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிரேும்.

12. சிவந்திடும் மேனி யாவள் தீரமில் லாத நெஞ்சம்
தவசிகட் கன்ன மீவள் தானிள மனத்தா ளாகும்
நவனியில் பொய்கள் சொல்லாள் நற்புத்தி யூக சாலி
பவமுள யோக சாலி பால்பாக்கிய முடையா ளாகும்

12. ஜாதகி சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவளாவாள். தைரியமில்லாத மனத்தையுடையவள். தவம் செய்பவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாடு போடுவாள். இளகிய மனதையுடையவள். தயாளமான குணமுடையவள். பூமியில் பொய்யானவைகளைச் சொல்லமாட்டாள். நல்ல புத்தியையுடையவள். நுட்பமான அறிவையுடையவள். மேன்மையான யோகத்தையுடையவள், பால் பாக்கியம் உடையவளாவாள்.

13. அன்னம் போல்சாய லொக்கும் யாவர்க்கு நல்லோ ளாவள்
கன்னென மொழியே சொல்வள் கஞ்சமாம் ரேகை யுள்ளால்
தன்துணை முன்பின் காணுள் சாற்றுவோம் பின்பெண் மூன்று
சொன்னேனே மூன்றும் தீர்க்கம் சேர்ந்திடும் நான்கும் என்றேும்.

13. ஜாதகி அன்னப் பட்சியைப் போல அழகான ரூபமுள்ளவள். எல்லோருக்கும் நல்லவளாகவிருப்பாள். சர்க்கரையைப் போன்ற இனிமையான வார்த்தைகளையே சொல்லுவாள். தன்னுடைய உள்ளங்கையில் கஞ்சரேகை என்ற தாமரை ரேகையை யுடையவளாவாள். இவளுக்கு முன்னேயும் பின்னேயும் ஆண் சகோதரர்கள் கிடையா. இவளுக்கு இளைய சகோதரிகள் மூன்று பேர் உண்டு, இந்த மூன்று சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார்கள், நான்கு சகோதரங்கள் இறந்து போய்விடுவார்கள் என்று சொல்லுகிரேும்.

*** குறிப்பு ஆண் சகோதர விஷயம்.**—சூரியனுடன் மூன்றிற்குடைய புதன் கூடி இருப்பதால் ஜாதகிக்குப் பின் ஆண் சகோதரம் மணிகண்டகோளம் சகோதரகாண்டம் 6ஆவது பாடல் பிரகாரம் கிடையாது. மூத்த ஆண்சகோதர காரகராகிய குரு மூத்த சகோதர ஸ்தானமாகிய பதிஞேராம் பாவத்தில் பகையாக இருப்பதும், சகோதரகாரராகிய அங்காரகன் சகோதர ஸ்தானத்திலேயே இருப்பதும், பதினென்றில் கேது இருப்பதும், மூத்த ஆண் சகோதரங்களுக்கு அதிக தோஷத்தை உண்டு பண்ணும்.

14. இன்னவள் மணத்தின் கால மியம்புவோ மீரைஞ் சாண்டுள்
மன்னவ ளருகில் தெற்கில் மாதுரு துணையைச் சேர்வள்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுள்ளான் உணச்சல்
தன்முக வடிவு முள்ளான் தைரிய மில்லா னென்றேும். [நீட்சி

14. ஜாதகியினுடை விவாக காலத்தைச் சொல்லுகிரேும். இவளுடைய தாயாரின் சகோதரன் தெற்குத் திக்கில் சமீபத்தில் இருந்து இவளுக்குப் புருஷனைப் பத்து வயதிற்குள்ளே * வந்து நேர்டுவான். புருஷனுடைய குணுதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். அவர் அழகுள்ளவராக விருப்பார். நீண்டு, ஒல்லியாகவிருப்பார், முகத்தில் அழகுள்ளவர், தைரியமில்லாதவர், என்று சொல்லுகிரேும்.

குறிப்பு.—விவாக விஷயம் :—ஜாதகிக்கு வயது ஞூ 9-0-0 முதல் 10-0-0 முடியும் வரையிலும் சந்திரதசையில் சுக்கிரபுக்தி நடக்கின்றது. சுக்கிரன் லக்கின கேந்திரந்திலிருப்பதாலும், சந்திரன் ஏழாவது கேந்திரத்திலிருப்பதாலும், ஜாதகசிந்தாமணி 975 ஆவது பாடல் பிரகாரம் ஜாதகிக்கு பால்ய விவாகம் நடக்க அமைப்பு இருக்கின்றது. சந்திரன் பர்த்திருஸ்தானமாகிய ஏழாவது வீட்டில் இருப்பதால் ஜாதகபாரிஜாதம் பதினென்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் தன் தசையில் ஜாதகிக்கு விவாகம் செய்து வைக்க அமைப்பு உள்ளவராக இருக்கின்றர். இந்தச் சந்திரனை பத்தாவது பாவத்திலிருந்து ஏழிற்குடைய சனியும் மேலும், ஒன்பதிற்குடைய குருவும் பார்க்கின்றர்கள். மேற்படி சுலோகத்தில், ஏழிற்கும் பத்திற்கும், ஒன்பதிற்கு முடையவர்கள் ஆகிய இவர்களையும் பற்றிச் சொல்லி இருப்பதையும் கவனிக்கவும். சுக்கிரன் பர்த்திருகாரகனையும் நான்கிற்குடையவராகவும் இருந்து லக்கினத்தில் இருந்து சந்திரனைப் பார்ப்பதால் தன் புத்தியில் விவாகம் செய்து, வைக்க அமைப்புடைவராகின்றர்.

15. தேவதா பக்தி கொள்வன் சிறப்பான குடும்பி யாவன்
தாவியே பேரைக் காப்பன் தரணிக ளதிகம் சேர்ப்பன்
கோவலர் மெச்ச வாழ்வன் கோள்குற்றம் சொல்லா னாகும்
நிலையது தவறு னாகும் நற்சுக போஜனத்தான்.

15. ஜாதகியினுடைய புருஷன் தெய்வபக்தியுடையவரா யிருப்பார். மேன்மையான குடும்பஸ்தராக விருப்பார். தன்னிடம் வந்து அணுகிய பேர்களைக் காப்பாற்றுவார். நிலங்களை அதிகமாகச் சேர்த்து வைப்பார். அரசர்கள் இவரை மெச்சும்படியாக விருந்து வாழ்வார். பிறர் பேரில் குற்றங்களையும் கோள்களையும் சொல்லாதவராவார். நெறியும் அந்தஸ்தும் தவருதவராகவிருப்பார், நல்ல சுகமான சாப்பாட்டைச் சாப்பிடக் கூடியவராவார்.

16. அவன்துணை ஆண்பாலொன்று அழகிய கன்னி நான்கு
இவைகளும் தீர்க்க மென்றே மிடராகு மிரண்டு என்றேம்
பவமுள புத்திர பாவம் பகருவோம் காண ளாகும்
நவனியில் தோன்றி னாலும் நசித்திடு மென்று சொல்வோம்.

16. ஜாதகியின் புருஷனுடைய சகோதரர்களில் ஆண் ஒன்றும் அழகான நான்கு பெண்களும் ஆகும். இந்த ஐந்து சகோதரர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகிறேம், இரண்டு சகோதரர்கள் இறந்து போய்விடும் என்று சொல்லுகிறேம், மேன்மையான புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுகிறேம், இவளுக்குப் புத்திரர் கிடையாது. பூமியில் பிள்ளைகள் பிறந்தாலும் இறந்துவிடும் என்று சொல்லுகிறேம்.

17. ஏதுகா ரணத்தி னாலே யிவளுக்குச் சுதர்கள் தோஷம்
ஓதுவீர் முனியே நீர்தாம் உரகனு[1] மைந்தில் நிற்கத்
தீதுண்டு சுதர் களுக்குச் ஜயமுனி கூறு கின்ருர்
மாதவன் [2] குஜனு [3] மைந்தை மருவியே பார்த்த தாலே.

17. என்ன காரணத்தினுல் ஜாதகிக்குப் பிள்ளைகள் தோஷத்தை அடையும் என்பதை முனிவரே! நீரே சொல்லுவீராக. இராகு ஐந்தாவது பாவத்தில் இருப்பதால் பிள்ளைகளுக்குச் கெடுதி ஏற்படும். இவ்விதமாகச் சொல்ல, ஜயமுனிவர் மறுத்துச் சொல்லுகின்ருர். குருவும் அங் காரகனும் ஐந்தாவது பாவத்தைப் பார்த்திருப்பதால் ;

18. சுதர்களும் விருத்தி யென்றேம் சனிதச மத்தில் நிற்க
அதிபதி முன்செய் தோஷ வசத்தால் மதலை காணுள்
அதுவினை சொல்லு மென்ன அத்திரி சொல்லுகின்ருர்
மதிநுதல் பூர்வம் சொல்வேன் மாயூர மருகில் சிற்றூர் ;

18. பிள்ளைகள் பிறந்து விருத்தியாவார்கள் என்று சொல்லுகிறேம். சனி பத்தாவது பாவத்தில் இருப்பதால், ஜாதகி தான் முன் ஜன்மத்தில் செய்த பாபத்தின் தோஷத்தால் பிள்ளையை அடையமாட்

[1] இராகு [2] குரு [3] அங்காரகன்

டாள். அந்தத் தோஷத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, அத்திரி மகரிஷியானவர் சொல்லுகின்ருர். சந்திரனைப் போல அழகான நெற்றியையுடைய ஜாதகியினுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். இவள் மாயவரத்துக்குச் சமீபத்தில் ஒரு சிறிய கிராமத்தில் ;

19. உதித்தனள் வைசியச் சேயாய் உலகிற்கு நல்லோ ளாகி
பதியினில் திருவு முண்டாய்ப் பாலரு முடையளாகி
அதிபதி வாழுங் நாளில் வந்ததூம் தன்னைச் சொல்வேன்
அதிதியும் ஓர்நாள் தன்னில் அந்தியில் அன்னம் கேட்க ;

19. வைசியப் பெண்ணுகப் பிறந்தாள். ஜனங்களுக்கு நல்ல வளாகிப் புருஷனும் பிள்ளைகளும் செல்வமும் அழகும் உடையவளாகி இவள் வாழுகின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்த வினையைப் பாவத்தைச் சொல்லுகிறேன். ஒரு பரதேசி ஒரு நாள் சாயந்திரம் அந்திக் காலத்தில் இவளிடம் வந்து சாதம் கொடு என்று கேட்க ;

20. முகவெறி கொண்டு இன்னுள் முடுக்கினுள் அதிதி தம்மை
இகபர னன்பு பூண்டோ னிளைப்புகள் தீர்ப்பாய்த் தாயே
பகையான வார்த்தை வேண்டாம் பகருவா யன்ன மென்னத்
தகைமையாய் வார்த்தை யின்றிச் சலிப்பாக உரைத்தாள் மாது.

20. ஜாதகி தன்னுடைய முகத்தில் கோபத்தைக் காண்பித்து வெறி கொண்டு பரதேசியின் மேல் தன்னுடைய கோபத்தால் மூடதனமாக முடுக்கினுள். பரலோகத்திலுள்ள கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உள்ளவராகிய பரதேசியின் களைப்பைத் தீர்க்கக் கடவாய். அம்மையே! என்று ஜாதகியைப் பார்த்துச் சொல்லிவிட்டு, கோபமான வார்த்தையை இனிச் சொல்லவேண்டாம், சாப்பாடு கொடுங்கள் என்று பரதேசி கேட்கவே, இவள் சாந்தமானதும் தகுதியானதுமான வார்த்தைகளைச் சொல்லாமல் வெறுப்பாகவும் கோபமாகவும் சலித்துக்கொண்டு பதில் சொன்னுள்.

21. பரமனும் மனவெ றுப்பால் பகருவார் சாபம் தானும்
வரும்ஜன்மம் மதலை யின்றி வரும்துணை ஆணில் லாமல்
குறைமன தாக வாழ்வாய்க் கூறிவே றில்லம் சென்ருர்
உறைந்தது அந்தத் தோஷம் உரைக்கிறே மின்னு மொன்று.

21. பெரியவரான அந்தப் பரதேசி மனத்தில் துன்பத்தை அடைந்து கோபத்தால் இவளுக்கு ஒரு சாபத்தைக் கொடுக்கின்ருர்.

" நீ உன்னுடைய அடுத்த ஜன்மத்தில் உனக்கு ஆண் குழந்தையும் ஆண் சகோதரனும் இல்லாமல் மனத்தில் கஷ்டத்துடன் இருந்து வாழக் கடவாய் " என்று சொல்லிவிட்டு அந்தப் பரதேசி இன்னெரு வீட்டிற்குப் போய்விட்டார். அந்தச் சாபதோஷம் இவளை வந்து அணுகிற்று, இதுவுமல்லாமல் இன்னெரு தோஷத்தைச் சொல்லுகிறேம்.

22. மனைதனில் வெகுநாளாக மருவிற்று நாக மொன்று
விளையாக மகுடத் தாலே மேவிற்று வெளியில் ஓர்நாள்
கணையினல் தன்னை வாட்டி காலன்தன் பதிக்குச் செல்லப்
பிணையாக அதுஓர் தோஷம் புக்கிற்று இவளுக் கேதான்

22. ஜாதகியினுடைய வீட்டில் ஒரு நாகப் பாம்பு வெகு காலமாக வாசஞ் செய்து கொண்டிருந்தது. அது மோடி வாத்தியத்தினலே வெளியே ஒரு நாள் வந்தது. அதை இவள் தடியால் அடித்துக் கொன்று எமபட்டிணத்திற்கு அனுப்பிவிடவே அந்தச் செய்கை ஒரு தோஷமாக இவளை வந்து அணுகிற்று.

23. இன்னமும் பலவாய்த் தோஷ மிசைந்தது இவளுக் கேதான்
கன்னிகை அந்தி யத்தில் காளைக ளில்லாதாகித்
துன்னிய காலன் பக்கல் சேர்ந்துபின் மறையோன் லக்கம்
தன்னிலே வரையப் பட்டு செனித்தவ ளிவளே யென்றோம்.

23. ஜாதகிக்கு இன்னம் பலவிதமாகத் தோஷங்கள் வந்து சம்பவித்தன. இவள் தன்னுடைய கடைசிக்காலத்தில் ஆண் குழந்தை கள் இல்லாதவளாகி இறந்து எமனிடத்திற்குப் போய்ச் சேர்ந்து பிறகு பிரம தேவனல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இவள் வந்து பிறந்திருக்கின்ருள் எனறு சொல்லுகின்றோம்.

24. இதுவன்ற வரனல் குற்ற மெய்திற்றுச் சிலவே யென்றோம்
அதுவினை சொல்லு மென்ன அவனுடைப் பூர்வம் கேளாய்
மதிசடை அணிந்த ஈசர் வாழ்புலி யூரிலே தான்
சதியிலா வன்னிய வமிசம் ஜனித்தன னிவனே யென்றோம்.

24. ஜாதகியி னுடைய தோஷங்களு மல்லாமல் இவளுடைய புருஷனும் சில தோஷங்கள் ஏற்பட்டன வென்று சொல்லுகிறோம். அந்த விஷயத்தைச் சொல்லுவீரென்று கேட்கவ, அவருடைய பூர்வ ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். கேட்பீராக. தன்னுடைய ஜடை யில் சந்திரனை அணிந்து கொண்டிருக்கின்ற சிவபெருமான் வாழ்கின்ற புலியூரில் குற்றமில்லாத வன்னிய குலத்தில் இவர் பிறந்தார் என்று சொல்லுகிறோம்.

25. சுகமுள குடும்பி யாகிச் சுந்தரன் வாழுந் நாளில்
பகைவந்த காரணம்கேள் பஞ்சையாய்ப் பெண்ணும் ஓர்நாள்
மகவுசோ றிவளைக் கேழ்க விரட்டினன் மாதைத் தானும்
தகவிலா வார்த்தை சொன்னய்ச் சுதர்தோஷ மாக வாழ்வாய்.

25. ஜாதகினுடைய புருஷன் முன் ஜன்மத்தில் சௌக்கி மான குடும்பஸ்தராகவிருந்து வாழுகின்ற காலத்தில் விரோதம் கெடுதி இவைகள் வந்து சம்பவித்த காரணத்தைக் கேட்பீராக. ஒரு நாள் ஓர் ஏழை ஸ்திரீ இவரைத் தன்னுடைய குழந்தைக்காகச் சாதம் கேட்டபோது

இவர் அவளைப் பயப்படுத்தித் துரத்தி விட்டார். "நீ தகுதியற்ற வார்த்தை களைச் சொன்னய். ஆகையால் உனக்கு ஆண் குழந்தைகள் தோஷத்தை அடைந்து நீ வாழக்கடவாய்" என்று ;

26. சொல்லியே சென்றுளென்றோம் சேர்ந்தது அதுஓர் தோஷம்
இல்லமும் நாகம் தன்னை யெமபுரிக் கவனும் சேர்த்தான்
புல்கிற்று அதுஓர் தோஷம் புனிதனு மந்தி யத்தில்
நில்லாமல் சுதர்கள் யாவும் நேர்ந்தனன் காலன் பக்கல்.

26. சொல்லிவிட்டு அந்த ஸ்திரீ போய்விட்டாளாம் என்று சொல்லுகிறோம். அந்தத் தோஷமும் இவரை வந்து அணுகியது. மேலும் இவர் தன்னுடைய வீட்டில் வாசஞ் செய்து கொண்டிருந்த ஒரு நாகப் பாம்பைக் கொன்று எமபட்டணத்திற்கு அனுப்பிவிட்டார். அதனலே ஒரு தோஷம் ஏற்பட்டது. அதனல் இவருக்குத் தன்னுடைய கடைசிக் காலத்தில் எல்லா பிள்ளைகளும் உயிருடன் நிலைத்திராமல் இறந்து இவரும் இறந்து எமனிடம் போய்ச் சேர்ந்து விட்டார்.

27. கஞ்சனல் வரையப் பட்டு கங்கையின் குலமு தித்தான்
தஞ்சமாய் இச்சென் மத்தில் சந்ததி தோஷ மெய்தும்
மிஞ்சன தோஷம் தீர விளம்புவோம் சாந்தி தானும்
கொஞ்சிய மனைவி யோடு குமாரனு மருணைக் கேகி ;

27. ஜாதகியின் புருஷன் பின்னல் பிரமதேவனல் பிரம லிபி யுடன் எழுதப்பட்டு வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்திருக்கின்ருர். ஆகையால் இந்த ஜன்மத்தில் குழந்தைகளுக்குத் தோஷ முண்டாகும். இந்தத் தோஷங்கள் நிவிர்த்தியாவதற்குச் சாந்தி களைச் சொல்லுகிறோம். இவர் ஆசையுள்ள மனைவியுடன் அருணை என்று சொல்லப்பட்ட திருவண்ணமலைக்குப் போய் ;

28. அங்குள தீர்த்தம் தோய்ந்து அரனுக்கு அர்ச்சித் தேத்திச்
சங்கர னடியாருக்குச் சாஸ்திர மைவருக்கு
மங்கையு மன்ன மீந்து வளமுள நகரம் சென்று
துங்கமாம் கணேச னுக்கும் திருப்பணி தீபம் வைத்து ;

28. அவ்விடத்திலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்து தொழுது சிவபெருமானுடைய அடி யார்களாகிய ஐந்து பேருக்கு அஃதாவது பரதேசிகளுக்குச் சாஸ்திர ரீதியாய் இவருடைய மனைவி சாப்பாடு போட்டுச் செழிப்பான பட்டணத்திற்கு போய் மேன்மையான சிறந்த விநாயகருடைய கோயிலுக்குப் போய் கோவில் வேலைகளைச் செய்து அங்கே விளக்கு ஏற்றி வைத்து ;

29. வெள்ளியால் நாகம் செய்து வித்தகி பூசை செய்யக்
கள்ளங்கள் நிவிர்த்தி யாகிக் காளைகள் விருத்தி யாகும்
உள்ளந்தை உரைத்தே னம்மா உண்மையாய்ச் செய்வானுகில்
தள்ளொணு ஆண்பா லொன்றும் சத்திய மிரண்டும் தீர்க்கம்.

29. வெள்ளியால் ஒரு நாகப்பதுமை செய்து அதை ஜாதகி பூஜை செய்து வரவே தோஷங்களும் சாபங்களும் விலகி ஆண் குழந்தைகள் பிறந்து விருத்தியடையும். உள்ளதை உள்ளபடியே சொன்னேன். பார்வதியம்மையே! இவர்கள் நான் சொன்ன பிரகாரம் உண்மையாகவும் மனப் பூர்த்தியாகவும் செய்வாராகில் நிவிர்த்தி செய்யக்கூடாத, அஃதாவது சிறந்த ஓர் ஆண் குழந்தையும், இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள்.

30. வரனுடை பின்ஜன்மத்தை வரைகிறே மவ்வூர் தன்னில்
திருமகள் விலாசம் பெற்ற செட்டியின் குலமு தித்துப்
பெருமையாய்ச் செட்டுச் செய்து புண்ணியன் வாழ்வா னாகும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

30. ஜாதகியின் புருஷனுடைய மறு பிறப்பைப் பற்றிச் சொல்லுகிறோம். அந்த ஊரிலேயே லக்ஷ்மி வாசஞ் செய்யும்படியான ஒரு செட்டியாருடைய குலத்தில் இவர் ஆண் குழந்தையாகப் பிறந்து மேன்மையாக வியாபாரஞ் செய்து புண்ணியசாலியாக விருந்து வாழ்வார். அருமையான வேதங்களின் முடிவில் விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

31. மாதுரு குணத்தைச் சொல்வேன் மறுமமில்லா தாளாகும்
நீதிலாள் நற்குணத்தாள் சிவந்திடு மேனியாவள்
பாதக மில்லாதாள் பஞ்சை மேலிரக்க மாவள்
சூதிலாள் பொறுமைசாலி துணைகள் முன் காணளாகும்

31. ஜாதகியின் தாயாருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் இரகசியத்தை உடையவளல்லள். கெடுதியைச் செய்யாதவள். நல்ல குணங்களை உடையவள். சிவப்பு நிறமான தேகத்தை உடையவள். கெடுதியான மனத்தை உடையவளல்லள். ஏழைகளின்மேல் இரக்கமும் கிருபையும் உடையவள். கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாதவள். பொறுமையான குணத்தையுடையவள். இவளுக்கு மூத்தச் சகோதரர்கள் கிடையாது.

32. அயல்குற்றம் சொல்லா ளாகும் அன்னம்போல் சாய லுள்ளாள்
நயமுள வார்த்தை சொல்வள் நாயகன் மனம்போல் வாழ்வள்
கயவரைச் சேரா ளாகும் கனத்தபுத் திகளு முள்ளாள்
தயையுட னன்ன மீவள் தன்துணை பின்னேழாகும்.

32. ஜாதகியின் தாயார் பிறர்மேல் குற்றமான விஷயங்களைச் சொல்லாதவளாக விருப்பாள். அன்னப் பட்சியைப் போன்ற அழகான ரூபத்தை உடையவளாவாள். இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தாப்போல ஒற்றுமையாக விருந்து வாழ்வாள். கீழ் மக்களுடன் சேரமாட்டாள். மேன்மையான புத்தியை உடையவள். கிருபையுடனும், ஆசையுடனும் சாதத்தைக் கொடுப்பவளாவாள். இவளுக்கு இளைய சகோதரங்கள் ஏழுபேர் ஆகும்.

33. அவைகளில் சிலவே சேதம் அவள் தாயின் குடும்ப மேன்மை
அதிபதி பூர்வம் சொல்வேன் னருணையின் கீழ்ப்பாலாக
நதிகரை அருகில் சிற்றூர் நல்மினுள் மறைக் குலத்தில்
பதியினில் திருவு முண்டாய்ப் பாலர்க ளதிக மாகி;

33. இந்த ஏழு சகோதரர்களில் சிலர் இறந்து விடுவார்கள். ஜாதகியின் தாயாரின் தாயாருடைய குடும்பமானது மேன்மையுடையதாகும். ஜாதகியின் தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். அருணை என்று சொல்லப்பட்ட திருவண்ணாமலை ஸ்தலத்திற்குக் கிழக்குத் திக்கில் ஒரு நதியின் கரையிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிராமணர் குலத்தில் இவள் பிறந்தாள். இவள் புருஷனும், வீட்டில் செல்வமும், அதிகமான குழந்தைகளும் உடையவளாகி;

34. சுகமுடன் வாழுந் நாளில் செய்தவூழ் தன்னைச் சொல்வேன்
தகமையாய் வேதத் தோரை தான் வணங்காமல் நின்றாள்
அகமதில் கருவம் கொண்டு அரன்பணி செய்யா நின்றாள்
இகபரன் பக்தியோர்க்கு இடைஞ்சல்க ளனந்தம் செய்தாள்.

34. சுகத்துடன் வாழுகின்ற காலத்தில் இவள் செய்த பாவத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் ஒழுங்காக வேதங்களை ஓதுகின்ற பிராமணர்களை வணங்காமல் இருந்தாள். மனதில் கர்வ முண்டானவளாகிச் சிவபெருமானுக்கு வேலைகளைச் செய்யாமலும், அவரைத் தொழாமலும் இருந்து விட்டாள். சிவபெருமான்பேரில் பக்தியுள்ள தொண்டர்களுக்குக் கெடுதிகளையும் இடையூறுகளையும் அநேகமாகச் செய்தாள்.

35. அந்திம காலம் தன்னில் அதிகமாய் வாயு நோயால்
அந்தகன் பக்கல் சென்று அயனுமே வரையப் பட்டு
வந்தவ ளிவளே யென்றோம் மாதுவும் கேட்க லுற்றாள்
முந்திய ஜன்மம் தன்னில் முதல்குல முதித்தா ளென்றீர்.

35. ஜாதகியின் தாயார், தன்னுடைய கடைசிக் காலத்தில் ஒரு பெரிய வாயு ரோகத்தால் இறந்து, எமனிடத்திற்குப் போய்ப் பிறகு பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து இவள் பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகிறோம். அதன்பேரில் பார்வதியம்மையார் கேட்கின்றார். இவள் முன் ஜன்மத்தில் முதல் குலமாகிய பிராமணர் குலத்தில் பிறந்தாள் என்று சொன்னீரே!

36. இந்ததோர் ஜன்மம் தன்னி லிக்குல முதிப்ப தென்ன
முந்திய ஜன்மம் தன்னில் மூர்க்கமாய் மனத்தா ளாகிச்
சந்ததம் கடவுள் பக்திச் சான்றோர்கள் இச்சை யின்றி
வந்ததால் கங்கை சேயாய் வரைந்தன மென்று சொன்னோம்.

36. அப்படி யிருந்தும் இவள் இந்த ஜன்மத்தில் இந்த வேளாளர் குலத்தில் பிறக்க வேண்டிய காரணம் என்ன என்பதைச் சொல்லுவீராக. இவள் முன் ஜன்மத்தில் பிடிவாதமானதும் அறிவில்லாமலுமான மூடத்தன

மான குணத்தையும் உடையவளாகி எப்போதும் கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உடைய பெரியோர்களிடத்திலும் நல்ல குணங்களையுடைய அறிஞர்களிடத்திலும் ஆசையும் அன்பும் இல்லாமல் இருந்து வந்ததால் வேளாளர் வம்சத்தில் குழந்தையாய்ப் போய்ப் பிறப்பாள் என்று சொன்னோம்.

37. மறுஜனமம் பூமி தன்னில் மறைக் குல முதிப்பா ளாகும்
பெருமையாய்க் குடும்பி யாகிப் புத்திர ரதிக முண்டாய்
இருவினை யில்லாளாகி யிவளுமே வாழ்வா ளாகும்
பெருவயி றோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

37. ஜாதகியின் தாயார் தன்னுடைய பின்ஜன்மத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பவளாவாள். மேன்மையான குடும்பஸ்தையாகியும் புத்திரர்களை அதிகமாக உடையவளாகியும் இரண்டு வினைகளாகிய புண்ணியமும் பாவமும் இல்லாதவளாகியும் மறுஜன்மத்தில் இவள் வாழ்பவளாவாள். பெரிய வயிற்றை உடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

38. தந்தையின் பூர்வம் சொல்வேன் ஜம்புகேச்வரத்தி லேதான்
வந்தனன் சதுர்த்த ஜாதி வளமுள தனவா னுக்கு
முந்திய கடவுள் பக்தி முயற்சியைத் தலங்கள் சென்று
நொந்தவர்க் கன்ன மீந்து நேமியில் நல்லோ னுகி ;

38. ஜாதகியின் தகப்பனுருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் ஜம்புகேச்வரம் என்ற ஸ்தலத்தில் நான்காவது ஜாதியாகிய சூத்திர ஜாதியில் ஒரு செழிப்பான பணக்காரனுக்கு ஆண் குழந்தையாய்ப்பிறந்தார். முதற் கடவுளாகிய சிவபெருமான் மேல் பக்தியும் அன்பும் பூண்டு அவருக்குத் தொண்டுகளைச் செய்து ஸ்தலங்களுக்குப்போய் ஏழைகளுக்கும் நொந்துபோய்க் கஷ்டப்படுகின்றவர்களுக்கும் சாப்பாடு போட்டுப் பூமியில் இவர் நல்லவராக இருந்து ;

39. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனல் வரையப் பட்டுச்
சீலமாம் கங்கை சேயாய் ஜனித்தவ னிவனே யென்றோம்
சாலவே மனைவி யாலே சார்ந்திடும் யோகம் தானும்
கோலமாய்ப் பின்ஜன் மத்தைக் கூறுவோம் தாயே கேளும்.

39. இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிறகு பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு நல்லொழுக்கமுள்ள ஒரு வேளாளனுக இவர் பிறந்தார் என்று சொல்லுகிறோம். இவருக்குத் தன்னுடைய மனைவியால் யோகம் உண்டாகும். இவருடைய பின்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். பரர்வதியம்மையே ! கேட்பீராக.

40. கம்பையில் பிரம்ம சேயாய்க் கடவுளர் பூசை பூண்பன்
அம்பிகை கேட்க லுற்றுள் அவனுமிச் சென்மந் தன்னில்
நன்மைகள் செய்த தென்ன நவிலுவீர் முனியே நீர்தாம்
இம்மையில் நல்லோ னுயு மிளமனதாக வும்தான் ;

40. ஜாதகியின் தகப்பனுர் கம்பை என்று சொல்லப்பட்ட காஞ்சீபுரத்திற்குக் அருகிலுள்ள ஓர் ஆற்றின் கரையோரத்தில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து கடவுளுக்குப் பூஜை செய்வர். இதன் மேல் பார்வதியம்மையார் கேட்கின்றுர். இவர் இந்தப் பிறப்பில் என்ன நன்மைகளைச் செய்தார் என்பதை, முனிவரே ! நீரே சொல்லுவீராக. இவர் இந்த ஜன்மத்தில் நல்லவராகவும், தயாளமான மனத்தை உடையவராகவும்.

41. சூதிலா மனத்தா னுயும் துருசிலா வார்த்தை யாயும்
மேதினில் வாழ்வ தாலே மேவுவான் மறையோ னுக
ஒதுவேன் முப்பத் தாறில் உயர்கும்ப மாதம் தன்னில்
மாதவர் பதத்தைச் சேர்வன் மலையிறை மகளே கேளாய்.

(பாக்கி செய்யுட்கள் ஓலை எட்டில் காணப்பட வில்லை).

41. கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாத மனத்தை உடையவராயும் குற்றமில்லாத வார்த்தைகளை உபயோகிப்பவராயும் இருந்து பூமியில் வாழ்ந்து வந்ததாலே பிராமணராகப் பிறப்பார். இவர் ஜாதகிக்கு முப்பத்தாறுவது வயதில் † மேன்மையான மாசி மாதத்தில் கடவுளுடைய பதவியை அடைவார். இமயமலையின் அரசனுகிய ப்ர்வதராஜனுடைய புத்திரியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு.—இதன் தொடர்ச்சியாயுள்ள ஓலை எடுகள் கிடைக்கவில்லை. மேலும் ஜனன காலத்திய தசை இருப்பு ஜனன லக்கின காலத்திலிருந்து ஊகித்துத் தோராயமாக ஷ 1-1-0 என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது.

† பிதுர் மாரகம்.—ஜாதகிக்கு வயது ஷ 35-0-0 முதல் ஷ 36-0-0 முடியும் வரையிலும் இராகு தசையில் சந்திரபுக்தியும் அங்காரக புக்தியும் நடக்கின்றன. ஆனல் மாசிமாதத்தில் ராகுதசையில் அங்காரக புக்தி நடக்கின்றது. பிதுர் லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மீனம் ஆகும். மீன லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகளாகின்றுர்கள். இராகு அங்காரகனுடைய வீட்டில் இருக்கின்றுர். ஆகையால் இவர் ஜாதக சந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் அங்காரகனுடைய பலனைக் கொடுக்க வேண்டும். அங்காரகன் லக்கினுதிபதியாகிய குருவுடன் கூடி மாரகஸ்தானமாகிய மூன்றுவது வீட்டில் இருக்கின்றுர். ஆகையால் ஜாதகபாரிஜாதம் பதினுன்காவது அத்தியாயம் அறுபதாவது சுலோகத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ள துய்யகோளம் எட்டாவது பாவம் இருபதாவது பாடல் பிரகாரம் அங்காரகன் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அதிகாரம் உடையவராகின்றுர். ஆகையால் இவருடைய பலனைக் கொடுக்க வேண்டிய ராகுவும் தன் தசையில் பிதாவை மாரகஞ் செய்ய அதிகாரம் பெற்றவராகின்றுர். ஆகையால் இராகு தசையில் அங்காரக புக்தியில் பிதாவுக்கு மாரகம் நேரிட அமைப்பு இருக்கின்றது.

ஜாதகம் 91

1. [1]மதிபுதன் நண்டில்[2] சனிதுலாம்
வெள்ளி[3]மாட் டினி[4]லிரவியும்[5] விஜை[6]
நதிகுரு கேது சாடியில்[7] ராகு
நிலமகன்[8] அரியினில்[9] நின்று
பதியது கடகம்பலன் யெவ்வாறு புகல்வீர்
பகருவோ மாண்சு தராகும்
அதிபனு மில்லம் வடக்கு தென்வீதி
வாசலு குடகு நோக்காமே.

		சுக்கிரன்	சூரியன்
குரு கேது	இராசி சக்கரம்		லக்கினம் சந்திரன் புதன்
			அங்காரகன் ராகு
		சனி	

பூசம் 1-ஆம் பாதம், சனிதசை இரு 17-0-0

1. சந்திரனும் புதனும் கடகத்திலும், சனி துலாத்திலும், சுக்கிரன் ரிஷபத்திலும், சூரியன் மிதுனத்திலும், குருவும் கேதுவும் கும்பத்திலும், ராகுவும் அங்காரகனும் சிம்மத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் கடகமானால் பலா பலன்களை எவ்விதமாகச் சொல்லுவீர் என்று கேட்க, பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையாகும் என்று சொல்லுகிறோம். ஜாதகருடைய வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேற்குத் திக்கைப்பார்த்த தெருவாயில் உடைய தாகும்.

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடைய தாகும் :—மேஷத்தில் சனியும், ரிஷபத்தில் கேதுவும், சிம்மத்தில் சந்திரனும் அங்காரகனும் சுக்கிரனும், துலாத்தில் புதனும், விருச்சிகத்தில் ராகுவும், கும்பத்தில் குருவும், மீனத்தில் சூரியனும் ஆகும். குருவும் சனியும் வக்கிரமாக விருக்கின்றார்கள்.

[1] சந்திரன் [2] கடகம் [3] சுக்கிரன் [4] ரிஷபம்
[5] சூரியன் [6] மிதுனம் [7] கும்பம் [8] அங்காரகன்
[9] சிம்மம்

2. நோக்கிடு மருகில் சந்துமே யுண்டாம்
நிமலிமாகாளியு மீனம்
ஏற்கவோ மாயோன் மேற்கினில் தோன்று
மிடிபடும் அருகரும் வாயும்
ஆர்க்கவே சிறுவூர் அற்பமா மில்லம்
அறைந்தனம் தாய்தந்தை யோகம்
தாக்கியே யோகம் முன்பின் ஜன் மங்கள்
சாற்றுவோம் விவரமே யாங்கள்.

2. ஜாதகர் பிறந்த வீட்டிற்குச் சமீபத்தில் ஒரு சந்து இருக்கும். பெரிய காளியம்மன் கோயில் வடகிழக்குத் திக்கிலும், ஏற்கனவே மகாவிஷ்ணுவின் கோயில் மேற்கிலும் இருக்கும், இடிந்துபோன சமணருடைய கோயில் வடமேற்குத் திக்கில் இருக்கும். ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தவீடு ஒரு மிகவும் சிறியதானதும், விலை மதிப்பில்லாததுமான வீடாக விருக்கும் என்று சொல்லுகிறோம். ஜாதகருடைய தாயார் தகப்பனர் இவர்களுடைய யோகங்களைப்பற்றியும் இவருடைய யோகங்களைப்பற்றியும் முன் ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றியும் விவரமாக நாங்கள் சொல்லுகிறோம்.

3. மாய்ந்திடும் தந்தை வர்க்கமே யென்றோம்
மன்னனும் தனிபனுய் வாழ்வன்
சார்ந்திடும் தன்னோ டுற்றவர் முன்னோர்
ஜனித்தவன் தனக்குப்பின் காணுன்
ஏந்திடும் தந்தை சேதிகள் பிறர்க்கு
இடுவனு மிளமன முண்டு
ஆயந்திடும் வித்தையில் லாதவனுகம்
அதிகமா மிருநிறம் உணச்சல்.

3. ஜாதகருடைய தகப்பனருடைய வர்க்கத்தார்கள் இறந்துவிடுவார்கள் என்று சொல்லுகிறோம். ஜாதகர் தனியாக விருந்து வாழ்வார். இவருக்கு மூத்த சகோதரர்களும் இளைய சகோதரர்களும் கிடையா. இவருடைய தகப்பனரின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் பிறருக்குக் கொடுக்குந் தன்மையுடையவர். இளகிய மனத்தை உடையவர். தீர்க்கமாக ஆராய்ச்சி செய்யும் படிப்பு இல்லாதவர், நுட்பமான புத்தி அதிகமாக உடையவர். இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாதநிறமான தேகத்தை யுடையவர், ஒல்லியான தேகத்தை உடையவர்.

4. சல்லிய மில்லான் தந்தையார்ச் சிதத்தைச்
சார்ந்திடான் தக்ஷிணம் வாழ்வன்
இல்லறம் செய்யான் இருஷியாம் தொழிலே
எப்போதும் சஞ்சல புத்தி
அல்லல்க ளதிகம் அருகர்தம் பத்தி
யாவர்க்கு நல்ல வனுவன்
மல்லினில் செல்லான் வார்த்தையும் பிசகான்
மறுமமு முடையவ னுமே.

4. ஜாதகருடைய தகப்பனார் கடன் இல்லாதவர். இவர் பிதுரார்ஜித சொத்தை அடைய மாட்டார். தெற்குத் திக்கில் குடியிருப்பார். தருமங்களை அடையமாட்டார். விவசாயத் தொழிலைச் செய்வார். எப்போதும் இவருக்குச் சங்கடமான புத்தியே இருக்கும். தொந்திரவுகள் அதிகமாக விருக்கும். சமண தெய்வத்தின்மேல் பக்தியுடையவர். எல்லோருக்கும் நல்லவராக விருப்பார். சண்டைக்குப் போக மாட்டார். தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறி நடந்து கொள்ள மாட்டார். இரகசியத்தை மனதிலேயே உடையவராவார்.

வேறு

5. ஆமே யிந்தப் பாலன்குணம் அறையக் கேளாய் இருநிறத்தன்
தீமை ஒருவர்க் கெண்ணு தான் சிறப்பாய்க் குடும்ப மில்லா தான்
பூமி தன்னால் ஜீவிப்பன் பொருளு மில்லான் சல்லிய வான்
தாமே வேறு இல்லம்வாழ் சரச வார்த்தை தரித்திர வான்.

5. ஜாதகருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறோம். கேட்பீராக. இவர் இரண்டு நிறங்கள் கலந்த மாநிறமான நிறத்தை உடைய தேகத்தை உடையவராவார். கெடுதியை ஒருவருக்குஞ் செய்ய நினைக்க மாட்டார். மேன்மையான குடும்பத்தை உடையவரல்லர். நிலங்களைப் பயிரிட்டு ஜீவனஞ் செய்வார். சொத்தில்லாதவர். கடன்படுவார். தான் வேறொரு வீட்டில் வாழ்வார். இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவார். தரித்திரத்தை உடையவராவார்.

6. வானே உலகில் சஞ்சரிப் பன் மனைவி மைந்தர் தான்கா ணன்
ஈனமி லாதான் எதிரி யிலானி யிருக்கும் குடும்பம் கோள்புகல்வன்
மானேர் விழியார் மோக முளன் மரும நூலைத் தானறி யான்
தேனே கல்வி யற்ப முறும் சேரும் காரக வாயு குணம்.

6. ஜாதகர் ஊர் ஊராய்த் திரிந்து கொண்டிருப்பார். இவருக்கு மனைவியும் குழந்தைகளும்கூட இருக்கமாட்டார்கள், அல்லது கிடையா. இவருக்குப் பந்துக்கள் கிடையா. சத்துரு கிடையாது. குடும்பம் கஷ்டத்தை அநுபவிக்கத்தக்கதாகும்.† இவர் கோள் சொல்லமாட்டார். மானைப்போன்ற கண்களை யுடைய ஸ்திரீகளின்பேரில் காம ஆசையை உடையவர். மர்ம சாஸ்திரத்தையும் காம நூலையும் அறியாதவராவார். கொஞ்சமான படிப்பை உடையவர். காரக நோய் இவரை வந்து அணுகும். இவருக்குத் தேகம் வாயுகுண முள்ளதாகும்.

* குறிப்பு.—ஏழிற்கும் எட்டிற்கும் உடையவரான சனி லக்கினத்தையும் சந்திரனையும் பார்ப்பதாலும், மூன்றிற்கும் பன்னிரண்டிற்கும் உடையவரான புதன் லக்கினத்தில் சந்திரனுடன் கூடி இருப்பதாலும் ஜாதகர் ஊர் ஊராய்த்திரிந்து கொண்டிருக்கும் அமைப்பு உடையவராவார்.

* இரண்டில் இரண்டு நைசர்க்கிக பாபிகளாகிய அங்காரகனும் இராகுவும் இருப்பதாலும் குடும்பஸ்தானாதிபதியாகிய இரண்டிற்குடைய சூரியன் லக்கினத்திற்குப் பன்னிரண்டில் இருந்துகொண்டு ஆறுக்குடைய குருவால் பார்க்கப்படுவதாலும் ஆறுக்குடைய குரு இரண்டைப் பார்ப்பதாலும் குடும்பம் க்ஷீணித்துப் போகும். கஷ்டத்தை அடையும். ஜாதகாலங்காரம் 647-ஆவது பாடலைப் பார்க்கவும்.

7. குணத்தா னுக்கு மனைவிமைந் தர் கூறு வண்ணம் தானுரைப் பீர்
அணைத்தா னிரண்டில் சேய்[1] ராகு அருக்கன்[2] விரயம்[3] தானிருக்க
கனத்தைச் சொன்னோம் ஏழிடத் தோன் சனியுச்சமுமாயிருக்க
மணந்தா னெவ்வாறு நடந்தது மரித்துச் சொல்வார் மாமுனியும்;

7. ஜாதகருக்கு மனைவியும் குழந்தைகளும் ஆகிய இவர்களுடைய சுகத்தைச் சொல்லாததற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, இரண்டாவது பாவத்தில் அங்காரகனும் ராகுவும் விரயஸ்தானமாகிய பன்னிரண்டாவது வீட்டில் சூரியனும் இருப்பதாலும் கெடுதியைச் சொன்னோம் என்று பதில் சொல்ல, மாமுனியாகிய வசிஷ்டர் தடுத்துக் கேட்கின்றார் ஏழிற்குடையவராகிய சனியானவர் உச்சமாயிருப்பதால் எவ்விதமாகக் கலியாணம் நடந்தது என்பதைச் சொல்லுவீர் என்று கேட்கவே;

குறிப்பு.—'' மணந்தானெவ்வாறு நடந்தது '' என்பது '' மணந்தானெவ்வாறு நடவாது'' என்று இருந்தால் அதிகப் பொருத்தமுடையதாகும்.

8. முனியே பொன்னே[4] னிருநான் இல் முயன்று சனியைத் தான் [பார்க்க
வனிதை சேரான் சுதர் காணன் மன்னன் பூர்வ வினை யாலே
தனியே வாழ்வன் முன்வினை யைச் சாற்றும் விவரம் ஜயமுனி யே
கனமாம் சோலை வளர் காஞ்சி காம னுதித்தான் சௌராஷ்டிரம்;

8. முனிவரே! குருவானவர் எட்டில் இருந்துகொண்டு சனியைப் பார்ப்பதால் ஜாதகருக்கு மனைவி வந்து சேரமாட்டாள். குழந்தைகள் கிடையா. இவர் முன் ஜன்மத்திய பாவத்தினாலே தனியாகவிருந்து வாழ்வார் என்று சொல்லவே ஜயமுனிவரே முன் ஜன்மத்திய பாவத்தை விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்டார். அதன் மேல் சொல்லுகின்றார். ஜாதகர் பெரிய சோலைகளும் வளமும் உள்ள காஞ்சீபுரத்தில் சௌராஷ்டிர குலம் என்ற பட்டுநூல்காரர் குலத்தில்;

9. உதித்து வறுமை யில்லாமல் உயர்வாய்த் தராசு செட்டுச்செய்து
மதித்தோர் நேசம்தான் செய்து மனைவி மைந்தர் தானுண்டாய்
அதிகத் துணைவர் தானுட னேஅணுகி வாழுங் காலத்தில்
சதியாய்ச் செய்தான் தம்பாக்கி சாற்றுன்பாகம் பொருள் யில்லம்.

9. பிறந்து கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமல் மேன்மையாகத் தராசுகொண்டு வியாபாரஞ் செய்து தன்னை மதித்தவர்களுடன் சினேகஞ் செய்துகொண்டு மனைவியும் மக்களும் உடையவராகி அநேக

[1] அங்காரகன் [2] சூரியன் [3] பன்னிரண்டாமிடம் [4] குரு

சகோதரர்களுடனும் உதவியாளர்களுடனும் இருந்து வாழ்கின்ற காலத்தில் இவர் தன்னுடைய சகோதரனுக்குச் சேரவேண்டிய பாகமாகிய சொத்து வீடு இவைகளையும் தான் கொடுக்கவேண்டிய பாக்கிகளையும் கொடுக்காமல் ஏமாற்றினன்.

10. இல்லம் வீடுநீக் கிடவே யிளையோன் வறுமை மிகமிகொண்டு
சொல்லும் சாபம் யாதெனிலே தோன்றும் பின்ஜன் மங்களிலே
அல்லல் மிகவே தானுண்டா யனுகார் துணைவர்மனைவி
[மைந்தர்
எல்லை யெல்லாம் தான் திரிவா யெய்தும் மேகரோ கமுமே ;

10. ஜாதகருடைய இளைய சகோதரன் வசிக்கின்ற வீடு போய் விடவே தரித்திரத்தை அதிகமாக அடைந்து சொல்லுகின்ற சாபம் என்ன வென்றுல் நீ இனிமேல் பிறக்கும் ஜன்மங்களில் அதிக கஷ்டங்களை அடைந்து சகோதரர்களும், மனைவியும், மக்களும் இல்லாதவனுய் இருந்து ஊரெல்லாம் திரியக்கடவாய். உனக்கு மேகரோகமும் ;

11. எய்து மில்லம் தான் விட்டு வேறு இல்லம் தான் வாழ்வாய்
ஐயமனதாய்ச் சல்லியமாய் அயலால் பாரி யிச்சைய தாய்ச்
சொல்லா லவமானங்க ளுண்டாய்த் துறவிபோலே தான் வாழ்வாய்
புல்லோர் மதிப்பு இல்லாமல் நீயும்பூமி தன்னில் பொருந்திடுவாய் ;

11. வந்து சம்பவிக்கக்கடவது. தன் வீட்டைவிட்டு வேறு வீட்டிற் குப் போய் வாழக்கடவாய். துன்பமான மனமுடையவனுயும். கடன் காரனுகவும் பிறருடைய மனைவியின்மேல் காம ஆசையுடையவனுகியும் தன்னுடைய வார்த்தைகளால் அவமானங்களை அடைந்தும் சந்நியாசியைப் போல ஒண்டியாய் இருந்தும் வாழக்கடவாய். ஜீழ் மக்களுடைய மதிப்புக்கூட இல்லாமல் நீ பூமியில் இருந்து வாழக்கடவாய் என்று சொல்லியதுமன்றி ;

12. இன்னும் பலவாய்ச் சொல்லியே யிளையோ னிறைத்தான்
[தூள்தம்மை
அன்னவன் தனக்கு அப்பாவம் சேர்ந்து அடைந்தது இதுயன்றி
முன்குலத் தோனும் தன்னி டம் நேசமா யுதவிப் பொருள்
[இன்னேன்
பின்முறி தட்டி நந்துன் னமறையோன் பின்சில நாட் சென்று ;

12. இன்னம் பலவாருகச் சொல்லி இளைய சகோதரன் தெருத்துளை எடுத்து இறைத்தான். ஜாதகருக்கு இந்த சாப பாவம் வந்து சம்பவித்தது. இதுவுமல்லாமல். இவர் முதல் குலமாகிய பிராமணர் குலத்திற் பிறந்த ஒருவருடன் சினேகஞ் செய்து கொண்டு, பிறகு அவருக்குப் பணத்தைக் கொடுத்து உதவி செய்து, பின்னல் அவரிடமிருந்து எழுதி வாங்கிக்கொண்டு பிறகு மொத்தத்தையும் வாங்கச் சிலநாள்களாக அவருடைய வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்து ;

13. சென்றுன் தனவான் மறையவ னில்லம் தேவி மேல்கா தல்
கொண்டு
நன்று நன்மொழி நயப்புடனே யுரைத்தான் நாயகி அதற்கிசையா
[மல்
குன்றிய மனத்தாள் மறுமொழி கூறமானும் கோப மாய்மீண்டு
வென்றி சேர ரசர்பக்கல் சென்று விளம்பி னுன்முறி தன்னை
[யின்னேன்.

13. போய் இவர் செல்வவந்தனுனபடியால் பிராமணருடைய வீட்டிலுள்ள அவருடைய மனைவியின்மேல் காம ஆசையை யுடையவராகி நல்ல வார்த்தைகளை இனிமையாக அவளிடத்தில் சொன்னுர். அந்த ஸ்திரீ அதற்கு இணங்காமல் துன்பமான மனத்தையுடையவளாகிப் பதில் சொல்லி விடவே இவர் கோபத்துடன் திரும்பிவந்து பிறகு இராஜாங்கத்தாரிடம் போய் இவர் தான் கடன் கொடுத்திருக்கும் விஷயத்தை அவர்களிடத்தில் சொன்னுர்.

14. இன்னவன் முறியை ராசரும றிந்து இயம்பினுர்மறையவர் நீயும்
பொன்தர வேண்டு மென்று மே புகன்ருர் பிராமணன் தரசத்
[தியற்று
அன்னவன் வீடு யாவும்தன் பொருளுக் கடக்கி னுன் இவனே
முன்குலத் தோனே யில்லம்விட் டோட்டி மொழிகுவான் மறை
[ப்பாரி.

14. இவருடைய பிரியாதை அரசாங்க மனிதரும் தெரிந்து கொண்டு பிராமணரைப் பார்த்து நீ பணத்தைக் கொடுக்கவேண்டும் என்று சொன்னுர். அதன்மேல் பிராமணர் பணத்தைக் கொடுக்கச் சக்தி இல்லை என்று சொல்லவே சௌராஷ்டிர வம்சத்திற் பிறந்த இந்த ஜாதகர் பிராமணருடைய வீடு முதலிய, எல்லாவற்றையும் தன்னுடைய பணத்திற்காகப் பிடுங்கிக்கொண்டு அந்தப் பிராமணரை வீட்டைவிட்டு அப்புறப்படுத்தி ஓட்டி விட, பிராமணருடைய மனைவி பின்வருமாறு சொல்லுகின்ருள்.

15. பாரியா யென்னை வேண்டி வந்த பாவி அந்த வெஞ்சினத் தால்
தூறியே அரசர் பக்கல் சென்று துரத்தினுய் இல்லத்தை விட்டு
வேறுஜன்மத் தில்துணை வர் மனைவிமீருத் தந்தையி லும்
சீரிய குடும்பம் சிதைந்திடுமே செல்வம் சிதறிடும் தேசம் எல்லை.

15. மனைவியாக என்னை உபயோகப்படுத்த எண்ணங் கொண்டு என்னிடத்திற்கு வந்த பாவியாகிய நீ அரசாங்கத்தாரிடம் போய் எங்களை எங்களுடைய வீட்டிலிருந்து துரத்திவிட்டாய். ஆகையால் உனக்கு மறு ஜன்மத்தில் சகோதரர்களும் மனைவியும் விளங்கா. நீ உன்னுடைய தகப்பனுருடைய வீட்டைவிட்டு வெளியேபோவாய். சிறப்பான உன்னுடைய குடும்பம் அழிந்து போகக்கடவது. உன்னுடைய செல்வமும் அழிந்து போகக்கடவது. நீயும் பிறர் சிறிக்கும்படியாக ஊரைவிட்டு வெளி தேசம் தேசமாகப் போய் ;

16. அலேவா யென்று அம்மறைமா தருளி னுள்கர்ப்புடையோளும்
குலவி வினையும் அந்திய காலங் குறித்துச் செல்வங்களும்
பலவித வறுமை படர்ந்தது இவனும் பலவித தீர்த்தங்கள்
[தோய்ந்து
உலவி னுன்கா லன்பக்க லிவனே உந்தியிலுதித்தவனருளால்.

16. திரியக்கடவது என்று பதிவிரதையான அந்தப் பிராமண ஸ்திரீ ஜாதகரைப் பார்த்துச் சொன்னுள். அந்தச் சாபம் ஜாதகரை வந்து அடைந்தது. ஜாதகர் தன்னுடைய கடைசி காலத்தில் தன்னுடைய செல்வங்கள் எல்லாம் அழிந்துபோய் பலவிதமான கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடைந்து பிறகு இவர் அநேக விதமான ஸ்தல தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து இறந்து எமனிடத்திற்குப் போய் மகாவிஷ்ணுவினுடைய தொப்புளிலிருந்து பிறந்தவராகிய பிரமதேவனுடைய கிருபையால் ;

17. அருளினுல் அரக்கர் வர்க்கத்தில் உதித்தான்
அம்மறை மாது சாபம் போல்
திரிந்து பின்தி செரிந்திடு மென்றேும்
சேயிழை மணமுமே யில்லான்
வருகினும் தீதே காரகம் உண்டு
மறுதேசம் தன்னிலே சென்று
குருவருள் பெற்றுக் குலவுவா னென்றேும்
குறிக்கிறே மன்னையின் குணத்தை.

17. கிருபையால் சமணருடைய குலத்தில் வந்து பிறந்திருக்கின்றுர். அந்தப் பிராமண ஸ்திரீயினுடைய சாபத்தைப் போலவே ஜாதகர் திரிந்து அலேந்து பிறகு எங்கிப் போய் விடுவார் என்று சொல்லுகிறேும். இவருக்கு விவாகமான மனைவி கிடையாது. ஒரு சமயம் கலியாண மான மனைவி நேர்ந்தாலும் அதனுல் கெடுதியே உண்டாகும். இவருக்குக் காரக நோய் ஏற்படும். அன்னிய தேசத்திற்கு இவர் போய் ஒரு குருவினுடைய கிருபையை அடைந்து வாழ்குவார் என்று சொல்லுகிறேும். இனிமேல் இவருடைய தாயாரின் குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேும்.

18. தைய்யலிரு நிறமாகும் சமயோகத்தாள்
சாந்தவாள் பொறுமை யுண்டு தவரு வார்த்தை
ஐயமனம் வடகீழா யில்ல மாகும்
அபய மென்றேர் தமைக் காப்பள் அருகர் பத்தி
மெய் தனிலே பித்த வாயு அந்தியத்தில்
மேவிடுமே சோதிகுற்றம் அபவாத மேற்பள்
நையவே கூறுளாம் வர்க்கம் நாஸ்தி நாயகியும்
துணை ஒன்று நவிலுவோமே.

18. ஜாதகரின் தாயார் இரண்டு நிறங்கள் கலந்த மாநிறமான தேகத்தை யுடையவள். நடுத்தரமான யோகத்தையுடையவள். சாந்தமானவள். பொறுமையை உடையவள். தான் சொன்ன வார்த்தையைத் தவறிடாமல் நிறைவேற்றக் கூடியவள். அச்சமானதும் சந்தேகமானதுமான மனத்தை உடையவள். இவளுடைய வீடு வடகிழக்குத் திக்கில் இருக்கும். தன்னிடம் வந்து அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்றுவாள். சமணருடைய தெய்வத்தின் மேல் பக்தியும் அன்பும் உடையவள். இவளுடைய உடம்பில் பித்த வாயு இருக்கும். இவளுக்குக் கடைசி காலத்தில் நாக்குப்பூச்சியால் ரோகம் உண்டாகும் குற்றச் சாட்டையும், பழியையும் அடைவாள். துன்பமான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். இவளுடைய பந்துக்களும் நாசமடைவார்கள். இவளுக்கு ஒரே சகோதரன் என்று சொல்லுகிறேும்.

19. நவிலுவோம் தாய்பூர்வம் பட்சி மேற்கில்
நலமான பேரூரில் வடுகர் வமிசம்
இவள்பந்து வறுமை யின்றி சுதர்களுண்டா
யெய்தும் கால்வினையைச் சொல்வேன் நாத்தித்தன் மேல்
பாவமான வார்த்தை சொல்லிப் பறக்க விட்டாள்
பாவைமனம் திகலடைந்து பகருவாள்பின்
அவனியிலே நிந்தை சொல்லியே அலேய விட்டாய்
அணுகிடுமே மறுசென்மம் எனைப்போல் நீயும்

19. ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேும். பக்ஷிஸ்தலமாகிய திருக்கழுக்குன்றத்திற்கு மேற்கில் ஒரு நல்ல சிறந்த பெரிய ஊரில் தெலுங்கர் குலத்தில் பிறந்து பந்துக்களுடைய கஷ்டமில்லாமலும் அதிக பந்துக்களை உடையவளாயும் குழந்தைகளை உடையவளாயும் வாழ்கின்ற காலத்தில் சம்பவித்தப் பாவத்தைச் சொன்னுகிறேன். இவள் தன்னுடைய நாத்தூணங்கையின் மேல் பாவமானதும் அபவாதமானதுமான வார்த்தைகளைச் சொல்லி அவளை வெளியே போய் அலேயும் படியாயும் தவிக்கும் படியாயும் செய்து விட்டாள். அந்த நாத்தனுர் மனத்தில் பயத்தை உடையவளாய்ச் சொல்லுகின்றுள். நீ பூமியில் என்மேல் அபவாதங்களைச் சொல்லி என்னை அலேந்து தவிக்கும் படியாகச் செய்து விட்டாய். உன்னுடைய மறு ஜன்மத்தில் நீ என்னைப் போல ;

20. நீங்குமே சுதர் துணைகள் தாயில்லம் போம்
நேமியினில் நிந்தையது அதிக முண்டாய்
ஓங்காது குடும்ப மென்றேும் அந்தியத்தில்
ஒளிமாறும் இவ்வாறுச சொல்லிச் சென்றுள்
தீங்காக அப்பாவம் சேர்ந்த தென்றேும்
தேவியுமே அந்தியத்தில் கடவுள் பத்தி
பாங்காகப் பூசை செய்து காலன் பக்கல்
பறந்தனள் காண நரகத்தில் பன்னுள் மூழ்கி ;

20. அலேந்து தவித்து பிள்ளை சகோதரர்கள் இவர்களை விட்டுப் பிரிந்து உன்னுடைய தாயாருடைய வீட்டிற்குப் போகக்கடவாய். பூமியில் நீ அதிகமான பழிகளை அடைந்து உன்னுடைய குடும்பம் அழிந்து போகக் கடவது என்று நான் சொல்லுகிறேன். மேலும் உன்னுடைய கடைசி காலத்

தில் உன்னுடைய தேகத்தின் தேஜஸ் குறைந்து விடக்கடவது என்று இவ்விதமாகச் சொல்லி விட்டு நாத்தனர் போய்விட்டாள். அந்தச் சாபம் கெடுதியாக இவளை வந்து அடைந்தது என்று சொல்லுகிறோம். இவள் தன்னுடைய கடைசி காலத்தில் கடவுள் மேல் பக்தியும் அன்பும் உடையவளாகி ஒழுங்காகவும் நல்ல முறையாகவும் அவரைப் பூஜை செய்து இறந்து எமனிடத்திற்குப் போய் அநேக நாட்களாக நரகத்தில் அமிழ்ந்து கிடந்து ;

21. மூழ்கியே பிரமன் லக்கம் இக்குலத்தி
லுதித்தனள் காண் முன்சாபம் சேர்ந்ததாலே
தாழ்வுண்டு தன்குடும்பம் தாயில் லம்பாழாம்
தனிவாழ்வாள் சுதர்தோஷம் தரித்திர முண்டு
ஊழ்வினையால் அந்தியத்தில் விழிக்கு ஊனம்
உண்டாகும் குடும்பமது உரங்கு மென்றோம்
பாழான நாத்தி பழியிவ் வாருகும்
பகருவோம் பின்ஜன்மம் பாவையர்க்கே.

21. பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இக் குலத்தில் வந்து பிறந்தாள். இவளுக்கு இவளுடைய முன் ஜன்மத்திய சாபம் வந்து அடைந்ததால் குறைவுகள் நேர்ந்தன. இவளுடைய குடும்பமும் தாய் வீடும் பாழாய்ப் போய் விட்டன. இவள் தனியாக விருந்து வாழ்வாள். இவளுக்குச் சந்ததி தோஷம் முண்டு. தரித்திரமும் உண்டு. முன் ஜன்மத்திய பாவத்தால் இவளுடைய கண்களுக்குக் கடைசி காலத்தில் கெடுதல் எற்படும். இவளுடைய குடும்பம் நொந்து போய் அழிந்து விடும் என்று சொல்லுகிறோம். இவைகள் எல்லாம் கெடுதியான நாத்தனருடைய சாபத்தால் உண்டாயினவாகும். இவளுடைய மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம்.

22. பாவையின்தன் மறுஜன்மம் மதுரை பக்கல்
பிறப்பளாம் க்ஷத்திரிய குலம் பணிகளுண்டாய்
தாவிய போக்குதவி செய்வள் முப்பா னெட்டில்
சாருவாள் காலன்பதி தவர்தலில்லை
மேவியதோர் தந்தையின் தன்பூர்வம் சொல்லுவேன்
விளங்கினு னவ்வூரில் வடுகனுக
ஆவலாய் மதுத்தொழிலைச் செய்து இன்னேன்
அதிதிகள்மேல் பத்திகொண்டு அடைந்தான் பாலன்.

22. ஜாதகரின் தாயார் தன்னுடைல் பின் ஜன்மத்தில் மதுரைக்கு அருகில் க்ஷத்திரிய குலத்திற் போய் பிறப்பாள். ஆடை ஆபரணங்கள் இவைகளை உடையவளாகித் தன்னிடத்திற்கு வருபவர்களுக்கு உபகாரத்தைச் செய்வாள். இவள் ஜாதகருக்கு முப்பத்தெட்டாவது வயதில் * இறந்து எமனிடம் போய்ச் சேருவாள். இது தவருது. ஜதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். அதே ஊரில் தெலுங்கராகப் பிறந்தார். ஆசையுடன் மதுபானத் தொழிலை செய்து இவர் பரதேசிகளின்மேல் பக்தியும் அன்பும் உடையவராகி இறந்தார்.

* குறிப்பு.—தாயார் மரண விஷயம்.—ஜாதகருக்கு வயது ஆு 37-0-0 முதல் 38-0-0 முடியும் வரையிலும் கேது தசையில் இராகு புக்தியும் குரு புக்தியும் நடக்கின்றது. மாதுரு லக்கினம் நான்காம் பாவமாகிய துலாமாகும். துலா லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் குருவும் சூரியனும் மாரகாதிபதிகளாகின்றார்கள். கேது மாரகாதிபதியாகிய குருவுடன் சம்மந்தப்பட்டு இருக்கின்றார். மேலும் இவர் கடகத்திற்கு நான்காவது வீட்டிலுள்ள சனியினுடைய வீட்டில் இருக்கின்றார். ஆகையால் இவர் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் குரு சனி இவர்களுடைய பலாபலன்களைக் கொடுக்கக் கூடியவராகின்றார். மேலும் இவர் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகம் பிரகாரம் தன்னுடைய தசையில் மாதாவுக்கு மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராகின்றார். குரு எற்கனவே மாதாவுக்கு மாரகாதிபதி யாகின்றார். மேலும் இவர் மாதுருஸ்தானத்தைப் பார்ப்பதுடன் மாதுருகாரகனுகிய சந்திரனுக்கு எட்டில் இருக்கின்றார். இவர் தன் புக்தியில் ராகுவைவிட தாயாருக்கு மாரகம் செய்ய அதிக அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

23. பாலனுமே மிச்சென்மம் அருகர் வமிசம்
பிறந்தனன்கா ணிருமூன்று ஆண்டு தன்னில்
காலன் பதி செல்லுவான் மறுஜன் மத்தைக்
கழறுவோம் தோகையின்மேல் ரெட்டி வமிசம்
சீலமுடன் முருகர்பக்தி சிறப்பாய்க் கொள்வன்
தேவிமரித் தோதுகிருள் தீரன் தானும்
ஞாலவே அருகர்குல மிச்சென் மத்தி
லீன்றவர் மறு ஜன்மம் ரெட்டி வமிசம் ;

23. ஜாதகருடைய தகப்பனர் இந்த ஜன்மத்தில் சமணர் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றார். இவர் ஜாதகருக்கு ஆருவது வயதில் † இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச்சேருவார். இவருடைய பின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். தோகை என்று சொல்லக்கூடிய மலைத்திற்கு மேற்குத்திக்கில் ஒரு ரெட்டியார் குலத்தில் பிறந்து நல்வொழுக்கத்துடன் முருகக்கடவுளின் மேல் பக்தியும் அன்பும் உடையவராய் இருப்பார். அதன்மேல் பார்வதியம்மையார் தடுத்துக் கேட்கின்றார். இந்த ஜென்மத்தில் சமணர் குலத்தில் பிறந்த இவர் மறு ஜன்மத்தில் ரெட்டியாருடைய வமிசத்தில் ;

† குறிப்பு.—தகப்பனர் மரண விஷயம்.—ஜாதகருடைய வயது ஆு 5-0-0 முதல் ஆு 6-0-0 முடியும்வரையிலும் சனிதசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. பிதுர் லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மீனம் ஆகும். மீன லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகளாகின்றார்கள். சனி மீனத்திற்கு மாரகஸ்தானங்களாகிய பதிஞேராவது பன்னிரண்டாவது பாவங்களுக்கு அதிபதியாகி எட்டாவது வீட்டில் இருக்கின்றார். ஆகையால் சனி தன்தசையில் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்புடையவராகின்றார். சுக்கி

ரன் ஏற்கனவே மாரகாதிபதியாகி மாரகஸ்தானங்களாகிய எட்டிற்கும் மூன்றிற்கும் உடையவராகி இருக்கின்றார். ஆகையால் சுக்கிரன் தன்னுடைய புக்தியில் மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்றார்.

24. வமிசத்தி லுதிக்கும் வண்ணம் புகல் வீரையா
மாரனுமே யிச்ஜென்மம் விரதமின்றி
அம்சகுறைவாய் வாழ்ந்த பலத்தினாலே
அணுகிடுவான் மறுஜன்மம் தாழ்வா கத்தான்
இம்சையுள ஜாதகர்க்கு அறுபா னெட்டில்
எழிலாடி மாதமதில் ஏகுவானும்
அம்சையாய் மறுஜன்மம் காசிபக்கல்
நல்குவா னிக்கு லத்தில் நாட்டி னோமே.

24. வம்சத்தில் பிறக்கவேண்டி காரணத்தைச் சொல்லுவீர். இவர் இந்த ஜன்மத்தில் விரதங்களை அனுஷ்டிக்காமல் குறைவுகளைச் செய்து வாழ்ந்து வந்ததாலே மறு ஜன்மத்தில் தாழ்வாகத்தான் பிறப்பார். கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஜாதகருக்கு அறுபத்தெட்டாவது வயதில் * அழகிய ஆடிமாதத்தில் மரணம் நேரிடும். இவர் பின் ஜன்மத்தில் காசி க்ஷேத்திரத்திற்கு அருகில் இந்தப் பிறப்பின் குலத்திலேயே பிறப்பார் என்று சொல்லுகிறோம்.

* குறிப்பு.—ஜாதகர் மரண விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷ 67–0–0 முதல் ஷ 68–0–0 முடியும் வரையிலும் சந்திர தசையில் சந்திர புக்தியும் அங்காரக புக்தியும் நடக்கின்றன. ஆனால் ஆடி மாதத்தில் சந்திர புக்தி தான் நடக்கின்றது. பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் கடகலக்கின ஜாதகருக்குப் புதன் சுக்கிரன் சனி இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றார்கள். சந்திரன் மாரகாதிபதியாகிய புதனுடன் கூடி லக்கினத்தில் இருந்துகொண்டு லக்கினாதிபதியாகிச் சத்தம அஷ்டம மாரகாதிபதியாகிய சனியாலும் பார்க்கப்பட்டிருக்கின்றார். லக்கினாதிபதிக்குச் சனி சம்மந்தம் ஏற்படுவது ஆயுளுக்குப் பிரதிகூலமானது என்று ஜாதக பாரிஜாதம் பதினொன்காவது அத்தியாயம் ஐம்பதாவது சுலோகத்திலிருந்து ஏற்படுகிறது. இங்குச் சனி சந்திரனைப் பார்ப்பது ஆயுளுக்குப் பிரதிகூலமானதாகும். சனியினுடைய பலனையும் புதனுடைய பலனையும் சேர்த்துச் சந்திரன் பலன் கொடுக்கவேண்டியவராகவிருக்கின்றார். சனியும் புதனும் கடக லக்கினத்திற்கு மாரகாதிபதிகள் என்று மேலே சொல்லி இருக்கின்றோம். சந்திரன் லக்கினாதிபதியாய் இருந்தபோதிலுங்கூட துய்யகேரளம் எட்டாம் பாவம் பதினொன்காவது பாடல் பிரகாரமும் எண்பத்து இரண்டாவது ஜாதகத்தின் இருபத்தி நான்காவது பாடலின் கீழ் கொடுத்துள்ள வியாக்கியானப் பிரகாரமும் சந்திரனே தன் தசையில் தன் புக்தியில் ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உள்ளவராகின்றார். மேலும் அஷ்டமாதிபதியாகிய சனி நான்கில் உச்சமாகி வலுத்திருப்பதால் ஜாதகபாரிஜாதம் பதினொன்காவது அத்தியாயம் ஐம்பத்தேழாவது சுலோகத்தின் கடைசிவரி பிரகாரம் லக்கினாதிபதியாகிய சந்திரனே ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகவிருக்கின்றார்.

25. நாட்டுவோ மிச்ஜென்மம் பொது யோகத்தை
நாயகிமார் யோகமுளன் சல்லியம் கொள்வன்
ஓட்டை விழும் பூமியது விருத்தி செய்யான்
உலகத்தில் நிந்தை யுண்டு உள்கபடு முண்டு
கூட்டுறவு நீடிக்கா அலைச்சல் எய்தும்
குடும்பமது குறைவாகும் நாற்பான் மேலே
வாட்டமுடன் குருபத்தி வெளியூர் செல்வன்
மருவிடுமே மேகப் பிடை மகனுக்கு.

25. இந்த ஜன்மத்தில் ஜாதகருக்கு உண்டாகும் பொதுவான யோகத்தைச் சொல்லுகிறோம். இவர் ஸ்திரீகளின் மேல் காம ஆசையை உடையவர். கடன் படுவார். பரஸ்திரீகமனத்தினால் சரீரம் கெட்டுப்போய் அதில் சில்லியும் துவாரமும் ஏற்படும். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி செய்யமாட்டார். பூமியில் பழியை ஏற்றுக்கொள்ளுவார். மனத்தில் கள்ளம் வஞ்சனை கபடம் இவைகளை உடையவர். கூடுகின்ற சினேகிதம் நாள்பட்டு இருக்காது. திரிதல் ஏற்படும். குடும்பம் நாளுக்குநாள் க்ஷீணித்துப் போய் விடும். நாற்பது வயதிற்குமேலே இவர் கஷ்டத்துடன் குருவினுடைய அன்பையும் பக்தியையும் அடைய வெளி ஊருக்குப் போய்விடுவார். இவருக்கு மேகரோகம் வந்து சம்பவிக்கும்.

26. இன்னமும் சிலது சேதி யியம்புவோம் விபரம் பின்பால்
அன்னவன் ஜனன காலம் அவரியின் மகன்கா லங்கள்
தன்னிலே பதினே ழாண்டும் தந்தையும் கண்ட மெய்தும்
பன்னு நாற்காலி பீடை பலபல நட்ட மெய்தும்.

26. பின்னால் இன்னும் சில விஷயங்களை விவரமாகச் சொல்லுவோம். ஜாதகருடைய ஜனன காலத்தில் சூரியனுடைய பிள்ளையாகிய சனியினுடைய மகாதசையில் பதினேழு வருஷம் இருப்பு ஆகும். இந்தக் காலத்தில் இவருடைய தகப்பனுருக்கு மரணம் நேரிடும். கால் நடைகளுக்கு நோய்கள் உண்டாகும். அநேகவிதயான நஷ்டங்கள் உண்டாகும்.

ஜாதகம் 92

1. சந்திர னிரவி[1] நந்தி[2] சனிமீனம் புகரு[3] வீணை[4]
மந்திரி[5] சேயும்[6] சாடி[7] மந்தரக் கயிறு[8] மானில்[9]
புந்தியு[10] மேட மாகப் பிணிசிகி[11] கடகம் புக்க
இந்தவாறு கோள்கள் நின்று இடமது வளைய[12]லாக;

சனி	புதன்	சூரியன் சந்திரன்	சுக்கிரன்
குரு அங்காரகன்	இராசி		லக்கினம் கேது
ராகு	சக்கரம்		

கார்த்திகை 4-ஆம்பாதம். சூரியதசை ஷ 1-5-6.

1. சந்திரனும் சூரியனும் ரிஷபத்திலும், சனி மீனத்திலும், சுக்கிரன் மிதுனத்திலும், குருவும் அங்காரகனும் கும்பத்திலும், இராகு மகரத்திலும், புதன் மேஷத்திலும், கேது கடகத்திலும் இவ்விதமாகக் கிரகங்கள் இருந்து ஜன்ம லக்கினம் கடகமாக விருந்தால்;

குறிப்பு.—இந்த ராசிசக்கிர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும்.—ரிஷபத்தில் அங்காரகனும், சிம்மத்தில் கேதுவும், கன்னியில் புதனும், கும்பத்தில் சுக்கிரனும் சனியும் ராகுவும், மீனத்தில் சூரியனும் சந்திரனும் குருவும் ஆகும்.

2. இப்பலன் சொல்லு மென்ன இயம்புவார் பராசர் தாமும்
ஒப்புடன் ஆண்பால் ஜன்மம் உரைக்கிறே மில்லம் தானும்
மெய்ப்புடன் கீழ்மேல் வீதி விளங்கிடும் தெற்கு வாடை
அப்பணி சடையோன் கோஷ்டம் அணுகிடும் வட கீழ் தன்னில்.

2. இந்த ஜாதகத்தின் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று கேட்கப் பராசர முனிவர் சொல்லுகின்றார். இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லுகிறோம். பிறந்த வீடு உண்மையாகக் கிழக்கு மேற்குத் தெருவில் தென்னண்டை வாடையில் இருக்கும். சற்பத்தைச் சடையில் தரித்துள்ள சிவபெருமானுடைய கோயில் வடகிழக்குத் திக்கில் இருக்கும்.

---

[1] சூரியன் [2] ரிஷபம் [3] சுக்கிரன் [4] மிதுனம் [5] குரு [6] அங்காரகன் [7] கும்பம் [8] இராகு. [9] மகரம் [10] புதன் [11] கேது [12] கடகம்.

3. குணக்கினில் மஸ்தான் கோஷ்டம் கூறுவோம் கிரியு முத்தரம்
வணக்கமாய் அருகர் தென்மேல் மாகாளி மேற்கே தங்கும்
இணக்கமாய்க் கம்மா னுண்டு எதிரிலில்ல மில்லாதாகும்மே
மணக்கமழ் மேலே சிற்றூர் வரைந்தன மிந்த பாலன்.

3. கிழக்குத் திக்கில் முஸ்லிம் மசூதி இருக்கும். வடக்குத் திக்கில் மலையும் இருக்கும் என்று சொல்லுகிறோம். சமணருடைய கோயில் தென் மேற்குத் திக்கிலும், பெரிய காளியம்மன் கோயில் மேற்குத் திக்கிலும் இருக்கும். சேர்மானமாக ஒரு கம்மானுமுண்டு. எதிரில் வீடு இல்லாமல் இருக்கும். வாசனையை வீசுகின்ற ஒரு சிறந்த சிறிய கிராமத்தில் இந்த ஜாதகர் பிறந்தார் என்று சொல்லுகின்றோம்.

4. பாலகன் ஜனன யோகம் பற்றிய அன்னை யோகம்
சாலவே தந்தை யோகம் தன்துணை களத்திர புத்திரர்
ஏலவே முன்பின் ஜன்ம மியம்புவோ மிந்நூல் தன்னில்
ஆலத்தை யுண்டோன் தேவி அருளுவோம் கேட் டிடாயே.

4. ஜாதகருடைய ஜன்ம காலத்திய யோகம் இவருடைய தாயாருடைய யோகம், தகப்பனருடைய யோகம், இவருடைய சகோதரர்கள் மனைவி, மக்கள் இவர்களுடைய யோகங்கள், முன் ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளை எல்லாம் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம். ஆலகால விஷத்தை உண்ட சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதி யம்மையே! சொல்லுகிறோம். கேட்பீராக.

5. இவன்பிதா இருநி றத்தா னீகைவான் சமதே கத்தான்
கவர்ந்திடான் அயலார் பொன்னைக் கண்முகம் வசிய முள்ளானை
தவசிகள் அன்பு பூண்பன் சத்தான வேலை செய்வன்
நவனியில் விரயம் செய்வன் நாட்டினில் சல்லிய முள்ளான்.

5. ஜாதகருடைய தகப்பனர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறமுள்ள தேகத்தையுடையவர். தயாளகுணமுடையவர். கொடுக்குந் தன்மையை உடையவர். நடுத்தரமான தேகத்தை உடையவர். பிறருடைய சொத்தையும் பணத்தையும் அபகரிக்கமாட்டார். இவருடைய கண்களும் முகமும் பிறரை தன்வசப் படுத்திக்கொள்ளும்படியான தன்மை உடையனவாகும். முனிவர்களிடத்திலும் தவஞ் செய்கிறவர்களிடத்திலும் ஆசையுள்ளவர். நிலையான உயர்ந்த வேலைகளைச் செய்வார். பூமியில் அதிகம் செலவு செய்வார். கிராமத்தில் கடன் வாங்குவார்.

6. சுகதுக்க மிரண்டு முள்ளான் துணைவர்கள் ஐந்தே தோன்றும்
பகையொன்றும் மனத்தி லெண்ணுன் பாப காரியாவன்
இகபரன் அன்பு பூண்ப னேழைமேல் பிரிய முரும்
ஜகமதில் நல்லோ னுவன் சிந்தையில் மர்ம மில்லான்.

6. இவர் சுகத்தையும் துக்கத்தையும் இரண்டையுமே அனுபவிப்பார், அஃதாவது சிலகாலம் சௌக்கியத்தையும் சிலகாலம் கஷ்டத்தையும் அனுபவிப்பார். இவருக்கு ஐந்து சகோதரர்களே உண்டாவார்கள்.

தன்னுடைய மனத்தில் பகையானதை, அஃதாவது கெடுதியானதை நினைக்க மாட்டார். பிறருக்கு உபகாரத்தைச் செய்வார், பரமசிவத்தின் பேரில் பக்தியும் ஆசையும் உடையவர். ஏழைகளிடத்தில் ஆசையாகவும பிரியமாக வும் இருப்பார். பூமியில் நல்லவராவார். தன்னுடைய மனத்தில் இரகசி யத்தை வைத்திருக்காதவராவார்.

7. தோத்திரப் பிரிய னுகும் துராசையு மில்லா னென்றேும்
பாத்திர மறிய வல்லன் பத்தினி நேய னுகும்
ஆத்தவர்க் குதவி செய்வன் உரைந்திடும் பித்த சூடு
குத்திரம் செய்வா னுகும் சுந்தரி மேலும் கேளே.

7. ஜாதகர் தன்னைப் பிறர் புகழ்ந்து பேசுவதில் ஆசையுடையவர். கெட்ட ஆசையை உடையவரல்ல என்று சொல்லுகிறேும். தகுதி யுள்ளதைப் பகுத்தறியும் சக்தியில் கெட்டிக்காரர். மனைவிக்கு இஷ்டமான வர். தன்னைத் துதிப்பவர்களுக்கும் வணங்குபவர்களுக்கும் உபகாரத்தைச் செய்வார். இவருக்குப் பித்தச்சூடு இருக்கும். சாஸ்திரங்களையும் இயந்திரங் களையும் செய்யும் சக்தியுடையவர். இன்னும் நாங்கள் சொல்லுவதைப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

8. சொன்னஇக் குணத்தா னுக்குச் சுந்தர னுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அன்புள மனத்தா னுகும்
பன்னியே பேச வல்லன் பலசகா யங்கள் செய்வன்
கன்னென மொழியு முள்ளான் கண்சாயல் கல்வி மானும்.

8. இது வரையிலும் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குண குணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் பிறர்மேல் பிரியமுள்ள மனத்தை யுடையவரா வார். திறமையாகவும் சாமர்த்தியமாகவும் பேசுவதில் கெட்டிக்காரர். பிறருக்குப் பலவிதமான உதவிகளைச் செய்வார். சர்க்கரையைப் போல இனிமையான வார்த்தைகளையும் உடையவர். இவருடைய கண் கொஞ்சம் சாய்ந்த பார்வையை உடையதாயிருக்கும். இவர் படித்தவராவார்.

9. கல்விபோ தனையும் செய்வன் காமதில் ருத்திர ரேகை
சொல்வதைக் காப்பா னுகும் சுத்தவான் பலபேர் நேயன்
இல்லையென் றுரைக்க மாட்டானீசன் பூசிதனு மாவன்
புல்லிய புத்தி யில்லான் புறஞ்சொலான் மாநிறத் தன்.

9. வித்தையைப் பிறருக்குக் கற்றுக்கொடுக்குந் தொழிலையுஞ் செய்வார். இவர் உள்ளங்கையில் ருத்திரரேகை என்ற ஒரு விதமான ரேகையை உடையவர். தான் சொல்லுகின்ற வார்த்தையைத் தவருமல் காப் பாற்றுவார். சுத்தமாய் இருப்பார். அநேகரிடம் சிநேகமாக விருப்பார். தன்னிடத்தில் வந்து யாசிப்பவர்கட்கு இல்லை என்று சொல்லமாட்டார். சிவபெருமானைப் பூஜை செய்வார். தாழ்ந்த புத்தியை உடையவரல்ல. கோள் சொல்லமாட்டார். மாநிறமான தேகத்தை உடையவராவார்.

10. உரோமங்கள் நீட்சி யுள்ளான் நுண்ணிய புத்தி யுள்ளான்
சேமமாம் குடும்பி யாவன் செய்நன்றி மறவா னுகும்
காமனை விருப்பம் கொள்வன் காலாள்க ளுடைய னுகும்
தீமையோர் வசியம் கொள்வன் ஜயம் செய்வ னெடுத்த வேலை.

10. ஜாதகருக்கு தேகத்தில் மயிர்கள் நீண்டிருக்கும். நுட்ப மான புத்தியை உடையவர். சௌக்கியமான குடும்பஸ்தராக விருப்பார். பிறர் தனக்குச் செய்த உபகாரத்தை மறக்காதவராவார். காமாக் கினியை உடையவர். நடந்து செல்லுகின்ற வேலைக்காரர்களை உடையவராவார். கெட்ட வர்களைத் தன் பக்கமாக்கிக் கொள்ளுவார். தான் செய்ய ஆரம்பித்த வேலை யைப் பூர்த்தியாகச் செய்து முடித்து ஜெயத்தை அடைவார்.

11. சல்லியம் கொள்ளா னுகும் தந்தையார் ஜிதமும் விருத்தி
நல்லவன் நல்ல வர்க்கு நற்கல் வியால் புகழ்ச்சி
தொல்லைக ளாதியில் தான் தரித்திர மாக வாழ்வன்
மல்லுக்குச் செல்லா னுகும் வாக்குகள் சுத்த முள்ளான்.

11. ஜாதகர் கடன் வாங்க மாட்டார். தகப்பனுருடைய சொத்துக் களை விருத்தியாக்குவார். நல்லவர்களுக்கு நல்லவராக விருப்பார். விசேஷ கல்வியால் இவருக்குப் புகழும் பெருமையும் ஏற்படும். இளம் பிராயத்தில் இவருக்குக் கஷ்டங்களும் வறுமையும் உண்டு. தரித்திரராக விருந்து வாழ்வார். சண்டைக்குப் போகமாட்டார். சுத்தமான வாக்கை உடையவ ராவார்.

12. இன்னவன் துணைவர் தம்மை யியம்பஆுண் பலத்தைக் காணேும்
கன்னிகை ஒருத்தி தீர்க்கம் கழறுவோம் முத்தோ ளாகப்
பின்துணை காணு னுகும் பிறக்கினும் தீதே யாகும்
முன்துணைச் சேதி சொல்வேன் முதல்வியே கேட்டி டாயே.

12. ஜாதகருடைய சகோதரங்களைப் பற்றிச் சொல்லுகிறேும். இவருக்கு ஆண் சகோதர பலம் கிடையாது. ஒரே ஒரு பெண் சகோதரம் தான் இருக்கும். அவளும் மூத்த சகோதரியாவாள். பின் சகோதரங்கள் கிடையா. ஒரு சமயம் பிறந்தாலும் இறந்து விடுவார்கள். மூத்த சகோ தரியின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். பார்வதியம்மையே ! கேட்பீராக.

13. சிவந்தமெய் வாத தேகி சிந்தையும் கலக்க முள்ளாள்
தவசி போல் வாழ்வா ளாகும் தன்வரன் வடமே லாகும்
நவனியில் பொய்கள் சொல்லாள் நற்புத்தி நன்நடக்கை
அவள் வரன் சூது மில்லான் அணுகாது மதலை யென்றேும்.

13. ஜாதகரின் மூத்த சகோதரி சிவப்பு நிறமான தேகத்தை உடையவள். வாயுவான தேகத்தை உடையவள். மனத்தில் கலக்க முள்ள வளாவாள். தவஞ் செய்கிறவளைப் போல வாழ்கின்றவளாவாள். இவளு டைய புருஷன் வடமேற்குத் திக்கிலிருந்து வந்து நேரிடுவான். இவள்

பூமியில் பொய்களைச் சொல்ல மாட்டாள். நல்ல புத்தியை உடையவள். நல்ல நடவடிக்கையையும் ஒழுக்கத்தையும் உடையவள். இவளுடைய புருஷன் கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாதவன். இவளுக்குக் குழந்தைகள் பிறக்காது † என்று சொல்லுகிறேம்.

† குறிப்பு.—சந்ததி விஷயமாய் ஜாதக பாரிஜாதம் 31-ஆவது அத்தியாயம் 29-ஆவது சுலோகத்தைப் பார்க்கவும், ஜாதகருக்கு மூத்த சகோதரி ஸ்தானம் பதினேராவது வீடாகிய ரிஷபமாகும். இந்த ரிஷப லக்கினத்திற்குப் புத்திரபாவமாகிய ஐந்தாவது வீடு கன்னி. இந்தக்கன்னியைச் சனி கேது அங்காரகன் இவர்கள் பார்த்திருக்கின்றுர்கள். கன்னிக்குடைய புதன் ரிஷபத்திற்குப் பன்னிரண்டிலும் தன் பாவத்திற்கு எட்டிலும் மறைந்து விழுந்து இருக்கின்றுர். புத்திரகாரகராகிய குரு ரிஷபத்திற்கு ஏழிற்கும் பன்னிரண்டிற்கும் அதிபதியாகிய அங்காரகனுடன் கூடி இரண்டு பாபிகளாகிய இராகு சனி இவர்களுக்கு இடையில் இருக்கின்றுர். ஒன்பதில் இராகு இருந்து கொண்டு ஏழாவது வீட்டையும் ஒன்பதிற்குடைய சனியையும் பார்க்கின்றுர். "எருது கும்பம் வித்தகையோரையார்க்கு மகவில்லை." என்ற ஜாதகாலங்காரம் 592-ஆவது பாடல் பிரகாரமும் புத்திர தோஷ முண்டு. ஆகையால் மூத்த சகோதரிக்குப் புத்திரதோஷம் மிகவும் அதிகமாக விருக்கின்றது.

14. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிவரா மத்திரி தாமும்
அனையவே மூத்தோள் சேதி அற்பமாய்ச் சொன்னீரைய்யா
வினையதைச் சொல்லு மென்ன விளம்புவேன் புகர்வி யத்தில்
சினமுட னிருப்ப தாலே செப்பினேம் அற்ப மாக.

14. பராசர முனிவர் இந்த விதமாய்ச் சொல்ல அத்திரி ரிஷியானவர் கேட்கின்றுர். ஜாதகரின் மூத்த சகோதரியினுடைய விஷயத்தைக் கெடுதியாகச் சொல்லிவிட்டீரே. முனிவரே! காரணத்தையும் அவள் செய்த பாவத்தையும் சொல்லுவீர் என்று கேட்க, பராசரும் சொல்லுகின்றேன் என்கின்றுர். சுக்கிரன் லக்கினத்திற்கு விரயஸ்தானமாகிய பன்னிரண்டில் மறைந்திருப்பதால் பலனைக் கெடுதியாகச் சொன்னேம்.

15. இதுவன்றிப் பூர்வம் தன்னி லெய்திற்று அந்தத் தோஷம்
இதுவினை சொல்லு மென்ன அறைகிருர் பராசர் தாமும்
அதிபதி பூர்வம் சொல்வேன் மாபலி நகர்க்கு மேல்பால்
சதியிலாச் சிற்றூர் தன்னில் ஜனித்தனள் பிரம்ம சேயாய்.

15. இதுவும் அல்லாமல் அவளுடைய முன் ஜன்மத்தில் தோஷம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தத் தோஷத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, பராசர முனிவர் சொல்லுகின்றுர். இவளுடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். மகாபலிபுரத்திற்கு (பலிச் சக்கர வர்த்தி இறந்த நகரத்திற்கு) மேற்கில் தீங்கில்லாத ஒரு சிறிய கிராமத்தில் இவள் பிராமணர் குலத்தில் பெண்ணுகப் பிறந்தாள்.

16. அருகினில் பேரூர் தன்னில் அவள்வரன் சுதருண் டாகித்
திருமகள் விலாசம் போன்று செல்வதி வாழுந் நாளில்
வரும்வினை தன்னைச் சொல்வேன் மாரனும் தானு மாகப்
பிரமனுர்ப் பூசை செய்யும் பட்சியின் தலத்தில் சென்று ;

16. இவளுக்கு அந்தக் கிராமத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு பெரிய ஊரிலிருந்து புருஷன் வந்து குழந்தைகளைப் பெற்று லக்ஷ்மியினுடைய கிருபையையும் வாசஞ் செய்வதையும் அடைந்து செல்வமுடையவளாகி வாழ்கின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைச் சொல்லுகின்றேன். இவளும் இவளுடைய புருஷனுமாக இருவரும் பிரமதேவன் பூஜை செய்கின்ற பட்சிஸ்தலம் என்று சொல்லப்பட்ட திருக்கழுக் குன்றத்திற்குப் போய் ;

17. கடவுளைத் தரிசித் தேதான் கடைவீதி சென்ற மாது
அடைவுடன் மஞ்சள் சீப்பு அழகு குங்கும ங்கள் வாங்கி
நடந்தனள் பொருளீ யாமல் நற்கூட்டத் தாலே யம்மா
உடன்செட்டி யெழுந்தி ருந்து உத்தமி தன்னைப் பார்க்க ;

17. கடவுளை அங்குத் தரிசித்துப் பிறகு இவள் கடைத்தெருவிற்குப் போய் மஞ்சள் சீப்பு அழகான குங்குமங்கள் ஆகிய இவைகளை எல்லாம் ஒழுங்காக வாங்கிக்கொண்டு இவைகளின் கிரயத்தைக் கொடுக்காமல் பெரிய கூட்டத்தில் இவள் திருட்டுத்தனமாய்ப் போய் விட்டாள். பார்வதியம்மையே ! உடனே கடைக்காரனுகிய செட்டி எழுந்து இவளைப் பார்க்க ;

18. மானது மறைந்தாப் போலே மங்கையும் செல்லும் போது
ஆனதோர் செட்டி பார்த்து அறைகுவான் மனவெ றுப்பால்
பான்மையாய் வார்த்தை பேசிப் பசைப்புக் குங் குமங்கள் சீப்பு
வேணது வாங்கிக் கொண்டு விடம்போலே சென்ற பாவி ;

18. இவள் ஒரு மான் வேகமாய் ஓடுவது போல வேகமாய்ப் போவதை அந்தச் செட்டி பார்த்து மனக்கஷ்டத்தினுல் சொல்லுகின்றுன். நல்ல தன்மையாக வார்த்தைகளைச் சொல்லி மஞ்சள் குங்குமம் சீப்பு இவைகளை வேண்டிய வரையிலும் வாங்கிக் கொண்டு சர்ப்பத்தை போல நழுவிப் போய்விட்ட பாவியானவளாகிய நீ ;

19. மத்திம வயதிலே தான் மாரனும் மரண மாகிச்
சித்தமாய் மறுஜன் மத்தில் சேய்களு மில்லா தாகி
வித்தகன் சுகமில் லாமல் விதைவையாய் வாழ்வா யென்று
வர்த்தகன் சொல்லி யேதான் இறைத்தனன் தெருதூள் தானும்.

19. உனக்கு மத்திய வயதிலேயே உன்னுடைய புருஷனும் இறந்து உன்னுடைய மறு ஜன்மத்தில் உனக்குக் குழந்தைகள் இல்லாமலும் புருஷனுடைய சுகம் இல்லாமலும் விதவையாகி நீ வாழக்கடவாய் என்று அந்த வர்த்தகனுகிய செட்டி சொல்லித் தெருவிலுள்ள மண் தூளை வாரி எடுத்துத் தூவினுன்.

20. அதுவொரு தோஷமாச்சு அதுவின்றி வேறு சொல்வேன்
சுகிசெய்தாள் பந்தி தன்னில் சார்ந்தது அந்தத் தோஷம்
அகிபதி அந்தி யத்தில் வாயுவால் மரண மாகி
விதியவன் வரையப் பட்டு விளங்கினு ளிவளே யென்றோம்.

20. அஃது ஒரு தோஷமாயிற்று. அதுவுமல்லாமல் இன்னொரு தோஷத்தைப் பற்றி சொல்லுகிறேன். போஜனபந்தியில் மோசஞ் செய்தாள். அந்தத் தோஷமும் வந்து சம்பவித்தது. இவள் தன்னுடைய கடைசி காலத்தில் வாயு ரோகத்தினால் இறந்து, பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இவள் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகிறோம்.

21. அத்தரி சொல்லு கின்றார் அவளுமுன் ஜன்மம் தன்னில்
சுத்தமாய் மறைக் குலத்தில் தோனறினு ளிச்சென்மத்தில்
வித்தகி கங்கை வமிசம் மேவின கார ணஞ்சொல்
பத்தினி முன்ஜன் மத்தில் பந்திவஞ் சனை செய்தும்

21. அத்திரிமக ரிஷியானவர் கேட்கின்றார். அவள் முன் ஜன்மத்தில் சுத்தமான பிராமணர் குலத்தில் பிறந்து இருந்தும் இந்த ஜன்மத்தில் வேளாளர் வம்சத்தில் பிறந்ததற்குக் காரணத்தைச் சொல்லுவீர். அவள் தன்னுடைய முன் பிறப்பில் சாப்பாட்டுப் பந்தியில் வஞ்சனை செய்தாள்.

22. வணிபன்தன் சாப மொன்று வந்ததா லுதித்தா ளென்றோம்
கணிகைக்கு இச் ஜன் மத்தில் கணவனின் சுகமில் லாதாள்
பணிகளு மில்லா ளாகும் பரதேசி போலே வாழ்வள்
துணிவிலா மனத்தா ளாகும் செப்புவோ மிவள்பின் ஜன்மம்.

22. வியாபாரியினுடைய சாபம் ஒன்றும் இவளை வந்து அடையும்படியாய் இவள் பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகிறோம். இவளுக்கு இந்தப் பிறப்பில் தன்னுடைய புருஷனுடைய சுகம் இல்லாதவளாவாள். ஆடையும் ஆபரணங்களும் இல்லாதவளாவாள். பரதேசியைப்போல இருந்து வாழ்பவளாவாள். தைரியமான மனத்தை உடையவளல்லள். இவளுடையபின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம்.

23. ஆலங்காட் டதற்கு உத்தரம் அருகினில் சிற்றூர் தன்னில்
சாலவே யிக்கு லத்தில் சாருவா ளிவளே யென்றோம்
கோலமாயத் தந்தை பூர்வம் கூறுவோம் காஞ்சி தன்னில்
ஏலவே சூத்திர குல எய்தினு னென்று சொன்னோம்.

23. திருவாலங்காட்டிற்குச் சமீபத்தில் வடக்கில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலத்திலேயே மறு ஜன்மத்திலும் ஜாதகருடைய மூத்த சகோதரி பிறப்பாள் என்று சொல்லுகிறோம். ஜாதகரின் தகப்பனாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் காஞ்சீபுரத்தில் சூத்திரராக முன் ஜன்மத்தில் பிறந்தார் என்று சொல்லுகிறோம்.

24. காய்கறி கிழங்கு விற்றும் கடவுளர் பூசை செய்தும்
தீயதாம் குணங்க ளின்றித் தென்திசைத் தலங்கள் தோய்ந்து
பழவினை விலக்கும் சேது பதிக்குமே சென்று இன்னோன
ஞாயமாய் உள்ளூர் சென்று நமன்பதிக் காளா யினனேன்.

24. ஜாதகருடைய தகப்பனார் காய் கறி கிழங்கு இவைகளை விற்பனை செய்தும் கடவுள்களைப் பூஜை செய்தும் கெட்ட குணங்கள் இல்லாமலும் தெற்குத்திக்கிலுள்ள ஸ்தலங்களுக்குப்போயும் அவ்விடத்தில் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தும் பழைய பாவங்களை நிவிர்த்தி செய்யக்கூடிய சேது ஸ்தலத்திற்கும்போயும் இவர் தன்னுடைய ஊருக்குத்திரும்பிவந்தும் இறந்தும் எமபட்டணத்திற்குப் போய்ச்சேர்ந்தார்.

25. வேதனால் வரையப் பட்டு விளங்கினன் கங்கை சேயாய்
மேதினியில் இருநான் கான வில்மாதம் தந்தை கண்டம்
சீதள மதியன் காலம் செப்புவோம் தந்தைக் கேதான்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

25. பிறகு ஜாதகருடைய தகப்பனார் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறந்தார். பூமியில் ஜாதகருக்கு எட்டாவது வயதில் † மார்கழி மாதத்தில் இவருடைய தகப்பனார் இறந்துவிடுவார். இளம்யானையின் முகத்தை யுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணிய மாதாவாகிய பார்வதியம்மையே! கேட்பாயாக.

† குறிப்பு.—தகப்பனார் மரண விஷயம்.—ஜாதகருக்கு வயது ஸ்ரீ 7–0–0 முதல் ஸ்ரீ 8–0–0 முடியும் வரையிலும் சந்திரதசையில் சனி புக்தியும் புதன் புக்தியும் நடக்கின்றன. பிதுர்லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மீனம் ஆகும். இந்த மீனலக்கினத்திற்குப் பாராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி புதன் சூரியன் சுக்கிரன் இவர்கள் மாரகாதிபதிகளாகின்றார்கள். சந்திரன் மீனத்திற்கு ஆறுக்குடையவரும் மாரகாதிபதியும் பிதுர்காரகருமாகிய சூரியனுடன் கூடி மாரகஸ்தானமாகிய மூன்றில் இருந்துகொண்டு மாரகாதிபதியாகிய சனியால் பார்க்கப்பட்டிருக்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் சந்திரன் தன்னுடைய தசையில் பிதாவை மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராகவிருக்கின்றார். சனி மாரகாதிபதியாகி பிதுர்ஸ்தானத்திலேயே இருந்துகொண்டு பிதுர்காரகனாகிய சூரியனையும் பார்ப்பதால் சனி புதனைவிட பிதாவைத் தன் புக்தியில் மாரகஞ்செய்ய அதிக அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

26. இன்னவன் பின்ஜன்மத்தை யியம்புவோம் காஞ்சி தன்னில்
முன்குல முதிப்பா னுகு முயர்வான குடும்பி யாவன்
மன்னரால் ஜீவிப் பானும் வரைந்தது தப்பா தாகும்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

26. ஜாதகருடைய தகப்பனாரின் பின ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் காஞ்சீபுரத்தில் முதல் குலமாகிய பிராமணர் குலத்தில் பிறப்பார். மேன்மையாள குடும்பஸ்தராவார். அரசர்களால் ஜீவனஞ்

செய்வார். நாங்கள் சொன்னது தவறிடாமல் நடக்கும். மேன்மையான யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த உத்தமியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

27. உதித்தவன் மணத்தின் காலம் உரைக்கிறோம் மீரெட் டாண்டில்
அதிபதி உத்தரத்தில் மாதுரு கிளையா லேதான்
சதியிலா மனத்தா ளாகும் தன்வரன் மனம்போல் வாழ்வள்
துதிசெய்தோர்க் கன்ப ளாகும் துருசான நடையு மாவள்.

27. ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவருக்குப் பதினாறுவது வயதில் மனைவி வடக்குத்திக்கிலிருந்து மாதாவினுடைய பந்துவிலிருந்துவந்து நேருவாள். இவள் கெடுதியில்லாத மனத்தை உடையவளாவாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாய் இருந்து வாழ்வாள். இவளைப் பற்றி பெருமையாயும் இவளைப் புகழாயும் பேசினவர்களுக்குச் சினேகத்துடனும் ஆசையுடனும் இருப்பாள். மாசு மறு குற்றம் இவைகள் உள்ள கெட்ட நடவடிக்கையையும் உடையவளாவாள்.

28. சுகமுள வார்த்தை சொல்வள் சொல்லுமுன் கோபி யாவள்
தகைமையாய்க் குடும்பி யாவள் தைரிய மனத்தா ளாகும்
நகையது மிச்சை யுள்ளாள் நாயகி சிவந்த மேனி
இகபரன் பத்தி கொள்வள் இன்பமாய் வார்த்தை சொல்வள்.

28. ஜாதகருடைய மனைவி சுகமானதும் அன்பு நிறைந்ததுமான வர்த்தைகளைச் சொல்லுவாள். இவள் பேசுவதற்கு முன்னே கோபத்தை உடையவளாவாள். தகுதியானதும் பெருமையுள்ளதுமான குடும்பஸ்தையாக விருப்பாள். தைரியமுள்ள மனத்தை உடையவளாவாள். ஆபரணத்தின்மேல் ஆசையுள்ளவள். இவள் சிவப்பு நிறமான தேகத்தை உடையவள். பரமசிவத்தின் மேல் பக்தியும் அன்பும் உடையவள். இனிப்பான வார்த்தைகளைச் சொல்லுவாள்.

29. புத்திமான் உயர மில்லான் பந்துவும் புகழ வாழ்வள்
சுத்தமு முடையா ளாகும் துருசான நடையு மாவள்
பத்தினி மானவர்க்கு அன்னம் படைப்பளாம் யோகசாலி
அத்தியைப் பெற்ற மாதே அறைகிறோம் புத்திர பாவம்.

29. ஜாதகருடைய மனைவி அறிவுள்ளவள். உயரமில்லாதவள். பந்துக்கள் இவளைப் போற்றும்படி இருந்து வாழ்வாள். சுத்தத்தை உடையவளாவாள். மாசு மறு இவைகளை உடைய நடவடிக்கை உள்ளவளாவாள். இவள் மனிதர்களுக்கும் மானமுடையோர்களுக்கும் சாப்பாடுபோடுவாள். யோகமுடையவள். யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! இனிமேல் புத்திரபாவத்தைப் பற்றிச் சொல்லுகிறோம்.

30. சுதர்களு மறுவர் தோன்றும் தோகை யரிருவ ராகும்
சதமுள ஆண்பால் ரெண்டு சாற்றுவோம் தீர்க்க மாக
விதியது முடியும் ரண்டு விளம்பின மொழிகுன் றுது
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

30. ஜாதகருக்கு ஆறு குழந்தைகள் பிறப்பார்கள். இவர்களில் பெண் குழந்தைகள் இரண்டுபேர் ஆகும். ஆண் குழந்தைகள் இரண்டுபேர் ஆகும். ஆக மொத்தம் நான்கு குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாகவிருப்பார்கள் என்று சொல்லுகிறோம். இரண்டு குழந்தைகள் ஆயுள் முடிந்து இறந்து போய்விடும். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறாமல் நடக்கும். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

31. அன்னைமால் நிறத்தா ளாகும் அன்புள மனத்தா ளாகும்
மன்னிய உணச்சல் தேகி மறுமொழி அதிகம் கூறுள்
தன்மனச் சஞ்ச லத்தாள் தர்மமும் குணத்தா ளாகும்
பின்னமில் லாத தேகி பிணிகளும் சேர்க்கா ளென்றோம்.

31. ஜாதகருடைய தாயார் மகாவிஷ்ணுவின் நிறமான நீலமேகவர்ணம் என்று சொல்லப்பட்ட ஒரு விதமான நிறத்தையுடையவளாகும். ஆசையுள்ள மனத்தை உடையவளாவாள். மிகவும் மெல்லிய தேகமுடையவள். அதிகமாகப் பதில் சொல்லாதவள். தன்னுடைய மனத்தில் துக்கத்தை உடையவள். தருமஞ்செய்யுங் குணத்தை உடையவளாவாள். அங்கவீனம் ஒன்றுமில்லாத தேகத்தை உடையவள். நோய்களும் இல்லாதவள் என்று சொல்லுகிறோம்.

32. அவள்துணை ஆண்டாலொன்று அம்பிகை மார்கள் மூன்று
இவர்களும் தீர்க்க மெய்து மிடாகு மற்ற வெல்லாம்
தவசியே மாமன் சேதி சாற்றுவோ மிரண்டி லேதான்
நவனியில் இவள்தன் பூர்வம் நாட்டுவோம் கேளும் தாயே.

32. ஜாதகரின் தாயாருடைய சகோதரங்களில் ஓர் ஆணும், மூன்று பெண்களுமாக நான்கு பேரும் ஆவார்கள். இந் நான்கு பேர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார்கள். மற்றைச் சகோதரங்கள் எல்லாரும் இறந்துபோய் விடுவார்கள். பார்வதியம்மையே! ஜாதகரின் அம்மானுடைய விஷயத்தை இரண்டாவது பாகத்திற் சொல்லுகின்றோம். பூமியில் ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

33. பனங்காட்டுக் கருகில் தெற்கில் பிறந்தனள் அருகர் வமிசம்
தனமிக உடையா ளாகித் தன்சுதர் தீர்க்க முண்டாய்
வினையதைச் சொல்லக் கேளாய் விரதகா லங்கள் தம்மில்
சினமாக இச்சை யின்றிச் செய்தனள் அதுஓர் தோஷம்.

33. ஜாதகருடைய தாயார் பனங்காட்டூருக்குச் சமீபத்தில் தெற்குத் திக்கிலுள்ள ஓர் ஊரில் சமணருடைய குலத்திற் பிறந்தாள். அதிகப் பணம் உடையவளாகியும் தன் குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவளாயும் வாழுங்காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்த பாவததைச் சொல்லுகிறேன். கேட்பீராக. விரதங்களைச் செய்யுங்காலத்தில் இந்த விரதங்களின்மேல் ஆசையில்லாமலும் கோபமாயும் செய்தாள். அதனால் ஒரு தோஷம் ஏற்பட்டது.

34. மைத்துனன் மனைவி பேரில் அதிகமாய் நிந்தை சொல்லிச்
சுத்தர்தா ருடனே சொல்லித் தோகையை விலக்க லுற்றாள்
வித்தகி மனவெ றுப்பால் விளம்புவாள் சாபம் தானும்
குத்தமில் லாமல் என்மேல் குறைகளைச் சொன்ன பாவி ;

34. ஜாதகருடைய தயார் தன்னுடைய மைத்துனனுடைய மனைவியின்மேல் அதிகமாகக் குற்றங்களையும் பழிகளையுஞ் சொல்லி இவைகளைப் பந்துக்களிடத்திலுஞ் சொல்லி அந்த ஸ்திரீயை குடும்பத்திலிருந்து விலக்கிவிடும்படியாய்ச் செய்து விட்டாள். விலக்கப்பட்ட அந்த ஸ்திரீ மனம் நொந்து சாபத்தைக் கொடுக்கின்றாள். "யாதொரு குற்றமும் செய்யாத என்மேல் குற்றங்களைச் சாட்டிச் சொல்லிய பாவியாகிய நீ ;

35. மறு ஜன்மம் தோன்றி யேதான் மத்திம வயதி லேதான்
வரனுமே மரண மாகி மாநிலம் நிந்தை யாகி
உறை யென்று சொல்லி உத்தமி தெருத் தூள் வாரி
இறைத்துப் பின் சென்று ளென்றே மிசைந்தது அது ஓர் தோஷம்.

35. அடுத்த ஜன்மத்தில் பெண்ணாகப் பிறந்து உன்னுடைய நடு வயதில் உன்னுடைய புருஷனும் இறந்து பூமியில் பழியை அடைந்து வாழக்கடவாய் என்று அந்த ஸ்திரீ சொல்லித் தெருவிலிருந்த மண்ணை எடுத்து இறைத்துவிட்டுப் போய்விட்டாள் என்று சொல்லுகிறோம். அந்த ஒரு தோஷமும் இவளுக்கு வந்து சம்பவித்தது.

36. அந்திய காலம் தன்னில் அவள்குன்ம ரோகத் தாலே
அந்தகன் பக்கல் சென்று அயனுமே வரையப் பட்டு
வந்தவ ளிவளே யென்றோம் மங்கையின் சாபம் போலே
இந்தவள் தனக்கு நேரும் ஈச்வரி கேட்டி டாயே.

36. ஜாதகரின் தாயார் தன்னுடைய கடைசி காலத்தில் குன்ம நோயால் இறந்து எமனிடத்திற்குப் போய்ப் பிறகு பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகிறோம். அந்த முன் ஜன்மத்திய ஸ்திரீயினுடைய சாபம்போல இந்த ஜன்மத்தில் இவளுக்குத் தோஷங்கள் சம்பவிக்கும். பார்வதியம்மையே ! கேட்பீராக.

37. பின்ஜன்மம் அவனூர் தன்னில் பிறப்பளே யிக்கு லத்தில்
அன்னவள் வறுமை யில்லாள் அரன்பூஜை செய்வா ளென்றோம்
இன்னவன் பூர்வம் தன்னை யியம்புவோ மினிமே லாக
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

37. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மறு ஜன்மத்தில் அவனூரில் இந்த ஜன்மத்தில் பிறந்த ஜாதியிலேயே பிறப்பாள். இவள் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டாள். சிவபெருமானைப் பூஜை செய்வாள் என்று சொல்லுகிறோம். ஜாதகருடைய முன் ஜன்மத்தைப் பற்றி இனிமேல் சொல்லுகிறோம். மேன்மையான யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த உத்தமியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

38. பிருதிவி மேற்ப்பா லாகப் பேரூரில் செங்குந்த வமிசம்
அரன்மத மிவனு தித்து அனுகியே மனைவி மைந்தர்
திருமகள் விலாசம் பெற்றுச் சிறப்பான குடும்பி யாகி
வருவோர்க்கு அன்ன மீந்து மார்க்கத்தில் தாகப் பந்தல் ;

38. ஜாதகர் பிருதிவி ஸ்தலமாகிய காஞ்சீபுரத்திற்குக் கிழக்கு திக்கிலுள்ள ஒரு பெரிய ஊரில் செங்குந்தர் என்று சொல்லப்பட்ட கைக்கோளர் குலத்தில் சிவமதத்தில் முன் ஜன்மத்திற் பிறந்து மனைவி மக்கள் இவர்களை உடையவராகி இலக்ஷ்மியினுடைய குடியிருப்பையும் கிருபையையும் அடைந்து செல்வவானுகி மேன்மையான ஒரு குடும்பஸ்தாரகித் தன்னிடத்திற்கு வருகின்றவர்களுக்குச் சாப்பாடு போட்டும் போக்குவரவு வழியில் தாகவிடாயைத் தீர்க்க நீர்மோர் பந்தல் ஒன்றை

39. வைத்துமே கடவுள் பக்தி வளமுள தலங்கள் சென்று
சித்திஇல்லம் நீங்கிச் சேவலன் கொடியோன் பத்தி
உத்தமன் கொண்டு மேதான் உறைந்தனன் மறலி பக்கல்
வித்தகன் பிரமன் லக்கம் மேதினில் வரையப் பட்டு ;

39. வைத்துக் கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உடையவராகிச் செழிப்புற்றோங்கிய நல்ல ஸ்தலங்களுக்குப் போய்ப் பிறகு அழகான சித்திரங்களை உடைய தன்னுடைய வீட்டை விட்டுப் போய்ச் சேவல் கொடியை உடையவராகிய முருகக்கடவுளின்மேல் ஜாதகர் பக்தியும் அன்பும் உடையவராகிப் பிறகு இறந்து எமனிடத்திற்குப் போய்ப் பிறகு பிரம தேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்தப் பூமியில் ;

40. வந்தவ னிவனே யென்றோம் வரைகிறே மிவனின் யோகம்
முந்திநாள் வறுமை யுண்டு மேதினில் குறைவாழ் வுண்டு
எந்தையே சல்லியமுண்டு இவன்பாரி வந்த பின்பு
சிந்தையும் கலக்கம் நீங்கும் சந்திரன் பிறைபோல் யோகம்.

40. வந்து ஜாதகர் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகிறோம். இனிமேல் இவருடைய யோகத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இளம் பிராயத்தில் கஷ்டங்களும் தரித்திரமும்

உண்டு. பூமியில் இவருடைய வாழ்க்கை குறைவுகளை உடையதாக விருக்கும். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! இவ நக்குக் கடன் வந்து நேரிடும், இவருடைய மனைவி இவரிடத்திற்கு வந்து சேர்ந்த பிறகு இவருடைய மனக் கவலையும் துன்பங்களும் நீங்கிப் போய்விடும். இவருக்கு வளர்பிறைச் சந்திரனைப் போல யோகம் அதிகரிக்கும்.

41. கல்வியால் ஜீவிப் பானும் கனத்ததோர் பூமி சேர்ப்பன்
நல்லவர் பலர்களாலே நயப்புறும் பூமிசேர்ப்பன்
சுவல்பசல் லியங்களுள்ளான் சுகதுக்க மிரண்டு மூள்ளான்
மல்லுக்குச் செல்லா னுகும் மால்திருப்பணியும் செய்வன்.

41. ஜாதகர் தன்னுடைய வித்தையால் ஜீவனஞ் செய்பவராவார். மேன்மையான நிலங்களைச் சேர்த்து வைப்பார். அநேக நல்லவர்களால் கீர்த்தியையும் நிலங்களையும் அடைவார். இவருக்குக் கொஞ்சம் கடன் இருக்கும், சுகத்தையும் துக்கத்தையும் மாறி மாறி அனுபவிப்பார். சண்டைக்குப் போகமாட்டார். மகா விஷ்ணுவினுடைய கோயிலில் வேலைகளைச் செய்வார்.

42. எப்படி யோகம் சொன்னீர் இயம்புவீர் முனியே நீர்தாம்
செப்புவேன் தர்ம கர்மன் சேர்ந்துமே யிருப்பதாலும்
ஒப்புடன் ஜன்மத் தானு முச்ச மொளி லாபம் நிற்க
மெய்ப்புடன் கேசரி யோகம் விளம்புவோ மிவனுக் கேதான்.

42. ஜாதகருக்கு எந்தக் காரணங்களினுல் யோகமுண்டாகும் என்பதை முனிவரே! நீரே சொல்லுவீராக. நான் காரணத்தைச் சொல்லுகின்றேன். தர்மாதிபதியாகிய குருவும் கர்மாதிபதியாகிய அங்காரகனும் ஒன்ருய்க்கூடி இருப்பதாலும், ஜன்மாதிபதியாகிய சந்திரன் உச்சமாயிருப்பதாலும் ஒளியுடையவராகிய சூரியன் லாபமாகிய பதினென்றில் இருப்பதாலும உண்மையாக இவருக்குக் கேசரியோகம் உண்டு என்று சொல்லுகிறேம்.

குறிப்பு.—யோகங்கள் விஷயம் ஒன்பதிற்குடையவரும் பத்திற்குடையவரும் இங்கு கூடி இருப்பது தர்ம கர்மாதிபதி யோகம் என்று சொல்லப்படும். இங்கு சந்திரனுக்குப்பத்தில் குரு இருப்பதால் கேசரியோகம் இருக்கின்றது. கேசரியோகத்தைப்பற்றி ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் 116-ஆவது சுலோகத்தையும், ஜாதக அலங்காரம் 274, 276-ஆவது பாடல்களையும், ஜாதக சிந்தாமணி 2192-ஆவது பாடலையும், பலதீபிகை 6-ஆவது அத்தியாயம் 10-ஆவது சுலோகத்தையும் பார்க்கவும். மேலும் இந்த ஜாதகத்தில் சூரியனுக்குப் பன்னிரண்டிலும்இரண்டிலும் கிரகங்கள்இருப்பதால் ஜாதக பாரிஜாதம் 7-ஆவது அத்தியாம் 121-ஆவது சுலோகம் பிரகாரமும், ஜாதக சிந்தாமணி 2949, 2950, 2951-ஆவது பாடல்கள் பிரகாரமும் வேசியோகம் வாசியோகம் இவைகள் அடங்கியுள்ள உபயசரியோகம் என்ற யோகமும் இருக்கின்றது. ஜாதகசாரதீபிகை, பலதீபிகை இவைகளையும் பார்க்கவும். மேலும் சந்திரனுக்கு இரண்டு பக்கங்களிலும் சூரியன் தவிர, மற்றக் கிரகங்களில் இரண்டு கிரகங்கள் இருப்பதால் ஜாதக பாரிஜாதம் 7-ஆவது அத்தியாயம் 72, 73-ஆவது சுலோகங்களின் பிரகாரம் அனபாயோகம் சுனபாயோகம் இவைகள் அடங்கியுள்ள துருதுராயோகமும் இருக்கின்றது. இது விஷயமாய் ஜாதகாலங்காரம், பலதீபிகை, ஜாதகசாரதீபிகை இவைகளையும் பார்க்கவும்.

43. மூவேமு ஆண்டின் மேலாய் விளம்புவோம் விசேஷ யோகும்
கோவலர் நேச மாகும் குறைமன நிவிர்த்தியாகும்
தாவினோர்க்கு தவியாகும் சல்லியம் நிவிர்த்தியெய்தும்
நாவது மேன்மை யாகும் நற்பல தீர்த்தம் நேரும்.

43. ஜாதகருக்கு இருபத்தோராம் வயதிற்கு மேலே அதிகமான யோகத்தைச் சொல்லுகிறேம். இவருக்கு அரசர்களுடைய சிநேகம் உண்டாகும். மனக்கவலை நீங்கிவிடும். தன்னிடத்திற்கு வந்து சேர்ந்தவர்களுக்கு இவர் சகாயங்களைச் செய்வார். கடன் நிவிர்த்தியாகி விடும். இவருடைய வாக்குகள் மேன்மை யுடையனவாகப் பாவிக்கப்படும். அநேக நல்ல தீர்த்தங்களுக்கும் போவார்;

44. முப்பது மூன்று ஆண்டில் முயலாடி மாதம் தன்னில்
செப்புவோ மன்னே கண்டம் சேஷ்டற்கு நாற்பதாண்டில்
ஒப்புடன் கூனி மாதம் உரைக்கிரேம் மார கங்கள்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் ருது.

44. ஜாதகருக்கு முப்பத்து மூன்ருவது வயதில் ஆடி மாதத்தில் இவருடைய தாயார் இறந்து போய்விடுவாள். மூத்த சகோதரிக்கு இவருடைய நாற்பதாவது வயதில் பங்குனி மாதத்தில் மரணம் நேரிடும் என்று சொல்லுகிறேம். சர்பத்தைத் தன்னுடைய ஜடையில் தரித்துக் கொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே: நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

குறிப்பு.—மாதுர் மாரகம்.—ஜாதகருக்கு வயது ஷூ 32–0–0 முதல் ஷூ 33–0–0 முடியும் வரையிலும் ராகு தசையில் சுக்கிர புத்தியும் சூரிய புக்தியும் நடக்கின்றன. ஆனுல் ஆடி மாதத்தில் சுக்கிரபுக்தியே நடக்கின்றது. மாதுரு லக்கினம் நான்காவது பாவமாகிய துலா மாகும். துலாலக்கினத்திற்கு ஜாதக சந்திரிகை பராசரஹோரை இவைகளின் பிரகாரம் சூரியனும் குருவும் மாரகாதிபதிகள் ஆகின்ருர்கள். சனி சூரியனையும் மாதுருகாரகனுகிய சந்திரனையும் பார்க்கின்ருர். மேலும் இவர் துலாத்திற்கு ஆறில் இருக்கின்ருர். ராகு, சனியினுடைய வீட்டில் இருந்து கொண்டு சனியைப் பார்க்கின்ருர். இராகு சூரியனுடைய காலாகிய உத்தராட நட்சத்திரத்தில் இருக்கின்ருர். ஜாதகசந்திரிகை 23, 26-ஆவது சுலோகங்களின் பிரகாரம் சனி மாதாவுக்கு மாரகாதிபதியாகச் சனிக்கு மேற் சொல்லிய காரணங்களால் ஏற்படுகின்ருர். ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் இராகு சனியினுடைய பலனைக் கொடுக்க வேண்டியவராக விருப்பதால் மாதாவுக்குத் தன் தசையில் மாரகத்தைக் கொடுக்க அமைப்பு உள்ளவரா

னின்றார். சுக்கிரன் துலாலக்கினத்திற்கு ஒன்றிற்கும் எட்டிற்கும் உடையவராகி இருப்பதால் துய்யகேரளம் எட்டாவதுபாகம் 14-ஆவது பாடல் பிரகாரம் சுக்கிரன் தன்புக்தியில் மாதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உள்ளவராக விருக்கின்றார்.

மூத்த சகோதரி மாரக விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷூ 39-0-0 முதல் 40-0-0 முடியும் வரையில் குருதசையில் சனிபுக்தி நடக்கின்றது. மூத்த சகோதரியின் லக்கினம் பதினோராவது பாவமாகிய ரிஷபம் ஆகும். ரிஷப லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் குரு சந்திரன் சுக்கிரன் புதன் அங்காரகன் இவர்கள் மாரகாதிபதிகளாகின் றார்கள். குரு ரிஷபத்திற்கு எட்டிற்கும் பதினொன்றிற்கு உடைய மாரகராய் இருக்கின்றார். லக்கினபதியாகிய சுக்கிரனையும் பார்க்கின்றார். ஆகையால் இவருக்குத் தன் தசையில் மூத்த சகோதரியை மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கின்றது. சனி ரிஷபத்திற்குப் பதினொன்றில் இருந்து கொண்டு ரிஷபத்தையும் மாரகாதிபதியாகிய சந்திரனையும் பார்ப்பதால் இவருக்கு மூத்த சகோதரியை மாரகஞ் செய்ய அமைப்பு உண்டு.

45. இன்னவன் மரணகால மியம்புவோ மறுபா னெட்டில்
தன்தனுர் மாதம் தன்னில் சாற்றினே மேகா தசி
அன்னவ னுடலம் ஏகும் அம்மொழி பராசர் சொல்ல
துன்மையை விலக்கு கின்ற ஐயமுனி கூறு கின்றார்.

45. ஜாதகருடைய மரண காலத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவருக்கு அறுபத்தெட்டாவது வயதில் மார்கழி மாதத்தில் ஏகாதசி திதியில் மரணம் நேரிட்டு இவருடைய தேகம் மறைந்துபோய் விடும். இவ்வித மாகப் பராசர முனிவர் சொல்ல, கெடுதியை நிவிர்த்தி செய்கிற ஐய முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார்.

46. ஆதியி லிரண்டாண் டுக்குள் அணுகிடும் கண்ட மென்றேும்
நீதியா யிருநான் காண்டு நிகழ்த்தவா மீரொனபானில்
வேதனை யுண்டு என்றேும் விளம்பின மொழியைக் கேட்டு
ஏதுநோய் வந்த போதுமிரவிமுன்பனிபோ லாகும்.

46. ஜாதகருக்கு முதலில் இரண்டு வயதிற்குள்ளே அதிகமான கண்டங்கள் நேரிடும் என்று சொல்லுகிறோம். எட்டாவது வயதிலும் பதினெட்டாவது வயதிலும் கஷ்டங்களும் நோய்களும் நேரிடும் என்று சொல்லுகிறோம் என்று ஜெய முனிவர் சொல்ல இதைக் கேட்ட பராசரர் எந்த நோய் வந்த போதிலும் அது சூரியன் முன்னே பனியானது விலகி மறைந்து போவது போல விலகி நிவிர்த்தியாகிவிடும் என்று சொன்னார்.

47. காரணம் யாது என்னக் கலைமதி[1] தனக்குப் பத்தில்
பார்[4]மகன்[2] பொன்னேன்[3] நிற்க பாலகன வயது தீர்க்கம்
காரி[4] பான்[5] தசை காலத்தில் கழறுவைாம் கண்டம் தானே
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

[1] வளர்பிறைச்சந்திரன். [2] அங்காரகன். [3] குரு. [4] சனி. [5] சூரியன்.

47. காரணம் என்ன வென்று முனிவர் கேட்க, பாராசரமுனிவர் சொல்லுகின்றார். வளர்பிறைச் சந்திரனுக்குப் பத்தில் அங்காரகனும் குருவும் இருப்பதால் ஜாதகருக்கு நீண்ட ஆயுள் உண்டு. சனி, சூரியன் இவர்களுடைய தசைக்காலங்களில் கெண்டங்கள் நேரிடும் என்று சொல்லு கிறோம். * ஆறு பெருமை பொருந்திய முகங்களையுடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு.—ஜாதகருக்குக் கண்டங்கள் மாரகம் இவைகளின் விஷயம்.—கடகலக்கினத்திற்குச் சூரியன் இரண்டிற்குடையவர். சனி ஏழிற்குடையவர். ஜாதகசந்திரிகை 22-ஆவது சுலோகப் பிரகாரம் 2, 7-க்குடையவர்கள் பெரிய மாரகாதிபதிகள் ஆவார்கள். மேலும் இதர நாடிகளிலும் ஏழிற் குடையவர்களுடைய தசையிலும் ஒவ்வொருதசையிலும் வருகின்ற இவர் களுடைய புக்திகளிலும் கெண்டங்கள் ஜாதகருக்கு ஏற்படும் என்று சொல்லி இருக்கின்றது, ஆகையால் இவ்விடத்திலும் சனிதசையிலும் சூரியதசையிலும் கெண்டங்கள் நேரிடும் என்று சொல்லி இருக்கின்றது. மேலும் ஜாதகருக்கு வயது ஷூ 67-0-0 முதல் ஷூ 68-0-0 வரையிலும் சனிதசையில் ராகுபுக்தி நடக்கிறது. 45-ஆவது பாடலில் ஜாதகருக்கு 68-ஆவது வயதில் தனுர்மாத த்தில் மாரகம் என்று சொல்லிஇருக்கின்றது. பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் கடகலக்கினத்திற்குச் சனி சுக்கிரன் புதன் இவர்கள் மாராகாதிபதிகள் ஆகும். சனி ஏழு எட்டிற்குடையவராகி லக்கினதிபதி யாகிய சந்திரனைப் பார்க்கின்றார். துய்யகேரளம் எட்டாம் பாகம் 14-ஆவது பாடல் பிரகாரமும் சனி ஜாதகருக்கு மாரகஞ் செய்ய அமைப்புடையவராய் இருக்கின்றார். ராகு சனியினுடைய வீட்டில் இருந்து கொண்டு சனியைப் பார்ப்பதால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் இராகு தன் புக்தியில் ஜாதகருக்கு மாரகஞ் செய்ய அமைப்புள்ள வராக விருக்கின்றார்.

48. பாலகன் ஜனன காலம் பரிதியின் தசையிலேதான்
கோலமா யாண்டு ஒன்று கூடிய திங்களைந்தும்
சாலவே பிணியு மெய்தும் சல்லிய மதிகம் நேரும்
ஏலவே காலி பீடை யியம்புவோம் விவரம் ரெண்டில்.

48. ஜாதகர் பிறக்குங் காலத்தில் சூரிய மகா தசையில் இருப்பு ஒரு வருஷமும் ஐந்து மாதமும் ஆகும். இந்தக் காலத்தில் ஜாதகருக்கு நோய்கள் வரும். கடன்கள் அதிகமாக ஏற்படும். கால் நடைகளுக்கு நோய்கள் உண்டாகும். விவரங்களை இரண்டாவது பாகத்திற் சொல்லுகிறோம்.

49. இன்னமும் சிலது சேதி யியம்பு வோ மிரண்டி லேதான்
அன்னவன் பூமி வீடு ஆபரண ங்களெ ல்லாம்
சொன்னேனே பதினுயி ரம்பொன் சுதனுமே அடைவா னுகும்
இந்திர னிறைஞ்சு மாதே யிம்மொழி தப்பா தாமே.

49. இன்னும் சில விஷயங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லு கிறோம். ஜாதகர் நிலம் வீடு ஆபரணங்கள் ஆகிய இவைகள் எல்லாம்

சேர்ந்து பத்தாயிரம் பொன் பெறக்கூடிய சொத்தை அடைவார் என்று சொல்லுகின்றேம். இந்திரன் வணங்குகின்ற பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய இந்த வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

50. பின்ஜன்மம் தில்லே தன்னில் பிறப்பனும் பிரம்ம சேயாய்
அன்னியர்க குபதே சித்து ஆந்தோளியுடைய னுகி
இன்னவன் வாழ்வா னுகும் இயல்செய முனிவர் கூறுவர்
மன்னவன் இப்பி றப்பி லறிவிப்பீர் செயல்கள் தாமே.

50. ஜாதகர் மறு ஜன்மத்தில் தில்லே என்ற சிதம்பரத்தில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். பிறருக்கு உபதேசங்களேச் செய்து பல்லக்கு உடையவராகி வாழ்வார் என்று பராசாமுனிவர் சொல்ல, ஜயமுனிவர் கேட்கின்ருர், ஜாதகர் இந்த ஜன்மத்தில் செய்த காரியங்களேச் சொல்லுவீர்.

51. திருப்பணி செய்வா னுகும் சிந்தையும் கலக்க மின்றிக்
குருபாதம் பெற்ற தாலும் காலனே உதைத்தோன் பத்தி
பெருமையாய்க் கொண்ட தாலும் பிறப்பனே பிரம்ம சேயாய்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

51. ஜாதகர் கோயில் வேலேகளேச் செய்வார். தன் மனத்தில் குற்றங்கள் இல்லாமல் குருவினுடைய அருளேயும் அடைந்த தாலும் எமனேயுதைத்த சிவபெருமான்மேல் பக்தியும் அன்பும் பெருமையாக உடையவராய் இருந்ததாலும் மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தை யாகப் பிறப்பார். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக் களில் விளங்குகின்ற பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 93

1. சந்திரன் கேது வண்டி[1] சனிதேளில்[2] ராகு மானில்[3]
புந்தியும்[4] ரவி சேய்[5] மன்னன்[7] பெண்ணினில்[8] புகரும்[9] சீயம்[10]
இந்தவாறு சேர்ந்து நின்று இடமது வளே[11] யலாக
அந்ததோர் பலன்கள் எவ்வாறு அறிவிப்பீர் விபரமாக.

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td>லக்கினம்
சந்திரன்
கேது</td></tr>
<tr><td>ராகு</td><td>சுக்கிரன்</td></tr>
<tr><td></td><td>சனி</td><td></td><td>சூரியன்
அங்காரகன்
புதன்
குரு</td></tr>
</table>

பூசம் 3-ஆம்பாதம், சனிதசை ஷ 6-6-0.

1. சந்திரனும் கேதுவும் கடகத்திலும், சனி விருச்சிகத்திலும், ராகு மகரத்திலும், புதனும் சூரியனும் அங்காரகனும் குருவும் கன்னியி லும், சுக்கிரன் சிம்மத்திலும், இவ்விதமாகக் கிரகங்கள் இருந்து ஜன்ம லக்கினம் கடகமானுல் இந்த ஜாதகத்தினுடைய பலாபலன்களே விவரமாக சொல்லுவீர்.

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின் வரும் அம்சைச் சக்கர கிரகநிலே பொருத்தமுடையதாகும்:—மேஷத்தில் சுக்கிரனும் ராகுவும், கடகத்தில் சனியும், சிம்மத்தில் அங்காரகனும், துலாத்தில் சந்திரனும் கேதுவும், மகரத்தில் புதனும் குருவும், கும்பத்தில் சூரியனும் ஆகும்.

2. தானது ஆணும் ஜன்மம் தந்தையில் கீழ்மேல் வீதி
மானமாய் உத்தர வாசல் மாகாளி வடமே லாகும்
ஆனதோர் தந்தி மேற்கில் அருகினில் தடாக முண்டு
பாண்மையாய்ச் சிற்றூர் தன்னில் பிறப்பனும் நான்காம் ஜன்மம.

2. ஜனனமான குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும், ஜாதகரின் தகப்பனுருடைய வீடு கிழக்கு மேற்குத் தெருவில் வடவண்டை வாடையில் தெருவாயிற்காலே உடையதாக விருக்கும். பெரிய காளிகோயில்

---

[1] கடகம். [2] விருச்சிகம். [3] மகரம். [4] புதன். [5] சூரியன். [6] அங்காரகன். [7] குரு. [8] கன்னி. [9] சுக்கிரன். [10] சிம்மம். [11] கடகம்.

வடமேற்குத்திக்கில் இருக்கும். விநாயகக்கடவுளின் கோயில் மேற்குத்திக்கில் இருக்கும். சமீபத்தில் ஒரு குளம் இருக்கும். தகுதியான ஒரு சிறிய கிராமத்தில் நான்காவது கர்ப்பத்தில் ஜாதகர் பிறப்பார்.

3. இன்னவன் ஜனன யோகம் எழில்பெரு தந்தை யோகம்
மன்னிய அன்னை யோகம் வரும்துணை களத்திர புத்திரர்
தன்னிலே முன்பின் ஜன்மம் சாற்றுவோ மிந்நூல் தன்னில்
அன்னையே யாங்கள் சொல்லு மருள்மொழி குன்று தென்றேம்.

3. ஜாதகருடைய ஜனன காலத்திய யோகம், தகப்பனுருடைய யோகம், தாயாருடைய யோகம், கூடப்பிறந்தவர்கள் மனைவி மக்கள் முன் ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் இந்தச் சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுகிறேம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! நாங்கள் உங்களுடைய கிருபையாலே சொல்லும் அருள் வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும் என்று சொல்லுகிறேம்.

வேறு.

4. தந்தைகுணம் கூறுகின்றேம் அரியாம்ராசி
சகடுநாள் தோன்றிடுவனிரு நிறத்தன்
வந்தவர்தமக் கன்னமீவ னூகசாலி
மர்மநூல் தனையறிவான் கல்விமானும்
சிந்தைமர்ம மில்லாதான் கிருஷிசெய்வன்
தீரனும் அற்பவஸ்து சேர்ப்பானுகும்
முந்துமால் பத்தியுளன் பணையோர்விருத்தி
உயர்வான குடும்பியென்றேம் எய்தும்பூமி.

4. ஜாதகரின் தகப்பனுருடைய குணதிசயங்களைச் சொல்லுகின்றேம். இவர் சிம்ம ராசியில் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்திருப்பார். இரண்டு நிறங்கள் கலந்த நிறமாகிய மாநிறமுள்ள தேகத்தை உடையவர். தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். நுட்பமான புத்தியை உடையவர். மர்ம சாஸ்திரத்தை அஃதாவது காமநூலை யறிந்தவர். தனனுடைய மனத்தில் இரகசியத்தை உடையவரல்லர். விவசாயத் தொழிலைச் செய்வார். தைரியமுடையவர். அற்பமான வஸ்துக்களைச் சேர்த்து வைப்பார். முதல்வராம்மகாவிஷ்ணுவின் மேல் பக்தியும் அன்பும் உடையவராவார். நிலங்களும் ஏர்களும் இவருக்கு விருத்தியடையும். இவர் மேன்மையான குடும்பஸ்தராகவிருப்பார் என்று சொல்லுகிறேம். நிலங்கள் வந்து சேரும்.

5. பூமியது விருத்திசெய்வன் கூவல்செய்வன்
பெண்துணைவி தன்னுலே நிந்தையுண்டு
ஆவுகளும் விருத்தியுண்டு மூலச்சூடு
அணுகிடுமே யேழைபட்டவன் அறிவோர்நேயன்

நாதவருன் துணையாண்மூன் றேயாகும்
நாரியு மவ்வாருய் நவிலு'வோமே
பாவையொருத்தி யால் லவமான முண்டு துணைவர்
வேருய்ப் பகருவோ மவர்சேதி பின்பால் சொல்லுவோம்

5. ஜாதகருடைய தகப்பனுர் நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார். கிணறுகளைத் தோண்டுவார். இவருக்கு இவருடைய சகோதரியால் அவமானம் ஏற்படும். பசுக்கள் விருத்தியாகும். இவருக்கு மூலச்சூடு உண்டாகும். ஏழையானவர். புத்திசாலிகளுக்கும் வாசித்தவர்களுக்கும் சிநேகிதராக விருப்பார். தான் சொல்லும் வார்த்தைகளை தவருமல் காப்பாற்றுவார். இவருடன் கூடப்பிறந்தவர்கள் ஆண்கள் மூன்று பேரும் பெண்கள் மூன்று பேரும் உண்டு என்று சொல்லுகிறேம். இவருக்கு ஒரு சகோதரியால் அவமானம் நேரிடும். சகோதரர்கள் வெவ்வேறு குடும்பமாக விருப்பார்கள். அவருடைய விஷயங்களைப் பின்னுல் சொல்லுகின்றேம்.

6. சொல்லிய யிக் குணத்தானுக்கு இந்தப் பாலன்
தோன்றுவான் துணைஆண்பால் முன்னேனென்று
புல்குவோ மவன்குணத்தை மாநுஜன்மம்
பொருந்துமுத் தரட்டாதி நாளேயாகும்
வல்லவனு மிருநிறத்தன் உணச்சல்நீட்சி
மர்மவான் கல்விகொஞ்சம் வார்த்தைதப்பான்
இல்லறமும் புதிதாக யெய்து வானும்
இடர்செய்யான் நிலம்விருத்தி யீகைவானும்

6. இங்குச் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருக்குச் சகோதரரான ஓர் ஆண் இருக்கும். இந்த ஆண் சகோதரர் மூத்த சகோதரர் ஆவார். இவருடைய குணுகுணங்களைப் பற்றிச் சொல்லுகிறேம். இவர் மகரராசியில் பிறப்பார். இவருடைய நட்சத்திரம் உத்தரட்டாதியாகும். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறமுள்ள தேகத்தை உடையவர். வரண்டு, நீண்டு உள்ள மெல்லிய தேகத்தை உடையவர். ரகசியமான மனத்தை உடையவர். கொஞ்சமான படிப்பை உடையவர். தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிப்போக விடாமல் காப்பாற்றுவார். இல்லற தர்மத்தைப் புதியதாக நடத்துவார். பிறருக்குக் கெடுதிகளைச் செய்யமாட்டார். நிலத்தை விருத்தியாக்குவார். கொடுக்குந் தன்மையை உடையவர்.

7. வானர்தோழர் மால்பத்தி கொள்வானுகும்
வண்டிவாகன முடையன் மறுத்துக்கூறுன்
ஈனமிலான் சுகபுசிப்பன் கமலரேகையெய்தும்
மந்தச் சூடுடையன் யிடர்களில்லான்
மான்விழியாள் மனைவியொன்று வடகீழாகும்
மாதுலன்தன் வர்க்கத்தில் வருகுமென்றேம்
ஆணிரண்டு பெண்பாலா மொன்று மாகும்
அதுமூன்றும் தீர்க்கமென்றேம் அறைந்தேன் பாரே ;

7. ஜாதகரின் மூத்த சகோதரர் தேவர்களுக்கு இஷ்டமானவர். மகாவிஷ்ணுவின்மேல் பக்தியும் அன்பும் உடையவர். சவாரி வண்டியும் வாகனமும் உடையவர். தடுத்துச்சொல்லமாட்டார். ஈனமான குணமில்லாதவர். சுகமான போஜனத்தைச் சாப்பிடுவார். இவருடைய உள்ளங்கையில் கமலரேகை என்று சொல்லப்பட்ட தாமரை ரேகை என்ற ஒருவித ரேகை உண்டு. மந்தச் சூட்டை உடையவன். கஷ்டங்கள் இல்லாதவர். மானைப் போன்ற அழகிய கண்களை உடைய ஒரு மனைவி வட கிழக்குத் திக்கிலிருந்து வருவாள். இந்த மனைவி தன்னுடைய அம்மானுடைய வம்சத்திலிருந்து வந்து நேரிடுவாள் என்று சொல்லுகிறோம். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் உண்டு. இந்த மூன்று குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்கள் என்று சொல்லுகின்றோம். நாங்கள் சொன்ன முத்த சகோதரனைத் தவிர ;

8. பார்தனிலே அதுவின்றி வேறோர்காணுன்
பாவையுமே அவ்வாருய்ப் பகரலாகும்
மாரனுடைய சேதிசொல்வேன் மாஞ்சிவப்பன்
மருமவான் உணச்சலுளான் மரித்துக்கூறுவன்
தீரநெஞ்சன் கல்விமான் சூடாம்தேகம்
செய்நன்றி மறவாதான் சிறப்பாய்வாழ்வன்
காரியத்தில் கண்ணுவன் சல்லியம்கொள்ளான்
கட்டுவார்த்தை களுரைப்பன் காலாள்விருத்தி.

8. பூமியில் வேறொரு சகோதான் ஜாதகருக்குக் கிடையாது. ஜாதகருக்கு அவ்விதமாகவே ஒரு சகோதரி உண்டு. இனிமேல் ஜாதகருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவர் மாமரத்தின் துளிரினுடைய நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தையுடையவர். இரகசியத்தை உடையவர். வரண்ட மெலிந்த தேகத்தை உடையவர். தடுத்துப் பேசுவார். தைரியமான மனத்தை உடையவர். வாசித்தவர். சூட்டுத் தேகத்தை உடையவர். பிறர் தனக்குச் செய்த உதவியை மறக்காதவர். மேன்மையாய் வாழுவார். காரியங்களிலே கண்ணுங் கருத்துமாக விருப்பார். கடன் வாங்க மாட்டார். பொய்வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையுஞ் சொல்லுவார். கால்நடை வேலைக்காரர்கள் அதிகமாகிக் கொண்டு வருவார்கள்.

9. காலத்தை அறிந்துரைப்பன் சகடுமுள்ளான்
கன்னியர்கள் நேயமுளான் கடுநடப்பன்
சீலவான் கோவுவிருத்தி சித்திரயில்லம்
செய்குவான் ஜயமுனியும் மறுத்துச்சொல்வார்
பாலனுக்கு எக்கால மில்லம்நேரும்
பகருவாயா ருருண்டில் படைப்பனென்றோம்
சாலவே யிதற்குமுன் னிடுக்கமாகச்
சார்ந்திடுமே கிருகமென்றோம் சாத்தினேமே.

9. ஜாதகர் அந்த அந்தக் காலத்திற்குத் தகுந்தாற்போல பேசுவார். வண்டியை உடையவர். ஸ்திரீகளினுடைய சிநேகத்தை உடையவர். நடை விரைவாக உடையவர். ஒழுக்கமுடையவர். பசுக்களின் விருத்தியையுடையவர். அழகான சித்திரங்களை உடைய வீட்டைக் கட்டுவார். இவ்விதமாகச் சொல்ல, ஜயமுனிவர் தடுத்துக் கேட்கின்றார். ஜாதகருக்கு எந்த வயதில் வீடு கிடைக்கும் என்பதைச் சொல்லுவீர். இவருக்கு முப்பத்தாருவது வயதில் இவர் வீட்டை அடைவார் என்று சொல்லுகினறோம். இதற்கு முன்னே இவருடைய வீடு போதுமான இடம் இல்லாமல் சிறியதாக இருக்கும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாகப் பலன்களைச் சொன்னோம்.

10. சாற்றினீர் எந்தத்திக்கில் யில்லம்நேரும்
சனிதிக்கு அருகிலே சாருமென்றோம்
போற்றுவோம் மூற்காலம் செய்தஇல்லம்
பொருந்தாது இவனுக்குப் புகலுவோமே
குத்திரத்தால் சிலதுநிலம் சேர்ப்பானுகும்
துறவுசெய்வன் சோலைசெய்வன் துன்பமிலான் துறவோர் [ம்நயன்
ஆத்திரங்கள் பொருள்மீதில் அடியாள்சேர்ப்பன்
அண்டினருக் குதவிசெய்வன் அம்மையேகேள்.

10. எந்தத் திக்கில் வீடு கிடைக்கும் என்பதைச் சொல்லுவீர், என்று கேட்க, மேற்குத் திக்கிற்கருகில் உண்டாகும் என்று சொல்லுகிறோம். முற்காலத்தில் பெரியோர்கள் கட்டின வீடு இவருக்கு வந்து நேரிடாது என்று சொல்லுகின்றோம். உபாயத்தாலும் தந்திரத்தாலும் சில நிலங்களைச் சேர்த்து வைப்பார். கிணறு வெட்டுவார். சோலைகளையும் தோப்புகளையும் உண்டாக்குவார். கஷ்டப்படாமல் இருப்பார். சன்னியாசிகள், பரதேசிகள் இவர்களிடத்தில் சிநேகமாக விருப்பார். சொத்துக்களின்மேல் அதிக ஆசையை உடையவர். வேலைக்காரர்களையும் தொண்டர்களையும் சேர்ப்பார். தன்னிடம் வந்தவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

11. கேளுமம்மா தந்தைபோல் தலங்கள்செல்வன்
கெருவமுளன் கடினசித்தன் கீதமிஷ்டன்
நாளுக்குநாள் பிறைபோல் யோகம்வாய்க்குத்
நல்கினீர் யோகம்எவ்வாறு நவிலுவீர்கள்
காளைசெம்மல் தர்ம்மகர்ம்மம் ஒன்ருய்மூன்றில்
கலந்ததால் யோகமெய்தும் துணைசகுஅவ்வாறு
வேலவனைப் பெற்றவள்தன் கிருபையாலே
மென்மேலும் சுகமெய்தும் விளம்பக்கேளாய்.

11. ஜாதகர் தன்னுடைய தகப்பனாரைப் போலவே திவ்ய ஸ்தலங்களுக்குப் போவார். அகங்காரம் உடையவர். கடுமையான நெஞ்சை உடையவர். குளிர்ச்சியான வஸ்துக்களின் மேல் ஆசையை

யுடையவர். இவருக்கு நாளடைவில் வளர் பிறைச் சந்திரன் வளருவதுபோலவே யோகம் விருத்தியாகிக்கொண்டு வரும். இவருக்கு எந்தக் காரணங்களினால் யோகத்தைச் சொன்னீர் ? அவைகளைத் தெரிவிப்பீராக. இவருக்கு ஈசனுடைய அருளால் தாமாதிபதியாகிய குருவும் கர்மாதிபதியாகிய அங்காரகனும் ஒன்றாய்ச் சேர்ந்து மூன்றாவது பாவத்தில் இருப்பதால் யோக முண்டாகும். சகோதரர்களுக்கும் இவ்வித மாகவே யோக முண்டு. முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மை யாரின் அருளாலே ஜாதகருக்கு மேலும் மேலும் சௌக்கியங்கள் அதிகப் பட்டுக்கொண்டே வரும் என்று சொல்லுகிறதை, பார்வதியம்மையே! கேட்பீராக.

12. விளம்புவோ மீரேழில் வடகீழ் தன்னில்
மெல்லியால் தனைவாய்க்கும் அன்னைவர்க்கம்
விளம்புவோ மவள்குணத்தைச் சிவந்தமேனி
வீணவம்பில் செல்லாளாம் விருந்தோர்நேயள்
விளம்பாதாள் பொய்களுமே விரதம்பூண்பள்
வரன்மனம்போல் நடந்திடுவள் வயதுதீர்க்கம்
விளம்பியதைச் ஜய முனியும் மறுத்துச்சொல்வீர்
மேழிடத்தில் புயங்கனுமே யிருப்பதாலே;

12. ஜாதகருக்குப் பதினான்காவது வயதில் *வட கிழக்குத் திக்கில் இருந்தும் தாயாருடைய பந்துக்களிடத்திலிருந்தும் மனைவி வந்து நேரு வாள். இவளுடைய குணநிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவள் சிவப்பான நிறத்தையுடைய தேகத்தை உடையவள். வீண் சண்டையில் தலையிடமாட்டாள். விருந்தாளிகளிடத்தில் சினேகமாகவும் அன்புடனும் இருப்பாள். பொய்களைச் சொல்லமாட்டாள். நோன்புகளை அநுசரிப்பாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடியே நடந்து கொள்ளுவாள். இவள் நீண்ட ஆயுளை உடையவள். இவ் விதமாகச் சொல்லுவதை ஜயமுனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். ஏழாவது பாவத்தில் புயங்கன் என்ற ராகு இருப்பதாலும்;

* குறிப்பு —: விவாக விஷயம்:—ஜாதகருக்கு வயது ஷ 13–0–0 முதல் ஷ 14–0–0 முடியும் வரையிலும் புதன் தசையில் சூரிய புக்தியும் சந்திர புக்தியும் நடக்கின்றன. இரண்டாவது பாவாதிபதியாகிய சூரியன் இருக்கின்ற ராசியதிபதியாகிய புதன் தன்னுடைய தசைக் காலத்தில் ஜாதகபாரிஜாதம் பதினான்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் ஜாதகருக்கு விவாகத்தைச் செய்து வைக்க அமைப்பு உடையவராகின்றார். சூரியன் இரண்டிற்குடையவராய்ப் பத்திற்கும் ஒன்ப திற்கும் உடையவராகிய அங்காரகனுடனும் குருவுடனும் கூடியிருப்பதால் மேற்சொல்லிய 29-ஆவது சுலோகப் பிரகாரம் தன் புக்தியில் விவாகம் செய்து வைக்க அமைப்பு உடையவராகின்றார்.

வேறு

13. தானே காரி[1] திஷ்டி பெறத் தார மிரண்டு தானெய் தும்
வான் குருவும் தான் பார்க்க மனைவி ஒன்று தீர்க்கமு றும்
ஆன மனைவி தனக்குத் தான் அன்னை யிரண்டு தானுரைப்பாம்
பானமை யாக அபிமானம் பகர்வோம் பால னுக்கு மே.

13. ஏழாமிடத்தையும் ராகுவையும் சனி பார்ப்பதாலும் ஜாதக ருக்கு இரண்டு மனைவிகள் நேரிடுவார்கள். இவ்விதமாக ஜயமுனிவர் சொல்ல இது வரையிலும் சொல்லிவந்த முனிவர் சொல்லுகின்றார். இந்த ஏழாவது வீட்டையும் ராகுவையும் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற குரு பார்ப்பதால் மனைவி ஒன்றே ஆகும். அவள் நீண்ட ஆயுளை உடையவளாவாள். இந்த மனைவிக்கு இரண்டு தாய்மார்கள் உண்டு என்று சொல்லுகின்றோம். ஜாதகருக்குத் தகுதியாக அபிமான ஸ்திரீ ஒருத்தி வந்து நேருவாள்.

14. பாலன் தனக்கு யெக்கா லம் பாவை அபிமா னமாவாள்
சால முப்பான் ஆண்டின் மேல் சாரும் கங்கை குல மாது
நீலி தனக்குச் சுதர் காணன் நேரும் பணிகள் அதிகம தாய்க்
காலன் திக்கில் வருவ ளெனக் கழறினோமே காதலி யே.

14. ஜாதகருக்கு எந்த வயதில் அபிமான களத்திரம் வந்து நேரிடும் என்பதைச் சொல்லுவீர் என்று ஜயமுனிவர் கேட்க, முப்பதா வது வயதிற்கு மேல் ஒரு வேளாள குலத்திற் பிறந்த ஸ்திரீ அபிமானமாக வந்தடைவாள்*. இவளுக்குக் குழந்தைகள் கிடையா. ஆடை ஆபாணங்கள் அதிகமாக வந்து சேரும். இவள் தெற்குத் திக்கிலிருந்து வருவாள் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே!

* குறிப்பு.—அபிமான ஸ்திரீ விஷயம்:—ஏழில் இராகு இருப்பதும் ஏழைச் சனிபார்ப்பதும் தோஷ மானது என்றும் ஏழைக் குரு பார்ப்பதும் அநுகூல மானது என்றும் மேலே சொல்லி இருக்கின்றது. மேலும் குருஇரண்டா வது மனைவி ஸ்தானமாகிய ஒன்பதாவது பாவமாகிய மீனத்திற்கு உடையவ ராகி ஏழாவது பாவத்தைப் பார்ப்பதால் இரண்டாவது தாரம் கொடுக்குத் தன்மை உடையவராகின்றார். சுக்கிரனைச் சனி பார்ப்பதும் தாரதோஷ மாகும். குருவுக்கு ஆறாவது வீட்டு ஆதிபத்தியமும் வந்திருப்பதால் குரு வுக்குப் பங்கமுள்ள தாரம் அ:.தாவது அபிமானதாரம் கொடுக்க அமைப்பு ஏற்படுகிறது. ஜாதகருக்கு வயது முப்பதிற்கு மேல் சுக்கிரதசை வருகிறது. சுக்கிரனைச் சனியும் ராகுவும் பார்த்திருப்பதாலும் சுக்கிரன் குடும்பஸ்தானத் திலிருப்ப தாலும் சுக்கிரன் பதினொன்றிற்குடையவராகி ஏழுக்குடைய சனி யால் பார்க்கப்படுவதாலும் ஜாதகா லங்காரம் 689-ஆவது பாடல், ஜாதகசிந் தாமணி 984-ஆவது பாடல் இவைகளின் பிரகாரம் சுக்கிரன் இன்னொரு ஸ்திரீயை ஜாதகருக்கு அமைத்துவைக்க அதிகாரமுடையவராகவாகின்றார்.

[1] சனி.

வேறு

15. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் மெழுவர் **தோன்றும்**
சித்தமாய் ஆண்பால் ரண்டு சேல்விழி பெண்பா லவ்வாறு
சுத்தமாய் நான்கும் தீர்க்கம் சோர்வுறும் மூன்று என்றேம்
அதிதியைப் பெற்ற மாதே அறைகிறேம் விவரம் ரண்டில்.

15. ஜாதகருக்குப் புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். மொத்தத்தில் ஏழு குழந்தைகள் பிறக்கும். ஆண் குழந்தைகள் இரண்டு பேரும், பெண் குழந்தைகள் இரண்டு பேரும் ஆக இந்த நான்கு குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். மீதி மூன்று குழந்தைகளும் இறந்துவிடுவார்கள் என்று சொல்லுகிறோம். தேவரையீன்றவளைப் பெற்ற பார்வதியம்மையே! மற்ற விவரங்களை இரண்டாவது பாகத்திற் சொல்லுகிறோம்.

குறிப்பு.—புத்திர தோஷம் விஷயம்,—புத்திர ஸ்தானமாகிய ஐந்தாவது பாவமாகிய விருச்சிகத்தில் ஏழிற்குடைய பாபியாகிய சனி இருக்கின்றது. ஜாதகாலங்காரம் 596ஆவது பாடல் பிரகாரம் புத்திர தோஷத்தை விளைவிக்கக் கூடியதாகும். ஐந்திற்குடையவராகிய அங்காரகன் புதனுடைய வீடாகிய கன்னியில் இருப்பது ஜாதகாலங்காரம் 592-ஆவது பாடல் பிரகாரம் புத்திர தோஷத்தை விளைவிக்கும். ராகு 5-ஆவது பாவத்தைப் பார்ப்பது புத்திர தோஷத்தை விளைவிக்கும். ஏழிற்குடைய சனி ஐந்தில் இருப்பதைப் பற்றி ஜாதகபாரிஜாதம் பதின்மூன்ருவது அத்தியாயம் பன்னிரண்டாவது சுலோகத்தையும் பார்க்கவும். அங்காரகனும் குருவும் மூன்றிலிருப்பதும் தோஷமாகும்.

16. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் சிவந்த மேனி
தன் சொல்லு மடக்க முள்ளாள் தன்வரன் மனம்போல் வாழ்வள்
மன்னிய பித்த தேகி மறுத்தவார்த் தைகளும் கூறுள்
கன்னென மொழியே சொல்வள் கவடுண்டு வெளிக்காட் டாதாள்.

16. ஜாதகரின் தாயாருடைய குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் அழகுள்ளவளாவாள், சிவப்பு நிறமுள்ள தேகத்தை உடையவள் சாந்தமாகவும் நிதானமாகவும் பேசக்கூடியவள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல இருந்து வாழ்வாள். நிலையான பித்த தேகத்தை உடையவள். தடுத்து வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். சர்க்கரையைப்போல இனிமையதாயுள்ள வார்த்தைகளையே பேசுவாள். மனதில் கள்ளம் கபடம் வஞ்சனை இவைகளை உடையவள். ஆனால் இவைகளை வெளியே தெரியும்படியாகக் காட்டிக்கொண்டு நடந்து கொள்ளமாட்டாள்.

17. இல்லமும் வடகீ ழாகும் இவன்துணை ஆண்பால் நான்கு
வல்லியு மொன்றே யாகு மவர்களும் வேறுயச் செல்வர்
தல்லியின் பூர்வம் சொல்வேன் சலகண்ட ஈசர் வாழும்
நல்லதோர் தலத்தி லதான் நாயகி கர்ண வமிசம்.

17. ஜாதகரின் தாயாருவுடை வீடு வடகிழக்குத் திக்கிலிருக்கும். இவளுடன்கூடப் பிறந்த சகோதரர்கள் நான்கு பேரும், பெண் சகோதரி, ஒருத்தியும் ஆகும். இவர்கள் வேறு குடும்பமாகப் போய்விடுவார்கள் இவளுடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். ஒரு நல்ல க்ஷேத்திரத்தில் இவள் கருணீகா குலத்தில்;

18. உதித்துமே பெருமை பூண்டு உலகிற்கு நல்லோ ளாகிச்
சுதர்களு மதிக முண்டாய்த் தொல்புவி வறுமை யின்றிச்
சதியான காலன் பக்கல் சார்ந்தன ளிந்த மாது
விதியவன் வரையப் பட்டு விளங்கினு ளென்று சொன்னேம்.

18. பிறந்து பெருமையை அடைந்து பூமியிலுள்ளவர்களுக்கு நல்லவளாக விருந்து குழந்தைகளை அதிகமாகப் பெற்றடைந்து இந்தப் பழைமையான பூமியில் கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமலிருந்து கொடுதியான எமனிடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். பிறகு பிரமதேவனால் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம்.

19. சொன்னேம் முப்பான் மூன்றினிலே
துலாமா தத்தில் புகர்காலம்
பன்னும் சுயசக் கரம்! தன்னில்
பகரு மன்னை கண்டமென்றேம்
பின்னும் ஜன்ம பட்சிதனில்
பொருந்தும் வைசிய குலம்தோன்றித்
தன்பந் துகளும் மதிக்க உய்வள்
சாற்று மொழிகுன் றுதென்றேம்.

19. ஜாதகருடைய தாயார் ஜாதகருக்கு முப்பத்து மூன்றுவது வயதில் ஐப்பசி மாதத்தில் சுக்கிரதசையில் சுய புக்தியாகிய சுக்கிர புக்தியில் இறந்து விடுவாள். இவள் மறு ஜன்மத்தில் பட்சிஸ்தலம் என்று சொல்லப்பட்ட திருக்கழுக்குன்றத்தில் வைசியருடைய ஜாதியில் பிறந்து இவளுடைய பந்துக்கள் இவளைப் பெருமையாகப் பாராட்டும் நிலையிலிருந்து வாழ்வாள். நாங்கள் சொல்லுகின்ற வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும் என்று சொல்லுகிறோம்.

குறிப்பு.—மாதுர் மரண விஷயம்:—இங்கு சுக்கிர தசையில் சுய புக்தியில் தாயாருக்கு மாரகம் என்று கண்டிருக்கின்றது. தாயாருடைய லக்கினம் நான்காவது பாவமாகிய துலாமாகும். துலா லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சூரியனும் குருவும் மாரகாதிபதிகள் ஆகின்றார்கள். சுக்கிரன் துலாத்திற்கு ஒன்று எட்டு ஆகிய இந்தப் பாவங்களுக்கு அதிபதியாகி மாரகாதிபதியாகிய சூரியனுடைய வீட்டில் இருக்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை இருபத்து மூன்றுவது சுலோகப் பிரகாரமும், துய்யகேரளம் எட்டாம் பாவம் பதினான்காவது பாடல் பிரகாரமும், எண்பத்திரண்டாவது ஜாதகம் இருபத்து நான்காவது பாடலின் கீழ் கொடுத்துள்ள வியாக்கியானம் பிரகாரமும் சுக்கிரன் தாயாரை மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராகின்றார்.

F.N. 1. புக்தி ' காலசக்கரம் அல்ல.

20. என்ற பிதுரின் பூர்வமதை யியம்பக் கேளாய் தில்லைதனில்
அன்றே வைசிய குலமுதித்து அதிகச் செட்டு தான் செய்து
குன்று போலே தனமுண் டாய்க் கோதை சுதர்கள் தானுண் டாய்
என்று மறத்தி விச்சை யதா யேழை தனக்கு அன்னமீது ;

20. ஜாதகரின் தகப்பனுருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லு கின்ரும். கேட்பீராக. தில்லை என்று சொல்லப்பட்ட சிதம்பர க்ஷேத்திரத்தில் வைசியருடைய ஜாதியிற் பிறந்து வியாபாரம் அதிகமாகச் செய்து ஒரு குன்றைப்போல அதிகமான தனத்தைச் சம்பாதித்து மனைவி மக்களை உடையவராகி எப்போதும் தருமஞ் செய்வதில் ஆசை உடையவராகி ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டு ;

21. காலன் பதிக்குச் சென்றுமே கஞ்சன் தன்னுல் வரைய வந்தான்
சீலன் வறுமை காணுதான் சிறுத்தோர் நேயன் தலம் செல்வன்
கோல முடனே பின் ஜன்மம் கூறக் கேளாய் துவரை பக்கல்
சால மறையோன் தன்குலத் தில் சார்வா னென்ரும் சங்கரி யே.

21. இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரம தேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுர். இவர் நல்லொழுக்கமுடையவர். கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையாதவர். ஏழைகளிடத்தில் பிரியமாய் இருப்பார். புண்ணிய ஸ்தலங்களுக்குப் போவார். இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். கேட்பீராக. துவரை என்று சொல்லப்பட்ட துவாரகா-புரி பட்டணத்திற்கு அருகில் ஒரு நல்ல பிராமணர் குலத்தில் போய்ப் பிறப்பார் என்று சொல்லுகிரும். பார்வதி யம்மையே !

22. அறியே யிவனு மிச்சென் மம் ஆசை யதிகம் பூமியின் மேல்
நெறிகள் தவறி நடப்பதனுல் நேரும் விபரம் தானுரைப் பீர்
மறையோர் நேசம் தெய்வ பத்தி அறுதி நேயம் தலம் செல் லல்
குறையென் றேர்க்கு தவியதால் குறித்தேன் பிரம்ம குல
[மென்ரும்.

22. ஜாதகருடைய தகப்பனுர் இந்த ஜன்மத்தில் எல்லோருக்கும் தெரியும்படி இந்த பூமியில் அதிக ஆசையையுடையவராகி நல்ல மார்க்கங்களை விட்டு நழுவி நடந்து கொள்ளுவதால் இவருக்கு உயர்ந்த குலமாகிய பிராமண குலத்தில் ஜனனம் நேரிடுவதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, இவர் பிராமணர்களிடத்தில் விசுவாசமும், தெய்வத்தின்பேரில் பக்தியும் அன்பும் மோக்ஷத்தில் ஆசையும் ஆகிய இவைகளை உடையவராகித் திவ்விய ஸ்தலங்களுக்குப் போய் ஏழைகளுக்கும் தரித்திரத்தை உடையவர்களுக்கும் உபகாரம் முதலியவைகளைச் செய்ததால் பிராமணர் குலத்தில் பிறப்பார் என்று சொன்னேம்.

23. ஜாதகனின் பூர்வமதைச் சாற்றக் கேண்மோ
தக்கோலம் நகரில்செங் குந்தவமிசம்
நீதியாய்த் தா னுதித்து வறுமை யின்றி
நேமியில் தூசுச் செட்டு நிகழ்ந்துங் காலே

பாதசியாம் பெண்ணெருத்தி ஏழை மாது
பணிசெய்வே னில்லதில் பகர்ந்தபோது
சூதிலா செங்குந்த னதற்கி சைந்து
தாய்போலே யென்னில்லம் வாழ்வாயென்ன ;

23. ஜாதகருடைய முன் ஜென்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக, தக்கோலம் என்ற பட்டணத்தில் செங்குந்தர் ஜாதி என்று சொல்லப்பட்ட கைக்கோளர் ஜாதியில் நியாயமாக இவர் பிறந்து கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமல் பூமியில் சீலை, வஸ்திரம் இவைகளில் வியாபாரஞ் செய்துகொண்டு வாழுகின்ற காலத்தில், கெட்டவளாயும், ஏழையாயும் உள்ள ஒரு ஸ்திரீ இவரிடம் வந்து இவருடைய வீட்டில் வேலை செய்கிறேன் என்று சொல்லும்போது, கள்ளங்கபடில்லாத செகுந்தராகிய இவர் அதற்குச் சம்மதித்துத் தன்னுடைய தாயாரைப் போலத் தன்னுடைய வீட்டில் வாழவேணும் என்று சொல்லவே ;

24. என்னவே இல்லத்தில் சிலநாள் நின்று
என்னின போலோத்து இவளும் வாழ்ந்து
அன்னவனும் இல்லாத வேளை பார்த்து
அணிபணியும் தூசு கொண்டு அயலூர் சென்றுள்
பின்னுமறு நாள் வந்து கேட்கப்பட்டுப் பொற்பணியும்
காணுமல் திகில டைந்து
கன்னிகையைத் தேடிச்சென்று காணுதாகி
கழறுவான் யானையின்தன் கோஷ்டமுன்பாய்.

24. அதன்மேல் அந்த ஸதிரீ இவருடைய வீட்டில் கொஞ்சம் நாள் இவருடைய தாயாரைப்போலவே இருந்து வாழ்ந்து இவர் வீட்டில் இல்லாத ஒரு வேளை பார்த்து அந்த சமயத்தில் அணிந்துகொள்ளுகின்ற ஆடை ஆபரணங்களையும் வியாபார வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு பக்கத்திலுள்ள ஒரு கிராமத்திற்குப் போய்விட்டாள். பிறகு மறுதினம் இவர் திரும்பி வந்து நடந்த சம்பவத்தைத் தெரிந்துகொண்டு பணத்தையும் ஆடை ஆபரணங்களையும் காணுமல் இருப்பதை அறிந்துகொண்டு பயமும் துக்கமுமுடையவராகி அந்த ஸ்திரீயைத் தேடிப்போய்ப் பார்த்து அவள் காணுமல்போனபடியால் யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளின் கோயிலின் முன்னே நின்றுகொண்டு இவர் சொல்லுகின்றுர்.

25. அன்னமென்று வந்தவளை ஆதரித்தேன்
அவள்செய்த கொடுமையைநான் சொல்லொணுது
முன்கடனே பின்கடனே அறியே னென்று
உதரினன் தெருத்தூளை உலகம் காண
கன்னிகைக்கு இத்தோஷம் சேர்ந்த தென்ரும்
காளையு முருகர் பத்தி கழறியேதான்
பின்னமுள காலன்பதி கடந்து இன்னேன்
பிரமனும் வரையவந்தான் புதல்வன் தானே.

25. "சாப்பாடு வேண்டும் என்று சொல்லி வந்த ஒரு ஸ்திரீயை நான் காப்பாற்றி வந்தேன். அவள் நான் சொல்லிக்கொள்ள முடியாத ஒரு கெட்ட காரியத்தைச் செய்து விட்டாள். நான் முன் ஜன்மத்தில் அவளுக்குக் கடன்பட்டிருந்தேனோ! அல்லது அவள் எனக்குப் பின் ஜன்மத்தில் கடனைத் தீரப்பாளோ! என்னமோ! எனக்கு ஒன்றும் தெரியவில்லையே! என்று சொல்லிப் பூமியில் உள்ள ஜனங்கள் தெரிந்து கொள்ளும்படியாகத் தெருவிலிருந்த மண் தூளைவாரி இறைத்தான். அந்த ஸ்திரீயை இந்தச் சாபம் போய் அடைந்தது என்று சொல்லுகிறோம். இவர் முருகக் கடவுளின் மேல் பக்தியும் அன்பும் உடையவராகி விருந்து பிறகு இறந்து கெடுதியையுடைய எம பட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார்.

26. தான்பொருளை எடுத்துக்கொண்டு போனமாது
சலகுலத்தில் தானுதித்து முப்பாண டின்மேல்
பான்மையாய் மொழிகூறிச் சேருவாளாம்
பாலகனிச் சென்மம்யோகம் சொல்லுவேனே
ஆனநிலம் மூன்றூரில் சேர்ப்பானுகும்
அவன்தாதை போல்யோகம் அவனியோர்க்கு
மானமாய் உதவிசெய்வனினத்தோர் மெச்ச
பகரமாம் குடும்பமதாய் மருவிவாழ்வன்.

26. முன் ஜன்மத்தில் ஜாதகருடைய சொத்துக்களை எடுத்துக் கொண்டு போய்விட்ட ஸ்திரீயானவள் இந்த ஜன்மத்தில் வேளார் குலத்திற் பிறந்து ஜாதகருக்கு முப்பதாவது வயதிற்குமேலே தகுதியாயும் பக்குவமாயும் வார்த்தைகளைச் சொல்லி இவரிடம் வந்து அபிமானமனைவியாகச் சேர்ந்து விடுவாள் என்று சொல்லுகிறோம். இவருக்கு இந்த ஜன்மத்திய யோகத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். இவர் மூன்று கிராமங்களில் நிலங்களைச் சேகரிப்பார். இவருடைய தகப்பனுரைப்போலவே இவரும் யோகத்தை அனுபவிப்பார். பூமியிலுள்ளவர்களுக்கு இவர் மானத்துடன் உபகாரத்தைச் செய்வார். இவரைப் பந்துக்கள் மெச்சும்படியாக பிரகாசமான ஒரு குடும்பத்தை உடையவராய் இருந்து வாழ்வார்.

27. மருவுவான் அரசர்பக்கல் பெருமை யேற்பன்
வரும்துணையை ஆதரிப்பன் திருப்பணியும்செய்வன்
அறம்செய்வன் கிணறுசோலை அன்னமீவன்
அழகாக இரண்டில்லம் அமைப்பானென்றோம்
பரிவண்டி ஆவுவிருத்தி பகைநாசங்கள்
பழையபொருள் நேருமென்றோம் புகரினுலே
பறைபள்ளு அதிகமுளன் சேதுதீர்த்தம்
பண்ணுவார்பலனைப் பகர்ந்தோம் தாயே.

27. ஜாதகர் அரசர்களிடத்திற்குப் போவார். அவர்களிடமிருந்து கீர்த்தியையும் புகழையும் அடைவார். தன்னுடன் கூடப்பிறந்த சகோதரர்களைக் காப்பாற்றுவார். கோயில்களில் வேலைகளையும் திவ்விய தொண்டுகளையும் செய்வார். தருமம் செய்வார். கிணறு வெட்டுவார். சோலைகளையும் தோப்புக்களையும் ஏற்படுத்துவார். சாப்பாடு போடுவார். அஃதாவது அன்னதானஞ் செய்வார். அழகான இரண்டு வீடுகளைக் கட்டுவார் என்று சொல்லுகிறோம். குதிரை வண்டியை உடையவர். பசுக்கள் விருத்தியாகும். சத்துருக்கள் நாசமாவார்கள். பழையபொருள், பெரியோர்களுடைய சொத்து இவைகள் சுக்கிரனுல் வந்து சேரும் என்று சொல்லுகிறோம். மேளவாத்தியங்களும் ஆள்படைகளும் அதிகமாக விருத்தியாகும். சேதுஸ்தலத்திற்குப்போய் அவ்விடத்திலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வார். இங்கு சொல்லப்பட்ட இந்தப் பலன்களை எல்லாம் நாங்கள் சொன்னோம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே!

வேறு.

28. அன்பது ஆறு ஆண்டில் அணுகிய கும்ப மாதம்
துன்பமா மிரவி காலம் சுந்தர னுடலம் வகும்
பின்ஜன்மம் பாண்டி நாட்டில் பிறப்பனே சைவச் சேயாய்த்
தன்பொரு ளதிக முண்டாய்த் தரணியில் வாழ்வா னுமே.

28. ஜாதகருக்கு ஐம்பத்தாருவது வயதில் மாசி மாதத்தில் கெடுதியை விளைவிக்கக் கூடிய சூரியதசையில் இவர் இறந்து இவருடைய தேகம் மறைந்து போய்விடும். இவர் மறுபிறப்பில் பாண்டிய தேசத்தில் சைவ குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறப்பார். தன்னுடைய சொத்து அதிகமாக உடையவராகி இவர் பூமியில் வாழ்பவராவர்.

* **குறிப்பு.—ஜாதகருடைய மாரக விஷயம்:**—ஜாதகருக்கு ஐம்பத்தாரும் வயதில் மாசிமாதத்தில் சூரியதசையில் கேதுபுக்தி நடக்கின்றது. பாராசர ஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் கடகலக்கினத்திற்குச் சூரியன் புதன் சுக்கிரன் சனி இவர்கள் மாரகாதிபதிகளாக வாகின்றார்கள். சூரியன் மாரகஸ்தானமாகிய இரண்டிற்குடையவராய் மாரகஸ்தானமாகிய மூன்றில் மாரகாதிபதியாகிய புதன் ஆறுக்குடையவராகிய குரு பத்திற்குடையவராகிய அங்காரகன் இவர்களுடன் கூடி இருக்கின்றார். துய்யகேரளம் எட்டாம் பாவம் பதினன்காவது பாடல், ஜாதகசந்திரிகை இருபத்துமூன்ருவது சுலோகம் இவைகளை அனுசரித்து சூரியன் மாரகாதிபதி ஆகின்றார். கேது லக்கினத்தில் சந்திரனுடன் கூடி இருக்கின்றார். இவர் துய்யகேரளம் எட்டாம் பாவம் இருபதாவது பாடல் பிரகாரம் தன் புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகின்றார்.

29. ஜனித்திடுங் காலம் தன்னில் சனிதசை ஆண்டு ஆறும்
குனித்திடுந் திங்க ளாறும் கூறுவோம் பலனை யாங்கள்
வினையுண்டு பலித நஷ்ட மிக்கநாற் காலி பீடை
துணைவிருத்தி சேத மெய்தும் சுதனுக்குப் பிணியுங் காணும்.

29. ஜாதகர் பிறக்கின்ற காலத்தில் சனி மகாதசையில் இருப்பு ஆறு வருஷங்களும் கணிதம் பிரகாரம் ஆறு மாதங்களும் ஆகும் என்று சொல்லுகிறோம். இந்தக்காலத்தில் நடக்கும் பலாபலன்களையுஞ் சொல்லு

இன்றோம். கெடுதிகள் நேரிடும். துன்பம் உண்டாகும். நஷ்டமான பலன்கள் உண்டாகும். நாற்கால் ஜீவன்களுக்கு அதிகமான நோய் கஷ்டம் இவைகள் உண்டாகும். சகோதரர்கள் உண்டாகி இறந்து விடுவார்கள். ஜாதருக்கும் நோய் உண்டாகும்.

குறிப்பு.—பாடல்கள் பத்தொன்பது இருபத்தெட்டு இவைகளைக் கவனிக்கும்போது இருபத்தொன்பதாவது பாடலில் சொல்லியபடியே சனி தசை இருப்பு வருஷங்கள் ஆறு மாதங்கள் ஆறு என்றே கருதி பலாபலன் களைச் சொல்லி இருப்பதாகத் தோற்றுகிறது.

30. நினைத்தகா ரியங்க ளாகா நிகரனை வர்க்கம் சூதம்
விளையுண்டு முன்து ணைக்கு மிகத்திருப் பணியுஞ் செய்தல்
கனமுள சிறிய தந்தை காளைகள் விருத்தி யாகும்
சினமிலா இல்லம் செய்தல் செப்புவோம் விவரம் ரண்டில்.

30. செய்ய வேண்டும் என்று எண்ணிய காரியங்கள் முடிவு அடையாமல் இருக்கும். தாயாருடைய வமிசத்தில் சூதகங்கள் உண்டாகும். கெடுதிகளும் துன்பங்களும் ஏற்படும். மூத்த சகோதரருக்காகக் கோயிலுக்குப் போய் அவ்விடத்தில் அதிக கோவில் வேலைகளும் அர்ச்சனை பூஜை முதலிய சாந்திகளைச் செய்வதும் நேரிடும். மேன்மையான சிறிய தகப்பனுருக்குப் பிள்ளைகள் பிறந்து விருத்தியாகும். கோபமில்லாமல் வீட்டைக் கட்டுதல் முதலிய பலன்கள் நேரிடும். மற்ற விவரங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம்.

ஜாதகம் 94

	அங்காரகன் குரு சுக்கிரன் சனி	சந்திரன் கேது	சூரியன்
	இராசி சக்கரம்		லக்கினம் புதன்
	ராகு		

கிருத்திகை 2-ஆம் பாதம்
சூரியதசை ஞூ 4-5-0

1. திங்களும்[1] சிகியும்[2] நந்தி [3] சேய் [4] குரு காரி[5] வெள்ளி[6]
பொங்கிய மேடம் புக்கப் புதன் வண்டி [7] ராகு தேளில்[8]
செங்கதிர் [9] வீணை [10] யாக ஜன்மமும் வளைய [11] லாக
இங்கிவை கிரகம் நின்று லியம்பூர் பலனைத் தானே ;

1. சந்திரனும் கேதுவும் ரிஷபத்திலும், அங்காரகனும் குருவும் சனியும் சுக்கிரனும் மேஷத்திலும், புதன் கடகத்திலும், ராகு விருச்சிகத்திலும், சூரியன் மிதுனத்திலும், ஜன்ம லக்கினம் கடகமாகவும், இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று ;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின் வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடையதாகும். மிதுனத்தில் அங்காரகனும், சிம்மத்தில் புதனும் கேதுவும், கன்னியில் சனியும், விருச்சிகத்தில் குருவும் சுக்கிரனும், தனுசில் சூரியனும், மகரத்தில் சந்திரனும், கும்பத்தில் ராகுவும் ஆகும்.

2. பார்வதி கேட்கும் போது பராசரும் புகலு கின்றார்
சீர்புக ழாண்பால் ஜன்மம் செப்புவோ மில்லம் தானும்
சேர்புகழ் கீழ் மேல் வீதி தென்வாசல் மேற்கில் நந்தி
மாரனை யெரித்தோன் தெற்கில் மாகாளி கீழ்ப்பா லாகும் ;

---

[1] சந்திரன் [2] கேது [3] ரிஷபம் [4] அங்காரகன்
[5] சனி [6] சுக்கிரன் [7] கடகம் [8] விருச்சிகம்
[9] சூரியன் [10] மிதுனம் [11] கடகம்

2. பார்வதியம்மையார் கேட்கும்போது பராசர முனிவர் சொல்லுகின்றார். ஜனனமான இந்தக் குழந்தை ஆண் குழந்தை ஆகும். பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றோம், கிழக்கு மேற்குத் தெருவில் தென்னண்டை வாடையில் வீடு இருக்கும். மேற்குத் திக்கில் நந்திதேவர் இருப்பார். காமனை எரித்த சிவபெருமானுடைய கோயில் தெற்குத் திக்கிலும் பெரிய காளியம்மன் கோயில் கிழக்குத் திக்கிலும் இருக்கும்.

3. அரனவ னுத்தர மாகும் அந்தரி மீனத் திக்கில்
சரிபட ஊரே யாகும் சாற்றுவோ மிவ்வடையா ளத்துள்
வருகுவா னிந்தப் பால னறுமுக ரடியார் வர்க்கம்
திருமகள் விலாசம் போன்ற செங்குந்த மரபே யாகும்.

3. சிவன் கோயிலும் விபீஷணரும் வடக்குத் திக்கில் இருக்கும் துர்க்கையம்மன் கோயில் வடகிழக்குத் திக்கில் இருக்கும். பிறந்த ஊர் சமமான ஊராகும். இவ்வித அடையாளங்கள் உள்ளவிடத்தில் ஆறு முகங்களை உடைய முருகக் கடவுளைத் தொழுகின்ற குலமாகிய லக்ஷ்மீபொருந்திய செழிப்பாயுள்ள ஒரு செங்குந்த ஜாதி என்று சொல்லப்படுகின்ற கைக்கோளர் ஜாதியில் ஜாதகர் பிறப்பார்.

4. இன்னவன் ஜனன யோகம் எழில்பெரும் தந்தை யோகம்
மன்னிய அன்னை யோகம் வரும்துணை களத்திர புத்திரர்
அன்னவர் யோகம் தானும் அவன்முன் ஜனன தோஷம்
பின்ஜன்மம் விவர மாகப் பேசுவோம் தாயே யாங்கள்.

4. ஜாதகருடைய ஜனன காலத்திய யோகமும், அழகிய தகப்பனுருடைய யோகமும், நிலையான தாயாருடைய யோகமும், கூடப்பிறந்தவர்கள் மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகமும்; ஜாதகருடைய முன் ஜன்மத்திய தோஷம், பின் ஜன்மம் ஆகிய இவைகள் எல்லாவற்றையும், பார்வதியம்மையே! நாங்கள் விவரமாகச் சொல்லுவோம்.

5. தந்தையின் வர்க்க மெட்டில் ஆண்துணை காணு னுகும்
விந்தையாய்க் கன்னி ஒன்று மேவிடும் தீர்க்க மாகச்
சந்ததம் பிதாகு ணத்தைச் சாற்றுவோம் உணச்சல் நீட்சி
கந்தன்மேல் பத்தி கொள்வன் காலாள்க ளுடைய னுமே.

5. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரர்கள் எட்டுபேர் ஆகும். இவர்களில் ஆண் சகோதரர் கிடையாது. ஆச்சரியமாக ஒரு சகோதரி நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள். தகப்பனுருடைய குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் வரண்டு மெலிந்து நீண்டிருக்குந் தேகத்தையுடையவர். முருகக் கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உடையவர். கால்நடை வேலையாட்களை உடையவராவர்.

6. வித்தையும் புத்தி மானும் வீண்வம்பு புகலா னுகும்
பத்தினி நேய னுகும் பலவிதச் செட்டுச் செய்வன்
சித்தினி ஜாதி யாவன் செய்நிலம் சேர்ப்பா னும்
நந்தினோர்க் குதவி செய்வன் நாட்டினில் சல்லியம் கொள்ளான்.

6. தகப்பனுர் கல்வியை உடையவர், புத்திசாலியாக விருப்பார். வீணை கெட்ட வார்த்தைகளையும் பொய்யையும் சண்டை உண்டாக்கும் படியாய்ச் சொல்லமாட்டார். தன்னுடைய மனைவிக்குப் பிரியமானவராவார். அநேக விதமான வியாபாரங்களைச் செய்வார். இவர் சித்தினி ஜாதி என்ற நால்வகைப் பெண்களுள் ஒருவகைப் பெண்களினுடைய குணத்தை உடையவராவார். செய்கால் நிலங்களைச் சேர்த்து வைப்பார், கெட்டுப் போய் விட்டவர்களுக்கும் பகைவர்களுக்கும் கூட உபகாரத்தைச் செய்வார். பூமியில் கடன் வாங்கமாட்டார்.

* சித்தினி ஜாதி என்பதைப் பற்றி 58 ஆவது நம்பர் ஜாதகம் 33 ஆவது பாடல், 56 ஆவது நம்பர் ஜாதகம் 7-ஆவது பாடல் இவைகளின் கீழ் கொடுத்துள்ள வியாக்கியானத்தை வாசிக்கவும்.

7. பந்துவும் புகழ வாழ்வன் பரிந்து பசாரம் செய்வன்
முந்தையில் மர்ம மில்லான் சிந்தையாய் வார்த்தை சொல்வன்
முந்தின கோபம் பின்னுல் முறைப்படி சாந்த முண்டு
வருதவர்க் கன்ன மீவன் மார்கரம் பத்ம ரேகை.

7. தகப்பனுர் தன்னுடைய பந்துக்கள் தன்னைப் போற்றும்படியான நிலையிலிருந்து வாழ்வார். பிறருக்கு முன் வந்து உதவி செய்வார். தன்னுடைய மனத்தில் ரகசிய மானது இல்லாதவர். யோசனை செய்து வார்த்தைகளைப் பேசுவார், முன் கோப முடையவர். அந்தக் கோபம் பின்னுல் ஒழுங்காய்த் தணிந்து விடும். தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். இவர் மார்பிலும் கையிலும் பத்மரேகை என்ற தாமரை ரேகையாகிய ஒருவித ரேகையை உடையவராவர்.

8. யோசனை பலவும் செய்வன் உறுதியில் லாதா னுகும்
நேசர்க ளதிக முள்ளான் நேமியில் சீல னுவான்
பாசமாய் எவர்க்கு நண்பன் பலகாசு தொழிலும் செய்வன்
போசனசுகியா னுகும் பெரிதான தலங்கள் செல்வன்.

8. தகப்பனுர் பலவித யோசனைகளைப் பண்ணுவார். திடமானதும் தைரியமானதுமான மனத்தை உடையவரல்ல. அநேக சிநேகிதர்களை உடையவர், பூமியில் நல்ல நடவடிக்கையும் நல்லொழுக்கமும் உடையவராவார். எல்லோருக்கும் பிரியமுள்ள சினேகிதனுவார். பலவிதமான நாணயம் பொன்மணிப்பொது மாதரணிவடம் ஒட்டியாணம் இவைகளில் வியாபாரஞ் செய்வார். சுகமான சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சௌக்கியத்தை அடையக் கூடியவர். பெரிய க்ஷேத்திரங்களுக்குப் போவார்.

9. ஆதியில் வறுமை கொஞ்சம் அலைச்சலாம் சமயோ கத்தன்
மாதிவள் வந்த பின்பு மதியது போலே யோங்கும்
பாதக மனமில் லாதான் பஞ்சைமே லிரக்க மாவன்
சாதிப்பான் சிலது சங்கை சந்தேக மானத்தா னுமே.

9. தகப்பனுருக்கு இளம் பிராயத்தில் கொஞ்சம் தரித்திரமும் கஷ்டமும் உண்டு. அலேச்சலும் உபத்திரவமும் உண்டு. நடுத்தரமான யோகத்தை உடையவராவார், இவருக்கு மனைவி வந்து சேர்ந்த பிறகு வளர்பிறைச் சந்திரனைப் போல யோகம் அதிகப்படும். கெட்ட மனமில்லாத வராவார். ஏழைகளின் மேல் இரக்கமும் உடையவர், சிலசெயல்களேச் செய்துமுடிப்பார். சந்தேகமான மனத்தை உடையவராவார்.

10. சொன்னஇக் குணத்தா னுக்குச் சுதனுமே உதிப்பா னுகும்
மன்னன் முன்துணேகள் காணுன் மருவிடும் பின்னுல் விருத்திக்
கன்னிகை யிரண்டே தீர்க்கம் காளேயு மொருவன் தீர்க்கம்
பின்னமாம் ஏழே யென்றேம் பேசுவோம் துணைவன் சேதி.

10. இங்கு இதுவரையிலும் சொல்லப்பட்டக் குணுகுணங்களே உடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருக்கு மூத்த சகோதரர்கள் கிடையா, இளேய சகோதரர்கள் விருத்தியடைவார்கள். இரண்டு இளேய சகோதரிகளும் ஒரு இளேய சகோதரனும் நீண்ட ஆயுளே உடையவர்களாவார்கள். ஏழு சகோதரர்கள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றேம். இளேய சகோதரனுடைய விஷயங்களேப்பற்றிச் சொல்லுகின்றேம்.

குறிப்பு—மூத்த சகோதரர் விஷயம்.—மூத்த சகோதர ஸ்தானமாகிய பதினுென்றில் கேது இருக்கின்றுர். மூத்த சகோதர ஸ்தானுபதியாகிய சுக்கிரனும்மூத்த ஆண் சகோதரகாரராகிய குருவும் சகோதரகாரகராகிய அங்காரகனும் சனியுடன் கூடி மூத்த சகோதரபாவத்திற்குப் பன்னிரண்டில் இருக்கின்றுர். ஆகையால் அதிக தோஷம் இருக்கின்றது. அங்காரகன் இளேய சகோதர ஸ்தானமாகிய மூன்றுவது பாவமாகிய கன்னிக்கு எட்டில் சனியுடன் கூடி இருப்பதும் இளேய சகோதரத்திற்கும் கொஞ்சம் தோஷத்தை விளேவிக்கும்.

11. மாந்தலே மேட ராசி வருகுவான் பித்த தேகி
கூர்ந்துமே வார்த்தை சொல்வன் புன் சிரிப்பு டைய னுகும்.
சேர்ந்தவர் தம்மைக் காப்பன் சேயிழைப் பிரிய னுகும்.
சார்ந்தவர் பத்தி பூணுன் தன் தீரத்தைச் சொல்வேன்.

11. ஜாதகருடைய இளேய சகோதரர் மிருகசீர்ஷ நட்சத்திரத்தில் மேஷராசியில் ஜனனமாவார், இவர் பித்த முள்ள தேகத்தை உடையவர். அதிகமாகவும் கோபமாகவும் வார்த்தைகளேச் சொல்லுவார். புன்சிரிப்பை உடையவராவார், தன்னிடம் வந்து அடைந்தவர்களேக் காப்பாற்றுவார். பெண்களின் மேல் ஆசையை உடையவராவார். தன்னிடம் சேர்ந்தவர்களிடத்திலும் பந்தக்களிடத்திலும் பிரியமில் லாதவர், இவருடைய தைரியத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன்.

12. கல்விமான் கணக்கி லூகன் கண்முகம் வசிய முள்ளான்
சொல்லிலே கபடு முண்டு தோகைவா கனத்தோன் பத்தி
வல்லியர் மோக வானும் மனிதரை வசித்தே வெல்வன்
மல்லுக்குச் செல்லா னுகும் மர்மத்தை வெளிகாட் டாதான்.

12. ஜாதகருடைய இளேய சகோதரர் வித்தையையுடையவர், கணக்குப் போடுவதில் நுட்பமான அறிவுடையவர், இவருடைய கண்களும் முகமும் பிறரை வசியப்படுத்திக் கொள்ளுந் தன்மை உடையனவாக விருக்கும், தான் சொல்லுகின்ற வார்த்தைகளில் கள்ளம் வஞ்சனே கபடம் இவைகள் இருக்கும். மயில்வாகனத்தையுடையவராகிய முருகக்கடவுளின் மேல் பக்தியும் அன்பும் உடையவர். ஸ்தரீகளின்மேல் காம ஆசையையுடையவராவார். மானிடர்களேத் தன்வசப்படுத்திக் கொண்டு அவர்களே ஜயிப்பார், சண்டைக்குப் போகமாட்டார், தன்னுடைய மனத்திலுள்ள ரகசியத்தைப் பிறருக்குத் தெரியும்படியாய்க் காண்பித்துக் கொள்ளாதவராவார்.

13. பாரியும் உள்ளூர் நேரும் பாவையு மொன்றே யாகும்
தீரமாய்ச் சுதராண் மூன்று சேயிழை மார் களவ்வாறு
கூ றுவோம் தீர்க்க மாகக் குமாரன் தன் னுடனே வாழ்வன்
மாரன்தன் துணேஆண் எவ்வாறு வயதுமே தீர்க்கமெய்தும்.

13. ஜாதகருடைய இளேய சகோதரருக்கு மனேவி உள்ளூரிலிருந்தே வந்து சம்பவிப்பாள். இவருக்கு ஒரே மனேவிதான் உண்டு. மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளே உடையவர்களாக இவருக்கு இருப்பார்கள். இவர் தன்னுடைய அண்ணனுகிய ஜாதகருடன் கூடவிருந்து வாழ்வார். ஜாதகருடைய சகோதரர் நீண்ட ஆயுளே உடையவராக எவ்விதமாக ஆவார்.

14. எப்படிச் சொல்லு மென்ன ராகுமஞ்சி னிலே நிற்க
ஒப்புடன் காரி யோடு உயரஞ் சோன் சேர்ந்த தாலே
தப்பிதம் துணேவ ருக்குத் தடுத்துமே பராசர் சொல்வார்
மெய்ப்புடன் ராகு உச்சம் வக்கிர னுட்சி யாக ;

14. அஃது எந்தக் காரணங்களினுல் நேரிடும். அதைச் சொல்லுவீர், இராகு ஐந்தாவது பாவத்தில் இருப்பதாலும், சனியுடன் ஐந்தாவது பாவத்திற்குடைய அங்காரகனும் சேர்ந்திருப்பதாலும் சகோதரருக்குக் கெடுதி நேரிடும் என்று சொல்ல, பராசர முனிவர் மறுத்துச் சொல்லுகின்றுர், இராகு உண்மையிலே உச்சமாக விருப்பதாலும், அங்காரகன் ஆட்சியாகத் தன் வீட்டிலேயே உச்சமாக விருப்பதாலும்.

குறிப்பு.—இளேய ஆண் சகோதர விஷயம் :—இளேய சகோதர லக்கினம் மூன்றுவது பாவமாகிய கன்னியாகும். இதற்கு அஷ்டமஸ்தானம் மேஷம். இதற்கு அதிபதியான அங்காரகன் ஆறுக்குடையவரும் நீசமாயுமுள்ள சனியுடன் கூடி இருக்கின்றுர். இவ்விதமாக எட்டிற்குடையவர் சனியுடன் கூடி இருப்பது ஜாதகபாரிஜாதம் பதினுன்காவது அத்தியாயம் ஐம்பதாவது சுலோகம் பிரகாரம் ஆயுளுக்குக் கெடுதியை உண்டு பண்ணும். மேலும் எட்டிற்கு எட்டாவது ஸ்தானமாகிய மூன்றுவது ஸ்தானமும் ஆயுளுக்குச் சம்மதமான பாவமாகும். இதில் இராகு இருந்துகொண்டு

லக்கினமாகிய கன்னியைப் பார்க்கின்ருர். இதுவும் தோஷத்தை உண்டு பண்ணக் கூடியதாகும். இந்த மூன்றிற்குடையவராகிய அங்காரகனும் சனியுடன் கூடியிருப்பது தோஷமாகும். இவைகள் எல்லாம் இளைய சகோதரனுடைய ஆயுளுக்குத் தோஷத்தை விளைவிக்கக் கூடியனவாகும். பாபக் கிரகங்கள் உச்சமாயிருந்தால் கெடுதியைச் செய்யமாட்டார்கள் என்று சொல்லி இருப்பதாலும், இராகு உச்சமாய் இருப்பதாலும் இவர் நன்மையைத் தருவார் என்றும், அங்காரகன் ஆட்சியாய் இருப்பதால் நன்மைத் தருவார் என்றும் பராசரமுனிவர் மறுத்து பதில் சொல்லுகின்ருர்.

15. அந்தியில் துணைஆண் ஒன்று அனுகிடும் வயது தீர்க்கம்
இந்திர ஜாலம் செய்வன் மெழில்பெரும் வணிப முள்ளான்
தந்தையி னுர் ஜிதத்தைத் தான்விருத்தி செய்வா னுகும்
தந்தியின் தியானம் செய்வன் சங்கரி மேலும் கேளே.

15. கடைசியில் ஓர் ஆண் சகோதரன் உண்டாகும். அந்த சகோதரன் நீண்ட ஆயுளை உடையவராவார். அற்புதங்களைக் காட்டுகின்ற வித்தையைச் செய்து காண்பிப்பார். அழகிய பெரிய வியாபாரத்தையுடையவர். இவர் தன்னுடைய தகப்பனுரின் சொத்துக்களை விருத்தி செய்பவராவார். யானை முகத்தை உடைய விநாயகக்கடவுளைத் துதிப்பார். பார்வதியம்மையே ! நாங்கள் இன்னும் சொல்லுவதைக் கேட்பீராக.

16. ஜாதக நிறங்கு ணத்தைச் சாற்றுவோ மூணைச்சல் நீட்சி
மேதினி லிருநி ரத்தான் வித்தையு முடை யானுகும்
சீதளகுணத் தாளுகும் செய்நன்றி மறவானுகும்
பாதக மனம்செல் லாதான் பாரது விருத்தி செய்வன்.

16. ஜாதகருடைய நிறம், குணுதிசயங்கள் ஆகிய இவைகளைப் பற்றிச் சொல்லுகின்ரும். இவர் வரண்டு மெலிந்து நீண்டு உள்ள தேகத்தை உடையவர். இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமான மாநிறம் உடைய தேகத்தை உடையவர். படிப்பை உடையவராவார். சீதளமான தேகத்தை உடையவ ராவார். பிறர் தனக்குச் செய்த உபகாரங் களை மறக்காதவ ராவார். கெட்ட வழிகளில் இவருடைய மனது போகாது. நிலங்களைப் பயிராட்டுத் தான்யங்களை விருத்தி யாக்குவார்.

17. முகமதில் வடிவு காணும் முன்கோபம் பின்பு தாழ்வு
பகையோரை உறவு கொள்வன் பாரினில் வணிபம் செய்வன்
உகமையாய்ப் பேச வல்லான் உண்மையாம் மனத்தா னுகும்
தகமையாய்க் குடும்பி யாவன் தரித் தொழில் செய்வா னுமே.

17. ஜாதகருடைய முகத்தில் அழகு நிரம்பி இருக்கும். முன்னே கோபம் உண்டாகும். பின்னுல் அது தணிந்து போகும். எதிரிகளைச் சிநேகஞ் செய்து கொள்ளுவார். பூமியில் வியாபாரஞ் செய்வார். உபமானம் உபமேயம் இவைகளை உபயோகப்படுத்தி அலங்காரமாகப் பேசுவதில்

சாமர்த்திய முள்ளவர். உண்மையாய் நடந்து கொள்ளும்படியான மனத்தை உடையவர். மேன்மையான குடும்பஸ்தராவார். தரித்தொழிலேயுஞ் செய்பவராவார்.

18. அக்கினி வடிவ முள்ளான் அவனியில் சல்லியம் கொள்ளான்
சிக்கன குணமில் லாதான் சிறுத்தோர்க்கு உதவி செய்வன்
மைக்கண்ணி மார்கள் மோகன் வலப்புறம் வடுவு காணும்
முக்கியம் பித்தச் சூடு மேவிடு மென்று சொல்வோம்.

18. ஜாதகர் அக்கினியைப் போல சிவந்தரூப முடையவர். பூமியில் கடன் வாங்க மாட்டார். சிக்கனமான குணம் இல்லாதவர். ஏழைகளுக்கு உபகாரஞ்செய்வார். மையைக் கண்ணில் தடவிக்கொண்டுள்ள ஸ்திரீகளிடத்தில் காம ஆசையை உடையவர். வலது பக்கத்தில் அடையாளம் இருக்கும். இவருக்குத் தேகத்தில் விசேஷமாகப் பித்தச்சூடு இருக்கும் என்று சொல்லுகிரும்.

19. மறுமநூ லறிவா னுகும் மலர்க்கரம் சங்கு சக்கரம்
பெருகுமே கோதுமை ரேகை பிறர்பொரு ளிச்சை வையான்
திருமகள் வாச முள்ளான் சதுஷ்பாதம் விருத்தி செய்வன்
பறைபள்ளு உடையனுகும் பகவானின் பத்தி பூண்பன்.

19. ஜாதகர் மர்ம சாஸ்திரமாகிய காமநூலை அறிந்தவராவார். தன்னுடைய விரிந்த அழகிய உள்ளங்கையில் சங்குச் சக்கரரேகை என்ற ஒருவித ரேகை இருக்கும். கோதுமைரேகை என்ற இன்னெரு வித ரேகையும் இருக்கும். பிறருடைய சொத்துக்களின் மேல் ஆசை இல்லாதவர். லக்ஷ்மி இவருடைய வீட்டில் குடி இருப்பாள். கால்நடைகளை விருத்தியாக்குவார். மேளவாத்தியங்களும் ஆள்படைகளும் உள்ளவராவார். கடவுளின் மேல் பக்தியும் அன்பும் உடையவர்.

20. அத்திரி சொல்லு கின்ருர் அவனுக்கு யோகம் எவ்வாறு
பத்தினுக் குடையோன் ஒன்பான் பரிந்துமே தசமம் நிற்கப்
பெத்திடும் தர்மம் கர்மம் யோகமே பிரபல மாகும்
சுத்தவான் திருப்பணி செய்வன் சோலைகள் துறவு செய்வன்.

20. ஜாதகருக்கு எவ்விதமாக யோகம் உண்டாகும் என்று அத்திரி மகரிஷி கேட்கின்ருர். பத்திற்குடையவரான அங்காரகனும் ஒன்பதிற்குடையவரான குருவும் கூடிப் பத்தில் இருப்பதால் தர்ம கர்ம யோகம் என்ற ஒருவித யோகம் விசேஷமானதாக விருக்கும். ஜாதகர் சுத்தமுள்ளவர். நல்ல நடவடிக்கை உடையவர். கோயில்களில் வேலைகளையும் தொண்டுகளையுஞ் செய்வார். சோலைகளையும், தோப்புகளையும், கிணறுகளையும் உண்டாக்குவார்.

21. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தையலாள் வந்த பின்பு
இந்திர யோக முள்ளா னிடரென்ருேர் தம்மைக் காப்பன்
வந்தவர்க் கன்ன மீவன் மாநிலம் நல்லோ னுவன்
எந்திடம் பெருமை யேற்பனி ரவிக்கு இருபக் கத்தில் ;

21. ஜாதகர் மனைவி தன்னிடத்திற்கு வந்த பிறகு தன்னுடைய தகப்பனுருடைய அந்தஸ்திற்கு அதிகமான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் இந்திரயோகம் என்ற ஒரு விதமான யோகத்தை உடையவர். கஷ்டத்தை அடைந்திருக்கின்றேம் என்று சொல்லுகிறவர்களைக் காப்பாற்றுவார். தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். இந்தப் பெரிய பூமியில் நல்லவராக விருப்பார். எவ்விடத்திற்குப் போனலும் பெருமையை யுடையவராவார். சூரியனுக்கு இரண்டு பக்கங்களிலும் ;

குறிப்பு.—இந்திரயோகம் :—இந்திரயோகத்தைப்பற்றி ஜாதக பாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் 68-ஆவது சுலோகம், ஜாதகலங்காரம் 333-ஆவது, 362-ஆவது பாடல்கள், ஜாதகசிந்தாமணி 1987, 1994-ஆவது பாடல்கள் ஆகிய இவைகளைப் பார்க்கவும். இங்கு லக்கினுதிபதியாகிய சந்திரன் பதினைன்றில் உச்சமாக விருக்கின்றுர். அங்காரகன் பத்தில் ஆட்சியாக விருக்கின்றுர்.

22. சுபருமே யிருப்பதாலே சாமர யோகம் வாய்க்கும்
தவசிக ளுறவு கொள்வன் தந்திர மந்திரங்கள் கற்பன்
நிபமிலான் பொய்கள் பேசான் நீத்தார்போல் வார்த்தை சொல்வன்
அபலமாம் தொழிலில் செல்லான் அறுமுகன் தனைப்பூசிப்பன்.

22. சுபக்கிரங்களாகிய புதனும் சந்திரனும் இருப்பதால் சாமர யோகம் என்று சொல்லப்பட்ட ஒரு விதமான யோகம் உண்டாகும். ஜாதகர் தவம் செய்கின்றவர்கள், பரதேசிகள் ஆகிய இவர்களுடைய சினேகத்தை அடைவார். தந்திர வித்தைகள், மந்திர வித்தைகள் ஆகிய இவைகளைப் படிப்பார். கபடம், கோள்சொல்லுதல் இவைகள் இல்லாதவர். பொய்களைச் சொல்லமாட்டார். ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளைப் பூஜை செய்வார்.

குறிப்பு.—சாமர யோகம் :—சாமர யோகத்தைப்பற்றி ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் 136-ஆவது சுலோகம், பலதீபிகை ஆருவது அத்தியாயம் நாற்பத்தொன்ருவது சுலோகம் (சிலபதிப்புக்களில் 44-ஆவது 45-ஆவது சுலோகம்), ஜாதகசிந்தாமணி 2024-ஆவது பாடல் இவைகளைப் பார்க்கவும். இங்கு இரண்டு சுபகிரகங்களாகிய குருவும் சுக்கிரனும் பத்தாவது பாவத்தில் இருக்கின்றுர்கள். மேலும் இங்கு லக்கினுதிபதியாகிய சந்திரன் பதினென்றில் உச்சமாக விருக்கின்றுர். ஆகையால் இரண்டு விதங்களிலும் சாமரையோகம் உண்டாகி யிருக்கின்றது. சூரியனுக்கு இரண்டு பக்கத்திலும் சுபக்கிரகங்கள் இருப்பதால் ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் 121-ஆவது சுலோகப் பிரகாரம் உபயசரியோகம் என்ற ஒருவித யோகம் உண்டாகின்றது. (இந்த உபயசரியோகத்தைப்பற்றி பலதீபிகை ஆருவது அத்தியாயம் எட்டாவது சுலோகத்தையும் பார்க்கவும். இங்கு சந்திரனை நீக்கி மற்றச் சுபக்கிரகங்களைத் தான் எடுத்திருக்கின்றது.)

23. பாரியு மிருபான் ரண்டில் பகரனே வர்க்கம் தன்னில்
தீரமாய் வடமேல் திக்கில் சேருவா ளந்த மாது
கூறுவோ மவள்கு ணத்தைக் குற்றமில் லாதா ளாகும்
சீறிடாள் வரனுக் கன்பள் திருமக ளொப் பதாகும்.

23. ஜாதகருக்கு தனது இருபத்திரண்டாவது வயதில் தாயாருடைய பந்துக்களிலிருந்தும் வடமேற்குத் திக்கிலிருந்தும் மனைவி வந்து நேரிடுவாள். இவளுடைய குணுதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறேம். யாதொரு குறைவும் தோஷமும் இல்லாதவளாவள். கோப மில்லாதவள். புருஷனுக்குப் பிரியமானவள். இலட்சுமிக்குச் சமான மானவளாகும்.

குறிப்பு.—விவாக விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷூ 21-0-0 முதல் ஷூ 22-0-0 முடியும் வரையிலும் அங்காரக தசையில் சந்திர புத்தியும் இராகு தசையில் இராகு புத்தியும் நடக்கின்றன. அங்காரகன் பத்திற்குடையவராகிப் பத்தில் ஏழிற்குடைய சனியுடன் கூடி இருபதாலும் சனி இருக்கும் ராசிக்குடையவராகி இருப்பதாலும் ஜாதக பாரிஜாதம் 7-ஆவது அத்தியாயம் 28-ஆவது 29-ஆவது சுலோகங்கள் பிரகாரம் தன் தசையில் சந்திர புக்தியில் விவாகம் செய்து வைக்கும் அமைப்பு உள்ளவராகிருர்.

24. அன்னம்போல் சாய லுள்ளாள் அவளுமாஞ் சிவப்ப ளாகும்
தன்சொலு மடக்க முண்டு தானவள் யோக சாலி
பொன்பணி யுடைய ளாகும் பித்ததே கத்தா ளென்றேம்
அன்னியர் குற்றம் சொல்லாள் அவசர மனத்தா ளாகும்.

24. ஜாதகருடைய மனைவி அன்னப்பட்சியைப் போல அழகான ரூபம் உள்ளவளாவாள். இவள் மாந்துளிரின் நிறம்போல ஒரு விதமான சிவப்பு நிறத்தையுடைய தேகத்தை உடையவளாவாள். இவள் அடக்கமாகவும் அமைதியாகவும் பேசுவாள். இவள் யோகத்தை யுடையவள். தனமும் ஆடை ஆபரணங்களும் உடையவளாவள். பித்தமான தேகத்தை உடையவள் என்று சொல்லுகின்றேம். பிறர்மேல் குற்றங்களைச் சாட்டமாட்டாள். அவசரமான குணத்தை உடையவளாவாள்.

25. சுதர்களும் காணு ளாகும் தோன்றினும் தீதே யாகும்
அதிபதி வயது தீர்க்கம் அத்திரி மறித்துச் சொல்வார்
மதிநுதல் மனைவி ரண்டு மருவிடு மிவனுக் கேதான்
எதுவிதக் கார ணத்தா லியம்பினீ ரந்தச் சங்கை.

25. ஜாதகருடைய மனைவிக்குக் குழந்தைகள் பிறக்கமாட்டார்கள். பிறந்தாலும் இறந்து விடுவார்கள். இவளுக்கு நீண்ட ஆயுள் உண்டு. இவ்விதமாகப் பராசரமகரிஷி சொல்ல, அத்திரி மகரிஷியானவர் தடுத்துச் சொல்லுகின்றுர். ஜாதகருக்குச் சந்திரனைப்போன்ற அழகிய நெற்றியை யுடைய இரண்டு மனைவிமார்கள் வந்து சம்பவிப்பார்கள் என்று அத்திரி ரிஷி சொல்ல, எந்தக் காரணத்தினுல் இவ்விதமான விஷயத்தை நீர் சொன்னீர் என்று பராசர மகரிஷி கேட்க ;

26. சத்தமத் தோன்ச ரத்தில் தங்கினுர் நீச மாகக்
குத்தமாய்ப் புகரும் சேரக் கூறினேம் தாரம் ரண்டு
அத்திரி யிவ்வாறு சொல்ல அறைகுவார் பராசர் தாமும்
குத்தமாய்ச் சொல்லோ ணுது குசனுட்சி குருவினேடு ;

26. ஏழிற்குடையவராகிய **சனி** சராராசியாகிய மேஷராசியில் நீசமாக விருக்கின்றார். சுக்கிரனும் சனியுடன் கூடிக் கெடுதியாய் இருக்கின்றார். ஆகையால் இரண்டு மனைவிகள் உண்டு என்று சொன்னோம் என்று அத்திரி மகரிஷியானவர் சொல்ல, பராசரமகரிஷி சொல்லுகின்றார். குற்றமாக ஒன்றுஞ் சொல்லக்கூடாது. அங்காரகன் ஆட்சியாக விருக்கின்றார். குருவுடன்;

27. காரியும் [1]சேர்ந்த தாலே கவி [2]வாக்கில் [3]பாலு [4]மொன்று
தீரமா யிருப்ப தாலே சேயிழை யிருவர் காணுன்
நாரியு மொன்றே தீர்க்கம் நற்சுதர் காணு தாகும்
கூறுவீ ரந்தச் சங்கை குழவியின் தானம் தன்னில்;

27. சனியும்கூடி இருப்பதாலும், சுக்கிரனுக்கு இரண்டில் சந்திரனும் வலிவுடன் இருப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் இல்லை. ஒரே மனைவிதான், தீர்க்கமான ஆயுளை இவள் உடையவளாக விருப்பாள். ஆனால், ஆண் குழந்தைகள் பிறக்க மாட்டார்கள் என்று சொல்ல, அதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, புத்திரஸ்தானத்தில் ;

28. அரவுமே யிருப்ப தாலே அறைந்தனம் புத்திர தோஷம்
திருமகன் பூர்வம் தன்னில் செய்தனன் அதிகத் துன்பம்
குறையது என்ன செய்தான் கூறுவீர் விவர மாக
வரைகிறோம் பூர்வம் தன்னில் வளர் பாண்டி நகரம் கீழ்ப்பால்.

28. இராகு இருப்பதால் சந்ததிக்குத் தோஷத்தைச் சொன்னோம். ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் அதிகமான கெடுதிகளைச் செய்திருக்கின்றார் என்று சொல்ல, இவர் எப்படிப்பட்ட குற்றங்களைச் செய்திருக்கின்றார், அவைகளை விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்க, அவைகளைச் சொல்லுகின்றோம் என்றார். இவர் முன்ஜன்மத்தில் வளம் பொருந்திய பாண்டிய தேசத்தில் ஒரு பட்டணத்திற்கு (அல்லது புதுச்சேரிப் பட்டணத்திற்கு)க் கிழக்குத் திக்கில் ;

29. அருகினில் பேரூர் தன்னில் அந்தணர் குலமு தித்து
வறுமைக ளில்லா தாகி மந்திரம் கற்றுக் கொண்டு
கருவுக ளழித்தா னென்றோம் காதலி மார்கள் மோகம்
அரவுகள் தமை யழைத்தும் அவைகளை அவஸ்தை செய்தும்;

29. சமீபத்திலுள்ள ஒரு பெரிய ஊரில் பிராமணருடைய குலத்தில் பிறந்து கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமலிருந்து மந்திர வித்தையைக் கற்றுக்கொண்டு கருவுகளை அழித்தார் என்று சொல்லுகிறோம். ஸ்திரீகளின்மேல் காம ஆசையை உடையவராகி இவ்விதமாகக் கருவுகளைக் கெடுத்தார். பாம்புகளைத் தன்னுடைய மந்திர சக்தியினால் வரவழைத்து அவைகளைத் துன்பப்படுத்தினர்.

---
[1] சனி [2] சுக்கிரன் [3] இரண்டு [4] சந்திரன்

30. தடைசெய்து விடாமல் செய்தான் சார்ந்தது அதுஓர் தோஷம்
விடமது யில்லம் தன்னில் வெகுநாளாய் வாச மாகும்
படநாகம் மகுடத் தாலே பரவிற்று வெளியில் ஓர்நாள்
அடவுடன் சத்தம் காட்ட அங்கனே மயங்கி நிற்க ;

30. பாம்புகளைத் தடைசெய்து அவைகளைப் போகாமல் இருக்கும்படி செய்துவிட்டார். இந்த ஒரு தோஷமும் இவரை வந்து அடைந்தது. இவருடைய வீட்டில் ஒரு சர்ப்பம் வெகுகாலமாக வாசஞ் செய்துகொண்டிருந்தது. அது மகுடத்தால் † ஒரு நாள் வெளியேவந்து உலாவிக்கொண்டிருந்தது. ஒரு விதமான சப்தத்தை உண்டுபண்ணவே அது மயக்கங் கொண்டு திகைத்து நிற்கவே ;

குறிப்பு.—இந்த மகுடம் என்பதன் அர்த்தம் சரியாய் விளங்கவில்லை. மகுடம் என்றால் சாதாரணமாய்க், கிரீடம் சிரசு என்று அர்த்தம். அந்த அர்த்தம் இங்குப் பொருந்தவில்லை. படம் எடுத்து ஆடுதல் என்பதும் பொருந்தாது. மகுடம் என்பது புல்லாங்குழலால் உண்டாகும் மோடி ராகம் என்பது பொருத்த முடையதாகும். அஃதாவது புல்லாங்குழலால் பாடவே நாகம் வெளியே கிளம்பி வந்தது என்னும் பொருள் பொருத்த முடையதாகும்.

31. காலன்தன் பதிக்குச் செல்லக் கழியி னுலதனை வாட்டச்
சாலவே அந்தத் தோஷம் சார்ந்தது யிவனுக் கேதான்
வேலனு மந்தி யத்தில் விழியது குறைவு நேர்ந்து
பாலகர்கள் பகையு மாகிப் பாசுரம் தனைமறந்து ;

31. ஜாதகர் அதைத் தடியால் அடித்துக் கொன்று எமபட்டணத்திற்கு அனுப்பிவிட்டார். இந்தத் தோஷமும் இவரை வந்து அணுகியது. இவர் தன்னுடைய கடைசிகாலத்தில் பார்வைகுறைந்து தன்னுடைய சந்ததிகளும் தனக்கு விரோதமாகிக் கடவுள்களின்மேல் பாடுகின்ற பாடல்களையும் தோத்திரங்களையும் மறந்து ;

32. அந்தகன் பக்கல் சென்று அருநக ரினிலே புக்கி
வந்தன னிந்தப் பாலன் விடங்களின் தோஷத் தாலும்
முந்தின கருவின் தோஷம் மேவிற்று இச்சென் மத்தில்
சந்ததம் குழவி காணுன் ஜனிக்கினும் தீதே யாகும்.

32. இறந்து எமனிடத்திற்குப் போய் நரகத்தில் இருந்து பிறகு ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். இவரை முன் ஜன்மத்திய பாம்பின் தோஷங்களும் கருக்களை அழித்த தோஷமும் இந்த ஜென்மத்தில் வந்து அடைந்தன. ஆகையால் இவருக்கு எப்போதும் ஆண் குழந்தை கிடையாது. † ஒரு சமயம் பிறந்தாலும் அஃது இறந்து போய் விடும்.

குறிப்பு.—புத்திர விஷயம்:—புத்திர பாவத்தைப்பற்றி ஐந்தாவது பாவம், குரு, பிறகு ஒன்பதாவது பாவம், பிறகு ஏழாவது பாவம், பிறகு லக்கினாதிபதி ஆகிய இவைகளை வரிசையாகக் கவனிப்பது சாதாரணமான வழியாகும். ஐந்தாவது பாவமாகிய விருச்சிகத்தில் ராகு இருப்பது புத்திர

தோஷத்தை உண்டுபண்ணும் என்று 28-ஆவது பாடலில் முன்னமே சொல்லி இருக்கின்றது. ஆறுவது பாவத்திற்குடைய குருவும், ஏழாவது பாவத்திற் குடைய சனியும், ஐந்தாவது பாவத்திற்குடைய அங்காரகனும் சேர்ந்து பத் தாவது கேந்திரத்தில் இருப்பதால் ஜாதகாலங்காரம் 628-ஆவது பாடலில் சொல்லிய பிரகாரம் புதல்வரில்லை என்று சொல்லவேண்டும். ஐந்திற் குடையவருக்கும் ஏழிற்குடையவருக்கும் ஒருவிதமான சம்மந்தம் ஏற்பட்டா லும் ஆண்குழந்தைகளுக்குத் தோஷம் ஏற்படும் என்று ஜாதகாலங்காரம் 596-ஆவது பாடலிலிருந்து ஊகிக்கலாம். மேலும் சந்திர லக்கின ரீதியாய் ஐந்திற் குடைய புதன் மூன்றில் மறைந்துவிட்டார். ஐந்தாம் வீடு புதன் வீடா கின்றது. மேலும், சந்திரனுக்கு ஒன்பதிற்குடையவராகிய சனியும் ஏழிற்குடை யவராகிய அங்காரகனும் புத்திரகாரகனுகிய குருவும் ஆறுக்குடையவரான சுக்கிரனுடன் கூடிச் சந்திரனுக்குப் பன்னிரண்டில் மறைந்திருப்பது புத்திர பாவத்திற்குப் பெரிய தோஷமாகும். சந்திரனுக்குப் புத்திர ஸ்தானம் புதன் வீடாய் இருப்பதைப்பற்றி ஜாதபாரிஜாதம் 13-ஆவது அத்தியாயம் 29-ஆவது சுலோகம், ஜாதகாலங்காரம் 592-ஆவது பாடல் இவைகளைப் பார்க்க வும். அங்காரகனும் குருவும் லக்கினத்திற்குப் பத்தில் இருப்பது சந்தான பாவத்திற்குக் கொஞ்சம் வலிவுடையதாகும். பெண் குழந்தைகள் விஷய மாக அனுகூல மானதாகும்.

33. கன்னிகை யிருவர் தீர்க்கம் கழறுவோ மிவனுக் கேதான்
அன்னையும் கேட்க லுற்றாள் அவர்தர்மம் குணவா னென்றீர்
தன்கர்மம் செய்ய மைந்தர் தங்காது யென்று சொன்னீர்
முன்வினை நிவிர்த்தி எவ்வாறு மொழிகுவீர் பராச ரேநீர்.

33. ஜாதகருக்கு இரண்டு பெண் குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகிறோம். இவ்விதமாகச் சொல்ல, பார்வதியம்மையார் கேட்கின்றார். ஜாதகர் தர்ம குணங்களை உடையவர் என்று நீர் சொன்னீர். இவருக்குக் கர்மங்களைச் செய்ய ஆண் குழந்தை கிடையாது என்றும் சொன்னீர். பராசர முனிவரே! ஜாதகருடைய முன்ஜன்மத்திய பாவங்களை எவ்விதமாக விலக்குவது என்பதைப் பற்றிச் சொல்லுவீராக.

34. தன்னகர் உத்த ரத்தில் சலகரை யீசர் வாசம்
அந்திடம் அரசு நிற்கும் அப்பணி சிலையில் செய்து
இந்தவன் பிரதிட்டை பண்ணி இருபத்தேழ் மறையோர்க் கன்னம்
சிந்தையும் களிப்பாய் வைத்துத் தோகைமா மலைக்கு மேதான்;

34. ஜாதகருடைய பட்டணத்திற்கு வடக்கிலுள்ள நீர்க்கரையில் இருக்கும் சிவபெருமானுடைய கோவிலண்டை ஓர் அரசமரம் இருக்கும். சர்ப்பத்தினுடைய சிலை ஒன்றைச் செய்து இந்த மரத்தண்டை பிரதிஷ்டை செய்து இருபத்தோரு பிராமணர்களுக்குச் சாப்பாட்டை மனத்தில் சந்தோஷத் துடன் போட்டு மயில்களை உடைய பெரிய மலையாகிய பழனி ஸ்தலத்திற்குப் போய்;

35. ஏரேழு கார்த்தி சென்று ஓராறு முகத்தோன் பாதம்
சீருட னர்ச்சித் தேத்திச் சேயிழை தன்னு டுற்று
ஊரினில் சென்று சஷ்டி உறுதியாய் விரதம் கொள்ள
ஆறுமா முகனைப் போலே அணுகிடும் சுதரானு ஒன்று.

35. ஏழு கிருத்திகை தினங்களில் போய் ஆறுமுகங்களை உடைய முருகக் கடவுளுடைய பாதங்களைச் சிறப்புடனும் அழகுடனும் அலங்க ரித்து அர்ச்சனை செய்து துதித்துப் பிறகு மனைவி தன் பட்டணத்திற்குப் போய் அந்த ஊரில் பன்னிரண்டு சஷ்டி தினங்களில் விரதத்தை மனத் திடத்துடன் அனுஷ்டித்து வந்தால் ஆறு பெரிய முகங்களைஉடைய முருகக் கடவுளைப்போல ஓர் ஆண் குழந்தை பிறக்கும்.

36. ஆருறு ஆண்டு மேலாய் அணுகிடும் ஆண்பா லுந்தான்
மாரனைப் போலே தோன்றும் மன்னர் போல்வாழ்வா னாகும்
கூறுவோ மன்னை சேதி குணமது நல்ல தாகும்
பாரிய புத்தி யுண்டு பகருமுன் கோபி யாவள்.

36. ஜாதகருக்கு முப்பத்தாறுவது வயதிற்குமேலே ஆண் குழந்தை பிறக்கும். அது மாரன் என்ற மன்மதனைப் போல அழகுடையதா கக் காணப்படும். அந்த ஆண் குழந்தை அரசனைப்போல யோகமுடையவ ணுகி வாழ்வான். இனிமேல் ஜாதகருடைய தாயாரின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் நல்ல குணத்தை உடையவள். நல்ல புத்தியை யுடையவள். எல்லோரிடமும் பிரிய முள்ளவளாய் இருப்பாள். பேசுவதற்கு முன்னமே கோபத்தை யடையவளாவாள்.

37. வறுமை களுடையா ளாகும் வரன்மனம் போல வாழ்வள்
திருமக ளொப்ப தாகும் செல்வியின் துணை யந்தத்தில்
பெருமையாய் ஆண்பா லொன்று பேசுவோம் தீர்க்க மாக
மருமமாய்ப் பெண்பா லொன்று வரைகிறே மத்தி யத்தில்;

37. ஜாதகரின் தாயார் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் உடை யவளாவாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற் போல ஒத்திருந்து வாழ்வாள். இலக்ஷ்மிக்குச் சமானமானவளாக விருப் பாள். இவளுடன் கூடப்பிறந்தவர்களில் ஓர் ஆண் சகோதரர் மேன்மை யாகவும் நீண்ட ஆயுளை உடையவராகவும் இருப்பார் என்று சொல்லுகிறோம். ஒரு சகோதரியும் உண்டு என்று சொல்லுகிறோம். இந்தச் சகோதரி மத்திய வயதில்;

38. ஏகுவாள் காலன் பக்க லில்லமும் வடமே லாகும்
தோகையின் பூர்வம் சொல்வேன் திருகடை யூர்கீழ்ப்பாலில்
பாகமாய் வைசியச் சேயாய்ப் பிறந்தனள் வறுமை யின்றிப்
போகபா க்கியங்க ளுண்டாய்ப் புத்திரர் வரனுண் டாகி;

38. இறந்து எமனிடத்திற்குப் போய்ச் சேருவாள். தன் தாயாருடைய வீடு வடமேற்குத் திக்கில் இருக்கும். ஜாதகரின் தாயாருடைய முன் ஜன் மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். திருக்கடையூருக்குக் கிழக்குத்திக்

இல் தகுதியான ஒரு வைசிய குலத்துப் பெண்ணுகப் பிறந்தாள். இவள் கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமல் சுகபோகங்களும் சகல செல்வமும் புருஷனும் மக்களும் ஆகிய இவைகளை உடையவளாகி ;

39. அறமதி லிச்சை யுண்டாய் அச்சென்ம பவமில் லாமல்
மறலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப் பட்டு
உரைந்தன ளிக்கு லத்தில் உலகிற்கு நல்லோ ளாவள்
மருமமாய் நாற்பா னென்றில் மகரமா தத்தி லேதான் ;

39. கருமத்தில் ஆசை உடையவளாகி அந்த முன் ஜன்மத்தில் யாதொரு பாபமும் இல்லாமல் இறந்து எமபட்டணத்திற்குப் போய் மகா விஷ்ணுவின் குமாராகிய பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இந்தக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றுள். பூமியி லுள்ளவர்களுக்கு இவள் நல்லவளாவாள். இவள் ஜாதகருக்கு நாற்பத் தொன்றுவது வயதில் † தை மாதத்தில் ;

† குறிப்பு.—தாயார் மாரக விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷ்ை 40-0-0 முதல் ஷ்ை 41-0-0 முடியும் வரையிலும் குரு தசையில் குரு புக்தி நடக் கின்றது. மாதுர் லக்கினம் நான்காவது பாவமாகிய துலாமாகும். துலா லக்கினத்திற்குப் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் குரு வும் சூர்யனும் மாரகாதிபதிகள் ஆவார்கள். மேலும், குரு துலாத்திற்கு ஒன்று எட்டிற்குடையவராகிய சுக்கிரனுடன் கூடியிருக்கின்றுர். ஆகையால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் குரு தாயாருக்கு மரணத்தை தன் தசா புக்திகாலத்தில் செய்ய அமைப்பு உள்ளவராகின்றுர். கார்க்கேயர்நாடி 12000 என்ற கார்க்கேயர் ஜோதிடம் முதற் காண்டம் 680-ஆவது பாடலையும் பார்க்கவும்.

40. மறையவன் கயமு டுத்தி மாதாவுக் கரிட்ட மாகும்
வரும்ஜன்மம் தணிகை தன்னில் மறைக்குல முதிப்பா ளாகும்
பெரும்தந்தை பூர்வம் சொல்வேன் பழனியின் மேற்குத் திக்கில்
அருகர்தன் குலமு தித்து அதிதிபோல் உடைமை கொண்டு ;

40. குருவிற்குச் சம்மந்தமான ஒருவித நோயால் தேய்வு அடைந்து மரணமாகிவிடுவாள். இவளுடைய மறுஜன்மத்தில் தணிகை என்று சொல்லப்பட்ட திருத்தணி ஸ்தலத்தில் பிராமணர் குலத்திற் பிறப் பாள். ஜாதகருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். பழனிக்கு மேற்குத்திக்கில் சமணருடைய குலத்திற் பிறந்து பரதேசிகளைப் போல வஸ்திரம் தரித்துக் கொண்டு ;

41. வினையது யில்லா தாகி மேவினன் காலன் பக்கல்
கனமுள பிரமன் லக்கம் காணையும் வந்தானென்றேரும்
சினமிலா முப்பா னென்பான் சீர்பணி [1] தசையிலேதான்
அனையசேய் [2] புத்தி மாசி அறைந்தனம் தந்தைக் கேதான்.

[1] ராகு. [2] அங்காரகன்

41. யாதொரு பாபமும் இல்லாமல் இறந்து எமனிடத்திற்குப் போய் மேன்மையான பிரமதேவனுடைய பிரமலிபியுடன் இவர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுர் என்று சொல்லுகின்றேம். ஜாத கருக்கு முப்பத்தொன்பதாவது வயதில் † சிறந்த இராகுதசையில் அங்கா ரகனுடைய புக்தியில் மாசி மாதத்தில் தகப்பனர் இறந்து போய் விடுவார் என்று சொல்லுகின்றேம்.

† குறிப்பு.—தகப்பனர் மாரக விஷயம்:—ஜாதகருக்கு வயது ஷ்ை 38-0-0 முதல் ஷ்ை 39-0-0 முடியும் வரையிலும் இராகு தசையில் சந்திர புக்தி அங்காரக புக்தி இவைகள் நடக்கின்றன. மாசி மாதத்தில் அங்காரக புக்தி மாத்திரம் நடக்கின்றது. பிதுர் லக்கினம் ஒன்பதாவது பாவ மாகிய மீனம் ஆகும். மீன லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந் திரிகை இவைகளின் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் மார காதிபதிகளாகின்றுர்கள். இராகு அங்காரகனுடைய வீட்டில் இருப்பதால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் அங்காரகனுடைய பலா பலன்களைக் கொடுக்க வேண்டும். அங்காரகன் மாரகாதிபதிகளாகிய சனி சுக்கிரன் இவர்களுடன் கூடி இரண்டாவது மாரகஸ்தானத்தில் இருக்கின்றுர். மேலும் இந்த அங்காரகன் லக்கினதிபதியாகிய குருவுடனும் அஷ்டமாதி பதியாகிய சுக்கிரனுடனும் கூடி இருக்கின்றுர். ஆகையால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல், கார்க்யர்ஜோதிடம் முதற்காண்டம் 680-ஆவது பாடல், ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகம் ஆகிய இவைகளின் பிரகாரம் அங்காரகன் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவரா கின்றுர். இவர் வீட்டிலுள்ள இராகு மேற் சொல்லிய 12-ஆவது சுலோகப் பிரகாரம் தன் தசையில் அங்காரகனுடைய புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகின்றுர்.

42. பின்ஜன்மம் பரன்கு ன்றத்தில் பிறப்பனும் பிரம்ம சேயாய்
அன்னையும் கேட்க லுற்றுள் அவனுமிச் சென்மம் தன்னில்
என்னபுண் ணியங்கள் செய்தானி யம்புவீர் முனியே நீர்தாம்
கன்மன மில்லா தாயும் கனத்தோருக் குதவி பூண்டும்;

42. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய மறு ஜன்மத் தில் பரன்குன்றம் என்ற திருப்பரங்குன்றத்தில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் இந்த ஜன்மத்தில் என்ன புண்ணிய காரியங்களைச் செய்தார் அவைகளைச் சொல்லுவீர், முனிவரே ! என்று பார்வதியம்மையார் கேட்டார், இவர் கடினமான மனமில்லாத வராகி இளைப்படைந்தவர்களுக்கு உபகாரஞ் செய்து ;

43. நல்லதோர் தலங்கள் சென்றும் நாயகன் வாழ்வ தாலே
சொல்லினேம் மறுபி றப்புச் சுரர்குலம் ஜாதகர்க்கு
இல்லத்தில் அறுபா னெட்டு மிருந்துமே தனசு மாதம்
செல்லுவான் காலன பக்கல் தேவியே மேலுங் கேளே.

43. நல்ல ஸ்தலங்களுக்குப் போயும் இவர் வாழ்வதாலே இவருக்கு மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் ஜனனம் நேரிடும் என்று சொன்னோம். ஜாதகர் தன்னுடைய வீட்டில் அறுபத்தெட்டு வயது † வரையிலும் வசித்திருந்து மார்கழி மாதத்தில் இறந்து சிமனிடம் போய்ச் சேருவார். பார்வதியம்மையே ! இன்னும் நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

† குறிப்பு.—ஜாதகர் மாரக விஷயம் :—ஜாதகருக்கு வயது ஞூ 67-0-0 முதல் ஞூ 68-0-0 முடியும் வரையிலும் சனி தசையில் சந்திர புக்தி அங்காரக புக்தி இவைகள் நடக்கின்றன. மார்கழி மாதத்தில் சந்திரனுடைய புக்தி தான் நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் பாராசரஹோரை, ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி சுக்கிரன் புதன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றார்கள். சனி மாரக ஸ்தானங்களாகிய ஏழிற்கும் எட்டிற்கும் உடையவராகி மாரகாதிபதியாகிய சுக்கிரனுடன் கூடி நீசமாக விருக்கின்றார். ஆகையால் சுய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது 20-ஆவது பாடல்கள் பிரகாரமும், ஜாதகசந்திரிகை 27-ஆவது சுலோகம் பிரகாரமும் மாரகாதிபதிகளாகிய புதனையும் சுக்கிரனையும் தள்ளி விட்டுத் தானே தன் தசையில் ஜாதகருக்கு மாரகஞ் செய்யும் அமைப் புடையவ ராகின்றார். சந்திரன் மாரகஸ்தானமாகிய பதினொன்றில் மாரகாதிபதியாகிய சுக்கிரனுடைய வீட்டில் இருக்கின்றார். ஆகையால் மேற் சொல்லிய 14-ஆவது பாடல் பிரகாரமும் கார்க்கேயர்ஜோதிடம் முதற் காண்டம் 674-ஆவது பாடல் பிரகாரமும் 82-ஆவது ஜாதகம் 24-ஆவது பாடலின் கீழ்கொடுத்துள்ள நமது வியாக்கியானம் பிரகாரமும் சந்திரன் தன்னுடைய புக்தியில் ஜாதகருக்கு மாரகத்தைச் செய்யும் அமைப்பு உடையவராகின்றார்.

44. மறுஜன்மம் காஞ்சி தன்னில் மாரனும் பிரம்ம சேயாய்
உறைந்துமே அரசர் மூல முத்தமன் ஜீவிப் பானும்
உறைகிறே மிவனின் யோகம் உதித்தநாள் முதலா மாக
பிறையது போலே யோகம் பொருந்திடு மரண மட்டும்.

44. ஜாதகர் தன்னுடைய பின் ஜென்மத்தில் காஞ்சிபுரத்தில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து அரசாங்கம் மூலமாக ஜீவிப்பவராவார். இவருடைய யோகத்தைச் சொல்லுகின்றோம். பிறந்த காலம் முதற் கொண்டு மரணகாலம் வரையிலும் வளர் பிறைச் சந்திரனைப் போலவே யோகம் விருத்தியாகிக் கொண்டுவரும்.

வேறு

45. ஆகிலும் பாரி அணுகிய பின்னால்
போகபா க்கியங்கள் பொருந்திடு மென்றோம்
பாகமாய்ப் பூமி பணிகள்செம் பொன்னும்
மாகநா லாயிரம் சாற்றினோம் யாங்கள்.

45. இப்படியாக விருந்த போதிலும் ஜாதகருக்கு மனைவி வந்து சம்பவித்தப் பிறகு சுகபோகங்களும் செல்வமும் உண்டாகும் என்று

சொல்லுகிறோம். தகுதியான நிலங்கள் ஆடை ஆபரணங்கள் தனம் இவைகள் எல்லாம் மொத்தம் நாலாயிரம் பொன் பெறக்கூடிய சொத்து ஜாதகருக்கு உண்டு என்று நாங்கள் சொல்லுகின்றோம்.

வேறு

46. காவலன் ஜனிக்கும் காலே கதிர்த்தசை ஆண்டு நாலும்
தாவிய திங்களைந்தும் சாற்று வோம் பலனை யாங்கள்
மேவிடும் துணைவர் விருத்தி வித்தகன் தனக்கு ரோகம்
நேமியில் நேத்திர பீடை நீங்கிடும் தந்தை நோயும்

46. ஜாதகர் பிறக்கும் போது சூரிய மகாதசையில் இருப்பு நான்கு வருஷங்களும் ஐந்து மாதங்களும் ஆகும். இக்காலத்தில் நடக்கும் பலாபலன்களை நாங்கள் சொல்லுகிறோம். ஜாதகருக்குச் சகோதரர்கள் உற்பத்தியாகி விருத்தி யடைவார்கள். இவருக்கு நோய் உண்டாகும். கண் நோயும் உண்டாகும். தகப்பனுருக்கும் ரோகம் உண்டாகும். ஆனால் இவைகள் விலகி சௌக்கியமு முண்டாகும்.

ஜாதகம் 95

1. மதி[1]புகர்[2] புந்தி[3] பானுவும்[4] நந்தி[5]மரை [6]வண்டி[7] கேதுவும் சேய்[8]
விதி[9]துலை[10] சேயும்[11] மீனம் விடமது[12] சாடி[13]யாகப்
பதியது கடகம் பகருவீர் பலனைப் பராசரும் புகலுவார்
ஆண்பாலிது ஜெனனங்கள் தந்தையில் சொல்வேன் எமன்
[உத்திர வாடை யாகும்.

அங்காரகன்		சூரியன் சந்திரன் புதன் சுக்கிரன்	
ராகு	இராசி சக்கரம்		லக்னம் குரு
			கேது
		சனி	

மிருகசீர்ஷம் 1-ஆம் பாதம், அங்காரகதசை இரு 5-5-0

1. சந்திரன் சுக்கிரன் புதன் சூரியன் ரிஷபத்திலும், குரு கடகத்திலும், கேது சிம்மத்திலும், சனி துலாத்திலும், அங்காரகன் மீனத்திலும், ராகு கும்பத்திலும் ஜன்ம லக்கினம் கடகமாகவும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்க, பராசரமகரிஷி சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தை ஆகும். தகப்பனாருடைய வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றேன். அது வடக்குத் தெற்கு வீதியில் இருக்கும்.

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின் வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும் :—ரிஷபத்தில் கேதுவும், கடகத்தில் புதனும் சுக்கிரனும், சிம்மத்தில் சந்திரனும், கன்னியில் சூரியனும், விருச்சிகத்தில் குருவும் ராகுவும், மகரத்தில் அங்காரகனும், மீனத்தில் சனியும் ஆகும்.

2. ஆகுமே குடகு வாசல் சந்து அருகினில் உத்தர மாகும்
ஏகமா மூர்த்தி யிடிபெரும் தென் மேல்
யானையின் கோஷ்டமும் மேற்கில்
தோகையு மாரி அருகில் வாயு

[1] சந்திரன் [2] சுக்கிரன் [3] புதன் [4] சூரியன்
[5] ரிஷபம் [6] குரு [7] கடகம் [8] சிம்மம்
[9] சனி [10] துலாம் [11] அங்காரகன் [12] இராகு
[13] கும்பம்

சிம்மவா கனத்தாளுத்தரம்
பாகமாய்ச் சிற்றூர் புகன்றனம் யாங்கள்
பாலகன் சேஷ்டனு மென்றோம்.

2. மேற்குத்திக்கில் தெரு வாயிற்காலும் வடக்குத் திக்கில் சமீபத்தில் ஒரு சந்தும் இருக்கும். சிவபெருமானுடைய கோயில் தென் மேற்குத்திக்கிலும், யானைத் தொழுவம் மேற்குத்திக்கிலும், தோகையை யுடைய மாரியம்மன் கோயில் சமீபத்திலும் வடமேற்குத்திக்கிலும், சிம்ம வாகனத்தையுடைய காளியம்மன் கோயில் வடக்குத்திக்கிலும் உள்ள ஒரு தகுதியான சிறிய கிராமத்தில் ஜாதகர் பிறப்பார் என்று நாங்கள் சொல்லுகின்றோம். இவர் ஜேஷ்டனாக விருப்பார் என்று சொல்லுகிறோம்.

3. இயன்றதோர் தந்தை தாய் துணை புத்திரர்
இசைந்திடு பாரியின் யோகம்
அன்றவன் யோகம் முன்பின் ஜன்மங்கள்
அறைகிறோம் நூல்களை யாய்ந்து
ஈன்றவன் தந்தை துணைநவ மதில்
எகிடும் சிலதுமே யென்றோம்
நின்றது நான்கு ஆணது மிரண்டு
நிமலிகள் அவ்வித முரைப்போம்.

3. ஜாதகருடைய தகப்பனார் தாயார் சகோதரர்கள் சந்ததிகள் சம்பவிக்கப்போகின்ற மனைவி ஆகிய இவர்களுடைய யோகத்தையும் ஜாதகருடைய யோகத்தையும் முன் ஜன்மங்கள் பின் ஜன்மங்கள் ஆகிய இவைகளையும் சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்து சொல்லுகிறோம். பெற்றெடுத்த தகப்பனாரின் சகோதரர்கள் ஒன்பது பேர்களில் சிலர் இறந்து போய் விடுவார்கள் என்று சொல்லுகிறோம். நிலையாகத் தங்கின பேர்கள் நான்கு பேர்களாவார்கள். இவர்களில் இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் ஆகும் என்று சொல்லுகிறோம்.

4. உரைத்திடக் கேண்மோ தந்தையின் குணத்தை
உணச்சலும் நீட்சியு முடையான்
பொரை சொல்லா னுகி புத்திமான் ஈகை
பொருந்திடுங் கிருஷியே செய்வன்
நரைமல ரிஷ்டன் மாந்தலை மீனம்
நல்குவான் மாநிற முடையான்
குறையென்றோர்க் குதவி கூறுஞ்சொல் சுகமாம்
குறிப்பினில் கொடுமையே தோன்றும்.

4. ஜாதகரின் தகப்பனாருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக. வரண்டு மெலிந்து நீண்டு உள்ள தேகத்தை உடையவராவார். குற்றமானதைச் சொல்லமாட்டார். நுட்பமாக வறியுந்தன்மையை உடையவர். புத்தியுள்ளவர். கொடுக்குந் தன்மையை யுடையவர். விவசாயத் தொழிலைச் செய்வார். வாசனையை யுடைய

புஷ்பங்களின்மேல் ஆசையை யுடையவர். மிருகசீர்ஷ நட்சத்திரத்தில் மீன ராசியில் பிறந்திருப்பார். இவர் மாநிறமுள்ள தேகத்தை யுடையவராவார். கஷ்டப்படுகின்றேம், தரித்திரத்தை அடைந்திருக்கின்றேம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். இன்பமான வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் தோற்றத்தில் கெட்டவரைப்போலக் காணப்படுவார்.

5. கொடுமையை எண்ணுன் புன்சிரிப்புடையன்
குலவிடும் பித்த சூடு என்றேம்
திடமுள குடும்பி மத்தியில் தாழ்வு
சல்லியம் கொஞ்சமே யுடையோன்
படையினில் செல்லான் பதரிவார்த்தை பேசான்
பரஉப காரமே புரிவன்
நடையது துருசன் நாபிச்சூ டுடையன்
நற்பூமி சேர்த்திடு வானும்.

5. ஜாதகருடைய தகப்பனுர் கெடுதியை நினைக்க மாட்டார். புன் சிறிப்பை உடையவராவார். இவர் பித்தச் சூடான தேகத்தை யுடையவரென்று சொல்லுகிறேம். மேன்மையான குடும்பஸ்தராக விருப்பார். மத்திய வயதில் தாழ்ந்த அந்தஸ்தை யுடையவராவார். கொஞ்சம் கடன் உள்ளவராவார். சண்டைக்குப் போகமாட்டார். அவசரப்பட்டு கெட்ட வார்த்தைகளைச் சொல்லமாட்டார். பிறருக்கு உதவியையே செய்வார். கெட்ட நடவடிக்கை உடையவர். வயிற்றில் நாபிச் சூட்டை உடையவராவார். நல்ல நிலங்களைச் சேகரிப்பார் என்று சொல்லுகின்றேம்.

6. தன்துணை தன்னை ஆதரிப் பானும்
சலிப்புளோர்க் கன்னமு மீவன்
பொன் பணி அதிகமில் லாதவன் கூவல்
புரப்பனும் பெரியவ ருறவு
சொன்னயிக் குணத்தா னுக்குமே யிவனும்
தோன்றுவான் இவன் குணம் கேண்மோ
பன்னியே சொல்வன் பலகலை யுணர்வன்
பாருகள் அதிகமே சேர்ப்பன்.

6. ஜாதகரின் தகப்பனுர் தன் சகோதரர்களைக் காப்பாற்றுவார். இளைப்பை அடைந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். தனமும் ஆடை ஆபரணங்களும் அதிகமாக உடையவரல்லர். தான் சொல்லும் வார்த்தை களைக் காப்பாற்றுவார். பெரிய மனிதர்களுடைய சிநேகிதத்தை யுடையவர். இங்குச் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேம். கேட்பீராக. இவர் சுருக்கமாகவும் திறமையாகவும் பேசுவார். அநேக சாஸ்திரங்களைப் படிப்பார். அதிகமான நிலங்களைச் சேர்த்து வைப்பார்.

7. மன்னர்கள் பேட்டி மங்கையர் மோகன
மாடுஆ டுகளுமே சேர்ப்பன்
கன்னென மொழியு மீகைவான் கோபி
கதித்ததோர் குடும்ப மதாவன்
பின்புயில் லங்கள் மாடமா ளிகையும்
பொருந்திடும் கைமுத லுள்ளான்
அன்னியர் மதிக்க வாழ்குவான் இவனே
அரசரால் செட்டுகள் செய்வன்.

7. ஜாதகர் அரசர்களுடைய தரிசனத்தை உடையவர். ஸ்திரீகளின் மேல் காம ஆசையை யுடையவர். ஆடு மாடுகளைச் சேர்த்து வைப்பார். சர்க்கரையைப் போல இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவார். பிறருக்குக் கொடுக்குந் தயாள குணத்தையுடையவர். கோபத்தையுடையவர், சிறந்த மேன்மையான குடும்பத்தை உடையவராவார். பிறகு வீடுகளையும். மாட மாளிகைகளையும் அடைவார். கையில் (பொருளின்) இருப்புள்ளவரா வார். பிறர் இவரைப் பெருமையாகப் பாராட்டும்படியான அந்தஸ்தி லிருந்து வாழ்வார். அரசர்களிடத்தில் அவர்கள் உதவியால் வியாபாரஞ் செய்வார்.

8. அறமதி லிச்சை ஆலய பத்தி
அண்டினேர் ஆதரிப் பானும்
பறைபள்ளு முடையன் பரஉப
காரிபாரினில் வறுமையே காணுன்
விருத்தரும் கேட்பார் யோகமெவ் விதமாய்
விளம்பினீர் காரணம் புகல்வாய்
மறை[1] சனி மதியு[2] முச்சமாயி ருக்க
மால்[3] புகர்[4] பானு[5]மே லாபம்[6].

8. ஜாதகர் தருமஞ் செய்வதில் ஆசையுடையவர். கோயில்களுக்குப் போய் கடவுளைத் தொழுவார். தன்னிடத்திற்கு வந்தவர்களைக் காப்பாற்று வார். தான்னியங்களையும் பழ வர்க்கங்களையும் உடையவர். பிறருக்கு உதவியைச் செய்வார். பூமியில் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டார் என்று சொல்ல, விருத்தர் என்ற ரிஷியானவர் கேட்கின்றுர். ஜாதகருக்கு எவ்விதமாக யோகத்தைச் சொன்னீர்? காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, குருவும் சனியும் சந்திரனும் உச்சமாய் இருப்பதாலும், புதனும் சுக்கிரனும் சூரியனும் லாபமாகிய பதிஞேராவது பாவத்தில்.

9. இருப்பதால் புகன்றே மெந்தக் காலத்தி
லெய்திடும் யோகமே புகல்வாய்
திருமகன் தனக்குச் தசஆண்டின் மேலே
செப்புவோம் பிரபல யோகம்

[1] குரு [2] சந்திரன் [3] புதன்
[4] சுக்கிரன் [5] சூரியன் [6] பதினென்று

வருகும்கா ரணங்கள் பூமியில் பொருளும்
மருவிடும் அது முத லாகத்
தரையது சேரும் பந்துவு மேன்மை
சகலரும் வசியமா மென்ன.

9. இருப்பதாலும் யோகத்தைச் சொன்னோம் என்று சொல்ல, எந்தக் காலத்தில் இந்த யோகம் சம்பவிக்கும் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகருக்குப் பத்து வயதிற்கு மேலே பிரபலமான பெரிய போகம் வந்து நேரிடும். இந்த யோகத்தின் காரணமாகப் பூமியிலிருந்து சொத்துக்கள் வந்து சேரும். இந்தக்காலம் தொடர்ந்து நிலங்கள் வந்து சேரும். ஜாதகர் பந்துக்களிடத்தில் மேன்மையாகவும் மதிப்புடனும் இருப்பார். எல்லோரும் இவருக்கு வசியப்பட்டு இருப்பார்கள் என்று சொல்லுகிறோம்.

10 நேரிடும் பொருளி னளவுமே சொல்வாய்
நிகழ்ந்துவோம் மூவாயிரம் கிடைக்கும்
கூறுவீர் இடங்கள் கொல்லையில் நேரும்
குறித்தனம் கீழ்த் திசை யாகும்
மாறிடா திந்த வார்த்தையு மம்மா
மாலணிபணி தசை தன்னில்
சூரியன் புத்தி தன்னிலே நேரும்
கோமளி கேட்டி டுவாயே.

10. ஜாதகருக்கு வந்து சம்பவிக்கக் கூடிய சொத்துக்களின் மதிப்பைச் சொல்லுவீர் என்று கேட்க, மூவாயிரம் பொன் பெறக்கூடிய சொத்துக்கள் வந்து நேரிடும். எந்த் விடத்தில் இருந்து கிடைக்கும் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்க, கிழக்குத் திக்கிலுள்ள ஒரு கொல்லையாகிய நிலத்திலிருந்து கிடைக்கும். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய இந்த வார்த்தை தவருமல் நடக்கும். மகா விஷ்ணு அணிந்து கொள்ளுகின்ற சர்ப்பமாகிய இராகு தசையில் சூரியன் என்று சொல்லப்படுகின்ற புதனுடைய புக்தியில் * கிடைக்கும். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

* குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஷீ 13-4-13 நாள் முதற்கொண்டு வயது ஷீ 15-11-0 நாள் முடியும் வரையிலும் இராகு தசையில் புத புக்தி நடக்கின்றது. இந்த ஜாதகத்தில் சந்திரனுக்குப் பதினென்றிற்கு உடையவரான குரு லக்கினத்தில் உச்சமாகிச் சந்திரனுக்கு ஒன்பதிற்குடையவரான உச்சமான சனியால் பார்க்கப்பட்டிருக்கின்றார். மேலும், லக்கினத்திற்குப் பத்திற்குடைய அங்காரகன் ஒன்பதில் குருவினுடைய மனையில் இருக்கின்றார். ஆகையால் ஜாதகாலங்காரம் 501-ஆவது பாடல் பிரகாரம் பழைய தனம் வந்து சேரும். அல்லது ஜாதகர் பிரயாசமில்லாமல் நிதியாம், செல்வம் படைப்பர். இராகு சந்திரனுக்கு யோககாரகராகிய சனி வீட்டில் லக்கினத்திற்கு யோககாரகராகிய அங்காரகனுடைய நட்சத்திரக் காலாகிய அவிட்டத்தில் இருக்கின்றார். புதன் நான்கிற்கும்

பதினென்றிற்கும் உடைய சுக்கிரனுடனும், இரண்டிற்குடைய சூரியனும் கூடி பதினென்றில் சந்திரனுடன் இருப்பதால் ஜாதகருக்கு ராகு தசையில் புத புக்தியில் தனம் கிடைக்கின்ற அமைப்பு இருக்கிறது.

11. இன்னவன் துணைவர் தன்பல முரைப்பேன்
ஏழது ஜனனமே யாகும்
வந்ததில் ஆண்பா லொன்றுமே யென்றோம்
மங்கையு மிருவர்கள் தீர்க்கம்
சொன்னது மூன்றும் தீர்க்கமாம் பின்பெண்
சோர்ந்திடும் அதற்குப்பின் விருத்தி
மன்னவன் சேதி வரைகிறோம் யாங்கள்
மாஞ்சிவப் புடையவ னுமே.

11. ஜாதகருடைய சகோதர பலத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். ஏழு சகோதரர்கள் பிறப்பார்கள். இவர்களில் சகோதரர் ஒன்று தான் என்று சொல்லுகின்றோம். இரண்டு சகோதரிகள் நீண்ட ஆயுளை உடையவர்கள். இங்கு சொல்லப்பட்ட ஒரு சகோதரரும் இரண்டு சகோதரிகளுமாகிய மூன்று சகோதரர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார்கள். ஜாதகருக்குப் பின்னுல் பெண் இறந்து விடும். இதற்குப் பிறகு பெண் ஆயுளுள்ளதாக விருக்கும். இந்த சகோதரரின் சங்கதிகளைப் பற்றி நாங்கள் சொல்லுகின்றோம். இவர் மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிகப்பு நிறமுள்ள தேகத்தையுடையவராவார்.

12. பரணியும் தனுசு பிறப்பனு மூகி
பலகலை படிக்கவே வல்லன்
பொறைசொல்வன் கபடன் தந்திர வார்த்தை
பொய்யது வழுத்து நெஞ் சுடையன்
தரையுமே லாசை தையலர் காமி
சல்லிய மில்லாதவ னென்றோம்
விரைவினில் நடப்பன் துணைவனே டொத்து
வித்தகன் வாழ்வானென் றுரைப்போம்.

12. ஜாதகருடைய சகோதரர் பரணி நட்சத்திரத்தில் தனுர் லக்கினத்தில் பிறப்பார். நுட்பமான அறிவுடையவர். அநேக சாஸ்திரங்களைப் படிக்குஞ் சாமர்த்திய முடையவர். பிறர் மேல் குற்றங்களைச் சொல்லமாட்டார். கள்ளம்கபடம் வஞ்சனை இவைகளைத் தன்னுடைய மனத்தில் உள்ளவர். தந்திரமானதும் பக்குவமானதுமான வார்த்தைகளை உபயோகிப்பார். பொய்யைச் சொல்லக் கூடிய மனத்தை யுடையவர். பூமியின் மேல் ஆசையை யுடையவர். தைரியமுள்ளவர். காம ஆசையை யுடையவர். கடன் இல்லாதவர் என்று சொல்லுகின்றோம். வேகமாய் நடக்கக்கூடியவர். இவர் தன்னுடைய சகோதரனுடன் ஒற்றுமையாக விருந்து வாழ்வார் என்று சொல்லுகின்றோம்.

13. பாரியும் ஒன்று பாலராண் மூன்று
பங்கய வதனம் போல்பெண் பால்
கூறுவோ மிரண்டு தீர்க்கமாம் அந்தக்
கோதையும் தெனதிசை நேரும்
வீரியன் மணத்தின் காலத்தை யுரைப்பேன்
வெற்றிசெய் யீரொன்ப தாண்டில்
நாரியும் தென்பால் அன்னையின் வர்க்கம்
நல்கிடும் குணமதை நவில்வோம்

13. ஜாதகருடைய சகோதரனுக்கு ஒரே மனைவி தான் ஏற்படும். ஆண் குழந்தைகள் மூன்றும் தாமரையைப் போல அழகான முகங்களை உடைய இரண்டு பெண்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இந்த மனைவியும் தெற்குத் திக்கிலிருந்து வந்து நேரிடுவாள். ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவருக்கு பத்தொன்பதாவது வயதில் * மனைவி தெற்குத் திக்கிலிருந்தும் தாயாருடைய வம்சத்திலிருந்தும் வந்து நேரிடுவாள். இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

* குறிப்பு.—மனைவி விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷை 18-0-0 முதல் ஷை 19-0-0 முடியும் வரையிலும் இராகு தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. இராகு சனியினுடைய வீட்டில் இருப்பதால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் சனியினுடைய பலனைக் கொடுக்க வேண்டும். சனி களத்திரஸ்தானமாகிய ஏழிற்குடையவராகிப் போகஸ்தானமாகிய நான்காவது பாவத்தில் இருக்கின்றார். ஆகையால் சனிக்கு விவாகஞ் செய்து வைக்கும் அதிகாரம் ஏற்படுகிறது. இந்த அதிகாரப் பலனை இராகு கொடுக்கவேணும். மேலும் இந்த ராகு அங்காரகனுடைய நட்சத்திரக்காலில் இருப்பதால் அங்காரகனுடைய பலனையுங் கொடுக்க வேண்டும். அங்காரகன் பதிற்குடையவராய் இருப்பதால் ஜாதகபாரிஜாதம் பதினொன்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப பிரகாரம் அங்காரகனுக்கும் விவாகம் செய்து வைக்க அதிகாரம் ஏற்படுகின்றது. ஆகையால், இராகு தன் தசையில் ஜாதகருக்கு விவாகம் செய்து வைக்கும் அமைப்பு உடையவராகின்றார். சுக்கிரன் களத்திரகாரகனுகிப் போகஸ்தானமாகிய நான்கிற்கு அதிபதியாயும் இரண்டாம் வீட்டிற்கு அதிபதியாகிய சூரியன் இருக்கின்ற வீட்டிற்கு அதிபதியாகியும் இருப்பதால் மேற்சொல்லிய இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் தன்புக்தியில் விவாகம் செய்து வைப்பார்.

14. மாநிறம் உணச்சல் மருமமில்லா தாள்
மறுத்துரை கூறிடா ளாகும்
தேன்மொழி யுரைப்பள் திருமக ளொப்பாம்
சீலமாம் யோக சாலியாம்
ஊனமில்லாதாள் அறமதி லிச்சை
யுடையாளாம் வயதுமே தீர்க்கம்
ஆனதோர் பராசர் இவ்வித முரைக்க
அத்திரி மறித்துச் சொல்லுவார்.

14. ஜாதகருடைய மனைவி மாநிறமுள்ள தேகத்தை உடையவள். வரண்டு மெலிந்த தேகத்தை உடையவள். மனத்தில் ரகசியமானதை வைத்துக் கொண்டிருக்காதவளாவாள். எதிர்த்துப் பேசாதவளாக விருப்பாள். தேனைப்போன்ற இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். இலட்சுமிக்குச் சமானமானவளாக விருப்பாள். நல்லொழுக்கமும் உள்ளவள். யோகசாலியாகவும் இருப்பாள். தேகத்தில் யாதொரு அங்க வீனமும் இல்லாதவளாவாள். தருமஞ் செய்வதில் ஆசையை உடையவளாகும். இவள நீண்ட ஆயுளை உடையவளாவாள். இவ் விதமாகப் பராசர மகரிஷியானவர் சொல்ல, அத்திரி மகரிஷியானவர் தடுத்துச் சொல்லுகின்றார்.

15. எப்படி மனைவி தீர்க்கமா யுரைத்தீர்
யியம்புவீர் காரணம் விவரம்
ஒப்புடனேமோனுச்சமா யிருக்க
உயர் குரு சத்தமம் பார்க்க
செப்பினேம் தாரம் ஒன்றென யாங்கள்
செயமுனி தடுத்துமே சொல்வார்
தப்பித மாகு முதல்மனை என்றேம்
சார்ந்திடு மறுமனை தானே.

15. எவ்விதமாக ஜாதகருடைய மனைவிக்கு நீண்ட ஆயுளைச் சொன்னீர்! அதற்குக் காரணங்களை விவரமாகச் சொலலுவீர் என்று அத்திரி மகரிஷி கேட்க, ஏழிற்குடையவரான சனி உச்சமாய் இருப்பதாலும், பெருமை பொருந்திய உச்சனுகிய குரு ஏழாமிடத்தைப் பார்ப்பதாலும் நாங்கள் ஒரே தாரம் என்று சொன்னேம் என்று பராசர மகரிஷி சொல்ல, ஜயமுனி என்ற மகரிஷி மறுத்துச் சொல்லுகின்றார். முதல் மனைவி இறந்து விடுவாள். இரண்டாவது மனைவி வந்து நேரிடுவாள் என்று சொல்லுகிறோம்.

16. அனுகுர்கா ரணங்கள் அறிவிப்பீர் முனியே
அந்தேமோன் சரத்தினி லிருந்தும்
பிணையாக இரண்டினில் கேதுவு நிற்கப்
புகர்புதன் கூடியே லாபம்
வினையுட னிருக்க மெல்லிய திரண்டு
மேவிடும் இதுமொழி குன்று
அனையவே இதற்கு நேரிடையாக
சாதக சுருதியா நூலில்.

16. இவ்விதமாக நேரிடுவதற்குக் காரணங்களைச் சொல்லு வீர் என்று பராசர முனிவர் கேட்க, அந்த ஏழிற்குடையவரான சனி சர ராசியில் இருப்பதாலும் அதற்குத் தகுந்தாற் போல இரண்டாவது பாவத்தில் கேது இருப்பதாலும் சுக்கிரனும் புதனும் கூடி லாபம் என்ற

பதினோராவது பாவத்தில் கெடுதியாய் இருப்பதாலும் மனைவிமார் * இரண்டு பேர் ஏற்படுவார்கள். இந்த வார்த்தை தவறாமல் நடைபெறும். இதற்குச் சரியான ஜாதகச்சுருதி என்ற பிரமாணங்களைப் பார்ப்பீராக.

*** குறிப்பு மனைவி விஷயம்.**—களத்திர ஸ்தானாதிபதியாகிய **சனி** சரத்திலிருப்பது ஜாதகலங்காரம் 648-ஆவது பாடல் பிரகாரம் களத்திர தோஷத்தை உண்டு பண்ணும். களத்திர ஸ்தானாதிபதியாகிய சனி துலாத்தில் உச்சமாகி கேந்திரத்தில் இருந்துகொண்டு பத்திற்குடையவராகிய அங்காரகனால் பார்க்கப்படுவதால் ஜாதகபாரிஜாதம் பதினான்காவது அத்தியாயம் இருபத்தோராவது சுலோகப் பிரகாரம் ஜாதகருக்கு அநேக மனைவிகள் ஏற்படுவார்கள். இரண்டாவது பாவத்தில் கேது இருப்பதும் ஏழிற்குடையவர் பாபியாகிய அங்காரகனாலும் கேதுவாலும் பார்க்கப்படுவதும் ஜாதக பாரிஜாதம் பதினான்காவது அத்தியாயம் இருபதாவது சுலோகப் பிரகாரம் அநேக மனைவிகளை உண்டாக்க கூடியதாகும். களத்திரகாரகனாகிய சுக்கிரன் விரயாதிபதியாகிய புதனுடன் கூடியிருப்பதும் தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதாகும்.

17. முதல்மனை எவ்வாறு மொழிகுவீர் முனியே
யுதித்திடும் சுதர்களு மொன்று
அதிபதி கர்ப்ப பாதையால் மாண்டு
மறுமனை நேரிடு மென்றோம்
எதுகாலம் புகல்வாய் முப்பது ஆண்டி லேகுவாள்
காலன் தன் நாடு
அதுஆண்டில் மாது அணுகிடும் தென்கீழ்
அவள் வயதீர்க்கமே யாகும்.

17. ஜாதகருடைய முதல் மனைவி எவ்விதமாக இறந்து விடுவாள் என்பதை, முனிவரே! நீர் சொல்லுவீர் என்று கேட்க, முதல் மனைவிக்கு ஒரு குழந்தை பிறக்கும். இவள் பிரசவ வேதனையினால் இறந்துவிடுவாள். பிறகு ஜாதகருக்கு இன்னொரு மனைவி வந்து நேரிடுவாள் என்று சொல்லுகிறோம். எந்தக் காலத்தில் இவ்விதமாக நடக்கும் என்பதை கேட்க, ஜாதகருக்கு முப்பதாவது வயதில் * முதல் மனைவி இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவாள். அந்த வருஷத்தில் தென் கிழக்குத் திக்கிலிருந்து இரண்டாவது மனைவி வந்து நேரிடுவாள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாவாள்.

*** குறிப்பு.—முதல் மனைவியின் மரணம்:**—ஜாதகருக்கு வயது ௵ 29-0-0 முதல் ௵ 30-0-0 முடியும் வரையிலும் குருதசையில் புத புக்தி நடக்கின்றது. இவருக்கு முதல் மனைவி ஸ்தானமும் ஏழாவது பாவமுமாகிய மகர லக்கினத்திற்குப் பாராசாரஹோரை ஜாதகபாரிஜாதம் இவைகளின் பிரகாரம் குரு சந்திரன் அங்காரகன் இவர்கள் மாரகாதிபதிகளாகின்றார்கள். இரண்டாவது களத்திர ஸ்தானமானதும் ஒன்பதாவது பாவ

முமாகிய மீனத்திற்கு அதிபதி குருவாகி இவரே மாரகாதிபதியுமாகி மகரத்திற்கு ஏழில் உச்சமாக விருந்து கொண்டு மகரத்தையே பார்ப்பதுடன் மீனத்தையும் அதிலுள்ள புத்திரஸ்தானாதிபதியாகிய அங்காரகனையும் பார்க்கின்றார். ஆகையால் குரு தன் தசையில் முதல் மனைவிக்குப் பிரசவ மூலமாக மரணத்தைக் கொடுத்து இரண்டாவது மனைவியையுங் கொடுக்கும் அமைப்பு உடையவராகின்றார். புதன் மகரத்திற்கு ஆறுக்குடையவராகி மாரகாதிபதியாகிய சந்திரனுடனும், மகரத்திற்கு எட்டிற்குடைய சூரியனுடனும் கூடி இருக்கின்றார். ஆகையால் இவர் தன் புக்தியில் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் அல்லது கார்க்கேயர்நாடி என்ற கார்க்கேயர் ஜோதிடம் முதற் காண்டம் 680-ஆவது பாடல் அல்லது ஜாதக பாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 60-ஆவது சுலோகப் பிரகாரமும் மனைவிக்கு மாரகஞ் செய்ய அமைப் புடையவராகின்றார். மேலும் இவர் சுக்கிரனுடன் கூடிப் பதினோராவது பாவத்தில் இருப்பதால் களத்திர எண்ணிக்கையை அதிகப்படுத்துந் தன்மை உடையவராகின்றார். இவர் களத்திர காரகனும் போகஸ்தானாதிபதியுமாகிய சுக்கிரனுடன் கூடி இருப்பதால் இன்னொரு மனைவியைக் கொடுக்கும் அமைப்பு உடையவராகின்றார்.

18. சுதர்களும் நவமாய்த் தோன்றிடு மென்றோம்
சோர்வுறும் சிலவுமே என்றோம்
சதமுடன் ஆண்பா லிரண்டென உரைப்போம்
சத்திமார் மூன்றெனச் சாற்றும்
இதுவந்தும் தீர்க்கம் இருமனை தனக்கு
எகிடும் முதல்மனை சுதர்கள்
அதிதியே பின்பால் விபரம் யாங்கள்
அறிவிப்போம் அம்பிகாய் கேளாய்.

18. ஜாதகருக்கு ஒன்பது குழந்தைகள் பிறக்கும் என்று சொல்லுகின்றோம். இவைகளில் சில குழந்தைகள் இறந்துவிடும் என்று சொல்லுகின்றோம். ஆண் குழந்தைகள் இரண்டு என்று சொல்லுகின்றோம், பெண் குழந்தைகள் மூன்று என்று சொல்லுகின்றோம். இந்த ஐந்து குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார்கள். இவர்கள் இரண்டாவது மனைவிக்குப் பிறப்பார்கள். முதல் தாரத்திற்கு உண்டாகின்ற குழந்தைகளைப்பற்றிப் பார்வதியம்மையே கேட்பீராக.

குறிப்பு.— புத்திர பாவம்:—ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் என்று சொல்லிவிட்டார். முதல் மனைவியின் லக்கினம் கடக லக்கினத்திற்கு ஏழாவது பாவமாகிய மகரம் ஆகும். இதற்குப் புத்திர பாவமும் ஐந்தாவது வீடுமாகிய ரிஷபம் புத்திர ஸ்தானமாகும். சந்திரன் ஐந்தாவது பாவத்தில் இருந்தால் ஜாதகாலங்காரம் 625-ஆவது பாடலில் ஒரு பிள்ளை

தான் உயிருடன் இருக்கும்; மற்றவை முதல் மனைவிக்கு இறந்து போய் விடும் என்று கண்டிருக்கின்றது. மேலும் மகர லக்கினத்திற்குப் புத்திர ஸ்தானாதிபதியாகிய சுக்கிரன் ஆட்சியாயும், ஏழிற்குடையவராகிய சந்திரன் உச்சமாகி சுக்கிரனுடன் கூடி ஐந்தில் கோணத்தில் இருப்பதாலும், இவர்க ளுடன் ஆறுவது வீட்டிற்கு அதிபதியாகிய புதன்கூடி இருப்பதாலும் ஜாத காலங்காரம் 628-ஆவது பாடல் பிரகாரம் சுத்தமாய்ப் புதல்வர் இல்லை என்று ஏற்படுகின்றது. புத்திரஸ்தானத்தில் அஷ்டமாதிபாகிய சூரியனும் இருக்கின்றார். ஆகையால் முதல் மனைவிக்குப் புத்திர தோஷம் அதிக மாகவிருக்கின்றது. இரண்டாவது மனைவி லக்கினம் ஒன்பதாவது பாவ மாகிய மீனம் ஆகும். இதற்குப் புத்திரஸ்தானம் கடகமாகும். மீனலக் கினத்திற்கு ஐந்தில் குரு உச்சமாகவிருப்பதால் இரண்டாவது மனைவிக்கு ஜாதகாலங்காரம் 602-ஆவது பாடல் பிரகாரம் ஆண் குழைந்தைகளுக்குத் தோஷம் உண்டு. பெண்களே பிறக்கும் அமைப்பு உண்டு. ஐந்திற்குடை யவர் சந்திரனுகிப் பெண் கிரகம் அலிகிரகமாகிய சுக்கிரன் புதன் இவர்க ளுடன் கூடி பெண் ராசியாகிய ரிஷபத்தில் மீனத்திற்கு மூன்றில் ஆறிற் குடைய சூரியனுடன கூடி இருப்பதாலும், மீனத்திற்கு ஐந்திற்குடைய வரும் ஏழிற்குடையவரும் கூடி இருப்பதாலும் சந்ததிக்குத் தோஷமுண்டு. அதிலும் ஆண் சந்ததிகளுக்குப் பெண் சந்ததியைவிட அதிகத் தோஷம் இருக்கின்றது. ஜாதகருக்குப் புத்திர ஸ்தானம் விருச்சிகம் ஆகும். இதற் குடைய அங்காரகன் இருக்கின்ற பாவம் கோணமாகும். ஐந்தைச் சுக்கி ரன், புதன், சூரியன் இவர்கள் பார்க்கின்றார்கள். ஐந்தைச் சூரியன் பார்ப்பது தோஷமாகும். ஐந்தைக் குரு பார்ப்பது பலதீபிகை 15-ஆவது அத்தியாயம் 26-ஆவது சுலோகப் பிரகாரம் தோஷமாகும். மேலும் 9-க்கு டைய குருவைச் சனி பார்ப்பதும் சூரியனும் புதனும் கூடியிருப்பது ஜாதகாலங்காரம் 626-ஆவது பாடல் பிரகாரம் தோஷமாகும்.

19. யோக ஜாதகராய் உரைத்திட்டீர் முனியே
உத்தமன் தனக்குறுமே யிரண்டு
தோகையர் அணுகும் சேதியைப் புகல்வாய்ச்
சுதனுமுன் பூர்வம் தன்னில்
ஏகமாய் வினைகள் செய்திட்டா னதனல்
யெய்திடும் பாரி யிரண்டு
ஊகமாய்ச் சொல்வாய் முன்ஜன்மம் கேளாய்
உரையூருக் கருகினி லேதான் ;

19. இந்த ஜாதகர் யோகவானுகவிருப்பார் என்று சொன்னீரே! மேலும் இவருக்கு இரண்டுதாரர்கள் உண்டு என்று சொன்னீரே! முனி வரே! இவை இவ்விதமாக நேரிடுவதற்குக் காரணங்களைச் சொல்லுவீ ராக. ஜாதகர் முன் ஜன்மத்தில் அநேக நல்ல கெட்ட செய்கைகளைச் செய்திருக்கின்றார். அதனல் இவருக்கு இரண்டு மனைவி உண்டாகும். இது விஷயமாக யோசித்து ஊகித்துச் சொல்லுவீர் என்று கேட்க, முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன், கேட்பீராக. உரையூருக்குச் சமீ பத்தில் ;

20. வன்னிய மரபில் தோன்றி மனைவி மைந்தரு முண்டாகிப்
பொன்பொரு ளில்லா தாகிப் பூமியில் சீவித் தேதான்
இன்னவன் வாழுந் நாளி யெய்திய வினையைக் கேண்மோ
தன்பாரி தங்கை தானும் தன் மண மின்றி வாழ்ந்தாள்.

20. ஒரு வன்னியருடைய குலத்தில் பிறந்து மனைவி மக்களை உடையவராகிச் செல்வமும் சொத்தும் இல்லாதவராகி ஜாதகர் இந்தப் பூமியில் வாழுகின்ற காலத்தில் இவருக்கு உண்டான பாவத்தைச் சொல்லு கின்றேன், கேட்பீராக. இவருடைய மனைவியின் சகோதரி விவாகம் இல்லாமல் வசித்துக்கொண்டிருந்தாள்.

21. மாதுக்கு மயக்கம் தந்து மன்மதக் கலவை செய்தான்
மேதினில் சில நாள் சென்று மேவிற்றுக் கருவு தானும்
தீதுகள் செய்ய வேண்டிச் சிலசில பண்டி தத்தால்
சூதுகள் செய்தா னென்றோம் தோகையும் மாண்டா ளம்மா

21. ஜாதகர் இந்த ஸ்திரீக்கு மயக்கந்தரக்கூடிய மருந்தை கொடுத்து அவளிடத்தில் சம்போகஞ் செய்தான். பூமியில் கொஞ்ச காலத் திற்குப்பிறகு அவளுக்குக் கர்ப்பந் தரித்தது. அதைக் கெடுத்துவிட எண் ணங் கொண்டு ஜாதகர் சிற்சில வைத்தியங்களினுல் கெடுதியைச் செய் தார் என்று சொல்லுகின்றோம். இவ் விதமாகக் செய்யவே அந்த ஸ்திரி யும் இறந்துவிட்டாள், பார்வதியம்மையே!

22. அதுவின்றி வேறு காணுன் அந்திய காலம் தன்னில்
விதிமுறை வேதம் சொல்லும் வேதியர் தொண்டு செய்து
சதுர்மறை யோன்தன் னேடு சென்றனன் சேதுக் கேதான்
நதிபல தீர்த்தம் தோய்ந்து நாயக னுள்ளூர் மீண்டு ;

22. இந்தப் பாவம் தவிர வேறே எந்தப் பாவத்தையும் ஜாதகர் செய்யவில்லை. இவர் தனது கடைசி காலத்தில் விதிகள் பிர காரம் வேத சாஸ்திரங்களைப் பாராயணஞ் செய்கின்ற பிராமணர்களுக்குப் பணிவிடைகளைச் செய்து நான்கு வேதங்களையும் படித்த ஒரு பிராமணருடன் சேது ஸ்தலத்திற்குப் போய் அனேக புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து இவர் தன்னுடைய ஊருக்குத் திரும்பி வந்து ;

23. மறலியின் நாட டைந்து மறையவன் வரையப் பட்டு
உரமுடன் ரெட்டி வமிசம் உதிப்பனு மிந்தப் பாலன்
கருவதை யழித்த போது காதலி மாண்ட தோஷம்
மருவிடு மிச்சென் மத்தில் மனைவியும் கர்ப்பத் தாலே ;

23. பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிறகு பிரம தேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு வலிவான ஒரு ரெட்டியாருடைய குலத்தில் இந்த ஜாதகர் பிறந்தார். முற்பிறப்பில் கர்ப்பத்தை அழிக்கும் போது அந்த ஸ்திரீ இறந்துவிட்டதால் அந்தத் தோஷம் இந்த ஜன்மத்தில் வந்து ஜாதகரை அடையும். அதனல் இவருடைய மனைவி கர்ப்பத்தால் ;

24. எருவா னென்று சொல்லோ மிருமனை நேரும் தாயே
தோகையும் கேட்க லுற்றாள் சுதனுமுன் ஜன்மம் தன்னில்
பாகமாய்ச் சேது சென்ற பலத்தினல் விலகா தோசொல்
போகாது கருவின் தோஷம் புண்ணிய வதியே கேளாய்.

24. இறந்து விடுவாள் என்று சொல்லுகிறோம். ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் நேரிடுவார்கள், பார்வதியம்மையே! அதன்பேரில் பார்வதியம்மையார் கேட்கின்றாள். ஜாதகர் தன்னுடை முன்ஜன்மத்தில் சேது ஸ்தலத்திற்குப் போன புண்ணியத்தால் இந்தத் தோஷம் நிவர்த்தியாகாதோ என்பதைச் சொல்லுவீராக. புண்ணியசாலியாகிய பார்வதியம்மையே! கருவினல் ஏற்பட்ட இந்தத் தோஷமானது நிவர்த்தியாகாது.

25. சேதுக்குச் சென்ற புண்ணியம் செழிப்பான குடும்பி யாவன்
மேதினில் வறுமை காணன் மேவிடும் நிதிநிட் சேபம்
காதிக ளதிகம் யேற்பன் காவலாள் உடைய னாகும்
கோதிலா கூவல் சோலை குலவிடும் சகடு தானே.

25. ஜாதகர் சேது ஸ்தலத்திற்குப் போன புண்ணியத்தின் பலனைச் செழுமையானதும் மேன்மையானதுமான குடும்பஸ்தராக ஜாதகர் ஆவார். பூமியில் கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அடையமாட்டார். இவருக்குச் செல்வமும் புதையலும் கிடைக்கும். இவர் அதிகப் புகழ் உடையவராவர். வேலைக்காரர்களையும் உடையவராவார். இவருக்குக் குற்ற மில்லாத கிணறு சோலைகள் தோப்புகள் வண்டி இவைகள் வந்து நேரும்.

26. இன்னமும் விவரமாக இயம்புவோம் பின்பாக த்தில்
அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் சிவந்த மேனி
தன்சொல்லு மடக்க முண்டு சமயோகம் பொறுமை சாலி
நன்னடை யிளம னத்தாள் நாயகி யில்லம் தெற்கு.

26. இன்னமும் அதிகமாகவும் விவரமாகவும் பின்பாகத்தில் சொல்லுகிறோம். ஜாதகருடைய தாயாரின் குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். இவள் அழகுள்ளவளாவாள். சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவள். இவள் சாந்தமாகவும் நிதானமாகவும் பேசுவாள். சமமான யோகத்தை உடையவள். பொறுமையுடன் விருப்பவள். நல்ல நடவடிக்கையை யுடையவள். தயாள குணம் நிரம்பிய மனத்தை யுடையவள். இவளுடைய வீடு தெற்குத்திக்கில் இருக்கும்.

27. தன்துணை ஆண்பா லொன்று தங்கிடு மென்று சொல்வோம்
பின்னமா மற்ற வெல்லாம் பேசுவோம் பின்பால் சேதி
இன்னவள் பூர்வம் சொல்வேன் இலங்கையில் தீயின் வமிசம்
கன்னிகை யுதித்தா ளென்றோம் காவலன் சுதர்க ளுண்டாய்;

27. ஜாதகரின் தாயாருடன் கூடப்பிறந்தவர்களில் ஓர் ஆண் சகோதரம் மாத்திரம் நிலைத்திருப்பார். மற்றைச் சகோதரங்கள் எல்லாம் இரந்து விடுவர். இவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்னல் சொல்லுகின்றோம். தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் இலங்கையில் அக்கினி (வன்னியர்) குலத்தில் பெண்ணாகப் பிறந்தாள் என்று சொல்லுகிறோம். இவள் புருஷனையுங் குழந்தைகளையும் உடையவளாகி;

28. பவமது யில்லா னாகிப் பரந்தனள் காலன் னூடு
அவனியோன் வரையப் பட்டு அனுதினு னிக்கு லத்தில்
நவனியில் வறுமை காணுள் நாயகி சமயோ கத்தாள்
இவளுடைய பின்ஜன் மத்தை யியம்புவோம் தாயே யாங்கள்.

28. பாவம் ஒன்றும் இல்லாமல் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்து பிறகு பிரம தேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்தக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். இவள் பூமியில் கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அடைய மாட்டாள். இவள் சமமான யோகத்தை யுடையவளாவாள். இவளுடைய மறு ஜன்மத்தை, பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றோம்.

29. அரங்கமா நகரம் கீழ்ப்பால் அணுகிய பேரூர் தன்னில்
வருங்கங்கை குலமே தோன்றி வறுமைக ளில்லா வாழ்வள்
திருமகன் தந்தை பூர்வம் செம்புவோ மினிமே லாக
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

29. ஜாதகருடைய தாயார் ஸ்ரீரங்கம் என்ற பெரிய பட்டணத்திற்குக் கிழக்குத் திக்கில் உள்ள ஒரு பெரிய ஊரில் வேளாளர் குலத்திற் பிறந்து கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமல் வாழ்வாள். இனிமேல் ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

30. சேதுவில் கங்கை சேயாய் ஜனித்துமே வணிபம் செய்து
துதிசெய்தோர்க் குதவி செய்து தேவியு மதலை யுண்டாய்
மாதவர் பத்தி கொண்டு மந்தனும் பவமில் லாமல்
சூதான காலன் பக்கல் சேர்ந்தவ னிவனே யம்மா.

30. ஜாதகரின் தகப்பனர் சேது ஸ்தலத்தில் வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து வளர்ந்து வியாபாரஞ் செய்து போற்றினவர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவிசெய்து மனைவியையும் மக்களையும் உடையவராகி முனிவர்களிடத்திலும் பிராமணர்களிடத்திலும் பக்தியும் அன்பும் உடையவராகி யாதொரு பாவமும் இல்லாமல் இறந்து வஞ்சனையுள்ள எமனிடத்திற்குப் போய்ச் சேர்ந்தார், பார்வதியம்மையே!

31. பிரமனல் வரையப் பட்டுப் பிறந்தன னிக்கு லத்தில்
மறுஜன்மம் புகலக் கேண்மோ மலைநாட்டில் க்ஷத்திரியச் சேயாய்
உறைகுவான் வணிபம் செய்வன் உரைத்தது தப்பா தாகும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

31. பிறகு ஜாதகருடைய தகப்பனூர் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்தக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்ருர். இவருடைய பின்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்ரேும், கேட்பீராக. மலேதேசத்தில் க்ஷத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து வளர்ந்து வியாபாரஞ் செய்து ஜீவிப்பார். நாங்கள் சொல்லியது தவறிடாமல் நடக்கும். அருமையான வேதங்களின் முடிவு என்ற உப நிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

32. முப்பது ரண்டு ஆண்டில் மிதுனமா தத்தி லேதான்
செப்புவோம் தந்தை கண்டம் சீர்குரு தசையி லேதான்
ஒப்புடன் சிகி¹பு சிப்பு உறைந்திடு மந்தக் காலம்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழி குன்ருது.

32. ஜாதகருடைய தகப்பனூர் ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது வயதில் ஆனி மாதத்தில் † இறந்து விடுவார். இக்காலத்தில் மேன்மையான குரு தசையில் கேது † புக்தி நடக்கும் என்று சொல்லுகின்ரேும். சர்ப்பத்தைத் தன்னுடைய ஜடையில் தரித்துக் கொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய அருள் வாக்குத் தவறிடாமல் நடக்கும்.

† குறிப்பு.—ஜாதகருக்கு முப்பத்தோராவது வயது முடிந்து முப்பத்திரண்டாவது வயது நடக்கின்ற காலத்தில் ஆனி மாதத்தில் ஒரு வருஷத்திற்கு 360 நாள் கொண்ட (சாவன) வருஷப் பிரகாரம் கணக்கிட்டால் குரு தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. ஆனல் 365¼ நாள் கொண்ட (சௌரமான) வருஷப் பிரகாரம் கணக்கிட்டால் குரு தசையில் கேது புக்தி நடக்கின்றது. இந்தப்பாடலில் கேது புக்தியே சொல்லி இருப்பதால் உடுதசாகணக்கிற்கு ஒரு வருஷத்திற்கு 365¼ நாள் கொண்ட வருஷத்தையே இந்த நாடியில் உபயோகப்படுத்தி இருக்கின்றது என்று ஏற்படுகின்றது. மேலும் பிதுர் லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மீனம் ஆகும். துய்ய கேரளம் எட்டாவது பாவம் 14-ஆவது பாடல், கார்க்கேயர்ஜோதிடம் 674-ஆவது பாடல், 82-ஆவது ஜதாகம் 24-ஆவது பாடலின் கீழ் நாம் கொடுத்துள்ள வியாக்கியானம் இவைகள் பிரகாரம் குரு தன்தசையில் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்புடையவ ராகின்ருர். பராசரஹோரை ஜாதக சந்திரிகை இவைகளின் பிரகாரம் சூரியன் பிதுர் மாரகாதிபதியாகின்ருர். மீனத்திற்கு எட்டிற்குடைய சுக்கிரனுடன் சூரியன் இருப்பதால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல், கார்க்கேயர்ஜோதிடம் 680-ஆவது பாடல் ஆகிய இவைகளின் பிரகாரம் சூரியன் பிதாவுக்கு மாரகராகின்ருர். மேலும் சூரியன் மாரக ஸ்தானமாகிய மூன்றில் இருக்கின்ருர். சூரியனுடைய வீட்டிலுள்ள கேது ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் சூரியனுடைய பலனைக்கொடுக்க வேண்டியவராகின்ருர். ஆகையால் தன் புக்தியில் பிதாவை மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகின்ருர்.

¹ கேது

33. ஆருறு ஒன்று ஆண்டில் ஆனிமா தத்தில் தன்னில்
கூறுவோ மன்னே கண்டம் குருதசை மதிபு சிப்புத்
தீரமாய் நடக்கு மென்ரேும் செப்பின மொழிகுன் ருது
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

33. ஜாதகருக்கு முப்பத்தேழாவது வயதில் ஆனிமாதத்தில் இவருடைய தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகின்ரேும். இது குரு தசையில் சந்திரபுக்தியில் † நடக்கும் என்று உறுதியாய்ச் சொல்லுகிரேும். நாங்கள் சொல்லியவார்த்தைகள் தவருமல் நடக்கும். ஆறு பெரிய முகங்களை உடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

† குறிப்பு.—மாதுர் மாரகம் :—ஜாதகருக்கு முப்பத்தாருவது வயதில் ஆனி மாதத்துடன் குரு தசையில் சந்திர புக்தி முடிவு பெருகிறது. மாதுர் லக்கினம் நான்காவது பாவமாகிய துலாம் ஆகும். துலா லக்கினத்திற்கு ஜாதகசந்திரிகை பராசரஹோரை பிரகாரம் குருவும் சூரியனும் மாரகாதிபதிகள் ஆகின்ருர்கள். சந்திரன் மாரகாதிபதியாகிய சூரியனுடன் கூடி 1–8-க்குடைய சுக்கிரனுடன் கூடி எட்டில் இருப்பதால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகம், துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் குருதசையில் தன்புக்தியில் சந்திரன் மாதாவுக்கு மாரகஞ் செய்வார்.

34. ஜாதகன் மரண காலம் சாற்றுவோ மன்பான்நாலில்
மேதினில் தனுசு மாதம் விளம்புவோம் கண்டம் தானும்
ஒதுவே னிவன்பின் ஜன்மம் உத்தரம் துவாரை தன்னில்
மாதவர் குலமு திப்பன் மங்கையும் கேட்க லுற்றுள்.

34. ஜாதகருடைய மரண காலத்தைப் பற்றிச் சொல்லுகின்ரேும். இவருக்கு ஐம்பத்துநான்காவது வயதில் மார்கழி மாதத்தில் † மரணம் நேரிடும். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். வடக்கில் துவாரகா புரியில் பிராமணர் குலத்தில் இவர் பிறப்பார். அதன் மேல் பார்வதியம்மையார் கேட்கின்ருர்.

† குறிப்பு.—ஜாதகர் மாரக விஷயம்.—இவருக்கு ஐம்பத்து நான்காவது வயது நடக்கும்போது மார்கழி மாதத்தில் (அதாவது சுமார் வயது ௵ 53-7 ல், பிராக்கெட் சனி தசையில் ராகு புக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி சுக்கிரன் புதன் இவர்கள் மாரகர்களாகின்ருர்கள். சனி லக்கினத்தைப் பார்க்கின்ருர். பத்தையும் பார்க்கின்ருர். இவருடைய தசை நான்காவது தசையாய் வருவதால் ஜாதகாலங்காரம் 975-ஆவது பாடல், குமாரசாமீயம் மகாதசைப்படலம் 4-ஆவது பாடல் இவைகளின் பிரகாரம் சனி தன் தசையில் ஜாதகருக்கு மாரகத்தைச் செய்யும் அமைப்பு உடையவராகின்ருர். இராகு எட்டில் மாரகாதிபதியாகிய சனியினுடைய வீட்டில் இருப்பதால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகம் 23-ஆவது சுலோகம் இவைகளின் பிரகாரம் ஜாதகருக்கு ராகுமாரகத்தைத் தரும்அமைப்பு உடையவராகின்ருர்.

35. இந்த தோர் ஜன்மம் தன்னில் இவன்செய்த புண்ணியம் என்ன
முந்தவே கூறு மென்ன மேலவர் பத்தி யாயும்
நொந்தபேர்க் குதவி யாயும் நிகழ்திருப் பணியும் செய்து
வந்ததால் மறுபி றப்பு வரைந்தனம் பிரம்ம சேயாய்.

35. இந்த ஜன்மத்தில் ஜாதகர் என்ன புண்ணியத்தைச் செய்தார், அதைச் சீக்கிரமாகச் சொல்லுவீர் என்று கேட்கப் பெரியோர் வானோர் தெய்வங்கள் இவர்களிடத்தில் பக்தியுடனும் அன்புடனும் ஏழைகளுக்கு உதவி செய்து கொண்டும், கோவில்களில் வேலைகளைச்செய்து கொண்டும் ஜாதகர் இருந்தால் மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தை யாய்ப் பிறப்பார் என்று சொன்னோம்.

36. பாலகன் குடும்பச் சேதி பகருவோம் மினி மேலாகச்
சாலவே தந்தை பாகம் சாற்றுவோம் மூன்ற தாக
ஏலவே ஒன்பாண் டுக்குள் ளேகுகார் என்று சொல்வோம்
ஞாலம்மேல் மரண மட்டும் நற்றுணை ஒன்றாய் வாழ்வன்.

36. இனிமேல் ஜாதகருடைய குடும்பவிஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஜாதகருக்கு ஒன்பது வயதிற்குள்ளே இவருடைய தகப்பனார் பிதுரார்ஜிதத்தில் மூன்றில் ஒரு பங்கை அடைவார் என்று சொல்லுகின்றோம். ஜாதகருடைய சகோதரர் இவருடைய மரண காலம் வரையிலும் இவருடன் ஒன்றாக விருந்து வாழ்வார்.

37. ஜனித்தநாள் முதலா மாக தசஆண்டும் பலன்கள் அற்பம்
குனித்திடும் செலவ னேகம் குறைமனம் பொருள வஸ்தை
கனமிலாக் குடும்பி யாகும் கலவர புத்தி யாகும்
வினையிலா அதன் மேலாக வித்தகன் மரண மட்டும் ;

37. ஜாதகர் பிறந்தது முதற் கொண்டு பத்து வருஷங்கள் வரையிலும் பலாபலன்கள் அற்பமாக விருக்கும், செலவு அதிகமாக விருக்கும். மனத்தில் சஞ்சலங்கள் உண்டாகும். பொருளால் உபத்திரவம் உண்டாகும். மேன்மையில்லாத குடும்பஸ்தராக விருப்பார். கலவரமான புத்தி உண்டாகும். இதற்கு மேல் ஜாதகருடைய மரண காலம் வரையிலும் ;

38. பலவித யோகம் வாய்க்கும் பாரது அதிகம் நேரும்
நலமுளோர் வசிய மாகு மரசரால் வணிபம் நேரும்
குலவிடும் மாது தானும் குறித்தது தப்பா தாகும்
மலையிரை மகளே யாங்கள் வழுத்தின மொழிகுன் றாது.

38. ஜாதகருக்கு அநேக விதமான யோகங்கள் உண்டாகும். நிலங்கள் அதிகமாக வந்து சேரும். நல்லவர்கள் ஜாதகருக்கு வசியமாகவும் சிநேகிதர்களாகவும் ஆவார்கள். அரசர்களால் வியாபாரம் ஏற்படும். மனைவியினுடைய சொத்துவந்து சேரும். நாங்கள் சொல்லியது தவறாமல் நடக்கும். இமயமலைக்கு அரசனாகிய பர்வதராஜன் பெற்றெடுத்த மகளாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

39. ஜனித்திடுங் காலம் தன்னில் சேய்தசை ஆண்டும் ஐந்தும்
குனித்திடுந் திங்க ளைந்தும் கூறுவோம் பலனை யாங்கள்
துணைவிருத்தி சேத மெய்தும் சுதனுக்குப் பிணியு மாகும்
கனமுள சுபங்கள் நேரும் கழறுவோம் பின்பால் சேதி.

39. ஜாதகர் பிறந்த காலத்தில் அங்காரக மகா தசையில் இருப்பு ஐந்து வருஷங்களும், ஐந்து மாதங்களும் ஆகும். இந்தக் காலத்திய பலாபலன்களை நாங்கள் சொல்லுகின்றோம். ஜாதகருக்குச் சகோதரங்கள் உண்டாகும். நஷ்டமும் ஏற்படும். ஜாதகருக்கு நோயும் உண்டாகும். குடும்பத்தில் சிறந்த சுபகாரியங்களும் நடக்கும். மற்ற விஷயங்களைப் பின்னால் சொல்லுகிறோம்.

ஜாதகம் 96

1. சந்திரன் பொன்[1] ராகு[2] தேளில் சனிமேரு[3] பான்[4] மேடம்
புந்தி[5] குசன்[6] மீனம் புகர்[7] கேதுநந்தி[8] யினில்
உதையம் கடகம் உரைப்பீர் பலனை
இது ஆண்பால் ஜன்ம மதாயேற்று.

அங்காரகன் புதன்	சூரியன்	சுக்கிரன் கேது	
	இராசி சக்கரம்		லக்கினம்
சனி	சந்திரன் குரு ராகு		

அனுஷம் 4-ம் பாதம், சனிதசை ஷு 3-4-0.

1. சந்திரனும் குருவும் ராகுவும் விருச்சிகத்திலும், சனி தனுசிலும், சூரியன் மேஷத்திலும், புதனும் அங்காரகனும் மீனத்திலும், சுக்கிரனும் கேதுவும் ரிஷபத்திலும், ஜன்ம லக்கினம் கடகமாகவும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர்கள் என்று பார்வதியம்மையார் கேட்க, இந்த ஜாதகர் ஆண் குழந்தையாகப் பிறந்திருக்கின்றார் என்று முனிவர் சொல்லுகின்றார்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்தில் சூரியனும், கடகத்தில் சுக்கிரனும், சனியும், கேதுவும், துலாத்தில் புதனும், விருச்சிகத்தில் சந்திரனும், அங்காரகனும், மகரத்தில் குருவும் ராகுவும், ஆகும். குருவும், சனியும் வக்கிரகதியில் இருக்கின்றார்கள்.

2. ஏற்று மில்லம் கீழ்வாடை யெதிரி ல்லம் காணு தாம்
போற்று வேனினி மேல் பெருவயி றன்
தோற்று முத்தரம்ஈசன் குடிபாழா மேழில்
மாடனதின் உத்தரம் வாசமென்றோம் வடதென்பால்வீதி.

2. ஜாதகர் பிறந்தவீடு கீழண்டை வாடையில் இருக்கும். எதிரில் வீடு கிடையாது. துதிக்கப்படுகின்ற பெரிய வயிற்றையுடையவராகிய விநாயக் கடவுளின் கோயில் கிழக்குத் திக்கிலும், மேற்குத் திக்கில் பாழாக விருக்கின்ற சிவபெருமானுடைய கோவிலும் இருக்கும். இதற்கு வடக்கில் ஒரு பேய் வாசஞ்செய்து கொண்டிருக்கும், என்று சொல்லுகின்றோம். பிறந்த வீதி வடக்குத் தெற்கு வீதியாகும்.

[1] குரு [2] விருச்சிகம் [3] தனுசு [4] சூரியன் [5] புதன் [6] அங்காரகன் [7] சுக்கிரன் [8] ரிஷபம்

3. வீதிசிறு வூர்மேவுமந்தாம் ஜனன முறும்
ஓதுஅன்னை தந்தை துணை உறுமனைவி
போதுசுதர் யோகமுன் பின்ஜன்மம் உரைப்போமிந்நூல்
ஆகமத்தால் ஆயந்துரைப் போம் யாம்.

3. ஜாதகர் பிறந்தவூர் ஒரு சிறிய கிராமமாகும். இவர் ஐந்தாவது கர்ப்பத்தில் பிறந்தவராவார். இவருடைய தாயார் தகப்பனார் சகோதரர்கள் மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும், முன் ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுவோம். இவைகளை ஆகம சாஸ்திரங்களை ஆராய்ந்து நாங்கள் சொல்லுவோம்.

4. ஆகுமே தந்தை துணை அஷ்டமி யில் ஆணி ரண்டு
தோகையைந் தென்றுயாம் செப்புவோம் பாலகன்
உதிக்கா முன்செல்வார் உரைப் போமே தந்தை குணம்
துதி செய் தோர்க் கன்ப னெனச் செப்பும்.

4. ஜாதகரின் தகப்பனாருடைய சகோதரர்கள் எட்டுபேர்களில் சகோதரர்கள் இருவரும் சகோதரிகள் ஐந்து பேர்களும் உண்டு என்று நாங்கள் சொல்லுகிறோம். மிகுதியானவர்கள் ஜாதகர் பிறப்பதற்கு முன்பே இறந்து போய் விடுவார்கள். தகப்பனாருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவர் தன்னைப் போற்றுகிறவர்களிடம் ஆசையாக விருப்பார் என்று சொல்லுகின்றோம்.

5. செப்புநிறம் மாலாம் தீரமிலா நெஞ்சம்
தப்புவழி செல்லான் தான்கல்வி ஒப்பிடுவான்.
அன்னைதந்தைக் கிஷ்டன் அவன்கிருஷி தான்செய்வன்
மன்னுள்ளன் ஈகையுள்ளான்.

5. ஜாதகருடைய தகப்பனார் மகாவிஷ்ணுவினுடைய நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒரு விதமான நிறமுடைய தேகத்தையுடையவராவார். இவர் தைரியமில்லாத மனத்தையுடையவர். கெட்டவழியில் போகமாட்டார் நடந்து கொள்ளவுமாட்டார். சமமான வித்தையை உடையவர். தாய் தகப்பனாருக்கு இஷ்டமானவர். இவர் விவசாயத் தொழிலைச் செய்வார். பெருமை மானம் இவைகளை உடையவர். கொடுக்குந் தன்மை தயாள குணம் இவைகளை உடையவராவார்.

வேறு.

6. வானவர் பத்தி மிகும் மறுயில்லம் தான்வாழ் வன்
தேன்மொழியாம் ரோமம் குட்டம்செம் பொனிலான் ஊனமிலான்
செய்நன்றி மறவாதான் சேயிழைக்கு நேயமுளன்
துய்யமனம் சீலமிலான் தொட்டு.

6. ஜாதகருடைய தகப்பனுருக்குத் தேவர்களின் மேல் பக்தியும் அன்பும் அதிகப்படும். வேறொரு வீட்டில் இவர் வசிப்பார். இனிமையான வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். உடம்பில் மயிர் குட்டையாக விருக்கும். தனமில்லாதவர். அவயவக்குறைவு ஒன்றும் இல்லாதவராவார். பிறர் தனக்குச் செய்த உபகாரத்தை மறக்கமாட்டார். மனைவிக்கு இஷ்டமானவர். பரிசுத்தமான மனத்தை உடையவராவார். நல்ல நடவடிக்கை இல்லாதவர்.

7. இந்நெறி யுடையா னுக்கு இவனுமே ஜனிப்பா னாகும்
அன்னவன் துணையுமூன்று அனுகிடும் ஆண்பா லொன்று
கன்னிகை யிருவர் என்றோம் காளையின் சேதிகேளாய்
குன்னிய வார்த்தை சொல்வன் குளர்வார்த்தை கல்வி யில்லான்.

7. இப்படிப்பட்ட குணங்களை உடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய சகோதரர்கள் மூன்று பேர் ஆகும். இவர்களில் சகோதரன் ஒருவனும், சகோதரிகள் இரண்டுபேரும் ஆகும் என்று சொல்லுகின்றோம். இந்த சகோதரரின் விஷயங்களைச் சொல்லுகின்றோம். கேட்பீராக. இவர் குறைந்த வார்த்தைகளைச் சொல்லுவார். சரியாகப் பேசமுடியாமல் தடுமாறியும் பேசுவார். பிதற்றவும்செய்வார். படிப்பில்லாதவராவார்.

8. மால்நிறம் சீலமில்லான் மறுத்துரை அதிகம் கூறுன்
பால்பாக்கிய முடைய னாகும் பயிர்த்தொழில் செய்வா னாகும்
ஞாலம்மேல் துணைசொல் தட்டான் நாயகி கா[illegible]ாகும்
கோலமாம் சாப முள்ளான் கோவின்மேல் பிரிய மாவன்.

8. ஜாதகருடைய சகோதரன் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேகவர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தையுடைய தேகத்தையுடையவர். நல்ல நடவடிக்கை இல்லாதவர். தடுத்து அதிகமாகப் பேசமாட்டார். பால் பாக்கியத்தை உடையவராவார். விவசாயத்தொழிலைச் செய்பவராவார். பூமியில் தன்னுடைய சகோதரனுடைய வார்த்தையைத் தவறி நடக்கமாட்டார். இவருக்கு மனைவி கிடையாது. கெட்ட சாபங்களை இவர் உடையவராவார். பசுக்களின் மேல் ஆசை உடையவர்.

9. என்னகா ரணத்தி னாலே இக்குணம் சொன்னீரையா
மன்னிய லாபம் தன்னில் மறைக்கோளும் கேது நிற்க
அன்னவன் குண மிவ்வாறு அதுவின்றிப் பூர்வம் தன்னில்
பின்னமாய் வினைகள் செய்தான் புக்கிற்று அந்தத் தோஷம்.

9. ஜாதகருடைய சகோதரனுக்கு எந்தக் காரணங்களினால் இவ்விதமான குணாதிசயங்களைச் சொன்னீர். முனிவரே : என்று கேட்க பதில் சொல்லுகின்றார். பெருமையுள்ள லாபம் என்று சொல்லப்பட்ட பதினோராவது பாவத்தில் மறைக்கோளாகிய சுக்கிரனும் கேதுவும் இருப்பதால் இவருடைய குணாதிசயங்கள் இவ்வாருகும். இந்தக் காரணமும் இவர் தன்னுடைய

முன் ஜன்மத்தில் கெட்ட செய்கைகளைச் செய்து பாவத்தை அடைந்திருக்கின்றார். அந்தப் பாபம் இந்த ஜன்மத்தில் இவரை வந்து அடைந்திருக்கின்றது.

குறிப்பு.—இங்கு மூத்த சகோதர ஸ்தானமாகிய பதினொன்றையும், அதற்கு அதிபதியாகிய சுக்கிரனைப் பற்றியும் பேசுவதால் இந்தச் சகோதரன் மூத்த சகோதரன் என்று தோற்றுகிறது. மூத்த சகோதரனுடைய லக்கினம் ரிஷபம் ஆகும். இதற்கு அதிபதியும் இதற்கு ஆறும் பாவத்திற்குடைய வருமான சுக்கிரன் கேதுவுடன் கூடி இருப்பதால் துய்யகோளம் இலக்கின பாவம் பதினாறுவது பாடல் பிரகாரம் மூத்த சகோதரன் '' தன்னுடல் சுகமில்லாமற் சஞ்சல மனத்த னாகி மின்னனுய் வியாதி யத்த னாமென விளம்ப லாமே ''. மேலும் மூத்த ஆண் சகோதரகாரகனாகிய குருவும் ராகுவுடனும் நீச சந்திரனுடனும் கூடி இருப்பதும் மூத்த சகோதரனுக்குத் தோஷத்தை உண்டு பண்ணக் கூடியதாகும். மேலும் வாக்குச் சம்பந்தமான அம்சங்கள் இரண்டாவது பாவமும், ஐந்தாவது பாவமும், இந்தப் பாவாதிபதிகளும் புதனும் ஆகிய இவைகள் ஆகும். ரிஷபத்திற்கு இரண்டாவது பாவத்தைச் சனி பார்க்கின்றார். ஐந்தாவது பாவத்தைச் சனியும் அங்காரகனும் பார்க்கின்றார்கள். புதனும் அங்காரகனுடன் கூடி நீசமாய் கேதுவால் பார்க்கப்பட்டு இருக்கின்றார். ஆகையால் வாக்கிற்கு அதிகத் தோஷம் இருக்கின்றது. ஆகையால் ஏழாவது பாடலில் இவர் குன்னிய வார்த்தை சொல்வார் என்றும் குளர் வார்த்தையை உடையவரென்றுஞ் சொல்லியிருக்கின்றது. இத்துடன் வித்தியா ஸ்தானமாகிய நான்கிற்கு உடைய சூரியன் ரிஷபத்திற்குப் பன்னிரண்டில் மறைந்திருப்பதால் இவருக்கு வித்தை கிடையாது என்று சொல்லி இருக்கின்றார். ஜாதகாலங்காரம் 477, 478, 479 ஆவது பாடல்களை பார்க்கவும். பின் வரும் 14-ஆ. வது பாடலிலிருந்து இந்தச் சகோதரன் மூத்தவன் என்று ஏற்படுகிறது.

10. வினையுதைப் புகலு மென்ன வேலங்காட தனி லின்னேன்
கனமுள சைவச் சேயாய்க் கலந்துமே வறுமை யின்றித்
தனையனும் வாழுந் நாளில் சங்கரன் வேடம் கொண்ட
கனமுள அதிதி மாலே கலந்தனன் மருயில் லத்தில்.

10. ஜாதகருடைய சகோதரர் முன் ஜன்மத்தில் செய்த பாவங்களைச் சொல்வீர் என்று கேட்க, இவர் வேலங்காட்டில் மேன்மையான சைவ குலத்தில் ஆணுகப் பிறந்து கஷ்டங்களும் தரித்திரமும் இலாமல் வாழ்கின்ற காலத்தில் சிவபெருமானைப் போலத் தோற்றமுள்ள சிறந்த ஒரு பரதேசி சாயந்திரத்தில் வேறொரு வீட்டில் வந்து தங்கினர்.

11. அதிதிபா லிவனும் சென்று அடாவடி வார்த்தை பேச
அதிதியும் மனவெறுப்பால் அறைகிறார் சாபம் தானும்
புதுஜன்மம் தாழ்வாய் தோன்றிப் புகல்வது குறைவதாயும்
அதிபதி காண தாகி மாநிலம் நிந்தை யேற்பாய்.

11. இந்தப் பரதேசியிடம் ஜாதகருடைய சகோதரன் தன்னுடைய முன் ஜன்மத்தில் சென்று முரட்டுத்தனமாகவும் நியாயமில்லாமலும் வார்த்தைகளைச் சொல்ல, அந்தப் பரதேசி தன்னுடைய மனத்தில்

கஷ்டத்தை அடைந்து சாபத்தைக் கொடுத்தார். நீ மறு ஜன்மத்தில் தாழ்ந்த ஜாதியில் பிறந்து பேசுஞ் சக்தியைக் குறைவாய் அடைந்து, மனைவி இல்லாதவனுகிப் பூமியில் பெரிய நிந்தையையும் அபவாதத்தையும் அடைவாய் என்று அந்த அதிதி இவரைப் பார்த்துச் சொன்னர்.

12. இன்னமும் பலவாறு சொல்லி யேசினர் அதிதிதானும்
அன்னவர் சாபம்தானும் அனுகிற்று இவனுக்கேதான்
துன்னிய காலன் ஞடு சேர்ந்துமே பிரமன் லக்கம்
தன்னிலே வந்தா னென்ரேம் சார்ந்தது அதிதி சாபம்.

12. அந்த அதிதி இன்னும் பலவிதமாகச் சாபத்தைக் கொடுத்து விட்டுப் போய்விட்டார். இவருடைய சாபம் ஜாதகருடைய சகோதரரை முன் ஜன்மத்தில் வந்து அடைந்தது. இவர் இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனுடைய பிரமலிபியுடன் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார் என்று சொல்லுகிரேம். இவரை அந்த அதிதியினுடைய சாபம் இந்த ஜன்மத்திலும் வந்து அடைந்தது.

13. சுகமில்லா வாழ்வா ஞகும் செப்புவாரதற்குச் சாந்தி
தகமையாய் வேலன்வாழும் தோகைமா மலைக்குமேதான்
வகையுடன் மூவேழ்கார்த்தி மந்தனும் செல்வாஞகில்.
பகையது விலகி யேதான் பாலகன் சுகமே யாகும்.

13. ஜாதகருடைய சகோதரர் சுகமில்லாதவராக விருந்து வாழ்வார். இதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுகின்ருர். மயில்களுள்ள பெரிய மலையில் உள்ள முருகக்கடவுளின் ஸ்தலத்திற்கு (பழனியிலுள்ள முருகர் ஸ்தலத்திற்கு) இவர் இருபத்தொரு கிருத்திகைதினம் போய்த் தரிசனஞ் செய்தால் பாவங்கள் நீங்கி இவர் சௌக்கியத்தை அடைவார்.

14. மிதுனமும் கடைநாள் தன்னில் மேவுவா னென்று சொல்வோம்
அதிபதி பெண்பால் சேதி வரைகிரேம் பின்பா கத்தில்
இதற்குப்பின் ஆண்பால் ஒன்று எய்திடும் கன்னி அவ்வாறு
அதுவுமே தீர்க்க மெய்து மம்பிகை யாளே கேளாய்.

14. ஜாதகருடைய சகோதரர் மிதுனராசியில் கடைநாள் என்று ரேவதி நட்சத்திரத்திற் பிறந்தவராவார் என்று சொல்லுகிரேம். சகோதரியின் விஷயத்தைப்பற்றிப் பின் பாகமாகிய இரண்டாவது பாகத்திற் சொல்லுகின்ரேம். இதற்குப் பின்னல் ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் உண்டாகும். இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு.—ஜாதகருடைய சகோதரர்களின் தொகையைப்பற்றி ஏழாவது பாடலைப் பார்க்கவும்.

15. உதித்தவன் குணத்தைச் சொல்வே னுண்மையிலா மனத்தா ஞகும்]
சதியுள மனத்தா ஞகும் சாதிப்பான் சிலது சங்கை
அதிகமாய் வார்த்தை சொல்வன் அறையுமுன் கோபியாவன்
துதிசெய்தோர்க்கன்ப னுவன் சொல்லது யிரண்டு முண்டு.

15. ஜாதகருடைய குணநிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் உண்மையான மனத்தை யுடையவரல்லர் ; அஃதாவது உண்மையாக நடந்து கொள்ளமாட்டார். கெடுதியைச் செய்கின்ற கெட்ட குணமுள்ள துமான மனத்தையுடையவராவார். சில விஷயங்களை பற்றித் தான் சொல்லுவதே சரியான தென்று வாதாடி வெல்லுவார். அதிகமாகப் பேசுவார். பேசுவதற்கு முன்னே கோபத்தை யுடையவராவார். தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிறவர்களுக்குச் சினேகிதமாக விருப்பார். இரண்டு விதமான வார்த்தைகளை அஃதாவது உண்மையையும் பொய்யையும் கலந்து பேசுவார்.

16. நடையது துருசு முள்ளான் நாதஞ பத்தி கொள்வன்
படையினில் செல்லா ஞகும் பாரினல் சீவிப்பானும்
கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன் காலிகள் விருத்தி யுள்ளான்
உடன்துணை தனைகாப் பாஞகும் உணவுகளதிகம் கொள்வன்.

16. ஜாதகருடைய நடவடிக்கை கெட்டதாக விருக்கும். கடவுளின் மேல் அன்பும் பக்தியும் உடையவர். சண்டைக்குப் போகமாட்டார். நிலத்தின் மூலமாக ஜீவனஞ் செய்வார். கடனை வாங்குவார். அதைக் கொடுத்து விடுவார். கால்நடைகள் இவருக்கு விருத்தியாகும். இவர் தன்னுடைய சகோதரர்களைக் காப்பாற்றுவார். அதிகமான சாப்பாடைச் சாப்பிடுவார்.

17. பாரியு மீரெட் டாண்டில் பகரன்னை வர்க்கம் தன்னில்
கூறுவோம் கீழ்ப்பா லாகக் கோதையு மிருநிறத்தாள்
பாரிய புத்தி யுண்டு பஞ்சைமே லிரக்க மாவள்
காரிழை யோக சாலி கணவனுக் கினிய ளாகும்.

17. ஜாதகருக்கு மனைவி பதினுருவது * வயதில் தன்னுடைய தாயாரின் பந்துக்களிலிருந்தும் கிழக்குத் திக்கிலிருந்தும் வந்து நேரிடு வாள் என்று சொல்லுகிரேம். இவள் இரண்டு நிறங்கள் கலந்துள்ள மானிறமுள்ள தேகத்தை உடையவளாவள். பெரிய புத்தியை யுடையவள். எழைகளிடத்தில் இரக்கமாகவும், பட்சமாகவும் இருப்பாள். இவள் யோக முடையவளாவாள். தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவளாவாள்.

* குறிப்பு —விவாகம்.—ஜாதகருக்கு வயது ௵ 15–0–0 முதல் ௵ 16–0–0 முடியும் வரையிலும் புதன் தசையில் ராகு குரு இவர்க ளுடைய புக்திகள் நடக்கின்றன. புதன் பத்திற்குடைய அங்காரகனுடன் கூடி ஒன்பதில் இருப்பதால் ஜாதக பாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 29-ஆவது சுலோகப் பிரகாரம் தன் தசையில் விவாகஞ் செய்து வைக்க

அமைப்பு உடையவராகின்றார். ராகு ஏழைப் பார்க்கின்றார். ஒன்பதிற்குடைய குருவுடன் கூடி சுக்கிரனைப் பார்க்கின்றார். லக்கினதிபதியுடன் கூடியுமிருக்கின்றார். இவர் போககாரர். ஆகையால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகம், ஜாதக பாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 2-ஆவது சுலோகப் பிரகாரம் தன் புக்தியில் விவாகஞ் செய்ய அமைப்பு உள்ளவராகின்றார்.

18. சுதர்களும் நவமே தோன்றும் சோர்வுறும் சிலவே யென்றேம்
சதமுட னுண்பால் ரண்டு தையலர் மூன்று தீர்க்கம்
இதுவித முனிவர் கூற வியல் ஜயமுனிவர் சொல்வர்
விதியவன் யேழெட் டோனு யிருமூன்றில் தன்னில் நிற்க.

18. ஜாதகருக்கு ஒன்பது குழந்தைகள் பிறக்கும். இவற்றுள் சில குழந்தைகள் இறந்துவிடும் என்று சொல்லுகின்றோம். இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவ்விதமாக முனிவர் சொல்ல, ஜயமுனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். விதியவனாகிய சனி ஏழாவது பாவத்திற்கும் எட்டாவது பாவத்திற்கும் அதிபதியாகி ஆறுவது பாவத்தில் இருப்பதால்;

19. எப்படி மனைவி வாய்க்கும் இவனுக்கு மூன்றுண் டிற்குள்
செப்புவோம் கண்டம் தானும் செம்பொன்னு 1 மஞ்சில நிற்க
ஒப்புட னிரவி 2 பத்தில் உச்சனு யிருப்ப தாலே
மெய்ப்புடன் தாய் தந்தைக் கேவித்தகன் கருமம் செய்வன்.

19. ஜாதகருக்கு எவ்விதமாக மனைவி வந்து நேரிடுவாள்? ஜாதகருக்கு மூன்று வயதிற்குள்ளேயே கண்டத்தை, அஃதாவது மரணத்தைச் சொல்லுவோம் என்றார். அதற்கு முனிவர் பதில் சொல்லுகின்றார். குரு ஐந்தாவது பாவத்தில் இருப்பதாலும், சூரியன் பத்தாவது பாவத்தில் உச்சத்தில் இருப்பதாலும் ஜாதகர் உண்மையாகத் தன்னுடைய தாயாருக்கும் தகப்பனுருக்கும் ஈமச்சடங்குகளைச் செய்வார்.

20. ஆகையால் வயது தீர்க்கம அன்னையின் குணத்தைக் கேளாய்ப்
பாகமாய்ப் பேச வல்லாள் பரஉப காரி யாகும்
தோகையு மிருநி றத்தாள் சுந்தரி சமயோ கத்தாள்
பாகமாய்த் துணைஆண் ஒன்று பாவையும் மூன்று என்றேம்.

20. ஆகையால் ஜாதகர் நீண்ட ஆயுளை உடையவராவார். இவருடைய தாயாரின் குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். கேட்பீராக. இவள் பக்குவமாகவும் சாமர்த்தியமாகவும் பேசுகின்ற திறமையுடையவள். பிறருக்கு உபகாரத்தைச் செய்வாள். இவள் சமமானதும் நடுத்தரமானதுமான யோகத்தை உடையவள். இவளுடன் கூடப்பிறந்தவர்களில் சகோதரன் ஒருவன் என்றும், சகோதரிகள் மூன்று என்றும் சொல்லுகின்றேம்.

---

1 குரு 2 சூரியன்

21. இல்லமும் கீழ்ப்பாலாகு மியம்புவோ மாமன் சேதி
நல்லவ னாகி வாழ்வன் நற்கல்வி யூக சாலி
புல்குவான் நவநூல் தன்னை புராதனம் விருத்தி செய்வன்
அல்லல்கள் மத்தி யத்தில் அடைவனுங் கிருஷி செய்வன்.

21. ஜாதகருடைய தாயாரின் வீடு கிழக்குத் திக்கில் இருக்கும். ஜாதகரின் அம்மானுடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறேம். இவர் நல்லவராக விருந்து வாழ்வார். நல்ல வித்தையை யுடையவர். நுட்பமான அறிவும் புத்தியும் உடையவர். புதிய நூல்களை உண்டாக்குவார். பூர்வீகமான பழைய சொத்துக்களை விருத்தியாக்குவார். மத்திய வயதில் கஷ்டங்களை அடைவார். விவசாயத்தொழிலைச் செய்வார்.

22. தனமது அதிக மில்லான் தரணியோர் வசியம் கொள்வன்
இனமதற்க் கினிய னாகு மெய்திடும் மூலச் சூடு
கனமான புத்தி யுண்டு கட்டுவார்த் தைகளும் சொல்வன்
அனையவே மனைவி ஒன்று அதுவின்றிப் பலபெண்மோகன்.

22. ஜாதகரின் அம்மான் அதிகப் பணம் இல்லாதவர். பூமியிலுள்ளவர்களைத் தன்பக்கமாக விருக்கும்படியாய்ச் செய்து கொள்ளுவார். பந்துக்களுக்குப் பிரியமுள்ளவராவார். இவருக்கு மூலச்சூட்டு ரோகம் உண்டு. பெரிய மேன்மையான புத்தியை உடையவர். பொய் வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையுஞ் சொல்லுவார். இவருக்கு மனைவி ஒருத்தியே ஆகும். இதுவுமில்லாமல் இவர் அநேக ஸ்திரீகளின் மேல் காம ஆசையை யுடையவர்.

23. சுதர்களு மாண்பால் ரண்டு தோகையு நான்கு என்றேம்
அதிபன்பின் சுகமாய் வாழ்வன் மாதுரு பூர்வம் சொல்வேன்
பதிக்குயர் பரங்குன்றத்தில் பாவையுமிக்கு லத்தில்
நிதிமிக உடையா னுக்கு நேர்ந்தன ளென்று சொல்வோம்.

23. ஜாதகரின் அம்மானுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், நான்கு பெண்குழந்தைகளும் உண்டு என்று சொல்லுகிறேம். இவர் சௌக்கியமாக விருந்து வாழ்வார். ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இடங்களில் சிறந்ததாகிய திருப்பரங்குன்றம் என்ற க்ஷேத்திரத்தில் இவள் இந்த ஜன்மத்திற் பிறந்த ஜாதியிலேயே அதிகச் செல்வமுடையவருக்குப் பிறந்தாள் என்று சொல்லுகிறேம்.

24. சுகமுடன் வாழுந் நாளில் தோகையும் விரத மின்றி
அதிதிகள் விருப்ப மின்றி அந்தகன் பக்கல் சென்று
ஜகபதி வரையப் பட்டு ஜெனித்தன ளிந்த மாது
தகைமையாய் யோகம் காணுள் தனம்பணி அதிக மில்லாள்.

24. ஜாதகருடைய தாயார் சுகமாக வாழுகின்ற காலத்தில் விரதங்களை அனுஷ்டிக்காமலும் பரதேசிகளின் மேல் அன்பும் ஆசையும் இல்லாமலும் இருந்து இறந்து எமனிடத்திற்குப் போய்ப் பிரம

தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இவள் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருள். இவளுக்குத் தகுதியான யோகம் கிடையாது. பணமும் ஆடை ஆபரணங்களும் இவளுக்கு அதிகமாகக் கிடையா.

25. மறு ஜன்மம் விரிஞ்சி தன்னில் மாதுவும் கங்கை சேயாய்
உரை குவாள் வறுமை யின்றி உத்தமி வாழ்வா ளாகும்
பெரும்தந்தை பூர்வம் சொல்வேன் பிருதிவி தன்னி லேதான்
தரிதொழில் செங்குந்த வமிசம் ஜனித்தன னிவனே யென்ருேம்.

25. ஜாதகரின் தாயார் தன்னுடைய பின்ஜன்மத்தில் விருஞ்சி புறத்தில் வேளாளர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள். கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமல் வாழ்பவளாவாள். ஜாதகரின் சொந்தத் தகப்பனுருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின் றேன். இவர் பிருதிவி ஸ்தலமாகிய காஞ்சீபுரத்தில நெசவுத் தொழிலைச் செய்கின்ற செங்குந்தர் ஜாதி என்கிற கைக்கோளர் வம்சத்தில் பிறந்தார் என்று சொல்லுகின்ருேம்.

26. சுகதுக்க முடைய ளுகிச் சுந்திரன் மரண மெய்தி
ஜகபதி வரையப்பட்டுஜனித்த னிவனே யென்ருேம்
தகமையாய்ப் பூர்வ யோகம் தரித்திர மத்தி யத்தில்
வகையுடன் பின்னுல் யோகம் வரைகிருே மிவனுக் கேதான்.

26. ஜாதகருடைய தகப்பனுர் முன் ஜன்மத்தில் சுகங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்துப் *பிறகு இறந்து பிரமதேவனுல் பிரமலிபி யுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகின்ருேம். இவருக்கு முதலில் தகுதியான யோகமுண்டு. மத்திய வயதில் தரித்திரம் உண்டு. பிந்திய, அஃதாவது கடைசிக்காலத்தில் இவ ருக்கு யோகம் உண்டு என்று சொல்லுகின்ருேம்.

27. பின்ஜன்மம் ஆழி தன்னில் பிறப்பனும் வைசியச் சேயாய்ப்
பொன்பொரு ளுடைய ளுகிப் புகழான செட்டுச் செய்வன்
இன்னவன் பூர்வம் சொல்வேன் எழில்பாண்டி நாட்டி லேதான்
பின்குல மதினுதித்துப் பூமியா ளரசர் பக்கல் ;

27. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய மறு ஜன்மத்தில் சீர்காழியில் வைசியருடைய குலமதில் ஆண் குழந்தையாகப் பிறப்பார் செல்வமும் சொத்தும் உடையவராகிப் பெருமையான வியாபாரஞ் செய் வார். இனிமேல் ஜாதகருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின் றேன். அழகிய பாண்டிய தேசத்தில் தாழ்ந்த குலத்தில் பிறந்து பூமியை யாளுகின்ற அரசர்களிடத்தில், அஃதாவது இராஜாங்கத்தில் ;

28. அணுகியே ஜீவித் தேதான் அந்தகன் பக்கல் சென்று
கனமுள பிரமன் லக்கம் கலப்பனும் தீயின் வர்க்கம்
துணிவுடன் யோகம் சொல்வேன் ஜனித்தநாள் முதலா மாக
அணுகிய நாலாண்டுக்குள் அற்பமாம் யோகம் தானே.

28. தொழிலைச் செய்து வாழ்ந்து இறந்து எமனிடத்திற்குப்போய் மேன்மையான பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு அக்கினி குலத்தில் ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர். (வன்னியர்) இவரது யோகத்தைப்பற்றி நான் தைரியமாகச் சொல்லுகிறேன். ஜாதகர்பிறந்த காலம் முதல் நான்கு வயதிற்குள்ளே யோகம் அற்பமாக விருக்கும்.

29. தானியப் பலித நஷ்டம் தனமது செலவு முண்டு
கன்னமா மனமே யெய்தும் உலகநிந் தைகளு மேற்பன்
பான்மையாய் அதன்மே லாகப் பாரது பலித மெய்தும்
தேன்மொழி மாது சேர்வள் தீரமா நெஞ்சு மெய்தும்.

29. தானியங்களின் பலிதம் குறைவாகி நஷ்டத்தை உண்டு பண்ணும். பணம் அதிகமாகச் செலவாகும். களவு செய்யும் மனத்தையே உடையவர். உலகத்தாருடைய அபவாதங்கள் வந்து நேரும். இதற்கு மேல் நிலங்கள் நல்ல பலனைக் கொடுக்கும். ஜாதகருக்கு இனிமையான வார்த்தைகளையுடைய மனைவி வந்து சேருவாள். இவருக்குத் தைரியமான மனம் உண்டு.

* குறிப்பு.—இந்தப் பாடலில் குடும்பத்தின் பலனையும் ஜாதகருடைய குடும்பத்தாரின் குணங்களையும் ஜாதகரின் பலனையும் கலந்து சொல்லி இருக்கின்ருர்.

30. தாதைபோல் வாழ்வா னுகும் சாற்றுவீ ரவன்கு ணத்தை
மேதினில் நல்லோனுவன் வீண்வம்பு 'செல்லா னுகும்
சூதிலான் பொறுமை சாலி சொல்லது தவரு னுகும்
வேதனை யொருவர்க் கெண்ணுன் விளைபுலம் விருத்தி செய்வன்.

30. ஜாதகர் தன்னுடைய பிதுர் வழிப்பாட்டனுரைப் போல வாழ்பவராவார் என்று சொல்ல, பாட்டனுருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுவீர் என்று கேட்க, அவர் பூமியில் நல்லவராக விருப் பார். வீணை சண்டைக்குப் போகமாட்டார். கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாதவராவர். பொறுமையாகவும் சாந்தமாகவும் இருப் பார். தான் சொல்லிய வார்த்தைகளுக்குத் தவருமல் நடந்து கொள்ளுந் தன்மையுடையவர். யாருக்கும் கெடுதியை நினைக்கமாட்டார். செய்கால் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார் என்று முனிவர் சொல்லுகின்ருர்.

31. கூவல்கள் மூன்று செய்வன் குலத்துளோர் மதிக்க வாழ்வன்
தாவின பேரைக் காப்பன் தர்மமாம் குணத்தா னுகும்
மேவிடு மந்தி யத்தில் மேகம்போல் படரு மென்ருேம்
நோவது காணு னுகும் நேருங்கா லங்கள் சொல்வாய்.

31. இவர் மூன்று கிணறுகளைச் செய்வார். தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். தன்னை வந்து அண்டினபேர்களைக் காப்பாற்றுவார். தருமஞ் செய்கின்ற குணத்தையுடையவ

ராவார். இவருடைய தேகத்தில் மேகரோகத்தைப் போலக் கடைசிக் காலத்தில் காரகநோய் படரும் என்று சொல்லுகின்றேம். ஆனால் நோயானது வெளிக்குத் தெரியாததாக விருக்கும். இவ்விதமாக முனிவர் சொல்ல, எந்தக் காலத்தில் இந்த ரோகம் உண்டாகும் என்பதைச் சொல்லுவீராக.

32. ஜாதக னுதித்த பின்பு சார்ந்திடு மந்த ரோகம்
ஏதுகா ரணத்தி னாலே யிவன்பூர்வ வினையா மென்றேம்
பாதகம் தனையே சொல்வாய் பட்சியா மிக் குலத்தில்
நீதியா யுதித்து யின்னேன் நேமியில் வாழுந்நாளில்;

32. ஜாதகர் பிறந்த பிறகு இந்த ரோகம் உண்டாகும். இந்த நோய் எந்தக் காரணத்தினால் நேரிடும் என்று கேட்க, இது முன் ஜன்மத்திய பாபத்தினால் நேரிடும் என்று சொல்லுகின்றேம். அந்தப் பாவத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, இவர் பட்சி ஸ்தலம் என்ற திருக்கழுக்குன்றத்தில் இப்பொழுது பிறந்திருக்கும் ஜாதியிலேயே நியாயமாகப் பிறந்து பூமியில் வாழுகின்ற காலத்தில்.

33. வினையதை புகலக் கேண்மோ மார்ஜாலம் கொடுமை செய்ய,
இனையான்வெந் நீரைத் தூற்றப் பொங்கிற்றுத் தேக மெல்லாம்
கனமுட னந்தத் தோஷம் காதலன் தன்னைப் பற்றிச்
சினமுட னிச்ஜன் மத்தில் சேர்ந்தது அந்தந் தன்னில்

33. இவருக்கு வந்து நேர்ந்த பாவத்தைச் சொல்லுகின்றேம் கேட்பீராக. மார்ஜாலம், அஃதாவது ஒரு பூனை தனக்குக் கெடுதியைச் செய்ய, இவர் கொதிக்கின்ற ஜலத்தை அதன்மேல் ஊற்ற, அதனுடைய தேகமெல்லாம் வெந்து போய்விட்டது. அந்தப் பெரிய தோஷம் இவரை முன் ஜன்மத்திலேயே அடைந்து இந்த ஜன்மத்தில்கூட இவரைக் கடைசிக் காலத்தில் வலிவுடன் வந்து அடைந்தது.

34. அதற்கு ஓர்சாந்தி சொல்வாய் அறையவே மாட்டோம் யாங்கள்
அதிபன்பின் ஜன்மம் சொல்வேன் மாயூரம் தன்னி லேதான்
விதவிதச் செட்டுச் செய்யும் வைசியர் குலமு திப்பான்
அதுகாலம் நிரியா ணங்க ளியம்புவீர் விவர மாக.

34. அதற்காக ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்க, அதற்குச் சாந்தியை நாங்கள் சொல்லமாட்டோம். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். மாயவரத்தில் அநேக விதமான வியாபாரங்களைச் செய்கின்ற வைசியருடைய குலத்தில் பிறப்பார். இவருக்கு எப்போது மரணம் நேரிடுமென்பதை விவரமாகச் சொல்லுவீராக.

35. இருநான்கு ஆண்டில் மாசி யேகுவான் தாதை தாமும்
மறுஆண்டில் தந்தை அன்னை மாளுவா ளென்று சொல்வோம்
ஆறஞ்சு ஆண்டு தன்னில் ஆனிமா தத்தி லேதான்
கூறுவோம் தந்தை கண்டம் குறித்தது தப்பா தாகும்.

35. ஜாதகருக்கு எட்டாவது வயதில் மாசி மாதத்தில் *பிதுர்வழிப் பாட்டனார் இறந்துபோவார். இதற்கு அடுத்த வருஷத்தில் தகப்பனருடைய தாயாராகிய பிதுர்வழி பாட்டியார்* இறந்துபோவாள் என்று சொல்லுகிறேம். ஜாதகருக்குப் முப்பதாவது வயதில்* ஆனி மாதத்தில் இவருடைய தகப்பனர் இறந்து போவார் என்று சொல்லுகிறேம். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

*குறிப்பு.—பிதுர் பாட்டன் மாரகம் :—பிதுர் லக்கினம் மீனம். இதற்குப் பிதுர் லக்கினம் விருச்சிகம். விருச்சிக லக்கினத்திற்குப் பாராசரஹோரை ஜாதக சந்திரிகை இவைகளின் பிரகாரம் அங்காரகன் புதன் சுக்கிரன் சனி இவர்கள் மாரகாதிபதிகள் ஆகும். விருச்சிகத்திற்கு மாரகன் ஸ்தானங்களாகிய எட்டு பதினென்றிற்குடையவராகிய புதன் லக்னுதிபதியாகிய அங்காரகனுடன்கூடி ஐந்தில் நீசமாகி இருக்கின்றார். ஜாதகருக்கு வயது ௵ 7-0-0 முதல் ௵ 8-0-0 முடியும் வரையில் புத தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் புத தசை பிதுர் பாட்டனுக்கு மாரகஞ்செய்யும். சுக்கிரன் விருச்சிகத்திற்கு 7-12-க்குடையவராய் ஏழில் இருப்பதாலும் பிதுர் பாட்டன் காரகனுகிய ராகுவைப் பார்ப்பதாலும் சுக்கிரன் தன் புக்தியில் பாட்டனுருக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்றார்.

பிதுர்பாட்டி மாரகம்.—பிதுர் லக்கினம் மீனம். இதற்கு மாதுர் லக்கினம் மிதுனம். மிதுனத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் அங்காரகன் சூரியன் குரு இவர்கள் மாரகாதிபதிகள் ஆகும். மறு வருஷத்தில்கூட புத தசையில் சுக்கிர புக்தியே நடக்கின்றது. புதன் மாரகாதிபதியாகிய அங்காரகனுடன்கூடி இருப்பதாலும் பிதுர் பாட்டி பாவாதிபதியாய் இருப்பதாலும் 82-ஆவது நம்பர் ஜாதகம் 24-ஆவது பாடலின் கீழ்ச் சொல்லியுள்ள வியாக்கியானம், ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் புதன் பிதுர்பாட்டிக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்றார். சுக்கிரன் மிதுனத்திற்குப் பன்னிரண்டிற்குடையவராகி பன்னிரண்டில் இருப்பதால் தன் புக்தியில் மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்றார்.

பிதுர் மாரகம்.—ஜாதகருக்கு வயது வருஷம் 29-0-0 முதல் வருஷம் 30-0-0 முடியும் வரையினும் சுக்கிரதசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. பிதுர் லக்கினம் மீனம். இதற்கு ஜாதகசந்திரிகை பராசரஹோரை இவைகளின் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆவார்கள். சுக்கிரன் மீனத்திற்கு மாரகஸ்தானங்களாகிய மூன்று எட்டிற்குடையவராகி மூன்றில் இருந்துகொண்டு பிதுர் லக்னுதிபதியாகிய குருவைப் பார்ப்பதால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரம் சுக்கிரன் தன்னுடைய தசா புத்தியில் பிதாவை மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகிறார்.

36. நாற்பது ஆண்டி லேதான் நற்றனுர் மாதம் தன்னில்
கூறுவோ மன்னே கண்டம் குழவிக்கு ஏழுப தாண்டில்
ஏற்கவே தேளின் மாதம் யெய்திடும் மார கங்கள்
தீர்ப்பாக முனிவர் கூற தேவியும் கேட்க லுற்றாள்.

36. ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் மார்கழி மாதத்தில் இவருடைய நல்ல தாயார் இறந்துபோவாள் என்று சொல்லுகிறோம். ஜாதகருக்கு எழுபதாவது வயதில் கார்த்திகை மாதத்தில் மரணம் நேரிடும். இவ்விதம் தீர்மானத்துடன் முடிவாக முனிவர் சொல்லவே, பார்வதியம்மையார் கேட்கின்றார்.

குறிப்பு.—தாயார் மாரகம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 39–0–0 முதல் வருஷம் 40–0–0 முடியும் வரையிலும் சுக்கிர தசையில் குரு புக்தி நடக்கின்றது. மாதுர் லக்கினமாகிய துலாத்திற்குப் பராசரஹோரை, ஜாதக சந்திரிகை இவைகளின் பிரகாரம் சூரியனும் குருவும் மாரகாதிபதிகள் ஆவர். சுக்கிரன் துலாத்திற்கு மாரகஸ்தானமாகிய எட்டிற்குடையவராய் எட்டி லேயே இருக்கின்றார். இவர் மாதுர் பாவாதிபதியாகின்றார். மேலும் மாதுர் காரகனாகிய சந்திரனைப் பார்த்திருக்கின்றார். துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரமும் 82-ஆவது நெம்பர் ஜாதகம் 24-ஆவது பாட லின் கீழுள்ள வியாக்கியானப் பிரகாரமும் மாதுருக்குத் தன் தசையில் மாரகஞ் செய்ய அமைப்புள்ளவராகின்றார். குரு ஏற்கெனவே மாரகாதிபதி யாகி மாதுர் பாவாதிபதியாகிய சுக்கிரனேயும் துலாத்திற்கு எட்டையும் பார்ப்ப துடன் மாதுர்காரகனாகிய சந்திரனுடன் கூடி இருப்பதால் தன் புக்தியில் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்புடையவராகின்றார்.

ஜாதகர் மாரக விஷயம்.—ஜாதகருக்கு வயது வருஷம் 69–0–0 முடிந்து 70-ஆவது வயதில் கார்த்திகை மாதத்தில் அங்காரகத் தசையில் சூரிய புக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் பராசஹோரை, ஜாதகசந்திரிகை இவை களின் பிரகாரம் புதன், சுக்கிரன், சனி இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றார் கள். அங்காரகன் பத்திற்குடையவராய் மாரகாதிபதியாகிய புதனுடன்கூடி இருப்பதால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் 14-ஆவது பாடல் பிரகாரமும் தன் தசையில் மாரகஞ்செய்ய அமைப்புள்ளவ ராகின்றார். சூரியன் ஏற்கெனவே மாரகாதிபதியாகிய இரண்டாவது மாரக ஸ்தானத்திற்குடையவராகிப் பத்தில் இருப்பதால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரம் ஜாதகருக்குத் தன்னுடைய புக்தியில் மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்றார்.

37. இதற்குமுன் மார கங்க ளெய்தாதோ ஜாத கற்கு
குதர்க்கமாய் மூன்று ஏழு குலவிய பின்னொன் பானில்
அதிகமூ வெட்டு அன்பான் அநேகமாய்ப் பிணியுமெய்தும்
எதுவித ரோகம் வந்தும் இலகிடும் வயது தீர்க்கம்.

37. ஜாதகருக்கு இந்த எழுபது வயதிற்கு முன்னமே மாரகங்கள் நேரிடாதோ என்று கேட்க தவறிடாமல் மூன்று, ஏழு, பிறகு ஒன்பதா வது நீண்ட காலம் சென்று இருபத்து நான்காவது, ஐம்பதாவது ஆகிய இந்த வயதுகளில் நோய் அதிகமாக நேரிடும். எப்படிப்பட்ட நோய் வந்த போதும் அது நிவிர்த்தியாகி ஜாதகர் தீர்க்க ஆயுளை உடையவராக இருப்பார்.

38. மறுஜன்மம் மீலநா டன்னில் மாரனும் வைசியச் சேயாய்
உறைகுவான் செட்டுச் செய்வன் உதித்தவன் ஜனன காலம்
கரியவன் தசையி ருப்புக் கழறுவோ மாண்டு மூன்றும்
உறைந்திடும் திங்கள் நாலும் உறைக்கிறோம் பலனை யாங்கள்.

38. ஜாதகர் தன்னுடைய பின் ஜன்மத்தில் மீலகளுள்ள தேசத் தில் வைசிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். வியாபாரஞ் செய்வார். இவர் பிறந்த காலத்தில் கரியவன் என்ற சனியினுடைய மகா தசையில் இருப்பு மூன்று வருஷங்களும் நான்கு மாதங்களும் ஆகு மென்று சொல்லுகிறோம். இந்தக் காலத்தில் நடக்கும் பலாபலன்களை நாங்கள் சொல்லுகின்றோம்.

39. செலவுக ளதிகம் நேரும் செலவுண்டு தானியஞ் சேதம்
நலமுளோர் விரோத மெய்து மரசர்பால் செல்லு வார்கள்
நிலமதால் பகையு மெய்தும் நேர்பகை சமம தாகும்
பலவினை ஜாத கர்க்குப் பரவிப்பின் நிவிர்த்தி யாகும்

39. செலவுகள் அதிகமாக ஏற்படும். தானியங்கள் செலவாகிவிடும். நஷ்டமாகிவிடும். கெட்டுப்போய்விடும். நல்லவர்கள் விரோதிகளாவதோடு வழக்கிட்டு அரசர்களிடமும் போவார்கள். நிலத்தால் விரோதமும் வழக் கும் ஏற்படும். தன்னுடைய எதிரி தனக்குச் சமானமானவனை விருப்பான். ஜாதகருக்கு அநேக விதமான கெடுதிகள் நேரிட்டுப் பின்னல் நிவிர்த்தியாகி விடும்.

40. எந்தக்கா லத்திலில்லம் எய்துவான் விபரம் சொல்வாய்
பிந்தியு மிருபா னைந்தில் புரப்பனு மில்லம் தானும்
தன்ஜாதி மேலாய் வாழ்வன் சாற்றுவோம் பின்பா கத்தில்
இந்திர னிறைஞ்சு மாதே யியம்பின மொழி குன்றாது.

40. எந்தக் காலத்தில் ஜாதகருக்கு வீடு கிடைக்கும் என்பதைப் பற்றி விவரமாகச் சொல்லுவீர். இருபத்தைந்தாவது வயதில் ஜாதகர் வீட்டை அடைவார். இவர் தன்னுடைய பங்காளியினுடைய அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்திலிருந்து வாழ்வார். மற்றவைகளை அடுத்த பாகத்தில் சொல்லு கிறோம். இந்திரன் வணங்கித் தொழுகின்ற பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 97

சுக்கிரன் புதன்		கேது	
சூரியன் சந்திரன் அங்காரகன்	இராசி சக்கரம்		லக்கினம்
சனி	குரு ராகு		

சதயம் மூன்றும் பாதம் இராகுதசை வருஷம் 4—9—0.

1. கலை[1]குஜன்[2] ரவி[3] சாடி[4] கனகனு[5] ராகு தேளில்[6]
புலவனும்[7] புகரும்[8] மீனம் பின்சிகி[9] நந்தி[10] யாக
மலையினில்[11] காரி[12] புக்க வரும் ஜன்மம் கடக மாகப்
பலனதைச் சொல்லு மெனப் பராசரும் புகலு கின்றார்.

1. சந்திரனும் அங்காரகனும் சூரியனும் கும்பத்திலும், குருவும் ராகுவும் விருச்சிகத்திலும், புதனும் சுக்கிரனும் மீனத்திலும், கேது ரிஷபத்திலும், தனுசில் சனியும், ஜன்ம லக்கினம் கடகமாகவும் இருந்தால் பலா பலன்களைச் சொல்லுவீரென்று கேட்க பராசர மகரிஷி சொல்லுகின்றார்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்மைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடையதாகும்:—மிதுனத்தில் சனியும், கடகத்தில் புதனும், சிம்மத்தில் கேதுவும், விருச்சிகத்தில் அங்காரகனும், மகரத்தில் குருவும், கும்பத்தில் சந்திரனும் சுக்கிரனும் ராகுவும், மீனத்தில் சூரியனும் ஆகும். அங்காரகன் அஸ்தமனத்தில் இருக்கின்றது.

2. இந்தசே யாணும் ஜன்ம மில்லமும் கீழ்மேல் வீதி
தென்வாடை நந்தி மேற்கில் தீபாஞ்சாலி வடமேல் தங்கும்
சந்ததம் அருகர் மீனம் சத்தியும் அதின்கீழ்த் தங்கும்
இந்தநல் லடையா ளத்து லிறங்குவான் கங்கை சேயாய்.

2. பிறந்த இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் திக்கில் தென்னண்டை வாடையில் இருக்கும். யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளின் கோயில் மேற்குத்திக்கிலும் அக்கினி

[1]சந்திரன். [2]அங்காரகன். [3]சூரியன். [4]கும்பம். [5]குரு. [6]விருச்சிகம். [7]புதன். [8]சுக்கிரன். [9]கேது. [10]ரிஷபம். [11]தனுசு. [12]சனி.

யிற் பிறந்த திரௌபதியம்மன் கோயில் வட மேற்குத்திக்கிலும் இருக்கும். சமணருடைய தேவதையின் கோவில் வடக்குத் திக்கிலும், அதற்குக் கிழக்குத்திக்கில் பார்வதியம்மன் கோவிலும் இருக்கும். இவ்விதமான அடையாளங்கள் உள்ள ஊரில் வேளாளர் குலத்தில் ஜாதகர் பிறப்பார்.

3. இத்தகை மாடி சூழ்ந்த இலகிய சிற்றூர் தன்னில்
வித்தக னைந்தாம் ஜன்மம் விளங்கின பால னுக்குப்
பெற்றதாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
சித்தமாய் முன்பின் ஜன்மம் செப்புவோம் கேளும் தாயே.

3. இவ்வித அடையாளங்களுடன்கூடிய மெத்தை வீடுகள் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் ஜாதகர் ஐந்தாவது கர்ப்பத்தில் பிறப்பார். இவரைப் பெற்றெடுத்த தாயார் தகப்பனார் இவர்களுடைய யோகம், மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகம், முன் ஜன்மம், பின் ஜன்மம் ஆகிய இவைகளை எல்லாம் உண்மையாய் சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

4. தந்தையின் துணைபதி னொன்றில் ஆணொன்று கன்னி ரண்டு
சந்ததம் விருத்தி யென்றோம் தங்காவே மற்ற வெல்லாம்
அந்தவன் வேறுய்ச் செல்வன் அறைகிறோம் பின்பால் சேதி
வந்தவன் தந்தை சேதி வரைகிறே மினிமே லாக.

4. ஜாதகரின் தகப்பனருடைய சகோதரங்கள் பதினொன்று பேர்களில் ஒரு ஆண் சகோதரரும் இரண்டு பெண் சகோதரங்களும் நீண்ட ஆயுளை உடையவராகி விருத்தியாவார்கள். மற்ற சகோதரங்கள் எல்லாம் நிலைத்திராமல் இறந்துபோய் விடுவார்கள். இந்த ஒரு சகோதரனும் வேறு குடும்பமாக வாழ்வார். இவருடைய விஷயங்களைப் பின்னால் சொல்லுகின்றோம். இனிமேலாக நாங்கள் ஜாதகரின் தகப்பனருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

5. மாநிறம் உணைச்சல் தேகி மாநிலம் கிருஷி செய்வன்
ஊனமாம் தந்த மென்றோம் உறுதியான் தீர நெஞ்சம்
பான்மையாய்ப் பேச வல்லன் பரஉப காரம் கொஞ்சம்
ஈனரின் உறவு கொள்ளான் னெய்திடும் நாபி சூடு.

5. ஜாதகருடைய தகப்பனர் மாநிறமுள்ள தேகத்தையுடையவர். பெரிய நிலங்களைப் பயிரிடுவார். இவருக்குப் பற்கள் கெட்டுப்போய் அல்லது இல்லாமலும் இருக்கும். வலிவுள்ளவர். தைரியமான மனதையுடையவர். தகுதியாகவும் சாமர்த்தியமாகவும் பேசுகின்ற திறமையையுடையவர். பிறருக்குக் கொஞ்சம் உதவியைச் செய்வார். தாழ்ந்தவர்களின் உறவைக் கொள்ளாதவர். நாபிச்சூடு என்ற நோயையுடையவர்.

6. உரோமங்கள் நீட்சி யில்லான் துவளுப தேசம் கொள்வன்
தீமையை வெளிக்காட் டாதான் செய்நன்றி மறவா னுகும்
தாமத குணத்தா னுகும் சந்தேக மனத்தா னுகும்
பூமியை விருத்தி செய்வன் பிறர்பொரு ளிச்சை வையான்.

6. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய தேகத்தில் நீண்ட மயிரில்லாதவர். குருவினுடைய உபதேசங்களைப் பெற்றுக்கொள்ளுவார். கெடுதியை வெளியே பிறருக்குத் தெரியும்படியாகக் காண்பித்துக்கொள்ளமாட்டார். பிறர் தனக்குச் செய்த உதவியை மறக்காதவராவார். தாமதமானதும் சாந்தமானதுமான குணத்தையுடையவராவார். சந்தேகமான மனத்தை உடையவர். நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார். பிறருடைய சொத்தின்பேரில் ஆசை இல்லாதவர்.

7. பால்பாக்கிய முடைய னுகும் பதறிய வார்த்தை சொல்லான்
சீலவான் அடக்க வார்த்தை சீக்கிர நடையு மாவன்
வேலுடைக் கடவுள் பக்தி விரும்புவன் பணைவர் விருத்தி
காலத்தை அறிந்து ரைப்பன் காசினில் சல்லியம் கொள்ளான்.

7. ஜாதகருடைய தகப்பனுர் பால் பாக்கியம் உடையவராவார். அவசரப்பட்டு நடுங்கும்படியான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். நல்லொழுக்கம் உடையவர். அடக்கமாகவும் சாந்தமாவும் வார்த்தைகளைச் சொல்லுவார். வேகமாக நடக்கக்கூடியவர். வேலையுடைய கடவுளாகிய முருகக் கடவுளின் மேல் பக்தியும் அன்பும் உடையவராவார். பண்ணை நிலம் ஏர் விருத்தியாகும். காலத்திற்குத் தகுந்தாற்போல பேசுவார். பூமியில் கடன் வாங்கமாட்டார்.

8. இந்நெறி யுடையா னுக்கு இருதார மிளையா ளுக்கு
அன்னவ னுதிப்பா னுகும் அறைகிரே மவன்கு ணத்தைச்
சொன்ன சொல்காப்பா னுகும் செய்நன்றி மறவா னுகும்
அன்னிய ருறவு கொள்வன் அதிகம்கல் விகளும் கற்பன்.

8. இவ்விதமான குணங்களையுடைய தகப்பனுருக்கு இரண்டு தாரங்களில் இரண்டாவது மனைவிக்கு இந்த ஜாதகர் பிறப்பவராவார், இவருடைய குணதிசயங்களைச் சொல்லுகிரேம். இவர் தான் சொன்ன வார்த்தைகளைக் காப்பாற்றுபவராவார். பிறர் தனக்குச் செய்த உபகாரத்தை மறக்கமாட்டார். பிறருடைய சினேகத்தை அடைவார். படிப்பை அதிகமாகக் கற்றுக்கொள்பவராவார்.

9. ஊகை வான்நுணுக்கம் தேர்வன் உறுதிவான் சுகபு சிப்பன்
நரகரி கங்க ளுள்ளான் நல்லோர்க்கு நல்ல னுவன்
போகபாக் கியங்க ளுள்ளான் புகழான குடிம்பி யாவன்
தோகையர் மோகம் கொள்வன் சுந்தர முடையனுமே.

9. ஜாதகர் நுட்பமான புத்தியை உடையவர். சூட்சமமானவைகளை அறியும்படியான கூர்மையான புத்தியை உடையவர். உறுதியாக சொல்லக் கூடியவர். வலிவான தேகத்தை உடையவர். சுகமான போஜனத்தைச் சாப்பிடக் கூடியவர். நாகரிகங்களை உடையவராவார். நல்லவர்களுக்கு நல்லவராக விருப்பார். சுகபோகங்களையும் செல்வத்தையும் உடையவர். மேன்மையான கீர்த்தியையுடைய குடும்பஸ்தராவார். ஸ்திரீ ளின் மேல் காம ஆசையை உடையவர். அழகுள்ளவராக விருப்பவராவார்

10. தந்தைநாள் பூமி மேலாய்த் தானவன் சேர்ப்பா னுகும்
கந்தன்தன் அருளு மோங்கும் கரமதில் விஷ்ணு ரேகை
வந்தவர்க் கன்ன மீவன் மருமவான் கோப வானும்
நொந்திடும் பேரைக் காப்பன் நேமியோர்க் குதவி செய்வன்.

10. ஜாதகர் தன்னுடைய தகப்பனுருடைய காலத்திலிருந்த நிலங்களை விட அதிகமான நிலங்களைச் சேர்ப்பவராவார். முருகக்கடவுளின் அருளும் பக்தியும் அதிகப்பட்டுக் கொண்டேவரும். இவருடைய உள்ளங்கையில் விஷ்ணு ரேகை என்ற ஒருவிதமான ரேகை உண்டு. இவர் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். ரகசியமான மனத்தை உடையவர். கோபத்தை உடையவராவார். ஏழைகளையும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்களையும் காப்பாற்றுவார். பூமியிலுள்ளவர்களுக்கு உபகாரங்களைச் செய்பவராவார்.

11. பந்துவும் புகழ வாழ்வன் பலகலை யுணர்வா னுகும்
தன்தனம் கொடுக்கல் வாங்கல் தருமவே லைகளும் செய்வன்
முந்தின துணைகள் தோஷம் விருத்தியாம் பெண்பா லொன்று
அந்தவள் சேதி கேளாய் அவளுமா நிறத்தா ளாகும்.

11. ஜாதகர் தன்னுடைய பந்துக்கள் தன்னைப் புகழும் படியான அந்தஸ்தில் இருந்து வாழ்வார். அநேக சாஸ்திரங்களை யறிந்தவராவார்; தன்னுடைய பணத்தைப் பிறருக்குக் கொடுத்து மறுபடியும் திருப்பிவாங்கிக் கொள்ளுவார், அ.·.தாவது பணத்தைக் கொடுத்து வாங்குந் தொழிலையும் உடையவர். தருமமான காரியங்களையும் செய்வார். இவருக்கு மூத்த சகோதரர்கள் தோஷ முடையவர்களாக விருப்பார்கள். ஒரு சகோதரி நீண்ட ஆயுளை உடையவராக விருப்பாள். இவளுடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்ரேம், கேட்பீராக, இவள் மாநிறமுள்ள தேகத்தை உடையவளாவாள்.

12. சுகமுள வார்த்தை சொல்வள் சோம்பிடாள் காரி யத்தில்
பகையென்று மனத்தில் வையாள் பால்பாக்கிய முடைய ளாகும்
உகமையாய்ப் பேச வல்லாள் உறுதியில் லாதாளாகும்
இகபரன் பத்தி கொள்வள் இடரென்ருேர்க் குதவி செய்வள்.

12. ஜாதகருடைய சகோதரி இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். தான் செய்கின்ற வேலையில் சோம்பல் இல்லாதவளாவாள் தன்னுடைய மனத்தில் யாதொரு பகையையும் குரோதத்தையும் வைத்துக் கொள்ளாமல் இருப்பாள். இவள் பால் பாக்கியம் உடையவளாக விருப்பாள். உபமான உபமேயங்களை உபயோகப்படுத்தி அலங்காரமாகப் பேசுகின்ற சாமர்த்தியத்தை உடையவளாவாள். வலிவான தேகத்தையும் மனத்தையும் உடையவள். கடவுளின்மேல் அன்பும் பக்தியும் உடையவளாவள். கஷ்டத்தை அடைந்திருக்கின்ரேம் என்று சொல்லுகின்றவர்களுக்கு, உபகாரத்தைச் செய்வாள்.

13. முன்கோபம் பித்தச் சூடு மேவிடும் வறுமை காணுள்
தன்வரன் வடபா லாகும் சந்ததி ஆண்பால் ரண்டு
கன்னிகை மூன்று என்றேம் கழறின வைந்தும் தீர்க்கம்
அன்னவள் தீர்க்க ஜீவி ஆளனுக் கினிய ளாகும்.

13. ஜாதகருடைய சகோதரி முன்கோபத்தை உடையவள். பித்தச் சூடான தேகத்தை உடையவள். இவள் கஷ்டங்களேயும் தரித்திரத்தையும் அடைய மாட்டாள். இவளுடைய புருஷன் வடக்குத்திக்கில் இருந்து நேரிடு வார். இவளுக்குக் குழந்தைகளில் ஆண் இரண்டும், பெண் மூன்றும் ஆகும் என்று சொல்லுகின்றேம். சொல்லிய இந்த ஐந்த குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார்கள். இவளும் நீண்ட ஆயுளை உடையவள். தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமாய் இருப்பவளாவாள்.

14. அந்தியில் விதவை யாவள் அறுமுகன் பத்தி பூண்பள்
பிந்திமுன் துணைகள் தோஷம் பேசுவோ மிவளுக் கேதான்
பந்தினர் குற்றம் சொல்லாள் பணிதிக விச்சை யுண்டு
இந்திர னிறைஞ்சு மாதே யியம்புவோம் பின்பால் சேதி.

14. ஜாதகருடைய சகோதரி தன்னுடைய கடைசிக் காலத்தில் விதவையாகி விடுவாள். ஆறு முகங்களேயுடைய முருகக் கடவுளின் மேல் அன்பும் பக்தியும் உடையவளாவள். இவளுக்குப் பின்னுலும் முன்னுலும் பிறந்தவர்கள் தோஷத்தை உடையவர்களாக விருப்பார்கள். சீக்கிரம் இறந்து விடுவார்கள் என்றும் சொல்லுகின்றேம். இவள் பந்துக்களின் மேல் குற்றத்தையும் பழிகளேயும் சொல்ல மாட்டாள். ஆடை ஆபரணங்களின் மேலும் கோயில் வேலைகளிலும் ஆசையை யுடையவளாவள். இந்திரன் வணங்கிப் பூஜை செய்கின்ற பார்வதியம்மையே ! மற்ற விஷயங்களேப் பின்னுல் சொல்லுகிறேம்.

15. உதித்தவன் துணேபின் ஆண்பால் ஓங்காது என்று சொல்வோம்
மதிநுதல் பெண்பா லொன்று வரைகிறேம் தீர்க்க மாக
அதிபதி குணத்தைச் சொல்வேன் மாஞ்சிவப் புடைய ளாகும்
சதியிலா மனத்தா ளாகும் சரசமாய்ப் பேச வல்லாள்.

15. ஜாதகருக்கு இளேய ஆண் சகோதரம் ஓங்கி நீடித்திருக்காது † என்று சொல்லுகின்றேம். சந்திரனேப் போல் அழகான முகத்தை உடைய ஒரு பெண் நீண்ட ஆயுளே உடையவள் என்று சொல்லுகின்றேம். இந்த இளேய சகோதரியின் குணதிசயங்களேப் பற்றிச் சொல்லுகின்றேம். மாமரத்தின் துளிரின் நிறத்தைப் போன்ற ஒரு விதமான சிவப்பு நிறத்தையுடைய தேகத்தை யுடையவளாவள். கெடுதியில்லாத மனத்தையுடையவளாவாள். இன்பமாகவும் ஒழுங்காகவும் பேசுகின்ற சாமர்த்தியத்தை உடையவளாவாள்

† குறிப்பு.—ஆண் சகோதர தோஷம்:—இளேய சகோதர ஸ்தானம் மூன்றும் பாவமாகிய கன்னியாகும். இதைச் சனி அங்காரகன் ராகு இவர்கள் பார்ப்பது தோஷமாகும். மூன்றிற்குடையவராகிய புதன் நீசமாகிப் பெண் கிரகமாகிய சுக்கிரனுடன் கூடித் தன்னுடைய பாவத்தையே பார்க்கின்றுர். ஆகையால் ஆண் சகோதரருக்குத் தோஷமுண்டு. சகோதர காரகனுகிய அங்காரகன் சூரியனுடன் கூடி அஸ்தமடைந்திருக்கின்றுர். ஆகையால் இளேய ஆண் சகோதரருக்கு அதிகத் தோஷம் இருக்கின்றது.

16. தரித்திர மடையா ளாகும் தன்வரன் கீழ்ப்பா லாகும்
திருமக ளொப்ப தாகும் செனித்திடும் பெண்பால் ரண்டு
பெரிதான குடும்பி யாவள் பூவைக்குத் தீர்க்க மெய்தும்
அறந்தனே வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

16. ஜாதகருடைய இளேய சகோதரி தரித்திரத்தை அடைய மாட்டாள். இவளுக்குப் புருஷன் கிழக்குத்திக்கிலிருந்து வருவார். இவள் லக்ஷ்மிக்குச் சமானமானவளாகவிருப்பாள். இவளுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறக்கும். இவள் பெரிய குடும்பஸ்தையாவாள். இவள் நீண்ட ஆயுளே உடையவளாவாள். தருமத்தை வளர்க்கின்ற எங்களுடைய உயிரைப் போன்ற பிரியமான தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

17. அன்னேயின் குணத்தைச் சொல்வேன் அழகுளா ளிருநி றத்தாள்
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பாள் முன்கோ பத்தள்
அன்னேயு மிரண்டு மாகும் அவள்துணே ஆண்பால் மூன்று
கன்னிகை யிரண்டு என்றேம் காதலி யில்லம் உள்ளூர்.

17. ஜாதகருடைய தாயின் குணதிசயங்களேப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் அழகுள்ளவளாக விருப்பாள். இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறம் என்ற நிறத்தை உடைய தேகத்தை யுடையவளாவாள். தான் சொல்லுகின்ற வார்த்தைகளே உண்மையானவை என்றும் மேன்மையானவை என்றும் சொல்லி வாதாடி நிலேக்கச்செய்கின்ற சாமர்த்தியமுடையவளாவாள். இவள் முன்கோபத்தை உடையவள். இவளுக்கு இரண்டு தாயார்கள் உண்டு. இவளுடைய சகோதரர்களில், மூனறு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உண்டு என்று சொல்லுகிறேம். இவளுடைய வீடு உள்ளூரிலேயே இருக்கும்.

18. மாதுலர் வேருய்ச் செல்வர் வளமிலாக் குடும்பி யாவள்
தீதுண்டு யிரண்டா மாண்டில் செப்பினேம் பிணியு மெய்தும்
ஏதுகா ரணத்தால் சொன்னீர் எமத்தின் குற்றத்தாலே
வேதனே திருஷ்டி யாலே விலகிடு மென்று சொல்வோம்.

18. ஜாதகருடைய அம்மான்மார்கள் வெவ்வேறு குடும்பமாகவிருப்பார்கள். ஜாதகரின் தாயார் சிறப்பில்லாததும் செல்வமில்லாததுமான குடும்பஸ்தையாக விருப்பாள். இவளுக்கு இரண்டாவது வருஷத்தில் கெடுதி நேரிடும். ரோகமும் நேரிடும் என்று சொல்லுகிறேம். எந்தக் காரணத்தினுல் இவ்விதமாகச் சொன்னீர் என்று கேட்க, பராசர முனிவர் சொல்லுகின்றுர். மன்மதாவஸ்தையினுலும் கெட்டபார்வையாலும் உபத்திரவம் நேரிட்டு அவை நிவிர்த்தியாகி விடும் என்று சொல்லுகிறேம்.

19. இன்னமும் விபர மாக யியம்புவோம் பின்பா கத்தில்
அன்னையின் பூர்வம் சொல்வேன் அருணைக்கு மேல்பா லாகச்
சின்னஊர் தன்னி லேதான் ஜனித்தன ளிக்கு லத்தில்
தன்சுத ரதிக முண்டாய்த் தரணியில் தோஷ மின்றி ;

19. ஜாதகரின் தாயாருடைய விஷயங்களைப் பற்றி விபரமாகப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்திற்கு மேற்குத்திக்கில் ஒரு சிறிய கிராமத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலத்திலேயே ஒரு பெண்ணாகப் பிறந்து அதிக குழந்தைகளை உடையவளாகிப் பூமியில் யாதொரு தோஷமும் பாபமும் இல்லாமல் வாழ்ந்து ;

20. காலன்தன் பதிக்குப் புக்கிக் கஞ்சனால் வரையப் பட்டுச்
சீலமா மிக்கு லத்தில் ஜனித்தவ ளிவளே யென்றோம்
ஆலவே வறுமை காணுள் இவள்மறு பாரி யாவள்
காரணத்தைச் சொல்லு மென்னக் கூறுவார் முனிவர் தாமே.

20. இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு நல்லொழுக்கமுள்ள இந்தக் குலத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம். இவள் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டாள். இரண்டாவது மனைவியாக நேரிடுவாள், இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, பராசர முனிவர் சொல்லுகின்றார்.

21. முன்ஜன்மம் வரன்சொல் லுக்கு மேன்மையா யுரைத்த தாலும்
துன்னிய விரதம் தன்னைத் தோகையும் குற்றம் செய்தாள்
தன்வரன் தாயின் சாபம் சார்ந்தது இவளுக் கேதான்
கன்னிகை யிரண்டா மாதாய்க் கலந்தன ளென்று சொல்வோம்.

21. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன் ஜன்மத்தில் தன்னுடைய புருஷனுடைய வார்த்தைக்கு அதிகமாக அத்து மீறிச் சொன்னதாலும், சிறந்த விரதங்களை இவள் பங்கத்துடனும் தப்பிதமாகவும் செய்ததாலும் இவளுடைய புருஷனின் தாயாருடைய சாபம் இவளுக்கு வந்து சம்பவித்தது. ஆகையால் இரண்டாவது மனைவியாக வந்து நேரிட்டாள் என்று சொல்லுகிறோம்.

22. மறுஜன்மம் தவளை உத்தரம் வருவளா மிக்குலத்தில்
குறைவிலாக் குடும்பி யாவள் கூறுவோம் தந்தை பூர்வம்
திருகாஞ்சி தன்னி லேதான் ஜனித்தனன் வைசியச் சேயாய்ப்
பெருமையாய்ச் செட்டுச் செய்து புத்திரர் மனைவி யுண்டாய் ;

22. ஜாதகருடைய தாயார் தன்னுடைய அடுத்த ஜன்மத்தில் தவளை என்ற க்ஷேத்திரத்திற்கு வடக்கில் இந்த ஜாதியிலேயே பெண் குழந்தையாகப் பிறப்பாள். கஷ்டங்களில்லாத, அஃதாவது சௌக்கியங்களையுடைய குடும்பஸ்தையாக விருப்பாள். இனிமேல் ஜாதகருடைய தகப்பனாரின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். அழகிய காஞ்சீபுரத்தில் வைசிய குலத்தில் இவர் ஆண் குழந்தையாய்ப் பிறந்தார். இவர் பெருமையுடன் வியாபாரத்தைச் செய்து மனைவி மக்கள் இவர்களை உடையவராகி ;

23. வினையதைப் புகலக் கேண்மோ வேதியன் மனைவி தன்பால்
கனமுள பொருளும் பெற்றுக் கள்ளமா யீயா விட்டான்
சினங்கொண்டு மறைமா தும்தான் செப்புவான் மனவெ றுப்பால்
துணைவன்போல் வார்த்தை சொல்லிச் செய்பொன்னைக் கொண்ட [பாவி ;

23. வாழுகின்ற காலத்தில் ஜாதகருடைய தகப்பனாருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தை சொல்லுகின்றேன். கேட்பீராக, இவர் ஒரு பிராமணருடைய மனைவியினிடத்தில் இருந்து அதிகமான பணத்தைப் பெற்றுக் கொண்டு திருட்டுத் தனமாய்க் கொடுக்காமல் ஏமாற்றி விட்டார். அதன் மேல் அந்தப் பிராமண ஸ்திரீ கோபத்தை உடையவளாகி மனத்தில் வெறுப்புடன் சாபத்தைக் கொடுக்கின்றாள். என்னுடன் கூடப்பிறந்த சகோதரனைப்போல வார்த்தைகளைச் சொல்லி என்னுடைய பணத்தை வாங்கிக் கொண்ட பாவியாகிய நீ ;

24. விகாதமாய் வார்த்தை சொன்னாய் விளங்காது குடும்பம் தானும்
தகமையாய்ப் பின்ஜன் மத்தில் சத்திமா ரிருவ ராயும்
அகமது விளங்கா தாயும் அவனியில் வாழ்வா யென்று
முகவெறி யாகச் சொன்னாள் மேவிற்று அந்தத் தோஷம்.

24. எனக்கு விரோதமானதும் கெடுதியை விளைவிக்கக் கூடியதுமான வார்த்தைகளைச் சொல்லி விட்டாய். அதனால் உன்னுடைய குடும்பம் ஓங்கி வளராமல் இருக்கக் கடவது. உனக்கு மறு ஜன்மத்தில் இந்தப்பாவத்திற்குத் தகுந்தபடி இரண்டு மனைவிமார்கள் நேரிடக்கடவது. உன்னுடைய வீடு விளங்காமல் போகக் கடவது. இவ்விதமாக விருந்து நீ வாழக் கடவது, என்று முகத்தில் கோபத்தையுடையவளாகிச் சொன்னாள். இந்தத் தோஷமானது இவரை வந்து அணுகிற்று.

25. தந்தையின் சாபம் ஒன்று சார்ந்தது யிவனுக் கேதான்
அந்திய காலம் தன்னில் அவன்தொழில் குறைவு நேர்ந்து
வந்திடும் மனைவி மாண்டு மனமது சஞ்ச லத்தால்
அந்தகன் நகரைச் சேர்ந்து அயனுமே வரையப் பட்டு ;

25. இவருடைய தகப்பனாரின் சாபங்கூட ஒன்று வந்து இவரை அணுகிற்று. இவருக்குக் கடைசிக் காலத்தில் தன்னுடைய வேலையில் பங்கம் அல்லது குறைவு நேரிட்டு, மனைவியும் இறந்து, மனத்தில் கஷ்டத்தை உடையவராகி இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனால் பிமரலிபியுடன் எழுதப்பட்டு ;

26. வந்தவ னிவனே யென்றோம் மனைவியு மிரண்டு நேரும்
முந்திய மனைமா ண்டு மே விடுமறு மனைதான் நேரும்
தன்சுதர் முதலில் தோன்றும் சாராவே நசிக்கு மென்றோம்
பிந்தின ஜன்மம் சொல்வேன் பிருதிவி இக்கு லத்தில் ;

26. ஜாதகனுடைய தகப்பனுர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகிறேம். இவருக்கு இரண்டு மனைவிமார்கள் உண்டாவார்கள். முதல் மனைவி இறந்து போய் இரண்டாவது மனைவி வந்து நேரிடுவாள். இவருக்கு முதலில் பிறக்கும் குழந்தைகள் பிழைத்திராமல் நசித்துப் போய்விடும் என்று சொல்லுகிறேம். இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். பிருதிவி ஸ்தலமாகிய காஞ்சீபுரத்தில் இந்த ஜன்மத்திய குலத்தில் ;

27. வருவனும் செட்டுச் செய்வன் மாரன்தன் மணத்தின் காலம்
இருஒன்ப தாண்டு தன்னி லெய்திடும் பாரி தானும்
திருமக ளன்னை வர்க்கம் சேயிழை மாஞ்சி வப்பள்
பெரும்புத்தி சமயோ கத்தாள் பூமியில் வறுமை காணுள்

27. ஜாதகருடைய தகப்பனுர் ஆண் குழந்தையாக வந்து பிறப்பார். வியாபாரஞ் செய்வார். ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவருக்குப் பதினெட்டாவது வயதில் மனைவி வந்து நேரிடுவாள். இவள் தாயாருடைய பந்துவிலிருந்து வருவாள். இவள் மாமரத்தின் துளிரின் நிறமாகிய ஒருவிதமான சிகப்பு நிறத்தையுடைய தேகத்தை யுடையவள். பெரிய புத்தியை உடையவள். நடுத்தரமான யோகத்தை யுடையவள். பூமியில் இவளுக்குக் கஷ்டங்களும் தரித்திரமும் கிடையா.

குறிப்பு.—விவாக விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷு 17–0–0 முதல் ஷு 18–0–0 முடியும் வரையிலும் குரு தசையில் சந்திர புக்தி அங்காரக புக்தி இவைநடக்கின்றன. குரு ஒன்பதிற்குடையவராகிப் போக காரகனுகிய இராகுவுடன் கூடி லக்கினத்தைப் பார்க்கின்ருர். ஆகையால் ஜாதகபாரிஜாதம் பதினைன்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் குரு தன் தசையில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்கும் அமைப்பு உள்ளவராகின்ருர். அங்காரகன் பத்திற்குடையவராய் இரண்டிற்குடையவரான சூரியனுடனும் லக்கினுதிபதியாகிய சந்திரனுடம் கூடி இரண்டைப் பார்ப்பதால் மேற்கண்ட இருபத்தொன்பதாவது சுலோகம் பிரகாரம் அங்காரகன் தனது புக்தியில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்கச் சந்திரனைவிட அதிகமான அமைப்பு உள்ளவராக விருக்கின்ருர்.

28. அன்னம்போல் சாய லொக்கும் அழகுளாள் சுதர்கள் காணுள்
பின்மனை ஒன்று வாய்க்கும் புத்திரர் ஆண்பா லொன்று
கன்னிகை மூன்று தீர்க்கம் கௌசிகர் கேட்க லுற்ருர்
என்னகா ரணத்தி னுலே இருபாரி விவரம் சொல்வாய்.

28. ஜாதகருடைய மனைவி அன்னப்பட்சியைப் போல ரூபத்தை உடையவள். அழகாகவிருப்பாள். இவளுக்குக் குழந்தைகள் கிடையா. இவள் வந்த பிறகு ஜாதகருக்கு இன்னொரு மனைவி வந்து நேரிடுவாள். ஜாதகருக்கு ஓர் ஆண் குழந்தையும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். கௌசிக முனிவர் கேட்கின்ருர். எவ்விதமான காரணத்தினுல் இவருக்கு இரண்டு மனைவிகள் நேரிடுவார்கள் என்று சொன்னீர் ? அதனுடைய விவரத்தைச் சொல்லுவீர்.

29. சந்திர னிரவி[1] கூடிச் சாடி[2]யி லிருப்ப தாலே
பாரியு மிரண்டு மாகும் பாவையர் தீர்க்க மெய்தும்
இராகுவும் ஐந்தில் நிற்க நற்சுதர் தோஷ மெய்தும்
வீருது முதல்ம னைக்கு வித்தகன் பூர்வம் தன்னில்
பாரிய வினைகள் செய்தான் பகர்ந்தது அந்தத் தோஷம்.

29. சந்திரனும் சூரியனும் ஒன்ருய்க் கூடிக்கொண்டு கும்பத்தில் இருப்பதால் ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள்† ஏற்படுவார்கள். இவ்விருவரும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார்கள். இராகு ஐந்தாவது பாவத்தில் இருப்பதால் சந்ததிகளுக்குத் தோஷமுண்டாகும். முதல் மனைவிக்குக் குழந்தைகள் பிறக்கா. இவ்விதமாக இவருடைய முன் ஜன்மத்தின் பலன்கள் நேரிடும்.

குறிப்பு.—இப்பாடலில் ஓரடி மிகுந்திருக்கிறது.

† குறிப்பு.—மனைவி விஷயம் :—முதல் மனைவி ஸ்தானமாகிய ஏழிற்குடைய சனி லக்கினத்திற்கு ஆறிலும் இரண்டிற்குடைய சூரியன் எட்டிலும் மறைந்திருப்பதாலும், சனி உபயராசியிலிருப்பதாலும், லக்கினுதிபதியும் இரண்டிற்குடைய சூரியனும் எட்டில் இருப்பதாலும், ஐந்திற்குடையவரான அங்காரகன் சூரியர் சந்திரர்களுடன் கூடி இருப்பதாலும் ஐந்திற்குடையவரான அங்காரகனைச் சனி பார்த்திருப்பதாலும் சந்தான விஷயமாக ஜாதகருக்கு இரண்டு விவாகங்கள் நேரிட அமைப்பு இருக்கின்றது. இரண்டாந்தார பாவமாகிய ஒன்பதிற்குடைய குரு புத்திர ஸ்தானத்தில் இராகுவுடன் இருந்துகொண்டு ஒன்பதையும் லக்கினத்தையும் பார்ப்பதாலும் இரண்டாந் தாரத்தைக் கொடுக்க அமைப்பு இருக்கின்றது. சனி உபயத்தில் இருப்பதைப் பற்றி ஜாதகாலங்காரம் ஏழாம்பாவம் 648-ஆவது பாடலையும், ஐந்தாம் பாவம் 590ஆ-வது பாடலையும், குரு ஐந்தில் இருப்பதைப் பற்றியும், ஐந்திற் குடையவர் எட்டில் இருப்பதைப்பற்றியும் 600-ஆவது பாடலையும், ஏழிற் குடைய சனிக்கும் ஐந்திற்குடைய அங்காரகனுக்கும் ஒரு விதமான சம்மந்தம் இருப்பதைப்பற்றி 596-ஆவது பாடலையும் பார்த்து அவைகளிலிருந்தும் ஊகிக்கவேண்டும்.

30. முன்வினை சொல்லு மென்ன முக்கூடல் தன்னி லேதான்
முன்குலம் தனிலு தித்து முயர்வான குடும்பி யாகித்
தன்னில்லம் நாகம் கொன்ருன் தவசிகட் கிடைஞ்சல் செய்தான்
மன்னர்பால் கட்டு வார்த்தை வகுத்தன னிவனே யென்றேம்.

30. ஜாதகருடைய முன் ஜன்மத்திய பாபத்தைப்பற்றிச் சொல்லுவீர் என்று கேட்க, சொல்லுகின்ருர். திருமுக்கூடல் என்ற ஊரில் பிராமணர் குலத்தில் இவர் ஆண் குழந்தையாகப் பிறந்து மேன்மையான

[1] சூரியன் [2] கும்பம்

குடும்பஸ்தராகி வாழ்கின்ற காலத்தில் தன்னுடைய வீட்டில் வசித்துக் கொண்டிருந்தஒரு மனைப்பாம்பைக் கொன்றுவிட்டார். மேலும் தவத்தைச் செய்கின்றவர்களுக்கு இடையூறு செய்தார். மேலும் இவர் அரசாங்கத்தார் முன்பாகப் பொய்யானதும், புனைந்ததுமான வார்த்தைகளைச் சொன்னார் என்று சொல்லுகிறோம்.

31. சொல்லினால் சிலர்க்குத் தோஷம் தோன்றியே சாபம் சொல்வார்
பின்வரும் ஜன்மம் தன்னில் புத்திர தோஷ மாயும்
கன்னிகை யிரண்டு மாயும் காளைகள் துணைஆ னின்றி
இன்னவார் சொல்லி யேதா னேகினர் ஏழை தாமும்.

31. ஜாதகர் இவ்விதமாகச் சொல்லவே அதனால் சிலருக்குக் கெடுதி நேரிட்டு அவர்கள் சாபத்தைக் கொடுக்கின்றார்கள். நீ உன்னுடைய மறு ஜன்மத்தில் புத்திர தோஷத்தையுடையவராகியும், இரண்டு மனைவிகளை உடையவராகியும், ஆண் சகோதரங்கள் இல்லாதவராகியும், இருக்கக்கடவது என்று சாபங்கொடுத்துவிட்டு இந்த ஏழை ஜனங்கள் போய் விட்டார்கள்,

32. அந்திய காலம் தன்னில் அவன்சுதர் பகையு மாகி
அந்தகன் நகர டைந்து அருநர கினிலே புக்கி
வந்தவ னிவனே யென்றோம் மனைவியு மிரண்டு மாகும்
சந்ததம் புத்திர தோஷம் சார்ந்திடு மென்று சொல்வோம்.

32. ஜாதகர் தன்னுடைய கடைசிக் காலத்தில் தன்னுடைய பிள்ளைகளும் தனக்கு விரோதிகளாகிப் பிறகு இறந்து எமனுடைய பட்டணத்திற்குப் போய் கொடிய நகரத்திலிருந்து பிறகு இந்த ஜன்மத்தில் இவர் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். ஆகையால் இவருக்கு இரண்டு மனைவிகள் நேரிடுவார்கள். இவருக்குச் சந்ததி தோஷம் உண்டாகும் என்று சொல்லுகிறோம்.

33. மறுமனை எந்தக் காலம் வந்திடும் விவரம் சொல்வாய்ப்
பெருமையாய் முப்பா னேழில் பேதையும் வருவா ளாகும்
உறைந்திடும் சுதர்கள் தாமும் உரைத்தது தப்பா தாகும்
மறைக்குல முதித்தோன் தானும் வரநதி குலமு திக்கும் ;

33. ஜாதகருக்கு எந்த வயதில் இரண்டாவது தாரம் வந்து சம்பவிக்கும் என்ற விவரத்தைச் சொல்லுவீராக. மேன்மையாக முப்பத்தேழாவது வயதில் † இரண்டாவது மனைவி வந்து நேரிடுவாள். சில குழந்தைகள் இறந்து போய் விடும். நாங்கள் சொல்லியது தவறாமல் நடக்கும். முன் ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறந்தவராகிய இந்த ஜாதகர் இந்த ஜன்மத்தில் கங்கைகுலமாகிய வேளாளர் ஜாதியில் பிறக்கும் ;

† குறிப்பு.—இரண்டாவது மனைவி :— ஜாதகருக்கு வயது ஷூ 36-0-0 முதல் ஷூ 37-0-0 முடியும் வரையினும் சனி தசையில் ராகு புக்தி நடக்கின்றது. 29-ஆவது பாடலின்கீழ் வியாக்கியானத்திற் சொன்ன பிரகாரம்

சனி உபயராசியில் இருப்பதால் ஜாதகாலங்காரம் 648-ஆவது பாடல் பிரகாரம் முதல் மனைவியின் சாவில்லாமலே இரண்டாவது மனைவியைக் கொடுக்கச் சனிக்குத் தன் தசையில் அமைப்பு ஏற்படுகின்றது. இரண்டாந்தாரத்திற்கு அதிபதி ஒன்பதாம் பாவத்திற்குரிய குரு ஆகும். இவருடன் ராகு சம்மந்தப்பட்டிருப்பதால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் குருவுடைய பலனை ராகு கொடுக்க அதிகாரம் பெற்றுக்கொண்டு ராகு தன் புக்தியில் இரண்டாவது தாரத்தைக் கொடுக்கும் அமைப்பை அடைகிறார்.

34. காரணம் யாது என்னக் காளையு முன்ஜன் மத்தில்
கூறுமல் மறைகள் தம்மைக் குமரனும் வாழ்ந்த தாலே
பாரினி லிக்கு லத்தில் பிறந்தன னென்று சொல்வோம்
தீரமா யீவனின் யோகம் செப்புவோம் தாயே கேளும்.

34. காரணம் என்ன என்று கேட்க, சொல்லுகின்றார். ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் வேதங்களை ஓதாமல் வாழ்ந்ததால் பூமியில் இந்தக்குலத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகிறோம். இனிமேல் இவருடைய யோகங்களைப்பற்றித் தைரியமாய்ச் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே ! கேட்பீராக.

35. வறுமையைப் போதும் காணன் மாநிலம் விருத்தி செய்வன்
பெறுமவர் நேசம் கொள்வன் புகழான குடும்பி யாவன்
அறுமுக னருளு மோங்கும் அடிமையா ளதிகம் சேர்ப்பன்
இருஇல்லம் செய்வா னுகும் இராசபூ சிதனு மாவன்.

35. ஜாதகர் எப்போதும் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அனுபவிக்கமாட்டார். பெரிய நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி செய்வார். பெரிய மனுஷாளுடைய சினேகத்தை அடைவார். கீர்த்தியுள்ள சிறந்த குடும்பஸ்தராவார். ஆறு முகங்களையுடைய முருகக் கடவுளினுடைய அருளும் கிருபையும் அதிகரிக்கும். அடிமை ஆட்களை அதிகமாகச் சேர்த்து வைப்பார். இரண்டு வீடுகளைக் கட்டுவார். அரசர்களால் போற்றப்படுபவராவார்.

36. இருபதா மாண்டி லேதான் ஏழில்கன்னி மாதம் தன்னில்
உரைக்கிறோம் தந்தை கண்டம் உயர்முப்ப தாண்டு தன்னில்
பெருஆடி மாதம் தன்னில் பேசுவோ மன்னை கண்டம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

36. ஜாதகருக்கு இருபதாவது † வயதில் புரட்டாசி மாதத்தில் இவருடைய தகப்பனார் இறந்துவிடுவார் என்று சொல்லுகிறோம். முப்பதாவது வயதில் ‡ ஆடி மாதத்தில் ஜாதகருடைய தாயார் இறந்து போய்விடுவாள். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

† குறிப்பு.—(1) தகப்பனார் மரணம் :—ஜாதகருக்கு வயது ஷூ 19-0-0 முதல் ஷூ 20-0-0 முடிவும்வரையினும் குரு தசையில் இராகு புக்தி நடக்கின்றது. பிதுர் லக்கினம் ஒன்பதாமிடமாகிய மீனம் ஆகும். மீன

லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றூர்கள். ஒரு பாவாதிபதியே தன்னுடைய தசாபுக்தி காலங்களில் அந்தப் பாவத்திற்குடையவருக்கு மாரகத்தைக் கொடுத்து விடுவார் என்று இதர நாடிகளிலுங்கூட சொல்லி இருக்கின்றது. இது விஷயமாக 82-ஆவது ஜாதகம் 24-ஆவது பாடலின்கீழ் கொடுத்துள்ள வியாக்கியானத்தையும் படிக்கவும். குரு கடகத்திற்குப் பிதுர்பாவாதிபதியாகிச் சந்திரனுக்குக் கர்ம ஸ்தானத்தில் ராகுவுடன் கூடி இருப்பதால் பிதாவுக்கு மாரகஞ் செய்யக் குருவுக்கு அமைப்பு இருக்கின்றது. ராகு பிதுர் லக்கினுதிபதியான குருவுடன் கூடிச் சந்திரனுக்குக் கர்ம ஸ்தானத்தில் இருப்பதால் ராகு தன்னுடைய புக்தியில் பிதாவுக்கு மாரகஞ் செய்யும் அமைப்பை ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல், ஜாதக பாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 60-ஆவது சுலோகம் இவைகளின் பிரகாரமும் உடையவராகின்றூர்.

‡ (2) **தாயார் மரண விஷயம்** —ஜாதகருக்கு வயது ஷு 29-0-0 முதல் ஷு 30-0-0 முடியும்வரையிலும் சனி தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. மாதுர் லக்கினம் நான்காவது பாவமாகிய துலாமாகும். துலா லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சூரியனும் குருவும் மாரகாதிபதிகள் ஆகின்றூர்கள். சனி மாரகாதிபதியாகிய குருவினுடைய வீட்டில் துலாத்திற்கு மூன்ருவதான மாரக வீட்டில் இருந்து கொண்டு மாதுருகாரகனுகிய சந்திரனைப் பார்க்கின்றூர். ஆகையால் ஜாதக சந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் சனி தன் தசையில் மாதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகவிருக்கின்றூர். சுக்கிரன் துலாத்திற்கு லக்கின அஷ்டமாதிபதியாகி மாரகாதிபதியாகிய குரு வீட்டில் இருப்பதுடன் மாதுரு பாவாதிபதியாகவே இருக்கின்றூர். ஆகையால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகம், துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல், 82-ஆவது நம்பர் ஜாதகம் 24-ஆவது பாடலின்கீழ் கொடுத்துள்ள வியாக்கியானம் ஆகிய இவைகளின் பிரகாரம் சுக்கிரன் தன்னுடைய புக்தியில் மாதாவுக்கு மரணத்தைக் கொடுக்கும் அமைப்பை உடையவராகின்றூர்.

37. அறுபது ஒன்ப தாண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
திருமக னுடலம் ஏகும் செப்புவோம் பின் ஜன் மத்தைக்
கரியூரில் பிரம்ம சேய்க் கலப்பனு மிந்தப் பாலன்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

37. அறுபத்தொன்பதாவது வயதில் † ஐப்பசி மாதத்தில் ஜாதகர் இறந்து இவருடைய தேகம் மறைந்துபோய்விடும். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். இவர் கரூரில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். பெரிய வயிற்றையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்தப் புண்ணியவதியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

† **குறிப்பு.—ஜாதகர் மாரகம் :**—ஜாதகருக்கு வயது ஷு 68 முடிந்து 9-ஆவது வயதில் ஐப்பசி மாத காலத்தில் சுக்கிர தசையில் சந்திர புக்தி

நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சுக்கிரன் சனி சூரியன் புதன் இவர்கள் மாரகராகின்றூர்கள். சுக்கிரன் உச்சமாகி மாரகாதிபதியாகிய புதனுடன் கூடி இருக்கின்றூர். ஆகையால் சுக்கிரன் தன் தசையில் மாரகஞ்செய்யும் அமைப்புடையவராகின்றூர். சந்திரன் லக்கினுதிபதியாகி மாரகாதிபதியாகிய சூரியனுடன் கூடி எட்டில் பலவீனமாகி இருக்கின்றூர். லக்கினுதிபதியாகிய சந்திரனைவிடச் சனி இங்கு வலிவாயிருக்கின்றூர். ஆகையால் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகம், துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல், ஜாதகபாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 57-ஆவது சுலோகம், 82-ஆவது நெம்பர் ஜாதகம் 24-ஆவது பாடலின் கீழ் கொடுத்துள்ள வியாக்கியானம் இவைகளின் பிரகாரம் சந்திரன் தன்னுடைய புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகின்றூர்.

38. பாலகன் ஜனிக்கும் காலே பணிதசை ஆண்டு நாலும்
சாலவே திங்க ளொன்பான் சாற்றுவோம் பலனை யாங்கள்
பாலகன் தனக்கு ரோகம் பருகி பின் நிவிர்த்தி யாகும்
கோலமாய்த் துணைவர் விருத்தி குறித்தனம் சுபங்கள் தாமே.

38. ஜாதகர் பிறந்த போது இராகு மகாதசை இருப்பு நான்கு வருஷங்களும் ஒன்பது மாதங்களும் ஆகும். இந்தக் காலத்தில் நடக்கும் பலாபலன்களை நாங்கள் சொல்லுகின்றேம். ஜாதகருக்கு நோய் வந்து பின்னுல் நீங்கிவிடும். சகோதரர்கள் உண்டாவார்கள். சுபகாரியங்கள் நடைபெறும் என்று சொல்லுகின்றேம்.

39. அன்னையின் துணைவர் நோயும் ஆவுகள் சேத மெய்தும்
தந்தைக்குப் பிணியு மெய்தும் சாந்தமாம் பூமி சேர்க்கை
இன்னமும் விவர மாக யியம்புவோம் இரண்டி லேதான்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

39. ஜாதகரின் தாயாருடைய சகோதரர்களுக்கு ரோகமும், பசுக்கள் நஷ்டமும் உண்டாகும். ஜாதகருடைய தகப்பனருக்கு நோய் உண்டாகி அது சாந்தமுமாகிவிடும். நிலங்கள் வந்து சேரும். இன்னமும் மற்ற விஷயங்களை விவரமாக இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறேம். மேன்மையானதும், சிறந்ததுமான யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகம் 98

1. பிரை[1]சாடி[2] ராகு மேடம் பொன்[3]நந்தி[4] கேது கோலாம்
தரைமகன்[6] புகர்[7]பான்[8] புந்தி[9] தங்கிய சியம்[10] தன்னில்
கரியவன்[11] கன்னி யாகக் கடகமும் ஜன்ம மாக
உரைகுவீர் பலனை யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

	ராகு	குரு	
சந்திரன்	இராசி சக்கரம்		லக்கினம்
			சூரியன் அங்காரகன் புதன் சுக்கிரன்
		கேது	சனி

அவிட்டம் 4-ஆம் பாகம்.
அங்காரகதசை இரு 0—5—0.

1. சந்திரன் கும்பத்திலும், ராகு மேஷத்திலும், குரு ரிஷபத்திலும், கேது துலாத்திலும், அங்காரகன் சுக்கிரன், சூரியன், புதன் சிம்மத்திலும், சனி கன்னியிலும், ஜன்ம லக்கினம் கடகமாகவும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று உத்தமியாகிய பார்வதியம்மையார் கேட்கின்றார்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் புதனும் குருவும் ராகுவும், மிதுனத்தில் சனியும், கடகத்தில் சூரியனும், சிம்மத்தில் அங்காரகனும், துலாத்தில் கேதுவும், விருச்சிகத்தில் சந்திரனும், தனுசில் சுக்கிரனும் ஆகும். அங்காரகனும் புதனும் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்கள்.

2. அத்திரி சொல்லு கின்றார் ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன் விளங்கிடுந் தென்பால் வாசல்
சுத்தமாய்க் கீழ்மேல் வீதி தென்திசை காளி வாசம்
அத்திமா முகனு மேற்கில் அருகினில நதியு முண்டு.

[1] சந்திரன் [2] கும்பம் [3] குரு [4] ரிஷபம்
[5] துலாம் [6] அங்காரகன் [7] சுக்கிரன் [8] சூரியன்
[9] புதன் [10] சிம்மம் [11] சனி

2. அத்திரி மகரிஷி சொல்லுகின்றார். ஜனனமான குழந்தை ஆண் குழந்தையாகும். ஜாதகர் பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றேன். இந்த வீடு கிழக்கு-மேற்குத் தெருவில் தெற்குத் திக்கில் வாயிற்படியை உடைய தாகும். தெற்குத் திக்கில் காளியம்மன் கோயில் இருக்கும். யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளுடைய கோவில் மேற்குத் திக்கில் இருக்கும். சமீபத்தில் ஓர் ஆறும் உண்டு.

3. வடமேல்பால் அனுமான் மாரி மருவிடுஞ் சிற்றூர் தன்னில்
இடமது கூரை யாகும் இவ்வகை அடையா ளத்துள்
மடமயில் வடுக ளுகும் மாரனுங் கங்கை வமிசம்
அடைவுட னிந்தப் பாலன் அருளுவானென்று சொல்வோம்.

3. வடமேற்குத் திக்கில் அனுமாருடைய கோயிலும், மாரியம்மன் கோயிலும் இருக்கும். பிறந்த ஊர் சிறிய கிராமமாகும். வீடு கூரைவீடாக விருக்கும். இவ்விதமான அடையாளங்கள் உள்ளவிடத்தில் கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் தெலுங்கராக இந்த ஜாதகர் பிறப்பார் என்று சொல்லுகிறோம்.

4. தந்தையோ கங்கை வமிசந் தன்துணே எழுவர் தோன்றுஞ்
சந்ததம் ஆண்பால் மூன்று தையலு மொருத்தி தீர்க்கம்
விந்தையாய்த் தந்தை சேதி விளம்புவோ மாநி றத்தன்
நிந்தையு முடைய னுகும் நேமியில் கிருஷி செய்வன்.

4. ஜாதகருடைய தகப்பனார் வேளாளர் குலத்திற் பிறந்தவராவார். இவருடன் கூடப்பிறந்தவர்கள் எழுபேர் ஆவார்கள். இவர்களில் மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் நீண்ட ஆயுளை உடையவர்கள் ஆவார்கள். ஜாதகரின் தகப்பனாருடைய விஷயங்களை ஆச்சரியமாகச் சொல்லுகின்றோம். இவர் மாநிறமுள்ள தேகத்தை உடையவர். இவர் அபவாதம், மானக்கேடு இவைகளை உடையவர். நிலங்களைப் பயிரிடும் விவசாயத் தொழிலை உடையவராவார்.

5. பூரமுந் தேளின் ராசி பிறப்பனுங் கல்வி மானும்
ஆறுமாமுகத்தோன் பக்தி யவனுமே கொள்வா னுகுஞ்
சீரிய குணங்காட் டாதான் சிறுத்தவர்க் குதவி செய்வன்
காரிழை மோகனுவன் கடுநடை பகல்புசிப்பன்.

5. ஜாதகருடைய தகப்பனார் விருச்சிக ராசியில் பூர நட்சத்திரத்தில் பிறந்திருப்பார். இவர் வாசித்தவராவார். ஆறு பெரிய முகங்களை உடைய முருகக்கடவுளின்மேல் அன்பும் பக்தியும் உடையவராவார். கோப குணத்தைக் காட்டிக்கொள்ளமாட்டார். ஏழைகளுக்கும் நொந்து போனவர்களுக்கும் உபகாரஞ்செய்வார். ஸ்திரீகளின் பேரில் காம ஆசையை உடையவர். நடைச்சுருக்கு, அஃதாவது மெதுவான நடையை உடையவர். மத்தியான்னத்திற் சாப்பிடுவார்.

6. அன்னிய தேசந் தன்னில் அவன்சில நாள்கள் வாசந்
தன்மனங் கபடமிலான் சாந்தவான் வறுமை காணுன்
பின்னமில் லாத தேகன் பேதையும் பகையு மாகும்
அன்னவன் பீஷ்ம முள்ளான் அயலார்பொன் னிச்சை யில்லான்.

6. ஜாதகருடைய தகப்பனுர் வெளிதேசத்தில் கொஞ்சகாலம் வாசஞ் செய்வார். இவர் தன்னுடைய மனத்தில் கள்ளம், கவடு, வஞ்சனை இவைகள் இல்லாதவர். சாந்தமான குணத்தை உடையவர். கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாதவர். அவயவக் குறைவு ஒன்றும் இல்லாதவர், இவருக்கு மனைவி விரோதியாக விருப்பாள். இவர் பார்க்க பயங்கரமாக விருப்பார். பிறருடைய பணத்தில் ஆசையில்லாதவராவார்.

7. சொல்லிய குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
வல்லவன் குணத்தைச் சொல்வேன் வாக்கது சுத்த முள்ளான்
நல்லவ ஞகி வாழ்வன் நற்புத்தி தைரி யத்தன்
அல்லலென் றோரைக் காப்பன் அதிகாரி நேசங் கொள்வன்.

7. இங்குச் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் சுத்தமான வாக்கை உடையவர். சுத்தமான நல்ல வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். நல்லவராகவிருந்து வாழ்வார். நல்ல புத்தியை உடையவர். தைரியமுடையவர். கஷ்டத்தை அடைந்திருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களைக் காப்பாற்றுவார். அதிகாரம் உள்ளவர்களுடைய சிநேகத்தை உடையவராவார்.

8. பலவிதச் செட்டுச் செய்வன் பாருகள திகஞ் சேர்ப்பன்
தலமது தீர்த்தந் தோய்வன் சகடுவா கனமு முள்ளான்
விலைமாதர் மோகங் கொள்வன் வித்தையு முடைய னுகும்
கலகத்திற் கிடங்கொ டாதான் கரமதில் கமல ரேகை.

8. ஜாதகர் அநேக விதமான வியாபாரங்களைச் செய்வார். அநேக நிலங்களைச் சேர்த்து வைப்பார். புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போய் நல்ல தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார். வண்டி, முதலிய வாகனங்களை உடையவராவார். போகஸ்திரீகளின் மேல் காம ஆசையை உடையவர். படிப்பு உள்ளவராவார். கலகஞ் செய்வதில் இஷ்டமில்லாதவர். இவர் தன்னுடைய உள்ளங்கையில் கமல ரேகை என்ற ஒருவிதமான தாமரை ரேகையை உடையவராவார்.

9. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வன் உண்மையாம் மனத்தா னுகும்
பண்டிபண் டார முள்ளான் பால் பாக்கிய மதிகஞ் சேர்ப்பன்
துண்டமாப் பேச மாட்டான் தொடுத்ததை வெல்வா னுகும்
அண்டினேர் தம்மைக் காப்பன் அகசிய வார்த்தை சொல்வன்.

9. ஜாதகர் சுகமானதும் நல்லதுமான ஆகாரத்தைச் சாப்பிடுவார். உண்மையானதும் நல்லதுமான மனத்தை உடையவர். பழமையான துரைத்தனம், பல பண்டங்கள், பொக்கிஷம், சிவனடியார் ஆகிய இவர்களை

உடையவராவார். பால் பாக்கியம் அதிகமாக உடையவராவார். கண்டிப்பாயும் கடினமாயும் பேசமாட்டார். தான் எடுத்தக் காரியத்தைச் செய்து முடிக்குஞ் சாமர்த்தியம் உள்ளவராவார். தன்னிடம் வந்து சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவார். சிறிப்பையும் சந்தோஷத்தையும் உண்டு பண்ணக்கூடிய வேடிக்கையான வார்த்தைகளைச் சொல்லுவார்.

10. நல்லவன் நல்லவர்க்கு நற்புத்தி பெருமை யேற்பன்
புல்லிய புத்தி கொள்ளான் பந்துவும் புகழ வாழ்வன்
இல்லறஞ் சித்திரஞ் செய்வன் எந்தக்கா லத்தில் சொல்வாய்
கல்வீடு சித்திர மாகக் கட்டுவன் பதினு றுண்டில்.

10. ஜாதகர் நல்லவர்களுக்கு நல்லவராக விருப்பார். நல்ல புத்தியை உடையவர். பெருமையை யடைவார். தாழ்ந்த புத்தியை உடையவ ரல்லர். பந்துக்கள் இவரை மெச்சும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் அழகான சித்திரங்களையுடைய இல்லறத்திற்குத் தகுந்த வீட்டைக் கட்டுவார். இவ்விதமாக அவர் எந்த வயதில் செய்வார் என்று கேட்க, பதினுறுவது வயதில் கல் வீட்டை அழகாகக் கட்டுவார்.

11. இனங்களை வசியங் கொள்வன் எதிரியை நசிக்க வைப்பான்
கனமான குடும்பி யாவன் கனத்த பூஷணங்கள் சேர்ப்பன்
துணைவர்கள் ஆண்பால் காணுன் தோன்றினுந் தீதே யாகும்
வினையிலாப் பெண்பால் ரண்டு மேவிடுந் தீர்க்க மாக.

11. ஜாதகர் தன்னுடைய பந்துக்களைத் தன்பக்கமாக்கிக் கொள்ளுவார். சத்துருக்களைக் கெடுத்து விடும்படியான சாமர்த்தியத்தை உடையவர். மேன்மையான சிறந்த குடும்பஸ்தராக விருப்பார். பெரியனவும் விலையுயர்ந்தனவுமான ஆபரணங்களைச் சேர்த்துவைப்பார். இவருக்கு ஆண் சகோதரங்கள் கிடையா. ஒரு சமயம் பிறந்தாலும் அவர்கள் இறந்து போய்விடுவார்கள். பாவமில்லாத இரண்டு பெண் சகோதரங்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள்.

குறிப்பு. **ஆண்சகோதர தோஷம்** :—மூன்றிற்குடைய புதனும் அங்காரகனும் அஸ்தமனம் அடைந்திருக்கின்றுர்கள். ஆறுக்குடையவரான குரு பதினென்றில் இருக்கின்றுர். எட்டிற்குடைய சனி மூன்றில் இருக்கின்றுர். ஆகையால் சம்புஹோரா பிரகாசிகா சகோதர பாவம் 58-ஆவது 51-ஆவது சுலோகங்கள் பிரகாரம் ஆண் சகோதரங்களுக்குத் தோஷமுண்டு.

12. பின்துணை யாகச் சொல்வோம்பேசுவோம் மூத்தோள் சேதி
தன்சொல்லு மடக்க முண்டு தர்மமாங் குணத்தாளாகும்
உன்னத சிவந்த மேனி உள்மனங் கபடு மில்லாள்
அன்னவள் வறுமை காணுள் அழகுளாள் வரனும் உத்தரம்.

12. இந்த இரண்டு சகோதரிகளும் ஜாதகருடைய இளைய சகோதரிகளாவார்கள். இவர்களில் மூத்த சகோதரியின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் சாந்தமாகப் பேசுபவள். தர்ம

குணத்தையுடையவளாவள். உயரமானதும் சிவப்பு நிறமுள்ளதுமான தேகத்தை யுடையவள். தன்னுடைய மனத்தில் கள்ளம் கவடு வஞ்சனை இவைகள் இல்லாதவளாவாள். இவளுக்குக் கஷ்டங்களும் தரித்திரமும் கிடையா. இவள் அழகாக விருப்பாள். இவளுக்குப் புருஷன் வடக்குத் திக்கில் இருந்து வந்து நேரிடுவான்.

13. சுதர்களு மாண்பால் ரண்டு தோகையு மொருத்தி யாகும்
இதுமூன்றுந் தீர்க்க மெய்தும் இடறின்றிச் சுகமாய் வாழ்வள்
அதன்பின்னுள் சிவந்த மேனி அழகுண்டு முன்கோ பத்தள்
சதியான மனத்தா ளாகுஞ் சாதிப்பாள் சிலவே சங்கை.

13. ஜாதகருடைய இளைய முதல் சகோதரிக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் ஆக மொத்தத்தில் மூன்று குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவள் கஷ்டமில்லாமல் சௌக்கியமாக விருந்து வாழ்வாள். ஜாதகருடைய இளைய இரண்டாவது சகோதரி சிவப்பு நிறமுள்ள தேகத்தை யுடையவள். அழகுள்ளவள். முன்கோபத்தை உடையவள். கெட்ட மனத்தை உடையவளாவாள். சில விஷயங்களைப் பற்றித் தான் சொன்னதே சரி என்று சொல்லி வாதாடி நிலைக்கப்பண்ணுவாள்.

14. வரனுமே தென்மேல் திக்கில் வருவனும் சிலநாள் வாழ்வன்
பரவச முடைய ளாகும் பதியினில் வாழ்வா ளாகுங்
கருவுமே காணு ளாகுங் கழறுவோம் பின்பால் சேதி
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

14. ஜாதகருடைய இளைய இரண்டாவது சகோதரிக்குப் புருஷன் தென்மேற்குத் திக்கிலிருந்து வந்து நேரிடுவான். இவள் இவனுடன் கொஞ்சகாலம் இருந்து வாழ்வாள். பிறகு இவள் இன்னொருவரிடம்போய்ச் சேர்ந்து பூமியில் வாழ்ந்து கொண்டும் இருப்பாள். இவளுக்குக் கர்ப்பமே தரிக்காது. இவளுடைய இதர விஷயங்களைப்பற்றிப் பின்னால் சொல்லுகிறோம். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

15. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மிருப தாண்டில்
காதலி மேற்கு திக்கில் கலப்பளாஞ் சிவந்த மேனி
ஓதுவே னவள்குணத்தை உறுதியில் லாத நெஞ்சந்
தீதுகள் ஒருவர் கெண்ணுள் செல்வியும் யோக சாலீ.

15. ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபதாவது வயதில் † மனைவி மேற்குத் திக்கிலிருந்து வந்துநேரிடுவாள். இவள் சிவப்பு நிறமான தேகத்தையுடையவள். இவளுடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் தைரியமில்லாததும் வலிவில்லாததுமான மனத்தை உடையவள். ஒருவருக்குங் கெடுதியைச் செய்ய எண்ணமாட்டாள். இவள் யோகத்தை உடையவளாவாள்.

† குறிப்பு. விவாக விஷயம் :—சாமி என்ற லக்கினாதிபதியாகிய சந்திரனுக்கு ஏழில் தனஸ்தானாதிபதியாகிய சூரியன் இருப்பதாலும், சாமியாகிய

லக்கினாதிபதியாகிய சந்திரனும், பத்திற்குடைய அங்காரகனும் இரண்டிற்குரிய சூரியனும் நான்கிற்குடைய சுக்கிரனும் ஒன்றாய்க் கூடியும் பார்த்துக் கொண்டும் இருப்பதாலும், கீர்த்திஸ்தானம் என்ற பத்திற்குடைய அங்காரகனும் சனியும் லக்கினத்திலிருந்து நான்கு ராசிக்குள்ளே இருப்பதாலும், ஜாதகசிந்தாமணி ஏழாவது பாவம் 973, 974-ஆவது பாடல் பிரகாரம் ஜாதகருக்கு வாலிபத்தில் விவாகம் நடக்கும் அமைப்பு இருக்கின்றது. ஜாதகருக்கு வயது ஞு 19-0-0 முதல் ஞு 20-0-0 முடியும் வரையிலும் குரு தசையில் குருபுக்தி நடக்கிறது. குரு ஒன்பதிற்குடையவராகி களத்திரஸ்தானமாகிய மகரத்தையும் அதற்கு அதிபதியாகிய சனியையும் பார்க்கிறார். ஆகையால் ஜாதகபாரிஜாதம் பதினைன்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் ஒன்பதாம் பாவாதிபதியாகிய குரு தன் தசையில் தன்னுடைய புக்தியில் விவாகஞ் செய்துவைக்கும் அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

16. அன்னம்போல் சாய லுள்ளாள் ஆளனுக் கினிய ளாகும்
அன்னமு மன்பா யீவள் அற்புத திகளு மில்லாள்
அன்னியர்க் குதவி செய்வள் அவள்தெய்வ பத்தி பூண்பள்
கன்னென மொழியு முள்ளாள் கபடிலாள் வறுமை காணாள்.

16. ஜாதகருடைய மனைவி அன்னப்பட்சியைப்போல் அழகான ரூபத்தை உடையவள். இவள் தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவள். பிறருக்குச் சாப்பாட்டை ஆசையுடன் போடுவாள். தாழ்ந்த புத்திகள் இல்லாதவள். பிறருக்கு உபகாரத்தைச் செய்வாள். இவள் தெய்வத்தின் மேல் பக்தியும் அன்பும் உள்ளவள். சர்க்கரையைப்போல இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். கள்ளம் வஞ்சனை கபடம் இவைகளை உடையவளல்ல. கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டாள்.

17. புத்திரர் நவமே தோன்றும் போகிடுஞ் சிலவே என்றோம்
சுத்தமா யாண்பால் மூன்று தோகையு மவ்வாறுகும்
புத்திரரி யிவன்மேலாக பொருந்திடும் யோகம் தானும்
அதிதியைப் பெற்ற மாதே அறைகிறோ மன்னை சேதி.

17. ஜாதகருக்கு மொத்தத்தில் ஒன்பது குழந்தைகள் பிறக்கும், இவைகளில் சில குழந்தைகள் இறந்துபோய்விடும் என்று சொல்லுகின்றோம். மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவருடைய புத்திரர்கள் இவருக்கு மேலான அந்தஸ்தையும் யோகத்தையும் உடையவர்களாவார்கள். தேவர்களைப் பெற்றவளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! இனிமேல் ஜாதகருடைய தாயாரின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

18. அன்னையும் சிவந்த மேனி அழகுளாள் உயர மில்லாள்
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பாள் முன்கோ பத்தாள்
பின்னமில் லாத தேகி பிறர்வரன் சுகமே யுள்ளாள்
தன்னினம் சேரா ளாகுந் தனியளாய் வாழ்வா ளாமே.

18. ஜாதகருடைய தாயார் சிவப்பான நிறத்தையுடைய தேகத்தை உடையவளாள். அழகுள்ளவள். உயரமாகவிருக்கமாட்டாள், தான்சொல்லுகின்ற வார்த்தைகளே மேன்மையானவை எனவும் சிறந்தவை எனவும் சொல்லி அவைகளை நிலைநாட்டுகின்ற சாமர்த்தியத்தை உடையவள். முன்கோபத்தை உடையவள். அவயவக் குறைவில்லாத தேகத்தை உடையவள். பிற புருஷனுடைய சுகபோகங்களை அனுபவிப்பாள். இவள் தன்னுடைய பந்துக்களுடன் இருந்து வாழமாட்டாள். தனியாக விருந்து வாழ்பவளாவாள்.

19. தன்துணை ஆண்பா லொன்று தையலு மவ்வா ருகும்
அன்னவர் தன்போல் வாழ்வர் அவள்பூர்வஞ் சொல்லக் கேளாய்
மன்னிய ஆலங் காட்டில் மறைக் குல முதித்து மேலும்
பொன்பணி அதிக முண்டாய்ப் புத்திரர் வரனு மாகி ;

19. ஜாதகரின் தாயாருடைய சகோதரங்களில் ஆண் ஒன்றும் பெண் ஒன்றும் ஆகும். இவர்கள் இவளைப்போலவே வாழ்வார்கள். தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக. சிறந்த ஆலங்காடு என்ற திருவாலங்காடு என்னும் க்ஷேத்திரத்தில் இவள் பிராமணர் குலத்திற் பிறந்து தனத்தையும் ஆடை ஆபரணங்களையும் அதிகமாக வடைந்து. புருஷனும் மக்களும் உடையவளாகி ;

20. வாழ்நாளில் வினையைச் சொல்வேன் வரனுமே சிலது பொன்னைத்
தாழ்வான நதிகு லத்தோன் தன்னிடம் வைத்து யின்னேன்
ஆழியி லுயர்வ தான அக்காசி தன்னில் சென்ருன்
பாழான பேதி யாலே பறந்தனன் காலன் பக்கல்.

20. வாழ்கின்ற காலத்தில் நேர்ந்த பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவளுடைய புருஷன் சிறிது தனத்தைத் தாழ்ந்த குலமாகிய கங்கை குலமென்ற வேளாள குலத்திற் பிறந்த ஒருவனிடம் கொடுத்து சமுத்திரத்தினுல் சூழப்பட்ட இந்தப் பூமியிலுள்ள மேன்மையான சிறந்த காசி க்ஷேத்திரத்திற்குப் போனுர். இவர் கொடிய பேதி வியாதியால் இறந்து எமனிடத்திற்குப் போய்ச் சேர்ந்து விட்டார்.

21. மாரனு மாண்ட சேதி மங்கையு லிகித மூலந்
திரமாய்க் கேட்டுப் பின்பு செல்வதி வருத்த முற்றுப்
பாரினில் வேளான் பக்கல் புகன்றனள் வரன்தன் சேதி
தேரிய மனத்தா ளாகிச் செம்பொன்னை வினவும் போது ;

21. இவர் இறந்துபோய்விட்ட சங்கதியை இவருடைய மனைவி காகித மூலமாகத் தைரியத்துடன் தெரிந்துகொண்டு பிறகு வருத்தத்தை அடைந்து பூமியில் இந்த வேளாளனிடம் போய்த் தன்னுடைய புருஷனுடைய சங்கதியைச் அவனிடம் சொல்லித் தைரிய முடையவளாகித் தனத்தைப்பற்றி கேட்கும்போது ;

22. இன்னமுஞ் சிலநாள் சென்று யீகுவேனென்று சொல்ல
அன்னவள் மனந்தா ளாமல் ஆகாத்திய மிகவே செய்து
மன்னர்பால் சொல்லி யேதான் சாந்தமாய் பேதி யாலே
துன்னிய காலன் பக்கல் சென்றனள் ளிந்த மாது.

22. அந்த வேளாளன் இன்னும் சில நாட்கள் கழித்துத் தருகிறேன் என்று சொல்ல, இவள் மனத்தால் சகிக்கமுடியாதவளாகி எதிரிடையாகப் பொல்லாங்கு அதிகமாகச் செய்து அரசாங்கத்தார் சமாதானம் சொல்லிய பிறகு இவள் இரத்த பேதியால் இறந்து எமனிடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

23. பிரமனல் வரையப் பட்டுப் பிறந்தனள் செட்டி வமிசம்
வரனுண்டாய்ச் சிலநாள் வாழ்ந்து மரித்துமுன் கடனுக் காக
உறைந்தனள் கங்கை வர்க்கம் வருகுவாள் அவனில் சென்று
. . . . மங்கையும் வாழ்வாளாமே.

23. பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டுச் செட்டியாருடைய குலத்தில் ஒரு பெண்ணுக இவள் பிறந்தாள். இவள் புருஷனை அடைந்து அவனுடன் கொஞ்சகாலம் வாழ்ந்திருந்து பிறகு இறந்து முன் ஜன்மத்திய கடனுக்காக வேளாளர் குலத்திற் பிறந்தாள். தனக்கு வந்து சம்பவிக்கின்ற புருஷனுடைய வீட்டிற்குப்போய் இவள் அவனுடன் வாழ்பவளாவாள்.

வேறு

24. சேரும் தோஷம் தனக்குச் சுதர்செப்பு முனியே விவர மதாய்
பாரில் சுதராண் ஒன்றேயாம் பாலன் தீர்க்கம் வேறு காணுள்
நாரி தனக்குப் பகையாகும் நங்கை தன்னு லிவ்விதியே
பாரி லிவள்தன் பின்ஜன்மம் பகரக் கேண்மோ பைங்கொடியே.

24. இவளுடைய பிள்ளைகளுக்கு உண்டாகின்ற தோஷத்தைப் பற்றி விவரமாகச் சொல்லுவீர், முனிவரே ! என்று கேட்கச் சொல்லுகின்ருர். இவளுக்குப் பூமியில் ஒரே ஒரு பிள்ளைதான் நீண்ட ஆயுளை உடையவனுக விருப்பான். வேறு பிள்ளைகள் இவளுக்குக் கிடையா. இந்தப் பிள்ளையும் இவளுக்கு விரோதியாக விருப்பான். அவ்விதமாக நடப்பதற்கு இவளுடைய விதியே காரணமாகும். பூமியில் இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். பார்வதியம்மையே ! கேட்பீராக.

25. கொடியே தோகை கீழ்ப்பாலில் குதிப்பாள் வைசிய குலமதனில்
அடைவாய்ப் பணிகள் தானுண்டாய் ஆறுமா முகத்தோன் பத்திய [தாய்த்
துடிநே ரிடையாள் வாழ்வாளாம் செப்பும் மிவனின் தன் பூர்வங்
கெடிலந் தென்பால் சிறுஊரில் குதித்தான் கர்ண குலமதனில்.

25. ஜாதகருடைய தாயார் தோகை என்ற ஸ்தலத்திற்குக் கிழக்குத் திக்கில் உள்ள ஊரில் வைசியருடைய ஜாதியில் போய்ப் பிறப்பாள். இவள் ஆடை ஆபரணங்களை உடையவளாகி ஆறு பெரிய முகங்களை உடைய முருகக்கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உடையவளாகி

வாழ்பவளாவாள். ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லு கிறேன். கெடிலத்திற்குத் தெற்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் கணக்கர் என்ற கருணீர் குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறந்தார்.

26. குலத்துத் தொழிலே தான்செய்து குலவு நாளில் வினை சொல் [வேன்
பிலமி லாத ஏழைதனைப் புலம்ப வைத்தான் இதுவன்றிப்
புலேயர் சாபம் தான் சேர்ந்து புகல்வார் ஏழை மனவெறுப் பால்
நலஞ்சேர் பின் ஜன் மங்களிலே நவில்வார் குலத்தில் பழிப்பாக ;

26. ஜாதகர் தன்னுடைய ஜாதித்தொழிலேயே செய்துகொண்டு வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைச் சொல்லுகின்றேன். இவர் பலமில்லாத ஓர் ஏழையை அழும்படியாகச் செய்துவிட்டார். இதுவு மல்லாமல் புலேயர்களுடைய சாபம் வந்து சேர்ந்தது. ஏழைகள் தங்க ளுடைய மனத்திலுள்ள துக்கத்தினால் சொல்லுவார்கள். "உன்னுடைய மறு ஜன்மங்களில் பழிப்புள்ளதும், குற்றமுள்ளதுமான குலத்தில் பிறந்து ;"

27. பாக துணைஆண் காணுமல் பறவைகுலம்போல் தான் வாழ்வாய்த்
தோகை அன்னை நிந்தையுமாய்ச் சுயபந்துகளும் காணமல்
ஏக ஞக வாழ்ந்திடுவா யென்று சொல்லித் தெரு தூளே
மோக முடனே தானிரைத் தார் மூண்ட தந்த வினைதானே.

27. உனக்கு ஆண் சகோதரர்கள் இல்லாமல் பட்சி ஜாதியைப்போல வாழ்வாய். உன்னுடைய மனைவி தாயார் இவர்களுடைய நிந்தையை அடைந்து, உன்னுடைய பந்துக்கள் இல்லாமல் நீ தனியாக விருந்து வாழக்கடவாய் என்று சொல்லித் தெருவிலுள்ள மண் தூளை எடுத்துத் தூவினார்கள் ஏழைகள். அவர்களுடைய சாபம் இவரை வந்து அடைந்தது.

28. தானே அந்திய காலத்தில் க்ஷயரோ கத்தால் மறலி பதி
போனுன் நரகம் தான்புக்கிப் பிரமன் லக்கம் வரைய வந்தான்
ஊனமில் லாமல் யோக மதை உரைப்பக் கேண்மோ கேசரியும்
ஆன கேதாரயோகம் அடைவா னிந்தப் பாலனுமே.

28. ஜாதகர் தன்னுடைய கடைசி காலத்தில் க்ஷய ரோகத்தினால் பாதிக்கப்பட்டு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தார். பிறகு நர கத்தில் இருந்து பிறகு பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். பங்கமில்லாத யோகத்தைச் சொல்லுகின்றேன். இதைக் கேட்பீராக. இந்த ஜாதகருக்கு கேசரி யோகம் என்ற ஒருவித யோகமும், கேதாரயோகம் என்ற ஒருவித யோகமும் † உண்டாகும்.

† குறிப்பு.—கேசரியோகம் என்பது சந்திரனும் குருவும் ஒருவருக்கொரு வர் கேந்திரத்தில் இருப்பதாகும். இது விஷயமாய் ஜாதகாலங்காரம் 274, 276-ஆவது பாடல்கள், ஜாதக சிந்தாமணி 2192-ஆவது பாடல், ஜாதக பாரிஜாதம் 7-ஆவது அத்தியாயம் 116-ஆவது சுலோகம், பலதீபிகை 6-ஆவது அத்தியாயம் 10-ஆவது சுலோகம் ஆகிய இவைகளைப் பார்க்கவும்.

கேதாரயோகம் என்பது ராகு கேதுக்கள் தவிர மற்ற ஏழு கிரகங்களும் நான்கு ராசியில் இருப்பதாகும். இந்த ஜாதகத்தில் இந்த ஏழு கிரகங் களும் நான்கு ராசியில் இருக்கின்றன. இ:. து ஒரு வகை கேதார யோக மாகும். பொதுவாய்க் கேதார யோகம் விஷயமாய் ஜாதகாலங்காரம் 321, 372, 376-ஆவது பாடல்கள், ஜாதக சிந்தாமணி 1970, 2042-ஆவது பாடல்கள், பலதீபிகை 6-ஆவது அத்தியாயம் 35-ஆவது சுலோகம், பிருஹஜ் ஜாதகம் 12-ஆவது அத்தியாயம் 10-ஆவது சுலோகம், ஜாதக கணிதம் 2-ஆவது பாகம் 6-ஆவது அத்தியாயம் 88-ஆவது அமிட்டம், சாராவளி 21-ஆவது அத்தியாயம் 19, 49-ஆவது சுலோகங்கள் ஆகிய இவைகளைப் பார்க்கவும்.

29. பாலன் வறுமை காணுதான் பாரு மதிகஞ் சேர்த்திடுவன்
சீலனுவன் செட்டு செய்வன் சகடு வாகன முடையவனே
வேலன் பத்தி சுகபுசிப்பன் மேலோர்க் கன்னந் தானளிப்பன்
சோலே தூறவு செய்திடுவன் சிறுத்தோர்க் குதவி யாகுவனே.

29. ஜாதகர் கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அடையாதவராக விருப்பார். நிலங்களை அதிகமாகச் சேர்த்துவைப்பார். நல்லொழுக்க முடைய வராவார். வியாபாரஞ் செய்வார். வண்டி முதலிய சவாரிக்குரிய வாகனம் உடையவராவார். முருகக் கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உடையவர். சுகமானதும் நல்லதுமான ஆகாரத்தைச் சாப்பிடுபவராவார். மேன்மை தங்கிய பரதேசி களுக்குச் சாப்பாடு போடுவார். சோலைகளும் தோப்புகளும் கிணறுகளும் ஆகிய இவைகளை உண்டு பண்ணுவார். ஏழைகளுக்கு உபகாரஞ் செய்பவராகவிருப்பார்.

30. ஆகும் பணேவர் உடையவனும் அதிதிக் கன்னம் தான் தருவன்
ஏகு மன்னை முப்பதிலே எழிலாய் மேட மாதத்தில்
போகும் பித்த பாண்டாலே பிறந்தோன் அறுபா னிரண்டினிலே
சாகு மாதஞ் சாடியதாந் தசமி குறைபக் கமுமாமே.

30. ஜாதகர் பண்ணை நிலங்களையும் ஏர்களையும் உடையவராவார். பரதேசிகளுக்கு அன்னதானஞ் செய்வார். இவரது முப்பதாவது வயதில் சித்திரை மாதத்தில் * இவருடைய தாயார் இறந்துவிடுவாள். இவர் தனக்கு அறுபத்திரண்டாவது வயதில் பித்தபாண்டு ரோகத்தினால் மாசிமாதத்தில் தேய்பிறைச் தசமி திதியில் இறந்துவிடுவார்.

* குறிப்பு. தாயார் மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ௵ 29-0-0 பூர்த்தியாகி முப்பதாவது நடக்கும்போது சித்திரை மாதத்தில் குரு தசையில் சூரிய புக்தி நடக்கின்றது. மாதுரு லக்கினம் நான்காவது பாவமாகிய துலாம் ஆகும். துலாலக்கினத்திற்குப் பராசரஹோரை, ஜாதகசிந்தாமணி இவை களின்பிரகாரம் குருவும் சூரியனும் மாரகாதிபதிகள் ஆவார்கள். குரு துலாத் திற்கு மூன்று ஆறுக்குடையவராய் எட்டாவதான மாரகஸ்தானத்தில் இருக் கின்றார். ஆகையால் குரு தன் தசையில் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். சூரியன் ஏற்கனவே மாரகாதிபதியாகித் துலாத் திற்குப் பதினோராவதான மாரக ஸ்தானத்தில் மாதுர்லக்கின அஷ்டமாதிபதி யாகிய சுக்கிரனுடன் கூடி மாதுருகாரகனாகிய சந்திரனைப் பார்த்து இருப்பதால்

துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல், கார்க்கேயர் ஜோதிடம் முதற்காண்டம் 680-ஆவது பாடல், ஜாதகபாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 60-ஆவது சுலோகம் இவற்றின் பிரகாரம் சூரியன் தன்னுடைய புக்தியில் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உள்ளவராக விருக்கின்றுர்.

†ஜாதகர் மரண விஷயம்.—ஜாதகருக்கு வயது ஹூ 61 ஆகி 62-ஆவ வயதில் மாசி மாதத்தில் புத தசையில் சந்திரபுக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதக சந்திரிகை இவைகளின் பிரகாரம் புதன் சனி சுக்கிரன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றுர்கள். புதன் மாரக ஸ்தானங்களாகிய மூன்று பதினொன்றிற்குடையவராகி இரண்டாவது மாரக ஸ்தானத்தில் மாரகாதிபதிகளாகிய சுக்கிரன், சூரியன் இவர்களுடன் கூடி லக்கினுதிபதியையும் அஷ்டமத்தையும் பார்க்கின்றுர். ஆகையால் துய்ய கேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் புதன் தன் தசையில் ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உள்ளவராகின்றுர். சந்திரன் லக்கினுதிபதியாகி மாரக ஸ்தானமாகிய எட்டில் மாரகாதிபதியாகிய சனி வீட்டில் இருக்கின்றுர். ஆகையால் துய்ய கேரளம் எட்டாம் பாவம் 14-வது பாடல். ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகம் இவற்றின் பிரகாரம் சந்திரன் தன்னுடைய புக்தியில் மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்றுர். லக்கினுதிபதி மாரகஞ் செய்யும் விஷயமாய் 82-ஆவது ஜாதகம் 24-ஆவது பாடல் வியாக்கியானத்தைப் பார்க்கவும்.

வேறு

31. மறுஜன்மம் புதுவை தன்னில் வைசிய குல முதித்து
பெருமையாய்ச் செட்டுச் செய்து பிரபல கீர்த்தி யாவன்
இருமனை பாரி தானுந் தீரம்பின் கண்ட மென்றேம்
அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளே கேளாய்.

31. ஜாதகர் பின் ஜன்மத்தில் புதுச்சேரியில் வைசியர் குலத்தில் பிறந்து மேன்மையான வியாபாரத்தைச் செய்து மிகவும் அதிகமான புகழை அடைவார். இரண்டு மனைவிகளை அடைவார். இவர்கள் தீர்க்காயுள் உள்ளவர்களாக விருப்பார். பின்னுல் இறந்து போய்விடுவார் என்று சொல்லுகிறேம். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

32. பொன்பணி பூமி வீடு புரப்பன்நா லாயி ரம்பொன்
அன்னவன் ஜனன காலம் அவிட்டம்நா லாம்பா தத்தில்
தன்னிலே திங்க ளைந்துஞ் ஜாதகன் தனக்கு நோயாம்
அன்னையும் பிணியு மெய்தும் அம்பிகை யாளே கேளாய்.

32. ஜாதகர் தனம் ஆடை ஆபரணங்கள் நிலம் வீடு இவைகள் எல்லாம் மொத்தம் நாலாயிரம் பொன் பெறக்கூடியதான சொத்தை யுடையவராவார். இவர் பிறந்த காலத்தில் நட்சத்திரம் அவிட்டம் நான்காவது பாதம் ஆகும். அங்காரக மகாதசையில் இருப்பு ஐந்து மாதமாகும். இந்தக் காலத்தில் ஜாதகருக்கு ரோகம் உண்டாகும். தாயாருக்கும் நோய் ஏற்படும். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 99

1. கலை [1] கேது அரியில் [2] புக்கக் கதிர் [3] புதன் கோல தாக [4]
நிலமகன் [5] காரி [6] ராகு நின்றிடச் சாடி [7] தன்னில்
சலக்கோளுந் [8] தேளதாக [9] த்தனுர் [10] குரு ஜன்மம் நண்டு [11]
பலனதைச் சொல்லு மென்று பார்வதி கேட்கும் போது ;

சனி அங்காரகன் ராகு	இராசி சக்கரம்		லக்கினம்
			சந்திரன் கேது
குரு	சுக்கிரன்	சூரியன் புதன்	

உத்தரம் 1-பாதம். சூரிய தசைஹூ 4—7—0

1. சந்திரனும் கேதுவும் சிம்மத்திலும், சூரியனும் புதனும் துலாத்திலும், அங்காரகனும் சனியும் ராகுவும் கும்பத்திலும், சுக்கிரன் விருச்சிகத்திலும், குரு தனுசிலும், ஜன்ம லக்கினம் கடகமாகவும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும்போது.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும்—மேஷத்தில் அங்காரகனும் சனியும், ரிஷபத்தில் கேதுவும், மிதுனத்தில் குருவும், விருச்சிகத்தில் ராகுவும், தனுசில் சந்திரனும், மகரத்தில் புதனும், மீனத்தில் சூரியனும் சுக்கிரனும் ஆகும். புதன் அஸ்தமனத்திலும் சனி வக்கிரகதியிலும் இருக்கின்றுர்கள்.

2. குறுமுனி புகலு கின்றுர் குறித்தது ஆண்பால் ஜன்மந்
தலமது வடதேன் வீதி சனிவாசல் நகர மாகும்
வருமில்லம் வடதென் வீதி வாசலுங் குடக்கு நோக்கம்
பெரியதோர் நகர மாகும் பலமுள செட்டு ஓங்கும்.

2. அகஸ்திய மகா முனிவர் சொல்லுகின்றுர், பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த இடம் வடக்குத் தெற்கு வீதியில் மேற்கு வாடையாகும். பிறந்த வீடு வடக்குத் தெற்கு வீதியில் மேற்குத்

[1] சந்திரன் [2] சிம்மம் [3] சூரியன் [4] துலாம்
[5] அங்காரகன் [6] சனி [7] கும்பம் [8] சுக்கிரன்
[9] விருச்சிகம் [10] தனுசு [11] கடகம்

திக்கைப் பார்த்ததாகும். பிறந்த ஊர் பெரிய பட்டணமாக விருக்கும். அவ் விடத்தில் பெரிய பெரிய வியாபாரங்கள் நடந்துகொண்டும் விருத்தியாகிக் கொண்டும்வரும்.

குறிப்பு.—பிறந்த இடத்தைப்பற்றிச் சொல்லும்போது வீதியைப்பற்றி இரண்டு தரம் சொல்லி இருப்பதால் வீடு மேலண்டை வாடையில் கடைசி வீடாகி மேற்குப்பார்த்த வாயிலையுடைய வீடாக விருக்கலாம்.

3. அரசர்கள் வாச மாகும் அலைகடல் கீழ்ப்பால் தங்குந்
துருவமும் மேல்பா லோடுந் துர்க்கையுந் தந்தி தங்கும்
உரைத்தயிவ் வடையா ளத்துள் உயர்மறைக் குலமே தோன்றுந்
திருமகன் குடும்பச் சேதி செப்புவோ மிந்நூல் தன்னில்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

3. இந்தப் பட்டணத்தில் இராஜாக்கள் வாசஞ் செய்வார்கள். கிழக்குத் திக்கில் அலைகளை உடைய சமுத்திரம் இருக்கும். மேற்கில் ஓர் ஒடுக்கமான வழி போகும். காளி கோயிலும் யானை முகத்தையுடைய விநயகர் கோவிலும் மேற்குத் திக்கில் இருக்கும். இங்குச் சொல்லப்பட்ட அடையாளங்களை உடைய விடத்தில் மேன்மையான சிறந்த பிராமணர் குலத்தில் ஜாதகர் பிறப்பார். இவருடைய குடும்பத்தின் விஷயங்களைப்பற்றி இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதி யம்மையே! கேட்பீராக.

குறிப்பு.— இப்பாட்டில் ஓரடி மிகுந்துள்ளதைக் கவனிக்க.

4. தந்தையின் துணைவ ராறு தங்காது யாவும் தானே
அந்தவன் தனியாய் வாழ்வன் அறைகிறே மவன்கு ணத்தைக்
கந்தன்தன் பக்தி கொள்வன் கனராசர் பேட்டி கொள்வன்
முந்தின கல்வி ரண்டு முயர் வோர் நேசம் கொள்வன்.

4. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரர்கள் ஆறுபேராவார்கள். இவர்களில் எல்லோரும் இறந்து விடுவார்கள். இவர் மாத்திரம் உயிருடன் இருந்துகொண்டு ஒண்டியாக விருப்பார். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். முருகக் கடவுளின்மேல் பக்தியும் அன்பும் இவர் உடையவராவார். பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைவார். இவர் மேன்மை யானதும் விசேஷமானதுமான இரண்டு வித வித்தைகளை உடையவராவார். உயர்ந்தவர்களுடைய சினேகத்தை உடையவராவார்.

5. பூமியும் பரிபா லிப்பன் புதிதாகக் கிருகஞ் செய்வன்
சேமமாங் குடும்பி யாவன் செய் நன்றி மறவா னுகுந்
தாமத குணத்தா னுகுஞ் சரசமாய் வார்த்தை சொல்வன்
காமனை விருப்பங் கொள்வன் கஞ்சமா நிறத்தா னுமே.

5. ஜாதகருடைய தகப்பனுர் நிலங்களை உடையவராவார். அவற்றைத் தானே பயிரிடுவார். புதிய வீட்டைக்கட்டுவார். சௌக்கியமான குடும்பஸ்தராக விருப்பார். பிறர் செய்த உபகாரத்தை மறக்காதவர். தாமதமானதும் சாந்தமானதுமான குணத்தை யுடையவராவார். சௌகரியமாகவும் இன்பமாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். காம ஆசையை உடையவராவார். சிகப்பு தாமரைப் பூவைப் போன்ற சிவந்த நிறமுள்ள தேகத்தை உடையவராவார்.

6. உத்தரம் ராசி யாகும் உதிப்பனும் வாத தேகி
வெத்திச் சொல் லுடையனுகும் மேலவர் பத்தி பூண்பன்
சுத்தவான் மரண மட்டுந் துரைராசர் தம்மால் உய்வன்
வித்தகன் காது மந்தம் மேவிடு மந்தந் தன்னில்.

6. ஜாதகருடைய தகப்பனுர் உத்தர நட்சத்திரத்தையுடைய ராசியில் பிறப்பவராவார். வாத தேகத்தை யுடையவர், தான் சொல்லுகின்ற வார்த்தை ஜயத்தை அடையக்கூடியதாக விருக்கும், மேன்மையை யடையக்கூடியதாக விருக்கும். இவர் பெரியோர், வானேர் இவர்களிடத்தில் பக்தியும் ஆசையும் உடையவராவார். சுத்தமாகவிருப்பார். தன்னுடைய மரணகால பரியந்தம் இராஜாக்கள் மூலமாக ஜீவனஞ் செய்வார். இவருக்குக் கடைசிக் காலத்தில் தன்னுடைய காது மந்தமாகிக் காது கேட்காமல்போய்விடும்.

7. ஊகவான் பலபேர் நேயன் உறுதிவான் ஞானஞ் சொல்வன்
பாகமாய்ப் பேச வல்லான் பஞ்சைமே லிரக்க முண்டு
தோகைய ரிஷ்டங் கொள்வன் சோம்பிடான் காரி யத்தில்
போகபாக் கியங்க ளுள்ளான் புராந்தகன் பூசை பூண்பன்.

7. ஜாதகருடைய தகப்பனுர் நுட்பமான அறிவை உடையவர். இவருக்கு அநேகம்பேர் நண்பர்களாக விருப்பார்கள். வலிவுள்ளவர் நல்ல புத்தியையும் அறிவையும் பிறருக்கு ஊட்டுவார். தகுதியாகவும் சாமர்த்தியமாகவும் பேசுஞ் சக்தியை உடையவர். ஏழைகளிடத்தில் இரக்கமும் தயாள குணமும் உடையவர். பெண்களின்மேல் ஆசையை அடைபவராவார். தான் செய்கின்ற காரியங்களில் சோம்பல் இல்லாமல் இருக்கக்கூடியவர். போகங்களையும் செல்வங்களையும் சௌகரியங்களையும் அனுபவிப்பார். புராந்தகன் என்ற சிவபெருமானைப் பூஜை செய்வார்.

8. சொன்னயிக் குணத்தானுக்குச் சுதனுமே யுதிப்பா னுகும்
அன்னவன் துணைவ ரஞ்சில் அணுகாது யாவுந் தானே
இன்னவன் தனியாய் வாழ்வன் இயம்புவோ மிவன் குணத்தைக்
கன்னென மொழியே சொல்வன் கல்விமான் சிவந்த மேனி.

8. இங்குச் சொல்லப்பட்ட குணங்களை உடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். ஜாதகருடன் கூடப்பிறந்தவர்கள் ஐந்து பேர்கள் ஆவார்கள். இவர்கள் எல்லோரும் இறந்துபோய்விடுவார்கள். ஆகவே இவர் தனியாக விருந்து வாழ்பவராவார். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். சர்க்கரையைப் போன்ற இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவார். வாசித்தவர். இவர் சிவப்பு நிறமான தேகத்தையுடையவராவார்.

9. கல்வியால் பெருமை யேற்பன் கதித்ததோர் புத்தி மானும்
இல்லையென் றுரைக்க மாட்டான் யாரையு முறவு கொள்வன்
நல்லவன் நல்லவர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
வல்லியோர் மோகங் கொள்வன் மன்னர்பா லரசு செய்வன்.

9. ஜாதகர் தன்னுடைய வித்தையினுலே பெருமையையும் மேன்மையையும் அடைவார். சிறந்தவராவர். புத்தியுள்ளவராவர். தன்னிடத்தில் வந்த எவருக்கும் இல்லை என்று சொல்லமாட்டார். எவரையும் சிநேகஞ் செய்து கொள்ளுவார். நல்லவர்களுக்கு நல்லவனுகவிருந்து நடந்துகொள்ளுவார். முரடர்களுக்கு வலிவுடைய சரியான எதிரியாக விருப்பார். ஸ்திரீகளின்மேல் காம ஆசையை உடையவராவர். இராஜாக்களிடத்தில் இராஜாங்க வேலையைச் செய்வார்.

10. கடன் கொள்ளானிடுக்க மில்லான் காரிய மறிந்து செய்வன்
விடவுரை பகரா னுகும் வீணவம்பு புகலா னுகுந்
தடைசொல்லான் தாய்தந் தைக்கே சன்மார்கன் மனைவி நேயன்
மடையரை யுறவு கொள்ளான் மருவிடும் பித்த தேகி.

10. ஜாதகர் கடன் வாங்கமாட்டார். கஷ்டத்தை அடையமாட்டார். காரியங்களை நன்ருக அறிந்து யோசித்துச் செய்வார். விஷம்போல் கெட்ட வார்த்தைகளைச் சொல்லமாட்டார். வீண் சண்டையை விளைவிக்கக் கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டார். தாய் தந்தையருடைய வார்த்தைகளை மறுத்துச் சொல்லமாட்டார். நல்ல வழியை உடையவர். நல்ல குணங்களை உடையவர். தன்னுடைய மனைவிக்கு இஷ்டமானவர். புத்தியில்லாதவர்களுடன் சினேகஞ் செய்துகொள்ளமாட்டார். இவர் பித்தமுள்ள தேகத்தை உடையவராவர்.

11. சொல்லிடு வசன மெல்லாந் சுத்தமாம் விநோத மாகும்
வெல்லுவான் எதிரி தன்னை வீணவழக் கோரந் சொல்லான்
அல்லலென் றேரைக் காப்பன் அரசர்பூ சிதமு மாவன்
நல்லவனுகி வாழ்வன் நாதனுர் பத்தி பூண்பன்.

11. ஜாதகர் சொல்லுகின்ற வார்த்தைகள் எல்லாம் சுத்தமானவையாகவும் ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் உண்டு பண்ணக்கூடியவையாகவும். அழகானவையாவும் இருக்கும். இவர் தன்னுடைய சத்துருக்களை ஜயித்துவிடுவார். வீணை வியாஜ்யத்தில் ஒரு பக்கமாக சாட்சி சொல்லமாட்டார். கஷ்டத்தை அடைந்திருக்கின்றேம் என்று சொல்லுகின்றவர்களைக் காப்பாற்றுவார். இராஜாங்கத்தாரால் பெருமை பாராட்டப் பட்டவராகவும் போற்றப்பட்டராகவுமிருப்பார். நல்லவராகவிருந்து வாழ்வார். கடவுளின் மேல் பக்தியும் அன்பும் உடையவராவார்.

12. தந்தைநாள் பூமி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
நிந்தையு மில்லா னுகும் நீத்தோர்கள் உறவு கொள்ளான்
கந்தன்தன் அருளி னுலே காவலன் தனக்கு யோகம்
இந்திர போக மேற்பன் இரணிய மதிகஞ் சேர்ப்பன்

12. ஜாதகர் தன்னுடைய தகப்பனுருடைய காலம் முதல் இருந்து வருகின்ற நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். பழி குற்றச்சாட்டு அபவாதம் இவைகள் இல்லாதவராவார். உலகப் பற்றை விட்டுவிட்டவர்கள் பரதேசிகள் இவர்களுடைய சிநேகத்தை அடைய மாட்டார். முருகக் கடவுளின் கிருபையால் இவருக்கு யோகம் உண்டாகும். இந்திரன் அனுபவிக்கின்ற போகங்களைப் போன்ற சுகபோகங்களை இவர் அனுபவிப்பார், பணத்தை அதிகமாகச் சேகரித்து வைப்பார்.

13. கைமுத லுடைய னுகுங் கனத்திடுங் கல்வி தானும்
உய்வகை அரசர் தம்மால் உயர்ச்சியாந் தொழிலு மேற்பன்
பொய்யுரை பகரான் மிஞ்சிய புத்திமான் புகழு முண்டு
வையமேல் சகடு மாவும் வந்திடு மிவனுக் கேதான்.

13. ஜாதகர் தன்னிடத்தில் கையிருப்புப் பொருள் உள்ளவராவர், அஃதாவது இவரிடம் பணம் இருந்துகொண்டேயிருக்கும். இவருக்கு வித்தை அதிகப்படும். மேன்மையானதாகவு மிருக்கும். அரசர்கள் மூலம் ஜீவனஞ் செய்வார். சிறந்ததும் பெரியதுமான வேலையில் இருப்பார். பொய்யான வார்த்தைகளைச்சொல்லமாட்டார். அதிகமான அறிவை உடையவர். பெருமையும் கீர்த்தியும் உடையவர். பூமியில் வண்டியும் பசுக்களும் இவருக்கு வந்து சேரும்.

14. அத்தரி சொல்லு கின்ருர் அவனுக்குத் துணைவர் தோஷம்
பெத்தகா ரணங்கள் அத்தைப் பேசுவீர் முனியே நீர்தாம்
குத்தமா யாறில் பொன்னேன் குசனுமே யெட்டில் நிற்கப்
பத்திய மூன்ருே னேடு பரிதியுங் கூடி நிற்க;

14. அத்திரி மகரிஷியானவர் கேட்கின்ருர். ஜாதகருடைய சகோதரர்களுக்கு உண்டான தோஷத்தைப்பற்றிய காரணங்களை, முனிவரே ! நீர் சொல்லுவீராக. குரு ஆருவது வீட்டில் மறைந்திருப்பதாலும், அங்காரகன் எட்டாவது வீட்டில் இருப்பதாலும், மூன்றிற்குடையவராகிய புதனுடன் சூரியன் கூடி இருப்பதாலும் ;

குறிப்பு.—மூத்த ஆண் சகோதரகாரகனுகிய குரு ஆறில் மறைந்திருப்பது ஆட்சியாய் இருந்தபோதிலும் சகோதரத்திற்குத் தோஷத்தை விளைவிக்கக் கூடியதாகும். சகோதரகாரகனுகிய அங்காரகன் எட்டில் சனி ராகுகளுடன் இருப்பது சகோதர தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதாகும். இங்கு மூன்றிற்குடையவராகிய புதன் சூரியனுடன் கூடி இருப்பது.

" பரிதியும் மூன்ருேன் கூடில் பாலன் பின்னில்லை மாதே "

என்ற மணி கண்ட கேரளம் சகோதர காண்டம் ஆருவது பாடல் பிரகாரம் சகோதர தோஷத்தை விளைவிக்கக்கூடியதாகும்.

15. துணைவர்கள் தோன்றித் தீதாஞ் சுதனுமே பூர்வஞ், தன்னில்
வினைகளு மதிகஞ் செய்தான் மேவிற்று அந்தத் தோஷம்
வினையதைச் சொல்லு மென்னப் பூர்வமே புலியூர் தன்னில்
கனமுள் கங்கை சேயாய்க் காவல னுதித்தா னென்ருேம்.

15. ஜாதகருக்குச் சகோதரர்கள் உண்டாகிப் பிறகு இறந்துபோய் விடுவார்கள். ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் அதிகமான பாவங்களைச் செய்திருக்கின்றார். அந்தப் பாவங்கள் இவரை வந்து அடைந்திருக்கின்றனவென்று சொல்ல, அவைகளைச் சொல்லுவீர் என்று அத்திரி மகரிஷி கேட்க அகஸ்தியர் சொல்லுகின்றார். ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் புலியூரில் மேன்மையான வேளாளராகப் பிறந்தார் என்று சொல்லுகின்றோம்.

16. சுகமுள குடும்பி யாகித் தொகையர் மதலே யுண்டாய்த்
தகமையாய்க் கிராமச் செட்டுத் தானவன் செய்யு நாளில்
பகையதைப் புகல கேண்மோ பஞ்சையாய் ஏழை மாது
ஜகமதில் வரனு மின்றித் தாயில்லம் வாழும் போது ;

16. ஜாதகர் முன் ஜன்மத்தில் சுகமான குடும்பஸ்தராகி மனைவி மக்களை உடையவராகித் தகுதியாகத் தன்னுடைய கிராமத்திய வியாபாரத்தைச் செய்துகொண்டு இருக்கின்ற காலத்தில் சம்பவித்தப் பாவத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. ஓர் ஏழை ஸ்திரீயானவள் மிகவும் நொந்து போய்ப் பூமியில் புருஷனுமில்லாமல் தன்னுடைய தாயாருடைய வீட்டில் வசித்துக் கொண்டிருக்கும்போது ;

17. அன்னியன் அவள்மேல் மோகம் ஆசையாய் வார்த்தை சொல்லக்
கன்னிகை யிசையா ளாகிக் கடூரமாய் வார்த்தை சொல்லச்
சொன்னசொல் மறித்து யின்னேன் தோகையைப் பலவந்தத்தால்
பின்னமே செய்தா னென்றேம் பேதையுந் திகல டைந்து ;

17. ஓர் அன்னிய மனிதன் அவள்மேல் காம ஆசையையுடையவனாகி ஆசையுடன் அவளுடன் வார்த்தைகளைச்சொல்ல அவள் அதற்கு இசையாதவளாகி சம்மதிக்காதவளாகிக் கோபமாக வார்த்தைகளைச் சொல்ல, அதற்கு மேல் அந்த அன்னிய மனிதன் அவளுடைய பேச்சைத்தடுத்துப் பலவந்தமாக அவளைக் கெடுத்துவிட்டான் என்று சொல்லுகின்றோம். அதன்மேல் அந்த ஸ்திரீ பயத்தை உடையவளாகி ;

18. அதிகாரி தன்பால் செல்ல அக்கிரமஞ் செய்தோன் தன்னைத்
துரிதமா யழைத்துக் கேழ்கச் செய்தது நிசமென் றெண்ணிச்
சதியாகச் செய்தோன் தன்பால் தனமதைப் பெற்றுக் கொண்டு
அதிபதி தன்மேல் தோஷம் வருவித்தான் அதிகாரி தானும்.

18. அதிகாரமுடைய ஒருவரிடம் (அஃதாவது இந்த ஜாதகரிடம்) போய்ச் சொல்லவே, இவர் அக்கிரமத்தைச் செய்த மனிதனை உடனே வரவழைத்து விசாரித்து அந்த மனிதன் உண்மையிலே இந்தக் காரியத்தைச் செய்துவிட்டானென்று தெரிந்துகொண்டபோதிலும் குற்றத்தைச் செய்த அந்த மனிதனிடமிருந்து பணத்தைக் கைக்கூலியாக வாங்கிக் கொண்டு அந்தஸ்திரீயின் மேலேயே குற்றத்தை சாட்டிவிட்டான்.

19. மாதுவும் மனங்க லங்கி வரைகிருள் சாபந் தானும்
பாதகன் தன்பால் பொன்னைப் பற்றியே குற்றஞ் சொன்னாய்
மேதினில் பின்ஜன்ம த்தில் விளங்காரே துணைவர் தாமும்
காதலி சொல்லி யேதான் கரத்தினுல் தெருத்தூள் விட்டாள்.

19. அதன் மேல் ஏழை ஸ்திரீ மனத்தில் கலக்கமுற்றுத் திகலடைத்து சாபத்தைக் கொடுக்கின்றாள். "பாவஞ் செய்தவனிடமிருந்து பணந்தைப் பிடுங்கிகொண்டு என்பேரில் நீ குற்றத்தைச் சாட்டி விட்டாய். பூமியில் மறுஜன்மத்தில் உனக்குச் சகோதரங்கள் விருத்தியாகமாட்டார்கள்" என்று இவள் சாபத்தைக் கொடுத்துத் தெருவிலிருந்த மண் தூளைத் தன்னுடைய கைகளினுல் எடுத்துத் தூற்றினாள்.

20. அந்ததோர் தோஷந் தானும் அனுகிற்று யிவனுக் கேதான்
தென்திசை தலங்கள் சென்று சேதுவின் பதிக்குப் புக்கி
முன்னோர்க்கு வன்ன மீந்து மேவினுன் காலந் நாடு
பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தனன் பிரம்ம சேயாய்.

20. இந்த ஜாதகருக்கு அந்தத் தோஷம் இந்த ஜன்மத்தில் வந்து சம்பவித்தது. இவர் தெற்குத் திக்கிலுள்ள க்ஷேத்திரங்களுக்குப் போய்ப் பிறகு சேதுஸ்தலத்திற்கும் போய்ப் பெரியோர்களுக்கும் வயது சென்றவர்களுக்கும் சாப்பாடு போட்டு இறந்து எமபட்டணததிற்குப் போனுர். பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிராமண குலத்தில் ஆண்குழந்தையாகப் பிறந்திருக்கின்றார்.

21. முன்ஜன்மங் கங்கை சேயா யுதித்தவ னிச்சென் மத்தில்
உன்னத மறையோன் வம்சம் உதித்தகாரணங்க ளென்ன
முன்ஜன்மஞ் சேதுதீர்த்த முயன்றதா லுதித்தா னென்றேம்.
தன்துணை தோஷ மெய்துங் சங்கரி கேட்டி டாயே.

21. முன் ஜன்மத்தில் வேளார் குலத்திற் பிறந்த இந்த ஜாதகர் இந்த ஜன்மத்தில் மேன்மையான பிராமணர் குலத்திற் பிறந்ததற்குக் காரணங்கள் என்ன என்று கேட்க, இவர் தன்னுடைய முன் ஜன்மத்தில் சேதுஸ்தலத்திற்குப் போய் அவ்விடத்திலுள்ளத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்த புண்ணியத்தினுல் இந்த ஜன்மத்தில் பிராமணராகப் பிறந்திருக்கின்றார். இவருடைய சகோதரர்களுக்குத் தோஷம் உண்டாகும் பார்வதியம்மையே ! கேட்பீராக.

22. சேதுக்குச் சென்றதாலே தீராதோ முற்ப வங்கள்
மாதுவுந் திகில டைந்து வரைந்ததோ ஷங்கள் நீங்கா
ஓதுவேன் மணத்தின் காலம் பனிரண்டாம் ஆண்டு தன்னில்
காதலி தென்மேல் திக்கில் கலப்பளாம் என்று சொல்வோம்.

22. இந்த ஜாதகர் முன் ஜன்மத்தில் செய்த பாவங்கள் சேது ஸ்தலத்திற்குப்போய்த் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்த புண்ணியத்தினுல் தீராதோ என்று கேட்க, முன் ஜன்மத்தில் ஸ்திரீ பயந்து கொடுத்தச் சாபங்கள்

விலகா என்று சொன்னூர். இனிமேல் ஜாதகருக்கு விவாகம் நடக்குங் காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவருக்குப் பன்னிரண்டாவது வெதில் தென்மேற்குத் திக்கில் இருந்து வந்து நேரிடுவாள்.

23. மாதுவின் குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி யாவள்
சூதிலாள் வறுமை காணுள் சொல்சுகம் யோக சாலி
தீதுகள் ஒருவர்க் கெண்ணுள் திருமக ளொப்ப தாகும்
மாதவர் பத்தி பூண்பள் மால்மனை போலே வாழ்வள்.

23. ஜாதகருடைய மனைவியின் குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாந்துளிரின் நிறத்தைப்போன்ற ஒருவிதமான சிவப்பு நிறமுடைய தேகத்தை உடையவள். இவள் கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாதவள். கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டாள். சுகமானதும் இனிமையானதுமான வார்த்தைகளை உபயோகிப்பாள். யோகத்தைஉடையவள். எவருக்குங் கெடுதிகளைச் செய்ய எண்ணங் கொள்ள மாட்டாள். இலக்ஷிமிக்குச் சமானமானவளாகவிருப்பாள். முனிவர்களின் மேல் பக்தியும் அன்பும் உடையவளாவாள். மகாவிஷ்ணுவின் மனைவியாகிய இலட்சுமியைப் போல இருந்து வாழ்வாள்.

24. பந்துவும் புகழ வாழ்வள் பரிந்துப சாரஞ் செய்வள்
வந்தவர்க் கன்ன மீவள் வளமுள குடும்பி யாவள்
அந்தவள் துணையாண் நான்கு அம்பிகை யொருத்தி தீர்க்கம்
விந்தையாய் அவள்தன் பூர்வம் விளம்புவோந் தாயே கேளும்.

24. ஜாதகருடைய மனைவி தன்னுடைய பந்துக்கள் தன்னைப் புகழக் கூடிய நிலையில் இருந்து வாழ்வாள். முன்னே பரிந்துவந்து ஆசையுடன் ஜனங்களுக்கு உதவியைச் செய்வாள். தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவாள். செழிப்பான குடும்பஸ்தையாவாள். இவளுடைய சகோதரங்களில் ஆண் சகோதரங்கள் நான்கு பேரும், பெண் சகோதரம் ஒருத்தியும் நீண்ட ஆயுளை உடையவராவார்கள். ஆச்சரியமாக இவளுடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

25. அருணைக்குக் கீழ்ப்பா லாக அணுகிய சிற்றூர் தன்னில்
திருமக ளிக்கு லத்தில் சனித்துமே வறுமை யின்றி
அரன்பக்தி மிகவே கொண்டு அடைந்தனள் காலந் நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளிவளே யென்றோம்.

25. ஜாதகருடைய மனைவி அருணை என்ற திருவண்ணமலை க்ஷேத்திரத்திற்குக் கிழக்குத் திக்கில் அருகிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் இந்த ஜன்மத்திய குலமாகிய பிராமண ஜாதியிற் பிறந்து தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமலிருந்து சிவபெருமான்மேல் அதிக பக்தியும் அன்பும் உடையவளாகி இருந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். பிறகு பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இவள் வந்து பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றோம்.

26. மறு ஜன்மங் காளாத்தி தன்னில் வருவளா மிக்குலத்தில்
திருமகள் விலாசம் போன்று செல்வதி வாழ்வா ளாகும்
பெருந்தாயின் குணத்தைச் சொல்வேன் புண்ணிய மனத்தாளா
[கும்
பெரும்புத்தி யடக்க முள்ளாள் பிறர்குற்றஞ் சொல்லா லாகும்.

26. ஜாதகருடைய மனைவி தன்னுடைய பின் ஜன்மத்தில் காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய பிராமணர் குலத்திலேயே போய்ப் பிறப்பாள். இவளிடத்தில் இலட்சுமி வாசஞ் செய்து கொண்டு இருக்கும்படியான நிலையிலிருந்து வாழ்வாள். இனிமேல் ஜாதகரைப் பெற்றெடுத்தத் தாயாருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் புண்ணியமானதும் நல்லதுமான மனத்தை உடையவளாவாள். பெரிய புத்தியை உடையவள். அடக்கமும் சாந்தமும் உடையவள். அன்னியர் மேல் குற்றங்களையும் குறைகளையும் சொல்லமாட்டாள்.

27. வறுமைக ளில்லா ளாகும் மாஞ்சிவப் புடைய ளாகும்
உறைந்து பின் யோகம் வாய்க்கும் உறன் முறைக் கினிய ளாகும்
திருமகள் துணைவர் நான்கு ஜனித்திடுஞ் சிலவே சேதம்
மறுமமாய் வாதபீடை வந்திடும் பின்னு லேதான்.

27. ஜாதகருடைய தாயார் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டாள். இவள் மாமரத்தின் துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவளாவாள். இவளுக்கு விவாகம் நடந்த பிறகு யோகம் வந்து நேரிடும். இவள் தன்னுடைய பந்துக்களுக்கு இஷ்டமானவளாக விருப்பாள். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் நான்கு பேர் ஆகும். இவர்களில் சிலர் இறந்து விடுவார்கள். இவளுக்குப் பிற்காலத்தில் ரகசியமாய் வாயு ரோகம் வந்து சம்பவிக்கும்.

28. இல்லமும் தென்மே லாகும் இவள்பூர்வஞ் சொல்லக் கேண்மோ
தில்லையில் கங்கை சேயாய் ஜனித்து வறுமை யின்றி
வல்லியும் வாழுந் நாளில் மருவின ஊழைக் கேளாய்ப் ;
புல்லிய ஏழைந் மாது புதல்வருக் கன்னங் கேட்க ;

28. ஜாதகரின் தாயாருடைய வீடு தென் மேற்குத் திக்கில் இருக்கும். இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக. இவள் தில்லை என்ற சிதம்பரத்தில் வேளாளர் குலத்திற் பெண் குழந்தையாகப் பிறந்து கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமல் இருந்து வாழ்கின்ற காலத்தில் இவளுக்குச் சம்பவித்தப் பாவத்தைச் சொல்லுகிறேன், கேட்பீராக. தாழ்ந்த குலத்தைச் சார்ந்த ஓர் ஏழை ஸ்திரீ தன்னுடைய குழந்தைகளுக்காக இவளைச் சாதம் கேட்க ;

29. முகவெறி கொண்டு இன்னேள் முடுக்கினுள் ஏழை தன்னைத்
தகமையாய் ஏழை சொல்வாள் சாரும்பின் ஜன்மந் தன்னில்
மகவுக ளில்லா தாகி வாழ்குவா யென்று சொன்னுள்
பகையாக அந்தத் தோஷம் பரவிற்று இவளுக் கேதான்.

29. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முகத்தில் கோபத்தை உடையவளாகி இந்த ஏழை ஸ்திரீயை மிரட்டி பயப்படுத்தினுள். அதன் மேல் இந்த ஏழை ஸ்திரீ தகுதியாக நீ உனக்கு நேரிடப்போகின்ற மறு ஜன்மத்தில் குழந்தைகள் இல்லாதவளாகி இருந்து வாழக் கடவாய் என்று சொன்னுள். இந்தச் சாபம் இவளுக்கு விரோதமாக வந்து இவளை அடைந்தது.

30. இன்னமும் சிலவே தோஷ மெய்திற்று யிவளுக்கே தான்
தன் வரன் மரணமாகித் தனியளாய்ச் சிலநாள் வாழ்ந்து
தந்தியின் கோஷ்டத்திற்குத் தானவன் தீபம் வைத்து
முன்னோகள் பத்தி பூண்டு மேவினுள் காலந் நாடு

30. ஜாதகருடைய தயாருக்கு இன்னும் சில பாவங்கள் வந்து சம்பவித்தன. இவளுடைய புருஷன் இறந்து பிறகு கொஞ்ச காலம் தனியாக விருந்து வாழ்ந்து, யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளின் கோயிலுக்குத் தீபங்களை ஏற்றி வைத்து, பெரியோர்களையும் வயது சென்றவர்களையும் பக்தியுடனும் அன்புடனும் பூசித்து இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

31. பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளிவளே யென்றேம்
மருவிடும் முன் னூழ் சாபம் மந்தர்கள் தோஷ மெய்துந்
திருமகன் ஒருவர் தானுந் தீர்க்கமாம் காரணஞ் சொல்
அருமையாய் முன் ஜன்மத்தில் யானையின் கோஷ்டத்திற்கு ;

31. ஜாதகருடைய தாயார் பிறகு பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருள் என்று சொல்லுகிரேம். இவளை முன் ஜன்மத்திய சாபம் வந்து அடையும். இவளுக்குப் புத்திர தோஷம் உண்டாகும். ஒரே ஒரு ஆண் குழந்தையாகிய இந்த ஜாதகர் நீண்ட ஆயுளை உடையவராவார். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, சொல்லுகின்ருர். இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில் அருமையாக யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளின் கோயிலுக்கு ;

32. மணிவிளக் கிட்ட புண்ணியம் வரைந்தனம் ஒருவன் தீர்க்கம்
பிணையாக வலக்கால் தன்னில் புக்கிடும் வாத பீடை
கனமுட னிவள்பின் ஜன்மங் கழறுவோங் காஞ்சி தன்னில்
வினையிலா இக்கு லத்தில் மேவுவா ளென்று சொல்வோம்.

32. மணி விளக்கு வைத்து ஏற்றிய புண்ணியத்தினுல் ஓர் ஆண் குழந்தை தீர்க்க வயதை உடையதாகும் என்று சொல்லுகின்றேம். இவளுக்குத் தன்னுடைய வலது காலில் காலைக் கட்டிப் போட்டது போல் தோற்றும்படியான வாத ரோகம் உண்டாகும். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். காஞ்சீபுரத்தில் பாவஞ் செய்யாத இந்த ஜன்மத்திய குலமாகிய பிராமணர் குலத்தில் போய்ப் பிறப்பாள் என்று சொல்லுவோம்.

33. தாதையின் பூர்வஞ் சொல்வேன் சட்ட நாதீசர் வாழும்
முந்தின ஊரிலே தானு மூதித்தன னிக்கு லத்தில்
விந்தையாய்ச் செட்டுச் செய்து மேலவர் பத்தி கொண்டு
நொந்திடும் பேரைக் காத்து நீங்கினுன் காலந் நாடு.

33. ஜாதகருடைய தகப்பனுரின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். சட்டநாதீஸ்வரர் வாழுகின்ற மேன்மையான சிறந்த கிராமத்தில் இந்த ஜன்மத்திய குலமாகிய பிராமணர் குலத்திற் பிறந்தார். ஆச்சரியமாக வியாபாரங்களைச் செய்து பெரியோர் வானேர் இவர்களின் மேல் பக்தியும் அன்பும் உடையவராகி கெட்டு போனவர்களையும் ஏழைகளையும் காப்பாற்றிப் பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய் ;

34. கஞ்சனுல் வரையப் பட்டுக் காவலன் உதித்தா னென்றேம்
தஞ்சமாய்ப் பின் ஜன்மத்தைச் சாற்றுவோம் விருஞ்சி தன்னில்
மிஞ்சிய குலமு திப்பன் விளம்புவோ மிருபா னெட்டில்
வஞ்சியின் மாதம் தன்னில் வரைந்தனந் தந்தை கண்டம்.

34. பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஜாதகருடைய தகப்பனுர இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகின்றேம். இவருடைய பெருமையானபின் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். விரிஞ்சிபுரத்தில் மேன்மையானபின் குலமாகிய பிராமணர் குலத்திற் பிறப்பார். இவர் ஜாதகருக்கு இருபத்தெட்டாவது வயதில் புரட்டாசி மாதத்தில் * இறந்துவிடுவார் என்று சொல்லுகிறேம்.

*குறிப்பு.—தகப்பனுருடைய மரண விஷயம்:—ஜாதகருக்குவயதுஷூ 27-0-0 முதல் ஷூ 28-0-0 முடியும் வரையினும் இராகு தசையில் சனிபுத்தி பின் வரும் 35-வது பாடலில் கண்டுள்ளபடி நடக்கின்றது. பிதுர்லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மீனம் ஆகும். மீனலக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதக சந்திரிகைகளின் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்க்ள் மாரகாதிபதிகள் ஆகின்ருர்கள். இராகு மீனத்திற்குப் பன்னிரண்டில் மாரகாதிபதியாகிய சனியுடன் கூடி மீன லக்கினுதிபதியாகிய குருவைப் பார்க்கின்ருர். ஆகையால் ஜாதகசந்திரிகை 12, 23-ஆவது சுலோகங்கள், தூய்ய கேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல், ஜாதக பாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 60-ஆவது சுலோகம் ஆகிய இவைகளின் பிரகாரம் இராகு தன் தசையில் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்புடையவராகின்ருர். சனி மாரகாதிபதியாகிப் பன்னிரண்டில் இருந்து கொண்டு ஐந்திற்குடைய சந்திரனைப் பார்க்கின்ருர். மேற்கண்ட காரணங்களால் சனி தன் புத்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்ருர்.

35. கரும் பாம்பு[1] தசையிலேதான் காரியின்[2] புத்தி தன்னில்
உறைந்திடும் தந்தை கர்மம் உரைத்தது தப்பா தாகும்
மறுமமாய் மூப்பாந் நாளில் வைகாசி மாதம் தன்னில்
திருமக ளன்னை கண்டஞ் செப்பின மொழிகுன்றுது.

[1]. இராகு. [2]. சனி

35. இராகுவினுடைய தசையில் சனியினுடைய புத்தியில் ஜாதகருடைய தகப்பனருக்குக் கர்மம், அஃதாவது மரணம் நேரிடும். நாங்கள் சொல்லியது தவறிடாமல் நடைபெறும். இரகசியமாய் ஜாதகருக்கு முப்பத்து நான்காவது வயதில் வைகாசி மாதத்தில் * இவருடைய தாயார் இறந்து போய்விடுவாள். நாங்கள் சொல்லிய வார்த்தை தவறாமல் நடக்கும்.

* குறிப்பு.—தாயாருடைய மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷ்ரூ 33-0-0 முதல் ஷ்ரூ 34-0-0 முடியும் வரையிலும் இராகு தசையில் புகர் என்ற சுக்கிர புத்தி பின் வரும் 36-ஆவது பாடலில் கண்டுள்ளபடி நடக்கின்றது. மாதுர் லக்கினம் நான்காவது பாவமாகிய துலாம் ஆகும். இதற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகைகளின் பிரகாரம் சூரியனும், குருவும் மாரகாதிபதிகள் ஆகின்றார்கள். பராசரஹோரை சில பதிப்பு பிரகாரம் அங்காரகன் கூட மாரகாதிபதியாகின்றார். ராகு மாரக ஸ்தானங்களாகிய துலாத்திற்கு இரண்டு ஏழிற்குடையவரும் மகராதிபதியுமாகிய அங்காரகனுடன் கூடி இருப்பதால், ஜாதகசந்திரிகை 12, 23-ஆவது சுலோகங்களின் பிரகாரம் தன் தசையில் மாதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்புடையவராக விருக்கின்றார். சுக்கிரன் மாரகாதிபதியாகிய அங்காரகனுடைய வீட்டில் லக்கினத்திற்கும் எட்டிற்கும் உடையவராகி இருந்து எட்டைப் பார்க்கின்றார். ஆகையால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் 82-ஆவது நம்பர் ஜாதகம் 24-ஆவது பாடல் வியாக்கியானம் இவைகளின் பிரகாரம் சுக்கிரன் தன் புத்தியில் மாதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகின்றார்.

36. அந்ததோர் காலந் தன்னில் அரவினில் [1] புகர் [2] புசிப்புச்
சந்ததம் நடக்கு மென்றேஞ் சாற்றிய மொழி குன்றாது
வந்தவன் தனக்குப் புத்திரர் வரைகிறே மாண்பால் ரண்டு
விந்தையாய்ப் பெண்பால் நான்கு மேவிடுந் தீர்க்க மாக.

36. ஜாதகருடைய தாயார் இறந்து போகின்ற காலத்தில் இராகுவினுடைய தசையில் சுக்கிரனுடைய புத்தி நடக்கும் என்று சொல்லுகின்றேம். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிப் போகாமல் நடக்கும். ஜாதகருக்குப் புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஆச்சரியமாக நான்கு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாகப் பிறந்திருப்பார்கள்.

37. உதித்தவன் மரண காலம் உரைகிறே மறுபா ஹறில்
சதியிலாச் சிம்ம மாதஞ் சத்தமி வளர் பக் கத்தில்
அதிபன்தன் உடலம் ஏகும் வரைகிறேம் பின்ஜன் மத்தைக்
கதிதருங் காளாத்தி தன்னில் கலப்பனும் க்ஷத்திரிய சேயாய்.

37. ஜாதகருடைய மரண காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம், இவர் தனக்கு அறுபத்தாறுவது வயதில் * ஆவணி மாதத்தில் வளர்பிறையில் சத்தமி திதியில் இறந்து இவருடைய தேகம் மறைந்துவிடும். இவருடைய

[1]. இராகு [2]. சுக்கிரன்

மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். மோக்ஷத்தைத் தருகின்ற காளஹஸ்தி என்னும் க்ஷேத்திரத்தில் க்ஷத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார்.

* குறிப்பு.—ஜாதகர் மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷ்ரூ 65-0-0 முதல் 66-0-0 முடியும் வரையிலும் சனி தசையில் சுக்கிரபுத்தி சூரியபுத்தி இவைகள் நடக்கின்றன. சிம்மமாதம் என்ற ஆவணி மாதத்தில் சூரிய புத்தி நடக்கின்றது. கடகலக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகைகளின் பிரகாரம் சனி சுக்கிரன் புதன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றார்கள். சனி, மாரகஸ்தானங்களாகிய ஏழு எட்டிற்குடையவராகி எட்டில் இருந்துகொண்டு லக்கினதிபதியாகிய சந்திரனையும் பத்தாவது பாவத்தையும் பார்ப்பதுடன் பத்திற்குடைய அங்காரகனுடன் கூடி இருக்கின்றார். ஆகையால் துய்யகேரளம் எட்டாவது பாவம் 14-ஆவது 20-ஆவது பாடல்களின் பிரகாரம் சனி தன் தசையில் ஜாதகருக்கு மாரகஞ் செய்யும் அமைப்புடையவராகின்றார். சூரியன் ஏற்கனவே மாரகாதிபதியாகி மாரக ஸ்தானமாகிய இரண்டிற்குடையவராகி மாரகாதிபதியாகிய புதனுடன் கூடி மாரகாதிபதியாகிய சுக்கிரனுடைய வீட்டில் இருக்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் சூரியன் தன் புத்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

38. வந்தவன் பொதுயோ கத்தை வரைகிறேஞ் ஜனனந் தொட்டு
அந்தவன் மரண மட்டும் அன்னமுங் குறைவு றுதான்
தன்தனஞ் சேர்ப்பா னுகுஞ் ஜகராசர் தன்பால் சென்று
இந்தவன் ஜீவிப்பா னும் ஈச்வரி கேட்டி டாயே.

38. ஜாதகருடைய பொதுவான யோகத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் தன்னுடைய ஜனன காலம் முதற்கொண்டு மரண காலம் வரையிலும் சாப்பாட்டிற்குக் குறைவும் கஷ்டமும் இல்லாதவராவார். இவர் தன்னுடைய சுயார்ஜித பணத்தைச் சேர்த்துவைப்பார். பூமிக்குடைய பெரிய அரசர்களிடம் போய் இவர் ஜீவனஞ் செய்வார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

39. எப்போது ராஜ யோகம் எய்திடும் விவரஞ் சொல்வாய்ச்
செப்புவே னிருபா னேழில் ஜகராசர் பக்கல் சேர்ந்து
ஒப்புவா னதிகா ரங்கள் உயர்வான தொழிலு மேற்பன்
மெய்ப்புடன் கல்வி யாலே விளம்புவோ மரசு தானே.

39. ஜாதகருக்கு எந்தக் காலத்தில் இராஜ யோகம் நேரிடும், அதனுடைய விவரத்தைச் சொல்லுவீராக என்று கேட்க, சொல்லுகின்றார். இருபத்தேழாவது வயதில் இவர் பூமிக்குடைய பெரிய அரசர்களிடம் போய் மேன்மையானத் தொழிலை ஏற்றுக்கொண்டு அதிகாரங்களை அடைவார். இவர், தன்னுடைய வித்தையின் பலனுக அரசு செய்யுந் தொழிலை அடைவார்.

குறிப்பு.—பர்வத யோக விஷயம் :—இந்த ஜாதகத்தில் இரண்டிற்குடைய சூரியனும் பன்னிரண்டிற்குடைய புதனும் கூடி நான்கில் கேந்திரத்தில் இருப்பதால் ஜாதகாலங்காரம் 304-ஆவது பாடல் பிரகாரம் பர்வதயோகம் இருக்கிறது. லக்னதிபதியான சந்திரன் இருக்கின்ற வீட்டிற்குடையவனுன சூரியன் கேந்திரத்தில் இருப்பதால்கூட ஜாதகாலங்காரம் 344-வது பாடல் பிரகாரம் பர்வதயோகம் உண்டாகினறது. மேலும் சூரியனும் புதனும் கூடி நான்கில் இருப்பதால் ஜாதகாலங்காரம் யோகபலனில் முதலாவது பாடலாகிய இருநூற்றுப்பதினன்காவது பாடல் பிரகாரமும் யோகம் உண்டாகின்றது. சூரியன் நீசனுகி இருக்கின்ற ராசி அதிபதியாகிய சுக்கிரனும் இந்த ராசியில் உச்சமாகிற சனியும் சந்திரனுக்குக் கேந்திரத்தில் இருப்பதால் ஜாதகாலங்காரம் 294-ஆவது பாடல் பிரகாரம் சூரியனுடைய நீசத்திற்குப் பங்கம் ஏற்பட்டுவிடுகிறது.

40. பாலகன் ஜனன காலம் பருதியின் தசையிருப்புச்
சாலவே ஆண்டு நாலுந் தங்கிடுந் திங்க ளேழும்
ஏலவே பிணியு மெய்தும் இவன்துணை விருத்தி சேதங்
கோலமா யன்னை வர்க்கங் கூறுவோஞ் சூதகங்கள்.

40. ஜாதகர் பிறந்த காலத்தில் சூரிய[1] மகா தசையில் இருப்பு நானகு வருஷமும் ஏழு மாதமும் ஆகும். இந்தக் காலத்தில் ஜாதகருக்கு நோய் வந்து சம்பவிக்கும். இவருக்குச் சகோதரர்கள் உற்பத்தியாகி இறந்து விடுவார்கள். இவருடைய தாயாருடைய பந்துக்களில் சூதகங்கள் நேரிடும் என்று சொல்லுகின்றோம்.

41. இன்னமும் விவர மாக யியம்புவோம் பின்பால் சேதி
தன்மனை யிவன்பின் னுலே சாருவான் காலந் நாடு
அன்னவன் தேடும் செம்பொன் அறுரண்டு ஆயி ரந்தான்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

41. இன்னமும் விவரமாக விஷயங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகருடைய மனைவி இவருக்குப் பின்னுல் இறந்து எமப்பட்டணத்திற்குப் போய்ச் சேருவாள். ஜாதகர் சம்பாதிக்கும்படியான தனம் மொத்தம் பன்னிரண்டாயிரம் பொன் ஆகும் என்று சொல்லுகின்றோம். மேன்மையான சிறந்த யானைமுகத்தை உடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

1. சூரியன்.

ஜாதகம் 100.

1. கடகலக் கின மதாகக் கதிர்[1] 1 புதன் ஏழில் தங்க
முடவனும்[2] 2 குருவும் பத்தில் அருச்சிகன்[3] 3 புகரு[4] 4 மாறில்
விட 5 மந்தில் சேயீ[5] 6 ராறில் மெய்ஞ்ஞானி[6] 7 லாப 8 மேற
உடன்பலன் சொல்லு மென்று உத்தமி கேட்க லுற்றுள்.

	குரு சனி	கேது	அங்காரகன்
	இராசி		லக்கினம்
சூரியன் புதன்	சக்கரம்		
சுக்கிரன் சந்திரன்	ராகு		

மூலம் 3-ஆம் பாதம் : கேது தசை சுமார் ௵ 3-3-0.

1. ஜன்ம லக்கினம் கடகமாகிச் சூரியனும் புதனும் அதற்கு ஏழாவது ஸ்தானத்திலும், சனியும் குருவும் பத்திலும், சந்திரனும் சுக்கிரனும் ஆறிலும், இராகு ஐந்திலும், அங்காரகன் பன்னிரண்டிலும், கேது பதினென்றிலும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்டார்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் கேதுவும், மிதுனத்தில் சந்திரனும் சனியும், கடகத்தில் புதனும், துலாத்தில் ராகுவும், விருச்சிகத்தில் குருவும் சுக்கிரனும், தனுசில் அங்காரகனும் கும்பத்தில சூரியனும் ஆகும். அங்காரகன் வக்கிரகதியில் இருக்கின்றார்.

2. தென்முனி புகலு கின்றார் ஜனித்திடு மாண்பால் ஜன்மம்
வந்தயில் வடக்கு வாசல் யானையின் கோஷ்டங் கீழ்ப்பால்
அந்தரி காளி உத்தரம் அரன்கோஷ்டம் வடகீ ழாகும்
முந்துமால் வடமே லாகும் முசல்மானின் கோஷ்டந் தென்மேல்.

2. அகஸ்திய மக ரிஷியானவர் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு வடக்கு வாசலை உடையதாகும். கிழக்குத் திக்கில் யானைத் தொழுவம் அல்லது விநாயகர் கோவில் இருக்

1. சூரியன் 2. சனி 3. சந்திரன்
4. சுக்கிரன் 5. இராகு 6. அங்காரகன்
7. கேது 8. பதினென்று

கும். பார்வதியம்மன் கோயிலும் காளியம்மன் கோவிலும் வடக்குத் திக்கிலும் சிவபெருமானுடைய கோவில் வடகிழக்குத் திக்கிலும் இருக்கும். மகா விஷ்ணுவின் கோயில் வடமேற்குத் திக்கில் இருக்கும். முஸ்லிம்களுடைய மசூதி தென் மேற்குத் திக்கில் இருக்கும்.

3. இந்தநல் லடையா ளத்து ளிறங்குவான் சேஷ்ட னாகத்
தந்தைதாய்த் துணைவர் யோகந்தன்மனைப் புத்திர யோகம்
முன்பின் ஜன் மங்கள் யாவும் உரைக்கிறோ மிந்நூல் தன்னில்
கந்தனை யீன்ற மாதே கழறுவோங் கேட்டி டாயே.

3. இப்படிப்பட்ட நல்ல அடையாளங்களையுடைய விடத்தில் ஜாதகர் மூத்த குழந்தையாகப் பிறப்பார். இவருடைய தகப்பனுர், தாயார், சகோதரர்கள் ஆகிய இவர்களுடைய யோகங்கள், ஜாதகருடைய மனைவி, மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்கள், முன் ஜன்மம், மறு ஜன்மம் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்ருேம், முருகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

வேறு

4. தந்தைகுண மாஞ்சி வப்பன் சமதேககத்தான்
சரசமாய் வார்த்தையுள்ளான் சாந்தவானும்
கந்தன்மேல் பத்தி யுள்ளான் கல்விமானும்
கடந்தபேர்க் கன்னமீவன் கபடில்லாதான்
நிந்தைபெரு னீகை யுள்ளான் நீதமுஞ்சீலன்
நேமியதை விருத்தி செய்வன் நிருபரிஷ்டன்
அந்தவனும் பூசநாள் மீனராசி, அவதரிப்பன்
கணக்குத்தொழில் அறிவித்தோம் யாம்.

4. ஜாதகருடைய தகப்பனுர் மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒரு வித மான சிவப்பு நிறத்தை உடையவர். நடுத்தரமான தேகத்தை உடையவர். இனிமைமானதும், சுகமானதுமான வார்த்தைகளை உடையவராவார். சாந்த மான குணத்தை உடையவராவார். முருகக் கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உடையவராவார். வித்தையை உடையவராவார். உலகப்பற்றைக் கடந்து அதனை விட்டுவிட்டவர்களாகிய பரதேசிகளுக்குச் சாப்பாடு போடுவார். கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாதவர். அபவாதம் பழி இவைகளை அடைய மாட்டார். கொடுக்கும் தன்மை தயாளகுணம் இவைகளை உடையவராவார். நன்னெறியும் நீதியும் நல்லொழுக்கமும் உடையவராவார். நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை உற்பத்திச் செய்வரா். அழகுள்ளவராவார். இவர் பூசம் நட்சத்திரத்தில் மீன லக்கினத்தில் பிறந்திருப்பார். இவருக்குக் கணக்கு வேலை என்று நாங்கள் சொல்லுகின்ருேம்.

5. வித்தையுளன் கிருஷி செய்வன் பூமிவிருத்தி
மேன்மக்க ளுறவு கொள்வன் விருந்தோர்நேயன்
புத்தியினில் மதிமந்திரி செலவு செய்வான்
பொய்பகரான் தொழில்மூலம் பகர்வான் கொஞ்சம்

குத்தமதை மனதில்வையான் கொடுமை காட்டான்
குருஉபதேசம் பெருமை நற்குண வானுவன்
பத்திவரும் துணைஒன்று பதரேயாகும
பாரின்மிசை தனியாகப் பாலன் வாழ்வன்.

5. ஜாதகருடைய தகப்பனுர் கல்வியை உடையவர். விவசாயத் தொழிலையும் செய்வார். நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை உற்பத்தி செய்வார். மேலோர்களுடைய சிநேகிதத்தை அடைவார். விருந்தினர்களுக்குச் சிநேகித ராக விருப்பார். அறிவில் மந்திரியைப் போல புத்தி உடையவர். செலவைச் செய்வார். பொய்யைச் சொல்லமாட்டார். ஆனுல் தான் செய்யும் வேலை நிமித்தம் கொஞ்சம் பொய்யைச் சொல்லுவார், தன்னுடைய மனத்தில் கெட்டதை வைத்துக் கொண்டிருக்கமாட்டார். கெட்ட விஷயங்களைக் காண்பித்துக்கொள்ளமாட்டார். குருவினுடைய உபதேசம் பெருமை நல்ல குணம் இவைகளை உடையவராவார். இவருக்குச் சகோதரம் ஒன்றே, அதுவும் உபயோகமில்லாததாகப் போய்விடும். இறந்துவிடும். ஆகையால் இவர் பூமியில் தனியாக விருந்து வாழ்வார்.

6. துன்பம் துணையென்று ரைத்தீர் விவரஞ்சொல்வரய்
தந்தையின் தானத்து திரியத்தில்
நன்னை யில்லா கேது நிற்கத் துணைவர் தோஷம்
நாயகனு பூர்வவினை நவின்ருேம் யாங்கள்
என்னவினை தான்செய்தான் யியம்பு வீர்கள்
இருடிகள் வாழ்தண்ட காவனத்திலேதான்
முன்குலத்தில் தானுதித்து கிராமச் செட்டு
மேதினியை விருத்திசெய்துவாழுந் நாளில் ;

6. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரம் இறந்துவிடும் என்று சொன்னீர். அதனுடைய விவரத்தைச் சொல்லுவீர் என்று கேட்க முனிவர் சொல்லுகின்ருர், தகப்பனுருடைய ஸ்தானமாகிய ஒன்பதாவது வீட்டிற்கு மூன்ருவது ஸ்தானத்தில், அஃதாவது பதினேராவது பாவத்தில் நன்மையாகவில்லாத கேது இருப்பதால் சகோதர தோஷம் உண்டாகும். இது இவருடைய முன் ஜன்மத்திய பாவத்தினுல் உண்டானது என்று நாங்கள் சொல்லுகின்ருேம். இவர் என்ன பாவங்களைச் செய்தார் என்ப தைச் சொல்லுகின்ருர். ரிஷிகள் வாசஞ் செய்கின்ற தண்டகாவனத்தில் இவர் முதல் குலமாகிய பிராமணர் குலத்திற் பிறந்து, தன்னுடைய கிராமத் திய வியாபாரம் செய்து கொண்டும், நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை உற் பத்தி செய்துகொண்டும் வாழுகின்ற காலத்தில்.

*** குறிப்பு.—தகப்பனுருக்குச் சகோதர தோஷ விஷயம் :—**தகப்பனுருக்கு இளைய சகோதர ஸ்தானம் ஒன்பதாவது வீட்டிற்கு மூன்ருவது வீடாகிய ரிஷபம் ஆகும். இதில் கேது இருப்பது தோஷமாகும். இதற்குடைய சுக்கிரன் திருதியாதிபதியாகிய சந்திரனுடன் கூடி ரிஷபத்திற்கு எட்டில் மறைந்திருப்பது தோஷமாகும். மேலும் தகப்பனுருக்கு மூத்த சகோதர

ஸ்தானம் ஒன்பதிற்குப் பதினோராவது வீடாகிய மகரம் ஆகும். இதற்குடைய சனி திருதிய விரயாதிபதியாகிய குருவுடன் கூடி நீசமாகவிருப்பது தோஷமாகும். இதை ராகுவும் அங்காரகனும் பார்ப்பதும் தோஷமாகும்.

7. வாழ்நாளில் வினையை சொல்வேன் வேறுமாது
வரனின்றித் தாயில்லம் வாசம்செய்யத்
தாழ்வானேன் அவள்பேரில் மோகங் கொண்டு
சரசமாய் வார்த்தைசொல்ல யிசையாளாகி
தோழிசின்னாள் சென்றுதனி யாகச் செல்லத்
தூதுவனும் அவன்பின்னால் தொடர்ந்துமேதான்
பாழான காமத்தால் பலவந்தத்தால்
பாவைதனைப் போகமுற்றான் பைங்கொடித் தான

7. ஜாதகருடைய தகப்பனுருக்குச் சம்பவித்த பாவத்தை பற்றிச் சொல்லுகின்றேன். வேறே ஒரு ஸ்திரீயானவள் தனக்குப் புருஷனில்லாமல் தன்னுடைய தாயாருடைய வீட்டில் வாசஞ் செய்து கொண்டிருக்கும்போது ஒரு தாழ்ந்த குலத்திற் பிறந்தவன் அவள்மேல் காம ஆசையை உடையவனாகி இன்பமான வார்த்தைகளை அவளிடம் சொல்ல அவள் அதற்குச் சம்மதப் படாததால், சில நாட்கள் சென்ற பிறகு அவள் தனியாகப் போய்க்கொண்டிருக்கையில் அவன் அவள் பின்னாலேயே போய்க் கெட்ட காம ஆசையினால் அவளை பலவந்தப்படுத்தி அவளிடத்தில் சம்போகஞ் செய்தான். அதற்கு மேல் அவள் ;

8. மனவருத்தமுடன் துணைவரோ டிவ்வாறு சொல்ல
வரிபோலே கோபமுற்று மறையோன் பக்கல்
வினையதனைத் தான்புகலத் தூதன் தன்னால்
வீண்வம்பு செய்தவனை அழைத்துக் கேட்கத்
தனமவனால் பெற்றுப்பெண் மேல் குற்றஞ்
சூற்றினான் அம்மாது தயங்கி யேதான்
தனமாசை யாகையினால் என்மேல் தோஷஞ்
செப்பியதோர் பாவிக்கு மறுஜன்மத்தில் ;

8. தன்னுடைய மனத்தில் வருத்தமுண்டாகித் தன்னுடைய சகோதரனிடம் நடந்த இந்தச் சங்கதியைச் சொல்ல அவன் வண்டைப் போலக் கோபத்தை உடையவனாகிப் பிராமணரிடம், அஃதாவது ஜாதகருடைய தகப்பனாரிடம் போய் நடந்த கெட்ட செய்கையைச் சொல்ல, அவர் தன்னுடைய வேலையாளை அனுப்பிக் குற்றத்தைச் செய்தவனை வரவழைத்து அவனைக் கேட்டுப் பிறகு அவனிடமிருந்து பணத்தைக் கைக்கூலியாக வாங்கிக் கொண்டு அந்த ஸ்திரீயின் மேலேயே குற்றத்தைச் சாட்டிவிட்டார். அதன் மேரில் அந்த ஸ்திரீ திகைத்துக் கலங்கி பணத்தின் மேல் ஆசை மேலிட்டு என் மேல் குற்றத்தைச் சொல்லிவிட்ட பாவியாகிய நீ உன்னுடைய பின் ஜன்மத்தில் ;

9. என்போலே துணையின்றி மகவு மின்றி
இரணியமுந் தானின்றி வாழ்வாய் நீயுந்
துன்பமதாய் மாதுசொல்லி தெருத் தூள் விட்டாள்
சேர்ந்ததந்த வினை தானுந் தீரனுக்கு
ன்னவனு மந்தியத்தில் வாய்ப் புண்கண்டு
அந்தகன்தன் நாடடைந்து அயனும் லக்கம்
வந்தவனும் மாதுவின்தன் சாபம் போலே
வனுகாது துணையென்று வசிஷ்டர் சொல்வார்.

9. உனக்கு என்னைப் போல சகோதரி இல்லாமலும் குழந்தைகள் உனக்கு இல்லாமலும், தனமும் இல்லாமலும் நீ வாழக்கடவாய் என்று சாபங்கொடுத்துவிட்டு மனம் நொந்து தெருவிலுள்ள மண்தூளை வாரி தூவினுள். ஜாதகருடைய தகப்பனுருக்கு அந்தச் சாபம் வந்து அடைந்தது. இவர் தன்னுடைய கடைசிக் காலத்தில் தன்னுடைய வாயில் புண் உண்டாகி இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிறகு பிரம தேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். முன் ஜன்மத்தின் ஸ்திரீயின் சாபத்தைப் போலவே இவருக்குச் சகோதரர் கிடையாது என்று அகஸ்தியர் சொன்னர். அதன் மேல் வசிஷ்டர் கேட்கின்றார்.

வேறு

10. வேதத்தோன் குலமுன் ஜன்மம் விளங்கின னிச்சென் மத்தில்
தீதாகக் கர்ண சேயாய் ஜனித்தகா ரணங்கள் சொல்வாய்
மாதவர் பத்தி யின்றி மறைகளை விரும்பா தாகி
வேதியன் வாழ்வ தாலே விளங்கின னிவனே யென்றேம்.

10. முன் ஜன்மத்தில் வேதங்களை ஓதுகின்ற பிராமணர் குலத்தில் பிறந்த ஜாதகருடைய தகப்பனுருக்கு இந்த ஜன்மத்தில் கெடுதியாகக் கருணீகர் குலத்தில் பிறவி நேரிட வேண்டிய காரணம் என்ன ? அதைச் சொல்லுவீர் என்று கேட்க, தவஞ் செய்கின்றவர்கள் முனிவர்கள் ஆகிய இவர்களிடத்தில் பக்தியும் அன்பும் இல்லாமல் வேதங்களையும் விரும்பாமல் அந்த முன் ஜன்மத்திய இந்தப் பிராமணர் வாழ்ந்து வந்தால் இந்த ஜன்மத்தில் இவ்விதமாகப் பிறந்தார் என்று சொல்லுகிறோம்.

11. சொன்னயிக் குணத்தா னுக்கு சுதனுமே சேஷ்ட னுக
அன்னவ னுதிப்பா னுகும் அவன்குணங் கூறக் கேண்மோ
தன்னினத் தவரைக் காப்பான் சாந்தவான் கிருஷி செய்வன்
கன்னென மொழியு முண்டு கல்விமா னுக சாலி.

11. இங்குச் சொல்லப்பட்டக் குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் ஜேஷ்ட குமாரனுகப் பிறப்பார். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவர் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார். சாந்தமுடையவர். விவசாயத் தொழிலைச் செய்வார். சர்க்கரையைப் போன்ற இனிமையான வார்த்தைகளையுடையவர், இவர் படித்தவராவார். நுட்பமான புத்தியையும், அறிவையும் உடையவராவார்.

12. குலத்தொழில் புரிவா னுகுங் குவலயம் விருத்தி செய்வன்
நிலையதைக் காப்பா னுகும் நீத்தோர்க்கு அன்ன மீவன்
தலைவாசஞ் செய்வா னுகுந் தக்கோர்கள் நேயங் கொள்வன்
விலைமாதர் மோகங் கொள்வன் வீண்வம்பு புகலா னுமே.

12. ஜாதகர் தன்னுடைய குலாசாரத்தை அநுஷ்டிப்பவராவார். நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை உற்பத்தி செய்வார். தன்னுடைய தொழிலையும் அந்தஸ்தையும் காப்பாற்றிக் கொள்ளுவார். உலகப்பற்றைவிட்டு விட்டவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாடு போடுவார். புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவார். நல்ல மனிதர்களுடையவும் மேலோர்களுடையவும் சிநேகத்தை அடைவார். தாசிகளிடத்தில் காம ஆசையை உடையவராவார். வீணுகச் சண்டையை விளைவிக்கக்கூடிய வார்த்தைகளைச் சொல்ல மாட்டார்.

13. வறுமையெப் போதுங் காண னறுமுகன் பத்தி பூண்பன்
சிறுமையோர்க் குதவி செய்வன் சகடுவா கனமு மேற்பன்
கருவினேர் நசிக்க வைப்பன் கரமதில் சங்கு சக்கரம்
பருவத ரேகை யுண்டு பணையோர்க ளுடைய னுமே.

13. ஜாதகர் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் எப்போதும் அடைய மாட்டார். ஆறுமுகங்களை உடைய முருகக் கடவுளின் மேல் பத்தியும் அன்பும் உடையவராவார். ஏழைகளுக்கும் கஷ்டப்படுபவர்களுக்கும் உபகாரஞ் செய்வார். வண்டி முதலிய சவாரி வாகனமும் உடையவராவார். கர்வம் இறுமாப்பு அகங்காரம் இவைகளை உடையவனை நாசஞ் செய்து விடுவார். இவருடைய உள்ளங்கையில் சங்கு சக்கர ரேகை என்ற ஒருவித ரேகை உண்டு. பர்வத ரேகை என்ற ஒருவித ரேகையும் உண்டு. பயிரிடும் நிலங்களும் ஏர்களும் இவருக்கு உண்டு.

14. தன்துணை காண னுகுஞ் சாற்று வீரந்தச் சங்கை
மன்னுசேய் விரயம் புக்க மதியுமே ஆறில் தங்க
அன்னவன் துணைகள் தோஷம் அன்னைக்கு மவ்வா றென்றேங்
கன்னிகை வருகுங் காலங் கழறுவோ மிருப தாண்டில் ;

14. ஜாதகருக்குச் சகோதரர்கள் கிடையா. இதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, சொல்லுகின்ருர். அங்காரகன் விரயம் என்ற பன்னிரண்டாவது பாவத்தில் இருப்பதாலும், சந்திரனும் ஆருவது வீட்டில் இருப்பதாலும் ஜாதகருக்குச் சகோதரதோஷம்† இருக்கின்றது. தாயாருக்கும் இவ்விதமாகவே தோஷம் இருக்கின்றது என்று சொல்லுகின்றேம். இவருக்கு மனைவி வந்து நேரிடுகிற காலத்தைப் ‡ பற்றிக் சொல்லுகின்றேம். இவருக்கு இருபதாவது வயதில் ;

† குறிப்பு.—(1) சகோதர தோஷ விஷயம்:—இளைய சகோதர ஸ்தானம் மூன்ருவது வீடாகிய கன்னியாகும். இதற்குடைய புதன் சூரியனுடன் கூடி இருப்பதால் மணிகண்டகேரளம் சகோதரகாண்டம் ஆருவது பாடலில்

"பருதியும் மூன்றேன் கூடில் பாலன்பின் இல்லைமாதே"

என்ற பிரகாரம் சகோதரதோஷ முண்டு. புதனைச் சனியும் அங்காரகனும் ராகுவும் பார்ப்பது தோஷமாகும். மூன்ருவது பாவத்தை ராகுவும் அங்காரகனும் பார்ப்பதும் தோஷமாகும். அங்காரகனைச் சனி பார்ப்பதும் தோஷமாகும். மூத்த சகோதர ஸ்தானமாகிய பதிரென்றில் கேது இருப்பதும் தோஷமாகும். இதற்குரிய சுக்கிரன் லக்கினத்திற்கு ஆறிலும் தன் வீட்டிற்கு, அஃதாவது தன் பாவத்திற்கு எட்டிலிருப்பதும் தோஷமாகும். மூத்த ஆண் சகோதரகாரகனுகிய குரு சனியுடன் கூடியிருப்பதும் தோஷமாகும். லக்கினுதிபதியாகிய சந்திரன் ஆறில் மறைந்து அங்காரகனுல் பார்க்கப்பட்டுக் கேது காலாகிய மூல நட்சத்திரத்தில் இருப்பதும் தோஷமாகும். குடும்பஸ்தானமாகிய இரண்டாம் வீட்டிற்குடைய சூரியனை அங்காரகனும் சனியும் ராகுவும் பார்த்திருப்பது, இரண்டைக் குரு பார்த்திருந்தபோதிலும், சூரியனுடன், புதன் சம்மந்தப்பட்டிருந்தபோதிலும் மொத்தத்தில் தோஷத்தை விளைக்கக்கூடியதாகும், ஆகையால் ஜாதகருடைய சகோதரபாவத்திற்கு அதிக தோஷம் இருக்கின்றது.

‡ (2) விவாக விஷயம் :—லக்கினத்திற்குக் கேந்திரத்தில் புதனும் குருவும் இருப்பதாலும், லக்கினத்திற்கு ஒருபுறமாக நான்கு ராசிக்குள்ளேயே கீர்த்திஸ்தானுதிபதி என்ற பத்திற்குடைய அங்காரகனும் சனியும் இருப்பதாலும் ஜாதகசிந்தாமணி ஏழாம்பாவம் 973, 974-ஆவது பாடல்களின் பிரகாரம் வாலிபத்தில் ஜாதகருக்கு விவாகம் நடக்கும்.

15. மாதுமே கீழ்ப் பால் நேரும் வரைகிறே மவன்கு ணத்தைச்
சூதிலாள் மாஞ்சி வப்பள் துரிசான கோப மேற்பள்
காதலி யோக சாலி கணவன்தன் மனதுக் கேத்தோள்
வேதனை நாபிச் சூடு மேவிடும் நடையும் நன்மை.

15. மனைவி கிழக்குத்திக்கில் இருந்து வருவாள் என்று சொல்லுகிறேம், இவளுடைய குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவள் கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாதவளாவாள். மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிகப்பு நிறமுள்ளதேகத்தை உடையவள். கெட்ட கோபத்தை உடையவள். யோகத்தை உடையவள், இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளக்கூடியவளாவள். இவளுடைய வயிற்றில் நாபிச்சூட்டால் உபத்திரவம் உண்டாகும். இவள் நல்ல நடவடிக்கை உடையவள்.

16. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணேஞ்
சுத்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று சொல்வோங்
குத்தத்தைச் சொல்லு மென்னக் கொடுவிஷ மஞ்சில் தங்க
வித்தகர் சேய்வி யத்தில் மேவின பலத்தி னுலே

16. ஜாதகருக்குக் குழந்தைகள் பிறந்து விருத்தியாகும் விஷயத்தைப் பற்றிச் சொல்ல யாதொரு வலிவும் கிடையாது. குழந்தைகள் ஒரு சமயம் பிறந்தாலும் அவைகள் இறந்துபோய் விடும்† என்று சொல்லுகின்றேம். கெடுதியை விளைவிக்கின்ற காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவேபதில்

சொல்லுகின்றார். கொடிய விஷமாகிய ராகு ஐந்தாவது பாவத்திலிருப்ப தாலும் அங்காரகன் வியமாகிய பன்னிரண்டாவது பாவத்தில் இருப்பதாலும் இந்தக் கெட்ட பலங்களால் ;

† குறிப்பு.—புத்திரதோஷ விஷயம் :—புத்திர பாவங்களாகிய ஐந்தாவது வீடு, ஒன்பதாவது வீடு, இந்த வீடுகளுக்கு அதிபதிகள் குரு ஆகிய இந்த அம்சங்களைப் புத்திர விஷயமாகக் கவனிக்கவேண்டும். லக்கினாதிபதி, ஏழாம் வீடு, ஏழாம் வீட்டிற்குடையவர் ஆகிய இந்த மூன்று அம்சங்களையுங் கூடப் புத்திர விஷயமாகக் கவனிப்பதுண்டு. இங்கு ஐந்தாவது பாவத்தில் இராகு இருப்பது தோஷமாகும். ஐந்திற்குடைய அங்காரகன் லக்கினத்திற் குப் பன்னிரண்டிலும் ஐந்திற்கு எட்டிலும் மறைந்திருப்பது தோஷமாகும். புத்திரகாரகனாகிய குரு சனியுடன் கூடி இருப்பது தோஷமாகும். இன்னொரு புத்திரஸ்தானமாகிய ஒன்பதாவது பாவத்திற்குடைய குரு சனியுடன் கூடி இருப்பது தோஷமாகும். இந்த ஒன்பதைக் கேது பார்ப்பதும் தோஷமாகும். எழிற்குடைய சனி நீச்சனாகி விட்டார். ஏழில் சூரியன் இருப்பதும் ஏழில் ஞானியாகிய புதன் இருப்பதும் புத்திர தோஷமாகும். ஏழிற்குடைய சனி ஐந்திற்குடைய அங்காரகனைப் பார்ப்பதும் புத்திர தோஷத்தை விளைவிக்கும். ஆகையால் புத்திரதோஷம் அதிகமாக விருக்கின்றது.

17. சுதர்தோஷ மென்று சொல்வோஞ் சேயின் முன்ஜன் மந்தன்னில்
அதிகமாய் வினைகள் செய்தான் அடைந்தது அந்தத் தோஷம்
அதிபன்செய் வினைக ளென்ன வறிவிப்பீர் விவரந் தன்னைக்
கதிதருந் திருச்செந் தூரில் கலந்தனன் ரெட்டி வமிசம்.

17. புத்திரதோஷம் உண்டு என்று சொல்லுகின்றோம். மேலும் ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் அதிகமான பாவங்களைச் செய்திருக்கின்றார். அந்தத் தோஷங்கள் எல்லாம் இவரை இந்த ஜன்மத்தில் வந்து அடைந் திருக்கின்றன. இவர் செய்த பாவங்கள் என்ன என்பதை விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்க, பதில் சொல்லுகின்றார். மோக்ஷத்தைக் கொடுக்கின்ற திருச்செந்தூர் என்னும் ஸ்தலத்தில் ரெட்டியாருடைய குலத் தில் ஜாதகர் பிறந்தார்.

18. பாரியும் மதலை யுண்டாய்ப் பாரினல் சீவித் தேதான்
மாரனும் வாழுந் நாளில் வந்தவூழ் தன்னைக் கேண்மோ
கார்க்கோடனில்லம் வாசங் கனமுள தெய்வ மென்று
கோருவார் முன்னே ரெல்லாங் குமரனு மவ்வாறு செய்தான்.

18. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் மனைவியையும் மக்களையும் உடையவராகி நிலங்களினால் ஜீவனம் செய்து கொண்டு வாழ்கின்ற காலத் தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். கேட்பீராக. அஷ்ட நாகத்தில் ஒன்றாகிய கார்க்கோடனது ஜாதியைச் சேர்ந்த ஒரு நாகம் அவருடைய வீட்டில் வாசஞ் செய்து கொண்டிருந்தது. அதை ஒரு சிறந்த தெய்வம் என்று பெரியோர்களும் முன்னோர்களும் எண்ணிப் பூசித்து வந்தார்கள். இந்த ஜாதகரும் அவ்விதமாகவே செய்து வந்தார்.

19. மகுடத்தால் வெளியில் ஓர்நாள் வாசலில் தியங்கும் போது
நகைமயா யரங்கஞ் செய்து சண்டன்தன் பதிக்குச் சேர்த்தான்
பகையாக அந்த தோஷம் பரவிற்று பால னுக்கு
அகமதில் அதிதி ஓர்நாள் அந்தியில் அன்னம் கேட்க ;

19. இந்த நாகம் ஒருநாள் மோடி வாத்தியத்தால் வெளியேவந்து வாசலில் நடனஞ் செய்து திகைத்து நிற்கும் போது போர்களத்திற் சண்டை செய்வதுபோல அதைக்கொன்று எமபட்டணத்திற்கு இந்த ஜாதகர் அனுப்பி விட்டார். இந்தத் தோஷமானது இப்பிறவியில் ஜாதகருக்கு விரோதமாக வந்து சம்பவித்தது. ஒருநாள் மாலைவேளையில் ஒரு பரதேசி இவருடைய வீட்டிற்கு வந்து சாப்பாட்டைக் கேட்கவே ;

20. அரிபோலே கோப முற்று அனுகாதே அன்ன மெனப்
பரதேசி மனவெ றுப்பால் பகருவார் சாபந் தானும்
வருஞ் ஜன்மம் சுதர்கள் தோஷம் வருந்துணை காணு தாயும்
உறைகுவா யென்று சொன்னார் உறைந்தது அதுஓர் தோஷம்.

20. சிங்கத்தைப் போலவும் பாம்பைப் போலவும் ஜாதகர் கோபம் உடையவராகிப் பரதேசியின்மேல் சீறி சாதம் கிடையாது என்று சொல்ல, அவர் தன்னுடைய மனது நொந்து துக்கத்துடன் சாபத்தைக்கொடுத்தார். உனக்கு உண்டாகும் அடுத்தப் பிறவியில் சந்ததி தோஷம் உண்டாகிச் சகோதர தோஷமும் உண்டாகி நீ வாழக்கடவாய் என்று சொன்னார். இந்த ஒரு தோஷமும் ஜாதகரை வந்து அடைந்தது.

21. மாரனு மந்தி யத்தில் மலர்ஜோதி ஊன மாயும்
ஆறுமா முகத்தோ னுக்கு அவனுமே தொண்டு பூண்டு
வீரியன் காலந் நாடு மேவியே பிரமன் லக்கம்
பாரினிலு திப்பானுகும் பணிதோஷம் அதிதி தோஷம் ;

21. ஜாதகர் முன் ஜன்மத்தில் கடைசி காலத்தில் உணர்வு கண்ணொளி இவைகள் சேதப்பட்டு ஆறு பெரிய முகங்களை உடைய முருகக் கடவுளுக்குத் திருப்பணி முதலியவைச் செய்து இறந்து எமபட்டணத்துத்திற்குச் சென்று பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த பூமியில் இந்த ஜென் மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். பாம்பின் தோஷம் பரதேசியின் சாபம் ஆகிய இந்த தோஷங்களால் ;

22. துணைத் தோஷஞ் சுதரின் தோஷம் செப்புவீ ரதற்குச் சாந்தி
____
____
____

22. ஜாதகருக்குச் சகோதர தோஷமும் புத்திர தோஷமும் ஏற்படும். இந்தத் தோஷங்கள் நிவிர்த்தியாவதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்க ;

குறிப்பு.—இதற்கு மேல் உள்ள விஷயங்கள் அடங்கிய ஓலை கிடைக்காத தால் ஜாதகத்தைப் பூர்த்திசெய்ய சாத்தியப்படவில்லை.

ஜாதகம் 101.

1. மதியு [1] மேடஞ் சனிமீனம்
மறையோன் [2] ராகு மானதா கும் [3]
உதயன் [4] சேயுஞ் [5] சீய [6] முற
ஒருகண் ணேனும் [7] கேதுமலவன் [8]
புதனுங் கன்னி கோளிவ்வாறு
பொருந்திக் கடகஞ் சென்மமுடன்
அரிய பலன்கள் எவ்வாறு
அறிவிப் பீர்கள் தவமுனியே ;

சனி	சந்திரன்		
	இராசி		லக்கனம் சுக்கிரன் கேது
குரு ராகு	சக்கரம்		சூரியன் அங்காரகன்
			புதன்

அசுவணி 4-ம் பாதம்

கேதுதசை ஞ 1-4-0

1. சந்திரன் மேஷத்திலும், சனி மீனத்திலும், குருவும் ராகுவும் மகரத்திலும், சூரியனும் அங்காரகனும் சிம்மத்திலும், சுக்கிரனும் கேதுவும் கடகத்திலும், புதன் கன்னியிலும் இருந்து ஜன்மலக்கினமும் கடகமானல் பலன்கள் எவ்விதமாக இருக்கும் என்பதைத் தவத்தைச் செய்கின்ற முனிவர்களே! சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்க ;

குறிப்பு.—இந்தராசிச் சக்கிர அமைப்பிற்குப் பின்வரும் அம்மசைச்சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும்.—ரிஷபத்தில் சூரியனும், கடகத்தில் சந்திரனும் ராகுவும், சிம்மத்தில் அங்காரகனும் சுக்கிரனும், கன்னியில் சனியும், மகரத்தில் புதனும் கேதுவும், மீனத்தில் குருவும் ஆகும். அங்காரகன் அஸ்தமனத்திலும் குரு வக்கிரகதியிலும் இருக்கின்றனர்.

---

[1] சந்திரன். [2] குரு. [3] மகரம். [4] சூரியன். [5] அங்காரகன். [6] சிம்மம். [7] சுக்கிரன். [8] கடகம்.

2. பிருகு புகல்வார் ஆண்ஜனனம் பேசு மில்லங் கீழ்மேற்குத்
தெருவா சனுமே வடபார்வை தந்திமு கத்தான் வடபாலில்
நரிவாக னத்தாள் மேல்பாலில் நல்குஞ் சிறுவூர் வணிகர்குலம்
வருவான் சேஷ்ட னுகவுமே வரைவோஞ் குடும்பச் சேதிதனே.

2. பிருகுமகரிஷி சொல்லுகின்றனர். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் வடக்குப் பார்த்த வாயிற்காலை உடையதாகும். யானை முகத்தையுடைய விநாயக் கடவுளின் கோவில் வடக்குத் திக்கிலும், காளியம்மன் கோயில் மேற்குத் திக்கிலும் இருக்கும். இந்த அடையாளங்கள் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் வணிகர் குலத்தில். இந்த ஜாதகர் ஜேஷ்ட குமாரனுக வந்து பிறப்பார். இவருடைய குடும்ப விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேம்.

3. தந்தை துணைகள் சிலதோன்றுந் தங்கா திதிலே பாதியுமே
விந்தை யாக ஆணென்று மெல்லியு மவ்வார் தீர்க்க முறும்
முன்துணை ஆண்சே யுமே முதிக்கா முன்ன மேகுவானும்
மைந்த ராண்பால் கன்னிஒன்று மருவு வானு மாரனுக்கு.

3. ஜாதகருடைய தகப்பனுருடன் சில சகோதரர்கள் உண்டாவார்கள். இதில் பாதிபேர் இறந்து விடுவார்கள். ஓர் ஆண் சகோதரமும் ஒரு பெண் சகோதரமும் ஆச்சரியமாக நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். தகப்பனுருக்கு ஒரு மூத்த ஆண் சகோதரம் உண்டாகி இவர் ஜாதகர் பிறப்பதற்கு முன்னமே இறந்து விடுவார். இவருக்கு ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் இருக்கும்.

4. மணங்க ளுண்டாய் மதலையின்றி வாழ்வாள் பின்னேள் மாதரசே
அணங்கு தீர்க்கம் பகைகொஞ்சம் அவள்பின் சேதி அறிவிப்போம்
பிணக்காய்க் கொங்கின் மேல்செல்வன் பிலமேயின்றி புகுவானுன்
[ஞர்
மணங்க ளுண்டாய் மதலைக ளில்லாது மாது ரெண்டு தோன்றும்.

4. ஜாதகரின் தகப்பனுருடைய இளைய சகோதரி தனக்கு விவாகம் நடந்து ஆண் குழந்தை இல்லாமல் இருந்து வாழ்வாள். பார்வதியம்மையே! இவள் நீண்ட வயதை உடையவள். இவள் ஜாதகரின் தகப்பனுருக்குச் சிறிது விரோதியாகவிருப்பாள். இவளுக்குப் பின்னல் பிறந்தவனுடைய விஷயத்தைச் சொல்லுகின்றேம். இவன் சண்டை போட்டுவிட்டுக் கொங்கு தேசத்திற்குப் போயிருந்து அவ்விடத்தில் விருத்தியடையாமல் மறுபடியும் தன் ஊருக்குத் திரும்பி வந்து விவாகஞ் செய்து கொண்டு ஆண் குழந்தை இல்லாமல் இரண்டு பெண் குழந்தைகளை மட்டும் அடைவான்.

5. உடனே கூடி வாழ்ந்திடுவன் உலகத் தோர்க்கு நல்லவனுய்
விடம்போல் அற்ப வஸ்துவுமே விரும்பு வானும் வினைசெய்யான்
படையில் செல்லான் சுகசீவி பகவான் பத்தி கொண்டிடுவன்
அடைவாய்த் தீர்க்க வயதென்றேம் அறிவிப்போமே பின் சேதி.

5. இந்த இளைய சகோதரர் ஜாதகருடைய தகப்பனருடன் கூடி இருந்து வாழ்வார். பூமியிலுள்ளவர்களுக்கு நல்லவனக விருப்பார். இவர் பாம்பைப்போல அற்பமான வஸ்துக்களின்மேல் ஆசை உடையவராயிருப்பார். பாவங்களைச் செய்யமாட்டார், சண்டைக்குப் போகமாட்டார். சுகமாக ஜீவிப்பார். கடவுளின் மேல் பக்தியும் அன்பும் உடையவராக விருப்பார். இவர் நீண்ட ஆயுளை உடையவராவார் என்று சொல்லுகின்றோம். மற்ற விஷயங்களைப் பின்னல் சொல்லுகின்றோம்.

6. சேதி யுரைப்பேன் தந்தைக்குத் தீர மனத்தன் தயையுடையன்
காதி அதிகங் காலாள்கள் கனக்கும் பலவூர் பூமிவிருத்தி
நிதென் றோர்க்கு உதவிடுவன் செகரா சர்கள் பேட்டிமிகும்
ஓது வானுஞ் சுகவார்த்தை உயர்வாங் குடும்பி உத்தமனே.

6. இனிமேல் ஜாதகரின் தகப்பனருடைய விஷயங்களைச் சொல்லுகின்றேன். இவர் தைரியமான மனத்தை உடையவர். தயையுடையவர். கீர்த்தியை அதிகமாக உடையவர். கால்நடை வேலைக்காரர்கள் அதிகமாக ஏற்படுவார்கள். பல கிராமங்களில் நிலங்கள் விருத்தியாகும். கெட்டுப் போய் இருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரஞ் செய்வார். பூமியிலுள்ள பெரிய அரசர்களின் பேட்டியை அதிகமாக உடையவர். இனிமையான வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். மேன்மையான குடும்பஸ்தராக விருப்பார். இவர் நல்ல குணங்களை உடையவராக விருப்பார்.

7. உத்தம மனத்தன் உயர்புத்தி உறையும் மாமி யிரண்டாகச்
சித்தங் கறுப்பு மில்லாதான் ஜயமே செய்வன் நினைத்த [வெல்லாம்
பத்து மதிலும் அதிகாரம் பஞ்சைமீ திரக்க முள்ளானே
சுத்தத்தார்கள் மதிக்க உய்வன் சூதும் வாதுங் கொள்ளாதான்.

7. ஜாதகருடைய தகப்பனர் நல்ல மனத்தை யுடையவர். உயர்ந்த புத்தியை உடையவர். இவருக்கு இரண்டு மாமியார்கள் உண்டு. மனதில் கபடம் கள்ளம் வஞ்சனை கோபம் மனக்குறைவு இவை இல்லாதவராவார். தான் நினைத்த காரியங்களை எல்லாம் செய்து முடித்து ஜயத்தை அடைவார். அதிகாரத்தை உடையவர். ஏழைகளின் மேல் இரக்கமும் தயாள குணமும் உடையவர். இவர் தன்னைப் பந்துக்கள் மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். சூது மார்க்கமும் வஞ்சனையும் கபடமும் இல்லாதவராவார்.

8. சொல்லுவோ மிவனின் பூர்வமதைத் தக்கோ லத்தில் பின் [குலத்தில்
நல்ல வணிபம் தான்செய்து நடக்குந் நாளில் வினையைச் சொல்
வேன் புலவர் தமக்கு மணம்வேண்டி பொன்முத் திரையுந் தான்
கேட்க வல்லுனன் அதற்கு வாய்கொடுத்து மருவா தென்ரு னன்
நாளில் ;

8. ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தக்கோலத்தில் தாழ்ந்த ஜாதியில் பிறந்து நல்ல வியாபாரஞ் செய்து கொண்டு வாழ்ந்த காலத்தில் சம்பவித்தப் பாவத்தைச்

சொல்லுகின்றேன். ஒரு பண்டிதர் தனக்கு விவாகஞ் செய்துகொள்ள எண்ணங்கொண்டு இவரைப் பொன்னல் செய்த ஒரு தாலியைக் கேட்க இவர் அதற்குச் சம்மதித்துவிட்டு அந்த நல்ல நாளாகிய விவாக காலத்தில் இல்லை என்று சொல்லிவிடவே ;

9. பஞ்சை மனமும் தான்வாடி பகர்ந்த சாபம் பகர்ந்தனரை
முந்திய ஜன்ம மிருமனையாய் மேவு மென்று தான்சொல்ல
நஞ்சு போலச் சாபந்தான் நல்கு மென்றோம் மங்கையரை
தஞ்ச மாக அந்தியத்தில் சாறும் அடியார்களையடைந்து ;

9. அந்த ஏழையாகிய புலவர் தன்னுடைய மனம் நொந்து துன்பமடைந்து சாபத்தைக் கொடுத்துவிட்டார். உனக்கு மறு ஜன்மத்தில் இரண்டு மனைவி நேரிடக் கடவது என்று சொல்ல, அந்தச் சாபம் விஷத்தைப்போல இவருடைய மனைவியை வந்து அடையும் என்று சொல்லுவோம். இவர் கடைசி காலத்தில் பரதேசிகளுடைய துணையையும் அடைக்கலத்தையும் பெற்று ;

10. காலன் பதிக்குத் தான் சென்று கஞ்ச னுலேதான்வரைய
சீலமில் லாத இக்குலத்தில் ஜனித்தான் முன்னூம் சேர்ந்ததனுல்
சீல மனையா ளிரண்டாகுஞ் செல்வ முடனே மனைவாழ்வன்
பாலிகை ரண்டில் பின் ளேட்குப் பிறப்பனு மிந்தபாலனுமே.

10. இறந்து எமபட்டணத்திற்குப்போய்ப் பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு நல்லொழுக்கமும் நல்லநடத்தையும் இல்லாத இந்தக் குலத்தில் ஜாதகருடைய தகப்பனர் பிறந்தார். இவருக்கு முன் ஜன்மத்திய சாபம் வந்து நேர்ந்ததால் நல்லொழுக்கமுள்ள மனைவிமார்கள் இருவர்கள் வந்து சம்பவிப்பார்கள். மனைவிமார்கள் பாக்கியவதிகளாகவிருக்க இவர் வாழ்வார். இரண்டு மனைவிமார்களில் இளைய மனைவிக்கு இந்த ஜாதகர் பிறப்பார்.

11. பாலன் குணத்தைத் தான்புகல்வேன் பதரில் செல்லான் [பலமுடையன்
சீலம் போலே வெளிமயக்கன் சிவந்த மெய்யன் சிறப்புள்ளான்
கால மறிந்து தான்புகல்வன் கருதான் கட்டு வார்த்தைகளை
வேலன் பத்தி கொண்டிடுவன் வினைவால் பெருமை வித்தகியே.

11. ஜாதகருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். அற்பமான உபயோகமில்லாத விஷயங்களில் தலையிடமாட்டார். வலிவுடையவர். நல்லொழுக்கத்தையும் நல்ல நடத்தையும் உள்ளவரைப்போல வெளிக்குக் காண்பித்துக்கொண்டு பிறரை மயக்குவார். சிவப்பான தேகத்தை யுடையவர். பெருமையை உடையவர். சமயத்திற்குத் தகுந்தாற்போலப் பேசுஞ் சாமர்த்தியம் உடையவர். இவர் பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையுஞ் சொல்லமாட்டார். முருகக் கடவுளின் மேல் பக்தியும் அன்பும் உடையவராவார். இவருக்கு நிலங்களுடைய பலிதத்தால் மேன்மை உண்டாகும். பார்வதியம்மையே !

12. தகைவாய்ச் செய்வன் கூவலுமே சகடு முடையன் சாரார்கள்
பகையை மனத்தில் வையாதான் பணிவோர் நேயன் அதிதீரம்
ஜகமே வெற்றி கொண்டிடுவன் தீர மனத்தன் சல்லியமில்லான்
சுகமே செய்வன் சிலருக்கும் அற்பக் கல்வி அறிவித்தோம்.

12. ஜாதகர் கொடி செடி முதலிய வகையருக்களுள்ளத் தோப்புகளும் கிணறுகளும் வண்டியும் உள்ளவராவார். இவர் தனக்குதவியாக விருக்கின்றவர்களுடைய விரோதத்தைத் தன்னுடைய மனத்தில் வைத்துக் கொள்ளாதராவார். தனக்கு வேலையைச் செய்கின்றவர்களிடத்தில் விசுவாசத்தை உடையவர். அதிகமான தைரியத்தை உடையவர். பூமியில் ஜயத்தை அடைவார். தைரியசாலி. கடன்படமாட்டார். சில ஜனங்களுக்கு நன்மையையே செய்வார். இவருக்குப் படிப்பு சிறிதாகவிருக்கும் என்று சொல்லுகிறோம்.

13. அறிவாய்த் துணைவரானென்று அதன்மேல் காணன் அம்பிகையே
தெரிய உரைப்போம் அவன்சேதி தீர்க்க வயது உள்ளவனே
பரிவண் டிகளுந் தான்பெறுவன் பணிந்தோர் நேயன் பார்விருத்தி
நெறியைக் காப்பன் கிராமச்செட்டு நேமிக் குதவி செய்திடுவன்.

13. ஜாதகருக்கு ஒரேஒரு சகோதரன் தான் உண்டு, பார்வதியம்மையே! அதற்கு மேல் சகோதரர்கள் கிடையா.* இந்த ஆண் சகோதரமுடைய விஷயங்களைச் சொல்லுகின்றோம். இவர் நீண்ட ஆயுளை உடையவர். இவர் குதிரை வண்டிகளை உடையவர். வேலை செய்பவர்களிடத்தில் இவர் பிரியமாய் இருப்பார், நிலங்கள் விருத்தியாகும், நல்ல மார்க்கத்தையுடையவர், அதைக்காப்பாற்றுவார். கிராமத்தில் வியாபாரத்தைச்செய்வார். பூமியிலுள்ளவர்களுக்கு உபகாரஞ் செய்வார்.

* குறிப்பு.—சகோதர விஷயம்.—இளைய சகோதர ஸ்தானம் மூன்றும் பாவமாகிய கன்னியாகும். இதற்குடையவராகிய புதன் ஆட்சியாகி அஷ்டமாதிபதியாகிய சனியாலும் கேதுவாலும் சஷ்டமாதிபதியாகிய குருவாலும் பார்க்கப்பட்டிருப்பதுடன் இந்த ஸ்தானமும் இவ்விதமாகவே பார்க்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் சகோதரதோஷம் இருக்கின்றது. மேலும் மூத்த சகோதரன் ஸ்தானமாகிய பதினொன்றிற்குடைய சுக்கிரன் கேதுவுடன் கூடி அந்தப் பாவத்திற்கு மூன்றில் இருந்துகொண்டு அந்தப் பாவத்திற்கு எட்டிற்குடைய குருவால் பார்க்கப்பட்டிருக்கின்றார். சனியும் கேதுவும் பதினோராம் பாவத்தைப் பார்க்கின்றார்கள். அங்காரகன் சூரியனுடன்கூடி அஸ்தமடைந்திருக்கின்றார். ஆகையால் சகோதர தோஷம் அதிகமாக விருக்கின்றது.

14. இடுவன் ஏழை கட்கன்னம் யோம வாமக்கண் எனவுரைத்தோந்
திரமாங் குடும்பி தானுவன் ஜகத்தோர் மதிப்புக் கொண்டிடுவன்
உடன்வந் தோரை ஆதரிப்பன் உருமம் நான்கு செய்திடுவன்
மடைய ருறவு கொள்ளாதான் மனைவிக் கிஷ்டன் மாதரசே.

14. ஜாதகரின் சகோதரர் ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவார். அப்பிரகம்போன்ற பளபளப்பான அழகிய கண்களை உடையவராவார் என்று சொல்லுகிறோம். மேன்மையானதும் வலிவானதுமான குடும்பஸ்தராக விருப்பார். பூமியிலுள்ளவர்களுடைய மதிப்பை இவர் அடைவார், தன்னுடன்கூட வந்தவர்களைக் காப்பாற்றுவார், நான்கு கர்மங்களைச் செய்வார். புத்தியில்லாதவர்களுடைய சினேகத்தை விரும்பமாட்டார், தன்னுடைய மனைவிக்கு இஷ்டமானவராக விருப்பார், பார்வதியம்மையே!

15. கும்ப ராசி மூலத்தில் குதிப்பான் என்றேநுங் கோதையரே
வம்பில் செல்லான் மருவலருண்டு மாற்றுன் தன்னை வென்றிடுவன்
உம்பர் பூசை கொள்ளாதான் உறையும் பாரி ஒன்றேயாம்
செம்பாய் வடபால் தான்நேரும் மறையோ சுதர்கள் தான்தோன்
[றும்.

15. ஜாதகருடைய சகோதரர் கும்பராசியில் மூல நட்சத்திரத்தில் பிறந்திருப்பார் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! சண்டைக்குப் போகமாட்டார், இவருக்குப் பகைவர்கள் இருப்பார்கள், தன்னுடைய எதிரியை வென்று விடுவார். வானோர்களைப் பூஜை செய்யமாட்டார். இவருக்கு ஒரேஒரு மனைவிதான் வந்து வாய்ப்பாள், அவளும் வடக்குத்திக்கிலிருந்து வருவாள், அறிவுள்ள இவருக்குக் குழந்தைகள் பிறக்கும்.

வேறு

16. அத்திரி மறித்துச் சொல்வார் அறைந்தினீர் கருமம் நான்கு
சுத்தமாய்ச் சொல்லு மென்ன தந்தைபின் முன்னோன் புத்திரர்
வித்தகர் தனக்குச் செய்வான் விரோதங்கள் பூர்வம் நேரும்
நித்தியம் உறவு பின்னுல் நிமலியே கேட்டி டாயே.

16. அத்திரிமகரிஷி தடுத்துக் கேட்கின்றார். இவர் நான்கு கர்மங்களைச் செய்வார் என்று சொன்னீரே! அவைகளை விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்டார். இவர் தன்னுடைய தகப்பனுருக்கும், தகப்பனுருடைய முன்பின் சகோதரர்களுக்கும் புத்திரருக்கும் கர்மத்தைச் செய்வார். விரோதங்கள் முன்வயதில் உண்டாகும். பிறகு நட்பும் சினேகமும் உண்டாகி விடும். பார்வதியம்மையே! கேட்பீராக.

17. சுதர்களு மாண்பா லொன்று தோகையு மிரண்டு என்றேநும்
இதுமூன்றுந் தீர்க்க மெய்தும் எழில்த வத்தனல் நேருந்
ததிபாக்கிய முடைய் ருகுஞ் சகலசம்பத் தாய் வாழ்வன்
அதிதியை ஆதரிக்கும் அம்பிகையாளே கேளாய்.

17. குழந்தைகளில் ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு என்று சொல்லுகிறோம். இந்த மூன்று குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவைகள் அழகிய தவத்தின் பயனுக உண்டாகும். இவர் தயிர் பாக்கிய முடையவராவார். எல்லா சம்பத்துக்களுடனும் கூடி வாழ்வார். தேவர்களைப் பெற்றவனையும் பரதேசிகளையும் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

18. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மீராருண்டுள்
காதலி வடபால் நேருங் கழறுவோ மவள்கு ணத்தைச்
சூதிலாள் சிவந்தமேனி சொல்லது சுகமே யாகும்
பாதக மனமில்லாதாள் பணிந்தோரை ஆத ரிப்பள்.

18. ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். இவருக்குப் பன்னிரண்டு வயதிற்குள் † மனைவி வடக்குத்திக்கிலிருந்து வந்து நேருவாள். இவளுடைய குணத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம், இவள் கள்ளம் கபடம் வஞ்சனை இவை இல்லாதவளாவாள். சிவப்பு நிறமுள்ள தேகத்தை உடையவள். இவள் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். கெட்ட மனத்தை உடையவள் அல்லள். தன்னை வணங்கின வர்களைக் காப்பாற்றுவாள்.

† குறிப்பு.—விவாக விஷயம்.—லக்கினத்தில் சுக்கிரனும் ஏழில் குருவும் புதன் தன் வீட்டிலும் இருப்பதாலும், கீர்த்தி ஸ்தானம் என்ற பத்திற் குடைய அங்காரகன் லக்கினத்திலிருந்து நான்கு வீட்டிற்குள்ளே இருப்ப தாலும், சுக்கிரனும் சாமி என்று சொல்லப்பட்ட லக்கினுதிபதியாகிய சந்திர னும் லக்கினத்திற்குக் கேந்திரத்தில் இருப்பதாலும் ஜாதக சிந்தாமணி 973, 974, 975-ஆவது பாடல்களின் பிரகாரம் ஜாதகருக்கு வாலிபத்திலேயே விவாகம் நடக்கும்.

19. விரதங்கள் பூண்பா ளாகும் வீண்பழி ஏற்கா ளாகும்
அரிமனை யொப்ப தாகும் அன்னமு மன்பா யீவள்
பெரும்புத்தி யோக சாலி புருடன்தன் மனத்துக் கேத்தோள்
வருந்துணை காணு ளாகும் மாதுவுந் தனியே யென்றேம்.

19. ஜாதகருடைய மனைவி விரதங்களையும் நோன்புகளையும் அநுஷ் டிப்பாள். வீணை அபாவத்தையும் குற்றங்களையும் அடைய மாட் டாள். மகாவிஷ்ணுவினுடைய மனைவியாகிய லக்ஷ்மிக்குச் சமானமானவளாக விருப்பாள். சாதத்தை ஆசையுடன் கொடுப்பாள். பெரிய புத்தியை யுடைய வள். யோகத்தை உடையவள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற் போல நடந்து கொள்ளுவாள். இவளுக்குச் சகோதரர்கள் † கிடை யா. இவள் ஒருத்தியாக விருப்பாள். என்று சொல்லுகின்றேம்.

† குறிப்பு.—மனைவியின் சகோதர விஷயம்.—மனைவியின் லக்கினம் ஏழாவது பாவமாகிய மகரம். இதற்கு இளைய சகோதர ஸ்தானமாகிய மீனத் திற்குடைய குரு ராகுவுடன்கூடி நீசமாக விருக்கின்றுர். மீனத்தில் சனி இருக்கின்றுர். மீனத்தை ராகுவும் அங்காரகனும் பார்க்கின்றுர்கள். மகரத் திற்கு எட்டில் அங்காரகன் மறைந்திருக்கின்றுர். ஆகையால் இளைய சகோதர னுக்கு அதிக தோஷமிருக்கின்றது. மூத்த சகோதர ஸ்தானம் மகரத்திற்குப் பதினேராவது வீடாகிய விருச்சிகம் ஆகும். இதற்குடைய அங்காரகன் எட்டில் சூரியனுடன் கூடி மறைந்தும் அஸ்தமனத்திலும் இருக்கின்றுர். விருச்சிகத்தை இராகுவும் பார்க்கின்றுர். மூத்த ஆண் சகோதர காரகனுகிய குரு மகரத்தில் ராகுவுடன்கூடி நீசமாக விருக்கின்றுர். ஆகையால் மூத்த சகோதர தோஷமுமிருக்கின்றது.

20. முன்கோப முடனே தாழ்வு மூலச்சூ டுடைய ளாகும்
பொன்பணி யிச்சை யுண்டு புகழான குடும்ப மேற்பள்
அன்னியர் குற்றம் சொல்லாள் அடிசிலுக் கினிய ளாகுங்
கன்னிகை வயது தீர்க்கங் கௌவுசிகர் மறித்துச் சொல்வார்.

20. ஜாதகருடைய மனைவிக்கு முன் கோபம் உண்டாகும். ஆனல் அஃது உடனே தணிந்து போகும். இவளுக்கு மூலச் சூட்டுரோகம் உண்டு. தனம் ஆபரணம் ஆடை இவைகளின்மேல் ஆசை உடையவளாவாள். கீர்த்தியையுடைய குடும்பத்தை அடைபவளாவாள். பிறர்மேல் அபவாதத்தையும் பழியையும் சொல்லமாட்டாள். சமையல் செய்வதில் கெட்டிக்காரியாக விருப்பாள். இவள் நீண்ட வயதை உடையவளாவள் என்று சொல்ல, கௌசிக முனிவர் தடுத்துச் சொல்லுகின்றுர்.

21. தாரமு மிரண்டு நேருஞ் ஜாதகன் தனக்கு மேதான்
கூறுவீர் விவரந் தன்னைக் குருராகு ஏழில் தங்கக்
காரியு [1] மேழோ னுகிக் கெண்டையி [2] லிருப்ப தாலே
பாரியு மிரண்டு என்றேம் பாரசரும் மறித்துச் சொல்வார்.

21. ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்று கௌசிகர் சொல்ல, காரணத்தைச் சொல்வீர் என்று அவர் கேட்க, குருவும் * இராகுவும் ஏழில் இருப்பதாலும், சனி மீனத்தில் இருப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவி மார்கள் நேரிடுவார்கள் என்று சொல்லுகின்றேம். அதன்மேல் பராசர முனிவர் தடுத்துச் சொல்லுகின்றுர்.

* குறிப்பு.—குரு நீசத்தை அடைந்து ஏழில் இருந்தால் தாரத்திற்குத் தோஷ முண்டாகும் என்று ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் பதினேழாவது சுலோகத்தில் கண்டிருப்பதையும் பார்க்கவும்.

22. தனத்துளோ னுட்சி யாயுஞ் சத்தமத் தோனந வத்தில்
கனமுட லிருப்ப தாலே காதலி ஒன்றே தீர்க்கஞ்
சினமிலா வேறு சொல்வேன் சுக்கிரன் தனக்குப் பத்தில்
பனமதி[3] யிருப்ப தாலே பகரொணுத் தாரம் ரண்டு.

22. இரண்டிற்குடையவராகிய சூரியன் ஆட்சியாய்த் தன் வீட்டி லேயே இருப்பதாலும், ஏழிற்குடையவராகிய சனி ஒன்பதில் வலிவாயிருப் பதாலும் ஒரே மனைவிதான் உண்டு. அவள் தீர்க்கமாக விருப்பாள். கோப மில்லாமல் இன்னொரு காரணத்தைச் சொல்லுகின்றேன். சுக்கிரனுக்குப் பத்தாவது பாவத்தில் சந்திரன் † இருப்பதால் இரண்டு தாரம் நேரிடும் என்று சொல்லக் கூடாது.

† குறிப்பு.—இங்குச் சந்திர லக்கின ரீதியாகக்கூட களத்திர பாவத்தை ஆராய்ச்சி செய்கின்றுர். சந்திரனுக்குக் களத்திர ஸ்தானுதிபதி குடும்பாதி பதி களத்திரகாரகன் ஆகிய சுக்கிரன் மூன்று அம்சங்களை உடையவராகிச் சந்திரனுக்குக் கேந்திரத்தில் இருப்பதால் தாரதோஷம் இல்லை என் கின்றுர்.

---

[1] சனி. [2] மீனம். [3] சந்திரன்.

வேறு

23. இதற்கு நேரிடையாய் ஜாதக சுருதியிதி லேழாம் பாவத்தில் பாரு
அதில் சொல்லும் விவரம் இரண்டே மோன்
கேந்திரமாகிலும் கோணத்தி லிருக்கச்
சதியிலா ஆட்சி யாகியே யிருக்கத்
தாரமு மொன்றென மொழிவோம்
கதிதரும் வாக்கில் பானுவு மொன்று
கலந்ததால் புகன்றனம் முனியே.

23. இதற்கு ஆதார பிரமாண விஷயமாக ஜாதக சுருதியில் ஏழாம் பாவத்தைப் பார். அதில் சொல்லுகின்ற விவரம் என்னவென்றுல் இரண்டாவது பாவத்திற்குடையவரும் ஏழாவது பாவத்திற்குடையவரும் கேந்திரகோணங்களில் இருந்தாலும் குற்றமில்லாமல் ஆட்சியாகவிருந்தாலும் தாரம் ஒன்று என்று சொல்லுவோம். இங்கு வாக்கு ஸ்தானமாகிய இரண்டாவது பாவத்தில் சூரியன் இருப்பதால் ஒரு தாரந்தான் என்று சொன்னேம் முனிவரே !

வேறு.

24. புத்திர விருத்தி புகலுவோ மினிமேல்
பிறவாது பிறக்கினுந் நீதாங்
குத்தத்தைப் புகல்வார் குஜனுமே யிரண்டில்
குருவுமே நீசனுமிருக்கச்
சத்தமத் தோனுஞ் சனியனேயாகித்
தனியனுய் நவத்தினில் தங்க
வித்தகன் தனக்கு மதலைகள் தோஷம்
விளம்பினேம் முனிவரே யாங்கள்.

24. இனிமேல் ஜாதகருக்குச் சந்ததி விருத்தியைப் பற்றிச் சொல்லுகின்ரேம். குழந்தைகள் பிறக்கா, ஒரு சமயம் குழந்தை பிறந்தாலும் அஃது இறந்து போய்விடும். இதற்குண்டான தோஷத்தைச் சொல்லுகின்ருர். அங்காரகன் இரண்டாவது பாவத்தில் இருப்பதாலும் குரு நீசனகவிருப்பதாலும் ஏழுக்குடையவர் சனியாகித் தனியாக ஒன்பதாவது பாவத்தில் இருப்பதாலும் ஜாதகருக்குப் புத்திரதோஷம் உண்டு என்று நாங்கள் சொன்னேம், முனிவரே !

குறிப்பு.—புத்திர விஷயம்.—மேலே சொல்லப்பட்டக் காரணங்களும் அல்லாமல் இன்னும் சில காரணங்களும் இருக்கின்றன. ஜன்ம லக்கினத்திற்குப் புத்திர ஸ்தானமாகிய ஐந்தாவது பாவத்திற்குடையவரான அங்காரகன் சூரியனுடன் கூடி இருப்பதும், அஸ்தமனம் அடைந்திருப்பதும் தோஷமாகும். ஐந்தாவது பாவத்தை ராகு பார்ப்பதும் குரு ராகுவுடன் சேர்ந்திருப்பதும் தோஷமாகும். இன்னெரு புத்திர ஸ்தானமாகிய ஒன்பதாவது பாவத்திற்குடையவரான குரு நீசமாகி இருப்பதும் தோஷமாகும். இந்த ஒன்பதை ராகு பார்ப்பதும், ஞானியாகிய புதன் பார்ப்பதும், அங்காரகன பார்ப்பதும் தோஷமாகும். மேலும் சந்திர லக்கின ரீதியாய் ஐந்தில் அங்காரகன் அஸ்தமனம் அடைந்திருப்பதும் தோஷமாகும்.

சந்திரனுக்கு ஒன்பதாம் பாவத்தைச் சனி பார்ப்பதும் தோஷமாகும். இந்த ஒன்பதிற்குடைய குரு நீசமாகி ராகுவுடன் கூடி இருப்பதும் தோஷமாகும். சந்திரனுக்கு ஐந்தில் சூரியன் புத்திர ஸ்தானுதிபதியாகி இருப்பது கொஞ்சம் வலிவாகும். சந்திரனுக்கு ஏழிற்குடைய சுக்கிரன் சதுர்த்த கேந்திரத்தில் இருப்பது, கேதுவுடன் கூடியிருந்த போதிலும், கொஞ்சம் வலிவாகும். மொத்தத்தில் புத்திர தோஷம் வலிவைவிட மிகவும் அதிகமாகவிருக்கின்றது.

வேறு.

25. இதுவின்றிப் பூர்வஞ் செய்வினையாலே
யெய்திடும் மதலைகள் தோஷம்
இது விவரங்கள் அறிவிப்பீர் முனியே
அவனுடைப் பூர்வங் கேளாய்
கதிதரும் அருணை மாநகர்தன்னில்
கலந்தனன் அருகர்தங் குலத்தில்
அதிகாரம் செய்து அவன்வாழ்நாள் வினையை
அறிவிப்போம் முனிவரே கேளாய்.

25. இந்தக் கிரகதோஷம் அல்லாமலும் ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் செய்த பாவங்களாலே புத்திர தோஷம் உண்டாகும். இந்த விவரங்களைச் சொல்லுவீர், முனிவரே ! என்று கேட்க, சொல்லுகின்றுர். இவருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். கேட்பீராக. மோக்ஷத்தைக் கொடுக்கின்ற அருணை என்ற திருவண்ணமலை என்னும் பெரிய பட்டணத்தில் ஜாதகர் சமணர்களுடைய குலத்திற் பிறந்தார். இவர் தன்னுடைய உத்தியோக மூலமான அதிகாரங்களைச் செலுத்திக் கொண்டு வாழ்ந்த காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைச் சொல்லுகின்ரேம், முனிவரே ! கேட்பீராக.

வேறு.

26. வரனின்றி மாது தானும் மாதுரு யில்லம் வாழ
அரிவைமேல் வேறெ ருத்தன் அணையவே காதல் கொண்டு
திருகான வார்த்தைச் சொல்லத் தேவியு மிசையா ளாகிக்
குறையான வார்த்தைச் சொன்னுள் கோதையே கேட்டி டாயே.

26. புருஷன் இல்லாமல் ஒரு ஸ்திரீ தன்னுடைய தாயாருடைய வீட்டில் வந்து வசித்துக் கொண்டிருக்கும் போது வேறொருவன் இவளிடத்திற் சம்போகஞ் செய்ய ஆசையை உடையவனுகிக் கள்ளம் கபடம் வஞ்சனை இவைகளை உடைய வார்த்தைகளைச் சொல்ல, அதற்கு அவள் சம்மதிக்காதவளாகிக் குற்றமான வார்த்தைகளையுடைய பதிலைச் சொன்னுள். பார்வதியம்மையே ! கேட்பீராக.

27. பின்சில நாட்கள் சென்று பேதையுந் தனியாய்ச் செல்ல
அன்னவன் பின்தொடர்ந்து அணைந்தனன் பலவந் தத்தால்
கன்னிகை மனது வாடிக் கழறினுள் துணைவ னேடு
முன்கோப முடையா ளுகி மொழிந்தன ளதிகாரி பக்கல்.

27. பின்னும் சில நாள் பொறுத்து அந்த ஸ்திரீ ஒண்டியாய்ப் போகும்போது அவன் அவளைப் பின் தொடர்ந்து போய் அவளோடு பலவந்தத்தால் சம்போகஞ் செய்தான். அதன்மேல் அந்த ஸ்திரீ மனம் நொந்து நடந்த சங்கதியைத் தன்னுடைய சகோதரனிடத்தில் சொன்னாள். சகோதரன் உடனே கோபமுடையவராகி இதை அதிகாரி இடத்தில் சொன்னான்.

28. வினைசெய்தோன் தனைய ழைத்து வினவவும் அவனால் பொன்னைத்
தனையனும் பெற்றுக் கொண்டு தையல்மேல் விரோதம் சொல்ல
வனிதையும் மனது வாடி வரைந்திட்ட சாபஞ் கேண்மோ
துணைவிபோல் எனையெண் ணமல் சொர்ணத்தால் சொன்ன பாவி ;

28. குற்றத்தைச் செய்தவனை ஜாதகராகிய இந்த அதிகாரி வரவழைத்து அவனிடமிருந்து பணத்தைக் கைக்கூலியாக வாங்கிக்கொண்டு அந்த ஸ்திரீக்கு விரோதமாக அவள் மேலேயே குற்றத்தைச் சாட்ட, அவள் தன்னுடைய மனம் நொந்து கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. நீ என்னை உன்னுடைய சகோதரியைப்போல நினைக்காமல் பணத்தைக் கைக்கூலியாக வாங்கிக் கொண்டதால் என்மேல் குற்றத்தைச் சொன்ன பாபியாகிய நீ ;

29. மறுஜன்மம் துணைப் பெணின்றி மதலைக ளில்லாத் தாயுந்
திருகாகச் சொல்லி யேதான் துரத்தினள் தெருத்தூள் தானும்
உறைந்தது அந்தச்சாபம் உத்தம னந்தி யத்தில்
மருவிற்று வாயில் ரோகம் மறலியின் பதிக்குச் சென்று ;

29. உன்னுடைய பின் ஜன்மத்தில் சகோதரியில்லாமலும் குழந்தைகள், இல்லாமலும் வாழக்கடவாய் என்று வஞ்சனையாகவும் கபடமாகவும் சொல்லிவிட்டுத் தெருவிலுள்ள மண்தூளை வாரித் தூற்றினாள். அந்தச் சாபம் ஜாதகரை வந்து அடைந்தது. இவர் தன்னுடைய கடைசி காலத்தில் தன் வாயில் ரோகமுண்டாகி இறந்து எமபட்டணத்திற்குப் போய் ;

30. நரகத்தில் பன்னாள் மூழ்கி நாற்றலைக் கஞ்சன் தம்மால்
உரமுடன் வரையப் பட்டு உதிப்பனு மிந்தப் பாலன்
அரிவையின் சாபத் தாலே அனுகாது துணைப் பெண் ணுந்தான்
பிறவார்கள் சுதர்கள் என்றேம் பேதையை கேட்டி டாயே.

30. நரகத்தில் அநேக நாட்களாக மூழ்கிக் கிடந்து பிறகு நான்கு தலைகளை உடைய பிரம தேவனால் பிரமலிபியுடன் வலிவாக எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். முன் ஜன்மத்திய ஸ்திரீயின் சாபத்தினால் இவருக்குச் சகோதரி கிடையாது. பிள்ளைகளும் பிறக்க மாட்டார்கள் என்று சொல்லுகின்றோம், பார்வதியம்மையே ! கேட்பீராக.

31. பாரியால் சிலது தோஷம் பகருவோம் முனியே கேளும்
நாரிமுன் ஜன்மஞ் சொல்வேன் நரசிம்மன் வாழு மூரில்
காரிகை பிரம சேயாய்க் கலந்துமே மதலை யுண்டாய்த்
தீரமாய் வாழுந் நாளில் செய்ததோர் வினையைக் கேண்மோ.

31. ஜாதகருடைய மனைவியால் சிலதோஷங்கள் உண்டாகி இருக்கின்றன. அவைகளைச் சொல்லுகின்றோம், முனிவரே ! கேட்பீராக. இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். நரசிம்மமூர்த்தி வாழுகின்ற ஊரில் இவள் பிராமணர் குலத்தில் பிறந்து குழந்தைகள் உண்டாகித் தைரியத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் இவள் செய்தப் பாவத்தைக் கேட்பீராக.

32. பஞ்சையாய் ஏழை மாது பாலர்க்கு அன்னம் வேண்டிக்
கெஞ்சினும் மாது பக்கல் கிளிமொழி வார்த்தை யின்றி
மிஞ்சிப வார்த்தை சொல்லி விரட்டினாள் ஏழை தன்னை
வஞ்சியும் மனவெ றுப்பால் வரைந்தசா பத்தைக் கேண்மோ.

32. திக்கில்லாத ஓர் ஏழை ஸ்திரீ குழந்தைக்காகச் சாதம்வேண்டியவளாகி ஜாதகருடைய மனைவி யிடத்திற்குப் போய் அவளை வருந்திக்கேட்டாள். அதற்கு அவள் இனிமையான வார்த்தைகளைச் சொல்லாமல் கடுமையான அத்து மீறிய வார்த்தைகளைச் சொல்லி அந்த ஏழை ஸ்திரீயை விரட்டி விட்டாள். அந்த ஏழை ஸ்திரீ தன்னுடைய மனத்தில் துக்கத்தை அடைந்து கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக.

33. சுதரன்னந் தராத பாவி தோன்றும்பின் ஜன்மந் தன்னில்
மதலைகள் தோஷ மெய்தும் வருந்துணை காணு ளாகும்
விதவிதஞ் சொல்லிச் சென்றாள் மேவிற்று அதுவோர் தோஷம்
அதிதியும் அந்தி வேளை அன்னமுங் கேட்கும்போது ;

33. குழந்தைக்காகச் சாதம் கொடுக்காத பாவியாகிய நீ பிறக்கும் மறு ஜன்மத்தில் உனக்குக் குழந்தைகள் இறந்து விடக்கடவர். உனக்குச் சகோதரர் இல்லாமல் இருக்கக்கடவது என்றும் இன்னும் பலவிதமாகவும் அந்த ஏழை ஸ்திரீ சொல்லிவிட்டுப் போய்விட்டாள். இந்த ஒரு தோஷம் இவளை வந்து அடைந்தது. மேலும் ஒரு நாள் மாலை வேளையில் ஒரு பரதேசி வந்து ஜாதகருடைய மனைவியைச் சாதம் கேட்கும்போது ;

34. இருமையின் மனத்தா ளாகி யிடரான வார்த்தை சொன்னாள்
மருவிற்று அதுஓர் தோஷம் மகுடத்தால் நாகம் ஒன்று
உறைந்தது முற்றந் தன்னில் உத்தமி கழியால் வாட்ட
மறலியின் நாடு சேர மருவிற்று அதுஓர் தோஷம்.

34. ஜாதகருடைய மனைவி பெருமை, கர்வம் இவைகளையுடைய மனத்தை உடையவளாகிக் கெட்ட வார்த்தைகளை உபயோகித்துப் பதில் சொன்னாள். இந்த ஒரு தோஷமும் இவளை வந்து அணுகிற்று. மோடி வாத்தியத்தால் ஒரு நல்ல பாம்பு வாசலில் வரவே அதனை இவள் தடியால் அடித்து இம்சைசெய்ய அஃது இறந்து எமபட்டணத்திற்குப்போய்ச் சேர்ந்தது. இந்த ஒரு தோஷமும் இவளை வந்து அடைந்தது.

35. மங்கையு மந்தி யத்தில் மைந்தனால் மனது வாடிச்
சங்கையாய்க் காலன் நாடு சென்றுமே பிரமன் லக்கம்
நங்கையு முதிப்பா ளாகும் நல்கிடும் முன்னூழ்ச் சாபம்
மங்கிடுந் துணையும் புத்திரர் மாமுனி தடுத்துச் சொல்வார்.

35. ஜாதகருடைய மனைவி தன்னுடைய கடைசி காலத்தில் தன்னுடைய பிள்ளையினால் மனத்தில் துக்கத்தையும் கஷ்டத்தையும் அடைந்து இறந்து கஷ்டத்துடன் எமபட்டணத்திற்குப்போய் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறப்பவளாவாள். முன்ஜன்மத்திய வினைகளும் சாபங்களும் இவளை வந்து அணுகும். இவளுடைய சகோதரர்களும் புத்திரர்களும் இறந்து விடுவார்கள் என்று சொல்ல, மகரிஷியான வஸிஷ்டர் மறுத்துக் கேட்கின்றார்.

36. முன்ஜன்மம் மறைக்கு லத்தி லுதித்தவ ளிச்சென் மத்தில்
தன் குலம் தாழ்வாய் வந்த சங்கையைச் சொல்லு மென்ன
முன்ஜன்மம் விரதந் தன்னை முட்டுக்கள் செய்த தாலே
அன்னவ ளுதித்தா ளென்றோம் அம்பிகை யாளே கேளாய்.

36. முற் பிறப்பில் பிராமணர் குலத்திற் பிறந்த ஜாதகருடைய மனைவி இந்த ஜன்மத்தில் அதற்குத் தாழ்ந்த குலத்தில் வந்து பிறப்பதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில் விரதங்களைச் செய்யாததால் இவள் இவ்விதமாகப் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

37. புத்திரர் தோன்ற வேண்டிப் புகலுவீர் கிரியை யொன்று
சத்தியும் வரனுங் கூடி ஸ்ரீரங்கந் தன்னில் சென்று
அத்தியை ஆதரித் தோர்க்கு ஆயிரம் அர்ச்சித் தேத்தி
முத்தினோர் மூவேழ் பேர்க்கு உண்டியுந் தந்து யின்னோர்;

37. ஜாதகருக்கும் இவருடைய மனைவிக்கும் குழந்தைகள் உண்டாவதற்காக ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்க, பதில் சொல்லுகின்றார். புருஷனும் மனைவியுமாக இருவரும் கூடி ஸ்ரீரங்க க்ஷேத்திரத்திற்குப் போய்க் கடலைக் காப்பாற்றுகின்றவருக்கு அலரிப்பூவினால் அர்ச்சனை பூஜை இவைகளைச் செய்து இருபத்தொன்று பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டு;

38. விடங்கந்தம் பொருளு மீந்து வித்தகர் உள்ளூர் சென்று
வடதிசை தடாகம் பக்கல் அரசாண்டு மண்டலந்தான்
உடன்பிர திட்டை செய்ய உதித்திடுஞ் சுதராண் ஒன்று
தடவரை மகளே யாங்கள் சாற்றின மொழிகுன் றுது.

38. தாமரை நூலும் சந்தனக் குழம்பும் வாசனைத் திரவியமும் பணமும் கொடுத்துப் பிறகு இவர்கள் தங்களுடைய ஊருக்குப் போய் வடக்குத் திக்கில் உள்ள ஒரு குளத்தின் பக்கத்தில் இருக்கின்ற ஓர் அரச மரத்தை ஒரு மண்டலம் வரையிலும் சுற்றி அதைப் பிரதிஷ்டை செய்து வைத்தால் ஓர் ஆண் குழந்தை பிறக்கும். விசாலமான மலைக்கு அதிபதியாகிய பர்வதராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

39. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளா ளிருநி றத்தாள்
உன்னத வார்த்தை யுண்டு உயர்வான புத்தி யேற்பள்
பின்னமில் லாத தேகி பொய்யது புகலா ளாகும்
முன்கோப முடனே தாழ்வு உலகினில் நல்லோ ளாகும்.

39. ஜாதகருடைய தாயாரின் குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் அழகுள்ளவள். இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறமான தேகத்தை உடையவள். மேன்மையான வார்த்தைகளைச் சொல்லுவாள். சிறந்த புத்தியை உடையவளாவாள். இவள் அங்க குறைவில்லாத தேகத்தை உடையவள். பொய்யைச் சொல்லமாட்டாள். முன் கோபத்தை உடையவள். இந்தக் கோபம் உடனே தணிந்து விடும். பூமியில் நல்லவளாக விருப்பாள்.

40. மாதுவும் வந்த பின்பு வானுக்கு அதிக யோகங்
காதலி துணைஆண் ஒன்று கழறுவோம் வேறு காணுள்
ஓதுவேன் அவன்கு ணத்தை உறுதியில் லாத நெஞ்சம்
மாதுயில் சின்னாள் வாழ்வான் மனைவியு மொன்றே யாகும்.

40. ஜாதகரின் தாயார் வந்து சேர்ந்த பிறகு அவளுடைய புருஷனுக்கு அதிக யோகம் உண்டாகும். இவளுக்கு ஒரே ஒரு சகோதரன்தான் உண்டு. வேறு சகோதரர்கள் கிடையா. இந்தச் சகோதரனுடைய குணத்தைச் சொல்லுகின்றேன். இவர் திடமானது நிலையானதுமான மனத்தை உடையவரல்லர். இவர் சகோதரியின் வீட்டில் சிறிது காலம் வாசஞ் செய்து கொண்டிருப்பார். இவருக்கு ஒரே மனைவிதான் உண்டு.

41. சுதராண்பால் காணு ருகுந் தோகையர் இருவ ராகும்
அதிபனு மத்தில் மாள்வன் வடதிசை யில்ல மாகும்
அதிதியே தாயின் பூர்வம் அறிவிப்போ மினிமே லாகச்
கதிதரும் அருணை தன்னில் கலந்தனள் தீயின் வமிசம்.

41. ஜாதகரின் அம்மானுக்கு ஆண் குழந்தை கிடையாது. இரண்டு பெண் குழந்தைகள் உண்டு. இவர் தனது மத்திய வயதில் இறந்து விடுவார். இவருக்கு வடக்குத் திக்கில் வீடு இருக்கும், பார்வதியம்மையே! இனிமேல் ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். மோக்ஷத்தைக் கொடுக்கின்ற அருணை என்று சொல்லப்பட்ட திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் வன்னியர் குலத்தில் இவள் பிறந்தாள்.

42. சுகமுள குடும்பி யாகித் தோகையும் வாழுந் நாளில்
ஜகமதி லுயர்வ தான திருவிழாத் தன்னில் சென்று
தகமையாய் மஞ்சள் சீப்பு ஒண்டோடி வாங்கிக் கொண்டு
தகமையாய்ப் பொருளீயாமல் சென்றனள் மானைப் போலே.

42. ஜாதகரின் தாயார் சௌக்கியமுள்ள குடும்பஸ்தையாகி வாழுகின்ற காலத்தில் உலகத்தில் மேன்மையான சிறந்த ஒரு திருவிழாவிற்குப் போய்த் தகுதியாகவும் ஒழுங்காகவும் மஞ்சள் சீப்பு இவைகளை இவள் வாங்கிக் கொண்டு ஒழுங்காக அவைகளின் கிரயத்தைக் கொடுக்காமல் ஒரு மானைப் போல வேகமாக ஓடிப்போய் மறைந்துவிட்டாள்.

43. ஏழையோன் வருத்த முற்று யியம்பின சாபங் கேண்மோ
தோழியும் பொருளீயாமல் சென்றதோர் பா விக்கேதான்
ஆழியில் வரனு மாளும அனுபிய பின்ஜன் மத்தில்
பாழாகு மத்தில் மாரன் பகர்ந்துமே தெருத்தூள் விட்டான்.

43. ஏழையாகிய வியாபாரி மனத்தில் துக்கத்தை அடைந்து கொடுத்தச் சாபத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. கிரயப் பணத்தைக் கொடுக்காமல் போய்விட்ட பாவியாகிய இவளுக்குச் சமுத்திரத்தினல் சூழப்பட்ட இந்த உலகத்தில் புருஷன் இறந்துவிடக் கடவது, இவளுடைய மறு ஜன்மத்தில இவளுக்குப் புருஷன் மத்திய வயதில் இறந்துவிடக் கடவது என்று சொல்லித் தெருவிலுள்ள மண் தூளை வாரி எடுத்துத் தூவினன்.

44. அந்ததோர் சாபந்தானும் அணு கிடும் பாவைக் கேதான்
அந்த ஓராண்டி லேதான் அவள்வரன் மரண மாகிப்
பந்தணி மனது வாடி பரவினன் காலந் நாடு
முந்தினேன் வரையப் பட்டு வுதித்தவ ளென்று சொல்வோம்.

44. அந்தச் சாபம் ஜாதகருடைய தாயாரை வந்து அடையும். அந்த ஒரு வருஷத்திலேயே அவளுடைய புருஷன் இறந்து அவள் மனத்தில் துக்கத்தை அடைந்து இறந்து எமப்பட்டணத்திற்குச் சென்று பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றேம்.

45. நாற்ப திரண்டு ஆண்டில் நவிலுவோ மன்னே கண்டம்
ஏற்கவே யிவள்பின் ஜன்மமி யம்புவோங் காளாத்தி தன்னில்
தீர்ப்பாகச் சைவ சேயாய் ஜனிப்பாளா மென்று சொல்வோம்
ஆர்க்கவே யெட்டா மாண்டில் அணிகிடுந் தந்தை கண்டம்.

45. ஜாதகருக்கு நாற்பத்திரண்டாவது * வயதில் இவளுடைய தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகின்றேம். இவள் காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் சைவர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள் என்று சொல்லுகின்றேம். ஜாதகருக்கு எட்டாவது † வயதில் இவருடைய தகப்பனர் இறந்துவிடுவார்.

* குறிப்பு.—தாயார் மரண விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷ்ரு 41-0-0 முதல் ஷ்ரு 42-0-0 வரையிலும், அங்காரக தசையில் புத புத்தி கேது புக்தி இவைகள் நடக்கின்றன. பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் மாதுர் லக்கினமாகிய நாலாம் பாவமாகிய துலாத்திற்குச் சூரியனும் குருவும் மாரகாதிபதிகள். பராசரஹோரையின் சில பதிப்புப் பிரகாரம் அங்காரகனும் மாரகாதிபதியாகின்றுர். அங்காரகன் விஷயமாக 82-ஆவது நம்பர் ஜாதகம் 24-ஆவது பாடலின் கீழ்க் கொடுத்துள்ள வியாக்கியானத்தையும் பார்க்கவும். அங்காரகன் துலாத்திற்கு இரண்டு ஏழு என்கிற மாரக ஸ்தானங்களுக்கு அதிபதியாகி பதினோராவது மாரக ஸ்தானத்தில் மாரகாதிபதியாகிய சூரியனுடன் கூடி இருக்கின்றுர். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரங்கூட மாதாவைத் தன்னுடைய தசையில் மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராகவிருக்கின்றுர். கேது மாதுர் லக்கினுதிபதியும் அஷ்டமாதிபதியுமாகிய சுக்கிரனுடன் கூடி மாரகாதிபதியாகிய குருவால் பார்க்கப்பட்டிருப்பதால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகம், ஜாதக பாரிஜாதம் பதினுன்காவது அத்தியாயம் 60-ஆவது சுலோகம், துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் கார்க்கேயர் ஜோதிடம் முதற்காண்டம் 680-ஆவது பாடல் இவைகளின் பிரகாரம் புதனைவிட கேது தன் புக்தியில் மாரகஞ் செய்ய அதிக அமைப்பு உடையவராகின்றுர்.

† தகப்பனுர் மரண விஷயம்.—பிதுர்பாவமாகிய ஒன்பதாவது வீடு மீனம் பிதுர் லக்கினமாகும். இதற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி, புதன், சுக்கிரன், சூரியன் இவர்கள் மாரகாதிபதிகளாகின்றுர்கள். பிதுர் ஸ்தானத்தில் சனி இருப்பதும், பிதுர் லக்கினுதிபதியாகிய குரு நீசமாகி ராகுவுடன் இருப்பதும், அங்காரகன் பிதுர் பாவத்தைப் பார்ப்பதும், பிதுர் காரகனுகிய சூரியனுடன் கூடி இருப்பதும், பிதுர் லக்கினத்தை ராகு பார்ப்பதும், பிதுர் ஸ்தானத்திற்கு ஆயுஸ் ஸ்தானுதிபதியாகிய சுக்கிரன் கேதுவுடன் கூடியிருப்பதும் பிதாவுக்குத் தோஷமாகும். ஜாதகருக்கு வயது ஷ்ரு 7-0-0 முதல் ஷ்ரு 8-0-0 முடியும் வரையிலும் சுக்கிர தசையில் சந்திர புத்தி அங்காரகன் புக்தி இவைகள் நடக்கின்றன. சுக்கிரன் மாரகாதிபதியும் எட்டிற்குடையவருமாகி லக்கினுதிபதியாகிய குருவைப் பார்க்கின்றுர். ஆகையால் தன் தசையில் மாரகஞ் செய்ய அமைப்புடையவராகின்றுர். அங்காரகன் இரண்டாவது மாரக ஸ்தானுதிபதியாகி மாரகாதிபதியும் பிதுர்காரகனுமாகிய சூரியனுடன் கூடிப் பிதுர் ஸ்தானத்தைப் பார்க்கின்றுர். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகம், 82-ஆவது நம்பர் ஜாதகம் 24-ஆவது பாடலின் கீழ் கண்டுள்ள வியாக்கியானப் பிரகாரம் அங்காரகன் தன் புத்தியில் மாரகஞ் செய்ய அமைப்புள்ளவராகின்றுர்.

46. பின்ஜன்மங் குடகு தன்னில் பிறப்பனும் க்ஷத்திரிய சேயாய்
இன்னவன் பாரிக் கேதானியம்புவோ மன்பா னேழில்
நன்பதஞ் சேர்வா ளாகும் நவிலுவோம் பின்ஜன்மத்தைக்
கன்னியா குமரி தன்னில் கலப்பளாம் பிரம சேயாய்.

46. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய மறு ஜன்மத்தில் குடகு தேசத்தில் க்ஷத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறப்பார். ஜாதகருடைய மனைவிக்கு இவருடைய ஐம்பத்தேழாவது வயதில் * மரணம் ஏற்படும். நல்ல பதவியை அடைவாள். இவளுடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகின்றேம். இவள் கன்னியாகுமரியில் பிராமணர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள்.

* குறிப்பு.—மனைவி மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷ்ரு 56-0-0 முதல் ஷ்ரு 57-0-0 முடியும் வரையிலும் ராகு தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. களத்திர லக்கினம் ஏழாவது பாவமாகிய மகரம் ஆகும்.

இதற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் குரு அங்காரகன் சந்திரன் இவர்கள் மாரகாதிபதிகளாகின்றுர்கள். ராகு மாரகாதிபதியாகிய குருவுடன் கூடி களத்திர ஸ்தானமாகிய ஏழில் இருந்து கொண்டு களத்திர ஸ்தானுதிபதியாகிய சனியையும், களத்திரகாரகனுகிய சுக்கிரனையும் பார்க்கின்றுர். ஆகையால் ஜாதகசந்திரிகை 12, 23-ஆவது சுலோகங்களின் பிரகாரம் களத்திரத்திற்கு மாரகஞ் செய்ய அமைப் புடையவராகின்றுர். சுக்கிரன் மகரத்திற்கு ஏழில் மாரகாதிபதியாகிய சந்திரனுடைய வீட்டில் மாரக ஸ்தானத்தில் இருப்பதால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் தன் புக்தியில் மாரகஞ் செய்வார்.

47. மாரனுக் கறுபா னெட்டில் மேடமா தத்தி லேதான்
கூறுவோம் மாரகங்கள் குலவும்பின் ஜன்மங் கேளாய்ப்
பார்புகழ் வள்ளூர் தன்னில் பிறப்பனும் மறைக்கு லத்தில்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

47. ஜாதகருக்கு அறுபத்தெட்டாவது வயதில் * சித்திரை மாதத்தில் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். இவருக்கு நேரிடும் மறு பிறப்பைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. பூமியில் புகழப்பட்ட வள்ளூரில் பிராமணர் குலத்தில் இவர் ஆண் குழந்தையாகப் பிறப்பார். ஆறு பெருமைபொருந்திய முகங்களை உடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

* குறிப்பு.—ஜாதகர் மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ௵ 67–0–0 முதல் ௵ 68–0–0 முடியும் வரையிலும் குரு தசையில் புத புக்தி நடக்கின்றது. கடக லக்னத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி சுக்கிரன் புதன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றுர்கள். குரு ஆறுக்குடையவராய் நீசமடைந்து ராகுவுடன் கூடி மாரகாதிபதியாகிய சனி வீட்டில் இருந்துகொண்டு லக்னத்தைப் பார்ப்ப தால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் குரு தன் தசையில் மாரகஞ் செய்யும் அமைப்புள்ளவராகின்றுர். புதன் மாரகாதிபதியாகி மாரக ஸ்தானத்தில் இருந்துகொண்டு அஷ்டமாதிபதியாகிய சனியைப் பார்ப்பதால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் தன் புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்புள்ளவராகின்றுர்.

48. இந்ததோர் ஜன்மந் தன்னில் இவன்செய்த புண்ணிய மென்ன
முந்தவே கூறு மென்ன வுயர்வான தலங்கள் சென்றும்
விந்தையாய் வார்த்தை யின்றி விகடங்கள் கூறுததாலும்
அந்தவ னுதிப்பா னுகும் அம்பிகை யாளே கேளாய்.

48. ஜாதகர் இந்த ஜன்மத்தில் என்ன புண்ணியங்களைச் செய்தார் ? இவைகளை உடனே சொல்லுவீர் என்று கேட்க பதில் சொல்லுகின்றுர். மேன்மையானவும், சிறந்தவையுமான ஸ்தலங்களுக்குப் போயும், ஆச்சரியமானவார்த்தைகள் இல்லாமலும், சிறிப்பையும் வேடிக்கையை உண்டுபண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லாமல் இருந்ததாலும் இவர் பிராமணகுலத்திற் பிறப்பார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

49. அன்னவ னுதிக்கும் காலே அசுவினி கடைப்பா தத்தில்
துன்கேது தசை யோராண்டுந் திங்களும் நான்கு மாகும்
முன்பாகம் விவரஞ் சொன்னேம் மொழிகிறோம் பின்பால் சேதி
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

49. ஜாதகர் பிறக்குங் காலத்தில் அசுவினி நட்சத்திரத்தில் நான்கா வது பாதத்தில் துன்பத்தை விளைவிக்கின்ற கேது மகா தசையில் ஒரு வருஷ மும் நான்கு மாதங்களும் இருப்பு ஆகும். இவ்விதமாக முதல்பாகத்தின் விவரங்களைச் சொல்லிவிட்டோம். பின்னுல் மற்ற விஷயங்களைச் சொல்லு கின்றேம். மேன்மையான சிறந்த யானைமுகத்தை உடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகம் 102.

1. மதி[1] புதன் நண்டில்[2] சனிதுலாம் வெள்ளி[3] மாட்டினி[4]
[லிரவியும்[5] வீணை[6]

நிதிகுரு கேது சாடியில்[7] ராகு நில மகன்[8] அரியினில்[9] நின்று
பதியது கடகம் பலன் எவ்வாறு புகல்வீர் பகருவோ மாண்
[சுதராகும்

அதிபனு மில்லம் வடவாசல் கீழ்மேல் வாயுவில் இருக்கும்.

		சுக்கிரன்	சூரியன்
குரு கேது	இராசி		லக்கினம் சந்திரன் புதன்
	சக்கரம்		அங்காரகன் ராகு
		சனி	

பூசம் 1-ஆம் பாதம். சனி தசை ஷு 17-0-0.

2. சந்திரனும் புதனும் கடகத்திலும், சனி துலாத்திலும், சுக்கிரன் ரிஷபத்திலும், சூரியன் மிதுனத்திலும், திரவியத்தைக் கொடுக்கக் கூடிய குருவும் கேதுவும் கும்பத்திலும், ராகுவும் அங்காரகனும் சிம்மத்திலும், ஜன்ம லக்கினம் கடகமாகவும் இருந்தால் பலாபலன்கள் எவ்விதமாக விருக்கும் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்க, பிறந்த குழந்தை ஆண் குழந்தை என்று சொல்லுகிறேம் என்றார். ஜாதகர் பிறந்த வீடு வடக்கு நோக்கிய வாசலை உடையதாகும். அது கிழக்கு மேற்கு வீதியில் வட மேற்குத் திக்கில் இருக்கும்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும் :—மேஷத்தில் சனியும், ரிஷபத் தில் கேதுவும், சிம்மத்தில் சந்திரனும் அங்காரகனும் சுக்கிரனும், துலாத் தில் புதனும், விருச்சிகத்தில் ராகுவும், கும்பத்தில் குருவும், மீனத்தில் சூரியனும் ஆகும். குருவும் சனியும் வக்கிரகதியில் இருக்கின்றார்கள்.

இந்த ஜாதகம் இராசிச் சக்கரத்திலும், அம்சைச் சக்கரத்திலும், நட்சத் திரத்திலும், தசை இருப்புத் தொகையிலும் முந்தியே சொல்லியுள்ள 91-வது ஜாதகத்தைப் போலவே இருக்கின்றது.

[1] சந்திரன். [2] கடகம். [3] சுக்கிரன்.
[4] ரிஷபம். [5] சூரியன். [6] மிதுனம்.
[7] கும்பம். [8] அங்காரகன். [9] சிம்மம்.

ஜாதகம் 103

1. மதி[1] மேடம் பொன்னும்[2] சாடி[3] மார்த்தாண்டன்[4] புகரும்[5]
கோலில்[6]

புதன்சனி குருதி[7] கன்னி பணி[8] நந்தி[9] கேது தேளில்[10]
இதுவிதக் கோளும் நின்று லக்கினம் கடக மாக
அதுபலன் விபர மாக அறிவிப்பீர் முனிவ ரேநீர்.

	சந்திரன்	ராகு	
குரு	இராசி		லக்கினம்
	சக்கரம்		
	கேது	சூரியன் சுக்கிரன்	புதன் அங்காரகன் சனி

பரணி 2-ம் பாதம். சுக்கிரதசை ஷு 12-5-0.

1. சந்திரன் மேஷத்திலும், குரு கும்பத்திலும், சூரியனும் சுக்கிர னும் துலாத்திலும், புதனும் சனியும் அங்காரகனும் கன்னியிலும், இராகு ரிஷபத்திலும், கேது துலாத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் கடக மானல் பலாபலன்களை, முனிவரே ! நீர், விவரமாகத் தெரிவிப்பீராக.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—சிம்மத்தில் கேதுவும், கன்னியில் சந்திரனும் புதனும், துலாத்தில் சூரியனும், மகரத்தில் சுக்கிரனும் சனி யும், கும்பத்தில் அங்காரகனும் ராகுவும், மீனத்தில் குருவும் ஆகும். புதனும் சுக்கிரனும் சனியும் அஸ்தங்கதர்களாக விருக்கின்றார்கள்.

2. இந்தச்சே யாணுஞ் ஜன்ம மில்லமும் வடதென் வீதி
எந்தையே மேற்கு வாசலில்லமுங் கெட்டி யாகும்
அந்தரி மாரி யீசன் அருகரும் உத்தர மாகுந்
தென்திசை கிரியும் வேலோன் தங்கிடும் புறவா கத்தான்.

2. ஜெனனமான இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேற்கு நோக்கிய வாயிலை உடைய வளி வான வீடாகும். பார்வதியம்மன் கோயிலும் மாரியம்மன் கோயிலும் சிவ

[1] சந்திரன். [2] குரு. [3] கும்பம். [4] சூரியன். [5] சுக்கிரன். [6] துலாம். [7] அங்காரகன். [8] இராகு. [9] ரிஷபம். [10] விருச்சிகம்.

பெருமானுடைய கோவிலும் சமணருடைய கோவிலும் வடக்குத் திக்கில் இருக்கும். தெற்குத் திக்கில் ஒரு மலையும் முருகருடைய கோவிலும் ஒரு பக்கமாக விருக்கும்.

3. குடகினில் மலையு முண்டு குஞ்சர முகத்தோன் வாசம்
அடைவுடன் சிற்றூர் தன்னில் அறைந்தனம் அருகர் சேயாய்த்
திடமுள குடும்ப மென்றேஞ் சப்தமஞ் ஜனன மாகும்
விடமுடி தரித்த புத்தர் விளம்பலா மிந்தப் பாலன்.

3. மேற்குத் திக்கில் ஒரு மலையும் இருக்கும். யானை முகத்தை யுடைய விநாயகக் கடவுளின் கோவிலும் மேற்கில் இருக்கும். இவ்விதமான அடையாளங்கள் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் ஜாதகர் ஜைனருடைய குலத்தில் பிறப்பார் என்று சொல்லுகின்றேம். இவர் பிறந்த குடும்பம் வலி வாகவும் வளமாகவும் இருக்கும் என்று சொல்லுகின்றேம். இவர் ஏழாவது கர்ப்பத்தில் பிறப்பார். முடிதரித்த புத்த மதத்தில் இவர் பிறந் தார் என்று சொல்லலாம்.

4. தந்தையின் துணைஆண் ஒன்று சாற்றுவோந் தீர்க்க மாக
அந்தவ னிளை யோனை அறைகிறேந் தாயே கேளும்
பிந்தியுஞ் சிலநாள் சென்று பிரிகுவான் துணைவன் தானும்
எந்தக் காலங்கள் செல்லுவா னியம்புவீர் விவர மாக.

4. ஜாதகரின் தகப்பனுருக்கு ஓர் ஆண் சகோதரனும். இந்தச் சகோ தரன் நீண்ட ஆயுளை உடையவர் என்று சொல்லுகிறேம். இவர் இளைய சகோதரன் என்று சொல்லுகின்றேம். பார்வதியம்மையே ! கேட்பீ ராக. சிறிது காலம் பொறுத்து இவர் தன்னுடைய சகோதரனிடமிருந்து பிரிந்து போய்விடுவார். இவர் எந்தக் காலத்தில் வேருகப் பிரிந்து போய் விடுவார் என்ற விஷயத்தை விவரமாகச் சொல்லுவீராக.

5. இருநான்கு ஆண்டு தன்னி லியம்பிஞே மந்தச் சங்கை
திருமகன் சேதி தன்னைச் செப்புவோ மிரண்டி லேதான்
வருங்கன்னி யைந்தே யாகும் வளமிலா மற்ற வல்லாங்
குறைவுண்டு சிலது நாளில் கோதையர் சிலரே என்றேம்.

5. தகப்பஞரின் இளைய சகோதரர் ஜாதகருக்கு எட்டாவது வயதில் பிரிந்து போய்விடுவார் என்று சொல்லுகின்றேம். இவருடைய மற்ற விஷயங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்றேம். தகப்பஞருடன் பிறந்த சகோதரிகள் ஐந்து போவார்கள். மற்றச் சகோதரங்கள் எல்லாரும் இறந்து போய்விடுவர். சில சகோதரிகளுக்குச் சில காலம் பொருத்து தோஷம் உண்டாகும் என்று சொல்லுகின்றேம்.

6. மானிலம் விருத்தி செய்வன் வளமுன குடும் பியாவன்
ஆனவர் நேசங் கொள்வன் ஆசாரன் யாவர்க்கும் உதவி செய்வன்
தானமுந் தருமமுஞ் செய்வன் திருப்பணி வேலே பூண்பன்
மானனே யார்க்கு நேயன் மானிலம் நல்லோ னவன்.

6. ஜாதகருடைய தகப்பஞர் பெரிய நிலங்களைப் பயிரிட்டுத் தானியங் களை விருத்தியாக்குவார். மேன்மையான சிறந்த குடும்பஸ்தராவார். பெரிய மனிதர்களுடைய சினேகத்தை உடையவர். நல்லொழுக்கம் உடையவர் எல்லோருக்கும் உபகாரஞ் செய்வார். தானமும் தருமமுஞ் செய்வார். கோவில் வேலைகளைச் செய்வார் மானைப்போல அழகான கண்களை உடைய ஸ்திரீகளுக்குப் பிரியமானவர். இந்தப் பெரிய பூமியில் நல்லவராக விருப்பார்.

7. சொல்லதைக் காப்பா ஞகுஞ் சுத்தநன் மனத்தா ஞகும்
புல்லியர் நேசங் கொள்ளான் புதிதான கிரகஞ் செய்வன்
அல்லல்க ளடையா ஞகும் அரவச மனத்த னென்றேம்
வெல்லுவான் எதிரி தன்னை வீணவழக் கோரம் சொல்லான்.

7. ஜாதகருடைய தகப்பஞர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவருமல் காப்பாற்றுவார். பரிசுத்தமான நல்ல மனத்தை உடையவராவர். கீழ்ம க்களுடைய சினேகத்தை விரும்பமாட்டார். புதிய வீட்டைக் கட்டுவார். கஷ்டங்களை அடையமாட்டார். தருமஞ் செய்கின்ற குணத்தை உடையவர் என்று சொல்லுகின்றேம். தன்னுடைய சத்துருக்களை ஜயித்துவிடுவார். வீணான சண்டையில் ஒரு பக்கமாகப் பொய்ச்சாட்சி சொல்லமாட்டார்.

8. பூமியு மதிகஞ் சேர்ப்பன் பொருந்தவே உரைப்பா ஞகுந்
தீமையை வெளிக்காட் டாதான் தோத்திரப் பிரிய ஞகும்
நேமியில் சல்லியஞ் கொள்ளான் நிகரிலா பணை ஏர் விருத்தி
காமனை விருப்பங் கொள்வன் கண்முகம் பெரிதாய்க் காட்டும்.

8. ஜாதகருடைய தகப்பஞர் அதிக நிலங்களைச் சேர்த்து வைப்பார். பொருத்தமாகப் பேசுவார். கஷ்டங்களை வெளியே பிறருக்குத்தெரியும் படியாகக் காண்பித்துக் கொள்ளமாட்டார். தன்னைப் பிறர்புகழ்வதில் ஆசையுள்ளவர். பூமியில் கடன் வாங்க மாட்டார். ஒப்பற்ற சிறந்த நிலங் களும் ஏர்களும் இவருக்கு விருத்தியாகும்.

9. வித்தையும் புத்தி மானும் மேதினில் கிருஷி செய்வன்
சுத்தவா னன்ன மீவன் தோகையி னஸ்தி யெய்தும்
பெத்திடும் புத்திரியாலும் பிரபலமாய்ப் பூமி காணும்
இத்தகை இரண்டி லேதானி யம்புவோம் விபர மாக.

9. ஜாதகருடைய தகப்பஞர் கல்வி உடையவர். புத்திசாலி யாக விருப்பார். பூமியில் நிலங்களைப் பயிரிடுவார். சுத்தமாக விருப்பார். சாப்பாடு போடுவார். இவருக்கு ஸ்திரீயினுடைய சொத்து வந்துசேரும். அவருக்குத் தன்னுடைய புத்திரி மூலமாக விசேஷமான நிலம் வந்துசேரும். இந்த விஷயத்தைப்பற்றி இரண்டாவது பாகத்தில் விவரமாகச் சொல்லுகின் றேம்.

10. சொன்னமிக் குணத்தானுக்குச் சுந்தரனுதிப்பா ஞகும்
அன்னவன் சேதி சொல்வேன் யானையின் நிறத்தா ஞகும்
உன்னதக் கல்வி கற்பன் உள்மனங் கபட மில்லான்
அன்னியர் மதிக்க வாழ்வன் அடக்கவான் பொறுமை சாலி.

10. இங்குச் சொல்லப்பட்ட இவ்விதமான குணாதிசயங்களை உடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் யானையின் நிறத்தைப் போன்ற ஒரு விதமான கறுப்பு நிறமுடைய தேகத்தை உடையவர். மேன்மையான சிறந்த வித்தையை அடைவார். தனது மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை இவைகள் இல்லாதவராவார். பிறர் இவரை மதிக்கும்படியான அந்தஸ்தி லிருந்து வாழ்வார். அடக்கமாக விருப்பார். பொறுமையை உடையவ ராவார்.

11. தனம்பணி பூமி யுண்டு தை யலர் மோக வானும்
இனங்கட்கு மேலாய் வாழ்வன் இருவிதக் கல்வி யுண்டு
வினைசெய்யான் யாவருக்கும் விண்ணவர் பூசை செய்யான்
சினமுள்ளான் பின்பு தாழ்வன் சென்றிடம் பெருமை பூண்பன்.

11. ஜாதகர் பணம் ஆடை ஆபரணங்கள் நிலம் இவைகளை உடையவரா வார். ஸ்திரீகளின்மேல் காம ஆசையை உடையவர். பந்துக்களைவிட அதிகமான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவருக்கு இரண்டு விதமான வித்தை உண்டு. யாருக்கும் கெடுதியையும் பாவத்தையுஞ் செய்யமாட்டார். தேவர்களைப் பூஜை செய்வார். முதலில் கோபத்தை உடையவர். பின்னுல் இத்தக் கோபம் தணிந்து விடும். போனவிடங்களில் இவருக்கு மரியாதையும் பெருமையும் உண்டு.

12 வண்டிவா கனமு முள்ளான் மன்னர்க ளிஷ்டங் கொள்வன்
அண்டினோர்க் குதவி செய்வன் அவனியில் கீர்த்தி யேற்பன்
பண்டுநாள் பூமி விருத்தி பலபாவை மோகங் கொள்வன்
குண்டுணி கொஞ்ச முண்டு கார்முக வடிவு காணும்.

12. ஜாதகர் வண்டியும் சவாரிவாகனமும் உடையவராவார். அரசர் களுடைய விசுவாசத்தை உடையவர். தன்னை வந்து அடைந்தவர்களுக்கு உபகாரஞ் செய்வார். பூமியில் கீர்த்தியையும் புகழையும் அடைவார். பழைய காலத்திய நிலங்களை விருத்தியாக்குவார். அநேக ஸ்திரீகளின்மேல் காம ஆசையை உடையவராவார். சிறிது கோள் சொல்லுவார். நீர்மேகக் குறிப்பு முகத்தில் தோன்றும்.

13. இவன்துணை எழுவ ராகும் இவன் முன்ஆண் பானு மொன்று
அவனியில் தீர்க்க மெய்தும் அதற்குமுன் பெண்பால் ரண்டு
கவனமாய்ச் சொன்னேன் தீர்க்கங் காதலி மூத்தோள் தானும்
பவமதா யிரண்டாமா தாய்ப் பாலிபாள் உள்ளூர் தன்னில்.

13. ஜாதகருடன் கூடப் பிறந்தவர்கள் எழு பேராவார்கள். இவருக்கு முன்னே ஓர் ஆண் சகோதரம் உண்டு. இந்தச் சகோதரர் பூமியில் நீண்ட வயதை உடையவராக விருப்பார். இவருக்கு முன்னே இரண்டு பெண் சகோதரங்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று ஞாபகத்துடன் குறிப்பாகச் சொல்லுகின்றேன். இவர்களில் பெரிய சகோதரி யானவள் பாபவசத்தினுல் உள்ளூரிலேயே இரண்டாவது மனைவியாக நேரிடுவாள்.

14. சுதர்தோ ஷமாகி வாழ்வாள் சுந்தரி யோக சாலி
பதர்குண மில்லா ளாகும் பஞ்சைகட் கன்ன மீவள்
துதிசெய்தோர் தம்மைக் காப்பள் தோகைபோல் நிறத்தா ளாகும்
அதிபதி வறுமை காணுள் மாதுருசொல் முன்கோ பத்தாள்.

14. ஜாதகருடைய மூத்த சகோதரி புத்திர தோஷத்தை உடையவளாக விருந்து வாழ்வாள். இவள் யோகத்தை உடையவளாவாள். தாழ்ந்த குணத்தை உடையவளல்லள். ஏழைகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் சாப்பாடு போடுவாள். தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசுகின்றவர்களைக் காப்பாற்றுபவளாவாள். மயிலைப்போன்ற ஒருவிதமான மினுமினுப்பான நிறத்தையுடையதேகத்தை உடையவள். இவள் கஷ்டத்தையும் தரித்திரத் யும் அடையமாட்டாள். இவள் பேசுவதற்கு முன்னமே கோபத்தை உடையவளாவாள்.

15. குத்தமில் லாதா ளாகுங் குலத்துளோர் மதிக்கவாழ்வள்
பத்தியுஞ் சீல முண்டு பால்பாக்கியம் உடையா ளாகும்
வித்தகி விவரந் தன்னை விளம்புவோம் விவரம் ரண்டில்
சத்தியி னிளை யோர் சேதி சாற்றுவோங் கேளும் தாயே.

15. ஜாதகருடைய மூத்த சகோதரி கெட்ட குணங்கள் இல்லாதவளா வாள். தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்தில் இருந்து வாழ்வாள். தெய்வ பக்தியும் அன்பும் உடையவளாவாள். நல்ல நடவடிக்கை உள்ளவள். பால் பாக்கியம் உடையவளாவாள். இவளுடைய வயது முதலிய மற்ற விஷயங்களைப் பற்றி இரண்டாவது பாகத்தில் விவரமாகச் சொல்லுகின்றோம். இவளுடைய இளைய சகோதரியினுடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதி யம்மையே ! கேட்பீராக.

16. சொல்லது சுகமே யுண்டு சோம்பலுங் கொஞ்ச முண்டு
வல்லியுங் கொடிபோலாவாள் வரன்மனம் போலே நோாள்
புல்லிய புத்தி யில்லாள் பிலமிலாக் குடும்பி யாவள்
வல்லியின் மாமிரண்டு வரைந்தனம் உத்தரத்தில்.

16. ஜாதகருடைய இளைய மூத்த சகோதரி சுகமான இனிமையான வார்த்தைகளையே சொல்லுவாள். கொஞ்சம் சோம்பலுள்ளவளாவாள். தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத்தகுந்தபடி நடந்துகொள்ள மாட்டாள். கெட்ட தாழ்ந்த புத்தி இல்லாதவள். வலிவில்லாத மேன்மை இல்லாத குடும்பஸ்தையாவாள். இவளுக்கு இரண்டு மாமியார்கள் உண்டு. இவர்கள் வடக்குத் திக்கில் இருந்து வந்து நேரிடுவார்கள்.

17. வரனுண்டாம் போன பின்பு வளமான குடும்ப மாகுந்
திருமகள் விலாச மெய்துஞ் சித்திர மில்ல மாகுந்
தரையினில் வறுமை காணுள் சந்ததி ஆண்பா லொன்று
பிறைமுக மொத்த பெண்பால் பேசுவோம் அவ்வா றுக.

17. ஜாதகருடைய இளைய மூத்த சகோதரிக்குப் புருஷன் வந்துநேர்ந்த பிறகு இவள் செழிப்பான குடும்பத்தை உடையவளாவாள். இவளிடத்தில் இலட்சுமி வாசஞ்செய்வாள். அழகான சித்திரங்கள் உடைய வீடு உண்டாகும். பூமியில் இவள் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடைய மாட்டாள். இவளுக்குச் சந்ததிகளில் ஓர் ஆண் குழந்தையும் சந்திரனைப் போல அழகான முகத்தை உடைய ஒரு பெண் குழந்தையும் உண்டு.

18. மங்கையும் கேட்க லுற்றுள் மாதுக்கெவ் விதத்தால் செல்வம்
பொங்கிய குடும்ப மெய்தும் புகலு்வீரந்தச் சங்கை
நங்கையே பூமி மூலம் நல்கிடும் நிதிநிட் சேபம்
இங்கிவன் பொன்மூன் றுண்டில் எய்துமாம் அந்தச் சேதி.

18. பார்வதி யம்மையார் கேட்கின்றுர். இவளுக்கு எவ்விதத்தில் குடும்பம் க்ஷேமமாக விருக்கும். அந்த விஷயத்தைச் சொல்லுவீராக. பார்வதி யம்மையே! இவளுக்கு நிலத்தின் மூலமாகத் தனமும் புதையலும் கிடைக்கும். இவருக்கு மூன்றுவது வயதில் தனம் வந்து சேரும். இது விஷயமாய்

19. இன்னமும் விவர மாக இயம்புவோ மிரண்டிலே தான்
பின்துணை ஆண்பால் சேதி பேசுவோந் தாயே கேளும்
தன் சொல்லே மேன்மை யாகச் சாதிப்பான் கல்வி கொஞ்சஞ்
சொன்னசொல் இரண்டு முள்ளான் தோகையர் வசியங்
[கொள்வன்.

19. இன்னம் அதிகமான விவரங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்றேம். இவளுக்குப்பிந்திய ஆண் சகோதரத்தின் விஷயத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். எங்கள் தாயாராகிய பார்வதி யம்மையே! கேட்பீராக. இவர் தான் சொல்லுகின்ற வார்த்தைகளே உண்மையானவை, சிறந்தவை என்று சொல்லி வாதித்து நிலை நாட்டக்கூடியவராவார். இவருக்கு வித்தை கொஞ்சமாக விருக்கும். இவர் இரண்டுவிதமான சொற்களை, அஃதாவது உண்மையையும் பொய்யையும் கலந்து பேசுவார். ஸ்திரீகளைத் தன் வசம் செய்துகொள்ளுவார்.

20. நடையது துருசு முள்ளான் நவிலுவான் நயமாய் வார்த்தை
தடமது செய்கை யுள்ளான் தாய்வர்க்கம் பூமி சேருந்
திடமதாய் மூன்று யில்லஞ் செய்வனு மரசரிஷடன்
உடன்பிறந் தோர்கள் பட்சன் யுண்மையை யுரைக்கா னென்றேம்.

20. ஜாதகருடைய மூத்த சகோதரன் கெட்ட நடவடிக்கை உடையவராவார். இனிமையானவும் இதமானவுமான வார்த்தைகளைச் சொல்லுவார். வீட்டைக் கட்டுஞ் சாமர்த்தியமுடையவர். தன்னுடைய தாய் வர்க்கத்தாருடைய மூலம் நிலங்கள் இவருக்கு வந்துசேரும். வலிவான மூன்று வீடுகளைக் கட்டுவார். இவர் அரசர்களுக்குப் பிரியமானவராக விருப்பார். தன்னுடன் கூடப் பிறந்தவர்களிடம் அன்புடையவராய் இருப்பார். உண்மையைச் சொல்லமாட்டார் என்று சொல்லுகின்றேம்.

21. தந்தைநாள் பூமி மேலாய்த் தானவன் சேர்ப்பா னுகும்
பந்துக்கள் மதிக்க வாழ்வன் பால்பாக்கிய முடையனுவன்
வந்திடும் மாமிரண்டு மனைவியுமொன்றே யாகும்
நொந்திடும் பேரைக் காப்பன் நிமலன்மேல் பத்தி கொள்வன்.

21. ஜாதகருடைய மூத்த சகோதரர் தன்னுடைய தகப்பனுருடைய காலத்திலிருந்த நிலங்களைவிட அதிகமான நிலங்களைச் சேர்த்து வைப்பார். தன்னுடைய பந்துக்கள் இவரை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். பால் பாக்கியமுள்ளவராவார். இவருக்கு இரண்டு மாமியார்கள் உண்டு. ஆனால் மனைவி மாத்திரம் ஒருத்தியேயாவள். கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர்களையும் ஏழைகளையும் காப்பாற்றுவார். கடவுளின் பேரில் பக்தியும் அன்பும் உடையவராவார்.

22. வடதிசை தந்தை வர்க்கம் மனைவியும் நேரு மென்றேந்
திடமாய்ப் புத்திர வர்க்கந் தீட்டுவோ மினிமே லாக
அடைவுடன் நவம மாகும் வளமையாயைந்துந் தீர்க்கம்
உடன்கூடி சிலநாள் சென்று உத்தமன் வேறுய்ச் செல்வன்.

22. ஜாதகருடைய மூத்த சகோதருக்கு வடக்குத் திக்கிலிருந்தும் தன்னுடைய தகப்பனுருடைய பந்துக்களில் இருந்தும் மனைவி வந்து நேரிடுவாள் என்று சொல்லுகின்றேம். புத்திர பாகத்தைப்பற்றி இனிமேல் உறுதியாகச் சொல்லுகின்றேம். ஒன்பது குழந்தைகள் பிறப்பார்கள். இவர்களில் ஐந்து குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவர் குடும்பத்தில் கொஞ்சகாலம் ஒன்றுகக்கூடி இருந்து பிறகு வேறு குடும்பமாகப் பிரிந்து போய் விடுவார்.

23. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அவளிரு நிறத்தாளாகுந்
தன்சொல்லு மடக்க முண்டு தந்தமுந் தரள மொக்கும்
பொன்பொரு ளுடைய ளாகும் பாவையும் பொறுமை சாலி
சொன்னதைக் காப்பா ளாகுந் தேவதா பத்தி பூண்பன்.

23. ஜாதகருடைய தாயாருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் இரண்டு நிறங்கள் கலந்த மாநிறமான தேகத்தை உடையவளாவாள். இவள் கொஞ்சமாகவும் நிதானமாகவும் பேசக்கூடியவள். இவள் முத்தைப்போன்ற அழகான பற்களை உடையவள். இவள் தனமும் சொத்தும் உடையவளாவள். இவள் பொறுமையுடனும் சாந்தமாகவும் இருப்பாள். தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறுமல் காப்பாற்றுவாள். தெய்வங்களின்மேல் பக்தியும் அன்பும் உடையவளாவாள்.

24. பித்தமாம் வாயு ரோகம் பொருந்திடுஞ் சொல்பமாக
வித்தகி துணையாண் ரண்டு மெல்லியு மவ்வாறு தீர்க்கம்
அத்தலம் உள்ளு ராகும் ஆண்துணை மூத்தோ னுக்கு
அத்தையை மணமே கொள்வன் அனுகாரே சுதர்கள் தாமே.

24. ஜாதகருடைய தாயார் பித்யுவாயு ரோகத்தைக் கொஞ்சமாக உடையவளாவாள். இவளுக்கு இரண்டு ஆண் சகோதரங்களும் இரண்டு பெண் சகோதரங்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாகவிருப்பார்கள். இவளுடைய வீடு உள்ளூரிலேயேவிருக்கும். ஆண் சகோதரர்களில் மூத்த வனுக்கு ஜாதகருடைய அத்தை மனைவியாகப் போய் வாய்ப்பாள். ஆனால் இவர்களுக்குக் குழந்தைகள் கிடையா.

25. வறுமை களடையா னுகும் அருகன்தன் பத்தி கொள்வன்
பெருமையும் புகழு மேற்பன்......................
....வன்
சிறுவன் தனக்குப் பாரி செப்பினே மிரண்டே யாக.

25. ஜாதகரின் தாயாருடைய சகோதரருள் மூத்தவன் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டார். சமணர்களின் தேவ குருவின்மேல் பக்தியையும் அன்பையும் உடையவராவர். இவர் பெருமையையும் கீர்த்தியையும் அடைவார். தாயாருடைய சகோதரருள் இளையவனுக்கு இரண்டு மனைவிகள் உண்டாவார்கள் என்று சொல்லுகின்றேம்.

26. முதல் மனை தந்தை பின்னேள் முடிவற்ற தன்மூத் தோளே
அதிபனும் மணமே கொள்வன் தேவியாண் காணு ளாகும்
அதிபதி பெண்பால் ரண்டு வரைகிறேந்தீர்க்க மாக
....மே.

26. ஜாதகரின் தாயாருடைய சகோதரர்களில் இளைய சகோதரனுக்கு ஜாதகருடைய தகப்பனுரின் இளைய சகோதரி முதல் மனைவியாக அமைவாள். இவள் இறந்தபிறகு ஜாதகருடைய மூத்த சகோதரி இரண்டாவது மனைவியாக நேரிடுவாள். இவளுக்கு ஆண் குழந்தை கிடையாது. இரண்டு பெண் குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவராகவிருப்பார்கள்.

27. ஏகமாங் குடும்பி யாவன் இரண்டிலே விவரஞ் சொல்வேன்
தோகையின் பூர்வஞ் சொல்வேன் சீகாழி தெற்கி லேதான்
நாகரிகங்க ளுள்ள நற்றவ குலமு தித்து நாயகியு வாழ்வா ளாகும்
நல்லதோர் நாயகனும் நன்னிய மதலைகளுண்டாய்.

27. இவன் ஏக குடும்பமாக இருந்து வாழ்வான். மற்ற விவரங்களை இரண்டாவது பாகத்திற் சொல்லுகின்றேன். ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். சீகாழி க்ஷேத்திரத்திற்குத் தெற்குத் திக்கில் நாகரிகமான ஒரு நல்ல தவஞ் செய்த குலத்திற் பிறந்து இவள் வாழ்வாள். இவளுக்கு நல்ல புருஷனும் குழந்தைகளும் உண்டாகி ;

28. வரன்மனம் போலே வாழ்வாள் வனிதையும் வாழுந் நாளில்
வரும்பெரி யோர்கட் கன்ன மீந்து வினையில் லாளாகி
மரலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டு
அருகர்தங் குலமு தித்தாள் அம்பிகை யாளே கேளாய்,

28. இவள் தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தபடி இருந்து வாழ்கின்ற காலத்தில் இவளிடம் வருகின்ற பெரியோர்களுக்குச் சாப்பாடு போட்டு யாதொரு பாவமும் இல்லாதவளாகி இறந்து எம பட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஜைனர்களின் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றுள். பார்வதியம்மையே ! கேட்பீராக.

29. வந்தவன்பின் ஜன்மமத்தை வரைகிறேந் துவரை பக்கல்
இந்ததோர் குலமு தித்து இடருகள் இல்லா வாழ்வாள்
தந்தையின் பூர்வஞ் சொல்வேன் தண்டகா வனத்தி லேதான்
இந்ததோர் குலமு தித்து யாவர்க்கும் நல்லோ ளும் ;

29. ஜாதகரின் தாயாருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் துவாரகாபுரிக்கு அருகிலுள்ள ஓர் ஊரில் இந்தச் சமணர் குலத்திலேயே பிறந்து கஷ்டங்கள் இல்லாமல் வாழ்வாள். இனி மேல் ஜாதகரின் தகப்பனுருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் தண்டகாவனத்தில் இந்தச் சமணருடைய குலத்திற் பிறந்து எல்லோருக்கும் நல்லவராகியும் ;

30. தேவதா பத்தி கொண்டு சென்றனன் காலன் பக்கல்
பூவினில் பிறந்தோ னுலே பூமியில் வரையப் பட்டு
மேவினு னிக்குலத்தில் விளைபுல மதிக முண்டாய்த்
தாவிய பேரைக் காத்துத் தகமையாய் வாழ்வா னுமே.

30. தெய்வங்களின்மேல் பக்தியும் அன்பும் உடையவராகி இறந்து எமனிடத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்தப் பூமியில் இந்த ஜைன குலத்திலேயே பிறந்தார். பயிரிடும் பூமிகள் அதிக முடையவராகி இவர் தன்னை வந்து அணுகியவர்களைக் காப்பாற்றிப் பெருமையுடன் வாழ்பவராவார்.

31. இருபது ஒன்ப தாண்டில் ஆவணி மாதந் தன்னில்
உறைகுவான் மறலியின் பக்கல் உரைக்கிறேம் பின்ஜன்மத்தைப்
பெருங்காசி யருகில் தெற்கில் பிறப்பனே பிரம சேயாய்க்
குறுமுனி சொல்லும் போது கோதையுங் கேட்க லுற்றுள்.

31. ஜாதகருக்கு இருபத்தொன்பதாவது வயதில் * ஆவணி மாதத்தில் இவருடைய தகப்பனுர் இறந்து எமனிடத்திற்குப் போய்ச் சேருவார். இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் பெருமை வாய்ந்த காசி க்ஷேத்திரத்திற்குச் சமீபத்திலும் தெற்கிலும் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறப்பார் என்று குறுகிய முனிவராகிய அகஸ்தியர் சொல்லும்போது பார்வதியம்மையார் கேட்கின்றுர்.

குறிப்பு.—பிதுர் மரணவிஷயம்:—ஜாதகருக்கு வயது ( ) 28-0-0 முதல் ( ) 29-0-0 முடியும் வரையிலும் சந்திர தசையில் சூரிய புக்தியும் அங்காரக தசையில் ராகு புக்தியும் நடக்கின்றன. ஆனுல் ஆவணி மாதத்தில் அங்காரக தசையில் ராகு புக்தி நடக்கின்றது. பிதுர்லக்கினம்

ஒன்பதா மிடமாகிய மீனம் ஆகும். மீன லக்னத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள். அங்காரகன் ஏழாவது வீடாகிய மாரகஸ்தானத்தில் சனி புதனுடன் கூடி முதலாவது பாவத்தையும் பத்தாவது பாவமாகிய தனுசையும் பார்த்திருக்கின்றார். ஆகையால் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகம், தூய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல், 82-ஆவது நம்பர் ஜாதகம் 24-ஆவது பாடலின் கீழ் கொடுத்துள்ள வியாக்கியானம் ஆகிய இவைகளின் பிரகாரம் அங்காரகன் தன் தசையில் பிதாவுக்கு மாரகம் செய்ய அமைப்புடைவராகின்றார். ராகு சுக்கிரன் வீடும் மாரகஸ்தானமுமாகிய மூன்றாவது வீட்டில் இருப்பதால் ஜாதகசந்திரிகை 12, 23-ஆவது சுலோகங்கள் பிரகாரம் தன் புக்தியில் பிதாவுக்கு மாராகஞ் செய்ய அமைப்புள்ளவராகின்றார்.

32. இந்தோர் ஜன்மந் தன்னில் இவன்சில கொடுமை செய்தான்
கந்தன மிச்சை யுண்டாய்ச் சதியான குணத்தா னுகி
வந்ததால் மறுபிறப்பும் மறை குல முதிப்பா னென்றீர்
அந்ததோர் சேதி சொல்வீர் அவனுமிச் சென்மம் தன்னில்

32' இந்த ஜன்மத்தில் இவர் சில கெட்ட காரியங்களைச் செய்திருக்கின்றார். பணத்தின்மேல் இவர் ஆசையை உடையவராகியும் கெட்ட குணங்களையுடையவராகியும் இருந்தும் மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பார் என்று நீர் சொன்னீரே! அதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, சொல்லுகின்றார். இவன் இந்த ஜென்மத்தில்

33. பலவிதக் குற்றஞ் செய்தும் பகவானின் தொண்டு பூண்டு
அதிதியை ஆதரித்தும் அவனிள மனத்தா னுயுங்
குலவியே வாழ்வ தாலே குறித்தனம் பிரம்ம சேயாய்
மலையிரை மகளே யாங்கள் வரைந்தது தப்பா தாமே.

33. பலவிதமான கெட்டகாரியங்களைச் செய்திருந்தும் கடவுளின் வேலைகளைச் செய்து அவரிடத்தில் அன்பும் பக்தியும் உடையவராகிப் பரதேசிகளை ஆதரித்தும், இளகிய குணமுள்ள மனத்தை யுடையவராகியும் வாழ்ந்ததால் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறப்பார் என்று சொன்னோம். இமயமலைக்கு மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

34. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மீரே மூாண்டில
மேதினில் உள்ளூர் தன்னில் வித்தகன் துணைவி புத்திரி
அதிபற்கு மதனில் வாய்ப்பா ளாகும் அவள்குணம் மாஞ்சி வப்பள்
பாதக மனமில் லாதாள் பரவுப காரி யாவள்.

34. ஜாதகருடைய விவாக காலத்தைச் சொல்லுகின்றோம். இவருக்குப் பதினன்காவது வயதில் பூமியில் உள்ளூரில் இருந்தே இவருடைய சகோதரியின் புத்திரி மனைவியாக வந்து நேரிடுவோளாகும். அவளு

டைய குணத்தைச் சொல்லுகின்றோம். அவள் மாந்துளிரைப் போன்ற ஒரு விதமான சிகப்பு நிறத்தை உடைய தேகத்தை உடையவளாகும். அவள் கெட்ட குணமில்லாதவளாகும். பிறருக்கு உபகாரத்தைச் செய்வாள்.

35. சொல்லது சுகமே யாகுஞ் சுத்தமாஞ் குணத்தா ளாகும்
அல்லல்க ளடையா ளாகும் அவள்சுதர் காணு ளாகும்
நல்லதோர் பராசர் சொல்வார் நவின்றினீர் புத்திர தோஷம்
அல்லலைச் சொல்லு மென்ன அந்தினி லரவந் தங்க;

35. ஜாதகருடைய மனைவியின் வார்த்தைகள் இனிமையாகவிருக்கும், இவள் பரிசுத்தமான நல்ல குணங்களை உடையவளாவாள். கஷ்டங்களை அனுபவிக்கமாட்டாள். இவளுக்குப் பிள்ளைகள் கிடையா. இதன்மேல் பராசர முனிவர் கேட்கின்றார். இவருக்குப் புத்திரதோஷத்தைச் சொன்னீர். அதற்கு உண்டான கெடுதியைச் சொல்லுவீரென்று கேட்க, பதில் சொல்லுகின்றார். ஐந்தாவது பாவத்தில் பாம்பின் வாலாகிய கேது இருப்பதாலும்;

36. நீலனும் ஐந்தைப் பார்க்க நியமித்தோ மந்தச் சங்கை
சாலவே முன்னூழ்த் தோஷந் தங்கிற்றுச் சுதர்தோ ஷங்கள்
பாலன்செய் வினைக ளென்ன விளம்புவீர் முனியே நீர்தாம்
பாலனும் முன்ஜன் மத்தில் பெண்ணை யினுத்த ரத்தில்;

36. நீலன் என்ற சனி ஐந்தைப் பார்ப்பதாலும் இவ்விதமான விஷயத்தைச் சொன்னோம். ஜாதகருடைய முன் ஜன்மத்திய பாவத்தினாலும் தோஷத்தினாலும் புத்திர தோஷங்கள் நேர்ந்தன. ஜாதகர் செய்த பாவங்கள் என்ன? அவைகளின் விவரத்தை, முனிவரே! நீரே சொல்லுவீராக. ஜாதகர் தன்னுடைய முன் பிறப்பில் பெண்ணை நதிக்கு வடக்கில்;

37. அருணைக்குத் தென்பா லாக அணுகினன் சமவூர் தன்னில்
அவனுமே மதலை யுண்டாய்ச் சிறப்பான குடும்பி யாகிப்
பெருமையாய் வாழுந் நாளில் பேசுவோ மூழி தானும்
பெருந்தலை மணியின் கோவில் அணுகினன் ஓர்நாள் தன்னில்.

37. திருவண்ணாமலை க்ஷேத்திரத்திற்கு தெற்கில் ஒரு சமமான அளவுள்ள நடுத்தரமான ஊரில் பிறந்தார். இவர் மனைவி மக்களையுடையவராகியும் மேன்மையான குடும்பஸ்தராகியும் சிறப்புடன் வாழ்கின்ற காலத்தில் இவருக்கு நேர்ந்த வினையைச் சொல்லுகின்றோம். இவர் ஒரு நாள் தலையில் மாணிக்கத்தையுடைய நாகப் பாம்புள்ள கோவிலுக்குப் போனார்.

38. குடினியினில் நாக மொன்று குலவிற்று மகுடத் தாலே
தடியினு லின்னேன் வாட்டிச் சண்டன்தன் பதிக்குச் செல்லப்
படியினி லந்தத் தோஷம் பரவிற்று இவனுக் கேதான்
விடதோஷ மச்சென் மத்தில் விளங்கிய சுதர்க ளற்று;

38. அந்தக் கோவிலுள்ள ஒரு சர்ப்பம் மோடிராகத்தாலே வெளி வந்தது. இந்த ஜாதகர் அதைத் தடியால் அடித்துக் கொல்ல, அ:.து எமனிடத்திற்குப்போய்ச் சேர்ந்தது. இவ்விதமாக வந்து சம்பவித்த

இந்தப் பாம்பின் தோஷமானது இவரை அணுகிற்று. இந்தப் பாம்பின் தோஷத்தினுலே அந்த ஜென்மத்திலேயே இவருக்குப் பிறந்த பிள்ளைகள் இறந்து ;

39. நேத்திரத் துன்ப மாயும் நேர்ந்தனன் காலன் பக்கல்
சாத்திர விதிபோல் வாழுஞ் சமணர்தங் குலமு தித்தான்
நீத்தோர்கள் சொல்லும் போது நிமலியுங் கேட்க வுற்றுள்
பார்த்திபன் கங்கை சேயாய்ப் பிறந்தன னென்று சொன்னீர்.

39. ஜாதகர் தன்னுடைய கண்களில் ரோக முண்டாகி இறந்து எமனிடத்திற்குப்போய்ச் சேர்ந்தார். சாஸ்திரங்களில் சொல்லிய முறைகள் போல வாழ்கின்ற சமணர் குலத்தில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார். இவ்விதமாக உலகப்பற்றை விட்டுவிட்ட முனிவர்கள் சொல்லும்போது பார்வதி யம்மையார் கேட்க வாரம்பித்தார். இவர் வேளாளர் குலத்திற் பிறந்தார் என்று சொன்னீரே.

40. பரிசுத்தக் கடவுள் வமிசம் பிறந்தகா ரணங் களென்ன
அறிவிப்பீர் முனியே நீர்தாம் அவனுமுன் ஜன்மந் தன்னில்
அருணையில் மடங்கள் செய்து மன்னங்கள் அதிதிக் கீந்தும்
நெறியுடன் கடவுள் பக்தி நேர்ந்ததால் வந்தா னென்றேம்

40. இவ்விதமாகவிருந்தும் இவர் இந்த ஜன்மத்தில் பரிசுத்தராயிருந்து கடவுளைத் தொழுகின்ற வமிசமாகிய சமணருடைய குலத்திற் பிறந்தற்குக் காரணங்கள் என்ன என்பதை முனிவரே ! நீரே சொல்லுவீராக. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் மடங்களை உண்டுபண்ணியும், பரதேசிகளுக்குச் சாப்பாடுபோட்டும், நியமங்களுடன் இருந்து கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உள்ளவராய் இருந்ததாலும் இவ்விதமாகச் சமணர் குலத்தில் பிறந்தார் என்று சொல்லுகின்றோம்.

41. மாரியா மம்மன் கோயில் வளர்நாகங் கொன்ற தோஷம்
கூறுவோ மிச்சென் மத்தில் குழவிகள் தோஷ மெய்துந்
தீரவே சாந்தி ஒன்று செப்புவோம் கேளுந் தாயே
பாரினில் தாமிரத்தால் பணிசெய்து கடவு ளர்க்கு ;

41. ஜாதகர் மாரியம்மன் கோயிலிலுள்ள ஒரு நல்லப் பாம்பைக் கொன்ற தோஷத்தினுல் இந்த ஜன்மத்தில் குழந்தைகளுக்குத் தோஷம் நேரிடும். இந்தத் தோஷம் நிவிர்த்தியாவதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுகின்றேம். எங்கள் தாயாராகிய பார்வதி யம்மையே ! கேட்பீராக. பூமியில் தாமிரத்தில் பாம்பு போன்ற அணியைச் செய்து கடவுளுக்கு ;

42. அணிந்துமுக் குடையுஞ் செய்ய அணுகிய தோஷம் நீங்கிப்
பிணியிலா வமிசம் பேசும் ஆண்ஒன்றே தீர்க்க மெய்துங்
கன்னியர் இரண்டு மாகுங் கழறுவோ முப்பா ஆறில்
துணிவான சாடி[1] மாதஞ் சேய்தசை[2] மதி[3] புத்தி ;

[1] கும்பம். [2] அங்காரகன். [3] சந்திரன்.

42. போட்டு, சந்திர வட்டம் அல்லது மூன்று குடைகளாகிய முத்துக்குடை, பொற்குடை, மணிக்குடை ஆகிய இவைகளையும் செய்துவைக்க சம்பவித்த தோஷம் விலகிவிடும். குற்றமில்லாமல் வமிசம் விளங்குவதற்காக ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகின்றேம். ஜாதகருக்கு முப்பத்தாருவது வயதில் மாசி மாதத்தில் † அங்காரக தசையில் சந்திர புக்தியில் ;

* குறிப்பு.—தாயார் மரண விஷயம்:—ஜாதகருக்கு வயது முப்பத்தைந்து முடிந்து முப்பத்தாருவது வயது நடக்கும்போது மாசிமாதம் முடியும் வரையிலும் வயது ௵ 35, மாதம் ஐந்திற்குள்ளாகவே ஆகிறது. அங்கார தசையில் சந்திர புக்தி வயது ௵ 35–5–0 வரையிலுந்தான் இருக்கிறது. பாட்டில் அங்கார தசையில் சந்திர புக்தியில் மாதுர் மரணம் என்று சொல்லி இருக்கின்றது. ஒரு வருஷத்திற்கு $5\frac{1}{4}$ நாள் விதம் 35 வருஷத்திற்குக் கூட்டிச் சாவன வருஷப் பிரகாரம கணக்கிடுவோ மாஞல் அங்காரக தசை சென்று போய் இராகு தசை வந்துவிடுகிறது. ஆகையால் இந்தப் பாடலினுல் சாவன வருஷத்தை இந்த நாடியில் உபயோகப்படுத்தி யிருக்கவில்லை என்பதும் சௌரமான வருஷத்தையே தசாபுக்தி கணக்குகளில் உபயோகப்படுத்தி இருக்கிறது என்பதும் தெரியவருகிறது. மேலும் மாதுரு லக்கினம் துலாம் பராசரஹோரை ஜாதகசந்திரிகை ஆகிய இவைகளில் துலா லக்கினத்திற்கு குருவும் சூரியனும், பராசரஹோரையின் சில பதிப்பில் அங்காரகனும் மாரகாதிபதி என்றும் சொல்லி இருக்கின்றது. அங்காரகன் மாரகனுகவரும் விஷயமாக 82-ஆவது நம்பர் ஜாதகம் 24-ஆவது பாடலின் கீழ் கொடுத்துள்ள வியாக்கியானத்தையும் பார்க்கவும். அங்காரகன் மாரக ஸ்தானங்களாகிய 2–7-க்குடையவராய்ப் பண்ணிரண்டாவது மாரக ஸ்தானத்தில் இருப்பதால் மாரகாதிபதியாகின்ருர். சந்திரன் ஏழாவது மாரக ஸ்தானத்திலிருந்து கொண்டு லக்கின அஷ்டமாதிபதியாகிய சுக்கிரனையும் பார்க்கின்ருர். ஆகையால் சந்திரன் தனதுபுக்தியில் மாதாவை மாரகஞ் செய்ய அமைப்புள்ளவராகின்ருர்.

43. அன்னையுங் கண்ட மெய்தும் அறுபது நாலா மாண்டில்
மன்னிய தனசு மாதம் வளர்பிறை ஏகா தசி
இன்னவ னுடலம் வாடும் இனிவருஞ் ஜன்மங்கள் சொல்வேன்
முன்குலந் துவாரை தன்னில் உதிப்பனு மென்று சொல்வோம்.

43. ஜாதகருடைய தாயாருக்கு மரணம் நேரிடும். ஜாதகர் தனக்கு அறுபத்து நான்காவது வயதில் மார்கழி மாதத்தில் † வளர் பிறையில் ஏகாதசி திதியில் இறந்து இவருடைய தேகம் மறைந்துவிடும். இவரது பின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். துவாரகாபுரியில் முதல் குலமாகிய பிராமணர் குலத்தில் ஜாதகர் பிறப்பார் என்று சொல்லுகிறோம்.

† குறிப்பு.—ஜாதகர் மரண விஷயம்:—ஜாதகருக்கு வயது ௵ 63–0–0 முதல் ௵ 64–0–0 முடியும் வரையிலும் தனுர்மாதம் என்ற மார்கழி மாதத்திலும் குரு தசையில் சுக்கிரபுக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப்

பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் புதன் சுக்கிரன் சனி இவர்கள் மாரகாதிபதிகளாக ஆகின்றார்கள். குரு ஆறுக் குடையவராகி மாரகாதிபதியாகிய சனியினுடைய வீட்டில் எட்டாவது மாரக ஸ்தானத்தில் இருப்பதால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் குரு ஜாதகருக்கு மாரகஞ் செய்யும் அமைப்புடையவராகின்றார். சுக்கிரன் ஏற்கனவேமாரகாதிபதி என்று இங்குச் சொல்லி இருக்கின்றோம். சுக்கிரன் மாரக ஸ்தானமாகிய பதினொன்றிற் குடையவராகி லக்கினாதிபதியாகிய சந்திரனைப் பார்த்திருக்கின்றார். ஆகையால் இவருக்குத் தன் புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கின்றது. குமாரசாமியம் பிரகாரங்கூட ஆறுக்குடையவர் மாரகர்.

44. பொதுயோகம் பூமி விருத்தி பொருளது கொடுக்கல் வாங்கல்
நதிபல தீர்த்தந் தோய்வன் நாட்டினில் கீர்த்தி யேற்பன்
ததிநெய்பால் விருத்தி யுள்ளான் சத்தான வேலை யுள்ளான்
பதிபணி யாவும் பதினெண் ணாயிரம் பொன் என்றோம்.

44. ஜாதகருடைய பொதுவான யோகத்தைச் சொல்லுகின்றோம். இவருக்கு நிலங்கள் விருத்தியடையும். இவர் பணத்தைக் கொடுப்பார், மறுபடியும் வாங்கிக்கொள்ளுவார், அஃதாவது பணலேவாதேவி உடையவர். அநேக நதிகளில் ஸ்நானஞ் செய்வார். பூமியில் புகழையும் பெருமையையும் அடைவார். தயிர் நெய் பால் இவைகளின் விருத்தியையுடையவராவார். வலிவான பலன் தரக்கூடிய வேலையை உடையவர். நிலம், வீடு, ஆடை, ஆபரணங்கள் இவைகள் எல்லாம் மொத்தம் பதினெட்டாயிரம் பெறக்கூடிய சொத்தை உடையவராவார் என்று சொல்லுகிறோம்.

45. புறந்திடு காலந் தன்னில் புகர்தசை யீரா றுண்டுஞ்
சிறந்திடு திங்க ளைந்துஞ் செப்புவோம் பலனை யாங்கள்
வருந்துணை பின்னால் விருத்தி மங்கைமுன் சுபங்க ளெய்தும்
உரைத்திட்டோம் யோகந் தானும் உயர்பூமி சேரு மென்றோம்.

45. ஜாதகர் பிறக்கின்ற காலத்தில் சுக்கிரமகா தசையில் பன்னிரண்டு வருஷமும் ஐந்து மாதங்களும் இருப்பு ஆகும். இந்தக் காலத்திய பலாபலன்களை நாங்கள் சொல்லுகின்றோம். இவருக்குப் பின்னால் சகோதரர்கள் பிறந்து விருத்தியடைவார்கள். மூத்த சகோதரிகளுக்கு விவாகம் நடக்கும் நல்ல யோகமான பலன்கள் நடக்கும் என்று சொல்லுகின்றோம். மேன்மையான சிறந்த நிலங்களும் வந்துசேரும் என்று சொல்லுகின்றோம்.

46. தந்தைக்கு சிலவே ரோகஞ் சார்ந்துபின் நிவிர்த்தி யாகுந்
தந்தைக்குக் கீர்த்தி யெய்துஞ் சண்டாள னொருவ னாலே
நிந்தையு மிகவு முண்டு நிருபரால் தண்டம் நேரும்
எந்தக் காலத்தி லேதா னிவ்வினை நடக்குஞ் சொல்வீர்.

46. ஜாதகருடைய தகப்பனருக்குச் சில நோய்கள் உண்டாகிப் பிறகு அவைகள் நிவிர்த்தியாகும். தகப்பனருக்குப் புகழும் பெருமையும் உண்டாகும். ஒரு கெட்டவனாலே அதிகப் பழியும் அபவாதமும் ஏற்படும். அரசர்களால் நஷ்டமும் அபராதமும் நேரிடும் என்று சொல்ல, இவ்விதம் எந்தக் காலத்தில் கெடுதிகள் உண்டாகும் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்டார்.

47. பத்தாண்டில் புதன் புசிப்பில் பகையுண்டு ராசர் மூலம்
குத்தமாந் தனமுஞ் சேதங் குமரன்தன் உடனே பந்து
சுத்தத்தார்க் கவ்வா றுரும் நேர்ந்துபின் ஜயமே யாகும்
வெத்திசெய் போகர் வர்க்கம் வித்தினால் நிவிர்த்தி யென்றோம்.

47. ஜாதகருக்குப் பத்தாவது வயதில் புதனுடைய புக்தியில் அரசர் மூலமாக விரோதங்கள் ஏற்படும். குற்றங்கள் ஏற்பட்டுப் பணமும் செலவாகும். ஜாதகருடைய பந்துக்களுக்கும் இவ்விதமாகவே நேரிடும். அதன் பிறகு ஜயமுண்டாகும். வெற்றியை உண்டாக்குகின்ற போகர் என்ற வெள்ளையர் மூலமாய், தனத்தினால் இது நிவிர்த்தியாகும் என்று சொல்லுகின்றோம்.

48. இதுமறை யோரால் நீங்கும் மங்களம் பின்னே யுண்டாம்
பதியது வேறு செய்வன் பந்துவில் சுபமு மெய்தும்
அதிகமாம் பலன்கள் யாவும் அறைகிறோம் விவரம் ரண்டில்
நதிசடை யணிந்தோன் தேவி நங்கையே மேலுங் கேளே.

48. இந்தக் கெடுதி பிராமணர்களால் நிவிர்த்தியாகும். சுபங்களும் பின்னால் நடக்கும். வேறு வீட்டையுங் கட்டுவார். பந்துக்களில் சுபகாரியங்களும் நடக்கும், இன்னம் அதிகமாக நடக்கக்கூடிய பலன்கள் எல்லாவற்றையும் விவரமாக இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம். கங்கை நதியை ஜடையில் தரித்துக் கொண்டிருக்கின்றவராகிய சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! இன்னும் சொல்லுகிறோம். இனிமேல் கேட்பீராக.

ஜாதகம் 104

1. சந்திரன் சீய[1] மாகச் சனிகன்னி கேது கோலாம்[2]
புந்தி[3]பான் [4] புகருஞ்[5] சாடி [6] பூமகன் [7] பொன்னேன் [8] ராகு
வந்திடம் மேட மாக வண்டியுஞ் [9] ஜனனம் புக்க
இந்தவாறு கோளும் நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

	குரு அங்கார கன் ராகு		
சூரியன் புதன் சுக்கிரன்	இராசி சக்கரம்		லக்கனம்
			சந்திரன்
		கேது	சனி

மகம் 2–ஆம் பாதம் : கேது தசை ஷூ 4-11-0

1. சந்திரன் சிம்மத்திலும், சனி கன்னியிலும், கேது துலாத்திலும், புதனும் சூரியனும் சுக்கிரனும் கும்பத்திலும், அங்காரகன் குரு ராகு மேஷத்திலும், ஜன்மலக்கினம் கடகமாகவும் இருந்து இவ்விதமாகக் கிரகங்கள் அமைந்திருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர்.

குறிப்பு.—இந்தராசிக் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும்:—மேஷத்தில் குருவும், ரிஷபத்தில் சந்திரனும், மிதுனத்தில் புதனும் ராகுவும், கடகத்தில் சனியும், துலாத்தில் அங்காரகனும் சுக்கிரனும், தனுசில் கேதுவும், மீனத்தில் சூரியனும் ஆகும். சனி வக்கிரகதியில் இருக்கின்ருர்.

2. பார்வதி கேட்கும் போது பராசரும் புகலு கின்ருர்
சீர்புகழ் ஆண்பால் ஜன்மஞ் ஜனித்தயில் வடதென் வீதி
கூறுவோங் கீழ்ப்பால் வாடை குடகினில் மாயோன் தங்குந்
திரமாய் அருகர் வாயு தென்திசை காளி வாசம்.

2. பார்வதியம்மையார் கேட்கும் போது பராசர முனிவர் சொல்லுகின்ருர். செல்வமும் புகழும் உள்ள ஆண் குழந்தை ஜனனமாகும். ஜாதகர் பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் கீழண்டை வாடையில் இருக்கும் என்று

[1] சிம்மம். [2] துலாம். [3] புதன்.
[4] சூரியன். [5] சுக்கிரன். [6] கும்பம்.
[7] அங்காரகன். [8] குரு. [9] கடகம்.

சொல்லுகின்ருேம். மேற்குத் திக்கில் மாவிஷ்ணுவின் கோயில் இருக்கும். வலிவான சமணருடைய கோயில் வடமேற்குத் திக்கிலும், காளியம்மன் கோயில் தெற்குத்திக்கிலும் இருக்கும்.

3. இத்தகை மாடி சூழ்ந்த இலகிய சிற்றூர் தன்னில்
வித்தக னருகர் வர்க்க மேவுவா னிந்தப் பாலன்
பெற்றதாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகஞ்
சுத்தமாய் முன்பின் ஜன்மஞ் செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. இப்படிப்பட்ட அடையாளங்களுள்ளதும் மெத்தை வீடுகளை அதிகமாயுடையதுமான ஒரு சிறிய கிராமத்தில் ஜாதகர் சமணருடைய குலத்தில் பிறப்பார். இவரைப் பெற்றெடுத்தத் தாயார் தகப்பனர் இவர்களுடைய யோகத்தையும் மனைவி மக்கள் இவர்களுடைய யோகத்தையும், முன் ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளையும் பரிசுத்தமாக இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிருேம்.

4. தந்தையுந் துணையாண் காணுன் சத்திமார் நான்கு என்ருேம்
அந்தவர் ஒருத்தி தானும் அணுகுவா னில்லம் தன்னில்
வந்தவள் குணத்தைச் சொல்வேன் மாநிறஞ் சுகமாய் வார்த்தை
தன்வரன் வடபா லாகுஞ் சம்பத்தா மில்லம் வாழ்வள்.

4. ஜாதகருடைய தகப்பனருக்கு ஆண் சகோதரர் கிடையாது. இவருக்குச் சகோதரிகள் நான்குபேர் என்று சொல்லுகின்ருேம். இவர்களில் ஒரு சகோதரி வீட்டிற்குத் திரும்பி வந்து விடுவாள். இவளுடைய குணதிசங்களைச் சொல்லுகிறேன். இவள் மாநிறமான தேகத்தை உடையவள். இனிமையாக வார்த்தைகளைச் சொல்லுவாள். இவளுக்குப் புருஷன் வடக்குத் திக்கிலிருந்து வருவான். இவள் தன்னுடைய வீட்டிலேயே சம்பத்துடன் இருந்து வாழ்வாள்.

5. மத்தியில் விதவை யாகி வரனில்லம் விட்டு நீங்கிப்
பெற்றதா யில்லம் வாழ்வள் புத்திரர் காணு ளாகுஞ்
சத்திக்குச் சுதர்கள் தோஷந் தாயில்லஞ் சேரும்சேதி
குத்தத்தைச் சொல்லு மென்னக் கோதையும் பூர்வம் தன்னில்

5. ஜாதகரின் தகப்பனருடைய சகோதரி மத்திய வயதில் விதவையாகித் தன்னுடைய புருஷனுடைய வீட்டை விட்டுப் பிரிந்து தன்னைப் பெற்றெடுத்தத் தாயாருடைய வீட்டிற்குப் போய் அவ்விடத்தில் வாழ்வாள் இவளுக்குப் குழந்தைகள் கிடையா. இவளுக்குப் புத்திரதோஷம் உண்டாகுதல் இவள் தாயாருடைய வீட்டிற்குப் போய்ச் சேர்தல் ஆகிய இந்தத் தோஷங்கள் உண்டாகுவதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, சொல்லுகின்ருர். இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில்,

6. வினையதை அதிகம் செய்தாள் விளம்புவீர் சங்கை தன்னைச்
சினமிலாப் பட்சி தன்னில் ஜனித்தனள் கங்கை சேயாய்
அணையவே வரனு முண்டாய் அவனியோர் மதிக்க வாழ்ந்து
பிணையதைப் புகலக் கேண்மோ பெம்மானின் உற்சவத்தில் ;

6. அதிகமான பாவங்களைச் செய்திருக்கின்றாள் என்று பதில் சொல்லவே அந்தப் பாவங்களைச் சொல்லுவீர் என்று கேட்டார். இவள் பட்சிஸ்தலமாகிய திருக்கழுக் குன்றத்தில் வேளார் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள். இவள் புருஷனை அடைந்து பூமியில் உள்ளவர்கள் இவளை மதிக்கும் படியான அந்தஸ்திலிருந்து வாழ்ந்து வருகிற காலத்தில் இவளுக்கு வந்து நேர்ந்த பாவத்தைச் சொல்லுகிறேன். கேட்பீராக. சிவபெருமானுடைய உற்சவகாலத்தில் ;

7. வரனுடன் சென்று யின்னேள் மஹாதேவ ரடிபணிந்து
விரைவினில் கடைவீ திக்கு மேவியே சிவப்பு சீப்பு
உரைமஞ்சள் வாங்கிக் கொண்டு உத்தமி மான்போல் சென்றுள்
பொருளது யீயாளாகிப் பின்வணி கனுமே பார்த்து ;

7. தகப்பனுருடைய சகோதரியானவள் தன்னுடைய புருஷனுடன் போய்ப் பெரிய கடவுளாகிய சிவபெருமானைத் தொழுது தரிசித்து வணங்கிப் பிறகு சீக்கிரத்தில் கடைத் தெருவிற்குப் போய்ச் சிவப்பு நிறமுள்ள குங்குமம், சீப்பு, உரைக்கின்ற மஞ்சள் ஆகிய இவைகளை வாங்கிக் கொண்டு அவைகளின் கிரயத்தைக் கொடுக்காமல் மானைப் போலச் சீக்கிரத்தில் மறைந்து போய்விட்டாள். பிறகு வியாபாரியும் இவளைத் தேடிப் பார்த்து

8. மங்கையைக் காணுகி வரைகிறன் சாபந் தானுங்
குங்கும மஞ்சள் சீப்புக் கோதையும் வாங்கிக் கொண்டு
தங்கமு மீயாச் சென்றுள் சிவப்பு களாகா முன்னம்
பங்கமாய் வரனு மாண்டு பாலர்க ளில்லா தாகி

8. இவள் காணமற்போனதால் சாபத்தைக் கொடுக்கின்றார். குங்குமம், மஞ்சள், சீப்பு இவைகளை இந்த ஸ்திரீ வாங்கிக் கொண்டு பணத்தைக் கொடுக்காமல் மறைந்து போய்விட்டாள். சிவப்பு வஸ்துவாகிய குங்குமம் செலவாவதற்கு முன்னமே இந்த ஸ்திரீக்கு பங்கம் உண்டாகும்படியாக இவளுடைய புருஷன் இறந்தும் இவளுக்குக் குழந்தைகள் இல்லாமலும் ;

9. மறுஜன்மம் மங்கை தோன்றி மணமாகி வரனு மாண்டு
சிறையாகித் தாயில் லத்தில் சேருவா யென்று சொல்லித்
தெருதூளைத் தூற்றிச் சென்றார் சேர்ந்தது அந்தத் தோஷம்
குறைவுண்டாய் அந்த ஆண்டில் கொழுநனு மரண மாகி ;

9. மறுபிறப்பில் இவள் பெண்ணகப் பிறந்து விவாகத்தை அடைந்து இவளுடைய புருஷன் இறந்து சிறையில் இருப்பதைப் போல இவள் தன்னுடைய தாயாருடைய வீட்டிற்குப் போய்ச் சேரக் கடவது என்று சொல்லி அந்த வியாபாரி தெருவிலுள்ள மண்ணை வாரி எடுத்துத் தூற்றி விட்டுப் போய் விட்டார். அந்தத் தோஷமானது இவளை வந்து அடைந்தது. முன் ஜன்மத்தில் அதே வருஷத்தில் கெடுதிகள் சம்பவித்துப் புருஷனும் இறந்து ;

10. சிறையாகச் சிலநாள் சென்று தேவியும் மாண"மாகிப்
பிரமனல் வரையப் பட்டுப் பிறந்தன ளிந்த மாது
அரிவைக்கு வணிபன் சாபம் அணுகிற்று இச்சென் மத்தில்
குறையாக மத்தி யில்தான் கொழுநனு மரண மாகி ;

10. சிறிதுகாலம் சிறையிலிருப்பது போல விருந்து இவள் இறந்து பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து இவள் பிறந்திருக்கின்றாள். இவளுக்கு இந்த ஜன்மத்தில் அந்த வியாபாரியினுடைய சாபம் வந்து அடைந்தது. இவளுக்கு பங்கமாக மத்திய வயதில் புருஷனும் இறந்து;

11. சஞ்சல மனத்தா ளாகித் தாயில்லம் வாழ்வா ளாகும்
வஞ்சிபின் ஜன்மஞ் சொல்வேன் மலைநாட்டில் பெரும டத்தில்
தஞ்சமாய் இக்குலத்தில் சாறுவா ளென்று சொல்வோம்
கொஞ்சியே யிருபதாண்டில் குலவுவாள் காலந் நாடு.

11. இவள்துக்கத்தை அடைந்த மனத்தைஉடையவளாகித் தன்னுடைய தாயார் வீட்டில் வசிப்பவளாவாள். இவளுடைய பின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மலை தேசத்தில் பெருமடத்தில் இந்த ஜென்மத்திற் பிறந்த குலத்திலேயே பிறப்பாள் என்று சொல்லுகின்றோம். இவள் ஜாதகருக்கு இருபதாவது வயதில் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவாள்.

12. பின்பாகம் மற்றோர் சேதி பேசுவோந் தாயே யாங்கள்
தந்தையின் குணத்தைச் சொல்வேன் சாந்தவா னுகசாலி
முந்தின கல்வி கற்பன் மால்நிறம் தேவ பத்தி
சந்ததம் வறுமை காணுன் ஜனஉப காரி யாமே.

12. தகப்பனுருடைய சகோதரர்களில் மற்றவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின் பாகத்தில் நாங்கள் சொல்லுகின்றோம். எங்களுடைய தயாராகிய பார்வதியம்மையே! ஜாதகரின் தகப்பனுருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவர் சாந்த குணமுடையவர். நுட்பமான அறிவும் புத்தியும் உடையவர். மேன்மையான முதல் தரமான வித்தையை உடையவர். மகா விஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒரு விதமான நிறமுள்ள தேகத்தை உடையவர். தெய்வ பக்தியும் அன்பும் உடையவர். ஒருபோதும் கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அனுபவிக்கமாட்டார், ஜனங்களுக்கு உபகாரஞ் செய்பவராவார்

13. பாக்கிய முடையா னுக்குப் பாரினில் சல்லிய முள்ளான்
யோக்கிய ளுகி வாழ்வான் உண்மையா மனத்தா னுகும்
வாக்கது சுத்த முள்ளான் மாநில மதிகஞ் சேர்ப்பன்
நீக்குவான் அற்பர் தம்மை நேமியோர் மெச்ச வாழ்வன்.

13. ஜாதகருடைய தகப்பனுர் செல்வத்தை உடையவரிடத்தில் கடன் பட்டிருப்பார். நல்லகுணங்களை உடையவராகவிருந்து வாழ்வார். உண்மையான மனத்தை உடையவராவார். சுத்தமான நல்ல வார்த்தைகளை உப

யோகப்படுத்துவார். பெரிய நிலங்களை அதிகமாகச் சேகரிப்பார். தாழ்ந்த வர்களையும் அற்பமான குணமுடையவர்களையும் விலக்கிவிடுவார். பூமி யிலுள்ளவர்கள் இவரை மெச்சும்படியான அந்தஸ்திலிருந்து வாழ் வார்.

14. உரோமங்கள் நீட்சி யுள்ளான் நுவலுப தேசங் கொள்வன்
சேமமாங் குடும்பி யாவன் ஜன சகாயங்கள் செய்வன்
காமனை விருப்பங் கொள்வன் கரமதில் சங்கு சக்கரம்
தீமையை யொருவர்க் கெண்ணன் சொல்லுமுன் கோபி யாவன்.

14. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய தேகத்தில் நீண்ட மயிரை உடையவர். குருவினிடத்தில் உபதேசத்தை அடைவார். சௌக்கியமான நல்ல குடும்பஸ்தராவார். ஜனங்களுக்கு உபகாரங்களைச் செய்வார். அதிகமான காம ஆசையை உடையவர், இவருடைய உள் ளங் கையில் சங்கு சக்கர ரேகை என்ற ஒரு விதமான ரேகை இருக்கும். எவருக்குங் கெடுதியை நினைக்கமாட்டார். பேசுவதற்கு முன்னே கோபத்தை அடைபவராவார்.

15. இந்நெறி யுடையானுக்கு யிருதார மிளையா ளுக்கு
அன்னவ னுதிப்பா னுகும் அவன்துணை ஆண்பால் காணன்
கன்னிமார் மூவர் தீர்க்கங் கழறினீர் மூன்தா யொன்று
அன்னவள் தீர்க்கமோசொல் அழியுமோ விவரஞ் சொல்வாய்.

15. இவ்விதமான குணாதிசயங்களை உடையதகப்பனருக்கு இரண்டு மனைவி களில் இளைய மனைவியிடம் இந்த ஜாதகர் பிறப்பார். இவருக்கு ஆண் சகோ தரர் கிடையாது †. மூன்று சகோதரிகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவருக்கு ஒரு பெரிய தாயார் உண்டு என்று சொன்னீர். இந்தப் பெரிய தாயார் நீண்ட ஆயுளை உடையவளோ ? அல்லது இறந்து விடுவாளோ? என்பதை விவரமாகச் சொல்லுவீர்.

† குறிப்பு.—ஆண் சகோதர விஷயம் :—சகோதர ஸ்தானங்கள் மூன் றும் பதினொன்றும் ஆகும். மூன்றாவது பாவத்தில் சனி இருப்பதால் சம்பு ஹோராபிரகாசா சகோதரபாவம் 58-ஆவது சுலோகப் பிரகாரம் முன்பின் சகோதரர்களுக்குத் தோஷமுண்டு. மூன்றிற்குடையவரான புதனுடன் சூரியன் கூடி எட்டில் இருப்பதால் மணிகண்டகோளம் சகோதரகாண்டம் ஆறுவது பாடல் பிரகாரம் பின் சகோதரனுக்குத் தோஷம் இருக்கின்றது. பதினோராம் வீட்டிற்குடையவராகிய சுக்கிரன் எட்டில் மறைந்து சூரியனுடன் கூடி திருதீய விரயாதிபதியாகிய புதனுடன் கூடி இருப்பது மூத்த சகோதரதோஷமாகும். மூத்த ஆண் சகோதரகாரகனுகிய குரு பதினொன் றிற்குப் பன்னிரண்டில் ராகுவுடனும் அங்காரகனுடனும் கூடி மறைந்திருப் பது மூத்த ஆண் சகோதரதோஷம் ஆகும்.

16. முன்மாதா தீர்க்கமெய்தும் உதித்தயில் அயலூர் தெற்குத்
தன்துணை ஆண்பால் மூன்று சத்தியும் ஒன்றே யாகும்
அன்னவன் சுதர்கள் நான்கு அனுகிடுஞ் சிலவே சேதம்
கன்னிகை ஒன்று தீர்க்கங் கடைமாதாய்ப் புகல லாமே.

16. ஜாதகருடைய பெரிய தாயார் நீண்ட ஆயுளை உடையவளாவாள். இவள் பிறந்த வீடு அடுத்த ஊரில் தெற்குத்திக்கில் இருக்கும். இவளுடன் கூடப் பிறந்தவர்களில் ஆண் சகோதரங்கள் மூன்று பேரும், ஒரு பெண் சகோதரமும் உண்டு. இவளுக்கு நான்கு குழந்தைகள் பிறக்கும். இந்தக் குழந்தைகளில் சில குழந்தைகள் இறந்து விடுவார்கள். ஒரு பெண் குழந்தை நீண்ட ஆயுளை உடையதாக விருக்கும். இந்தப் பெண் குழந்தையும் கடைசி யில் பிறந்த குழந்தை என்று சொல்லலாம்.

17. அது நிற்க இவன்தாய் சேர்ந்த ஆச்சர்யஞ் சொல்லு மென்ன
அதிபதி கேயத் தாலும் மாதுவின் மோகத் தாலுஞ்
சதியாக நேர்ந்த தென்றேஞ் சாற்றுவோம் பின்பால் சேதி
விதியது பூர்வ மென்றேஞ் வித்தகி கேட்டி டாயே.

17. அந்த விஷயம் அவ்விதமாகயிருக்க, ஜாதகருடைய தாயார் வந்து சேர்ந்த ஆச்சரியமான விஷயத்தைச் சொலுவீர் என்று கேட்க, சொல்லு லுகின்றுர். தகப்பனருடைய இசைப்பாட்டாலும் இதை மெச்சின தாயா ருடைய காம ஆசையாலும் இவ்விதமாக, இவர்கள் இருவருக்கும் சினேகம் நேர்ந்தது என்று சொல்லுகின்றேம். இந்த விஷயத்தைப் பற்றிப் பின்னல் சொல்லுகின்றேம். இவ்விதமாக நேர்ந்தது பூர்வ ஜன்மத்திய வினை என்று நாங்கள் சொல்லுகின்றேம். பார்வதியம்மையே! கேட் பீராக.

18. உதித்தவன் துணைமுன் சேதி உரைக்கிறேம் மால்நிறத்தாள்
சதியிலா மனத்தா ளாகும் சாயல் நேத்திரமு மாவள்
கதிதர் விந்தம் பூண்பள் கணவனும் உள்ளூர் தெற்கு
விதியினல் மாமன் தன்னை வித்தகி மாலே பூண்பள்.

18. ஜாதகருடைய மூத்த சகோதரியினுடைய விஷயங்களைச் சொல்லுகின் றேம். இவள் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீல மேகவர்ணம் என்ற ஒருவிதமான நிற முடைய தேகத்தை உடையவளாவள். கெடுதியான மனம் இல்லாதவளாவாள். சாய்ந்த பார்வையை உடைய கண்களை உடையவளா வாள். அதிர்ஷ்டத்தையும் ஐசுவரியத்தையுங் கொடுக்கின்ற மாணிக்கங்கள் அமைந்த ஆபரணங்களை அணிந்துகொள்ளுவாள். இவளுக்குப் புருஷனுக உள்ளூரிலேயே தெற்கிலிருந்து முன்ஜன்மத்தின் பயனுக அம்மான் வந்து நேரிடுவான்.

19. சுதர்களு மிருநான் காகத் தோன்றிடும் ஆண்பால் மூன்று
தோகையு மொன்று என்றேம் பதாகு மற்ற வெல்லாம்
பாவையுஞ் சுகமாய் வாழ்வன் அதிபன்தன் சேதி கேளாய்
மாநிறம் கல்வி மானுந் ததி நெய்பா லிஷ்டம் சகலர்க்கு நல்
[லோனுவன்.

19. ஜாதகருடைய சகோதரர்களில் மூத்தவளுக்கு எட்டுக் குழந்தைகள் உண்டாகும். இவர்களில் மூன்று ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தை யும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லு

னின்றோம். மற்றக் குழந்தைகள் உபயோகமில்லாமல் இறந்துபோய் விடுவார்கள். இந்தச் சகோதரி சௌக்கியத்துடனிருந்து வாழ்வாள். இனிமேல் ஜாதகருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக. இவர் மாநிறமுள்ள தேகத்தை உடையவர். வித்தையை உடையவராவார். தயிர் நெய் பால் இவைகளின்மேல் பிரியம் உள்ளவர். எல்லோருக்கும் நல்லவராக விருப்பார்.

20. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வன் உறைப்பொடு புளிப்பி லிச்சை
கண்டித முடை யாருகுங் காலாள்களுடைய னுகுந்
துண்டமாய் வார்த்தை கூறுன் தொடுத்ததை வெல்வா னுகும்
பண்டுபண் டார முள்ளான் பணியோர்கள் விருத்தி செய்வன்.

20. ஜாதகர் சுகத்தைக் கொடுக்கக்கூடிய நல்ல ஆகாரத்தைச் சாப்பிடுவார். இவருக்குக் காரத்திலும் புளிப்பிலும் ஆசை உண்டு. கண்டிப்பான பேச்சுகளை உடையவராவார். கால்நடை வேலையாட்களை உடையவராவார். அறை குறையான, வார்த்தைகளைத் துடிப்புடன் அவசரப்பட்டுச் சொல்லமாட்டார். தான் செய்ய ஆரம்பித்த காரியங்களைப் பூர்த்தி செய்து ஜயத்தை அடைபவராவார். இவர் பழைமையான பொக்கிஷத்தையும் துரைத் தனத்தையும் உடையவராவர். செய்கால் நிலங்களையும் ஏர்களையும் விருத்தியாக்குவார்.

21. நல்லோர்க்கு நல்லவ னுவன் நயம்படக் கூறு நெஞ்சம்
இல்லையென் றுரைக்க மாட்டான் இடரென்றோர்க் குதவி செய்வன்
சொல்லதைக் காப்பா னுகுந் துரை ராசர் பேட்டி கொள்வன்
மல்லுக்கு முன்செல் லாதான் மாநிலம் விருத்தி செய்வன்.

21. ஜாதகர் நல்லவர்களுக்கு நல்லவராக விருப்பார். இனிமையாகவும் நப்பாகவும் பேசும்படியான மனத்தை உடையவர். யாருக்கும் தன்னிடம் ஒன்றும் இல்லையாது என்று சொல்லமாட்டார். கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அடைந்திருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். தான் சொல்லியவார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார். அரசர்களுடைய தரிசனத்தை அடைவார். சண்டையில் முன்னே போகாதவராவார். பெரிய நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார்.

22. குருவுப தேசங் கொள்வன் குவலய நல்லோ னுவன்
திருமகள் வாச முண்டு தந்தைக்குத் தாழுவு ருதான்
பொய்சொல்லான் மணத்தின் காலம் புகலுவோம் பதினைந் [தாண்டில்
வருமனை வடபால் நேரும் வரைகிறே மவள்கு ணத்தை.

22. ஜாதகர் தன்னுடைய குருவினிடத்தில் உபதேசத்தைப் பெற்றுக் கொள்ளுவார். பூமியில் நல்லவராகவிருப்பார். இவரிடத்தில் லட்சுமி குடி கொண்டிருப்பாள். இவர் தன்னுடைய தகப்பனுருடைய அந்தஸ்திற்குத் தாழ்ந்த அந்தஸ்தில் இருக்கமாட்டார். பொய்யைச் சொல்லமாட்டார்.

இவருடைய விவாகத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பதினைந்தாவது †வயதில், வடக்குத் திக்கிலிருந்து மனைவி வந்து நேரிடுவாள். அவளுடைய குணநிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம்.

† குறிப்பு.—ஜாதகரின் விவாகவிஷயம் :—ஜாதகருக்கு வயது ௵ 14 முதல் ௵ 15 முடியும் வரையிலும் சுக்கிர தசையில் ராகு புக்தி நடக்கின்றது. சுக்கிரன் களத்திரகாரகனுகிப் போக ஸ்தானமாகிய நான்காவது பாவமாகிய துலாத்திற்கு அதிபதியுமாகிக் குடும்பாதிபதியுமாகிய சூரியனுடன் கூடிப் போககாரகனுகிய ராகுவால் பார்க்கப்பட்டிருக்கின்றார். அகையால் இவருக்குத் தன் தசையில் விவாகஞ் செய்துவைக்க அமைப்பு இருக்கின்றது. மேலும் கீர்த்தி ஸ்தானம் என்ற பத்தாம் வீட்டிற்குடைய அங்காரகனும் சனியும் லக்கினத்திலிருந்து இருபக்கமாக நான்கு ராசிகளுக்குள்ளிருப்பதால் ஜாதகசிந்தாமணி ஏழாவது பாவம் 974 ஆவது பாடல் பிரகாரம் வாலிபவிவாகஅமைப்பு இருக்கின்றது. ராகு போககாரகனுகி ஒன்பது பத்திற்குடையவர்களாகிய குருவுடனும் அங்காரனுடனுங் கூடி இருப்பதால் ஜாதகசந்திரிகா 12ஆவது சுலோகம் ஜாதகபாரிஜாதம் 14 ஆவது அத்தியாயம் 29 ஆவது சுலோகம் ஆகிய இவைகள் பிரகாரம் தன் புக்தியில் விவாகம் செய்துவைக்கும் அமைப்பு உடையவராகின்றார்.

23. மாநிறஞ் சமதேகத்தாள் மாரன்தன் மனம்போல் வாழவள்
தேன்மொழி கூறு வாளாஞ் சீக்கிர நடையு மாகும்
ஈனமாங் குணமில் லாதா ளிடரென்றோர்க் குதவி செய்வள்
மேன்மையாய் விரதம் பூண்பள் மெல்லிநன் நடக்கை யுண்டு.

23. ஜாதகருடைய மனைவி மாநிறமுள்ள தேகத்தை உடையவள். நடுத்தரமான தேகத்தை உடையவள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி ஒத்துவாழ்வாள். தேனைப்போல இனிமையான வார்த்தைகளைச் சொல்லுபவளாவள். சீக்கிரமாகவும் வேகமாகவும் நடக்கக்கூடியவளாகும். தாழ்ந்த கெட்ட குணங்களை உடையவளல்லள். கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அடைந்திருக்கின்றோம் என்று சொல்லுகிறவர்களுக்கு உபகாரத்தைச் செய்வாள். விரதங்களை மேன்மையுடனும் சிறப்புடனும் அனுஷ்டிப்பாள். இவள் நல்லொழுக்கத்தையும் நல்ல நடக்கையையும் உடையவளாவாள்.

24. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பால் ரண்டு
சத்தியு மவ்வாறு தீர்க்கஞ் சீரண மவ்வா றென்றேங்
குத்தமா முதலி லேதான் கூறுவோம் பின்பால் சேதி
அத்தியைப் பெற்ற மாதே அறைகிறே மன்னை சேதி.

24. ஜாதகரது புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம். முதலில் பிறக்கும் குழந்தைகள் இறந்து விடுவார்கள். இந்த விஷயத்தைப் பற்றிப் பின்னல் சொல்லுகின்றோம். தேவர்களின் தாயாரைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! ஜாதகருடைய தாயாரின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

25. மால்நிறம் உணச்சல் தேகி மருமுங் கொஞ்ச முண்டு
தேன்மொழி யீகை கொஞ்சஞ் செப்புமுன் கோபி யாவள்
ஊனமில் லாத தேகி உள்ளூரா மன்னே யில்லம்
மான்விழி துணைஆண் ரண்டு மங்கையும் மூன்று தீர்க்கம்.

25. ஜாதகருடைய தாயார் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேகவர்ணம் என்ற ஒருவிதமான நிறமுடைய தேகத்தை உடையவளாவள். வரண்ட மெல்லிய தேகத்தை உடையவள். கொஞ்சம் ரகசியத்தையுடைய மனத்தை உடையவள். தேனைப்போன்ற இனிமையான வார்த்தைகளை உடையவள். கொஞ்சம் கொடுக்கின்ற தயாள குணத்தை உடையவள். பேசுவ தற்கு முன்னே கொஞ்சம் கோபத்தை உடையவள். அவயவ பங்கம் இல்லாத தேகத்தை உடையவள். இவளுடைய தாயாருடைய வீடு உள்ளூ ரிலேயே இருக்கும். மானுடைய கண்களைப்போல அழகான கண்களை உடைய தாயாருக்கு இரண்டு ஆண் சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாகவிருப்பார்கள்.

26. அன்னையின் பூர்வஞ் சொல்லுவேன் அச்சிறு பாக்கம் பக்கல்
சின்னஊர் தன்னி லேதான் ஜனித்தனள் வைசியச் சேயாய்ப்
பொன்பணி யுடையாளாகிப் புகழான குடும்ப மேற்றுத்
தன்வரன் மதலே யுண்டாய்த் தானவள் வினையு மின்றிற்றுத்

26. ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின் றேன். இவள் அச்சிறுபாக்கத்திற்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத் தில் வைசியர் குலத்தில் பெண்குழந்தையாகப் பிறந்தாள். தனம் ஆடை ஆபரணங்கள் ஆகிய இவைகளை உடையவளாகிப் பெருமையும கீர்த்தியும் உடைய குடும்பத்தை அடைந்து புருஷன் மக்கள் இவர்களை உடையவளாகி யாதொரு பாபமும் இல்லாமல் ;

27. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்ஜனல் வரையப் பட்டுச்
சீலமா மருகர் வர்க்கஞ் ஜனித்தவளிவளே யென்றேம்
ஏலவே யிவள்பின் ஜன்ம மியம்புவோந் தொண்டை நாட்டில்
சாலவே வைசியச் சேயாய்ச் சார்வளர மென்று சொல்வோம்.

27. இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனல் பிரமலிபி யுடன் எழுதப்பட்டு நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையும் உடைய சமண ருடைய குலத்திற் பிறந்தாள் என்று சொல்லுகிறேம். இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவள் தொண்டை நாட்டில் நல்ல வைசிய ஜாதியில் பெண் குழந்தையாய்ப் பிறப்பாள் என்று சொல்லு கின்றேம்.

28. சேனையு முடைய ளென்று செப்புவோம் பின்ஜன் மத்தில்
வினைசெய்யும் வைசியச் சேயாய் மேவுங்கா ரணங்க ளென்னச்
சினமது அதிக மாயுஞ் சொல்லது அதிக மாயுங்
கனமுள விரத மின்றிக் கன்னிகை வாழ்ந்த தாலே ;

28. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மறுபிறப்பில் பந்துக்களை உடை யவளென்று சொல்லுகின்றேம். மறுஜன்மத்தில் பாவங்களைச் செய்கின்ற வைசிய ஜாதியில் பிறப்பதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்றுகேட்க, சொல்லுகின்றுர். அதிக கோபமுடையவளாயும் அதிகமாகப் பேசுபவளா யும் மேன்மையான சிறந்த விரதங்களை அனுஷ்டிக்காதவளாயும் இவள் இருந்து வாழ்ந்ததால் ;

29. உதிப்பளா மென்று சொல்வோம் உரைக்கிறேந் தந்தை பூர்வம்
முதல்தலந் தன்னி லேதான் உதித்தனன் பிரம்ம சேயாய்
அதிதிகட் கன்ன மீந்து அறமதி லிச்சை யுண்டாய்
நதிபல தேசஞ் சென்று நமன்பதிக் காளா யின்னேன் ;

29. இவ்விதமாகப் பிறப்பாளென்று சொல்லுவோம். ஜாதகருடைய தகப்பனுரின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். முதன்மை யான ஸ்தலத்தில், அஃதாவது பஞ்சபூதஸ்தலங்களாகிய பஞ்சஸ்தலங்களில் முதன்மையான ஸ்தலமாகிய சிதம்பரத்தில் தகப்பனுர் பிராமணர் குலத் தில் ஆண்குழந்தையாய்ப் பிறந்தார். பரதேசிகளுக்குச் சாப்பாடுபோட்டுத் தருமஞ் செய்வதில் ஆசை உடையவராய்ப் புண்ணிய நதிகளை உடைய அநேக தேசங்களுக்குப் போய்ப் பிறகு இறந்து எமபட்டணத்திற்குச் சென்று;

30. கஞ்சனல் வரையப் பட்டுக் கலந்தன னிக்கு லத்தில்
மிஞ்சிய ஜன்மஞ் சொல்வேன் வடமேல்பால் பெருமத் துரில்
தஞ்சமா யிக்கு லத்தில் ஜனித்துமே அருகர் பூசை
கொஞ்சியே செய்வா ருகுங் குறையின்றி வாழ்வா ருமே.

30. பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இந்தச் சமணர் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றுர். மிருதியான, அஃதா வது மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். வடமேற்குத் திக்கில் உள்ள பெருமத்தூரில் இந்த ஜன்மத்திய குலமாகிய சமணர் குலத்திற் பிறந்து சமணருடைய தேவரைப் பூஜை செய்பவராவார். கஷ்டங்கள் இல் லாமலும் வாழ்பவராவார்.

31. பாலகன் பூர்வ வமிசம் பட்சியின் வடபால் தன்னில்
சீலமாங் கங்கை சேயாய் ஜனித்துமே கிருஷி செய்து
மால்பூசை அதிக முண்டாய் மனைவிமைந் தருமுண் டாகிச்
சாலவே வினைக ளின்றிச் சண்டன்தன் பதிக்குப் புக்கி;

31. ஜாதகருடைய முன் ஜன்மத்திய குலத்தைப்பற்றிச் சொல்லு கின்றேன். பட்சி ஸ்தலமாகிய திருக்கழுக்குன்றத்தில் நல்ல ஒழுக்கங்களை யுடைய வேளாளர் குலத்தில் இவர் பிறந்து விவசாயத் தொழிலைச் செய்து கொண்டு மகாவிஷ்ணுவை அதிகமாகப் பூஜைசெய்துகொண்டு மனைவி மக்கள் ஆகிய இவர்களை உடையவராகிப் பாவங்கள் அதிகமாக வில்லாதவராகி இறந்து எமனிடத்திற்குச் சென்று;

32. சினகுல முதிப்பா ருகுஞ் செப்புவோ மிவனின் யோகங்
கனமுள குடும்பி யாவன் கனதன தானிய முள்ளான்
இன்மது மெச்ச வாழ்வன் இடரென்ரேர்க் குதவி செய்வன்
பண்ணையோர்கள் விருத்தி செய்வன் பார்வதி கேட்டி டாயே.

32. இந்தச் சமணருடைய குலத்தில் வந்து இந்த ஜன்மத்தில் ஜாதகர் பிறப்பார். இவருடைய யோகங்களைப்பற்றிச் சொல்லுகின்ரேம். மேன்மை யானதும் சிறந்ததுமான குடும்பஸ்தராக ஜாதகர் இருப்பார். அதிக தனத்தையும் தானியங்களையும் உடையவராவார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மெச்சும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அடைந்திருக்கின்ரேம் என்று சொல்லுகிறவர்களுக்கு உபகாரஞ் செய்வார். பயிரிடும் பூமிகளையும் ஏர்களையும் விருத்தியாக்குவார், அதிகப்படுத்துவார், பார்வதியம்மையே ! கேட்பீராக

33. தருமகர் மாதி யோகஞ் சாற்றுவோம் பலனை யாங்கள்
திருப்பணி செய்வா ருகுந் திகம்பரன் பூசை பூண்பன்
வருவோரை ஆத ரிப்பன் அரசர்கள் பேட்டி கொள்வன்
பெருமையாய்ப் புகழ மேற்பன் பூடஷஞ் சேர்ப்பா ருகும்.

33. தர்மகர்மாதியோகம் என்ற ஒருவித யோகத்தின் பலாபலன்களை நாங்கள் சொல்லுகின்ரேம். ஜாதகர் கோயில்களில் கோயில் வேலைகளை செய்வார். சிவபெருமானைப் பூஜை செய்வார். தன்னிடத்திற்கு வருகின்றவர்களைக் காப்பாற்றுவார். அரசர்களுடைய தரிசனத்தைப் பெறுவார். பெருமையையும் மேன்மையையும் கீர்த்தியையும் அடைவார். ஆபரணங்களைச் சேர்த்து வைப்பவராவார்.

வேறு

34. இரவிக்கு [1] மூன்றில் குசனி[2]ருக்க நவில்வீர்
முனியே தந்தைக்குப்
பவமாய்க் கர்ணந் தானடைப்பு
பகர்வோமன்றித் துணை காணுன்
நவமே விருத்திதான் செய்வன்
நல்கும் வேறு யில்லமுமே
தவமே புரிவன் துரைராஜர்
தானு மறிவன் சங்கரியே.

34. சூரியனுக்கு மூன்ருவது வீட்டில் அங்காரகன் இருப்பதால், முனிவரே ! தகப்பனுருடைய பலனைச் சொல்லுவீராக. தகப்பனுருக்குப் பாபத்தால் காது கேட்காது என்று சொல்லுகிறோம். இதுவுமல்லாமல் இவருக்கு (ஆண்) * சகோதரர்கள் கிடையாது. பூமியை விருத்தி செய்வார். இவருக்கு வேறு ஒரு வீடும் கிடைக்கும். இவர் தவங்களைச் செய்பவர். அரசர்களைத் தரிசிக்கக் கூடியவராவார். பார்வதியம்மையே !

* குறிப்பு .—நான்காவது பாடலில் ஆண் சகோதரர் கிடையாது என்று சொல்லி இருப்பதைக் கவனிக்கவும். பிதுர் லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மீனம் ஆகும். இதற்கு இளைய சகோதர ஸ்தானுதிபதியாகிய மூன்றிற்குடைய சுக்கிரன் சூரியனுடன்கூடி மீனத்திற்குப் பன்னிரண்டில் மறைந்திருக்கின்ருர். மணிகண்டகேரளம் சகோதரபாவம் ஆருவது பாடல் பிரகாரம் பின் ஆண் சகோதரனுக்குத் தோஷம் இருக்கின்றது. மூத்த ஆண் சகோதரகாரனுகிய குரு இராகுவுடனும் அங்காரகனுடனும் கூடி இருப்பது மூத்த ஆண் சகோதரனுக்குத் தோஷமாக இருக்கின்றது. இங்குச் சூரியனைப் பிதுர் லக்கினமாக வைத்துக்கொண்டு பிதாவின் காதின் பலனைச் சொல்லுகின்ருர். இதற்கு ஆதாரமாகப் பலதீபிகை பதினைந்தாவது அத்தியாயம் இருபத்திரண்டாவது சுலோகத்தைப் பார்க்கவும். காது ஸ்தானம் மூன்ருமிடமும் பதினேராமிடமும் ஆகும். இங்குச் சூரியனுக்கு மூன்றிற்குடைய அங்காரகனும், பதினென்றிற்குடைய குருவும் சூரியனுக்கு மூன்றில் இராகுவுடன்கூடி இருப்பதால் காது தோஷத்தைச் சொல்லி இருக்கின்ருர்.

[1] சூரியன். [2] அங்காரகன்.

35. இருபது ஏழு ஆண்டில் இவன்தந்தை கண்டம் நேரும்
மறலியைக் காணு தாகும் வாறஞ்சு மூன்று ஆண்டில்
பெருங்கன்னி மாதந் தன்னில் பூரண கண்ட மென்ரேம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

35. ஜாதகருக்கு இருபத்தேழாவது வயதில் ‡ இவருடைய தகப்பனுருக்குக் கண்டம் நேரிடும். ஆனல் அப்போது அவர் எமனைத் தரிசிக்க மாட்டார். முப்பத்துமூன்ருவது வயதில் புரட்டாசி மாதத்தில் இவருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகின்ரேம். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

‡ குறிப்பு.—தகப்பனுர் மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷ 26—0—0 முதல் ஷ 27—0—0 முடியும் வரையிலும் சூரிய தசை நடக்கின்றது. பிதுர் லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மீனமாகும். இதற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவற்றின்பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் மாரகாதிபதிகள் ஆகின்ருர்கள். சூரியனுக்குச் சந்திர லக்கினுதிபத்தியம் வந்துவிட்டதால் சூரியனுக்குப் பிதாவை மாரகஞ் செய்யும் அமைப்பைச் சந்திரன் கொடுக்கமாட்டார். அவர் வீட்டிலுள்ளச் சந்திரன் அந்த அமைப்பை ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் தானே பெற்றுக் கொள்ளுவார். ஜாதகருக்கு வயது ஷ 32—0—0 முதல் ஷ 33—0—0 முடியும் வரையில் சந்திரதசையில் அங்காரகன் ராகு இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. புரட்டாசி மாதத்தில் இராகு புக்தி நடக்கின்றது. சந்திரன் முன்னமே சொல்லிய காரணத்தினுல் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்புடையவராகின்ருர். ராகு பிதுர்லக்கினுதிபதி பத்திற்குடையவராகிய குரு அங்காரகனுடன் சம்மந்தப்பட்டுப் பிதுர்லக்கினத்திற்கு எட்டிற்குடைய சுக்கிரனைப் பார்த்திருப்பதால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகம் துய்ய கேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது 20-ஆவது பாடல் பிரகாரம் இராகு பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்புடையவராகின்ருர்.

36. எண்ணஞ்சு ஒன்று ஆண்டி லிபமா தத்தி லேதான்
திண்ணமா யன்னே கண்டஞ் செப்புவோ முப்பா ணண்டில்
வண்ணமாய் முன்தரய் கண்டம் மருவிடு மென்று சொன்னேம்
அண்ணலைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

36. ஜாதகருக்கு நாற்பத்தோராவது* வயதில் வைகாசி மாதத்தில் உண்மையாகத் தாயாருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகிறேம். ஜாதகருக்கு முப்பதாவது வயதில் இவருடைய பெரிய தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகின்றேம். சிவபெருமானைப் பூசை செய்யும் பார்வதியம்மையே ! கேட்பீராக.

* குறிப்பு.—தாயாருடைய மரணவிஷயம் :—ஜாதகருக்கு வயது ஞ 40—0—0 முதல் ஞ 41—0—0 வரையிலும் சந்திர தசையில் சுக்கிர—சூரிய—புக்திகளும் அங்காரக தசையில் அங்காரக புக்தியும் நடக்கின்றன. ஆனுல் வைகாசி மாதத்தில் சந்திர தசையில் சுக்கிர புக்திதான் நடக்கின்றது. மாதுருலக்கினம் நான்காவது பாவமாகிய துலாம் ஆகும். இதற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சூரியனும் குருவும் மாரகராகின்றுர்கள். சந்திரன் சூரியனுடைய வீட்டில் இருந்துகொண்டு துலாத்திற்குப் பதினேராவதான மாரகஸ்தானத்திலிருப்பதாலும் ஒன்று எட்டிற்குடைய சுக்கிரனைப் பார்ப்பதாலும் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரமும் சந்திரன் மாதாவுக்கு மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராகின்றுர். சுக்கிரன் மாரகாதிபதியாகிய சூரியனுடன் கூடி ஒன்று எட்டிற்குடையவராய் இருப்பதால் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகம், துய்ய கேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் இவற்றின் பிரகாரம் மாதாவுக்கு மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராகின்றுர்.

37. ஈரஞ்சு ஒன்று ஆண்டில் இவன்தந்தை அன்னே கண்டங்
கூறுவோ மெழுப தாண்டில் கூனிமா தத்தி லேதான்
மாரன்தன் உடலம் ஏகும் மொழிகிறேம் மறுஜன் மத்தை
வாரிசூழ் வான்மி யூரில் மருவுவானிக்கு லத்தில்.

37. ஜாதகருக்குப் பதினேராவது வயதில்‡ இவருடைய தகப்பனுரின் தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகின்றேம். எழுபதாவது வயதில் பங்குனி மாதத்தில்‡ ஜாதகர் இறந்து இவருடைய தேகம் மறைந்துவிடும். இவருடைய பின் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். கடலால் சூழப்பட்ட திருவான்மியூரில் இந்த ஜன்மத்தின் குலமாகிய சமணர் குலத்திலேயே பிறப்பார்.

‡ குறிப்பு.—பிதாவின் பாட்டியின் மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ஞ 10—0—0 முதல் ஞ 11—0—0 வரையிலும் சுக்கிர தசையில் சந்திர புக்தி அங்காரகபுக்தி ஆகிய இவை நடக்கின்றன. பிதுர் லக்கினம் ஒன்பதாவது வீடாகிய மீனம் ஆகும். இதற்கு மாதுர் லக்கினம் நான்காவது வீடாகிய மிதுனமாகும். ஆகையால் பிதாவின் பாட்டியினுடைய லக்கினம் மிதுனமாகும். இதற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் குரு அங்காரகன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றுர்கள். சுக்கிரன் பன்னிரண்டிற்குடையவராகி லக்கினதிபதியுடனும் சூரியனுடனும் கூடி இருக்கின்றுர். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகம் துய்யகேரளம்எட்டாவது பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் சுக்கிரன் பிதாவின் பாட்டிக்கு மாரகஞ் செய்ய அமைப்புடையவராகின்றுர். அங்காரகன் மிதுனத்திற்கு ஆறு பதினென்றிற்குடையவராகி மாரகாதிபதியாகிய குருவுடன் கூடிபதினென்றில் இருக்கின்றுர். ஆகையால் இவர் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் பிதாவின் பாட்டிக்கு மாரகத்தை தன்னுடைய புக்தியில் செய்யும் அமைப்பு உடையவராக விருக்கின்றுர்.

‡ (2) ஜாதகர் மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ஞ 69—0—0 முதல் ஞ 70—0—0 வரையிலும் குரு தசையில் சனி புக்தி நடக்கின்றது. பராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் கடக லக்கினத்திற்குப் புதன் சுக்கிரன் சனி இவர்கள் மாரகாதிபதிகள் ஆவார்கள். இங்கு குரு பத்திற்குடைய அங்காரகனுடன் கூடி லக்கினதிபதியாகிய சந்திரனைப் பார்க்கின்றுர். ஆறிற்குடையவராகவுமிருக்கின்றுர். ஜாதகபாரிஜாதம் 14-ஆவது அத்தியாம் 56-ஆவது சுலோகத்தையும் குமாரசாமியம் மகாதசைப் பலப்படலம் நான்காவது பாடலையும் அனுசரித்து குரு மாரகாதிபதி ஆகின்றுர். சனி ஏற்கனவே மாரகாதிபதியாக இருக்கின்றுர். ஆகையால் குருதசை சனிபுக்தியில் மரணம் நேரிடும்.

38. ஐந்தாண்டுள் ஜாத கர்க்கு அணுகிடுங் கண்டம் ஒன்று
பொன்னவன் தசமம் நிற்கப் புதல்வனுந் தீர்க்க ஜீவி
மன்னவன் ஜனன காலம் மகமது இரண்டாம் பாதம்
மன்னிய கேது தன்னில் ஆண்டுமே நாலு மாகும்.

38. ஜாதகருக்கு ஐந்து வயதிற்குள்ளேயே ஒரு கண்டம் வந்துசம்பவிக்கும். குரு பத்தாவது பாவத்தில் இருப்பதால் ஜாதகர் நீண்ட ஆயுளை உடையவராவார். இவர் பிறந்த காலத்தில் மகநட்சத்திரத்தில் இரண்டாவது பாதத்தில் கேது தசையில் இருப்பு நான்கு வருஷங்களும் ;

39. துன்னிய பதினேர் திங்கள் செப்புவோம் பலனே யாங்கள்
இன்னவன் தனக்கு ரோக மெய்திடும் வினையனேகம்
பின்துணே விருத்தி யாகும் பெருகிடும் கன்று காலி
தந்தைதாய் ரோகம் வாய்க்குஞ் சாற்றுவோம் பின்பால் சேதி.

39. பதினென்று மாதங்களும் ஆகும். இக்காலத்திய பலாபலன்களைச் சொல்லுகின்றேம். ஜாதகருக்கு நோய் உண்டாகும். அநேக துன்பங்கள் நேரிடும். பின் சகோதரர் உண்டாகி விருத்தியாவர். கன்றுகளும் கால் நடைகளும் விருத்தியாகும். தாயாருக்கும் தகப்பனுருக்கும் வியாதி நேரிடும். மற்ற விஷயங்களைப் பின்னுல் சொல்லுவோம்,

ஜாதகம் 105

1. சனிராகு மேட மாக வெண்மதி[1] குடம தாக[2]
உதயன்[3]சேய்[4] புந்தி[5] பொன்னும்[6] ஒருகண்ணேன்[7] கேது
[கோலாம்[8]
சதயமுங் கடைப் பா தத்தில் ஜனனமுங் கடக மாக
அதுபலன் எவ்வா றென்று அம்பிகை கேட்கும் போது ;

	சனி ராகு		
சந்திரன்	இராசி	சக்கரம்	லக்கினம்.
		சூ. பு. அ. குரு. சு. கேது	

சதயம் 4-ஆம் பாதம். ராகுதசை 3–5–0.

1. சனியும் ராகுவும் மேஷத்திலும், சந்திரன் கும்பத்திலும், சூரியனும் அங்காரகனும் புதனும் குருவும் சுக்கிரனும் கேதுவும் துலாத்திலும், ஜன்ம லக்கினம் கடகமுமாக இருந்து சதயம் நான்காவது பாவத்தில் ஜனனம் நேரிட்டால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மை யார் கேட்கும்போது ;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின் வரும் அம்சைச் சக்கிர கிரக நிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சுக்கிரனும், ரிஷபத்தில் சூரியனும், புதனும், மிதுனத்தில் சனியும் கேதுவும், தனுசில் குருவும் ராகுவும், மகரத்தில் அங்காரகனும் மீனத்தில் சந்திரனும் ஆகும். அங்காரகன் புதன் குரு சுக்கிரன் இவர்கள் அஸ்தமனத்திலும், சனி வக்கிர கதியினும் இருக்கின்றார்கள்.

2. தென்முனி புகலு கின்றார் ஜனித்திடும் ஆண்பால் ஜன்மம்
வந்தயில் கீழ்மேல் வீதி வாசலும் வடபால் நோக்கம்
முந்தின ஊரே யாகும் வாடையா மில்லம் என்றோம்
உன்னத துருவங் கீழ்ப்பா லோடிடும் என்று சொல்வோம்.

[1] சந்திரன் [2] கும்பம் [3] சூரியன் [4] அங்காரகன். [5] புதன் [6] குரு [7] சுக்கிரன் [8] துலாம்

2. தெற்குத் திக்கிற் கதிபதியாய் இருக்கின்ற முனிவராகிய அகஸ்திய மகா முனிவர் சொல்லுகின்றார். ஜனனமான குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் வடக்குத் திக்கு பார்த்த வாயிற்காலை உடையதாக இருக்கும். பிறந்த ஊர் மேன்மையான முதல்தரமான ஊராகும். வீடுகள் வாடை வாடையாகவும் வரிசை வரிசையாகவும் இருக்கும். ஓர் உயரமான சிறந்த மலை கிழக்குத் திக்கை நோக்கிச் செல்லும் என்று சொல்லுகிறோம்.

3. பலஜாதி யவ்வூர் வாசம் பாலகன் பிரம சேயாய்க்
குலவுவான் ஜேஷ்ட னாகக் கூறுவோ மிவனின் யோகம்
நிலைமையாய்க் குடும்பச் சேதி நிகழ்த்துவோம் முன்பின் ஜன்மம்
மலையிறை மகளே ! தந்தை வர்க்கத்தைப் புகலக் கேண்மோ.

3. பிறந்த ஊரில் பலவிதமான ஜாதியர்கள் வாசஞ் செய்வார்கள். பிராமணர் குலத்தில் ஜேஷ்ட குமாரராக இவர் பிறப்பார். இவருடைய யோகத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருடைய நிலையான குடும்பத்தின் விஷயங்களையும் முன் ஜன்மம், பின் ஜன்மம் ஆகிய இவைகளைப்பற்றியுஞ் சொல்லுகின்றோம். இமயமலைக்கு அரசனாகிய பர்வதராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே ! நாங்கள் ஜாதகருடைய தகப்பனாரின் பந்துக்களைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக.

4. தாதைக்குத் தார மிரண்டில் தரித்திடு மிளையா ளீன்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
ஓதுவோந் துணைவர் காணுன் ஒண்டியாய் வாழ்வா னம்மா
போதவே வவன் குணத்தைப் புகலுவோ மினிமே லாக.

4. ஜாதகருடைய பாட்டனாரின் இரண்டாவது மனைவி நியாயமாய்ப் பெற்றெடுத்தக் குழந்தையே ஜாதகருடைய தகப்பனார் ஆகுமென்று சொல்லுகின்றோம். ஜாதகருடைய தகப்பனாருக்குக் கூடப் பிறந்த சகோதரர்கள் இல்லை. இவர் ஒருவராக விருந்து தன்னுடைய காலத்தைக் கழிப்பார். பார்வதியம்மையே ! இனிமேல் இவருடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

5. ஓட்[1]நாள் தேளின் [2] ராசி யுதிப்பனு மால்நி றத்தன்
வாடுவான் மனது பூர்வம் மாதுரு சுகமில் லாதான்
கேடில்லாத் தலங்கள் செல்வான் கிராமாதி காரஞ் செய்வன்
போடுவான் பெரியோர்க் கன்னம் பூமியைப் பரிபா லிப்பான்.

5. ஜாதகருடைய தகப்பனார் புனர்பூச நட்சத்திரத்தில் விருச்சிக லக்கினத்தில் பிறந்திருப்பார். இவர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான நிறமுடைய தேகத்தை உடையவர். வயதின் முதல் பாகத்தில் இவர் மனக் கஷ்டத்தை அடைவார். இவருக்குத் தாயாருடைய சுகம் கிடையாது. குற்றமற்றதான நல்ல புண்ணிய ஸ்தலங்களுக்கு இவர் போவார். இவர் கிராம அதிகாரத்தையுடைய வேலையைச்

[1] புனர்பூசம் எழும் ஓடம்போல இருக்கும். [2] விருச்சிகம்,

செய்வார். அஃதாவது கிராம உத்தியோகஸ்தராக இருப்பார். பெரியவர்களுக்கும் பரதேசி முதலிய பெரிய மனுஷர்களுக்கும் சாப்பாடு போடுவார். இவர் பூமியை ஆளுவார், காப்பாற்றுவார்.

6. தந்தைக்குத் தாழ்வாய் வாழ்வன் சல்லியப் பாதை யேற்பன்
சுந்தர முடைய ஞவன் சூட்சும புத்தி யேற்பன்
விந்தையா யில்லஞ் செய்வன் வேந்தர்க ளிஷ்டம் கொள்வன்
[1]மந்திரி தசையி லேதான் வளர்ந்திடும் யோக மென்றேும்.

6. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய தகப்பனுரைவிடத் தாழ்ந்த அந்தஸ்தையுடையவராயிருந்து வாழ்வார். கடனுல் ஏற்படும் உபத்திரவத்தை அடைவார். அழகான தேகத்தை உடையவராவார். கூர்மையான புத்தியை உடையவராவார். ஆச்சரியமாக வீட்டைக் கட்டுவார். அரசர்களுடைய பிரியத்தையும் சிநேகிதத்தையும் அடைந்திருப்பார். இவருக்குக் குரு தசை காலத்தில் நல்ல யோகம் உண்டாகி அஃது அதிகப்பட்டுக்கொண்டே போகுமென்று சொல்லுகின்றேும்.

குறிப்பு.—(1) ஜாதகருடைய பிதிரு ஸ்தானம் அல்லது பிதிரு லக்கினம் மீனமாகும். மீன லக்கினுதிபதியாகிய குரு மீனத்திற்கு ஆறிற்குடைய சூரியனுடனும் எட்டிற்குடைய சுக்கிரனுடனும் கூடி பன்னிரண்டிற்குடையவராகிய சனியால் பார்க்கப்பட்டிருப்பதால் ஜாதகருடைய தகப்பனுருக்குக் கடனுல் உபத்திரவம் ஏற்படும்.

(2) குருதசை யோக விஷயம் :—பிதிரு லக்கினமாகிய மீனத்திற்குக் கர்மாதிபதியாகிய குரு தர்மாதியாகிய அங்காரகனுடன் கூடி இருப்பதால் தர்ம கர்மாதியோகம் இருக்கிறது. மேலும், புதன் குரு சுக்கிரன் இவர்கள் மீன லக்கினத்திற்கு எட்டில் இருப்பதால் லக்கின அதியோகம் (அஃதாவது லக்கினுதியோகம்)கூட சிறிது இருக்கின்றது. மேலும், குரு சந்திரனுக்கு இரண்டு பதினென்றிற்குடையவராகிச் சந்திரனுக்குப் பாக்கிய ஸ்தானமாகிய ஒன்பதில் இருக்கின்றுர். ஆகையால் குரு ஜாதகருடைய பிதாவுக்குத் தனது தசையில் யோகத்தைக் கொடுக்கும் அமைப்பு உடையவராக விருக்கின்றுர்.

7. பலருக்கு நல்லோ னுவன் பலசகா யங்கள் செய்வன்
திலதமாம் பந்துக் கட்குத் தேரினேர் தொண்டு பூண்பன்
கலகத்தை நாடா ஞருங் காதலி தன்னுல் லாபம்
அலைகடல் துயின்றேன் பக்தி யாபத்தைச் சிலர்க்குக் காப்பன்.

7. ஜாதகருடைய தகப்பனுர் பலருக்கு நல்லவராக விருப்பார். இவர் பலவிதமான உபகாரங்களைச் செய்வார். இவர் தன்னுடைய பந்துக்களுக்குள் நெற்றியிலுள்ள பொட்டைப்போலச் சிறந்தவராகவும் மேலானவராகவுமிருப்பார். மனத்திலும் அறிவிலும் தேர்ச்சியடைந்த பெரியோர்களுக்குப் பணிவிடை செய்வார். கலகத்தை உண்டுபண்ணக்கூடிய காரியங்களைச் செய்ய மாட்டார். இவருக்குத் தன்னுடைய மனைவியால் லாபமும் சௌக்கியமும்

[1] குரு

உண்டாகும்*. அலைகளையுடைய கடலில் சயனித்திருக்கும் மகாவிஷ்ணுவின் மேல் இவர் பக்தி உடையவராவர். ஆபத்துக் காலத்தில் சிலருக்கு இவர் உதவி செய்து அவர்களைக் காப்பாற்றுவார்.

*குறிப்பு:—பிதாவுக்குத் தன் மனைவியால் லாபம் ஏற்படும் விஷயம்.—பிதிரு லக்கினமாகிய மீனத்திற்கு மனைவி ஸ்தானமாகிய கன்னிக்கு அதிபதியாகிய புதன் மீனத்திற்குத் தர்மகர்மாதிபதிகளாகிய அங்காரகன் குரு இவர்களுடன் சேர்ந்துகொண்டு மீனத்திற்கு லாபாதிபதியாகிய சனியால் பார்க்கப்பட்டிருப்பதால் பிதாவுக்குத் தன் மனைவி மூலமாக யோகம் ஏற்படக் கூடிய அமைப்பு இருக்கிறது.

8. முன்னிவ னிருந்த ஜன்ம மொழிகிறேும் பெருமுக்கல் தன்னில்
அன்னவன் செட்டி வம்ச மனுகியே பெருமை பூண்டு
பொன்பூமி யுடையனுகிப் புகழுடன் வாழுந் நாளில்
கன்னிகை யொருத்தி பேரில் களவான வார்த்தை சொல்லி ;

8. ஜாதகருடைய தகப்பனுரின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேும். இவர் பெருமுக்கல் என்ற கிராமத்தில் செட்டியார் ஜாதியில் பெருமையை யடைந்து, தனமும் நிலங்களும் உடையவராகிக் கீர்த்தியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில் ஒரு கலியாணமாகாத பெண்ணின் மேல் அபவாதமானச் சொற்களைச் சொல்லி அவள் மேல் பழியைச் சாட்டி;

9. மாதுவை யவமா னங்கள் மாரனுஞ் செய்யும் போது
ஓதுவா ளந்த மாது உதாசீனஞ் செய்த பாவி
மேதினில் மறுஜன் மத்தில் விளங்கா துணைவர் தாமும்
ஆதியிலன்னை மாண்டு அலைமீது துரும்பு வாவாய்.

9. ஜாதகருடைய தகப்பனுர் அந்தக் கன்னிகையை மேற் சொல்லியபடி அவமானங்கள் செய்தபோது அந்தப் பெண் பின்வருமாறு சொல்கின்றுள். "என் மேல் தூஷணமான வார்த்தைகளைச்சொல்லிய பாவியாகிய நீ உன்னுடைய மறு பிறப்பில் சகோதர சகோதரிகள் ஆயுளுடன் இராமலும் இளம் பிராயத்தில் உன்னுடைய தாயார் இறந்தும் அலையில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கின்ற ஒரு துரும்பு அல்லது குப்பையைப் போல யாரும் திக்கில்லாமல் அலையக்கடவாய்.

10. சிலகாலம் பந்து மூலஞ் சேர்ந்துமே வாழ்வாய் நீயுஞ்
கலவர புத்தி யாகிக் காதலி சொல்லும் போது
குலவிற்று வந்தச் சாபங் கூறுவோம் வேறு வொன்று
உலகினிலினத்தா ருக்கு வொருபொய்யை யரசர் மூலம்;

10. "நீ இவ்விதமாக அலைந்து திரிந்து உன்னுடைய பந்துக்களை அண்டி அவர்களிடம் சில காலம் வாழக்கடவாய்" என்று அந்தத் திகிலடைந்த பெண் தன்னுடைய புத்திக் கலக்கத்துடன் ஜாதகருடைய தகப்பனுரைப் பார்த்துச் சொல்லவே அந்தச் சாபம் ஜாதகருடைய தகப்பனுரை

வந்து இப்பொழுது அடைந்தது. மேலும் இவரை அடைந்த இன்னொரு சாபத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் இந்தப்பூமியில் தன்னுடைய பந்துக்களுக்காக ஒரு பொய்யான விஷயத்தை இராஜாங்கத்தில் சொன்னார்.

11. சொல்லினது வோர் தோஷஞ் சுதனுமே அந்தி யத்தில்
நல்லதோர் சேது சென்று நமன்பதி யடைந்தா னின்னேன்
எல்லையை யளந்தோன் மைந்தன் எழுதவும் முதித்தா
புல்கிடும் பூர்வ சாபம் பெற்றதாய் பூர்வ நாசம். [னென்றோம்

11. ஜாதகருடைய தகப்பனார் மேற்கண்ட விதமாகச் சொல்லவே அது தனக்கு ஒரு தோஷமாகவும் சாபமாகவும் நேர்ந்தது. இவர் முன்ஜன்மத்தில் தன்னுடைய கடைசி காலத்தில் நன்மையை உண்டாக்குகின்ற சேது ஸ்தலம் என்ற திவ்விய ஸ்தலத்திற்கு யாத்திரை செய்து பிறகு இறந்து எமனுடைய பட்டணத்திற்குப் போய்ப் பிறகு பூமியைத் தன் கால்களால் அளந்த மகா விஷ்ணுவினுடைய குமாரராகிய பிரம்மாவினால் பிரமலியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து இவர் பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவருக்கு இவருடைய முன் ஜன்மத்திய சாபங்கள் வந்து சம்பவிக்கும். அவைகளால் இவரைப் பெற்றெடுத்த தாயார் இவருடைய இளம் வயதிலேயே இறந்து விடுவாள்.

12. வனவாசஞ் சிலநாள் செய்வன் வரைந்தயிக் குணத்தா னுக்குச்
சிலமிலா பாலன் தோன்றுஞ் செப்புவோ மிவன் குணத்தை
வினமன மில்லா னுவன் வித்தையு மிரண்டு கற்பன்
கனமான புத்தி யேற்பன் கசடரை யுறவு கொள்ளான்.

12. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய முன் ஜன்மத்திய சாபத்தின் பயனாகச்சில காலம் தனக்கு நிலையான ஓரிடமும் இல்லாமல் காட்டில் திரிவதைப்போல அலைந்து திரிந்து கொண்டிருப்பார். இங்குச் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனாருக்குச் சீக்கிரத்தில் கோபத்தை யடையாத இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணங்களை இனிமேல் சொல்லுகிறோம். இவர் கள்ளம், கபடம், வஞ்சனை, பொல்லாங்கு ஆகிய இவைகளை நினைக்காத மனத்தை உடையவராவார். இவர் இரண்டு விதமான பாஷைகளைப் படிப்பார். மேன்மையானதும் பெருந்தன்மையானதுமான புத்தியையும் குணத்தையும் உடையவராவார். இவர் கீழ்மக்களுடன் அதாவது கெட்ட குணங்களை யுடையவர்களுடன் சிநேகதஞ் செய்து கொள்ள மாட்டார்.

13. நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
எல்லையை விருத்தி செய்வனேவலா ளுடை யானுவன்
தல்லிபோ லாத ரிப்பன் சல்லிய பாதை யேற்கான்
சொல்லதைக் காப்பா னுவன் சோம்பிடான் காரி யத்தில்.

13. ஜாதகர் நல்லவர்களுக்கு நல்லவராக நடந்து கொள்ளுவார். முரடர்களுக்குத் திண்ணியராகவும் வலிவுடையவராகவும் இருப்பார், அதாவது

இளைக்காமல் இருப்பார். நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். இவர் வேலைக்காரர்களை உடையவராக விருப்பார். இவர் தன்னிடத்தில் இருப்பவர்களைத் தாயானவள் காப்பாற்றுவதைப்போலக் காப்பாற்றுவார். இவர் கடனால் துன்பத்தை அடையமாட்டார். தான் சொல்லுகின்ற வார்த்தைகளைத் தவறாமல் காப்பாற்றி நிறைவேற்றுவார். இவர்தான் செய்கின்ற வேலைகளில் இளைத்துப்போகாமல் இருப்பார்.

14. மன்னரால் தொழிலு மேற்பண் மறுநகர் வாசஞ் செய்வன்
தன்பந்தை யாத ரிப்பன் சகடுவா கனமு மேற்பன்
உன்னத தலங்கள் செல்வன் உய்வோர்கள் நேசங் கொள்வன்
கன்னியர் மோக னுவன் கஞ்சமா நிறத்த னுவன்.

14. ஜாதகர் இராஜாங்கத்தில்* வேலையிலிருப்பார். இவர் இன்னொரு பட்டணத்தில் வசித்துக்கொண்டிருப்பார். தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார். வண்டி முதலிய வாகனங்களை உடையவராவார். மேன்மையான புண்ணியக்ஷேத்திரங்களுக்குப் போவார். நல்ல வாழ்வை அடையக் கூடிய வழியைக்காட்டுகின்ற பெரியோர்களுடைய சிநேகத்தை அடைவார். இளம் பெண்களின்மேல் காம ஆசையை உடையவராவார். பிரமா அல்லது மகாவிஷ்ணுவின் நிறத்தைப்போல மாநிறமான தேகத்தை உடையவராவார்.

*குறிப்பு:—ஜாதகருக்கு இராஜாங்கத்தில் வேலை விஷயம்.—ஜீவன ஸ்தானமாகிய பத்திற்குடைய அங்காரகன் நாலில் இராஜாங்க கிரகமும் ஒன்பதிற்குடையவருமாகிய குருவுடன் கூடி மற்ற கிரகங்களைவிட குருவிற்கு அதிக நெருக்கமாக விருப்பதாலும் பத்தில் சனி இருப்பதாலும் ஜாதகருக்கு இராஜாங்க வேலை ஏற்படக்கூடிய அமைப்பு இருக்கின்றது. ஒருவரிடத்தில் வேலைக்காரராக விருப்பதற்குத் தேவையான கிரக யோகத்தைப்பற்றி பிருஹஜ் ஜாதகம் இருபத்துமூன்றுவது அத்தியாயம் பதினைந்தாவது பதினேழாவது சுலோகங்களைப் பார்க்கவும்.

15. சொல்லிடும் வசனமெல்லாஞ் சுத்தமாய்ச் சொகுச னுவன்
வெல்லுவான் எதிரி தம்மை வீண்வழக் கதனில் செல்லான்
அல்லலெப்போதுங் காணன் அகசிய வார்த்தை சொலவன
வல்லவ னுகி வாழ்வன் வர்ணித்தோர்க் குதவி செய்வன்.

15. ஜாதகர் தான் சொல்லுகின்ற வார்த்தைகள் எல்லாம் பரிசுத்தமாகவும் அழகாகவும் நேர்த்தியாகவு மிருக்கும்படி உபயோகப்படுத்துவார். இவர் தன்னுடைய சத்துருக்களை ஜயித்துவிடுவார். வீணான வியாஜ்யங்களிலும் உபத்திரவத்தை உண்டுபண்ணக்கூடிய காரியங்களிலும் பிரவேசிக்க மாட்டார். கஷ்டங்களையும் துன்பங்களையும் எக்காலத்திலும் அனுபவிக்கமாட்டார். வேடிக்கையான சிரிப்பை உண்டுபண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லுவார். சாமார்த்தியவானாகவும் கெட்டிக்காரனாகவுமிருந்து வாழ்வார். இவர் இவரைப் புகழ்ந்து பேசுபவர்களுக்கு உபகாரஞ் செய்வார்.

16. ஜாதகன் தனக்கு யோகஞ் செப்பின கார ணஞ் சொல்
மாதவன்[1] சேயும்[2] நாலில் மருவின யோக மொன்று
ஆதவன்[3] புகரும்[4] புந்தி[5] யணுகின யோக மொன்று
சீதள மதிக்கு[6] மூன்றில் சனியுமே யிருப்ப தாலே

16. இதுவரையிலும் பலாபலன்களைச் சொல்லிக்கொண்டு வந்த அகஸ்திய மகா முனிவரைப் பார்த்துப் பார்வதியம்மையார் ஜாதகருக்கு யோகத்தை சொல்லியதற்குக் காரணங்களைச் சொல்லுவீரென்று கேட்டார். அதற்கு அகஸ்தியர் பின்வருமாறு சொல்லுகின்றார் :—குருவும் அங்காரகனும் நான்கில் இருப்பதால் ஒருவிதமான யோகம் உண்டாகின்றது. சூரியனும் சுக்கிரனும் புதனும் கூடி இருப்பதால் இன்னொருவிதமான யோகம் உண்டாகின்றது. குளிர்ச்சியை உண்டுபண்ணக்கூடிய சந்திரனுக்கு மூன்றில் சனி இருப்பதும் ஒருவிதமான யோகமாகும்.

1. மாதவன் " தவம் " என்றால் ஒன்பதாமிடம் " மா " என்றால் பெரியது ; பெருமையையுடையது. மாதவன் என்றால் பெருமையையுடைய ஒன்பதாமிடத்ததிபன் என்ற அர்த்தம், இங்குப், பொருந்தும் ; ஒன்பதாபதி குருவாவார்,

குறிப்பு.—† மாதவன் அதாவது குருவும் சேயும் அஃதாவது அங்காரகனும் முறையே ஒன்பதிற்கும் பத்திற்கும் உடையவராகிக் கூடி இருப்பது தர்மகர்மயோகம் என்ற ஒருவித யோகமாகும். ஜாதகாலங்காரம் 302-ஆவது பாடலையும், தாண்டவ மாலை 14-15-ஆவது பாடல்களையும், சந்திர காவியம் 15–18-வது பாடல்களையும், ஜாதக சந்திரிகை 14-16-ஆவது சுலோகங்களையும் வாசிக்கவும். † ஆதவனும் அஃதாவது சூரியனும், புகரும் அஃதாவது சுக்கிரனும், புந்தியும் அஃதாவது புதனும் ஒன்றாய்க்கூடி இருப்பதால் சாமரை யோகங்கள் என்ற பலவித யோகங்களில் ஒரு விதமான சாமரை யோகம் ஏற்படுகிறது. ஜாதக சிந்தாமணி 2029-ஆவது பாடலில் மூன்றுவது நான்காவது வரிகளை வாசிக்கவும். இது விஷயமாகச் சதயோகமஞ்ஜரி என்ற கிரந்தத்தையும் வாசிக்கவும்.

17. தர்மகர்மாதி யோகங் தடவரை யோக மொன்று
கனமுள சண்ட யோகம் கழறுவோம் பால னுக்குப்
பெருமையும் புகழு மெய்தும் போஜன சுகிய னுவன்
அரசரால் தொழிலில் மேன்மை அஞ்சிடா நெஞ்ச னுவன்.

17. ஜாதகருக்குத் தர்மகர்மாதியோகம் † என்ற ஒருவகை யோகம் இருக்கின்றது. மேலும் தடவரை யோகம் * என்ற இன்னொரு யோகமும் இருக்கின்றது. மேலும் ஜாதகருக்கு மேன்மையான வலிவான சண்ட யோகம் ‡ என்ற இன்னொரு யோகமும்கூட இருக்கின்றதென்று நாங்கள் சொல்லுகின்றோம். இவைகளாலே ஜாதகர் மேன்மையையும் கீர்த்தியையும் அடைவார். இவர் சுகமான நல்ல போஜனத்தைச் சாப்பிட்டுச் சுகத்தை

[1] குரு. [2] அங்காரகன். [3] சூரியன். [4] சுக்கிரன். [5] புதன் [6] சந்திர

அனுபவிப்பவராவார் ; இவருக்கு இராஜாங்கத்தில் கௌரவமான பெருமையையுண்டு பண்ணத்தக்க உத்தியோகம் கிடைக்கும் ; இவர் யாருக்கும் பயப்படாத மனத்தை உடையவராவார்.

குறிப்பு.—(1) † தர்ம கர்மாதியோகம் :—இந்த யோகத்தைப் பற்றி நாம் 16-ஆவது பாடலின்கீழ் கொடுத்துள்ள குறிப்பை வாசிக்கவும். (2) *தடவரை யோக விஷயம் : " தடவரை " என்ற ஒருவருடைய யோகம் ஒன்றுளதா என நமக்குப் புலப்படவில்லை. ஆனால் " வரை " என்றால் " மலை, பர்வதம் " என்ற அர்த்தம் இருக்கின்றது. " தடவரை " என்றால் விசாலமான மலை அல்லது பர்வதம் என்று அர்த்தம் சொல்லக்கூடும். மேலும் இந்த சப்த ரிஷி நாடி புஸ்தகத்தில் இமயமலைக்கு அரசனுகிய பர்வதராஜனுடைய மகளாகிய பார்வதி யம்மையாரைக் குறிக்கத் " தடவரை மகளே " என்ற சொற்றொடர் அடிக்கடி உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றது. ஆகையால் " தடவரை யோகம் " என்பதைப் " பர்வதயோகம் " என்று அர்த்தம் கொள்வது பொருத்தமுடையதாகும் என்று தோற்றுகிறது. ஜாதகாலங்காரம் என்ற புத்தகம் 303-ஆவது 344-ஆவது பாடல்களின் பிரகாரம் லக்கினுதிபதி இருந்த வீட்டிற்குடையவர் கேந்திரத்தில் இருந்தால் பர்வதயோகம் ஏற்படுகின்றது. இந்த ஜாதகத்தில் லக்கினுதிபதியாகிய சந்திரன் இருக்கின்ற ராசி அதிபதியாகிய சனி லக்கினத்திற்குத் தசம நேந்திரத்தில் இருக்கின்றார். ஆகையால் பர்வத யோகம் ஏற்பட்டிருக்கின்றது. (ஆனல் சனி நீசனுகி நீசபங்கமடைந்திருக்கின்றார்.) மேலும் ஜாதகாலங்காரம் 304 ஆவது செய்யுளில் ஜன்ம லக்கினத்திற்கு முன் பின் ராசிகளுக்குடையவர், அஃதாவது இரண்டாவது பன்னிரண்டாவது ராசிகளுக் குடையவர்கள் ஒன்றுகூடி லக்கினத்திற்குக் கேந்திரத்தில் இருந்தால் பர்வதயோகம் ஏற்படுகின்றது. இந்த ஜாதகத்தில் இரண்டிற்குடைய சூரியனும். பன்னிரண்டிற்குடைய புதனும் கூடிச் சதுர்த்த கேந்திரத்தில் இருக்கின்றார்கள். ஆகையால் பர்வத யோகம் ஏற்பட்டிருக்கின்றது. மேலும் ஜாதகாலங்காரம் 264-ஆவது பாடலில்

" விளையும் புதனுஞ் சூரியனும் விரும்பி யெட்டில்
நான்கு ஒன்றில் வளையக்கூடின் மன்னவனும் "

என்று சொல்லி இருப்பதையுங் கவனிக்கவும். பர்வதயோகவிஷயமாய், ஜாதக சிந்தாமணி என்ற புத்தகம் 2150-ஆவது பாடலையும் சதயோக மஞ்சரி என்ற புத்தகத்தையும் பார்க்கவும். மேலும் ஜாதக பாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் 128-ஆவது சுலோகத்தில் சுபக்கிரகங்கள் கேந்திரங்களில் இருந்தாலும் ஆறுவது எட்டாவது பாவங்களில் சுபக்கிரகங்கள் இருந்தாலும் இல்லாமல் இருந்தாலும் பர்வதயோகம் ஏற்படுகின்றது என்று கண்டிருக்கின்றது. இந்த ஜாதகத்தில் குரு சுக்கிரன் புதன் இவர்கள் நான்கிலும் சந்திரன் எட்டிலும் இருப்பதால் பர்வதயோகம் ஏற்படுகிறது. சனியினுடைய நீச பங்க விஷயமாகப் பலதீபிகை ஏழாவது அத்தியாயம் 26-ஆவது முதல் 30-ஆவது சுலோகம் வரையிலும் பார்க்கவும். இவைகளின் பிரகாரம் சனி நீசமாக விருந்தபோதிலும் நீச பங்கத்தை அடைந்துவிட்டார். ‡ (3) சண்டயோக விஷயம் :—ஜாதக சிந்தா

மணி என்ற புத்தகம் 2000 நம்பருள்ள பாடலில் சனியும் ராகுவும் பத்தாவது வீட்டிற்குடையவரும் கூடி யிருந்தால் ''சண்டயோகம்'' என்ற ஒருவித யோகம் உண்டாகின்றது என்று கண்டிருக்கின்றது. இந்த ஜாதகத்தில் சனியும் ராகுவும் பத்தில் இருக்கின்றூர்கள். பத்திற்குடைய அங்காரகன் இவர்களுடன் கூடாமல் இருந்தபோதிலும் இவர்களை நான்கி லிருந்து ஏழாவது பார்வையுடன் பார்க்கின்றூர். கூடியிருப்பதும் பார்ப் பதும் சம்மந்தம் என்று சொல்லப்பட்டிருப்பதால் சனியும் ராகுவும் பத்திற்குடையவராகிய அங்காரகனுடன் பத்தில் சம்மந்தப்பட்டிருக்கின்றூர்கள் என்று கருதி சண்டயோகமும் இந்த ஜாதகத்தில் இருப்பதாக எண்ணக் கூடும். இது விஷயமாக சதயோகமஞ்ஜரியையும் பார்க்கவும். மேலும் இந்த ஜாதகத்தில் இரண்டிற்குடைய சூரியனும் ஒன்பதிற்குடைய குருவும் கேந்திரத்தில் இருந்துகொண்டு சுக்கிரனுடைய சம்மந்தத்தை அடைந் திருப்பதால் ஜாதகசிந்தாமணி 2072-ஆவது பாடல் பிரகாரம் லக்ஷ்மி யோகம் என்ற ஒருவிதயோகமும் இருக்கின்றது. மேலும் வாகனுதிபதியாகிய நான்கிற்குடைய சுக்கிரனும், கோணுதிபதிகளாகிய அங்காரகனும் குருவுங் கூடி இருப்பதால் ஜாதகாலங்காரம் 397-ஆவது பாடல் பிரகாரம் இன்னெரு விதமான லக்ஷ்மி யோகங்கூட இந்த ஜாதகத்தில் இருக்கின்றதைக் கவனிக்க வும். (மேலும் எட்டுக் கிரகங்கள் கேந்திரங்களில் இருப்பதால் ஜாதகபாரி ஜாதம் எழாவது அத்தியாயம் 169-ஆவது சுலோகப் பிரகாரம் கமலயோகங் கூட பெரும்பாலும் இருக்கின்றது. இந்தக் கமலயோகம் விஷயமாய் ஜாதகசிந்தாமணி 2035-ஆவது பாடலையும் பார்க்கவும்.)

18. தன்துணை யான்பாலொன்று சத்திமா ரிருவர் தீர்க்கம்
பின்னமா மூன்று வென்ளும் பேசுவோம் பின்பால் சேதி
அன்னையின் குணத்தைச் சொல்வேனழ குளாள் பொறுமை [சாலி
மன்னவன் மனத்திற் கேற்றூள் வருவோரை யாத ரிப்பாள்.

18. ஜாதகருடன் கூடப்பிறந்தவர்களில் ஓர் ஆண் சகோதரமும் இரண்டு பெண் சகோதரங்களும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். மூன்று சகோதரர்கள் நீண்ட ஆயுள் இல்லாமல் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகிறேம். அவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னுல் விவர மாகச் சொல்லுகின்றேம். ஜாதகரின் தாயாருடைய குணுதிசயங்களைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றேன். இவள் அழகாக விருப்பாள். பொருமையை யுடையவளாக விருப்பாள். இவள் ஜாதகருடைய மனத்திற்குத் தகுந்தாற் போல நடந்து கொள்ளுவாள். இவள் தன்னிடம் வருகின்றவர்களை நெருங்கி ஆதரிப்பாள், காப்பாற்றவுஞ்செயவாள்.

19. சீலமும் விரத மேற்பள் சிறுத்தோர்மேல் பிரிய மாவள்
ஞாலம்மேல் நல்லோ ளாவள் நன்னடை யோக சாலி
பால்பாக்கிய முடையவளாகும் பதர்குண மில்லா ளாவாள்
மால்மனை யொப்பளாவள் வஞ்சனை மனமில் லாதாள்.

19. ஜாதகருடைய தாயார் நல்ல குணத்தையும் நல்ல ஒழுக்கத்தையு முடையவள். விரதங்களை அனுசரிப்பாள். ஏழைகளிடத்தில் அன்புள்ளவளாக விருப்பாள். பூமியில் நல்லவளாக விருப்பாள். நல்ல நடவடிக்கையை யுடையவள். யோகத்தை யுடையவளாக விருப்பாள். இவள் பால் பாக்கி யத்தை யுடையவளாவாள். அற்பமானவும் இழிவானவுமான குணங்கள் இல்லாதவளாக விருப்பாள். மகாவிஷ்ணுவின் மனைவியாகிய லட்சுமிக்குச் சமானமாக விருப்பாள். கள்ளம் கபடு வஞ்சனை இவை இல்லாத மனத்தை யுடையவளாக விருப்பாள்.

20. மங்கைக்குத் துணையாண் மூன்று மாதுவு மிருவர் தீர்க்கம்
அங்கவர் சேதி யாவும் அறிவிப்போம் பின்பா கத்தில்
இங்கிவை பூர்வந் தன்னை யியம்புவேன் இனிமே லாகத்
துங்கமாந் தணிகை தன்னில் தோன்றினுள் சைவச் சேயாய்.

20. ஜாதகரின் தாயாருடைய ஆண் சகோதரங்கள் மூன்று பேரும் பெண் சகோதரங்கள் இரண்டுபேரும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார் கள். இவர்களுடைய விஷயங்கள் எல்லாவற்றையும் அடுத்த பாகத்தில் தெரிவிக்கின்றேம். இனிமேல் ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத் தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் உன்னதமான திருத்தணி என்ற க்ஷேத்திரத்தில் சைவ குலத்தில் ஒரு ஸ்திரீயாகப் பிறந்தாள்.

21. அறமதி லிச்சை யுண்டா யறுமுகன் பக்தி யாகிக்
குறையென்றேர்க் குதவி செய்து கூத்தன்தன் பதிக்குச் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்
வறுமையில் லாமல் வாழ்வள் வரைகிறே மிவள்பின் ஜன்மம்.

21. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன் ஜன்மத்தில் தர்மஞ் செய்வதில் ஆசை யுடையவளாகவிருந்து ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உடையவளாக விருந்து தரித் திரத்தினுல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றேம் என்று சொன்னவர் களுக்கு உபகாரஞ் செய்துகொண்டு வாழ்ந்து பிறகு இறந்து எமபட்டணத்திற் குப்போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றேம். இவள் இந்த ஜன் மத்தில் தரித்திரமும் கஷ்டமும் இல்லாமல் வாழ்வாள். இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றி இனிமேல் சொல்லுகின்றேம்.

22. உத்தரம் கோகர் ணத்தில் உதிப்பளா மிக்கு லத்தில்
மெத்தெனப் பொருள்ப டைத்து வித்தகி வாழ்வா ளாவள்
சுத்தமாய்க் கர்ம காலஞ் செப்புவீர் முனியே நீர்தாம்
வித்தகன் தனக்கு முப்பான் மூன்றினில் தந்தை கண்டம்.

22. ஜாதகருடைய தாயார் வடதிக்கிலுள்ள கோகர்ணம் என்ற ஊரில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய பிராமண குலத்திலேயே மறு ஜன்மத்திலும் பிறப்பாள். இவள் அதிகமான செல்வத்தைப் படைத்துப்

பணக்காரியாக விருந்து வாழ்பவளாவாள் என்று முனிவர் சொல்லவே, பார்வதி யம்மையார் முனிவரைப்பார்த்து நீர் இனிமேல் ஜாதகருடைய தாய் தகப்பனர்களுக்குக் கர்ம காலத்தை, அஃதாவது மரணகாலத்தைச் சரியாகச் சொல்லுவீர் என்று கேட்டார். அதற்குத் தனவானுகிய ஜாதகருக்கு முப்பத்து மூன்ருவது வயதில் † இவருடைய தகப்பனர் இறந்து விடுவார் என்று முனிவர் பதில் சொன்னர்.

† குறிப்பு.—ஜாதகரின் தகப்பனருடைய மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷூ 32–0–0 முதல் வயது ஷூ 33–0–0 முடியும் வரையிலும் சனி மகா தசையில் அங்காரக புக்தி நடக்கின்றது. பிதாவுடைய லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மீனம் ஆகும். மீனலக்கினத்திற்குச் சனி சூரியன் புதன் சுக்கிரன் இவர்கள் ஜாதக சந்திரிகை 66-ஆவது 67-ஆவது சுலோகங்களின் பிரகாரமும் பராசரஹோரை பிரகாரமும் மாரகராகின்ருர்கள். மேலும் ஜாதக பாரிஜாதம் பதினன்காவது அத்தியாயம் 56-ஆவது சுலோகம் பிரகாரமும், துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரமும் கார்க்கேயர் நாடி 12000 பாடல் என்ற கார்க்கேயர் ஜோதிடம் முதற் காண்டம் என்ற புத்தகம் 674-ஆவது பாடல் பிரகாரமும் 1-ஆவது 8-ஆவது 10-ஆவது பாவாதி பதிகள், சனி இவர்களில் மிகவும் பலவீனமான (நீசம்பெற்று நீச பங்கமடைந்த) சனி ஒருவர்தான் ராகுவுடன் சம்மந்தப்பட்டிருப்பதாலும், மிகவும் பலவீனமான கிரகமாய் இருப்பதாலும் சனியே மாரகராகின்ருர். மேலும் சனி மீனத்திற்கு மாரகஸ்தானமாகிய இரண்டாவது வீடாகிய மேஷத்தில் இருக்கின்ருர். இந்த வீடே ஜாதகருக்குக் கர்ம ஸ்தானமாகவும் இருக்கின்றது. ஆகையால் ஜாதகருடைய தகப்பனருக்குச் சனி தன் தசையில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்ருர். அங்காரகன் மீன லக்கினத்திற்கு மாரகஸ்தானமாகிய இரண்டாம் பாவத்திற்குடையவராய் மாரகஸ்தானமாகிய எட்டாவது பாவத்தில் இருக்கின்ருர். இவர் லக்கினுதிபதியாகிய குருவுடனும் எட்டிற்குடையவராகிய சுக்கிரனுடனும் கூடி இருக்கின்ருர். மீன லக்கினத்திற்கு மாரகாதிபதிகளாகிய சூரியன் புதன் சுக்கிரன் இவர்களுடன் கூடி இருக்கின்ருர். ஜாதக பாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 55-ஆவது சுலோகத்தில் லக்கினுதிபதி எட்டாவது பாவத்தில் கேதுவுடன் கூடி இருந்தால், லக்கினுதிபதியுடனுவது அஷ்டமாதிபதியுடனுவது கூடி இருக்கின்ற கிரகத்தின் தசாகாலத்தில் மரணம் என்று சொல்லி இருக்கின்றது. இங்கு அஷ்டமாதிபதி லக்கினுதிபதிகளாகிய சுக்கிரன் குரு இவர்களுடன் கூடி இருக்கின்ற கிரகங்களாகிய சூரியன் புதன், அங்காரகன் கேது இவர்களில் அங்காரகன் ஒருவராகின்ருர். அங்காரகன் லக்கினுதிபதியாகிய குருவுக்கு மற்றக் கிரகங்களைவிட மிகவும் அருகில் இருக்கின்ருர். மேலும் மீன லக்கினத்திற்குச் சனி பன்னிரண்டிற் குடையவராகவும் அங்காரகன் இரண்டிற் குடையவராகவும் இருப்பதாலும், பன்னிரண்டிற்குடையவரது தசையில் இரண்டிற்குடையவருடைய புக்தியில் மரணம் என்று "ஜம்புரிஷி வாக்கியம்" என்ற புத்தகத்தில் "மாரகதசா புக்தி அறிய" என்ற தலைப்பின் கீழ் இரண்டாவது விஷயமாகச் சொல்லி இருப்பதாலும் சனி தசையில் அங்காரகன் தனது புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்ருர். ஜாதக சந்திரிகை 66-ஆவது 67-ஆவது

சுலோகங்களிலும் பராசரஹோரையிலும் அங்காரகன் மீனலக்கினத்திற்கு மாரகன் அல்லனென்று சொல்லியிருந்த போதிலும் 82-ஆவது நம்பர் ஜாதகத்தின் 24-ஆவது பாடலின் கீழ்க் கொடுத்துள்ள வியாக்கியானத்தில் கண்டுள்ள காரணத்தினுலும் இங்கு மேலே முன்னமே சொல்லப்பட்டக் காரணங்களினுலும் சனி தசையில் அங்காரகன் தன்னுடைய புக்தியில் ஜாதகருடைய பிதாவுக்கு மாரகஞ் செய்ய அதிக அமைப்பு உடையவராக விருக்கின்ருர்.

23. மறுஜன்மம் சிறுபாக் கத்தில் வருவனு மிக்குலத்தில்
அரிவையாம் அன்னைக் கேதான் அறைகிரேம் நாற்பான் மூன்றில்
திருமகன் மணத்தின் காலஞ் செப்புவோ மினிமே லோக
இருபது வாண்டு தன்னில் எய்திடும் பாரி யென்ரேம்.

23. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய மறு ஜன்மத்தில் சிறுபாக்கம் என்ற ஊரில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலமாகிய பிராமண குலத்திலேயே பிறப்பார். ஜாதகருடைய தாயாருக்கு ஜாதகருடைய நாற்பத்து மூன்ருவது வயதில் மரண முண்டாகும் † என்று சொல்லுகிரேம். இனிமேல் ஜாதகருடைய விவாக காலத்தைப் ‡ பற்றிச் சொல்லுகிரேம். இவருக்கு இருபதாவது வயதில் மனைவி நேரிடுவாள் என்று சொல்லுகிரேம்.

† குறிப்பு.—(1) ஜாதகரின் தாயாருடைய மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷூ 42–0 0 முதல் வயது ஷூ 43–0–0 முடியும் வரையில் கேது தசையில் இராகு, குரு இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. ஜாதகரின் மாதாவினுடைய லக்கினம் நான்காவது பாவமாகிய துலாராசியாகும். துலா லக்கினத்திற்குக் குருவும் சூரியனும் ஜாதக சந்திரிகை 56-வது சுலோகம், பராசர ஹோரை இவைகளின் பிரகாரம் மாரகராகின்ருர்கள். கேது மாரகர்களாகிய குரு சூரியன் இவர்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் ஜாதக சந்திரிகை 12-ஆவது 23-ஆவது சுலோகங்கள், தாண்டவ மாலை 22-ஆவது பாடல் சந்திர காவியம் 9-வது பாடல் ஆகிய இவைகளின் பிரகாரம் கேது மாரகராகின்ருர். மேலும் கேது லக்கினத்தில் லக்கின அஷ்டமாதிபதியாகிய சுக்கிரனுடம் கூடி இருக்கின்ருர். ஆகையால் ஜாதகபாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 59-ஆவது சுலோகம், துய்ய கேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் இவற்றின் பிரகாரம் கேதுவுக்கு மாரகஞ் செய்யும் அமைப்பு ஒருவாறு ஏற்படுகின்றது. மேலும் பாபியாகிய கேது ஜாதகருடைய லக்கினத்திற்கு மாதுரு பாவத்தில் இருப்பதால் மாதாவுக்குத் தோஷத்தைச் செய்யும் தன்மை உடையவராகிருர். ஆகையால் கேது தன்னுடைய தசையில் தாயாருக்கு மாரகஞ் செய்ய அமைப்புள்ளவராகின்ருர். குரு துலாலக்கினத்திற்கு மேற் சொல்லியபடி மாரகராகி இன்னெரு மாரகராகிய சூரியனுடன் கூடி இருக்கின்ருர். மேலும் லக்கின அஷ்டமாதி பதியாகிய சுக்கிரனுடனும் கூடி இருக்கின்ருர். ஆகையால் ஜாதக சந்திரிகை 56-ஆவது சுலோகம், துய்ய கேரளம் எட்டாம் பாவம் 20-அவது பாடல் இவற்றின் பிரகாரம் குரு மாரகஞ் செய்ய அமைப்புடையவராக விருக்கின்ருர். மேலும் லக்கினத்திற்கு ஒன்றுக் குடையவனேடு

(இங்கு சுக்கிரனோடு) சம்பந்தப்பட்டவனது (இங்குக் கேது) தசையில் ஏழுக்குடையவனோடு (இங்கு அங்காரகனோடு) சம்பந்தப்பட்டவனது (இங்குக் குரு) புக்தியில் மரணம் என்று ஜம்புரிஷி வாக்கியம் என்ற புத்தகத்தில் "மாரகதசா புக்தி அறிய" என்ற தலைப்பின் கீழ் 45-ஆவது விஷயத்தில் சொல்லி இருக்கின்றது. ஏழிற் குடையவராகிய அங்காரகனுடன் சம்பந்தப்பட்ட புதன் சூரியன் குரு இம் மூவரில் குருதான் அங்காரகனுக்கு மிகவும் அருகில் நெறுங்கி இருக்கின்றார். இராகு குரு இவ்விரண்டு கிரகங்களில் இராகுவைவிட குருவே தனது புக்தியில் மாரகஞ் செய்ய அதிக அமைப்புஉடையவராக இருப்பதால் கேது தசையில் இராகு புக்தியிலில்லாமல் குருபுக்தியிலேயே ஜாதகருடைய தாயாருக்கு மரணம் நேரிட அதிக அமைப்பு இருக்கின்றது. ‡ (2) **ஜாதகருடையவிவாக கால விஷயம்.**—ஜாதகருக்கு வயது ௵19-0-0 முதல் வயது ௵ 20-0-0 வரையிலும் குரு தசையில் ராகு புக்தியும் சனி தசையில் சனி புக்தியும் நடக்கின்றன. சனி களத்திர ஸ்தானமாகிய ஏழாவது பாவமாகிய மகர ராசிக்குடையவராகிப் பத்தாவது பாவத்தில் போக காரகனுகிய இராகுவுடன்கூடி (நீசபங்கம் முந்தியே சொன்ன பிரகாரம் அடைந்து) இருப்பதுடன் களத்திரகாரகனுகிய சுக்கிரனுடைய பார்வையாகிய சம்மந்தத்தை அடைந்திருக்கின்றார். ஆகையால் ஜாதக பாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 29-ஆ-வது சுலோகப் பிரகாரம் குரு தசையைவிட சனி தசையில் சனி புக்தியில் விவாகம் நடக்க அதிக அமைப்பு இருக்கின்றது.

* * * *

24. மாதுவும் வடபால் நேரும் வரைகிரேந் தந்தை வர்க்கம்
ஓதுவேன் அவள்கு ணத்தை யுயர்வான புத்தி யேற்பள்
சீதள குணத்தா ளாவள் சீலமும் விரத சாலீ
காதலி வயது தீர்க்கங் கௌசிகன் மறுத்துச் சொல்வார்.

24. ஜாதகருடைய மனைவி இவருடைய தகப்பனுருடைய பந்துக்களிலிருந்தும் வடக்குத் திக்கிலிருந்தும் சம்பவிப்பாள் என்று சொல்லுகிரேம். இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மேன்மையான புத்தியை உடையவளாவாள். இவள் சீதளமான தேகத்தையுடையவள். நல்ல குணத்தையும் நல்ல ஒழுக்கத்தையும் உடையவளாவள். விரதங்களை அனுசரிப்பாள். இவளுக்குப் பூர்ணயுள் உண்டு. இவ்விதமாக இதுவரையிலுஞ் சொல்லிக்கொண்டுவந்த அகஸ்திய முனிவர் சொல்லவே கௌசிக முனிவர் தடுத்துப் பின்வருமாறு சொல்லுகின்றார்.

25. பரலனுக் கிரண்டு தாரம் பகருவேன் என் கருத்துக்
கோலத்தைச் சொல்லு மெனைக் கொடும் விஷ கார்பத்தில்
சாலவே சரத்தில்[2] தங்கச் செப்பினேந் தார மிரண்டு
ஏலவே பராசர் சொல்வார் இயலாது தார மிரண்டு.

25. ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் நேரிடுவார்கள் என்று என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகின்றேன் என்று கௌசிக முனிவர் சொல்லவே, அதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே,

[1] சனி. [2] சரம்=மேஷம், கடகம், துலாம், மகரம்: இங்கு மேஷம்.

இராகுவும் சனியும் பத்தாவது பாவமும், சரராசியுமான மேஷத்தில் இருப்பதால் இரண்டு மனைவிகள் ஏற்படுவார்கள் என்று சொல்லுகிரேம் என்று கௌசிக முனிவர் சொன்னர்†. இதற்குப் பராசர முனிவர் பின்வருமாறு சொல்லுகின்றார். இரண்டு மனைவிகள் நேரிட மாட்டார்கள்.

† குறிப்பு.—**ஜாதகருக்கு இரண்டு தார விஷயம்:**—ஜாதகருக்குக் களத்திர பாவம் ஏழாவது வீடாகிய மகராசியாகும். இதற்குடைய சனி இராகுவுடன் சேர்ந்து சூரியன் அங்காரகன் இவர்களால் பார்க்கப்படுவது ஒரு தோஷமாகும். களத்திரகாரகராகிய சுக்கிரன் கேதுவுடனும் அங்காரகனுடனும் சம்மந்தப்பட்டு ஆட்சியாயிருந்தபோதினும் அஸ்தமனம் அடைந்து இருப்பது தோஷமாகும். குடும்பாதி பதியாகிய இரண்டிற்குடைய சூரியன் (பலதீபிகை ஏழாவது அத்தியாயம் 26 முதல் 30 வரையிலுமுள்ள சுலோகங்களின் பிரகாரம் நீசபங்க மடைந்து) அங்காரகன் கேது இவர்களுடன் கூடிச் சனியால் பார்க்கப்பட்டிருப்பது தோஷமாகும். மேலும் அங்காரகன் ஏழாவது பாவத்தைப் பார்ப்பதும் தோஷமாகும். கேது இரண்டாவது பாவத்தைப் பார்ப்பதும் தோஷமாகும். மேலும் லக்னுதிபதியாகிய சந்திரனே இரண்டாவது களத்திர பாவமாகிய ஒன்பதாவது பாவத்திற்குடைய குரு பார்ப்பது இரண்டாவது தாரம் நேரிட ஒரு காரணமாகும். மேலும் ஜாதகாலங்காரம் 648-ஆவது பாடல் பிரகாரம் களத்திர ஸ்தானுதிபதியாகிய சனி சரராசியாகிய மேஷத்தில் இருப்பது இரண்டாவது தாரம் ஏற்பட ஒரு காரணமாகும். ஏழிற்குடைய சனியும் பதினொன்றிற்குடைய சுக்கிரனும் ஒருவரையொருவர் பார்ப்பதால் ஜாதகாலங்காரம் 689-ஆவது, 681-ஆவது பாடல்களின், பிரகாரமும் ஜாதக சிந்தாமணி 984-ஆவது பாடல் பிரகாரமும் ஒன்றுக்கு மேற்பட்ட தாரம் ஏற்பட ஒரு காரணமாகிறது. ஆனல் அனுகூலமான காரணங்கள் கீழே சொல்லப்படும்.

26. காரணம் புகல்வீ ரையா கனகனும்[1] புகரும்[2] நாலில்
தீரமா யிருப்ப தாலே செப்பினேந் தார மொன்று
பாரியு மொன்றே தீர்க்கம் பாவையும் பாலன் முன்னே
நேருவாள் காலன் நாடு நுகனுவோ மந்தந் தன்னில்.

26. ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் நேரிடமாட்டார்கள் என்று பாரசர முனிவர் சொல்லவே, இதற்குக் காரணத்தைச் சொல்லுவீரென்று பராசர முனிவரைக் கேட்கவே, இவர், குருவும் சுக்கிரனும் நான்கில் வலிவாயிருப்பதால் † ஒரே தாரம் தான் என்றும் இந்த ஒரு தாரம் நீண்ட வயதுடையவளென்றும் சொல்லுகிரேம். ஆனல் இவள் ஜாதகருக்குக் கடைசி காலத்தில் ஜாதகருக்கு முன்னமே இறந்து எமபட்டணம் போய்ச் சேருவாள் என்று சொல்லுகிரேம்.

† குறிப்பு. **களத்திர விஷயம்:**—களத்திர காரகனும் போகஸ்தானமாகிய நான்காவது பாவத்திற்குடையவருமான சுக்கிரன் ஆட்சியாகி நான்காவது கேந்திரத்தில் குரு புதன் இவர்களுடன் கூடிச் சனியைப்பார்ப்பது ஓர் அனுகூலமான விஷயம். போகஸ்தானமாகிய நான்கில் குருவும்

[1] கனகன்=குரு. [2] புகர்—சுக்கிரன்.

புதனும் இருப்பது அனுகூலமானது. ஆருவது பாவத்திற்குடைய குருவும் பன்னிரண்டாவது பாவத்திற்குடைய புதனும் சனியைப்பார்ப்பது அனுகூலமும் பிரதிகூலமுமான விஷயம். களத்திர பாவாதிபதியாகிய சனி தன் பாவத்தையே பார்ப்பது அனுக்கூலமானது. இரண்டிற்குடைய சூரியனும் பத்திற்குடைய அங்காரகனும் சுபகேந்திரமும் சுக்கிரனுடைய வீடுமாகிய துலாத்தில் இருந்துகொண்டு சுபர்களாகிய குரு சுக்கிரன் புதன் இவர்களுடன் சம்மந்தப்பட்டிருப்பதால் ஜாதக சிந்தாமணி 894-ஆவது பாடலின் முதல் இரண்டு அடிகளின் பிரகாரம் ஜாதகருக்கு பலகளத்திரயோகமிருக்கின்றது. இவ்விதமாக 25-ஆவது 26-ஆவது பாடல்களின் கீழ் விவரித்துள்ள பிரகாரம் களத்திர விஷயமாய்த் தோஷங்களும் பரிகாரங்களும் இருப்பதால் ஜாதகருக்குப் பரிகார காரணங்களால் ஒரே தாரம் என்றும் ஆனல் இந்த ஒரே தாரம் தோஷகாரணங்களால் ஜாதகருக்கு முன்னே இறந்துவிடும் என்றும் இங்கு முடிவாகச் சொல்லி இருக்கின்றது.

27. சுதர்களில் ஆண்பா லொன்று தோகையர் நால்வர் தீர்க்கம்
இதுநிற்க உதித்தோன் பூர்வம் இயம்புவோம் புதுவை தன்னில்
நிதிமிக வுடையா னுக்கு நேர்ந்தனன் சத்திரிய சேயாய்
அதிகம யச் செட்டுச் செய்து யாவர்க்கும் நல்லோ ளுகி.

27. ஜாதகருக்கு ஓர் ஆண் குழந்தையும் நான்கு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இந்த விஷயம் இப்படியிருக்க இனிமேல் ஜாதகருடைய பூர்வ ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் புதுவை என்ற புதுச்சேரியில் ஒரு க்ஷத்திரியதனவந்தனுக்கு குழந்தையாய்ப் பிறந்தார். இவர் முன்ஜன்மத்தில் விசேஷமாக வியாபாரஞ் செய்து எல்லோருக்கும் நல்லவனுக விருந்தார்.

28. தேவதா தலங்கள் சென்று தேரினேர்தொண்டு பூண்டு
பாவத்தில் மனமில் லாமல் பறந்தனன் காலன் நாடு
பூவயன் வரையப் பட்டுப் பிறப்பனும் இந்தப் பாலன்
கோவலர் போலே வாழ்வன் குவலயம் அதிகஞ் சேர்ப்பன்

28. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் தெய்வ ஸ்தலங்களுககுப்போய் மனத்திலும் அறிவிலும் தேர்ச்சியை யடைந்த பெரியோர்களுக்குப் பணிவிடை செய்து பாவமான காரியங்களைச் செய்வதில் ஆசையில்லாமல் இருந்த பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போனுர். பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்தார். இவர் இந்த ஜன்மத்தில் கிருஷ்ண பரமாத்மாவைப் போலவும் ஓர் அரசனைப் போலவும் இருந்து வாழ்வார். இவர் நிலங்களை அதிகமாகச் சேர்ப்பார்.

29. திருப்பணி வேலே செய்வன் ஜகராஜர் பேட்டி கொள்வன்
பாருள்பூமி பணிபொன் இல்லம் பெறுவன்முப் பாயிரம் [பொன்
அறுபது எட்டு ஆண்டில் அனுகிய கன்னி மாதங்
குறைபக்கம் ஏகா தசி குழவியி னுடல மேகும்.

29. ஜாதகர் கோயில் வேலைகளையும் திவ்வியத் தொண்டுகளையுஞ் செய்வார். இவர் பெரிய பெரிய இராஜாக்களின் தரிசனத்தை அடைவார். இவர் முப்பதாயிரம் பெறக்கூடிய சொத்து நிலம் ஆபரணம் வீடு இவைகளைச் சம்பாதிப்பார். இவர் தனது அறுபத்தொட்டாவது வயதில் புரட்டாசி மாதத்தில் தேய்பிறை ஏகாதசி திதியில் † இறந்து மறைந்து போய்விடுவார்.

† குறிப்பு —ஜாதகருடைய மரண விஷயம்:—ஜாதகருக்கு வயது ஷ67-0-0 முதல் வயது வருஷம் 68-0-0 வரையிலும் சுக்கிர தசையில் சந்திர புக்தி நடக்கின்றது. கடகலக்கினத்திற் ஜாதக சந்திரிகை பராசர ஹோரை இவைகளின் பிரகாரம் சுக்கிரன் புதன் சூரியன் சனி இவர்கள் மாரகராகின்றுர்கள். துய்ய கேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரம் சந்திரன் சனி அங்காரகன் சனி மறுபடியும் இவர்கள் மாரகராகின்றுர்கள். கடகலக்கினத்திற்குப் பதினுென்றிற்குடையவராகிய சுக்கிரன் இந்திரஜித்திற்கு மாரகஞ் செய்ததுபோல மாரகஞ் செய்ய அதிக பலமுள்ளவர். இவர் எட்டிற்குடையவராகிய சனியையும் பார்த்திருக்கின்றுர். மாரகாதிபதிகளாகிய சூரியன் புதன் இவர்களுடன் சம்மந்தப்பட்டுமிருக்கின்றுர். இவருடைய தசை ஆறுவது தசையாகவும் வருகின்றது. ஆகையால் ஜாதக சந்திரிகை 23-ஆவது, 50-ஆவது சுலோகங்களின் பிரகாரம் சுக்கிரன் தன்னுடைய தசையில் ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அதிகாரமுடையவராகின்றுர். சந்திரன் லக்கினுதிபதியாகி எட்டில் இருக்கின்றுர். மாரகாதிபதியாகிய சனி வீட்டிலும் இருக்கின்றுர். ஆகையால் துய்ய கேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரமும், ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் ஜாதக பாரிஜாதம் 14-ஆவது அத்தியாயம் 57ஆவது 58-ஆவது சுலோகங்களின் பிரகாரமும் சந்திரன் தன்னுடைய புக்தியில் ஜாதகருக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றுர்.

30. அத்திரி மறுத்துச் சொல்வார் அஷ்டமத் தோனும் பத்தில்
வித்தகர் ராகு கூட விளம்பினீர் வயது தீர்க்கங்
குற்றமாய் மூன்றுண் டுள்ளே குழவிக்குக் கண்ட மெய்துஞ்
சுத்தமாய்ப் பிருகு சொல்வார் சுரகுரு[1] புகரும் [2]நாலில்.

30. அஷ்டமாதிபதியாகிய சனி பத்தாவது பாவத்தில் இராகுவுடன் கூடியிருக்கும் போது நீர் எப்படி ஜாதகருக்கு நீண்டவயது உண்டு என்று சொன்னீர் என்று அத்திரி மகாரிஷி அகஸ்திய மகாரிஷியைத் தடுத்துக் கேட்டு ஜாதகருக்கு மூன்று வயதிற்குள்ளே மரண கண்டம் நேரிடும் என்று சொல்லவே பிருகு மகரிஷி பின்வருமாறு சொல்லுகின்றுர். குருவும் சுக்கிரனும் நான்காவது பாவத்தில் இருக்கின்றுர்கள்.

31. இருப்பதால் பாலன் தீர்க்கம் இவனுக்குப் பிணிய நேகம்
வருகினும் பனிபோல் நீங்கும் மனைவிக்கு ஐம்பா னென்பான்
பெருமையா யாண்டு தன்னில் பேசுவோம் மாரகத்தைக்
கறுமத யானை பெற்ற காதலி புகன்றிட்டோம் யாம்.

---

[1] சுரகுரு—குரு. [2] புகர்—சுக்கிரன்.

31. குருவும் சுக்கிரனும் நான்காவது பாவத்தில் இருப்பதால் ஜாதகர் நீண்ட ஆயுளை உடையவராவர். இவருக்கு அநேக நோய்கள் வந்த போதிலும் அவைகள் சூரியனுக்கு முன்னே பனி நீங்கிப்போவது போல நீங்கி விடும். இவருடைய மனைவிக்கு இவருக்கு ஐம்பத் தொன்பதாவது வயதில் மரணம் நேரிடும் † என்று சொல்லுகிறோம். கறுப்பான மதயானையின் முகத்தை யுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் இவ்விதமாகச் சொன்னோம்.

† குறிப்பு.—மனைவியின் மரண விஷயம்:—ஜாதகருக்கு வயது ஷு 58–0–0 முதல் வயது ஷு 59–0–0 முடியும் வரையிலும் கேது தசையில் அங்காரகன் ராகு இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. ஜாதகரின் களத்திர பாவம் ஏழாவது பாவமாகிய மகரம் ஆகும். இந்த மகரமே களத் திரத்தின் லக்கினமாகும். ஜாதக சந்திரிகை 61, 62, 63ஆவது சுலோகங் களின் பிரகாரமும் பாராசரஹோரை பிரகாரமும் அங்காரகன் குரு சந்திரன் இவர்கள் மாரகராகின்றார்கள். கேது களத்திரகாரகனாகிய சுக்கிரனுடனும் ஜாதகருக்குக் குடும்பாதிபதியாகிய சூரியனுடனும் கூடி ஜாதகருக்குக் களத்திர ஸ்தானாதிபதியாகிய சனியைப் பார்க்கின்றார். இவர் ஜாதகருக்குப் போகஸ்தானமாகிய நான்காவது பாவத்தில் இருக்கின்றார். மேலும் கேது மகர லக்கினத்திற்கு மாரகாதிபதிகளாகிய அங்காரகன் குரு அஷ்டமாதி பதியாகிய சூரியன் இவர்களுடன் கூடி இருக்கின்றார். ஜாதகருடைய குடும்பஸ்தானமாகிய இரண்டையும் சந்திரனுக்கு ஏழாவது ஸ்தானமாகிய சிம்மத்தையும் பார்க்கின்றார். ஆகையால் ஜாதக சந்திரிகை 12, 23-ஆவது சுலோகங்களின் பிரகாரம் கேது மனைவிக்குத் தனது தசையில் மார கஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். இராகு மகர லக்கினத் திற்கு லக்கினாதிபதியாகிய சனியுடன்கூடி இருக்கின்றார். இவர் மகர லக்கினத் திற்கு மாரகாதிபதியாகிய அங்காரகனுடைய வீட்டில் இருந்துகொண்டு அங்காரகனையும் பார்க்கின்றார். மேலும் மகர லக்கினத்திற்குச் சனி, 1, 8, 10-க் குடையவர்களில் ஒருவராகிய சனியுடன் ராகு சம்மந்தப்பட்டிருக் கின்றார். ஆகையால் ஜாதக சந்திரிகை 12ஆவது, 23ஆவது சுலோகங்களின் பிரகாரமும் ஜாதக பாரிஜாதம் 14ஆவது அத்தியாயம் 56ஆவது சுலோகம் பிரகாரமும் இராகு அங்காரகனைவிடத் தனது புக்தியில் மாரகஞ்செய்ய அதிக அமைப்பு உடையவராக விருக்கின்றார். ஆகையால் ஜாதகருடைய மனைவிக்குக் கேது தசையில் இராகு புக்தியில் மரணம் நேரிட அமைப்பு இருக்கிறது.

32. பாலகன்பின் ஜன்மங் கேளாய் பசுமாத்தூர் தன்னி லேதான்
சீலமாய் இக் குலத்தில் ஜனிப்பனு மென்று சொல்வோஞ்
சாலவே ஜனன காலஞ் சதயத்தின் நான்காம் பாதம்
ஆலத்தின் தசைமூன் றுண்டு அனுகிடுந் திங்க ளைந்தும்.

32. ஜாதகருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக. இவர் பசுமாத்தூர் என்ற ஊரில் நல்லொழுக்கமுள்ள இந்த ஜன்மத்தில் பிறந்த குலத்தில் அஃதாவது பிராமண குலத்தில் பிறப்பார் என்று சொல்லுகின்றோம். இவர் பிறந்த காலத்தில் ஜன்ம நட்சத்திரம் சதயத்தின் நான்காவது பாதம் ஆகும். இதற்குரிய ராகு மகா தசையில் இருப்பு வருஷம் மூன்றும் மாதம் ஐந்தும் ஆகும்.

33. சத்தம முனிவர் சுத்தமாய்ச் சொன்னோங்
குற்றங்கள் யாவும் வித்தகி பொறுப்பாய்.

33. சப்த ரிஷிகளாகிய நாங்கள் தவறுகள் ஒன்றும் இல்லாமல் சரியாய்ச் சொல்லி இருக்கின்றோம். ஆயினும் ஏதாவது குற்றங்கள் குறைகள் ஏற்பட்டிருந்தால் செல்வவதியும் அறிவும் ஞானமும் உடைய வராகிய எங்கள் தலைவியாகிய பார்வதியம்மையே! நீர் அவைகளைப் பொறுத்துக்கொண்டு எங்களை ரட்சிப்பீராக.

ஸப்தரிஷிநாடி. கடக லக்னம் முற்றும்